T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LXI. NO: 1

March 15th 1984

V211,31 N84
N84.61.1
136231

- 8 MAR 1985

[Issued 18-12-84

2771

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 15, 1984 - தொகுதி LXI எண் 1
Thursday, the 15th March 1984 - Volume LXI No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

ம
N211,31 N84
N84.61.1
136231

உள்ளடக்கம்.

15–3–1984.


| | பக்கங்கள் |
|---|---|
| (அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. .. | iii—vii |
| (ஆ) Personnel of the Government of Tamil Nadu | ix—x |
| (இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | xi—xii |
| (ஈ) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் .. .. .. | xiii—xx |
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—33 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 34—88 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) பொது நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகள் அவையில் வைக்கப் பெறுவது .. .. .. | 90 |
| (ஆ) உறுப்பினர்களது தொலைபேசிக்கு அனுப்பப் பெறும் தொகைப் பட்டியல் அதிகமாக இருப்பது .. .. | 90 |
| (இ) சென்னிமலைக் கோவில்—கோவை மாவட்டம் .. .. .. | 90 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| திருச்சி மாவட்டம், கரூர் மில்லில் நடந்து வரும் வேலை நிறுத்தப் போராட்டம். | 91—99 |

4. கவன ஈர்ப்பு—

சென்னை மாநகராட்சி குடியிருப்புப் பகுதி தெரு விளக்குகள் .. .. .. 99—106

5. அறிவிப்பு—

1984–85ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிதல் (ஆ. இ) .. 106

6. வரவு-செலவுத் திட்டம் 1984–85 வாக் கெடுப்பு— 107—159

கோரிக்கை எண். 17—கல்வி .. .. 170—261

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் .. 109,227—261

திரு. இல. பலராமன் .. .. 109—117

திரு. ஏ. சி. சண்முகம் .. .. 117—125

திரு. கு. பா. பழனியப்பன் .. .. 125—135

திரு. மி. வின்சென்ட் .. .. 135—145

திரு. என். பழனிவேல் .. .. 145—155

திரு. மா. சின்னராசு .. .. 155—159, 170—173

திரு. மு. அப்பாதுரை .. .. 173—179

திரு. ஏ. எம். சேதுராமன் .. .. 179—184

திரு. ரா. கிருஷ்ணன் .. .. .. 184—189

திரு. சி. கோபால் .. .. .. 189—195

திரு. தி. கா. நல்லப்பன் .. .. 195—199

திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் .. 199—206

திரு. ஆர். தியாகராசன் .. .. 206—212

திரு. கே. ஆர். கணபதி .. .. 212—214

திரு. துரைமுருகன் .. .. 214—227

7. அறிக்கை அளித்தல்—

விதி 106-ன் கீழ் நீதிபதி இராமபிரசாத் ராவ் விசாரணைக் குழுவின் முடிவுகள் பற்றிய அறிக்கை .. .. .. 159—170

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 262


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் ஆயத்துறை. மற்றும் மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக.)

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், மற்றும் இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)—பால், பால் பெருக்கு திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள், மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) — தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை மறுநிதி. வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KURANA.

*Members of the Council of Ministers.*

1. HON. DR. M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology Excise, and Prohibition (excluding grant of liquor permits),

2. HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Dairy Development)—Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education, including Technical Education, Official Language.

8. HON. DR. K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Law and Industries)-Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries, Mines and Minerals.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Union-Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. HON. DR. H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and ports.

14. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Handlooms and Co-operation)—Textiles, Handlooms and Co-operation.

15. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Environmental Pollution Control)—Passports and Environmental Pollution Control.

16. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. HON. THIRU R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals)—Nutritious Meals.

18. HON. THIRU S. R. ERADHA (Minister for Public Works)—Housing, Slum Clearance Board, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

19. HON. THIRU M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indian Overseas Refugees and Evacuees and Correctional Administration.

21. HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi)—Khadi.

22. HON. THIRU Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. HON. THIRU R. ARUNACHALAM (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries.

24. HON. THIRU K. KALAIMANI (Minister for Fisheries)—Fisheries



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. வே. இரா. ஜெயராமன்
2. டாக்டர் கே. சமரசம்
3. டாக்டர் கே. சௌரிராஜன்
4. பாபு ஜனார்த்தனன்
5. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்ற சொரணம்

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.,

### சார்புச் செயலாளர்கள்

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.,
திரு. செ. சு. ஞானகிராமன், பி.ஏ., பி.எல்.,
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,
திரு. ப. சா. ஜான், பி.ஏ.,

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) — சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம்.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)— நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமி தானம், கிராமத்தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) — தொழிலாளர், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)— மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்) நெசவாலைகள் கைத்தறி மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (சுற்றுச் சூழல் மாசுகட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—பயண இசைவுச் சீட்டு, சுற்றுச் சூழல் மாசுகட்டுப்படுத்தல்.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)— ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (பொதுப் பணித் துறை அமைச்சர்) — வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம். பொதுப்பணித்துறை மற்றும் பொதுபணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்

22. மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் (நீர்பாசனத் துறை அமைச்சர்) — வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) — கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

எஸ்டேட் அலுவலர்

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

தலைமை நிருபர்

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.



## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்).

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை. |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர். |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 4 | அப்பாதுரை, திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி. |
| 8 | அரங்கநாதன், திரு. மு. .. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு). |
| 10 | வெற்றிடம் .. .. .. | உப்பிலியாபுரம். |
| 11 | அருணகிரி, திரு. இரா. .. | திருப்பத்தூர். |
| 12 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 13 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 14 | வெற்றிடம் .. .. .. | புரசைவாக்கம். |
| 15 | அன்பழகன், திரு. தி. .. | நாட்றாம்பள்ளி. |
| 16 | அன்பில் தர்மலிங்கம், திரு. .. | லால்குடி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 18 | ஆண்டித்தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி. |
| 19 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.). |
| 20 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2. |
| 21 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 22 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு. |
| 23 | இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி. |
| 24 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி. |
| 25 | இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம். |
| 26 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 27 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.). |
| 28 | இராசாராம், திரு. க. .. | பனைமரத்துப்பட்டி. |
| 29 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 30 | இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 31 இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி. |
| 32 இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. .. | மதுரை (மேற்கு) |
| 33 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 34 இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி. |
| 35 இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. .. | செஞ்சி. |
| 36 இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம். |
| 37 இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 38 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம். |
| 39 இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 40 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம். |
| 41 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 42 இராஜசேகரன், திரு. வே. .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர். |
| 43 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தளி. |
| 44 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 45 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.). |
| 46 ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம், திரு. | அம்பாசமுத்திரம். |
| 47 உகம்சந்த், திரு. எஸ். டி. .. | மதுராந்தகம். |
| 48 உச்சி, திரு. கே. .. | கடலூர். |
| 49 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 50 உமாநாத், திரு. ரா. .. | நாகை. |
| 51 கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 52 கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 53 கணேசன், திரு. இ. .. .. | இடப்பாடி. |
| 54 கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 55 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 56 கந்தசாமி, திரு. பி. .. .. | பொங்கலூர். |
| 57 கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர். |
| 58 வெற்றிடம் .. .. .. | அண்ணா நகர். |
| 59 கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. .. | பாளையங்கோட்டை. |
| 60 கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 61 கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை (செ.வ.). |
| 62 கல்லன், திரு. கே. .. .. | உதகமண்டலம். |
| 63 கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம். |
| 64 கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.). |
| 65 கலையரசன், திரு. அ. நன்னிலம் .. | நன்னிலம் (செ.வ.). |
| 66 காளிமுத்து, டாக்டர் கா. .. | திருப்பரங்குன்றம். |
| 67 வெற்றிடம் .. .. | மாயவரம். |
| 68 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம். |
| 69 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 70 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம். |
| 71 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிகுப்பம். |
| 72 கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1. |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர். |
| 74 குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 75 குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம். |
| 76 குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.). |
| 77 குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர். |
| 78 குருசாமி, திரு. ப. .. .. | அந்தியூர் (செ.வ.). |
| 79 குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர். |
| 80 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி. |
| 81 குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை. |
| 82 கோபால், திரு. சி. .. | சோளிங்கர். |
| 83 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம். |
| 84 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம். |
| 85 கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.). |
| 86 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 87 கோவைத்தம்பி, திரு. .. | பேரூர். |
| 88 சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி (செ.வ.). |
| 89 சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு). |
| 90 சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி. |
| 91 சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி. |
| 92 சண்முகம், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 93 சத்தியமூர்த்தி, திரு. வ. ... | [illegible] |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 94 சந்திரசேகரன், திரு. ஏ. .. | சோழவந்தான். |
| 95 சபாபதி, திரு. சி. .. .. | அரூர் (செ.வ.). |
| 96 சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டணம். |
| 97 சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர். |
| 98 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம். |
| 99 சித்தன், திரு. என்.எஸ்.வீ. .. | திருமங்கலம். |
| 100 சிதம்பரம், திரு. சி த. .. | காரைக்குடி. |
| 101 சிவசாமி, திரு. செ. .. .. | இளையான்குடி. |
| 102 சிவஞானம், திரு. ந. .. | திருவோணம். |
| 103 சிவப்பிரகாசம், திரு. சீ .. | சேந்தமங்கலம் (ஆ.வா). |
| 104 சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 105 சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம். |
| 106 சின்னசாமி, திரு. எம். .. | கரூர் |
| 107 சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர். |
| 108 சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 109 சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர். |
| 110 சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம். |
| 111 சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 112 சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 113 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர். |
| 114 சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 115 சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 116 சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 117 சுப்பிரமணியன்திரு.கே.எம்.எஸ். | போடிநாயக்கனூர். |
| 118 சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு. |
| 119 சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர். |
| 120 சுப்பிரமணியன், திரு. ஜி.கே. | பவானிசாகர். |
| 121 சுவாமிநாதன், திரு. வி. வீ. .. | புவனகிரி. |
| 122 செங்கோட்டையன், திரு. கு.அ. | கோபிச்செட்டிப் பாளையம். |
| 123 செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம். |
| 124 செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.). |
| 125 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |
| 126 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 127 சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு. |
| 128 சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ.வ.). |
| 129 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 சோமு, திரு. என்.வி.என். .. | பூங்கா நகர். |
| 131 சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சி-2. |
| 132 சௌந்திரராஜன், திரு. ஆர். திருச்சி | ஸ்ரீரங்கம். |
| 133 சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர். |
| 134 தங்கமணி கவுண்டம், திரு. கே. எம். .. | திண்டிவனம். |
| 135 தங்கராசு, திரு. ஏ. .. .. | குறிஞ்சிப்பாடி. |
| 136 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 137 தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான். |
| 138 தவசி, திரு. ஆர். .. .. | பரமக்குடி (செ.வ.). |
| 139 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 140 தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர். |
| 141 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 142 தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 143 திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 144 திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 145 திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 146 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 147 தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 148 துரைசாமி, திரு. பி. எஸ். .. | பர்கூர். |
| 149 துரைமுருகன், திரு. .. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 151 துரைரர்ஜ், திரு. பி. .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.). |
| 152 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| 153 வெற்றிடம் .. .. .. | தஞ்சாவூர் |
| 154 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 155 நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை. |
| 156 நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம். |
| 157 நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 158 நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 159 நாராயணன், திரு. பி. ஜி. .. | பவானி. |
| 160 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 161 நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய). |
| 162 பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம். |
| 163 பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர். |
| 164 பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம். |
| 165 பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம். |
| 166 பலராமன், திரு. இல. .. | போளூர். |
| 167 பழனிச்சாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 168 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 169 பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம். |
| 170 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.). |
| 171 பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி. |
| 172 பாபு கோவிந்தரார்ஜன், திரு. | கடலூர். |
| 173 பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு. |
| 174 பாரமல்ல , திரு. க, .. | மானாமதுரை (செ.வ.). |
| 175 பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி. |
| 176 பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி. |
| 177 பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.). |
| 178 பாலசுப்பிரமணியன், வேடசந்தூர், திரு. வி. பி. | வேடசந்தூர். |
| 179 பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 180 பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.). |
| 181 பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை. |
| 182 பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம். |
| 183 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை. |
| 184 பூங்காவனம். திரு. என். ஏ. — | காட்பாடி. |
| 185 பெரியசாமி திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.). |
| 186 பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் |
| 187 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.). |
| 188 பெருமாள் , திரு. ரா. கு. .. | விளாத்திகுளம். |
| 189 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெய (2) |
|---|---|
| 190 பொன்னுரங்கம், திரு. ப. .. | இராயபுரம். |
| 191 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு. |
| 192 மணி, திரு. டி. .. .. | விளவங்கோடு. |
| 193 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 194 மாணிக்கம், திரு. எம். எஸ். .. | வேதாரண்யம். |
| 195 மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.). |
| 196 முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 முசிறிபுத்தன் திரு. பி. .. | திருச்சி-1. |
| 198 முத்துக்கிருஷ்ணன், திரு. சு. — | கன்னியாகுமரி. |
| 199 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 200 முத்துராமலிங்கம், திரு. இ. .. | இராதாபுரம். |
| 201 முத்துவேல், திரு. என் .. | வானூர் (செ.வ.). |
| 202 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 203 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி. |
| 204 முனுசாமி, திரு. மு. ப. .. | பாலக்கோடு. |
| 205 மூர்த்தி, திரு. ஜி. .. .. | பேரணாம்பட் (செ.வ.). |
| 206 மொக்கையன், திரு. பி. .. | இராஜபாளையம் (செ.வ.) |
| 207 யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 208 ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம். |
| 209 ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம். |
| 210 ரங்கசாமி, திரு. க. .. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 211 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 212 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 213 ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிரி. |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல். |
| 215 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல். |
| 216 விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி. |
| 217 வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில். |
| 218 விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ.). |
| 219 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 220 விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 221 விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு. |
| 222 வீராசாமி, திரு. த. .. .. | ஒரத்தநாடு. |
| 223 வீரானம்பலம், திரு. க. வெ... | மேலூர். |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு.ப | காஞ்சிபுரம். |
| 225 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஒசூர். |
| 226 வெங்கடேசன், திரு. பி. எம்... | பெரணமல்லூர். |
| 227 வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர். |
| 228 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 229 வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர்மலை. |
| 230 ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர். |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார். |
| 235 மார்கரெட் எலிசபெத் பீலிக்ஸ், திருமதி | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் —அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் —அமைச்சர்.

3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே —அமைச்சர்.

4 மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்.

5 மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்—அமைச்சர்.

6 மாண்புமிகு திரு. க. கலைமணி—அமைச்சர்.

7 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, மார்ச் 15, வியாழக்கிழமை

பங்குனி 2, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு."

அவைக்கு அஞ்சாமல், கேட்ட கேள்விகளுக்கு விடை அளிக்கும் பொருட்டு, நெறிமுறைப்படி காரண காரியத் தொடர்பு அறிந்து கற்க வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**விழுப்புரம் அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பண்டைக்கால வழிபாட்டு சிலைகள் மற்றும் கல்வெட்டுக்கள்.**

316—(*வினா எண் 16157) திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஜூலையில் தமிழக தொல்பொருள் ஆய்வுத் துறை விழுப்புரம் அருகில் பண்டைக்கால வழிபாட்டுச் சிலைகளையும் கல்வெட்டுக்களையும் கண்டுபிடித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அவைகளைப் பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): தமிழ்நாடு அரசு தொல்-பொருள் ஆய்வுத் துறை தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையில் வேட்டவலம் என்ற ஊருக்கு அருகில் சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள செத்தவரை என்ற சிறு இராமத்தின் அருகில் காணப்படும் மலையில், வரலாற்றுக்கு முந்தைய காலத்து ஓவியங்களைக் கண்டுபிடித்திருக்கிறது. மேலும், இதே மாவட்டத்தில் உள்ள புறாக்கல், குளிர்சுனை

போன்ற இடங்களிலும் பழங்கால வண்ண ஓவியங்களை இத்துறை கண்டுபிடித்திருக்கிறது. உடையாநத்தம் என்ற கிராமத்தின் அருகில் தாய் வழிப்பாட்டிற்குரிய கல் சின்னம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் விழுப்புரத்திலிருந்து சுமார் 20 கல் தொலைவில் கீழவாலை என்ற ஊருக்கு அருகிலும், வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்களை, அப்பகுதியில் உள்ள சில ஆசிரியர்கள் கண்டுபிடித்து செய்தி வெளியிட்டுள்ளனர். இதுவும் இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

செத்தவரைக்கு அருகில் உள்ள மலையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற ஓவியம் மிகவும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஓவியமாகும். இவ்வோவியத்தில் மான், எருது, பன்றி, வரிப்புலி, மீன் மற்றும் மனித உருவம், சில குறியீடுகள் காவி வண்ணத்தில் தீட்டப்பட்டுக் காட்சியளிக்கின்றன. மான், மீன் போன்ற ஒரு சில உருவங்களில் உள்ள பக்கம் வெண்மை நிறத்திலும், கோடுகள் காவி நிறத்திலும் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் சுமார் 2500 ஆண்டுகளிலிருந்து 3000 ஆண்டுகள் வரை பழமையானதாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வூருக்கு அண்மையில் உள்ள மலைகளில் பெருங் கற்காலச் சின்னங்கள் பல காணப்படுகின்றன. ஆதலால் பெருங் கற்கால மக்கள் இவ்வோவியங்களைத் தீட்டியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இவ்வோவியங்களை நல்ல முறையில் பாதுகாக்கும் பொருட்டு தற்காலிகமாகப் பகுதி நேரக் காவலர் ஒருவர் அங்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கீழவலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்களில், மனித உருவங்கள் நிற்பது போன்றும், குதிரைகளில் அமர்ந்து செல்வது போன்றும் தீட்டப்பட்டு இருக்கின்றன. மனித உருவத்தின் தலையில் கொம்பு போன்ற உருவம் காணப்படுகிறது. இம்மனித உருவங்களின் மூக்கு, பறவைகளின் மூக்குப் போன்று நீண்டு காணப்படுகிறது. இவ்வுருவங்களோடு பல குறியீடுகளும் காணப்படுகின்றன. (அதாவது வில், சூரியன் போன்ற குறியீடுகள்.) இக்குறியீடுகள் மொகஞ்சதாரோ, ஹரப்பா என்னும் இடங்களில் கண்டெடுக்கப்பட்ட களிமண் பொருட்களில் காணப்படும் குறியீடுகளை ஒத்துள்ளதாகத் தெரிகிறது. இவ்வோவியங்களை இத்துறை பாதுகாக்கும் பொருட்டு தற்காலிகமாகப் பகுதி நேரக் காவலர் ஒருவரை அமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விழுப்புரத்திற்கு 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள உடையாநத்தம் என்ற கிராமத்தில் ஒரு கல் சின்னம் சுமார் 3 மீட்டர் உயரம் உடையதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இதைப் போன்ற கல் சின்னம் சில ஆண்டுகளுக்கு முன் திருவண்ணாமலைக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இக்கல் சின்னம் தமிழர்களின் தாய் வழிப்பாட்டின் ஒரு அங்கமாக



இருக்கும் என்று ஊகிக்கப்படுகிறது. இச் சின்னம் பெருங்கற்காலச் சின்னத்தின் மையத்தில் அமைந்துள்ளது. அதிலிருந்து இச்சின்னம் பெருங்கற்கால மக்களால் வழிபடப்பட்டது என்பது தெரியவருகிறது. ஆதலால் பெருங்கற்காலக் காலத்தில் இருந்தே தமிழக மக்கள் தாய்ச்சின்ன வழிபாட்டைச் சிறப்பாகக் கொண்டிருந்தார்கள் என்பது இதன் மூலம் புலனாகிறது. இச்சின்னம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது இதைப்போன்று ஒரு சின்னம் மத்தியப்பிரதேசத்திலும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இக்கல் சின்னத்தின் அருகில் உள்ள புறாக்கல் என்ற இடத்திலும் குளிர்சுனை என்ற இடத்திலும் பழங்கால வண்ண ஓவியங்கள் தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், கற்கால மனிதர்கள், தாங்கள் கையாண்ட கற்கருவிகளைத் தீட்டிய சில இடங்களும் தொல் பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கி. பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்ப்பாடல் கல்வெட்டு ஒன்றை பழைய கருவாக்கி என்ற ஊருக்கு அருகில் தொல் பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்துள்ளது. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கற்படுக்கைகளையும் இந்த மாவட்டத்தில் உள்ள கஞ்சனூர் மலையிலும் கருமான் மலையிலும் தொல் பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்திருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்திற்கு அருகாமையிலுள்ள உடையாநத்தம் இன்னும் பல கிராமங்களில் 2500 ஆண்டுகளிலிருந்து 3000 ஆண்டுகளுக்கு முன் நம்முடைய தமிழர்களுடைய நாகரீகம் எந்த அளவிற்கு உயர்ந்திருந்தது என்பதற்கு அறிகுறியாக கல்வெட்டுக்களும் ஓவியங்களும் அங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவற்றை நிரந்தரமான காவலர்கள் இல்லாமல், தற்காலிகமான காவலர்களை வைத்துப் பாதுகாப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றை நிரந்தரமான காவலர்களை வைத்துப் பாதுகாக்கவும் சுற்றுலா பயணிகள் அங்கு சென்று பார்க்கின்ற வகையிலும் நல்ல முறையிலே அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பது தென்னாற்காடு மாவட்டத்தினுடைய பகுதியிலும் திருவண்ணாமலைக்கு அருகிலும் உள்ள பல்வேறு சிற்றூர்களில் 2500, 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களுடைய நாகரீகத்தினுடைய சின்னங்களாக அங்கு ஓவியங்களும் வேறு சில குறிப்புகளும் காணப்படுகின்றன. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அவற்றை ஆராய்ந்து, அவர்களுடைய பாதுகாப்பு, கண்காணிப்பின் கீழே அவையெல்லாம் வைக்கப்

பட்டிருக்கின்றன. இப்பொழுது, அண்மையிலேதான் அவையெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை அழிந்துபடாமல் இருக்கவும் அவற்றிற்குப் பாதுகாப்பு அளிக்கவும் தற்காலிகமாக பகுதி நேரக் காவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அந்தச் செல்வங்கள் எல்லாம் நீண்ட நெடுங்காலமாகக் காப்பாற்றப்பட வேண்டிய நிலைமைகள் இருப்பதன் காரணமாக தொல்பொருள் ஆராய்ச்சித் துறை, அறிக்கை தந்து, பிறகு அதன்மீது தக்க நடவடிக்கை நாம் எடுக்க வேண்டும். நிரந்தரமாக அங்கே காவலர்கள் போட, முழு நேர காவலர்கள் போட வேண்டுமென்ற குறிப்பும் தந்து அதைப் பற்றி அரசு அறிந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதோடு மட்டுமல்லாமல், சுற்றுலாப் பயணிகள் மற்றவர்கள் அதிலே வியப்பு கொண்டு காண வருகின்றவர்கள் ஆகியோருக்கு வசதி செய்யும் அளவுக்குத் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் என்ன, என்ன பரிந்துரைகளை செய்கின்றார்களோ, அதையும் ஆராய்ந்து தக்க முடிவெடுத்து இப்படி கிடைத்த செல்வங்கள் மீண்டும் அழிந்துபோகாமல் காப்பாற்ற எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே விழுப்புரத்திற்கு அருகிலே இப்படி, மீன் சின்னம் பொறித்த மைல் கல் போன்ற கற்கள் கண்டுபிடிக்கப்பட்டனவே, அதே போன்று திருவண்ணாமலைப் பகுதியிலும் ஏற்கனவே தொல் பொருள் ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்திருக்கின்றவற்றை நாங்கள் எல்லாம் கூட பார்த்திருக்கின்றோம். அதிலே இருந்து அந்தப் பகுதி பாண்டியர்களால் ஆளப்பட்டதா என்கின்ற ஒரு உரிய வரலாறு அந்தப் பகுதி மக்களுக்குத் தெரியாமலேயே இருந்து வருகின்றது. ஆராய்ச்சி நிறுவனத்தைக் கொண்டு எந்த எந்தக் காலத்திலே அங்கே அவை எல்லாம் உருவாக்கப்பட்டன, யார் அந்தக் காலத்திலே ஆட்சி புரிந்தார்கள் என்ற வரலாற்றை உருவாக்கி, அந்தப் பகுதி மக்களுக்குத் தருவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று திருவண்ணாமலையிலே, மைல்கல் என்ற இப்பொழுது நாம் சொல்கின்றோமே, அதைப் போன்றே அடையாளக் கற்கள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினால் கண்டுபிடிக்கப்பட்டு, அது பற்றிய ஆராய்ச்சியை அந்தத் துறையினர் நடத்திக் கொண்டு வருகிறார்கள். தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் எந்த அளவு விவரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்ற முழு விவரமும் என்னிடத்திலே இல்லை; முழு விவரங்களும் பின்னால் தெரிவிக்கலாம். சாதாரணமாக எந்தக் காலத்திலே இருக்கக்கூடும் என்பதையும் ஆராய்ந்து



குறிப்பிடுகின்ற நிலையிலே இருக்கிறார்கள். இதிலே என்ன ஒரு விசித்திரம் என்று கேட்டால் அந்தக் காலத்திலேயே மைல் கல், பர்லாங் கல் என்று ஒரு அளவு வைத்து, பெரிய துளையாக இருப்பது மைலைக் குறிப்பது என்றும் சிறு சிறு துளைகள் போட்டு 1 துளை, 2 துளை, 3 துளை என்று போட்டு; சாதாரணமாக, எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் கூட புரிந்து கொள்ளத் தக்க ஒரு சிறந்த முறையைக் கையாண்டிருக்கிறார்கள். எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்களும் புரிந்துகொள்ளத் தக்க அளவுக்கு திருவண்ணாமலையிலும், சுற்றியிருக்கிற பகுதியிலும் இருப்பதாகத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கூறி இருக்கிறார்கள். அதுபற்றி விவரமான ஆராய்ச்சி நடத்தியதற்கு பிறகு வேண்டுமானால் அவைக்கு அது பற்றி தெரிவிக்கலாம்.

**திரு. இல. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொல்பொருள் ஆராய்ச்சி அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பதைக் காட்டிலும், மிகவும் தீவிரப்படுத்தி, தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை பற்றி மேலும் ஆராய்வதற்காக அதிகமாக ஆட்களை நியமித்து ஒரு பல்கலைக் கழகத்தில் இணைத்துச் செயல்படுத்துவதற்கு ஏதாவது அரசிடம் குறிப்பிருக்கிறதா ? இது குறித்து அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலேயாவது ஒரு திட்டம் தீட்டுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொல்பொருள் ஆராய்ச்சியைப் பொறுத்தவரையிலும், அதைக் கண்காணித்து, பாதுகாத்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருவது மத்திய அரசின் கீழ் உள்ள தொல்பொருள் துறையினர்தான், ஆகவே தொல்பொருள் ஆராய்ச்சிப்பணி ஒவ்வொரு இயக்குநர் கீழே செய்யப்பெற்று வருகின்றது. ஆண்டுக்காண்டு அந்தப் பணிகளைச் செய்வதற்கு கூடுதலாகத் தேவைப்படுகின்ற அதிகாரிகளையும், பணியாளர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் அதிலே நியமித்துக் கொண்டு வருகிறார்கள். அந்தக் கல்வெட்டுகளை எல்லாம் படித்து அறிந்து அவற்றைப் புரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் பயிற்சியை இந்தத் தொல்பொருள் ஆராய்ச்சியினர் தந்துகொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் இவைகளைப் படித்து அறிந்து கொள்ள முடியாத அளவிற்குப் போய் விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக, அந்தப் பயிற்சிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று, சென்னைப் பல்கலைக் கழகம், தஞ்சையில் இருக்கின்ற தமிழ்ப் பல்கலைக் கழகம், மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தொல் பொருள் ஆராய்ச்சிக்கு என்று ஒரு டிபார்ட்மென்ட்டே இருக்கின்றது. அவர்களும் ஆராய்ந்து வருகிறார்கள். சில சமயங்களில் அந்தப் பல்கலைக் கழகங்களிலே உள்ள அராய்ச்சியாளர்களும், தொல் பொருள் துறையினைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும் இணைந்து கொண்டு பணியாற்றுகிறார்கள். இன்னும் சில வேளைகளில்

மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆராய்ச்சியினுடைய அதிகாரிகளும், மாநில அரசினுடைய தொல் பொருள் அராய்ச்சி அலுவலர்களோடு இணைந்து நின்று ஒட்டு மொத்தமாக சில பல நன்மைகளை நாட்டுக்கு உருவாக்கும் பணிகளில் இணைந்து செயல்படுகிறார்கள்.

**திரு. ஏ. எம். சேதுராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகம், மத்திய அரசு தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகம் என்றும், மாநில தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகம் என்றும் இரண்டு பிரிவுகளாக இருக்கின்றன. இதிலே மத்திய அரசாங்கம் என்னென்ன தொல் பொருள் பணிகளைச் செய்கிறது ? அதற்காக மத்திய அரசு ஆண்டு ஒன்றுக்கு ஏதாவது தொகை ஒதுக்கீடு செய்கிறதா ? அதே சமயத்தில் மாநில அரசு இப்போது அமைக்கப்பட்டு இருக்கிற தொல் பொருள் ஆராய்ச்சி கழகத்தின் மூலமாக எத்தனை இடங்களைப் பராமரிக்கிறது ? அதனுடைய செலவு என்ன ? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்தியா முழுவதும் இருக்கின்ற தொல் பொருள் நிலையைக் கண்டு அகழ்ந்து எடுத்து அவைகளைக் காப்பாற்றுகின்ற பொறுப்பை மத்திய அரசின் தொல் பொருள் துறையினர் கண்காணித்து வருகிறார்கள். மாநில அளவிலே இருக்கின்ற பல்வேறு ஆராய்ச்சிகளை நடத்தவும் ஆழ்ந்து கண்டுபிடிக்கவும், கண்டுபிடித்தவைகளைக் காப்பாற்றுகின்ற பொறுப்பை மாநிலத்தின் சார்பாக இருக்கின்ற தொல் பொருள் ஆராய்ச்சியினர் கவனித்து வருகிறார்கள். ஆனால் அகில இந்திய அளவிலே முக்கியத்துவம் வாய்ந்த, அகில இந்தியாவில் மிகவும் போற்றிப் பாராட்டும் சில பல சின்னங்களை மத்திய அரசு நிர்வகித்து வருகிறது. குறிப்பாக தஞ்சை பெரிய கோயிலை மத்திய அரசு நிர்வகித்து வருகிறது. செஞ்சிக் கோட்டையை மத்திய அரசு நிர்வகித்து வருகிறது. அதேபோல் வேறு பல வகைகளிலே இருப்பவைகளை நாம் நிர்வகித்து வருகிறோம். ஆனால் அதற்காக ஆகும் செலவைப் பற்றிய குறிப்புகள் என்னிடம் தற்போது இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதைப்பற்றி குறிப்புக்கள் தரலாம்.

**மாவட்டங்களில் புதிய நியாயவிலைக் கடைகள் துவக்கும் திட்டம்.**

317—(*வினா எண் 17521) **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா —

(அ) கூட்டுறவுத் துறைக்கு ஒப்படைத்த மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நியாய விலைக் கடைகள் புதிதாகத் துவக்கப்பட அனுமதி மறுப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் யாது ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) சாதாரணமாக அனுமதிப்பதில்லை.

(ஆ) தென்னாற்காடு, தஞ்சாவூர், தர்மபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், கிராமந்தோறும் நியாய விலைக் கடை திட்டத்தின் கீழ் கடைகளை நடத்தி வருகிறது. பிற மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் இத்தகைய கடைகளை நடத்தி வருகின்றன. எனவே எந்த மாவட்டத்தில் எந்த நிறுவனம் சாதாரணமாக நியாய விலைக் கடையை நடத்தி வருகின்றதோ அந்த நிறுவனம் தான் புதிய கிராமப்புற கடை திறக்க அனுமதிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் விசேஷ காரணங்கள் ஏதேனுமிருந்தால் மட்டும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தை கிராமப்புற நியாய விலைக் கடையை திறக்க அரசு அனுமதிக்கின்றது. நகர்ப்புறங்களில் மட்டும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் நியாய விலைக் கடைகள் திறக்க அனுமதிக்கப்படுகின்றன. தேவையான எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகள் ஏற்கெனவே திறக்கப்பட்டு விட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(முற்பகல் 9-10)

**திரு. செ. செம்மலை :** தலைவர் அவர்களே, சேலம் போன்ற கூட்டுறவுத் துறைக்கு ஒப்படைத்த மாவட்டங்களில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக புதிய கடைகள் துவக்கப்படுவதில்லையென்று சொன்னாலும் ஏற்கெனவே திறக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற பழைய கடைகளை மூடுகிற அபாயம் இருக்கிறது. மக்களின் நன்மைகளைக் கருதி, மக்களின் தேவைகளைக் கருதி, புதிதாக அங்கே கடைகள் ஆரம்பிக்கவில்லையென்றாலும் ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கிற கடைகளை மூடுவதற்கு அனுமதிக்காத அளவுக்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நடத்தப்பட்டு வந்த கடைகள் மூடப்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கான காரணங்கள் எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றி தனியாக எழுதிக் கொடுப்பார்களானால் என்ன காரணங்களால் அப்படிச் செய்யப்படுகிறது என்பதை கண்டறிந்து, அவைகள் திறக்கப்படுவதற்கு அல்லது கூட்டுறவுத் துறை மூலமாக கடை திறக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆகவே அதைப் பற்றிய விவரத்தைக் தெரிவிக்கும்படி நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, ஒரு ரெவின்யூ கிராமத்தில் ஒரு கடை கூட்டுறவுத் துறை மூலமாக இப்போது ஆரம்பிக்கப்பட்டு வருவது என்பது நடைமுறையிலே இருந்து வருகிறது. ஆனால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் ஒரு கடை— எந்த ரெவின்யூ கிராமத்திலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மேலாக இருக்கிறதோ அங்கே மக்களுடைய நலன்களைக் கருதி— கார்டுகளைப் பிரித்துச் கொடுத்து 2 கடைகளை ஆரம்பிப்பது என்று அவர்கள் இதே மன்றத்திலே உறுதியளித்து இருக்கிறார்கள். அப்படி எங்கும் திறக்கப்படுவதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று கேட்டால் சொல்கிறார்கள், கூடுதலாக செலவு ஆகும் என்பதால் கூடுதல் கடைகளை திறப்பதற்குத் தயங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு ரெவின்யூ கிராமத்திலே ஆயிரம் கார்டுகளுக்கு மேலாக இருந்தால் அங்கே எல்லாம் கூட்டுறவுத்துறை மூலமாக கடைகள் திறக்கப்படும் என்ற நிலைமையை உருவாக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கூடுமான வரையில் மக்களுக்கு ஆங்காங்கே பயன்படுகிற வகையிலே 18 ஆயிரத்து சில்லரை நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் தேவைப்படுகிற இடங்களிலே ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளை உத்தேசித்து அந்த அந்த மாவட்டத்தினுடைய அதிகாரிகள் முயற்சி எடுத்து திறப்பதற்கும் முயன்று வருகிறார்கள். சாதாரணமாக நகர்ப்புறங்களிலே கூட்டுறவுக் கடைகளும் மற்றவைகளும் இருந்து வருகின்றன. ஆனால் இரண்டாயிரம் கார்டுகளுக்கு மேலாக போகுமானால் அங்கே இரண்டு கடைகளை ஏற்படுத்தலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற நிலைமைகள் சுமார் 450 அல்லது 500 அல்லது 600 என்ற அளவிலேதான் அமைந்திருக்கின்ற கடைகள் இருக்கின்றன. எங்காவது இரண்டாயிரம் கார்டுகளுக்கு அதிகமாக இருக்குமானால் அதை 2 ஆகப் பிரித்து ஆயிரம் ஆயிரம் என்று பிரித்து அதற்கான குறிப்புகளை அரசுக்கு அனுப்பலாம் என்று அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலம் நியாய விலைக் கடைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில செமி அர்பன் ஏரியாக்களிலே சிறிய நகரங்களிலே கூட்டுறவு கடைகளிலே நியாய விலை என்று அரசாங்கம் நிர்ணயித்து இருக்கிற அந்த விலைக்கு விற்காமல் அதற்கு மேலாக பகிரங்கமாக விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. என்னிடம் அதைப்பற்றி கம்ப்ளெய்ன்ட் வந்திருக்கிறது. இதைப்பற்றி அதிகாரிகளிடம் ரெப்ரசன்ட் செய்யப்பட்டு அதிகாரிகள் அதைக் கண்டுபிடித்து அப்படி விற்பது தப்பு, சர்க்கார் நிர்ணயித்த



விலைக்குத்தான் விற்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள் இருந்தாலும் அந்த விலை கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி அவர்கள் தொடர்ந்து அதற்கு மேலாக விற்று வருகிறார்கள். இப்படி அதிகாரிகள் தலையிட்டு சொல்லியும் அவர்கள் அதை மீறி அதிக விலைக்கு விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று சட்டதிட்டங்களுக்கு மாறுபாடாக நடந்தாலும், அதிகாரிகள் அப்படிச் செய்வது தவறு என்று சொன்னதற்குப் பிறகும் அப்படி நடந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டியதுதான். குறிப்பிட்டு என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்களானால் அந்தத் துறையின் மூலமாக நடவடிக்கைகள் அவர்கள்மீது எடுப்பதன் மூலமாக அப்படிப்பட்ட தவறுகளை மற்றவர்களும் செய்யாத அளவுக்கு தடுத்து நிறுத்தமுடியும.

ஆகவே அந்த வகையில் கூடுமான வரையில் இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக நடைபெறுகின்ற இந்த நியாய விலைக் கடைகளை நாளடைவில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநிலம் முழுவதுமே மாற்றி விடலாமா என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். இப்போது குறிப்பிட்ட 6 பொருட்களை மட்டும் சப்சிடி என்ற ரேட்டிலே அதாவது ஒரு குறிப்பிட்ட ரேட்டிலே தர வேண்டி இருப்பதன் காரணத்தால் அவை எல்லாம் இலாபத்திலே இயங்குவதற்கான வழி இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் வற்புறுத்தி வருவதன் காரணமாக நாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவற்றை மாற்றிவிடலாம் என்றால் போதிய நிரந்தரமான கடைகளை வைத்து அங்கே ஆட்களையும் அதிகமாக வைக்கவேண்டும். ஆகவே வரையறுக்கப்பட்ட 6 பண்டங்களைத் தவிர மேலும் 30,40,50 பண்டங்கள் என்ற வகையில் அதாவது பொதுமக்களுக்குத் தேவைப்படுகின்ற பண்டங்களையும் அங்கே வைத்து தனியார் கடைகளில் விற்கப்படுகின்ற விலையை விட ஓரளவுக்குக் குறைத்து விற்கின்ற சூழ்நிலை ஏற்பட்டால் அவற்றின் மூலமாக ஓரளவுக்கு இலாபம் கிடைக்கின்ற நிலைமை ஏற்படும். அப்படி சில பல கடைகள் நடக்கின்றன.

ஆகவே அந்த முறையிலே நுகர்பொருள் வாணிபக் கழகம் கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவது என்ற நிலைமை இல்லாமல் நியாய விலைக் கடைகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்துகின்ற நிலைமையை ஏற்படுத்தி அவர்களுக்குச் சப்ளை செய்கின்ற அந்தப் பொறுப்பை மாத்திரம் நுகர்பொருள் வாணிபக் கழகம் வைத்துக்கொள்ளலாமா என்ற செயற்குறிப்பு இருக்கின்றது. அதுபற்றி ஆராயப் பட்டு வருகின்றது. அதுபற்றி ஆராய்ந்ததற்குப் பிறகு அவ்வாறு செய்தால் நிலைமைகள் செம்மைப்படுத்தப்படக்கூடும் என்று கருதுகிறேன்.

ஆனால் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்காத சூழ்நிலை இருந்தால் கட்டாயம் அது தண்டிக்கப்பட வேண்டியதுதான். உரியவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே, அதுபற்றிய குறிப்புக்களைக் கொடுத்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சேலம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலைகள் அமைக்கும் திட்டம்.**

*318—(*வினா எண். 21498)* **திரு இ. கணேசன் :** *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலைகள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. இ. கணேசன்:** தலைவர் அவர்களே, எதிர்காலத்திலேயாவது நவீன அரிசி ஆலைகளைச் சேலம் மாவட்டத்தில் அரசு அமைக்க முன்வருமா? நவீன அரிசி ஆலை அமைப்பதற்கான அடிப்படைத் தேவைகள் யாவை? என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் கொள்முதலுக்கே நெல் தருவதில்லை. அங்கே நெல்லே இல்லை. பிற மாநிலங்களிலிருந்து தான் அங்கே நெல்லை அனுப்ப வேண்டி இருக்கிறது. எனவே, பிற மாவட்டங்களில் நவீன அரிசி ஆலைகள் அமைக்கப்படுவதால் அதேபோன்று சேலத்திற்கும் வேண்டும் என்று கேட்பது நியாயம் இல்லை. ஆகவே எங்கெல்லாம் அதிகமாக நெல்லைக் கொள்முதல் செய்து அவற்றை உடனடியாக ஆங்காங்கே அரைக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் அரிசி ஆலைகளை ஏற்படுத்துகிறோம். அந்த அடிப்படையிலே 13 ஆலைகள் இருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்திலே ஏராளமாகக் கொள்முதல் செய்து பிற பகுதிகளுக்கு அனுப்பி ஆங்காங்கே இருக்கின்ற அரவை ஆலைகளைப் பயன்படுத்துகிறோம். மேலும் இங்கே ஏற்கெனவே நான் எடுத்துக் குறிப்பிட்டதுபோல் 100 டன் அரவைத் திறன் கொண்ட ஒரு பெரிய நவீன அரிசி ஆலையை 2 கோடி மதிப்பீட்டில் சீர்காழிக்குப் பக்கத்திலே துவங்குவதற்கான தன்மைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கே இடத் தகராறு இருக்கின்றது. அது ஓரளவுக்குத் தீர்ந்துவிட்டது. விரைவில் அதற்கான பெருமுயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசின் கொள்கை காரணமாக தனியார்கள் கூட நவீன அரிசி ஆலைகள் அமைக்கவேண்டும என்று ஒரு சட்டத்தை இயற்றி, இதில் மாநில அரசு தீவீரம் காட்டுகின்றது. ஆகவே தனியார்களும் நவீன அரிசி ஆலைகளை அமைத்து, அரசாங்கமும் நவீன அரிசி ஆலைகளை அமைத்து, அவ்வாறு அமைப்பதன் காரணமாக ஆலைகளைப் பொறுத்த வரையில் போதுமான அளவிற்கு நெல் கொள்முதல் காண முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை பற்றி அரசு பரிசீலனை செய்யுமா? ஆகவே அரசு அமைக்கக்கூடிய ஆலைகளை நிறுத்தி வைக்கவும் தனியார்கள் ஆலைகளை அமைக்கவும் அரசு ஏதாவது சலுகை காட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பெரிய நவீன அரிசி ஆலைகளை அமைக்கவேண்டும் என்றால் மத்திய அரசினுடைய முழு அனுமதியும் வேண்டும். தேவை, மற்றவைகளைக் கருதி, நிலைமைகளை எல்லாம் கண்டறிந்து, அனுமதி அளிப்பதா, வேண்டாமா என்ற முடிவுக்கு வருவார்கள். ஆனால் சிறிய ஆலைகள் அமைப்பதைப் பொறுத்தவரையில் அதற்குத் தேவையான உரிமம் வழங்குகின்ற பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கின்றது. ஆங்காங்கே இருக்கின்ற நிலைமைகளைக் கண்டறிந்து, அந்தப் பகுதியின் தன்மை, அங்கே அரவை ஆகின்ற நெல்லின் அளவு, விற்பனை ஆகின்ற அரிசி ஆகிய அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் செய்யப்படுகின்றது. அதாவது 7500 டன் ஒரு ஆண்டுக்கு மிஞ்சுகின்ற சூழ்நிலை இருந்தால் அங்கே ஒரு புதிய ஆலையை அமைப்பதற்குரிய உரிமம் வழங்கப்படுகின்றது. ஆனால் ஏற்கனவே இருக்கின்ற ஆலைகளில் அரைப்பதற்கான நெல் போதிய அளவில் அந்தப் பகுதியில் இருந்து கிடைக்காமல் பற்றாக்குறை இருந்தால் அந்தப் பகுதிகளில் புதிய ஆலைகள் அமைக்க அனுமதி கிடைப்பதில்லை. ஆகவே, சிறிய ஆலைகளைப் பொறுத்தவரையில் அனுமதி வழங்குகின்ற பொறுப்பை நாம ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பெரிய நவீன ஆலைகளை அமைக்க வேண்டும் என்றால் அவற்றுக்கான அனுமதியை மத்திய அரசு தான் தரவேண்டும.

**திரு. மு. அப்பாதுரை :** தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் அதிகமான வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட காலகட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்கள் எல்லாம் தனியார் கிடங்குகளிலேயே கிடக்கின்றன. நான் கூட சமீபத்திலே அம்பாசமுத்திரத்திற்குச் சென்று பார்த்ததில் அந்த நெல் எல்லாம் புழுங்கிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இருக்கின்றது. ஆகவே, உடனடியாக அந்த நெல்லை எல்லாம் அரவை செய்து அரிசியாக ஆக்குவதற்கு உரிய நடவடிக்கை அரசுத் துறையில் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

[1984 மார்ச் 15

## தேயிலைப் பதுக்கலைத் தடுக்கும் திட்டம்.

319—(*வினா எண். 22036): திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேயிலைப் பதுக்கலைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழ்நாடு தேயிலை (வணிகர் பதிவு செய்தல் மற்றும் இருப்பு அறிவித்தல்) ஆணை 1984 இன்றியமையாச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையின்படி 1000 கிலோவுக்கு மேல் தேயிலை இருப்பு வைத்துள்ளவர்கள் தங்களை தேயிலை வணிகர்களாகப் பதிவு செய்து கொண்டு, மாதமிருமுறை தங்களின் இருப்புக் கணக்குகளை குறிப்பிடப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். இது பதுக்கலைத் தடுக்க வழிவகை செய்கிறது.

(முற்பகல் 9-20)

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலையைப் பதுக்குவதற்குகான மூலக்காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் தேயிலையின் விலை அதிகரித்துள்ளதாகவும், அதன் காரணமாக தேயிலையின் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மத்திய அரசு தெரிவித்தது. அது மட்டுமல்லாமல் உள்நாட்டில் அதிகமாக விலை ஏறுகிற சூழ்நிலையைப் பார்த்து நம்முடைய தேவைகளை மனதில் வைத்து ஏற்றுமதியையும் மத்திய அரசு தடை செய்துள்ளது. இந்த நடவடிக்கைகளின் காரணமாக ஏலம் நடக்கும் இடங்களில் தேயிலை விலை குறைந்து காணப்படுகிறது என்றும், கல்கத்தா ஏலங்களில் கிலோவிற்கு ரூபாய் 7-லிருந்து 8 வரையும், கொச்சின் ஏலங்களில் ரூபாய் 4-லிருந்து 5 வரையும் குறைந்துள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆகவே இதன் காரணமாக அப்படிப்பட்ட ஏலங்களில் விலை குறைந்திருப்பதன் காரணமாக சிறு வியாபாரிகளிடத்தில் விலை குறைந்திருக்கிறதா என்பதை கண்காணிக்க வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்தது மட்டுமல்லாமல், மைய அரசு ஒரு கிலோ சிவப்பு அல்லது மஞ்சள் லேபிள் தேயிலை மற்றும் உதிரி தேயிலையின் சில்லரை விற்பனை விலை ரூ. 30-க்கு மேற்படாமல் இருக்க வேண்டுமென்றும், அதற்காக மாநில அரசு தேயிலை வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அதற்கு முடிவு காணவேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார்கள். பேச்சுவார்த்தைகள் நடத்தி 30 ரூபாய்க்கு மேலே விற்பனை விலை



1984 மார்ச் 15]

போகக் கூடாது என்று நாம் ஆணை பிறப்பித்து அதற்கும் அவர்கள் ஒப்புதல் தந்து, 4—2—1984-க்குள் தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று நாம் அவர்களிடத்தில் சொல்லி இருக்கிறோம். ஆகவே ஆயிரம் கிலோவிற்கு மேலே வைத்திருப்பவர்கள் தங்கள் இருப்புகளைத் தெரிவித்தால் தான் சட்டப்படி அவைகளைக் கணக்கிட முடியும். ஆகவே சேமித்து வைத்து விலையை ஏற்றுவதற்கு வழி செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்குத் தான் அந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஓரளவிற்கு அகில இந்திய அளவிலே தேயிலையினுடைய விலை கூடாமல் இருப்பதற்கு, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மத்திய அரசு வற்புறுத்தியதன் பேரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை பயிரிடப்படும் போதே ஒரு குத்து மதிப்பாக கணக்குப்போட்டு அதற்கு முன்பணம் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? தேயிலை மூலம் அன்னியச் செலாவணி நமக்கு எவ்வளவு கிடைக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. முன் பணம் கொடுக்க இயலுமா என்பதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் நிலைமைகளை ஆராய்ந்து பதில் தர இயலும்.

## எண்டியூரில் கூட்டுறவுக் கிடங்கு கட்டும் திட்டம்.

328—(*வினா எண். 18807)— திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி எண்டியூரில் கூட்டுறவுக் கிடங்கு கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) மற்றும் (ஆ): திண்டிவனம் தொகுதி எண்டியூரில் கூட்டுறவுக் கிடங்கு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை. எண்டியூர் கூட்டுறவு விவசாய சேவை சங்கம், கிடங்கு கட்ட அடிமனை வாங்கியபின், கிடங்கு கட்ட பிரேரணை அனுப்பினால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

[1984 மார்ச் 15

குளத்தூர் தொகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு 1982—83-ல் கிணறு வெட்ட வழங்கப்பட்ட கடன் தொகை.

329.—(*வினா எண். 20023)—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியில் உள்ள விராலிமலை, அன்னவாசல், கீரனூர் நிலவள வங்கிகள் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனை பேர்களுக்கு கிணறு வெட்ட 1982–83ல் கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) மானியமாக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) விராலிமலை நிலவளவங்கி இருவருக்கும், அன்னவாசல் நிலவள வங்கி நால்வருக்குமாக, மொத்தம் ரூ. 0.18 இலட்சத்திற்குக் கடன் வழங்கியுள்ளன.

(ஆ) சிறுபாசனம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டக் கடன்களின் கீழ் ரூ. 0.12 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறை மூலம் வழங்கப்பட்டு வந்த கடன்கள் என்ன காரணத்திற்காக நிலவள வங்கிகளுக்கு மாற்றப்பட்டது என்பதை அரசு அறிவிக்குமா? குறைந்த நிலத்தை மட்டும் வைத்திருக்கிற ஆதி திராவிட மக்கள் நிலவள வங்கிகள் மூலம் கடன் பெறுவதில் நடைமுறையில் அதிகமாக சிரமம் இருக்கிறது. ஆகவே மீண்டும் ஆதி திராவிட நலத்துறையின் மூலம் கடன் வழங்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நிலவள வங்கி மூலமாகத்தான் இப்போது வழங்கப்பட்டு வருகிறது. என்னிடத்திலுள்ள அந்தப் பொறுப்பை இப்போது நான் மாற்றத் தயராயில்லை.

திரு. த. மாரிமுத்து: தலைவர் அவர்களே, ஆதி திராவிட நலத்துறை மூலமாகத்தான் ஏற்கெனவே கடன் வழங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது அதை மாற்றினால் பல சிரமங்கள் இருப்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு நிலவள வங்கியில் பலவித முறைகேடுகள் நடந்து மாவட்ட அதிகாரிகளால் அவை கண்டுப்பிடிக்கப்பட்டு மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்காக, மாநில நிலவள வங்கிக்கு கோப்புகள் அனுப்பப்பட்டு பல மாதங்களாகியும் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கிறார்கள் என்று பொது



1984 மார்ச் 15]

மக்கள் கொடுத்துள்ள புகார்கள் பேரிலும் அமைச்சர் அவர்களிடம் கொடுத்துள்ள புகார்களின் பேரிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் முறையாக தீவிரமாக எடுக்காததால் தவறு செய்பவர்கள், மேலும் தவறுகள் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே மாநில நிலவள வங்கி உயர் அதிகாரிகள் முறையான நடவடிக்கைகள் எடுக்க அரசு ஆலோசனை வழங்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நில வள வங்கி மூலம் ஆதி திராவிட மக்களுக்கு கடன்கள் வழங்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்கள். அப்படி அவர்கள் பகுதியில் அல்லது அவர்கள் தாலுகாவில் நிலவள வங்கியில் ஏதாவது பிரச்னை இருக்குமானால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கைகள் எடுக்கத் தயார். மொத்தத்தில், நில வள வங்கிகள் ஆதி திராவிட பெருமக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் கடன்கள் வழங்க அரசாங்கம் அதற்கு வேண்டிய இன்ஸ்ட்ரக்ஷன்ஸ், அறிவிப்புகள் நிலவள வங்கிகளுக்கு அனுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 330-க்கான பதில் வரவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வினா தள்ளிவைக்கப்படுகிறது.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது என்றால் அது வேறு விஷயம். ஆனால் கேள்விக்கு பதில் வரவில்லை என்பது It cannot be a ground. கேள்விக்குப் பதில் வரவில்லை என்றால் அதற்கு அமைச்சர்தான் பொறுப்பு. Once it is included in the list, the Hon. Minister is bound to answer.

உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஏற்படுத்தும் திட்டம்.

330—(* வினா எண். 21734)—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகட்கு உதவி செய்யும் நோக்கத்தோடு 'உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' (Farmers Economic Development Corporation) அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) : அரசாங்கத்தினுடைய ஆய்வில் இருக்கிறது.

[1984 மார்ச் 15

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசின் ஆய்வில் இருப்பதாகச் சொன்னார் கள். இதற்காக முந்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர் களும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் வேளாண் பெருங்குடி மக்களையும் அதிகாரிகளையும் கொண்ட ஒரு கூட்டத்தைக் கூட்டி, ப்ரிலிமினரி கூட்டத்தைக் கூட்டி ஆலோ சனை செய்தார்கள். வெகு விரைவில் அமைக்கப்படும் என்று எல்லாம் சொன்னார்கள். ஆகவே அதை விரைவாக அமைத்து விவசாயிகளுக்கு உதவி செய்ய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, உழவர் பொருள்ாதார மேம்பாட்டுக் கழகம் அமைப்பது பற்றிய செயற் குறிப்பு மாநில திட்டக் குழுவின் பரிசீலனைக்குப் பின் அரசின் ஆய்வில் இருந்துவருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்கிற வேளாண் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், விவசாயம் மற்ற வகைகளில் அவர்களுடைய வருமானத்தை பெருக்குகிற விதத்தில் அதற்கேற்ப பல்வேறுவிதமான நலப் பணிகள், உதவிகள் செய்யவும், பல நோக்கில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்வதற்காகவும் இந்த நிறுவனம் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரது கேள்வி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. குற்றச்சாட்டு இல்லாமல் வினா நேரத்தில் கேளுங்கள்.

(முற்பகல் 9-30.)

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க மேம்பாட்டுக் கழகம் ஆராய்ச்சி செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது நியாய விலை கிடைப்பதற்கு, வேளாண்மைத் துறை அமைச்ச ருடைய இலாகாவிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணியாற்றுகிற உழவர்களுக்கு எப்படி நியாய விலை வழங்கப் படுகின்றது ? அல்லது பொருளாதார ரீதியில் உதவி செய்யும் வகையில் அதிலே கடன் போன்ற உதவிகள் அல்லது மானியம் போன்ற உதவியோ செய்யப்படுமா ? அல்லது சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்ற பாகுபாடு வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1984 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விகள் பற்றி பைனான்ஸ் கமிஷன் ஆய்வுகளை மேற்கொண்டு இருக்கிறது. அவர்களது பரிசீலனைக்குப் பின்னால், அவர் களுடைய பரிந்துரைகளுக்கு ஏற்ப, அரசு முடிவுகளை மேற் கொள்ளும். நியாய விலை கிடைப்பது சம்பந்தமாக, நான் ஏற்கனவே சொன்னது போல், உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு இன்னும் அதிகமான அளவில் நியாயமான விலை கள் கிடைக்கவும், அது தவிர இன்னும் பல்வேறு வகையான உதவிகள் செய்வதற்கு, அவர்களுக்கு வருமானம் கிடைப்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குவதற்கு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதற்சேற்ப இந்த கார்ப்பரேஷன் உருவாக்கப் பட்டிருக்கிறது. அதுபற்றி பைனான்ஸ் கமிஷன் ஆய்ந்து கொண் டிருக்கிறது.

## தமிழகத்தில் பழப்பண்ணைகள் அமைக்கும் திட்டம்.

320—(*வினா எண். 18648)—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பழப் பண்ணைகள் எத்தனை இடங்களில் அரசால் துவக்கப்பட உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : திருச்சி, பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களில் பழப் பண்ணைகள் அமைக்க அரசால் அனுமதிக்கப்பட்டு இதற்கான பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 மாவட்டங்களில் தமிழக அரசின் சார்பாக பழப் பண்ணைகள் அமைக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர் கள் கூறினார்கள். அந்த 3 மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களில் அமைப்பதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே இருக்கின்றன. இந்த 3 மாவட்டங்களில் அமைத்தால், தமிழகத்திலேயே இத்தகைய பழப் பண்ணை இல்லாத மாவட்டங்களே இல்லை என்ற நிலை மையை ஏற்படுத்துவதற்குத்தான் இந்த 3 மாவட்டங்களில் ஆரம்பிக்கிறோம். மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

[1984 மார்ச் 15

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதியதாக துவக்கப்பட உள்ள 3 மாவட்டங்களில் பழப் பண்ணை அமைப்பதில் ஆகும் செலவு எவ்வளவு? மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே துவங்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கும் பழப் பண்ணைகளுக்கு ஆகிய செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, செலவினங்கள் பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழப் பண்ணையை பெரியார் மாவட்டத்தில் புதியதாக ஆரம்பிக்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெரியார் மாவட்டத்தில், எந்த வட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது ? எத்தனை ஏக்கர் பரப்பளவில் இந்தப் பழப் பண்ணை ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வட்டத்தில் மோதூரில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. நிலம் கையகப்படுத்துகின்ற பணி இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது பற்றிய முழு விவரம் வந்த பிறகு அறிவிக்கப்படும்.

### தாளவாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் காபி பயிர் செய்யும் திட்டம்.

321—(*வினா எண். 21626)—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாளவாடி ஊராட்சி ஒன்றியம், கோட்டாடை, மாவள்ளம், பெஜலட்டி போன்ற பகுதிகளில் காபி பயிர் செய்யும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், காபி வாரியத்தின் பங்கு இதில் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) காபி பயிர் செய்வது குறித்த தனியொரு திட்டம் ஏதுமில்லை. மலைப் பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாடு திட்டத்தின் கீழ் ஏனைய தோட்டக்கலை பயிர்கள் விநியோகத்துடன், காப்பி நாற்றுக்களும் விநியோகிக்கப்படுகின்றன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



1984 மார்ச் 15]

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காப்பி பயிர் செய்கின்ற பகுதிகளில் அந்த நிலங்களில் தொடர்ந்து பல காலமாக காப்பி பயிர் செய்து வருவதால் உற்பத்தித் திறன் மிகவும் குறைந்து இருப்பதாகவும், என்னுடைய தொகுதியான சத்தியமங்கலம் தொகுதியில் கோட்டாடை, மாவள்ளம், பெஜலட்டி போன்ற பகுதிகளில் ஏற்கனவே தோட்டக்கலை மூலமாக காப்பிச் செடிகள் கொடுக்கப்பட்டு, அவற்றை வீடுகளில் பயிர் செய்வதன் காரணமாக, நல்ல விளைச்சல் கிடைத்து இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அந்த அடிப்படையில் அந்தப் பகுதிகளில் காப்பி பயிர் செய்ய அதிக கவனம் செலுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தோட்டக்கலைத் துறை அத்தகைய ஏற்பாடுகளைத்தான் செய்து கொண்டு இருக்கிறது. ஏறத்தாழ மொத்தம் 10 000 காப்பி நாற்றுகள் அந்தப் பகுதியில் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. தொடர்ந்து அந்த முயற்சியில் ஊக்கம் தருகின்ற வகையில் துறை செயல்படும்.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, அங்கே அதிக நிலங்களில் காப்பி பயிர் செய்ய அரசு ஊக்கம் அளிக்கின்ற வகையில் அந்தப் பகுதி மக்களுக்கு கடன் வசதியோ அல்லது அரசு மானியமோ, அல்லது உதவியோ செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 50 சதவீதம் மானியம் ஏற்கனவே வழங்கப்படுகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காப்பி பயிர் செய்வதைப்பற்றிச் சொன்னார்கள். அங்கேயுள்ள விவசாயிகளுக்கு இலவசமான முறையில் காப்பி நாற்றுகள் வழங்குவதற்கு வசதியான முறையில் அந்தப் பகுதியில் காப்பி நாற்றங்கால் பண்ணை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இப்போதுள்ள திட்டப்படி, சின்னகல்ராயன் மலைப்பகுதியில் 90 ஏக்கர் பரப்பளவில் மாதிரி காப்பித் தோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறது.

### தொண்டாமுத்தூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டும் திட்டம்.

322—(*வினா 21649)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) இத்திட்டம் எப்பொழுது முடிவுறும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூரில் நிலம் வாங்கி விற்பனைக் கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1985–86 ஆம் ஆண்டிற்குள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, பெரும்பகுதி விவசாயிகளைக் கொண்டிருக்கும் தொண்டா முத்தூர் பகுதியில் கடந்த 5 ஆண்டுகாலமாக ஒழுங்குமுறை விற் பனைக் கூடம் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டும், அது செய்து முடிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு விட்டதா ? எப்போது கட்டுமானப் பணிகள் துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்ட இடங்களில் ஒரு சில பிரச்னைகள் வந்தன. அதனால் வேறு இடம் பார்ப்பதற்கான முயற்சி மேற் கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் நிலத்தைக் கையகப் படுத்தி, பின்னர் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை மதிப்பீடு செய்கிறபோது அங்கே இருக்கிற மார்க்கெட் விலையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வரு வாய்த்துறை மதிப்பீடுகளைச் செய்வதால், விவசாயிகள் நிலத் தைக் கொடுக்க மறுக்கிறார்கள் அல்லது வழக்காடு மன்றத்திற்கு போகிறார்கள். இதைப் பொறுத்தவரையில் வருவாய்த் துறைக்கு தகுந்த உத்தரவுகளைப் போட்டு, ஓரளவு நியாயமான விலையை, மார்க்கெட் விலையை அனுசரித்து, விலையை நிர்ணயிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுமா? இப்படி நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதால் கட்டுமானப் பணிகள் நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றன. ஏற்கனவே அந்தக் கட்டுமானப் பணிகள் இரண்டு மடங்கு ஏறியிருக்கிறது. இதைத் தடுக்கும் முறையில் நிலத்தின் விலையை நிர்ணயிக்கும் போது, மார்க்கெட் விலையையும் கருத்தில் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர் களே, உறுப்பினருடைய ஆலோசனையை துறைக்குத் தெரி விக்கப்படும்.

பேச்சிப்பாறையிலுள்ள அன்னாசிப்பழப் பண்ணை.

323—(*வினா 21679)—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்பு மிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் பேச்சிப்பாறையிலுள்ள அன்னாசிப் பழப் பண்ணையிலிருந்து அரசுக்கு லாபம் கிடைக்கிறதா ?



(ஆ) இந்தப் பண்ணையை விஸ்தரிப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

[முற்பகல் 9-40]

திரு. டி. மணி : தலைவரவர்களே, பேச்சிப்பாறையில் உற் பத்தியாகிற அன்னாசிப்பழம் நல்லமுறையில் பலன் அளிப்பதாக இருக்கிறது. அங்கு உற்பத்தியாகிற பழங்கள் எந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக யார், யாருக்கு விற்பனைச் செய்யப்படு கின்றன ? ஏற்கெனவே இந்த உற்பத்திக்கு ஏற்ற நல்ல கால நிலை அங்கே இருப்பதால் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய இதரப் பகுதிகளையும் கையகப்படுத்தி, அந்தப் பழத் தோட் டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, இப்போது அமைந்திருக்கிற பழப்பண்ணை 25 ஏக்கரில் இருக் கிறது. தொடர்ந்து ஓரளவுக்கு இலாபகரமாக அது இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பண்ணை வனத்துறையிலிருந்து குத்தகைக்கு நிலத்தை எடுத்து, அந்த இடத்தில் அமைக்கப்பட் டிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற நிலங்களைக் கையகப்படுத்தி பண்ணையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு இல்லை. காரணம் நிலத்தைப் பெற வழியில்லை. ஆனால் நாம் அங்கே பணிபுரி கிறவர்களுக்கு குடியிருப்பு போன்ற வசதிகளைச் செய்து கொடுத் தால், இன்னும் நல்லமுறையில் அந்தப் பண்ணை நடைபெறும் என்று கருதுவதால் அதற்காக 5,80,000 ரூபாய் ஒதுக்கியிருக் கிறோம். தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டும், அந்தப் பண்ணையை விரிவுபடுத்தலாம் என்று கருதுகிறேன். விற்பனை யைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற துறை அலுவலர் களால் தான் விற்பனை செய்யும் பணி நடைபெறுகிறது.

கலவை பேரூராட்சிக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

324—(*வினா 17991)—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலவைப் பேரூராட்சிக்குப் பாலாற்றிலிருந்து குடி தண்ணீர் கொடுக்க குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடை பெறும் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) எப்பொழுது குடிநீர் வழங்க இயலும் ?

[1984 மார்ச் 15

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். நில ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் திட்டச் செயலாக்கம் தாமதப்பட்டுள்ளது.

(ஆ) 22—4—1983 முதல் குடிநீர் விநியோகம் செய்யப் பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, கலவை பேரூராட்சிக்கு பாலாற்றங்கரையிலிருந்து கொடுக்கப்பட்டு வருகிற குடிநீர் சப்ளைக்கு இப்போது மின்சார சப்ளை இல்லாத காரணத்தால் ஆயில் எஞ்சின் வைத்து, தண்ணீர் சப்ளை செய் யப்படுகிறது. அது மட்டுமல்லாமல் பொதுக் குழாய்கள் அதிக மாக கொடுக்கப்படாத காரணத்தால் இன்னும் குடிநீர் பிரச்சனை இருக்கிறது. அதனால் அங்கே பொதுக் குழாய்கள் மேற்கொண்டும் அதிகமாக போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அதோடு அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு எவ் வளவு தொகை செலவிடப்பட்டிருக்கிறது? குறிப்பிட்ட தொகைக் குள் வேலை முடிந்துவிட்டதா அல்லது மேற்கொண்டும் அதிகத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, அந்த ஊருக்கு 18 பப்ளிக் ஃபவுன்டன்ஸ் — பொதுக் குழாய்கள் இருக்கின்றன. அவை போதுமானவை என்று கரு தப்படுகிறது. 20 கொடுத்தால், போதாது, 22 வேண்டுமென்று தான் கேட்பார்கள். இப்போது கொடுத்திருக்கிற 18 போது மானவை என்று கருதப்படுகிறது. பவர் சப்ளை இல்லை என்று சொன்னார்கள். அதுபற்றி விசாரித்து ஆவன செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, கலவை பேரூராட்சிக்கு இரண்டு டாங்குகள் கட்டித்தரப்பட்டிருக்கின்றன. ஆனால் முறைப்படி இன்னும் திறக்கப்படவில்லை. அந்த இரண்டு டாங்குகளின் கொள்ளவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, அதுபற்றிய தகவல் தற்போது இல்லை. ஆனால் அந்த ஊருக்கு போதுமான அளவு தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. கலவை நகரப் பஞ்சாயத்து மற்றும் வழியில் உள்ள ஊர்களுக்கு 12 கிலோமீட்டர் தூரத்தில் பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் பணி முடிந்து, தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் தான் இருக்கிறது.



1984 மார்ச் 15]

## நகராட்சிகளில் குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் திட்டம்.

325—(*வினா 18089)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நகராட்சிகளில் குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக்கொள்ள ஆகும் செலவினைக் கடனாகக் கொடுத்து உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வறட்சி நிவாரணப் பணியின் கீழ் நகராட்சிகளில் குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. செலவில் பாதித் தொகை மான்யமாகவும், பாதித் தொகை கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. சி. கணேசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மொத்தமாக 106 நகராட்சிகளுக்கு மேல் இருக்கின்றன. பஞ்ச நிவாரண வேலைகளின் மூலமாக மொத்தமாக எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது? கொடுக்கப்பட்ட பணத்தில் இது வரையில் எவ்வளவு வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணியின்கீழ் கொடுக்கப்படுவது எல்லாம் பாதி மானியம், பாதி கடன் என்ற முறையில் கொடுக்கப்படு கிறது. மொத்தம் எவ்வளவு என்ற தகவல் தற்போது என் னிடத்தில் இல்லை.

திரு. சி. கணேசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற 106 நகராட்சிகளில், பல நகராட்சிகள் தன்னைத்தானே சமாளித்துக்கொள்ள முடியாத அளவுக்கு சக்தியற்று இருக்கின்றன குறிப்பாக செங்கற்பட்டு நகராட்சியில் மின்சார செலவுக்கு மட்டும் ரூ. 15 இலட்சம் ஆகிறது. அதைக் கூட ஒன்றரை ஆண்டு களாகக் கட்ட முடியாமல் இருக்கிறது. இப்படி தன்னைத் தானே சமாளித்துக்கொள்ள முடியாத நகராட்சிகளுக்கும் பாதி கடனாகக் கொடுத்ததாகச் சொன்னார்கள். அந்தக் கடனை மானியமாக மாற்றிக்கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, இந்த வறட்சி நிவாரணப்பணியின்கீழ் கொடுக்கப்படுவது தான் பாதி மானியம், பாதி கடன். இல்லை என்றால், பொதுவாக எல். ஐ. சி. மூலமாகவும் அரசுத் துறைகள் மூலமாகவும் முழு வதையும் கடனாகக் கொடுத்து, திருப்பப்பெற்றுக்கொள்ள

நடவடிக்கை எடுக்கப்படும். எனவே வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் பாதி மானியம், பாதி கடன் என்று கொடுக்கப்பட்டதால் அவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவியாக இருக்க வேண்டும்.

---

நாராவாரிக்குப்பம் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர்வழங்கும் திட்டம்.

326—(*வினா 19279)— திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்குன்றம்—நாராவாரிக்குப்பம் பேரூராட்சிக்கென நிரந்தரக் குடிநீர்த்திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ): செங்குன்றம்—நாராவாரிக்குப்பம் பேரூராட்சிக்குத் தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

மேலப்பாளையம் நகராட்சிப்பகுதிக்குக் குடி நீர் வழங்கும் திட்டம்.

327—(*வினா 19819)—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலப்பாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) இத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ரூ. 142.20 இலட்சங்கள்.

(ஆ) இத்திட்டத்தின் வேலைகள் இப்பொழுது நடைபெற்றுகொண்டிருக்கின்றன.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, நெல்லை பேரூராட்சி இப்போது மாநகராட்சியாக மாறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தத் திட்டம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த தகவல் பிரகாரம் இந்தத் திட்டம் இன்னும் துவங்கப்படவேயில்லை. எப்போது முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது மேலப்பாளையத்திற்கு, பாளையங்கோட்டை மேலப்பாளையம் இரண்டையும் சேர்த்துக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் வழியாக குடிதண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மேலப்பாளையத்திற்கு தனிமைப்படுத்தப்பட்ட குடிதண்ணீர் விநியோகிக்கவேண்டும் என்று மக்கள் விரும்பியதற்கு ஏற்ப, குறிப்பாக அந்தத் தொகுதி எம். எல். ஏ. மிகவும் வலியுறுத்திய தன் காரணமாக, அதைப் பரிசீலனை செய்து, மேலப்பாளையத்திற்கும், தனிமைப்படுத்தப்பட்ட குடிதண்ணீர்க் கொடுப்பதற்கு ஆய்வு செய்து ரூ. 142.20 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து கடன் பெறுவதற்காக அரசு நிலை ஆணை எண் 1841, உள்ளாட்சித்துறை, நாள் 30—11—1982-ல் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இத் திட்டம் டிசம்பர் 1985-ல் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மேலப்பாளையம் நகராட்சியில் இருக்கக்கூடிய அனைத்து பகுதிகளுக்கும், குறிப்பாக கணேசபுரம் என்று சொல்லக்கூடிய ஆதி திராவிடர் வாழ்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கும் பயன்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கணேசபுரம் எங்கேயிருக்கிறது என்று எனக்குத் தெரியாது. மேலப்பாளையத்தில் ஒவ்வொருவருக்கும் 90 லிட்டர் குடிதண்ணீர்க் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 90 லிட்டர் தண்ணீர் ஒரு நாளைக்கு ஒருவருக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், அது நல்ல கணிசமான அளவு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்திற்கான கூட்டுறவுச் சங்கங்களின் நன்கொடை.

281—(*வினா எண் 16178)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சத்துணவுத்திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சத்துணவுத் திட்டத்துக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நன்கொடை வழங்கியுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ) ஆம்.

[1984 மார்ச் 15

(ஆ) இத்திட்டத்திற்காக 29—2—1984 வரை, கூட்டுறவு அமைப்புகள் ரூ. 52,20,090.45 நன்கொடையாக வழங்கியுள்ளன.

| | | ரூ. |
|---|---|---|
| 1. | கூட்டுறவு பால் உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் .. .. .. .. | 2,22,426.55 |
| 2. | நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் .. | 7,42,565.00 |
| 3. | கூட்டுறவு அச்சகங்கள் .. .. | 15,839.00 |
| 4. | கூட்டுறவு பாங்குகள் .. .. .. | 20,63,712.90 |
| 5. | கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் .. .. | 16,00,000.00 |
| 6. | கூட்டுறவு நூற்பு மற்றும் நெசவு ஆலைகள். | 4,70,000.00 |
| 7. | இதர கூட்டுறவு அமைப்புகள் .. .. | 1,05,547.00 |
| | மொத்தம் .. | 52,20,090.45 |

(முற்பகல் 9-50)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, 52 லட்சம் ரூபாயை கூட்டுறவுச் சங்கங்கள், முதலமைச்சருடைய குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்காக வழங்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களில் அல்லது நிறுவனங்களில் இன்றைய தினம் நேர்தல் நடத்தப்படாத காரணத்தாலே, மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாதிருக்கும் கால கட்டத்தில், அதிகாரிகள் உண்மையாகவே லாபம் பெற்று, அந்த லாபத்திலிருந்து அந்தத் தொகையை அளித்திருக்கிறார்களா ? இல்லை சில அதிகாரிகள் சொல்வதைப் போல, அரசாங்கம் கேட்டதை நாங்கள் தந்தோம் என்ற வகையில், லாபம் இல்லாவிட்டாலும் கூட்டுறவுச் சங்க நிதியிலிருந்து கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எந்த நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தவில்லை. லாபத்திலேயிருந்துதான் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக வெல்ஃபேர் பண்டுக்கு ஒதுக்கிய பணத்திலிருந்து தான் தந்திருக்கிறார்கள்.

திரு. என். எ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்காக வேண்டி, பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்கள் நிதி உதவி அளித்தது சம்பந்த



1984 மார்ச் 15]

மாக ஒரு புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ஏதேனும் நிதி உதவி கொடுக்கப்பட்டுள்ளதா ? கொடுத்திருப்பதாக சொல்லப்படுகிறதே, அந்த விவரம் ஏன் இதில் அறிவிக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, மூலக் கேள்வி கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்பட்ட பணத்தைப் பற்றியது. வேறு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு நிறுவனங்கள் பல தங்களது உயர் வருமானத்தில் பெரும் பகுதியை வருமான வரியாக செலுத்திவிடுகின்றன. பசிப் பிணி போக்கி, கல்வி அறிவு வளர்க்கக்கூடிய, '[illegible] காப்பாளன்' என்று சொல்லக் கூடிய சத்துணவு திட்டத்திற்கு இந்த அரசு நிறுவனங்கள் நிதி வழங்கினால், அதற்கு வருமான வரி விலக்கு அளிக்க அரசு முன் வருமா ? அத்தோடு இம்மாதிரியான தொகை முழுவதும் முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்கே பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல எண்ணத்தை அரசு பரிசீலிக்கும்.

சத்துணவு மையங்களில் பணிபுரியும் அமைப்பாளர்கள்.

282—(*வினா 21466)—திரு. போ. உத்திராபதி : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களில் பணிபுரியும் அமைப்பாளர்களுக்குத் தற்பொழுதுள்ள சம்பளத்தைவிட இன்னும் கூடுதலாகச் சம்பளம் அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) அமைப்பாளர்களை முழு நேர ஊழியர்களாக எடுத்துக்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அறிவிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ), (ஆ) மற்றும் (இ): கருத்துரு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் பணிபுரியக் கூடியவர்களுக்கு தற்போது 150 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதில் சமையல் வேலை செய்யக்கூடியவர்களுக்கும், ஆயாக்களுக்கும்

60 ரூபாய், 30 ரூபாய் கொடுக்கப்படுகிறது. தற்போது இருக்கக் கூடிய விலைவாசி ஏற்றத்தில் சாதாரணமாக தினக் கூலிக்குக்கூட, குறைந்தபட்சம் 10 ரூபாய் கிடைக்கிறது. ஓட்டலில் வேலை செய்கிறவர்களுக்குக்கூட 10 ரூபாய், 15 ரூபாய் கிடைக்கிறது. எனவே பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்களே, 15 ரூபாய் சம்பளம் போதாது என்று அவர்கள் கோரிக்கையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது விலைவாசி ஏற்றத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு, குறைந்த பட்சம் அவர்களுக்கு மாதம் 300 ரூபாய் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எந்தக் கருத்துருவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

அடுத்து அவர்கள் பகுதி நேர ஊழியர்களாகத் தான் இதில் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, முழுநேர ஊழியர்களாக இல்லை. மேலும், அவர்களுக்கு தற்போது தரப்பட்டு வருகிற இந்தச் சம்பளம் கூட, இதுகூட கிடைக்காமல் இருந்தவர்களுக்குத் தான், இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம். ஆகவே, அவர்கள் யாருமே இந்தப் பிரச்சினையை உருவாக்கவில்லை. தயவு செய்து உறுப்பினர் அவர்கள் அப்படி உருவாக்காமல் இருந்தால் நல்லது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உருவாக்கவில்லை. அவர்களுடைய வயிற்றின் பசிதான் இன்றைக்கு கூடுதலாக அவர்களை சம்பளம் கேட்டு, அரசாங்கத்திற்கு விண்ணப்பம் அனுப்பிக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக நான் கேள்வி கேட்க விரும்புவது, அந்தப் பணியாளர்கள், இன்றைக்கு இந்தப் பணியை நம்பி, அவர்கள் பெண்களாக இருந்தாலும் சரி, ஆண்களாக இருந்தாலும் சரி, திருமணம் கூட செய்துக் கொண்டு விட்டார்கள். திருமணம் செய்து கொண்டு ஒன்றிரண்டு குழந்தைகள் கூட பிறந்து விட்டன. ஆகவே இன்றைக்கு இதை நம்பி வாழக்கூடிய மக்களுக்கு பகுதி நேர ஊழியர்களாக இருந்தால், நம்பிக்கையை இழந்து விடுவார்கள். அந்த வேலையை விட்டு வெளியே போனால் வேறு வழியே இல்லை. எனவே, சர்க்கார் உடனடியாக அந்தப் பகுதி நேர ஊழியர்களாக வேலை செய்யக் கூடியவர்களை வாழவைக்க, நிரந்தரமாக அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா? அதற்கு உத்திரவாதம் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிப்பார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உறுதி எதுவும் அளிப்பதற்கு இல்லை. மேலும் இந்தப் பணி ஆற்றுகிறவர்கள் உள்ளூரிலேயே இருக்க வேண்டும் என்றும், படித்த இளைஞர்களுக்கும் விதவைகளுக்கும் இந்த வேலை வழங்கப்படுகிறது. எனவே அவர்களுக்கு இது ஒரு ஊக்கத்திற்காக அளிக்கப்படுகிறதே தவிர, இதை வைத்து குடும்பத்தை நடத்தலாம் என்ற முறையில் இந்தப் பணி அளிப்பது இல்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அவர்களே முயலவில்லை, உறுப்பினர்கள் உற்சாகப்படுத்துகிறார்கள் என்று. அவர்கள் இந்த வழியில் முயலாமல் வேறு வழியில் முயலுகிறார்கள். 150 ரூபாய் மாத சம்பளம் என்று சொல்லுகிற போது—மாண்புமிகு அமைச்சர் அவர்களும் திடீர் திடீர் என்று செக்அப் செய்து—பலயிடங்களில் தவறான பணியில் ஈடுபட்டு உணவுப் பொருட்களை கையாடல் செய்வதற்கு இடம் அளித்துவிடுகிறது. ஆகவே, இது போன்ற தவறுகளை நிவர்த்திச் செய்வதற்கு சம்பளத்தை உயர்த்தித் தந்தால் நன்றாக இருக்கும். இல்லை என்றால் தவறுகள் நடந்து கொண்டே இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செக்அப் செய்வதும் அவர்களை சஸ்பெண்டு செய்வதும் ஆக இருக்கும். ஆகவே, தவறுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சம்பளத்தை கூடுமான அளவுக்கு உயர்த்தித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறை தடுப்பதற்கும், சம்பளத்தை உயர்த்துவதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வளவு தந்தால் தவறை நிவர்த்தி செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள்?

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது இவர்கள் முழுநேர ஊழியர்கள் அல்ல. பகுதி நேர ஊழியர்கள். படித்து வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு ஊக்கத்திற்காக கொடுப்பது என்று சொன்னார்கள். பகுதி நேர ஊழியர்களாக அவர்கள் இருப்பதற்குக் காரணம், அவர்களுக்கு வேறு வேலை கிடைக்காததால். அந்த படித்துப் பட்டம் பெற்றவர்கள் இந்த 150 ரூபாய் சம்பளத்திற்கு அங்கு இருப்பதும், சித்தாள் மாதிரி செய்ய வேண்டிய எடுபிடி வேலையைச் செய்து 1 ரூபாய் சம்பளமும், சமையல் வேலையை செய்து 2 ரூபாய் சம்பளமும் வாங்கிக் கொண்டு மாலை 2 மணி, 2½ மணி வரை வேலை செய்து விட்டு பிறகு வெளியே வருகிறார்கள். பிறகு போய் இவர்கள் வேறு எந்த இடத்திலும் எதுவும் சம்பாதிக்க முடியாது. இந்த நிலைமையை அரசு கருத்தில் எடுத்துக் கொண்டு வேலையில்லாத்

திண்டாட்டத்தை பயன்படுத்திக் கொண்டு மிகக் குறைந்த காசுக்கு வேலை வாங்கக் கூடிய ஒரு கொடிய முதலாளி மாதிரி அரசு நடக்காமல் இவர்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய முறையில் இப் போது கொடுக்கிற சம்பளத்தை உயர்த்தி அவர்கள் குறைந்த பட்சம் ஒருவருடைய வாழ்க்கைக்கு அது நடத்தக்கூடிய அள வுக்குக் கொடுப்பார்களா ? இதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திப்பார்களா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேளை உணவு கூட கிடைக்காது இருக்கிற குழந்தைகளுக்கு ஒரு வேளை நல்ல உணவு தரவேண்டும் என்ற இந்த அரசின் நல்ல திட்டத்திற்குத் தியாக உள்ளத்தோடு உழைப்பவர்களை ஏற்று அவர்களின் நல்ல உள்ளத்திற்கு இந்த அரசு நல்ல உணர்வுடன் இந்தப் பணியை அளிக்கிறது.

### மோட்டுப்பாளையம் மற்றும் வாழியூர் கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

283—(*வினா எண் 19143)—திரு. இல. பலராமன் : மாண்பு மிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு வேலூர் வட்டம் மோட்டுப்பாளையம் கிராமத்திலும் போளூர் வட்டம் வாழியூர் கிராமத்திலும், கால்நடை மருத்துவமனை துவக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு மாவட்டம் வேலூர் வட்டம் மோட்டுப் பாளையம் கிராமத்திலும் போளூர் வட்டம் வாழியூர் கிராமத் திலும் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தும் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டு நிதி வசதியின்மையின் காரணமாகவும் ஏற்கனவே அருகில் இயங்கிவரும் மருத்துவ நிலையங்களைப் பொறுத்தும் அவ்விடங்களில் கால்நடை மருந்தகங்கள் திறக்கும் கருத்துரு அரசினால் ஒப்புக் கொள்ளப்படவில்லை.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் அதிகமான கால்நடைகள் இருக்கின்றன என்று மாவட்ட அளவில் இருக்கக்கூடிய மண்டல அலுவலர்கள் கூட இதை பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய கால்நடை விவசாயி களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக இங்கே மருத்துவ மனையை



அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டில் ஆகிலும் அதற்கான ஒதுக்கீடுகளைச் செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழியூர் என்பது போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. போளூர் ஊராட்சி ஒன்றி யத்தில் தற்போது போளூர், கேளூர் மற்றும் கடம்பூர் ஆகிய மூன்று இடங்களில் கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன. வாழியூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தப்பட்டால் அது போளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு நான்காவது கால்நடை மருந்தகம் ஆகும். மேலும் வாழியூரில் சுற்றியுள்ள கிராமங் களில் கால்நடைகள் அதிகமாக இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** இங்கு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரத்தின்படி 40,860 ஆகும். போளூர் ஊராட்சி ஒன்றியத்தின் 3 கால்நடை மருந்தகங்கள் தவிர, வாழியூருக்கு அருகில் கீழ் நகரில்—12 கிலோ மீட்டர் தூரத்தில் கால்நடை மருத்துவ நிலையம் இருக்கிறது. 14 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள காட்டுக்கான் நகர் என்ற இடத்தில் ஒரு கால்நடை மருத்துவ நிலையம் இருக்கிறது, நான்காவது ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்தப்படுமேயானால், அதன் எல்லாச் செலவுகளையும் ஊராட்சி ஒன்றியமே ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். இருக்கின்ற நிதி நிலையை அனுசரித்தும் அதைச் சுற்றியுள்ள மருந்தகங்களைப் பொறுத்தும் தான் இங்கே கால்நடை மருந்தகம் அமைக்க சந்தேசமில்லை என்று குறிப்பிடப்படுகிறது.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தங்கள் பதிலில் அதற்கான காரணங்களைக் கூறி மறுத்தாலும்கூட, அங்கே கூட்டுறவுச் சங்கங்கள் என்ற முறையில், ஆடு வளர்ப்புச் சங்கங் கள், பால் பண்ணைகள் ஆகியவை அதிகமாக இருக்கின்றன என்று நாங்களும் கிராம வாரியாகப் புள்ளிவிவரங்களை எடுத்துத் தந்தோம். ஆனால் அரசுத் தரப்பிற்குக் கிடைத்த தகவலின்படி குறைவாக இருக்கின்றன என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால், இனி வளரக்கூடிய காலங்களில் நான்காவது மருத்துவ மனை தேவை என்ற உணர்வின் காரணமாக அந்தப் பகுதி மக்கள் அதைக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மோட்டுப்பாளையம்

[1984 மார்ச் 15

கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையைத் துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ? அது குறித்து அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஐந்து கிளை நிலையங்கள் வேறு இருக்கின்றன. மோட்டுப்பாளையம் கணியம்பாடி ஒன்றியத்தில் உள்ளது. கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் தற்பொழுது கணியம்பாடியில் கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. மோட்டுப்பாளையத்தில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தப்படின் அது கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டாவதாக, இருக்கும். இதையெல்லாம் கணக்கிட்டு, அந்த மோட்டுப்பாளையத்தைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்றால் 13,246 தான், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களின்படி. எனவே, கணியம்பாடியில் நான்கு கால்நடை கிளை நிலையங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் அனுசரித்துத்தான் அங்கே ஏற்படுத்த வேண்டாமென்ற அவசியத்தை அரசு குறிப்பிடுகிறது.

வாச்சாம்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டும் திட்டம்.

284—(*வினா எண் 21448)—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூர் ஊராட்சி ஒன்றிய வாச்சாம்பட்டிக் கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்ட அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூர் ஊராட்சி ஒன்றிய வாச்சாம்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 83,000 மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட மேலூர் ஊராட்சி ஒன்றியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிக்கு இதுவரை அளிக்கப்பட்ட அரசு மானியம் ரூ. 4,107. இன்னும் அளிக்கப்பட வேண்டிய அரசு மானியம் ரூ. 23,559.

(ஆ) இக்கால்நடை மருந்தகத்திற்கு மூலக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. சிகிச்சை மற்றும் அறுவைக்கூடம் கட்டப்பட்டு, மின் இணைப்பு, தண்ணீர் வசதி முதலியவை பெறப்பட்ட பின்னரே, ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து கால்நடைப் பராமரிப்புத்துறைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.



1984 மார்ச் 15]

அன்னியூரில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

331—(* வினா எண் 19335)—திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டம் அன்னியூரில் கால்நடை மருத்துவமனை திறக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ): தென் ஆற்காடு மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியம் அன்னியூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் பிரேரணை பரிசீலிக்கப்பட்டது. நிதி வசதியின்மை காரணமாகவும் அருகில், அங்கு இயங்கிவரும் மருத்துவ நிலையங்களைப் பொறுத்தும் புதிதாக கால்நடை மருந்தகம் தற்போது திறக்க வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்.

நடுத்தரப் பள்ளிகளுக்கு உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமனம்.

1—வினா 281— திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டாம் வகுப்புவரை உள்ள நடுத்தரப்பள்ளிகளுக்கு உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை நடுத்தரப் பள்ளிகளுக்கு உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்?

(இ) 1980–81-ம் ஆண்டுக்கு நடுத்தரப்பள்ளிக்கு எவ்வளவு உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

(அ),(ஆ) மற்றும் (இ) ஆண்டுதோறும் அரசு நிதி நிலை இடம் தரும் அளவுக்கு நடுநிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாகக் உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 1961–62 முதல் இதுவரை அவ்வாறு சுமார் 1,300 பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 1980–81-ல் ஏற்படுத்திய 100 பதவிகளும் 1981–82-ல் ஏற்படுத்திய 143 பதவிகளும் உட்பட, எனினும் ஆண்டுதோறும் பல நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளி

களாக உயர்த்தப்படும்பொழுது அப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் உள்ள நடுநிலைப்பள்ளிகளும் இருக்குமாகையாலும், ஆகவே அவ்வாறு உயர்த்தப்படும் நடுநிலைப் பள்ளிகளிலுள்ள உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் உயர்நிலைப் பள்ளி மட்டத்திற்கு சென்றுவிடுமாகையாலும், தற்பொழுது (அதாவது 1980–81-ல் 1–10–1980 நாளைய நிலவரப்படி) சுமார் 640 நடுநிலைப்பள்ளிகளில் மட்டுமே உடற்பயிற்சி ஆசிரியர்கள் பணி செய்து வருகின்றனர்.

### தூத்துக்குடி ஸ்பிக் தொழிலாளர்கள் மீதுள்ள வழக்குகள்.

2—வினா 986—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்கெனவே தொழிலாளர்கள் மீது போராட்டங்கள் தொடரப்பட்டபோது வழக்குகள் அனைத்தையும் வாபஸ் பெற 1979-ல் அரசு உத்தரவிட்டும் பல வழக்குகள் வாபஸ் பெறப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) தூத்துக்குடி ஸ்பிக் தொழிலாளர்கள் 94 பேர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற 1979-ல் அரசு உத்தரவிட்டும் வழக்குகளை வாபஸ்பெறப்படாமலிருப்பதற்குக் காரணம் என்ன?

விடை—

(அ) தொழிலாளர்கள் மீது போடப்பட்டு, நீதிமன்ற நிலுவையிலுள்ள வழக்குகளில், கடுமையான வன்முறை, மிகுந்த பொருட் சேதம் போன்றவை தவிர மற்ற அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெறுமாறு 12–10–1979 நாளிட்ட பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு-சி) துறையின் அரசு ஆணை எண். 2158 மற்றும் 25–1–1980 நாளிட்ட பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு-பி) துறையின் அரசு ஆணை எண். 216 ஆகியவற்றின் ஆணைகளை அரசு வெளியிட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் துறையினரும் மேற்கண்ட உத்தரவுகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஸ்பிக் உரத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள்மீது கீழ்க்கண்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. (1) தூத்துக்குடி வடக்கு காவல் நிலைய கு. எ. 451/79 இ.த.ச. 147, 427 323 மற்றும் 506 (ii) பிரிவுகள் (2) தூத்துக்குடி தெற்கு காவல். நிலைய கு. எண். 161/79 மற்றும் 162/79 இ.த.ச. 323 மற்றும் 294 பிரிவுகள்.

(இ) முத்தையாபுரம் காவல் நிலைய கு. எண். 119/79 இ.த.ச. 147, 143, 286, 427, 323 மற்றும் 307 பிரிவுகள். மேற்கண்ட வழக்குகளில், கு. எண்கள் 161/79 மற்றும் 162/79 ஆகியவை திரும்பப் பெறப்பட்டுவிட்டன. கு. எண். 451/79-ல் மேல் நடவடிக்கை எடுக்கப்படாமல் கைவிடப்பட்டது.





மீதியுள்ள வழக்கான கு. எ. 119/79 பற்றிய விபரம் பின் வருமாறு :—

ஸ்பிக் உரத் தொழிற்சாலையில், சப்காண்ட்ராக்ட் எடுத்து வேலை மெற்கொண்டுள்ள திரு. குருசாமி நாய்க்கர் என்பவரிடம் வேலை பார்க்கும் ஒரு சில தொழிலாளர்களை அவர்களின் முறைகேடு காரணமாக வேலையிலிருந்து நிறுத்தியதை கண்டித்தும் அவர்களை மறுபடியும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுமாறும் சி.ஐ.டி.யு. தொழிலாளர்கள் போராடினர். ஆனால் அவர்களது கோரிக்கை ஏற்கப்படவில்லை. 5–5–1979 இரவு 9-30 மணி அளவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அரிவாள், தடி, சைக்கிள் செயின் போன்ற ஆயுதங்களுடன் திரு. குருசாமி நாய்க்கர், திரு. கபார் செரீப் மற்றும் உடன் வந்தவர்களைத் தாக்கியுள்ளனர். மேலும், நாட்டு வெடி குண்டுகளையும் எறிந்துள்ளனர். திரு. கபார் செரீப் அளித்துள்ள புகாரின் அடிப்படையில் முத்தையாபுரம் காவல் நிலையத்தில், கு. எ. 119-79-ல் இ.த.ச. 147, 148, 427, 323, 286 மற்றும் 307 ஆகிய பிரிவுகளின் கீழ் 46 பேர்கள் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது. மேற்கண்ட வழக்கின் தன்மை கடுமையாக இருப்பதால் வழக்கைத் திரும்பப் பெறவில்லை.

### 1976—1979 முடிய காவல் துறையினர்களுக்காக கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள்.

3—வினா 2267—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1976 ஆம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு முடிய காவல் துறையினர்களுக்கு எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன?

விடை—

காவல் துறைக்கென 1976–77 ஆம் ஆண்டு முதல் 1979–80 ஆம் ஆண்டு வரை கீழ்க்கண்டவாறு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | காவலர். | தலைமைக் காவலர். | சப்-இன்ஸ்பெக்டர் | இன்ஸ்பெக்டர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1976–77 .. | 275 | 75 | 54 | 34 | 438 |
| 1977–78 .. | 200 | 54 | 24 | 12 | 290 |
| 1978–79 .. | 10 | 1 | 1 | .. | 12 |
| 1979–80 .. | 30 | 12 | .. | .. | 42 |
| மொத்தம். | 515 | 142 | 79 | 46 | 782 |

மேற்கண்ட குடியிருப்புகள் தவிர, கோயம்புத்தூர் மாவட்டம் கோவைப் புதூரில், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள 126 குடியிருப்புகள் காவல் துறையினருக்காக விலைக்கு வாங்கப்பட்டு 15–12–1979 அன்று காவல் துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்பு பணிக்குழு.

4—வினா 2615—திரு. து. புருஷோத்தமன் : மற்றும் திரு. க. பாரமலை : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்காக அரசு ஒரு குழு அமைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குழுவில் யார், யார் உறுப்பினர்கள்?

விடை—

(அ) குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தை செவ்விய முறையில் செயல்படுத்த குடியுரிமை ப் பாதுகாப்புச் சட்டம், 1955-ன் கீழ் முதலமைச்சரை தலைவராகவும் மற்றும் ஆதி திராவிடர் நல அமைச்சரை துணைத் தலைவராகவும் கொண்டு ஆலோசனை வழங்க மாநில அளவிலான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) கீழே கண்ட நபர்கள் அக்குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் :—

அலுவல் சார்பு உறுப்பினர்கள்—

1. தலைமைச் செயலர்—உறுப்பினர்.
2. ஆணையர் மற்றும் அரசுச் செயலர் (உள்துறை)—உறுப்பினர்.
3. ஆணையர் மற்றும் அரசுச் செயலர் (சமூக நலத்துறை)—உறுப்பினர்.
4. மாநில காவல்துறைத் தலைமை அதிகாரி (அமல்)— உறுப்பினர்.
5. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்—உறுப்பினர்—செயலாளர்.



அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள்—

1. திரு. ஐ. தமிழரசன்.
2. திரு. க. மருதாச்சலம்.
3. திரு. அய்யம்பேட்டை அஜீஸ்.
4. திரு. பி. கலியமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்.
5. திரு. அ. சா. அமீது.
6. திரு. வி. ஆர். கே. பழனியப்பன்.
7. திரு. கே. வி. கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர்.
8. திரு. பொ. தனுஷ்கோடி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.
9. திரு. பி. ராமதாஸ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.
10. திரு. எல். இளையபெருமாள், சட்டமன்ற உறுப்பினர்.
11. திருமதி சி. கமலா, பி.எஸ். ஸி. பி. எல்., வழக்குரைஞர்.

புலித்தேவன் நினைவுச் சின்னம் நிறுவப்படும் இடம்.

5—வினா 3195—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புலித்தேவன் நினைவுச் சின்னம் எந்த இடத்தில் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

விடை—

(அ) புலித்தேவன் நினைவுச் சின்னம் திருநெல்வேலி மாவட்டத்தில் வாசுதேவநல்லூரில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூ. 10,000.

*Connemara Public Library.*

6. Q-4968—Thiru S. Rajaraman : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) Whether the Connemara Public Library has been classified as a National Library by the Central Government ; and

(b) If so the details thereon ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

காரணை கிராம அரிசன காலனிக்கு சாலை வசதி செய்து தரும் திட்டம்.

7—வினா 6908—திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் வட்டம், வெண்மணம்புதூர் காரணை கிராம அரிசன காலனிக்கு சாலை வசதி செய்து தரும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை:

(அ) மற்றும் (ஆ): செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம், வெண்மணம்புதூர் ஆதிதிராவிடர் குடியிருப்பில் ஏற்கனவே சாலை வசதி உள்ளதால் புதியதாக சாலை வசதி அளிக்கத் தேவையில்லை. ஏற்கனவே இருக்கும் சாலையை மேம்படுத்தினால் போதுமானது. மேற்படி குடியிருப்பில் சாலை வசதியை மேம்படுத்திக் கொடுக்கும் பணி 1981–82ல் ஆதிதிராவிடர் நலத்துறை '' திட்டப்பணிகளில் '' சேர்க்கப்பட்டு ரூ. 5,000 செலவில் இப்பணி 18–11–1981-ல் முடிக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் விவசாய பம்பு செட்டுகள் இணைப்புக்கு மின்கட்டணம செலுத்தாதவர்கள் எண்ணிக்கை.

8—வினா 7022—திரு. இ. கணேசன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் விவசாய பம்புசெட்டுகளில் இணைப்புக்கு மின் கட்டணம் கட்டாதவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எவ்வளவு ரூபாய் தொகுதி வாரியாக?

விடை:

(அ) 521 பேர்.



(ஆ) தொகுதி வாரியான நிலுவை பின்வருமாறு:—

| தொகுதி. | விவசாயிகள் எண்ணிக்கை. | நிலுவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| சேலம் .. .. .. | 60 | 2.83 |
| சேலம் .. .. .. | 101 | 4.74 |
| ஓமலூர் .. .. .. | 79 | 3.77 |
| சங்ககிரி .. .. .. | 9 | 0.47 |
| திருச்செங்கோடு .. .. | 26 | 1.18 |
| பனமரத்துப்பட்டி .. .. | 42 | 1.88 |
| இடப்பாடி .. .. .. | 15 | 0.71 |
| வீரபாண்டி .. .. .. | 18 | 0.94 |
| தலைவாசல் .. .. .. | 171 | 0.32 |
| மொத்தம் .. | 521 | 16.84 |

சுற்றுலாத்துறை மூலம் 1977—ஆம் ஆண்டு முதல் 1980 வரை கிடைத்த வருமானம்.

9 வினா 8413—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை மூலம் 1977 முதல் 1980 வரை அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) சுற்றுலா மூலம் வருமானத்தைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை:

(அ) தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை மூலம் 1977 முதல் 1980 வரை அரசுக்குக் கிடைத்த மொத்த வருமானம் வருமாறு:

| | ரூ. |
|---|---|
| 1977–78 .. .. .. .. | 1,01,701.10 |
| 1978–79 .. .. .. .. | 1,23,644.26 |
| 1979–80 .. .. .. .. | 1,22,452.27 |
| 1980–81 .. .. .. .. | 1,14,502.09 |
| மொத்தம் .. | 4,62,299.72 |

[1984 மார்ச் 15

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருமானம் வருமாறு :

| | மொத்த வருமானம். | நிகர வருமானம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் | இலட்சத்தில்) |
| 1977–78 .. .. .. | 11.41 | 1.60 |
| 1978–79 .. .. .. | 20.81 | 6.51 |
| 1979–80 .. .. .. | 18.79 | 2.59 |
| 1980–81 .. .. .. | 36.63 | 5.73 |
| மொத்தம் .. | 87.64 | 16.43 |

(ஆ) ஆம். சுற்றுலா மூலம் வருமானத்தைப் பெருக்க பல திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

சுற்றுலாத்துறை தமிழகத்தில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களைத் தெரிந்தெடுத்து அவைகளை மேம்படுத்த திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டு வருகிறது. இதன் பலனாக இந்த சுற்றுலா மையங்களில் அதிக அளவில் வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளினால் தொடர்புடைய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்ற அரசுத் துறைகளுக்கு வருமானம் பெருகி வந்துள்ளது. மேலும் பெருகவும் வாய்ப்புள்ளது.

### 1979 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கொலை களவுகள்.

10—வினா 8461—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1979 மற்றும் 1980-ஆம் ஆண்டுகளில் மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கொலை, களவு நிகழ்ச்சிகளில் துப்பு துலக்காமல் இருக்கும் வழக்குகள் எத்தனை?



1984 மார்ச் 15]

விடை :

| வருடம் மாவட்டம். | கொலை. | | கொள்ளை. | |
|---|---|---|---|---|
| | பதிவானவை. | துப்புத் துலக்காதவை. | பதிவானவை. | துப்புத் துலக்காதவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1979— | | | | |
| மதுரை (தெற்கு) | 51 | 1 | 1,409 | 530 |
| மதுரை (வடக்கு) | 52 | 4 | 1,260 | 185 |
| 1980— | | | | |
| மதுரை (தெற்கு) | 57 | .. | 1,208 | 328 |
| மதுரை (வடக்கு) | 69 | 1 | 1,470 | 32 |

### அய்யலூர் நகரில் பேருந்து நிலையம் கட்டும் பணி.

11 வினா 8481—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி அய்யலூர் நகரில் பேருந்து நிலையம் கட்டும் பணி பாதியில் நிற்கக் காரணம் என்ன?

(ஆ) அது எப்போது முடிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : அய்யலூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் ரூ. 10,000 மதிப்பீட்டில் துவங்கப்பட்டது. செயல் படுத்தும்போது நிர்வாக காரணங்களினால் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட நேரிட்டது. தவிர, ஒப்பந்தக்காரர் உடல் நலக்குறைவு காரணமாகவும் பணி சில காலம் தடைப் பட்டது.

இப்பேருந்து நிலையம் கட்டும் பணி டிசம்பர் திங்கள் 1981 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு விட்டது எனப் பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

## வில்பட்டி—பள்ளங்கி பாதையில் பாலம் அமைக்கும் பணி.

12—வினா 8581—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் தாலுக்கா வில்பட்டி பிரிவிலிருந்து பள்ளங்கிவரை அமைக்கும் பாதை போடப்படும் காண்டிராக்டர் இறந்து விட்டதால் பாலம் அமைக்கும் வேலை முடியாமல் நின்று விட்டதை அரசு துரிதப்படுத்துமா?

விடை—

வினாவில் சொல்லப்பட்ட சாலை அமைக்கும் பணி தேவையான இடங்களில் வடிகால் கட்டும் பணி உட்பட 26-2-1981-ல் முடிக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

## புக்கப்பட்டி சாலைக்கு தார்போடும் பணி.

13—வினா 8583—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், புக்கம்பட்டி சாலையை நெடுஞ்சாலைத் துறை எப்போது எடுத்துக் கொண்டது ?

(ஆ) அந்தச் சாலைக்கு தார்போடும் பணி எப்போது துவக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஓமலூர்-மேச்சேரி சாலையிலிருந்து மணியக்காரனூர் வரை வழி புக்கம்பட்டி செல்லும் கி.மீ. 3.2 தூரத்தை இதுவரை அரசு பராமரிப்பிற்கு (maintenance) மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி சாலையின் மேம்பாட்டுப் பணிகள் 'கிராம சாலைகள்' 4-ம் கட்டம் திட்டத்தில் சேர்க்கப்பட்டு 29-12-1981 இல் ஒப்ப அறிவிப்புச் செய்யப்பட்டு 27-1-1982-லிருந்து பணி நடைபெற்று வருகிறது. மேம்பாட்டுப் பணிகள் யாவும் முடிவுற்று இத்துறை வசம் பராமரிப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட பின்னர் தார்ச் சாலையாக்கும் பணி மேற்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.



## 1979—1981 வரை உதவித் தொகை வழங்கப்பட்ட கலப்பு மணம் செய்து கொண்டோர் எண்ணிக்கை.

14 வினா 8675—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1-1-1979 முதல் 1-1-1981 வரை இரண்டு ஆண்டுகளில் கலப்பு மணம் செய்தவர்களுக்கு எத்தனை பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது ?

விடை—

தமிழகத்தில் 1-1-1979 முதல் 31-3-1982 வரை கலப்பு மணத் தம்பதியருக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை பற்றிய விவரம் பின்வருமாறு :—

பழைய திட்டத்தின்படி உதவித்தொகை பெற்ற தம்பதியர் விவரம்.

| காலம். | பண உதவி ரூ. 200 பெற்றவர்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1-1-1979 முதல் 31-3-1979 வரை ... ... | 21 |
| 1-4-1979 முதல் 31-3-1980 வரை ... ... | 114 |
| மொத்தம் ... | 135 |

புதிய திட்டத்தின் படி உதவித்தொகை பெற்ற தம்பதியர் விவரம்.

| காலம். | பண உதவி ரூ. 300 பெற்றவர்கள். | வங்கியில் ரூ. 4,000 5 ஆண்டுக்கு காலக் வைப்புத் தொகை பெற்றவர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1-4-1979 முதல் 31-3-1980 வரை | 23 | 23 |
| 1-4-1980 முதல் 31-3-1981 வரை. | 123 | 123 |
| 1-4-1981 முதல் 31-3-1982 வரை | 108 | 108 |
| மொத்தம் | 254 | 254 |

[1984 மார்ச் 15

ஆதிதிராவிடர்களுக்கென ஆளாங்கொம்பில் கட்டப்பட்டவீடுகள்.

15—வினா 8849—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சடையம்பாளையம் கிராமம், ஆலாங்கொம்பில் ஆதி திராவிடர் களுக்கென்று கட்டப்பட்ட வீடுகள் இன்னும் திறக்கப்படாமல் உள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆதி திராவிடர்களுக்கு வழங் கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம். சடையம்பாளையம், ஆலாங்கொம்பில் ஆதி திராவிடர்களுக் கென்று கட்டப்பட்ட வீடுகள் இன்னும் பயன் பெறுவோருக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை. மாவட்ட ஆட்சியரிடமிருந்து பயன் பெறுவோரின் பட்டியல் வந்தவுடன் மேற்படி வீடுகள் பயன்பெறுவோருக்கு வழங்கப்படும். இது குறித்து மாவட்ட ஆட்சியர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

நரவாரிக்குப்பம் பகுதியில் வடிகால் அமைக்கும் திட்டம்.

16—வினா 9110—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புழல் ஒன்றியம் நரவாரிக் குப்பம் பஞ்சாயத்துப் பகுதி யில் வடிகால் அமைக்கும் திட்டம் குறித்து செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன ?

(இ) திட்டம் எப்பொழுது முடிவடையும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : செங்குன்றம் ஏரி அசுத்தப்படு வதைத் தடுக்க பாதாள சாக்கடைக் கட்டுவதை விட, அந்த ஏரியின் எல்லையையொட்டி தடுப்பு சாக்கடை கட்டி, தற்போது உள்ள வேலியை பலப்படுத்தி, மேலும் அந்த வேலியை திரு.வி.க. தெரு வரையில் நீட்டும் பணிகள் செய்வது போதுமானது என்று அரசு முடிவு செய்தது. அவ்வாறு அப்பணிகளைச் செய்வதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்து, ரூ. 12.44 இலட்சம் மான்யமும் சமீபத்தில் வழங்கியுள்ளது.



1984 மார்ச் 15]

நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்ட தோப்புப் பகுதிகள்.

17—வினா 9847—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் தோப்பு என விதி விலக்கு அளிக்கப்படும் பகுதியை தோப்பாகவோ நிலமாகவோ கிரையமாக விற்க அனுமதியுண்டா ?

(ஆ) இல்லையெனில், அவ்வாறு விற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) மதுரை மாவட்டத்தில் இது பற்றிய புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

விடை—

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் தோப்பு என விதி விலக்கு அளிக்கப்படும் பகுதியை தோப்பாகவே விற்க தடை எதுவும் சட்டத்தில் இல்லை. விளை நிலமாக மாற்றப்பட்டு விற்க அனுமதி இல்லை.

(ஆ) மற்றும் (இ) : மதுரை மாவட்டத்தில் சாப்டூர் முன்னாள் ஜமீன்தாருக்குச் சொந்தமான தோப்பின் ஒரு பகுதி விளை நிலமாக மாற்றப்பட்டு, பின்னர் அது விற்கப்பட்டதாக புகார் வந்துள்ளது. அதன் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர்த்து மதுரை மாவட்டத்தில் வேறெந்தப் பகுதியிலோ அல்லது மற்ற மாவட்டங்களிலோ தோப்பானது நிலமாக மாற்றப்பட்டு விற்கப்பட்டுள்ளதாக அரசுக்கு செய்தி எதுவும் வரவில்லை.

பெருந்துறை கருமாண்டிசெல்லிபாளையம பேரூராட்சிகளுக்கு குடிநீர் திட்டத்திற்கு அரசு வழங்கிய கடன்.

18—வினா 10380—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் பேரு ராட்சிகள் குடிநீர்த் திட்டத்திற்கு அரசிடம் வாங்கிய கடன் எவ்வளவு ?

(ஆ) இதுவரை வட்டியாக மட்டும் எத்தனை ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது ?

[1984 மார்ச் 15

விடை—

(அ) பெருந்துறை மற்றும் கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிகள் குடிநீர் திட்டத்திற்காக அரசிடமும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமும் வாங்கிய கடன் விவரம் வருமாறு :—

பெருந்துறை—

| | | ரூ. |
|---|---|---|
| அரசுக் கடன் | .. .. .. .. | 9.47.600 |
| ஆயுள் காப்பீட்டுக் கழக கடன் | .. .. | 3,79,000 |
| மொத்தம் | .. | 13,26,600 |

கருமாண்டி செல்லிபாளையம்—

| | | |
|---|---|---|
| அரசு கடன் | .. .. .. .. | 5,53,700 |
| ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் | .. | 10,75,000 |
| மொத்தம் | .. | 16,28,700 |

(ஆ) பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிகள் இதுவரை குடிநீர்த் திட்ட கடனுக்காக வட்டியாக செலுத்திய தொகை வருமாறு:—

பெருந்துறை—

| | | ரூ. |
|---|---|---|
| அரசு கடனுக்காக | .. .. .. | 1,96,208.44 |
| ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடனுக்காக | .. | 2,19,403.17 |
| மொத்தம் | .. | 4,15,611.61 |

கருமாண்டி செல்லிபாளையம்—

| | | |
|---|---|---|
| அரசு கடனுக்காக | .. .. .. | 1,97,193.70 |
| ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடனுக்காக | .. | 5,00,509.32 |
| மொத்தம் | .. | 6,97,903.02 |



1984 மார்ச் 15]

### மொடக்குறிச்சித் தொகுதியில் வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்ட ஆதிதிராவிடர் எண்ணிக்கை.

19—வினா 10642—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், மொடக் குறிச்சி தொகுதியில் எத்தனை ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா இந்த ஆண்டு வழங்கப்பட்டது ?

(ஆ) வீட்டு மனைப்பட்டா இல்லாதவர்கள் இன்னும் எத்தனை பேர் உள்ளனர் ?

விடை—

(அ) 1980–81 இல் மொடக்குறிச்சி தொகுதியில் ஆர்ஜிதம் செய்து வீட்டு மனைப்பட்டா வழங்கப் பெற்றவர் எண்ணிக்கை 119.

(ஆ) இன்னும் வீட்டு மனைப்பட்டா இல்லாதவர்கள் எண்ணிக்கை 3,000 (சுமார்).

### உடல் ஊனமுற்றோருக்கு தொழில் துவங்க உரிமம் வழங்குவதில் முன்னுரிமை அளித்தல்.

20—வினா 10698—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றோருக்கு தொழில் துவங்க உரிமம் வழங்குவதில் முன்னுரிமை மற்றும் மானியம் கொடுத்துதவ அரசுக்கு உத்தேசமுள்ளதா ?

விடை—

உடல் ஊனமுற்றோர் அமைக்கும் சிறு தொழில் பிரிவுகளுக்கு அரசு மானியம் வழங்குகிறது. வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்று சுயவேலை வாய்ப்பிற்காக சிறு தொழில் பிரிவுகள் அமைத்து ஊனமுற்றோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு மானியம் அளித்து வருகிறது. அரசு வழங்கும் மானியம் வங்கிகள் அளிக்கும் கடன் தொகைக்குச் சமமானது, ஒரு

தனிப்பட்ட நபருக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் அரசு மானியம் வழங்குகிறது. இத் திட்டத்திற்காக அரசு 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஊனமுற்றோர்கள் இத் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று மாநிலத்தின் பல்வேறு இடங்களில் சிறு கடைகள் அமைக்க ஊனமுற்றோருக்கு உதவி அளிக்கப்படுகிறது. இக்கடைகள் அமைப்பதற்கு ஆகும் செலவு ரூ. 1,000-க்கு மேற்பட்டால் அவர்களுக்கு வங்கியிலிருந்து கடனுதவியும் அரசின் உதவித் தொகையாக ரூ. 500-ம் அளிக்கப்படுகிறது. கடைகள் அமைப்பதற்கு ஆகும் செலவு ரூ. 1,000-க்குக் குறைவாக இருந்தால் அரசின் உதவித் தொகை ரூ. 250 ஆக வழங்கப்படுகிறது. ஊனமுற்றோர் மாநில வாரியம் சுயவேலை வாய்ப்பிற்காக ஊனமுற்றோருக்கு மானியம் வழங்கி வருகிறது. ' சிட்கோ ' நிறுவனம் 15 சதவிகித மூலதன முதலீட்டு மானிய திட்டங்களை (மத்திய அரசு மற்றும் மாநில அரசு சம்பந்தப்பட்ட திட்டங்களை) அமுல்படுத்தி வருகின்றது. இவை தவிர, சிறு தொழில்களுக்கான மின்சக்தி மானியத் திட்டத்தினையும் அமுல் படுத்தி வருகின்றது.

### 1980—1981 ஆம் ஆண்டு தொழில் பயிற்சி பெற்ற உடல் ஊனமுற்றோர் எண்ணிக்கை.

21—வினா 11181—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980–81 ஆம் ஆண்டு தொழில் பயிற்சி பெற்ற உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) அவர்களுக்கென்று வேலை வாய்ப்புக்கு என்ன வழி வகை செய்து கொடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) 376 உடல் ஊனமுற்றவர்கள் 1980–81 ஆம் ஆண்டு தொழில் பயிற்சி பெற்றனர் .

(ஆ) உடல் ஊனமுற்றோருக்கு தனிக் கவனம் செலுத்தி துரிதமாக வேலையளிக்கும் பொருட்டு, சென்னை, திருச்சி, மதுரை, சேலம், கோவை ஆகிய இடங்களில் சிறப்பு வேலை வாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்களில் பார்வையற்றோர், காது கேளாதோர், உடல் ஊனமுற்றோர் ஆகிய எல்லா வகை ஊனமுற்றோரும் வேலை வாய்ப்புக்காக



பதிவு செய்யப்படுகின்றனர். சிறப்பு வேலை வாய்ப்பகங்கள் இயங்காத மாவட்டங்களிலுள்ள பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோர்களுக்கு சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோருக்கு தனி வேலை வாய்ப்பகமும், உடல் மட்டும் ஊனமுற்றோர்களுக்கு (orthopaedic) அந்தந்த மாவட்ட மற்றும் துணை வேலை வாய்ப்பகத்தாலும் வேலை வாய்ப்பு உதவி வழங்கப்பட்டு வருகிறது. அரசு ஆணைப்படி வேலை வாய்ப்புக்கும் பரிந்துரை செய்வதில், ஊனமுற்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மேலும் இவர்கள் முன்னுரிமை கேட்காது தெரிவிக்கப்படும் வேலை வாய்ப்புகளுக்கும் கூட பரிந்துரை செய்யப்படுகிறார்கள். இச்சலுகைகள் அனைத்தும் தொழில் பயிற்சி பெற்ற உடல் ஊனமுற்றோருக்கும் பொருந்தும். ஊனமுற்றோருக்கு உதவியாக அவர்கள் அரசுப் பணியில் சேர உச்ச வயது வரம்பில் 10 ஆண்டுகள் தளர்த்தப்பட்டுள்ளது. தமிழக அரசு உடல் ஊனமுற்றோர்களுக்கு பிற்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்குரிய ஒதுக்கீடு விதிகள் கடைபிடிக்கப்படும். அரசுப் பணி, அரசு உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிர்வாகத்திற்குட்பட்ட கல்வி நிலையங்களில் 3 சதவிகித இட ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

இது தவிர சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ' தொழில் அமர்த்துதல் ' பணியினைச் சிறப்பு அலுவலர் கவனித்து வருகிறார். இவர் மூலமாக வேலை வாய்ப்பு வசதி உடல் ஊனமுற்றோர்களுக்குத் துரிதமாக நடந்து வருகிறது.

### போக்குவரத்துக் கழகங்களில் தாழ்த்தப்பட்டாருக்கு அளிக்கப்படும் வேலை விகிதம்.

22—வினா 11775—திரு. என். பழனிவேல்: : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகித வேலை கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை கொடுத்துள்ள சதவிகிதமும் ஒதுக்கப்பட்ட அளவு (18 சதவிகிதம்) கொடுக்க, எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் கழகத்தின் பெயரும். | தாழ்த்தப்பட்டவர்களின் சதவீதம். | வேலை 18 சதவிகிதம் கொடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம். | 17.63 | இக்கழகம் தாழ்த்தப்பட்டவர்களைக் குறியிடப்பட்ட அளவிற்குப் பணிக்கு எடுத்துக் கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது. |
| 2 கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம். | 8.55 | நியமனத்திற்குத் தகுதி வாய்ந்த தாழ்த்தப்பட்டவர்களின் பெயர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கேட்ட பிறகும் கிடைக்கப்பெறவில்லை. எனினும் தகுதிவாய்ந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 3 பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம். | 12.33 | நியமனங்கள் யாவும் இட ஒதுக்கீடு அடிப்படையில் நடைபெறுகிறது. மேற்படி சதவீதத்தை 18 சதவிகிதமாக உயர்த்தும் பொருட்டு தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும் புதிதாக வேலைக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். |





| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4 அண்ணா போக்குவரத்துக் கழகம். | 18.87 | .... |
| 5 பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்). | 10.8 | பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில், ஏற்படும் காலியான பணிகளுக்கு அரசு நிர்ணயித்த சதவிகிதப்படி வேலை வாய்ப்பு, அலுவலகத்திற்கு ஆட்களை அனுப்புமாறு கோரப்படுகிறது. அவர்கள் பரிந்துரைக்கும் நபர்களில் ஒவ்வொரு பணிக்கும் வகுக்கப்பட்ட தகுதி அடிப்படையில் நபர்கள் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். இதனால், தாழ்த்தப்பட்டவர்களின் விகிதாச்சாரப்படி பணிக்கு நியமிக்க கிடைக்கப் பெறவில்லை. |
| 6 தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம். | 16.00 | மீதமுள்ள இரண்டு சதவிகிதத்தையும் பூர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 7 திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம். | 15.8 | 1975 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் நாளில் தமிழக அரசு போக்குவரத்துத் துறை விரைவுப்பேருந்தினை, பல்லவன் போக்கு வரத்துக் கழகத்துடன் இணைத்தது. அதுசமயம் உபரியாக இருந்த அனைத்துப் பிரிவு ஊழியர்களும் மற்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு மாற்றப்பட்டனர். அதன் பிறகு அவ்வப்பொழுது |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | ஏற்படும் காலியிடத்தினை பிற போக்குவரத்துக் கழகங்களுக்கு உபரியாக அனுப்பப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் இக்கழகத்திற்கு வேலைக்கு எடுக்க வேண்டியிருப்பதால், 18 சதவிகிதம் தாழ்த்தப் பட்டவர்களுக்கு வேலை கொடுக்க இயலவில்லை. இருப்பினும் இக்கழகம் தாழ்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கையை 18 சதவிகிதமாக உயர்த்த தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. |
| 8 பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர்). | 16.24 | காலியிடங்களை நிரப்புவதற்கு நியமனங்களைச் செய்யும் பொழுது தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கே முதலிடம் தரப்பட்டு 18 சதவிகிதம் குறியீட்டை அடைய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. |
| 9 சேரன் போக்குவரத்துக் கழகம். | 14.42 | அதிகபட்சமான தாழ்த்தப்பட்ட நபர்களை நியமிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

### பாரதியார் கட்டுரைப்பற்றி ஆராய்ச்சி நடத்த எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் திட்டம்.

23—வினா 12308— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரதியார் கட்டுரை பற்றி ஆராய்ச்சி நடத்தவும், கவிதை எழுதும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### புதிதாக நியமிக்கப்படும் கிராம அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்.

24—வினா 12351—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதிதாக நியமிக்கப்பட இருக்கும் கிராம அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை இடங்களில் பயிற்சி அளிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 100 பள்ளிகளில் மூன்று அணிகளாக பயிற்சி அளிக்கப்படும்.

### அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் தேரிலிருந்து திருடுபோன மரச் சிற்பங்கள்.

25—வினா 12518—திரு பெ. சு. திருவேங்கடம் : மற்றும் திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு திருவண்ணாமலையில் உள்ள அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான மரத்தேரில் இருந்து 1981 ஆம் ஆண்டில் சிறப்பு வாய்ந்த மரத்தினால் ஆன சிற்பங்கள் களவாடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் உள்ள அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான மரத்தேரில் இருந்து 1981 ஆம் ஆண்டில் சிறப்பு வாய்ந்த மரத்தினால் ஆன 200 சிற்பங்கள் சுவாமி மற்றும் அம்மன் தேரிலிருந்து களவாடப்பட்டு அவைகளில் 118 சிற்பங்கள் மீட்கப்பட்டுள்ளன.

(இ) மேற்கண்ட களவு சம்பந்தமாக திருவண்ணாமலை காவல்துறை ஆய்வாளருக்கு புகார் செய்யப்பட்டு காவல்துறையினர் குற்ற எண். 414/81 (379 ஐ.பி.சி.) ஆக வழக்குப் பதிவு செய்து, சவுரி மற்றும் கஜேந்திரன் என்ற இரு குற்றவாளிகள் மீது குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள். களவுபோன இதர சிற்பங்களைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திருப்பாலைக்குடி உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பெறும் ஊதியம்.**

26—வினா 12884—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர். எஸ். மங்களம் யூனியன் திருப்பாலைக்குடி உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் பாதி சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்கிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இவ்வினாவில் குறிப்பிட்டதுபோல் எவரும் பாதிச் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்யவில்லை. ஆனால், அவர்கள் இன்னும் அரசுபணிக்குள் உட்படுத்தப்படாததால் அவர்களுக்கு, அவர்கள் தனியார் பள்ளியில் கடைசியாகப் பெற்ற சம்பளம் கொடுக்கப்படுகிறது.

**கே. கே. புதூர் திருக்கழுக்குன்றம் சாலையை சீர் செய்யும் செயற்குறிப்பு.**

27—வினா 13069—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் கே. கே. புதூர்—திருக்கழுக்குன்றம் சாலையை சீர்செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?



விடை :—

(அ) மற்றும் (ஆ) புதூர் சாலையிலிருந்து குறுக்கே நெல்வாய் திருக்கழுக்குன்றம் சாலை அமையும் சாலையின் நீளம் 3 0 கி.மீ. இச்சாலையின் இருபுறமும் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு (2/0—3/0) பட்டா நிலமாக உள்ளது. மற்றும் இச்சாலையின் அனைத்து பாகங்களும் மண்கொட்டப்படாதவை. இச்சாலையை சீர் செய்ய, பட்டா நிலச் சொந்தக்காரர்கள் மண் எடுத்து சாலையைச் சீர் செய்ய அனுமதி தர மறுக்கின்றனர். மேலும் மேற்படி சாலையை சீர் செய்ய புக்கத்துரை ஸ்பிரிங் கால்வாயில் ஒரு பெரிய தரைப்பாலமும், மூன்று பெரிய வாராவதிகளும் அமைக்கப்பட வேண்டும் எனவும், இதற்கு சுமார் 5 லட்சத்திற்கு மேலாகும் எனவும் தெரிகிறது. இச்சாலையை சீர் செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

**1980—81 ல் வீடுகட்ட தக்காவிக் கடன் வழங்கப்பெற்றோர் எண்ணிக்கை.**

28—வினா 13113—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளைக் கட்ட தக்காவிக் கடன் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், 1980-81-ல் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 686 பேர்களுக்கு வழங்கப்பட்டது.

**கோவை செங்கோட்டையா மருத்துவமனையை காட்டூர் பகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு.**

29—வினா 13181—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம் ஜெயில் ரோட்டிலுள்ள செங்கோட்டையா மருத்துவ மனையை காட்டூர் பகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கோவை பீளமேடு மேற்குப் பகுதியில் பாதை, குடிநீர் வசதிகள் செய்து கொடுத்தல்.

30—வினா 13188—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம் பீளமேடு மேற்குப் பகுதி ரங்கநாத புரத்தில் பாதை வசதி, சாக்கடை வசதி, குடிநீர் வசதி, வீதி விளக்கு வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது?

விடை—

(அ) பீளமேடு மேற்குப் பகுதியில் ரங்கநாதபுரம் என்ற பகுதியில்லை. இங்குள்ள இளங்கோ நகர் என்ற பகுதி சில ஆண்டுகளுக்கு முன்னர் ரங்கநாதபுரம் என்று அழைக்கப்பட்டதாக விசாரணையில் தெரிய வருகிறது. ஆனால் இந்தப் பகுதியின் சாலைகள் இதுவரையில் கோவை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திருவண்ணாமலை மருத்துவ மனையில் குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்கு வசதி ஏற்படுத்துதல்.

31—வினா 13219—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு திருவண்ணாமலை மருத்துவ மனையில் குடும்பநல அறுவை செய்து கொள்ள வரும் பெண்களுக்கு போதிய வசதி இல்லாமல் காலத்தில் செய்ய முடியாமல் போவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப்போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) வடாற்காடு திருவண்ணாமலை மருத்துவ மனையில் குடும்பநல அறுவை செய்து கொள்ளவரும் தாய்மார்களுக்கு போதிய வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தேவையான சிகிச்சை, காலத்தில் செய்ய முடியாமல் அறுவைச் சிகிச்சைக்கு வரும் தாய்மார்கள் திருப்பி அனுப்பப்பட்டதாக புகார்கள் எதுவும் வரவில்லை.





வல்லம் பேரூராட்சி அரசு மருத்துவமனையை விரிவு படுத்துதல்.

32—வினா 13296—திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் வல்லம் பேரூராட்சியிலுள்ள அரசு மருத்துவ மனையை மேலும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தஞ்சை மாவட்டம் வல்லம் பேரூராட்சியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அதை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் இல்லை.

கொல்லிமலையிலுள்ள மேல்நிலைப்பள்ளி தங்கும் விடுதிகளில் அதிக மாணவர்கள் சேர்க்கும் செயற்குறிப்பு.

33—வினா 13551—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலை மலைவாழ் மக்கள் உறைவிட மேல்நிலைப்பள்ளி தங்கும் விடுதியில் மாணவர்கள் அதிகம் சேர்க்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) கொல்லிமலையிலுள்ள வாழவந்தி நாடு பழங்குடியினர் உறைவிட மேல் நிலைப்பள்ளியில் விடுதி மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பது பற்றி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து செயற்குறிப்புகள் அரசுக்கு இதுகாறும் வரவில்லை. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து இது குறித்து செயற்குறிப்புகள் வந்தவுடன், அரசு பரிசீலனை செய்து தக்க ஆணைகள் பிறப்பிக்கும்.

**மணிமுத்தாறு கால்வாயில் தூர் எடுக்கும் திட்டம்.**

34—வினா 13571—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு கால்வாயில் இரண்டு முதல் நான்கு ரீச்களில் உள்ள கால்வாயில் தூர் எடுக்கும் திட்டம் அரசின் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்

விடை—

(அ) மற்றும் (ஆ) மணிமுத்தாறு கால்வாயின் அனைத்து ரீச்களிலும் (Reach) பராமரிப்புப் பணியின்கீழ், ஒவ்வொரு ஆண்டிலும் தூர் எடுக்கப்பட்டு வருகிறது.

**வடாற்காடு தென்னாற்காடு மாவட்ட பஞ்சாயத்து யூனியன்களில் ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீதம் உத்தியோகம் அளித்தல்.**

35—வினா 13650—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், ஆகிய பஞ்சாயத்து யூனியன்களில் 18 சதவிகிதம் உத்தியோகம் ஆதி திராவிடர் வகுப்பு மக்களுக்கு கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வடஆற்காடு மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் ஆகியவற்றில் உள்ள பஞ்சாயத்து யூனியன்களில் 18 சத விகிதம் உத்தியோகம் ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.





**வடக்கூர் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற ஊழல்.**

36—வினா 13667—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வடக்கூர் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தில் ஊழல் நடந்திருப்பதாக புகார்கள் கூறப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வடக்கூர் சங்க நிர்வாகத்தின் மீது பல புகார்களைக் கொண்ட 20—8—1981 மற்றும் 17—10—1981 நாளிடப்பட்ட மனுக்கள் பொது மக்கள் மற்றும் சங்க உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டன. அப்புகார்களை விசாரித்ததில், பல புகார்களுக்கு ஆதாரமில்லை என்று தெரியவந்தபோதிலும், சில்லரை பால் விற்பனை தொகையைச் சங்க கணக்கில் வரவு வைக்கும் போது விலை வித்தியாசமாகக் கணக்கிடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது எனவே, கூட்டுறவு சட்டப்பிரிவு 65-ன் கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வரகூர் தொகுதியிலுள்ள சின்னாற்றில் பாலம் கட்டும் திட்டம்.**

37—வினா 13670—திரு. என். பெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதியைச் சேர்ந்த வேப்பூர்-திருமாந்துறை சாலையில் இடையில் உள்ள சின்னாற்றில் பாலம் கட்ட அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

**தளவாய்ப்புரத்தில் விசைத்தறிக்கூடம் ஆரம்பிக்கும் திட்டம்.**

38—வினா 13723—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டம், இராஜபாளையம் தொகுதி, தளவாய்புரத்தில் விசைத்தறி கூடம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

[1984 மார்ச் 15

விடை—

முகவை மாவட்டம் தளவாய்ப்புரத்தில், சுமார் 100 விசைத்தறிகளைக் கொண்டு ஒரு கூட்டுறவு விசைத்தறிக்கூடம் ரூபாய் 40 இலட்சம் செலவில் அமைக்க எல்லாப் பூர்வாங்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

## திடியூர் அருகே பாலம் கட்டும் திட்டம்

39—வினா 13908—திரு. மு. ஜான் வின்செண்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை யூனியன் பகுதியில் உள்ள திடியூர் அருகே பாலம் கட்டும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## பெரியகுளத்தில் மாவட்ட குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

40—வினா 13930—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளத்தில் மாவட்ட குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

## இராமங்களில் அமைக்கப்பட்டிருக்கும் விசையிறைப்பான்களை பழுது பார்க்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடு

41—வினா 13964—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராமங்களில் அமைக்கப்பட்டிருக்கும் போரிங் பைப்புகள் அடிக்கடி பழுதாகிவிடுவதை அரசு அறியுமா ?



1984 மார்ச் 15]

(ஆ) ஆம் எனில், இவ்வாறு ஏற்படாமல் தடுக்க விசேஷ மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் குடிநீர் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 500 மின் இறைப்பான்களுக்கும் ஒரு உதவிப் பொறியாளர் மற்றும் மூன்று மின் இணைப்பாளர்களைக் கொண்டு ஒரு நடமாடும் பராமரிப்புக் குழுவும் நியமிக்கப்பட்டு, அவைகளில் ஏற்படும் பழுதுகளை நிவர்த்தி செய்ய விசேஷ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இதைத் தவிர, ஒவ்வொரு 100 மின் இறைப்பான்களுக்கும் ஒரு மின் இணைப்பாளர் ஏற்கெனவே நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் சிறிய பழுதுகளை நிவர்த்தி செய்து வருகிறார். பெரிய பழுதுகள் நடமாடும் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு அவர்களால் அல்லது அருகாமையிலுள்ள நகரங்களில் உள்ள பணிமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு செப்பனிடப்படுகின்றன. இந்த வகையில் பழுதுகளை சரி செய்யும் போது பழுதான மின் இறைப்பானை அகற்றி விட்டு, அதற்குப் பதில் மாற்று இறைப்பான் பொருத்தி குடிநீர் விநியோகம் தடைபடாமல் தொடர்ந்து வழங்க வகை செய்யப்படுகிறது.

23—7—1981 நாளிட்ட ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசு ஆணை எண். 1326-ல், வாரியத்தின் பராமரிப்பில் இருந்த அனைத்து கை இறைப்பான்களும் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிடம் மேற்கொண்டு பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டு விட்டன. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விசையிறைப்பான்களையும் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## முசிறி நிலவள வங்கி கட்டிடத்தைப் பழுது பார்க்கும் பணி.

42—வினா 14006—திரு எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு கைத்தறி ம்ற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முசிறியில் உள்ள நிலவள வங்கி கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) முசிறியில் உள்ள நிலவள வங்கிக் கட்டிடம் சுமார் 62 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. மேற்படி கட்டிடத்தில் சில இடிபாடுகள் உள்ளன. எனவே, நிலவள வங்கி அருகாமையில் உள்ள வேறு வாடகைக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு

[1984 மார்ச் 15

செயல்பட்டு வருகிறது. முசிறி நிலவள வங்கிக் கட்டிடத்தை பழுது பார்ப்பதற்கும் சில மாறுதல்கள் செய்வதற்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, முசிறி நிலவள வங்கி தனது பொது நிதியில் இருந்தும் கட்டிட நிதியில் இருந்தும் செலவு செய்வதற்கான பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் விதி எண்.44-ன் கீழ் ரூபாய் 50,000 வரை செலவு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டுமானப் பணியை திருச்சி உதவி நிர்வாகப் பொறியாளரிடம் ஒப்பிவித்து கட்டிடப்பணியினை விரைவில் முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முசிறி அரசினர் ஆண்கள் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு கூடுதல் இடவசதி செய்யும் திட்டம்

43—வினா 14009—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி அரசினர் ஆண்கள் ஆதி திராவிடர் நலத்துறை மாணவர் விடுதியில் தங்கி பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இங்கு தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு விடுதியில் இடவசதி போதுமானதாக உள்ளதா?

(இ) இல்லையென்றால் கூடுதல் இடவசதி செய்துகொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) 204.

(ஆ) இல்லை.

(இ) தகுந்ததொரு கட்டிடம் தேர்ந்தெடுப்பதற்காக நடவடிக்கை எடுத்துவரப்படுகிறது.

நாரேரிகுப்பம் கிராமத்தை தனி பஞ்சாயத்தாகப் பிரிக்கும் திட்டம்.

44—வினா 14029—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் மயிலம் ஒன்றியம் ரெட்டணை கிராம பஞ்சாயத்தில் இணைந்துள்ள நாரேரிகுப்பம் கிராமத்தை தனிப் பஞ்சாயத்தாக பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?



1984 மார்ச் 15]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மைலம் ஊராட்சி ஒன்றிய கிராமப் பஞ்சாயத்துக்களில் வானொலி மன்றக் கட்டிடம் கட்டி வானொலிப் பெட்டிகள் வைக்கும் திட்டம்.

45—வினா 14040—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி மைலம் ஊராட்சி ஒன்றியத்தின் கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள வானொலிப் பெட்டிகள் காணாமல் போய்விட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

(இ) எல்லா ஊர்களிலும் வானொலி மன்ற கட்டிடம் கட்டி வானொலிப் பெட்டி வைக்க அரசு முன்வருமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) வானொலிப் பெட்டி வாங்குவதற்கோ அதற்காக கட்டிடம் கட்டுவதற்கோ, ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகாரம் உண்டு. அரசின் அனுமதி தேவையில்லை.

முப்புளி கிராம புறம்போக்கு நிலத்தில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு குறித்த புகார்.

46—வினா 14044—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் சட்டமன்ற தொகுதி, மைலம் ஒன்றியம் முப்புளி கிராமத்தில் புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு குறித்து புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

[1984 மார்ச் 15

விடை—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், முப்புளி கிராமத்தில் புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு பற்றி புகார் ஏதும் வரவில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

முத்துப்பேட்டையில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.

47—வினா 14152—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் முத்துப்பேட்டையில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) முத்துப்பேட்டை பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்ட போதுமான புறம்போக்கு இடம் இல்லாததால் சர்வே எண். 137/2 கோவிலூர் அருள்மிகு மந்திரபுரீஸ்வரர் சுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சி திட்டத்தின் மூலம் கடன் பெற்று பேருந்து நிலையம் கட்ட திட்டம் பரிசீலனையில் இருப்பதாக பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திருத்துறைப்பூண்டியில் புதிய பேருந்து நிலையம் கட்டும திட்டம்.

48—வினா 14153—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் புதிதாக பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) ஆம்.



1984 மார்ச் 15]

(ஆ) திருத்துறைப்பூண்டி பேரூராட்சி சர்வே எண். 132, 133/1பி-ல் புதிய பேருந்து நிலையம் கட்ட ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் ரூபாய் 21.12 இலட்சம் கடன்பெற திட்டம் அனுப்பியுள்ளதாகவும், கடன் தொகை வழங்கப்பட்ட பிறகு திட்டம் செயல்படுத்தப்படும் எனவும் பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துக் கழகங்களில் டிக்கட் இல்லாமல் பயணம் செய்தவர்களிடம் வசூலிக்கப்பட்ட தொகை.

49—வினா 14236—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் டிக்கட் இல்லாமல் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை 1980-லிருந்து ஆண்டுவாரியாக எத்தனை ?

(ஆ) வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ): போக்குவரத்துக் கழகங்களில் 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் டிக்கட் இல்லாமல் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கையும் அவர்களிடம் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகைகளும் கீழ்க்கண்டவாறு ஆகும்:—

| வரிசை எண்ணும், போக்குவரத்துக் கழகத்தின் பெயர். | 1980-ல் டிக்கட் இல்லாமல் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை. | 1980-ல் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை. | 1981-ல் டிக்கட் இல்லாமல் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை. | 1981-ல் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | | ரூ. |
| 1. அண்ணா போக்குவரத்துக் கழகம். | 97 | 195.00 | 267 | 531.90 |
| 2. சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம். | 4,787 | 9,574.50 | 5,782 | 11,564.45 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3. சேரன் போக்குவரத்துக் கழகம். | 5,915 | 12,039.40 | 5,487 | 11,107.75 |
| 4. கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகம். | 4,649 | 17,088.60 | 4,259 | 16,643.70 |
| 5. பாண்டியன் சாலைப்போக்கு வரத்துக் கழகம். | 11,793 | 12,315.15 | 11,012 | 14,576.25 |
| 6. பல்லவன் போக்கு வரத்துக் கழகம் (மாவட்டப் பிரிவு). | 4,956 | 15,489.10 | 1,169 | 5,545.60 |
| 7. பல்லவன் போக்கு வரத்துக் கழகம் (பெருநகர் பிரிவு). | 45,023 | 90,046.00 | 51,479 | 1,02,958.00 |
| 8. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம். | 1,112 | 1,385.75 | 1,003 | 1,837.00 |

### ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி செய்து கொடுக்கும் திட்டம்.

50—வினா 14370—திரு. ஏ. சுந்திரசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் விவரம் அறிவிக்கப்படுமா ?

விடை—

தமிழகத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி செய்யும் உத்தேசம் அரசிடம் தற்சமயம் இல்லை.



### லத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.

51—வினா 14422—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் லத்தூர் ஊராட்சி ஒன்றியம் சீக்கனாங்குப்பம் கிராமம் முக்கிய புதிய போக்குவரத்து பாதையாகிய East Coast ரோட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை —

(அ) மற்றும் (ஆ): செங்கற்பட்டு மாவட்டம் லத்தூர் ஊராட்சி ஒன்றியம் சீக்கனாங்குப்பம் கிராமம் புதிய பாதையாகிய East Coast ரோட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் உத்தேசம் தற்சமயம் அரசிடம் இல்லை.

இவ்வூராட்சி ஒன்றியத்தில் பவஞ்சூரில் ஏற்கனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகம் மூலம் வழங்கப்பட்ட டிராக்டர்கள்.

52—வினா 14446—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்தின் சார்பில் 1981-82 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன ?

விடை—

85 டிராக்டர்கள் கீழ்க்கண்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன:—

1. தனியார்களுக்கு—42 டிராக்டர்கள்.
2. வனத்துறை—27 டிராக்டர்கள்.
3. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்—1 டிராக்டர்.
4. தமிழ்நாடு கனிப் பொருள்கள் துறை—2 டிராக்டர்கள்

[1984 மார்ச் 15

5. கால் நடைப் பராமரிப்புத் துறை—7 டிராக்டர்கள்.
6. தோட்டக் கலைத் துறை—1 டிராக்டர்.
7. நகரியம்—3 டிராக்டர்கள்.
8. கூட்டுறவு சர்க்கரை ஆலை—1 டிராக்டர்.
9. தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம்—1 டிராக்டர்.

மொத்தம் 85 டிராக்டர்கள்.

**சென்னை மாவட்டத்தில் ஆதி திராவிட மக்களுக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவு வீட்டு மனை சங்கங்கள்.**

53—வினா 14161—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்களுக்காக பதிவுசெய்யப்பட்டுள்ள கூட்டுறவு வீட்டுமனைச் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அதில் எத்தனை சங்கங்கள் மூலம் வீட்டுமனை வழங்கப்பட்டது ?

விடை—

(அ) சென்னை மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்காக 27 கூட்டுறவு வீட்டுமனைச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) 13 சங்கங்கள் மூலம் உறுப்பினர்கள் வீடுகட்ட மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**நாகப்பட்டினம் மீனவர் பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள்.**

54—வினா 14484—திரு. சு. வேணுகோபால்: மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினத்தில் உள்ள மீனவர் பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு ஆண்டும் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர் ?



1984 மார்ச் 15]

விடை—

நாகப்பட்டினத்தில் உள்ள மீனவர் பயிற்சி நிலையத்தில் 50 மாணவர்களுக்கு ஒவ்வோராண்டும் பயிற்சி அளிக்க வசதியுள்ளது. இதில் 5 இடங்கள் பாண்டிச்சேரி இந்தியப் பிரதேசத்தில் மாணவர்களுக்காகவும், மீதமுள்ள 45 இடங்கள் தமிழகத்தின் மீனவர்களுக்காகவும் ஒதுக்கப்படுகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளன:—

| | | | |
|---|---|---|---|
| 1975–76 | .. | .. | 44 |
| 1976–77 | .. | .. | 49 |
| 1977–78 | .. | .. | 27 |
| 1978–79 | .. | .. | 35 |
| 1979–80 | .. | .. | 47 |
| 1980–81 | .. | .. | 32 |

தற்பொழுது 43 மாணவர்கள் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மகப்பேறு நிலையங்கள்.**

55—வினா 14496—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை மகப்பேறு நிலையங்கள் இருக்கின்றன ?

(ஆ) அவைகளில் எத்தனை நிலையங்களில் மகப்பேறு உதவியாளர்கள் பணியாற்றுகிறார்கள் ?

விடை—

(அ) பத்து.

(ஆ) நான்கு (எஞ்சியுள்ள நிலையங்களில் மகப்பேறு உதவியாளர்களுக்குப் பதிலாக பலநோக்கு சுகாதார பெண் பணியாளர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது).

[1984 மார்ச் 15

பெட்டைக்குளத்திலுள்ள மகப்பேறு நிலையம்.

56—வினா 14497—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் பெட்டைக்குளத்திலுள்ள மகப்பேறு நிலையம் மூடப்பட காரணமென்ன ?

(ஆ) அங்கு திரும்பவும் மகப்பேறு நிலையம் திறக்கப்படுமா ?

விடை—

(அ) மூடப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

அஜீஸ்நகர் செட்டில்மென்டில் வாழும் குற்ற மரபினர்கள் நல்வாழ்வுக்காக ஒதுக்கப்படும் தொகை.

57—வினா 14516—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் அஜீஸ்நகர் செட்டில்மென்டில் வாழும் குற்ற மரபினர்கள் நல்வாழ்விற்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் தொகையை முறைப்படி அவர்களுக்கு பயன்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பழனி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம்.

58—வினா 14647—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரில் வீட்டுவசதி வாரியத்தின் கீழ் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?



1984 மார்ச் 15]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

ஆவடி நகரியம் காமராஜபுரம் தெருவிற்கு குடிதண்ணீர், சாலை வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம்.

59—வினா 14666—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் ஆவடி நகரியத்தை சார்ந்த காமராஜபுரம் தெருவிற்கு குடிதண்ணீர் வசதியும், ரோடு வசதியும் செய்து கொடுக்க கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருத்தணி—மதுரை திருவள்ளுவர் விரைவுப் பேருந்து பணி.

60—வினா 14719—திரு. சி. கோபால் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணியிலிருந்து மதுரை சென்று கொண்டிருந்த திருவள்ளுவர் விரைவுப் பேருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு என்ன காரணம் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்தடத்தின் பயணிகள் இருக்கை விகிதம் (Occupancy ratio) குறைவாக இருந்ததாலும், தொடர்ந்து இத்தடம் நட்டத்திலேயே இயங்கி வந்ததாலும் பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது.

முடீஸ் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்கும் திட்டம்.

61—வினா 14735—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை பகுதி முடீஸ் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது மாற்றப்படும் ?

[1984 மார்ச் 15

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## அண்டம்பள்ளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

62—வினா 14783—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அண்டம் பள்ளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அண்டம் பள்ளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த தற்சமயம் அரசிடம் திட்டம் ஏதும் இல்லை. இவ்வூராட்சி ஒன்றியத்தில் காட்டாம்பூண்டியில் ஏற்கனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

## பெரியகுளம் கோட்ட கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்.

63—வினா 14817—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் கோட்ட கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் மார்ச் 1982 முடிய எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன?

(ஆ) சென்ற இரண்டு ஆண்டுகளாக கடன் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) கிராம வீட்டுவசதி திட்டத்தின்கீழ் பெரியகுளம் கோட்ட கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் 31-3-1982 முடிய 2,371 நபர்கள் கடன் பெற்று வீடுகள் கட்டி முடித்துள்ளனர்.



1984 மார்ச் 15]

(ஆ) கிராம வீட்டுவசதி திட்டத்தின்கீழ் புதிதாக கடன் விண்ணப்பங்கள் பெறுவதை 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட கடன் விண்ணப்பங்களுக்கு, நிலுவையில் உள்ள கடன் விண்ணப்பங்களுக்கும் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

## வரிச்சூர் கிராமத்திலுள்ள மருத்துவமனை.

64—வினா 14822—திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதியில் வரிச்சூர் கிராமத்தில் உள்ள மருத்துவ மனையை அரசே ஏற்றுக்கொண்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் அங்கு போதிய டாக்டர்கள் நியமனம் செய்யப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## கெண்டிரச்சேரி ஆதி திராவிட மக்களுக்கு குடியிருப்பு மயானப் பாதை வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம்.

65—வினா 14838—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் வடக்கு கெண்டிரச்சேரி ஆதி திராவிடர் மக்கள் குடியிருப்புக்கும் மயானப் பாதைக்கும் சாலை வசதி இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவ்வசதி உடனடியாக செய்து கொடுக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): வடக்கு கெண்டிரச்சேரி ஆதி திராவிடர் மக்கள் குடியிருப்புக்கு சாலையும் மேற்படி காலனிக்கு மயானப் பாதை அமையுமிடமும் தனியாருக்குச் சொந்தமான நன்செய் நிலத்திலுள்ளது. அந்நிலங்களை கையகப்படுத்தி கொடுக்க ஆதி திராவிடர் நலத்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தியவுடன் மேற்கண்ட வசதி செய்து கொடுக்கப்படும்.

[1984 மார்ச் 15

கொடைக்கானல் ஒன்றியத்தில் புதிய சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

66—வினா 14890—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்ளுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் ஒன்றியத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன?

(ஆ) புதிய சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் உண்டா?

விடை—

(அ) கொடைக்கானல் ஒன்றியத்தில் மன்னவனூரில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் உள்ளது.

(ஆ) இவ்வொன்றியத்தில் புதிய சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்சமயம் அரசிடம் இல்லை.

திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.

67—வினா 14979—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தக் கோரி கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மேல் புதுப்பாக்கம்—வாழைப்பந்தல் சாலையை செப்பனிடும் பணி.

68—வினா 15055—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் மேல் புதுப்பாக்கம்—வாழைப் பந்தல் சாலையை செப்பனிடும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும்?



1984 மார்ச் 15]

விடை—

(அ) மற்றும் (ஆ) : இச்சாலை திமிரி ஊராட்சி ஒன்றியத்தி லிருந்து 1972–73 ஆம் ஆண்டில் பேருந்து தடச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை மேற்கொண்டு வருடாந்திர பராமரிப்பின்கீழ் ஏற்கனவே பலமுறை செப்பனிட்டும், செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டும் உள்ளன. மற்றபடி இச்சாலையில் பள் ளங்கள் ஏதுமில்லை.

ஆரணி—கலவை இடையே நகரப் பேருந்து விடும் திட்டம்.

69—வினா 15057—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியில் இருந்து கலவைக்கு வாழைப்பந்தல் வழி யாக புதிய டவுன் பஸ் விடும் நோக்கம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போதிலிருந்து துவக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): ஆரணியிலிருந்து வளையாத்தூர், செய் யாத்து வண்ணம், கனியனூர் வழியாக கலவைக்கு ஒரு நகரப் பேருந்து விட தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஆரணியிலிருந்து கல வைக்கு வாழைப்பந்தல் வழியாக நகரப் பேருந்து விடும் திட்டம் இல்லை.

திருவண்ணாமலை நகரில் அரசு விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம்.

70—வினா 15271—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு, திருவண்ணாமலை நகரத்தில் அரசு ஸ்டே டியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) அதற்காகும் செலவு எவ்வளவு?

[1984 மார்ச் 15

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : கேள்விக்கிடமில்லை.

**சிவசண்முக நகர் காலனியில் ஆதி திராவிடர் நலத்துறை மூலம் பள்ளிக்கூடம் அமைக்கும் திட்டம்.**

71—வினா 15298—திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம் கூடலூர் சிவசண்முகநகர் காலனியில் ஆதி திராவிடர் நலத்துறை மூலம் பள்ளிக்கூடம் அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஏற்கனவே நடத்தி வரும் பள்ளிகளுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டியுள்ளதாலும், ஆரம்பக் கல்வி உள்ளாட்சி நிறுவனங்களின் தலையாய கடமையானதாலும், இத் துறையிலிருந்து புதிய பள்ளிகள் ஏதும் திறப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே, நீலகிரி மாவட்டம் கூடலூர் சிவசண்முக நகர் காலனியில் புதிய ஆதிதிராவிடர் நலப்பள்ளி திறக்க உத்தேசமில்லை.

**நாடுகாணிபொன்னூர் காலனி ஆதி திராவிடர் மக்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம்.**

72—வினா 15300—திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதி நாடுகாணிபொன்னூர் காலனியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு ஆதி திராவிடர் வீட்டு வசதி கழகம் மூலம் வீடு கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித்தரப்படும் ?



1984 மார்ச் 15]

விடை—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதி நாடுகாணிபொன்னூர் காலனியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**1979 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு வரை உதவித் தொகை வழங்கப்பெற்ற விதவைகள் எண்ணிக்கை.**

73—வினா 15322—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979–1980, 1980–1981, 1981–1982 ஆண்டுகளில் தமிழக அரசால் வழங்கப்படும் விதவைகள் உதவித் தொகை பெற்றவர்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

| வருடம். | உதவித் தொகை பெற்ற நபர்களின் எண்ணிக்கை. | வழங்கப் பட்ட தொகை. ரூபாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979–80 .. .. .. | 17,612 | 60,74,453.25 |
| 1980–81 .. .. .. | 33,814 | 1,09,80,621.35 |
| 1981–82 .. .. .. | 45,532 | 1,59,60,277.00 |

குறிப்பு.—

முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ், உடல் ஊன முற்றவர்கள் மற்றும் விதவைகள் ஆகிய இரு சாரருக்கும் வழங்கப்பட்ட தொகை ஒரே தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படுகிறது. எனவே, விதவைகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையில் உடல் ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்ட தொகையும் சேர்ந்ததாகும்.

[1984 மார்ச் 15

நாங்குநேரி நகரில் பேருந்துப் பணிமனை கட்டும் திட்டம்.

74—வினா 15332—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி டவுனில் புதிய பஸ் டிப்போ கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) தற்பொழுது இது சம்பந்தமாக எந்தவித செயற்குறிப்பும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

நிலக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

75—வினா 15342—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

76—வினா 15346—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1984 மார்ச் 15]

விடை—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு எதுவும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பேரையூர் பேரூராட்சிக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம்

77—வினா 15348—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் பேரையூர் பேரூராட்சிக்குக் குடிதண்ணீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்

78—வினா 15351—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கு ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் உத்தேசம் அரசிடம் தற்சமயம் இல்லை.

பிணவறை ஊர்திகள் உள்ள மாவட்ட மருத்துவமனைகள்

79—வினா 15431—திரு. ரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட மருத்துவமனைகளில் பிணங்களை எடுத்துச் செல்ல பிணவறை ஊர்திகள் உள்ளனவா ?

[1984 மார்ச் 15

(ஆ) எந்தெந்த மாவட்ட மருத்துவமனைகளில் பிணவறை ஊர்திகள் உள்ளன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் பிணவறை ஊர்திகள் உள்ளன.

## அரியலூரிலிருந்து நகரப் பேருந்து விடும் திட்டம்.

80—வினா 15492—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

அரியலூர்—டால்மியாபுரம் (வழி) கீழப்பழுர், கீழக்காவட்டங்குறிச்சி, வெங்கனூர், பளிங்காநத்தம், அரியலூர்—திருமழபாடி (வழி) கீழப்பழுர், எசனை, சன்னாவூர், வளாகம், கரையவெட்டி ஆகிய இடங்களுக்கு நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

அரியலூர்—டால்மியாபுரம் (வழி) கீழப்பழுர், கீழக்காவட்டங்குறிச்சி, வெங்கனூர்—வழித் தடத்தின் நீளம் 38 கி. மீ. ஆகும். அரியலூர்—திருமழபாடி (வழி) கீழப்பழுர், எசனை, சன்னாவூர், வளாகம், கரையவெட்டி வழித்தடத்தின் நீளம் 46 கி. மீ. ஆகும். இந்த இரு வழித்தடங்களின் நீளம் 30 கி. மீ-க்கு அதிகமாக உள்ளதால் இந்த வழித்தடங்களில் நகரப் பேருந்து விடுவதற்கு இயலாது.

## அரியலூர்—மதுரை விரைவுப் பேருந்துப் பணி.

81—வினா 15494—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூரிலிருந்து மதுரைக்கு விரைவுப் பேருந்து ஒன்று விடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.



1984 மார்ச் 15]

## சென்னையில் 1980-81-ல் கார்டுதாரர்களுக்கு வழங்கப்பட்ட பாலின் அளவு.

82—வினா 15522—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

சென்னையில் 1980–81 ஆம் ஆண்டில் Tamil Nadu Diary Development Corporation ) மூலம் எத்தனை கார்டுதாரர்களுக்கு பால் வழங்கப்பட்டது ?

விடை—

1980–81-ஆம் ஆண்டில், சென்னையில் தினசரி சராசரி 1,90,000 நுகர்வோர்க்கு கார்டு மூலம் சுமார் 2 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது.

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தூத்துக்குடியில் குத்தகைக்கு எடுத்துள்ள நிலம்.

83—வினா 15546—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தூத்துக்குடி துறைமுகத்தில் குத்தகைக்கு நிலத்தைப் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பரப்பளவு ? குத்தகை தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நிலத்தின் பரப்பளவு : 9.443 ஏக்கர்.

குத்தகை தொகை ஆண்டு ஒன்றுக்கு : ரூ. 15,286.

குத்தகைக் காலம் : 30 ஆண்டுகள்.

## பட்டதாரி ஆசிரியர்களின் பி. டி. பட்டத்திற்கு ஊக்க ஊதியம் வழங்கும் திட்டம்.

84—வினா 15562—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இடைநிலை ஆசிரியர்களுக்கு பயிற்சிக்காக வழங்கப்பட்டு உள்ள ஊக்க ஊதியத்தைப் போல் பட்டதாரி ஆசிரியர்களின் பி. டி. பட்டத்திற்கும் ஊக்க ஊதியம் வழங்கும் உத்தேசம் உள்ளதா ?

[1984 மார்ச் 15

விடை—

இடைநிலை ஆசிரியர்களுக்கு அவர்களின் பயிற்சிப் படிப் பிற்காக ஒரு ஊதிய உயர்வு வழங்கியது போல், பட்டதாரி ஆசிரியர்களான தங்களுக்கும் பி.டி. பயிற்சிக்காக ஒரு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையினை அரசு பரி சீலித்து அரசாணை நிலை எண். 543, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 29-3-1982-ல் நிராகரித்து விட்டது.

சாத்தனூர் அணை வலதுபுறக் கால்வாயிலிருந்து தொண்டமானூர் கிராமத்திற்கான பாசன வசதி.

85—வினா 15592—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணையின் வலதுபுறக் கால்வாயில் இருந்து தொண்டமானூர் என்னும் கிராமத்திற்குக் கிளைக் கால்வாய் வெட்டி நீர்பாசனம் செய்துதர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

விடை—

ஆம், சாத்தனூர் வலது கால்வாயில் இருந்து தொண்ட மானூர் கிராமத்தைச் சேர்ந்த ஆயக்கட்டு நிலங்கள் நீர்பாசனம் பெறும் பொருட்டு ஒரு கிளைக் கால்வாய் வெட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதியம்புத்தூர் தெற்குத் தெரு ஆதி திராவிடர் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

86—வினா எண். 15606—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள புதியம்புத்தூர் தெற்குத் தெரு ஆதிதிராவிடர் மக்களுக்கு தாட்கோ மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள புதியம்புத்தூர் தெற்குத் தெரு ஆதிதிராவிட மக்களுக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.



1984 மார்ச் 15]

கல்லூரணி ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம்.

87—வினா எண் 15608—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி கல்லூரணியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோ மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப் படும்?

விடை—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி கல்லூரணியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோ மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

குட்டை பனைமரம் வளர்க்கும் செயல்முறை நடத்தப்பட்டு வரும் இடங்கள்.

88—வினா எண் 15614—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு கதர்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குட்டை பனைமரம் வளர்க்கும் செயல்முறை எத்தனை இடங்களில் நடந்து வருகிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

(அ) பனை மரங்களை குட்டையாக வளரச் செய்யும் பரிசோதனையை கோவையிலுள்ள விவசாயபல்கலைக் கழகம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் நடத்திக் கொண்டிருக்கிறது.

(ஆ) பனைத் தொழிலை எதிர் நோக்கியுள்ள பல பிரச்சனைகளில் மரம் ஏறும் சிரமத்தைக் குறைத்தல், மரத்தை குட்டையாக வளரச் செய்தல், பதநீர் சுரப்பதற்காக 14 வருடங்கள் காத்திராமல் விரைவிலேயே பதநீர் சுரக்கும் சக்தியை ஏற்படுத்துதல், பனங் கொட்டைகள் முளைத்தலில் உள்ள சிரமத்தை போக்க இலகுவில் விரைவில் கொட்டைகளை முளைக்கச் செய்தல், பனைகளுக்கு உரமிட்டு அதிக அளவு பதநீர் சுரக்கச் செய்தல் போன்ற ஆராய்ச்சிகளை இந்தப் பல்கலைக் கழகம் தொடங்கியுள்ளது.

[1984 மார்ச் 15

1981-82 வறட்சி நிவாரணப் பணிகளுக்காக குமரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை.

89—வினா எண். 15633—திரு. டி. மணி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981-82-ல் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக குமரி மாவட்டத்திற்கு எத்தனை இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது?

(ஆ) ஒதுக்கப்பட்ட பணம் அத்தனையும் செலவிடப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) ரூ. 10.47 இலட்சம்.

(ஆ) ஆம். அத்தனையும் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது

| வரிசை எண்ணும் வேலையின் வகையும். | ஒதுக்கப் பட்ட தொகை. | செலவான தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூ. இலட்சத்தில்) | |
| 1. குடிதண்ணீர் பொதுக் கிணறுகள் தோண்டுதல். | 3.20 | 3.20 |
| 2. லாரி, டிராக்டர், கைவண்டி அல்லது தலைச்சுமையாகத் தண்ணீர் எடுத்துச் சென்று விநியோகித்தல். | 0.27 | 0.27 |
| 3. புதிய சாலைகள் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 4. 50 ஏக்கருக்கும் குறைந்த ஆயக் கட்டுகளை உடைய பாசனக் குளங்களை மேம்படுத்துதல். | 1.00 | 1.00 |
| 5. 50 ஏக்கர்களுக்கும் மேற்பட்ட ஆயக்கட்டுகளை உடைய பாசனக் குளங்களை மேம்படுத்துதல். | 4.00 | 4.00 |
| மொத்தம்.. | 10.47 | 10.47 |



1984 மார்ச் 15]

திருவான்மியூர் குப்பம் பகுதியில் வீடுகள் கட்டும் திட்டம்.

90—வினா எண். 15640—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு சுற்றுப்புற சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை 148-வது வட்டம் இடைமாநகர் திருவான்மியூர் குப்பம் பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

விடை—

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை.

திருவான்மியூர் பகுதியிலுள்ள குப்பங்களில் மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம்.

91—வினா எண் 15641—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவான்மியூர் ஓடைக் குப்பத்திலும் திருவான்மியூர் குப்பத்திலும் உள்ள மீனவ சமுதாய மக்களுக்கு மீன் துறையின்மூலம் இலவச வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?,

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை

திருவான்மியூரில் உயர்நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம்,

92—வினா எண் 15655—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவான்மியூரில் உயர்நிலைப் பள்ளி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1984 மார்ச் 15

கம்பத்தில் பேருந்துப் பணிமனை கட்டும் திட்டம்.

93—வினா 15722—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பத்தில் திருவள்ளுவர் பேருந்துகளுக்கு டிப்போ கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கம்பத்தில் பேருந்துப் பணிமனை கட்டுவதற்குரிய நிலத்தை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தேர்ந்தெடுத்து அதற்குரிய பணத்தையும் செலுத்தியுள்ளது. நிலம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டதும் பணிமனை அமைக்கத் தகுந்த நடவடிக்கையை அக்கழகம் எடுக்கும்.

வட ஆற்காடு திருப்பத்தூரில் அரசினர் கலைக்கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம்.

94—வினா 15724—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில்ஒரு அரசினர் கலைக்கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் உடன் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

அரியலூரிலிருந்து நகரப் பேருந்துகள் விடும் திட்டம்.

95—வினா 15734—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூரில் இருந்து வெள்ளனூருக்கு நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

அரியலூர் வெள்ளனூர் வழித்தடத்தில் நீளம் 30 கிலோ மீட்டருக்கும் அதிகமாக உள்ளதால் நகரப் பேருந்து விடஇயலாது.



1984 மார்ச் 15]

96—வினா 15735—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர்—செந்துறை, அரியலூர்—முட்டுவாஞ்சேரி, அரியலூர்—திருமானூர், அரியலூர்—வேப்பூர் என்று தனித்தனியாக டவுன் பஸ் விட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

அரியலூர்—செந்துறை, அரியலூர்—முட்டுவாஞ்சேரி ஆகிய இரண்டு வழித்தடங்களில் ஒரு பேருந்தும், அரியலூர்—திருமானூர், அரியலூர்—வேப்பூர் ஆகிய இரண்டு வழித்தடங்களில் ஒரு பேருந்தும் விடப்பட்டுள்ளன. தனித் தனியாகப் பேருந்து விடும் திட்டம் இல்லை.

வாழைப்பந்தல் வழியாக ஆரணி—சென்னை இடையே பேருந்து விடும் திட்டம்.

97—வினா 15748—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியில் இருந்து செய்யார், காஞ்சிபுரம் வழியாக சென்னைக்குச் செல்லும் பேருந்துகளில் ஒன்றை வாழைப் பந்தல் வழியாக செலுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உளளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்கப்பட உள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

புதிதாக பெண்கள் கல்லூரிகள் துவங்கும் திட்டம்.

98—வினா 15825—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிதாக பெண்கள் கல்லூரி துவக்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில் இவ்வாண்டு எத்தனை கல்லூரிகள் துவக்க அரசு அனுமதி அளித்துள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1984 மார்ச் 15

### காஞ்சிபுரம் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

99— வினா 15883—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பு நிதி ஆண்டில் எத்தனை துணை தாலுக்காக்கள் தாலுக்காக்களாக உயர்த்தப்பட உள்ளன ? மாவட்டவாரியாக ?

(ஆ) காஞ்சிபுரம் தாலுக்காவை இரண்டாக பிரிக்கும் உத்தேசம் உண்டா ?

விடை—

(அ) இம்மாநிலத்திலுள்ள துணை வட்டங்கள் யாவும் முழு வட்டங்களாகத் தரமுயர்த்தப்பட்டுவிட்டன. தற்போது துணை வட்டம் ஏதுமில்லை.

(ஆ) காஞ்சிபுரம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

### தமிழ்நாட்டில் கரும்பு அதிகமாகப் பயிரிடப்படும் மாவட்டங்கள்.

100—வினா 15938—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எந்த எந்த மாவட்டங்களில் கரும்பு அதிகம் பயிரிடப்படுகிறது?

விடை—

தமிழ் நாட்டில் கீழ்கண்ட மாவட்டங்களில் கரும்பு அதிகம் பயிரிடப்படுகிறது.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | 1981-82 ஆம் ஆண்டில் கரும்பு பயிரிடப்பட்ட பரப்பளவு ஹெக்டேரில் (புள்ளியியல் துறையின் இறுதி மதிப்பீட்டின்படி). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | தென்னாற்காடு | 35,300 |
| 2 | வடாற்காடு | 33,000 |
| 3 | கோயம்புத்தூர் | 19,400 |
| 4 | பெரியார் | 19,300 |
| 5 | திருச்சிராப்பள்ளி | 18,000 |
| 6 | சேலம் | 13,000 |
| 7 | தருமபுரி | 13,000 |
| 8 | தஞ்சாவூர் | 12,800 |
| 9 | மதுரை | 11,500 |

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதை குறிக்கும்].



1984 மார்ச் 15]

## 2. தகவல் கோரல்.

### (அ) பொது நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகள் அவையில் வைக்கப்பெறுவது.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சாதாரணமாக டேபிளில் நமக்கு வைக்கப்படுகின்ற ரிக்கார்ட்ஸ் சம்பந்தமாக நம் அனைவருக்கும் தெரியும். பொதுவாக உங்கள் அலுவலகத்திற்கு வந்தவுடனேயே நீங்கள் இங்கே வைக்கின்றீர்கள். ஆனால் இலாக்காக்களிலேயிருந்து ரொம்பவும் டிலேயாக வருகிறது. முன்பே நான் இதுகுறித்து ரெய்ஸ் செய்தபோது எச்சரிக்கை செய்தீர்கள். அதைக் காலகாலத்தில் கொடுக்க வேண்டும், டிலேயானால் அதற்கான காரணத்தையும் எழுதி அத்துடன் சர்க்குலேட் செய்ய வேண்டுமென்று. You gave one direction அதற்கு நேர்மாறாக நம் முன்னால் The 9th Annual Report of Cholan Roadways Corporation Ltd., Kumbakonam and the audited Report, 1980., 1984-ல் வைக்கிறார்கள். புராசஸ் பண்ணுவதிலே delay. இருக்கிறதா என்றால் இல்லை. 1979-80 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் அதாவது 31—3—1980 முடிய உள்ள கணக்குகள் ஆடிட்டரால் தணிக்கை செய்யப்பட்டு 13—9—1980 லேயே ரிப்போர்ட் அளிக்கப்பட்டுவிட்டது.

அதாவது அக்கவுண்டென்ட் ஜெனரல் 18—9—1980-லே செய்துள்ள பணியை 26—9—1980-லே ஆனுவல் ஜெனரல் பாடி மீட்டிங் அடாப்ட் பண்ணி அப்ரூவ் ஆக்கி இருக்கின்றது. ஆக, இப்படி ஆடிட் ஆகி ஜெனரல் பாடியில் ஏற்கப்பெற்ற ஆடிட் ரிப்போர்ட்டை இவ்வாறு 3½ வருஷத்திற்குப் பிறகு பேரவையில் வைப்பது என்பது பேரவைத் தலைவருடைய டைரக்ஷனை அவர்கள் மீறி இருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம் ஆகின்றது. இப்படி காலந்தாழ்த்தி வைக்கின்றபோது. The House is deprived of its utility. 1980-லே கொடுக்கப்பெற்ற ஆடிட் ரிப்போர்ட்டை 1984-லே வைத்தால் அதன் பயன் எங்களுக்கு இல்லாமல் போகின்றது. இவ்வாறு அந்த டிப்பார்ட்மென்ட் நடந்துகொண்டுள்ள முறை Most contemptuous and we are seriously objecting to it. அதுவும் பேரவைத்தலைவர் இதுபற்றித் தெளிவாக டைரக்ஷன் கொடுத்துள்ளதற்குப் பிறகும், இந்த வயலேஷன் வந்திருக்கின்றது. எனவே இப்போது You must pass some strictures. அவையின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தற்போது ஊரிலே இல்லை. எனவே அவர்கள் வந்ததற்குப் பிறகு கேட்டு அதற்கான பதிலை பெற்றுத்தருகிறேன்.

(ஆ) உறுப்பினர்களது தொலைபேசிக்கு அனுப்பப்பெறும் தொகைப்பட்டியல் அதிகமாக இருப்பது.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே தொலைபேசித் தொகை மிக அதிகமான அளவிலே அதாவது ஆயிரம் ரூபாய்க்கு மேலாக வசூலிக்கவேண்டும் என்று குறிப்புகள் வந்திருக்கின்றன அதுபற்றிய விரிவான விளக்கங்களைப் பல தடவை கேட்டும் ஒன்றுமே பதில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்கதான் தனித்தனியாக டெலிஃபோன் கனெக்ஷன் கொடுக்கப்பட்டது. (குறுக்கீடு) ஒரு மாதத்திற்கு 100 கால்கள் ஃப்ரீயாகத் (free) தரப்பட்டிருக்கின்றது. அதற்கு மேல் போடுகின்றபோதுதான் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. கட்சி நடத்துகின்றவர்களைப் பார்ப்பதற்கு நிறையபேர்கள் வரக்கூடும். ஆகவே ஆயிரம் ரூபாயில் வருகின்றது என்பது அவ்வளவு அதிகமான ஒன்றல்ல. இதற்காகத்தான் முன்பே சொன்னோம். தனித்தனியாக டெலிஃபோன் கனெக்கஷன் வேண்டும் என்றால் பில் ஜாஸ்தியாக வரும் என்று சொன்னோம். அவ்வாறு சொல்லியும் கேட்காத காரணத்தால் தான் தனித்தனியாக வைக்கப்பட்டது. அவ்வாறு தனித்தனியாக வைப்பதற்கு 20 இலட்சம் ரூபாய் செலவாகி இருக்கின்றது. உங்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவ்வாறு செய்தோம். ஆகவே ஏற்படுகின்ற நிலைமைகளை அனுபவிக்க வேண்டியதுதான்.

(இ) சென்னிமலைக் கோவில்—கோவை மாவட்டம்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, எல்லோருக்கும் எல்லா உரிமையும் உண்டு என்பதை அரசியல் சட்டம் வகுத்திருக்கின்றது. அதை எல்லோரும் அனுபவிக்கிறார்கள். ஆனால் கோயம்புத்தூர் மாவட்டத்திலே சென்னிமலையில் மலைமேலே ஒரு சாமி இருக்கின்றது....................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் மாட்டு வண்டி ஒட்டிய பிரச்சினையைக் கொண்டு வருகிறீர்கள் என்று தெரிகின்றது. திடீரென்று அப்பிரச்சினையைக் முன்னறிவிப்பின்றி இங்கே எழுப்புவது சரியல்ல............... (குறுக்கீடுகள்)............ இப்போது திடீரென்று கொண்டு வந்தால் அதற்கு யார் பதில் சொல்ல முடியும்? ஏதாவது ஒரு விதியின் கீழ் முன்னறிவிப்புக் கொடுங்கள்.



3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்சி மாவட்டம், கரூர் மில்லில் நடந்துவரும் வேலை நிறுத்தப் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் இரா. கருப்பையா, சோ. அழகர்சாமி, செ. சிவசாமி, மு. அப்பாதுரை, எம். ஆறுமுகம், பொ. உத்திராபதி, என். ஏ. பூங்காவனம், ஜே. எஸ். இராசு ஆகியோர் ''திருச்சி மாவட்டம் கரூர் மில்லில் 17—1—1984 ஆம் தேதி முதல் நடந்து வரும் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்று தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டுக் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவ்வசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் கரூர் நகரத்தை ஒட்டி தாந்தோணியில் அமைந்திருக்கிற கரூர் மில்லில் பணி புரியக் கூடிய சுமார் 1,000 தொழிலாளர்கள் கடந்த 17—1—1984 முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்க வேண்டிய நிர்பந்தமான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அமைதியான முறையிலே வேலை நிறுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிற தொழிலாளர்கள் மீது கடுமையான போலீஸ் அடக்குமுறை ஏவி விடப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் வரலாற்றிலேயே இதுவரையிலும் கண்டிராத அளவுக்கு, தொழில் தாவாக்களைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு ஏற்று நிறைவேற்ற வேண்டிய தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள், தாவாக்கள் வந்தால் அவற்றைத் தீர்ப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்து, முதலாளிகளையும், தொழிலாளர்களையும் அழைத்துப் பேசி, அதன்மூலமாகத் தீர்வுகாண வேண்டுமென்கிற முயற்சிகளை மேற்கொள்வதற்கு பதிலாக, இன்றையதினம் இவ்வளவு பெரிய கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருக்கிற நேரத்தில்கூட, முதலாளிகளையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து வைத்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். அது ஒரு புறத்திலே இருக்கிறது.

தொழில் தாவாக்களில் காவல் துறை தலையீடு கூடாது என்பது ஏற்கெனவே அரசாங்கம் அறிவித்த ஒரு கொள்கையாக இருந்தாலும் நடைமுறையில் அது படிப்படியாக மாற்றப்பட்டு, காவல் துறைக்கு அத்துமீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்

கின்ற காரணத்தால் இன்றையதினம் தொழிலாளர்களுடைய போராட்டங்கள் நடந்தால், அந்தப் போராட்டங்களை உடைப்பதற்கும், அவர்களை மிரட்டுவதற்குமான நடவடிக்கைகளிலே தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, அந்த நிலையிலே இன்றைய தினம் காவல் துறை செயல்பட்டு வருகிறது. ஆகவே, அந்த நிலையால் அங்கேயிருக்கிற தொழிலளர்களுக்கு வேறு பாதுகாப்பு இல்லாத நிலையால், அந்த நகரத்திலே இருக்கிற மற்றும் அந்தச் சுற்று வட்டாரத்திலே இருக்கிற மக்கள், தங்களுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்று கேட்ட நிலை ஏற்பட்ட காரணத்தாலே, அந்த வட்டாரத்திலே அனைத்துப் பகுதி மக்களும் நியாயம் கோரி போராடக் கூடிய அந்தத் தொழிலாளர்களுக்குத் தங்களுடைய ஆதரவை அளிக்கக்கூடிய வகையிலே ஆதரவு நடவடிக்கைகளிலே ஈடுபடுவதற்கான சூழ்நிலை அங்கே உருவாகி இருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்தக் கரூர் மில்லிலே போராட்டம் ஏற்பட்டதற்கான காரணத்தை நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். இந்தக் கரூர் மில் நிர்வாகத்தை, புதிதாக அருப்புக்கோட்டையிலிருந்து வந்திருக்கிற ஜெய விலாஸ் நிர்வாகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இங்கே இருக்கிற தொழிலளர்கள் பல்லாண்டுக் காலமாக— சுமார் 20 ஆண்டுக் காலமாக, பணி புரிந்து வரக்கூடிய தொழிலாளர்கள். இந்தப் புதிய நிர்வாகம் அந்த மில்லை எடுத்துக் கொண்ட பிறகு, 1974 முதல் அந்த ஆலையிலே வேலை செய்து வரக்கூடிய தொழிலாளர்கள் தினக்கூலி தொழிலாளர்களாக வைக்கப்பட்டு, பல்வேறு பெயர்களிலே அழைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் எந்தப் பெயரிலே அழைக்கப்பட்டாலும் சரி, அவர்களுக்கு ஆக்குபேஷனல் வேஜஸ்— வேலைக்குரிய சம்பளம்— வழங்கப்பட வேண்டுமென்பது இன்றைய தினம் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கை.

அது பல்வேறு நீதிமன்றங்கள் வழங்கியிருக்கிற தீர்ப்பு. இன்றைய தினம் அனைத்து பஞ்சாலைகளிலும் நிர்வாகங்கள் ஏற்றுக்கொள்ளுகிற முடிவு அது. அந்தக் கோரிக்கையை இன்றைய தினம் அடிப்படையாக நிறைவேற்றுவதற்கு இந்த நிர்வாகம் ம்றுக்கிறது. இவர்களை சட்டப்படியான தொழிலாளர்கள் என்ற முறையில் அந்த நிர்வாகம் ஏற்றுக்கொண்டு, அதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, அவர்கள் போனசும் பெற்று வருகிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கு '' ஆக்குபேஷனல் வேஜஸ் '' வழங்க வேண்டுமென்பது தான் பிரதானமான கோரிக்கையாக இருக்கிறது. இது சம்பந்தமாக 1978-ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழக அரசாங்கம் 480 நாட்கள் வேலை செய்யக் கூடிய தினசரித் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற சட்டத்தை உருவாக்கியது. அந்தச் சட்டம் வந்ததின் நோக்கமே தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத் தான். ஆனால் அந்தச் சட்டம் இயற்றியதற்குப் பிறகு இன்றைய தினம்





நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், தெருவிலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 480 நாட்கள் வேலை செய்தால் அந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்பது இன்றைக்கு சட்டம் இயற்றிய பிறகும் அந்த நிர்வாகம் அந்தச் சட்டத்தை முறியடிப்பதற்காக, புறக்கணிப்பதற்காக அங்கே இருக்கிற தொழிலாளர்களை பழி வாங்கி, அவர்களை வெளியே அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதை எதிர்த்து தொழிலாளர்கள் போராடுகிறார்கள். மீண்டும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக ஏற்கனவே வேலை செய்த தொழிலாளர்கள் அங்கே ரிடையர் ஆகக் கூடிய காலி ஸ்தானங்களுக்கு அவர்களை பூர்த்தி செய்து ......

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது ஒத்திவைப்பு தீர்மானம். டிமாண்ட் இல்லை.

திரு. இரா. கருப்பையா : இருக்கிற நிலைமைகளைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : உறுப்பினரின் பேச்சில் லேபர் மினிஸ்டர் அனாவசியமாகத் தலையிடுகிறார்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அனாவசியமாக தலையிடவில்லை. அட்ஜர்ன்மென்ட் மோஷனிற்கும், டிமாண்டிற்கும் வித்தியாசம் இல்லையா ? அட்ஜர்ன்மென்ட் மோஷனில் பேசுகிற போது உறுப்பினர்கள் ஏன் ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை சுருக்கமாகச் சொல்லி முடிக்க வேண்டுமே தவிர, டிமாண்டில் பேசுவதைப் போல விரிவாக பேசக் கூடாது. நான் அதைச் சொல்லக் கூடாதா ? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்களும் சரி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரும் சரி, இரண்டு பேர்களும் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்களே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டேயிருந்தால் நான் என்ன செய்ய முடியும் ?

கரூர் விவகாரம் என்பது ரொம்ப நாளாக நடந்து கொண்டு இருக்கிறது. நான் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்த அனுபவத்தில் சொல்கிறேன். தொழிலாளர்கள் பிரச்னை எல்லாம் கன்சீலியேஷனில் முடிய வேண்டுமே தவிர, இங்கே பேசித் தீர்க்க முடியாது. எனவே, சொல்ல வேண்டியதை திரு. கருப்பையா அவர்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தச்
சூழ்நிலைகள் ஏற்பட்டதற்கான நிலைமைகளைத் தான் விளக்கிக்
கொண்டிருந்தேன். சுருக்கமாகத் தான் சொன்னேன்.
அமைச்சரிடத்தில் அளித்துக் கோரிக்கைகளையும் நான் ஒவ்
வொன்றாக வாசிக்கவில்லை. ஆகவே, குறிப்பாக இந்த அரசு
போட்டிருக்கிற சட்டங்களை நிறைவேற்றுவதற்கு, அதை நிறை
வேற்ற முடியாமல் குறுக்கே என்ன நிற்கிறது என்பதை நான்
தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20.)

ஆகவே, அதை நிறைவேற்ற வேண்டும் என்று தொழிலாளர்
கள் கேட்கிற நேரத்தில், அதை நிறைவேற்றுவதற்கு அந்த நிறு
வனம் முன்வராத காரணத்தால் அந்தத் தொழிலாளர்கள்
போராட வேண்டியிருக்கிறது. அரசு போட்டிருக்கும் சட்டத்
தின்படி 480 நாட்கள் வேலை செய்தால் அவர்களை நிரந்தரத்
தொழிலாளியாக ஆக்கலாம். அதை வலியுறுத்தி அந்தத் தொழி
லாளர்கள் கேட்கிற போது, அங்கே இருக்கும் கரூர் மில் அதிபர்
கள் அந்தத் தொழிலாளர்களை அழைத்து மிரட்டுவதோடு மட்டு
மல்லாமல், அந்தத் தொழிற்சங்க இயக்கத்தையே உடைக்கும்
நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதை நான் குறிப்பிட விரும்பு
கிறேன்.

உற்பத்தி பெருக வேண்டும் என்பதற்காக 7 நாட்கள் வேலை,
3 ஷிப்டில் தொடர்ந்து வேலை என்பது எல்லாம் ஏற்றுக்கொள்ளப்
பட்டு, அதற்கான உபரி தொழிலாளர்களை நியமிக்க வேண்டும்
என்றும் அரசுத் துறை அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். அப்படி
இருந்தும் அதை நிறைவேற்ற அந்த நிர்வாகத்தினர் மறுக்கிறார்
கள். இதைக் கோரிக்கையாக வைத்து அந்தத் தொழிலாளர்கள்
கிளர்ச்சியை நடத்துகிறார்கள். இந்தக் கோரிக்கையை நிறை
வேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அந்த நிர்
வாகம் ரௌடித்தனமான செயல்களில் நடந்து கொண்டு இருக்
கிறது. நேரடியாக பேசுவதற்கு பதிலாக தொழிலாளர்களை
அழைத்து மிரட்டுகிறார்கள். தொழிற்சங்கத் தலைவர்
சுப்பிரமணியத்தைத் தாக்கியிருக்கிறார்கள். வீட்டிற்குள்ளே
தூங்கிக் கொண்டிருந்த பாலன் அவர்களை ஆலைக்குள்ளே
அழைத்து வந்து தாக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறை
யில் தொழிலாளர்களின் கோரிக்கைகளை முறியடிப்பதற்கான
நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள்
என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

சரி இது தான் போகிறது என்று பார்த்தால், அரசாங்கத்தி
னிடத்தில் அவர்கள் தாவா கொடுத்து, வேலை நிறுத்த நோட்டீஸ்
கொடுத்து, வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிற நேரத்தில் தொழி
லாளர்களின் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காக பேச்சு
வார்த்தையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கிறார்
கள். 28—2—1984-ல் ஆரம்பித்த பேச்சு வார்த்தைக்கு முதலாளி
கள் வரவில்லை. தொழிற்சங்கத் தலைவர்கள் தான் கறாராக





அந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வந்தார்கள். ஆனால் முடிவில் அந்தத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தலைவர்களை அழைத்து, அந்த தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர் அவர்கள், வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. முதலாளிகளை வைத்துப் பேசவில்லை. ஆனால் 29 ஆம் தேதி பெயில்யூர் ரிப்போர்ட் அனுப்பி விடுகிறார்கள். இதற்குள்ளே காவல்துறை அங்கே வேலை நிறுத்தம் செய்கிற தொழிலாளர்களை..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போது பேச்சுவார்த்தை துவங்கப்பட்டது, எப்போது அது முடிந்தது என்கிற விவரமான விவாதத்திற்குள் சென்றால், இந்த விவாதத்தை இப்போது முடிக்க முடியாது. அங்கே வேலை நிறுத்தம் நடைபெறுகிறது, அதைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற முறையில் சுருக்கமாகப் பேச வேண்டும். இங்கே பேசுவதால் மட்டும் பிரச்னை தீராது. தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து, கன்சிலியேஷன் பேச்சுவார்த்தையின் மூலம் தான் இதைத் தீர்க்க முடியும். ஆகவே, சுருக்கமாக பேச்சை முடியுங்கள்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை. அங்கே தற்போது என்ன நிலைமை உருவாக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் தொழிற்சங்கத் தலைவர்கள் தாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஆலையின் நிர்வாகி யார் என்பது எனக்குத் தெரியாது. இருப்பினும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுச் சொல்வதை அனுமதிக்க முடியாது. அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அந்தமாதிரி நிலைமை இருக்கிறது என்று சொல்லி, போலீசுக்குக் கூட ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் பற்றி இங்கே சொல்வதில் என்ன தவறு? போன முறை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசுகிறபோது கூட அதைப் பற்றி இங்கே சொல்லி இருக்கிறார்கள். It is already on record.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1984 மார்ச் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டு ஏற்கனவே சொல்லப்பட்டு, அவைக்குறிப்பில் இருந்தாலும் அது அனுமதிக்கப்படுவதற்கு இல்லை.

You can have a say only upto certain extent. I have got my own doubts. Without verifying the materials on record I cannot allow it to go on record. I must have some kind of information about all these things.

திரு. இரா. கருப்பையா : தொழிற்சங்கத் தலைவர்களைத் தாக்குவதற்கு, கொலை செய்வதற்கு திட்டமிடப்படுவதாகத் தெரிகிறது.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே அப்படிச் சொன்னதை நீக்கிவிடும்படி உத்தரவிட்டிருக்கிறேன். நீங்கள் தொடர்ந்து இப்படிச் சொன்னால் பேசுவதற்கு அனுமதிக்க மாட்டேன்.

திரு. இரா. கருப்பையா : ஏ.ஐ.டி.யு.சி. தலைவர் தோழர் இராமையன் தாக்கப்பட்டிருக்கிறார். மற்றும் பலரும் தாக்கப் பட்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு இடத்தில் சாராயக் கடையில் நடந்த தகராறை வைத்துக் கொண்டு, 307-வது பிரிவின் கீழ் 50 பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் ; வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம் என்ன ? அது பற்றி ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த வேலை நிறுத்தம் நடைபெறக் கூடாது என்று முதலாளிகள் விரும்புகிறார்கள். போராட்டத்தை முறியடிக்க வேண்டும் என்று * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேலை நிறுத்தத்தைப்பற்றிச் சொல்லுங்கள், அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சுருக்கமாகச் சொல்லி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, என்ன செய்ய வேண்டுமென்று சுருக்கமாகச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். காவல் துறையினர் தொழிலாளர்கள்மீது 307-ஆவது பிரிவின் கீழ் வழக்குகள் போட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சனை குறித்து, அமைச்சரவர்கள் தலையிட்டு, அவர்களை நேரடியாக அழைத்துப் பேச வேண்டும். தொழிற்சங்கத் தலைவர்களையும், தொழிலாளர் பிரதிநிதிகளையும் முதலாளிகளையும் கூப்பிட்டுப் பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சினையைத் தீர்க்க வேண்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1984 மார்ச் 15] [திரு. இரா. கருப்பையா]

மென்பதுதான் எங்களுடைய நோக்கம். ஆனால், அமைச்சரவர்கள் இதைத் தொழில் கோர்ட்டுக்கு விட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். 50-க்கு மேற்பட்டவர்கள்மீது வழக்கு இருக்கிறது. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால், கரூர் வட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் பொதுமக்கள் மத்தியில் ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இந்தப் பிரச்சனையை உரிய முறையிலே பேசி, தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர் மட்டத்தில் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். சிம்சன் போராட்டத்தில் ஒரு அணுகுமுறை உருவாக்கப்பட்டது. அது தொடரும் என்று நினைத்தோம். ஆனால், தொடரவில்லை. தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறார்கள். மாநிலத் தொழிற்சங்கத் தலைவரும் அதற்கு ஆதரவாக இருக்கிறார். ஆகவே, அங்கே உருவாகியிருக்கிற, பதட்ட நிலையைத் தடுத்து உரிய முறையிலே அமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு, ஒரு சுமூகமான முறையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விரிவான முறையில் விவாதித்து, நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 28—12—1981 அன்று 170 அப்ரண்டிஸ்களின் ஆட் குறைப்பை ஆட்சேபித்தும், ஆலையின் வேலைப்பளு மாற்றம் மற்றும் அதற்கேற்ப ஊதியம் கோரியும், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இத் தொழிற் தகராறில் சமரசப் பேச்சுவார்த்தைகள், தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு நடைபெற்று, அதன் பயனாக 17—2—1982இல் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12 (3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அதைத் தொடர்ந்து தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஒப்பந்தப்படி வேலைப் பளு மாற்றம் மற்றும் ஊதியம் பற்றி நேர்டிப் பேச்சு வார்த்தைகளில் உடன்பாடு ஏற்படாத பட்சத்தில் இப்பிரச்சனையையும் 170 அப்பிரண்டிஸ்களின் வேலை நீக்கப் பிரச்சினையையும் தொழிலாளர் துறை இணை ஆணையர் முன் நடுவர் தீர்ப்புக்கு விட ஒப்புக்கொள்ளப்பட்டது. நேரடிப் பேச்சு வார்த்தைகளில் ஒரு உடன்பாடு ஏற்படாததால், தொழிலாளர் துறை இணை ஆணையர் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அவைகள் மீது தனது முடிவை 22—9—1983 அன்று அறிவித்தார்.

[மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்] [1984 மார்ச் 15

170 அப்பிரண்டிஸ்களின் வேலை நீக்கப் பிரச்சினை குறித்து 22—9—1983 தேதியில் இணை ஆணையர் வழங்கிய நடுவர்த் தீர்ப்பை முழுமையாக அமுல் ஆக்குவது குறித்தும் மற்றும் 12 கோரிக்கைகளை வலியுறுத்தியும், தொழிலாளர்கள் 17—1—1984 முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். மொத்தம், 444-ல் சுமார் 120 தொழிலாளர்கள் பொது ஷிப்டில் வேலை செய்து வருவதாகத் தொழிலாளர் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

இத் தொழில் தகராறு குறித்து சென்னை தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அவர் சமரச முறிவு அறிக்கை அரசுக்கு அனுப்பினார். தொழி லாளர் துறை ஆணையர் அனுப்பிய அறிக்கையின் அடிப்படையில், கோரிக்கைகள் 1 தொழிலாளர்களின் தகுதியை நிர்ணயித்தல், பணிக்கேற்ற ஊதியம் நிர்ணயித்தல் (Occupational wages) மற்றும் 7 பிரிவு முது நிலை (Category Seniority) முறையை அமுலாக் குதல் ஆகிய இரண்டு கோரிக்கைகளை அரசு ஆணை எண். 556, நாள் : 9—3—1984இல் தொழில் தீர்ப்பாயம் ( Industrial Tribunal) நீதிமன்ற தீர்ப்புக்கு விடப்பட்டுள்ளது. வேலை நிறுத் தம் தடை செய்யப்படவில்லை. இதில் 264 தொழிலாளர் கள் வேலைபற்றி ''ரெபரன்ஸ்'' செய்யப்பட்டது. எதற் காக ?

"To determine the status of workers listed in the annexure as to whether they are Apprentices/Trainees and temporaries."

''On determination of the above issue, to decide as to whether the demand of the above workmen that they should be paid occupational wages is justified, and if not to what relief they are entitled"

கோரிக்கை எண். 7-ஐப் பொறுத்தவரை.

*Demand No. 7* : Whether the demand of the workmen that promotion should be on the category-wise seniority is justified, if not to what relief the workmen are entitled,

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகள் தொழில் நீதிமன்றத் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டிருக் கிறது. மற்றுமுள்ள 11 கோரிக்கைகள் பெரும்பாலும் நிர்வாகச் செயல்களுக்கு உட்பட்டதாலும் மற்றும் இவைகள் ஏற்கென்வே உள்ள சட்ட விதிகளுக்கு உட்பட்டதாலும் இந்த 11 கோரிக்கை கள் மீது நீதிமன்றத் தீர்ப்புத் தேவையில்லை என ஆணையிடப் பட்டுள்ளது. வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கியமான பிரச்சினைகள்—264 பேர் சம்பந்தப்பட்ட தொழில் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டுவிட்ட படியால், வேலை நிறுத்தத்தை பின்வாங்கிக் கொள்வதே நல்ல தென அரசு கருதுகிறது. எனவே, அவையின் இதர அலுவல் களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 மார்ச் 15]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு, தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு

### சென்னை மாநகராட்சி குடியிருப்புப் பகுதி தெரு விளக்குகள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் சு. பாலன், என்.எஸ்.வி. சித்தன், து. புருஷோத்தமன், ப. பொன்னுரங்கம், எல். இளையபெருமாள், என்.வி.என். சோமு, அ. செல்வராசன், அ. ரகுமான்கான், டாக்டர் கே. சௌரி ராசன், திருவாளர்கள் ப. நெடுமாறன், தி. கா. நல்லப்பன், பி. ஈஸ்வரமூர்த்த் என்கிற சொரணம், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. சு. பாலன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ''இரவு நேரங்களில் சமூக விரோதிகளின் தொல்லை அதிகரிக் கும் வகையில் சென்னை மாநகரத்தில் குடிசைப் பகுதிகள் மற்றும் நடுத்தர மக்கள் வசிக்கும் தெருக்களில் உள்ள விளக்குகள் எரி யாதது பற்றிய'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே பெய்த பெருமழையின் காரண மாக எல்லாத் தெருக்களிலும், தண்ணீர் தேங்கி நின்றதன் காரண மாகவும், இருக்கின்ற மின்சாரக் கேபிள்கள் பாதிக்கப்பட்டு, சரி யான முறையில் தெரு விளக்குகள் எரியவில்லை என்பதைப் பற்றி மாநகராட்சியினருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எந்தெந்த வீதி களில் தெரு விளக்குகள் சீரான முறையில் எரியவில்லையோ, அங்கே எல்லாம் விளக்குகள் எரிவதற்கும், கேபிள்கள் மாற்று வதற்கும் உரிய நடவடிக்கைகளைத் தற்போது எடுத்துக் கொண்டு வருகிறார்கள். எனவே வருகின்ற கால கட்டத்தில் இவைகள் தடையில்லாமல் எரிவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்திருக்கும் விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கமாக இல்லை. உங்க ளுக்கே தெரியும். ஏன் சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டது என்பது. (குறுக்கீடு).

[1984 மார்ச் 15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நானும் சென்னையில் 22 வருஷங்களாக இருந்து வருகிறேன். எனக்கும், சென்னையில் உள்ள நிலைமைகள் எல்லாம் தெரியும். உறுப்பினர் டிமாண்ட் மீது பேசுவதுபோல் பேசக் கூடாது. சுருக்கமாகக் கேள்வியைக் கேட்க வேண்டும். (குறுக்கீடு).

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கம் சரியானதல்ல. ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கமாக இல்லை. எனவே, அதற்கு என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(உறுப்பினர் திரு. சு. பாலன் வெளிநடப்புச் செய்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கிட்டத்தட்ட, 12, 13 உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். எனவே, ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்ற முறையில் கேள்வி கேட்டால் நல்லது. (குறுக்கீடுகள்). இதுவரையிலும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர்தான் கேள்வி கேட்பது என்பது நடைமுறையில் இருந்து வருகின்ற ஒரு வழக்கம். அதை நாம் கடைப்பிடித்துக்கொண்டு வருகிறோம். எல்லோரும் கேள்வி கேட்பது என்றால் சரியானதல்ல. (குறுக்கீடு). இப்போது எல்லோருடைய பெயரையும், இங்கே சொல்லியாகிவிட்டது. எனவே, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் உள்ள தெருக்களில் விளக்குகள் சரியான முறையில் எரிவதில்லை என்று சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் மழை நீர் தேங்கியதன் காரணமாக கேபிள்கள் எல்லாம பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். இதற்கு முன்பாக சென்னை மாநகராட்சியில் முதல் முதலாக மஸ்டர் ரோலில் சம்பந்தப்பட்ட இந்த எலக்ட்ரிக்கல் டிபார்ட்மென்ட் தான், என்பதை இந்த நேரத்தில் நான் அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். என்னுடைய தொகுதியில் குறிப்பாக குடிசைகள் இருக்கின்ற பகுதிகளில் இரவு நேரங்களில் விளக்குகள் எரிவதேயில்லை. அதிகாரிகளிடத்தில் சென்று கேட்டால், கேபிள்கள் சரியில்லை என்ற பதில்தான் வந்துகொண்டிருக்கின்றது. அதுவும குறிப்பாக குடிசைப்பகுதிகளிலும் நடுத்தர மக்கள் வாழும் பகுதிகளிலும்தான் இந்த சமூக விரோத சக்திகள் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டு மக்களுக்குத் தொல்லைகள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியிலே புலியூர்புரம், டிரஸ்ட்புரம், அசோக் நகர் போன்ற இடங்களில் எல்லாம் தெருவில் விளக்குகள் எரிவதில்லை. கேட்டால் கேபிள் சரியில்லை என்ற பதில் வந்துகொண்டிருக்கிறது.



136831 சென்னை-600 008

1984 மார்ச் 15].

[முற்பகல் 10-40]

இதிலே இன்னும் ஒரு பெரிய குறை, இருக்கின்ற குறை என்னவென்று சொன்னால், மாநகராட்சியின் சார்பாக வாங்கப்படுகிற எலக்ட்ரிகல் குட்ஸ் சப்ஸ்டேண்டர்டாக வாங்கப்பட்டது . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சப்ஸ்டேண்டர்ட் என்றெல்லாம் சொன்னால், டெண்டர்களை எல்லாம் அமைச்சர் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறாரா உடன் பதில் சொல்வதற்கு ? கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** நான் என்ன சொல்கிறேன் என்றால், தரக்குறைவான பொருள்களை வாங்கிவிட்டு, அவைகளைப் பொருத்திவிட்டு, பிறகு எரியவில்லை என்று சொல்கிறார்களே, அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் அவர்களுக்கு என்னைக் காட்டிலும் அதிகமாகத் தெரியும். ஏனென்றால் மாநகராட்சிப் பகுதிகளில் ஒன்றிலிருந்து அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பவர். என்றாலும் கூட, மாநகராட்சியைப் பொறுத்தவரையில், இப்போது ஆணையாளர் அவர்களும், தனி அதிகாரியும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தனித்தனியாகச் சென்று எந்தந்தப் பகுதிகளிலே விளக்குகள் எரியவில்லையோ அவைகளைச் சரிபார்க்க வேண்டும். கேபிள்களைச் சரி பார்க்க வேண்டும் என்கிற உத்தரவை நாங்கள் போட்டிருக்கிறோம். மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 45 ஆயிரம் விளக்குகளுக்கு மேல் பராமரித்துக் கொண்டிருக்கின்றது.

அப்படி 45 ஆயிரம் விளக்குகளைப் பராமரிக்கிற நேரத்தில், 5 ஆயிரம் விளக்குகளோ, 10 ஆயிரம் விளக்குகளோ எரியாமல் கூட இருக்கலாம். ஏனென்றால் அது இயற்கை. 10 ஆயிரம் விளக்குகள் எரியாமல் போனாலும் கூட 35 ஆயிரம் விளக்குகள் எரிவதால், ஓரளவிற்கு நன்றாக வெளிச்சம் இருக்கும். ஒரு சில பகுதிகளில் கம்பிளீட் ஸ்டெரெச்சாக எரிவதில்லை. நான் நேரிடையாகப் பார்த்தேன். பல்வேறு இடங்களில், எரிவதே இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் கேபிள்களில் ஃபால்ட் ஏற்பட்டிருக்கிறதா அல்லது லோ-வோல்டேஜ் காரணமாக இருக்கிறதா என்று பார்த்து, உடனடியாக பழுது பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாநகராட்சியில் வாங்கப்படும் பொருட்கள் லோ-ஸ்டேண்டர்ட், சப்ஸ்டேண்டர்ட் என்றெல்லாம் சொன்னார்கள். இப்போதெல்லாம், எந்தப் பகுதியிலிருந்து டெண்டர் வந்திருந்தாலும் கூட,

டாக்டர் கே. சௌரிராஜன்] [1984 மார்ச் 1

Quality goods must be purchased என்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும், விலை அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை, Quality goods must be purchased என்று சொல்லியிருக்கிறோம்.

**திரு. து. புருஷோத்தமன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிப் பணியிலே மிக மிக மந்தப்பட்டு, மிக மிக மோசமாக இருப்பது எலக்ட்ரிகல் டிபார்ட்மெண்ட்தான். காரணம் என்னுடைய தொகுதியிலே, மடுவாங்கரைப் பகுதியிலே கடந்த 7 ஆண்டுக் காலமாக,—நமது மாண்புமிகு உறுப்பினர் கபாலி அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும்—(குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. து. புருஷோத்தமன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 7 ஆண்டுக்காலமாக மடுவாங்கரைப் பகுதியிலே விளக்குகள் எரிவதே இல்லை. இதற்கு கேபிள் ஃபால்ட்டா, மழை வருவதன் காரணமாகவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதே சமயத்தில் 3 கோடி ரூபாயைச் செலவு செய்து அண்ணா சாலையில் விளக்கு போட்டவர்கள், ஆதித்திராவிட மக்கள் வசிக்கும் பகுதியில் ......(குறுக்கீடு).

**திரு. டி. கே. கபாலி** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1959-லிருந்து, நான நகராட்சி மன்ற உறுப்பினராக நகராட்சி மன்றத்தில் பணியாற்றியிருக்கிறேன். அப்போதே பல தெருக்களில் விளக்குகள் எரியாது இருப்பது என்பது சர்வ சாதாரணம். ஆகவே அது பெரிய குற்றச்சாட்டு அல்ல. பத்திரிகையிலே வெளிவநது விளம்பரம் கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறார்கள்................ (குறுக்கீடுகள்) (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இதற்குத்தான் நாம் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று வரம்பு இருக்கிறது. அவர் பேசும்போது இவருடைய பெயரைக் குறிப்பிட்டுப் பேசினார். அதனால் இவர் பதிலுக்குப் பேச வேண்டும் என்கிறார். எல்லோரும் பேரவை விதிகளுக்கு உட்பட்டு செயல்பட்டால் இத்தகைய நிலை எல்லாம் வராது....... (கூச்சல், குழப்பம்).

**திரு. ரா. உமாநாத்**: கால் அட்டென்ஷனில் பெயர் கொடுத்த உறுப்பினரை கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டாமா அவர் கேள்வியை முடிப்பதற்குள், அவரைப் பேச அனுமதித்து விட்டீர்களே.......... (மணியடிக்கப்பெற்றது).



1984 மார்ச் 15] [மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : சபை சுமுகமாக நடக்க வேண்டும் என்பதற்காக சில நேரங்களில் விதிமுறையைத் தளர்த்த வேண்டியிருக்கிறது. அதனால்தான் இப்படிப்பட்ட நிலைமை. We have to conduct the House according to the rules (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கேள்விகளைக் கேட்கிற போது மற்ற உறுப்பினர்களின் பெயர்களைச் சொல்வதால்தான் பல பிரச்சினைகள் எழுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் பேசுகின்ற போது மாண்புமிகு உறுப்பினர் திரு. கபாலியின் பெயரைச் சொன்னதால் திரு. கபாலி எழுந்து விட்டார். ஆகவே கேள்விகளைக் கேட்கிறபோது எந்தப் பொருள் பற்றி கவன ஈர்ப்பு இருக்கிறதோ அதைப்பற்றிய கேள்விகளாக கேள்விகளை அமைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக கேள்விகள் கேட்கிறபோது — கேள்வி நேரம் உட்பட—குற்றச்சாட்டுகளைக் குறிப்பிடாமல் இருப்பது பேரவையை கண்ணியமாக நடத்துவதற்கு உதவும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. து. புருஷோத்தமன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன யோசனைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்குத் தெரியும். அவர் முதலில் பேசினார், அதனால் தான் நான் சொன்னேன். சென்னை முழுவதுமாக 3 கோடி ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள். அண்ணா சாலையிலே விளக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. ஆனால் குடிசைப்பகுதிகளில் விளக்குகள் எரியவில்லை. விளக்குகள் போடவில்லை, இருக்கிற விளக்குகளும் கடந்த 7 ஆண்டுகாலமாக எரியவில்லை. மடுவாங்கரை, பன்னீர்செல்வம் நகர் ஆகிய பகுதிகளிலே விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. மழை காரணம் கிடையாது, கேபிள் ஃபால்ட் காரணம் கிடையாது. பங்களாக்கள் உள்ள இடங்களிலே ஃபால்ட் என்றால் உடனடியாக 1, 2 மணி நேரத்திற்குள்ளாக அல்லது மறுநாளைக்குள்ளாகவே சரிப்படுத்தி விடுகிறார்கள். ஆனால் குடிசைப் பகுதிகளைப் பொறுத்தவரையிலே விளக்குகள் எரியவில்லை என்று அதிகாரிகளிடம் சொல்லியும் உடனடியாகக் கவனிக்கவில்லை. மடுவங்கரைப் பகுதியிலே கடந்த 7 ஆண்டுகளாக குடிசைப் பகுதிகளிலே தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற இடங்களிலே விளக்குகள் எரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் எரிய வைக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : துணைத் தலைவர் அவர்களே, மடுவாங்கரை, சைதை பகுதிகளில் குடிசைப் பகுதிகளிலே பல ஆண்டுகளாக விளக்குகள் எரியவில்லை என்று சொன்னார்கள், அந்தப் பகுதிகளிலே

சரிப்படுத்துவதற்கு நான் மாநகராட்சி தனி அதிகாரி போன்றவர்களை அங்கே அனுப்பி வைப்பேன். மாநகராட்சியிலே மொத்தம் 1,400 குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே எல்லாம் தெருவிளக்குகளை மெயின்டெய்ன் பண்ணுகிற அதிகாரம் மாநகராட்சிக்கு இருக்கிறது. வீடுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பது மாநகராட்சியின் கையில் இல்லை. பங்களாக்களிலே எரிவதற்கு மாநகராட்சியின் மூலமாக நடவடிக்கை எடுப்பதில்லை. அப்படிச் சொல்வதன் மூலமாக தவறான கருத்தை நீங்கள் சொல்லக்கூடாது எனபதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். நாம் தெருவிளக்குகளைத் தான் பராமரித்து வருகிறோம். எந்த எந்தப் பகுதிகளிலே அப்படி இருக்கிறதோ அங்கேயெல்லாம் சரிப்படுத்துவதறகு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 45 ஆயிரம் விளக்குகள் பராமரிக்கப் படுகின்றன என்று சொன்னார்கள். அதிலே 35 ஆயிரம் தான் எரியக்கூடிய நிலையிலே இருக்கின்றன. இப்படி எல்லா டிபார்ட்மென்டிலும் கொஞ்சம் கொஞ்சம் குறை இருக்கத்தான் செய்கிறது. ரோடுகளிலே லைட் எப்போது எரிகிறது, என்றால் ஜனாதிபதி வருகிற விழா எனறால் எரிகிறது, சீப் மினிஸ்டர் வருகிற விழா என்றால் அந்த இடத்திலே எரிகிறது. என்னுடைய தொகுதியிலே ராயபுரத்திலே நீங்கள் வருகிறபோது தான எரிகிறது. அது மட்டுமல்ல, அந்த போஸ்ட்கள் எல்லாம் பழைய போஸ்ட்களாக இருக்கினறன. சில இடங்களிலே விழுந்து இருக்கின்றன. கேபிள் ஃபால்ட் இருக்கிறது. நான் நேற்றுக்கூட வோட்டுக் கேட்கப் போனபோது என்னுடைய தொகுதியிலே 6, 11, 13, 16, 17 ஆகிய வட்டங்களில் இதைத்தான் குறைபாடாகச் சொல்கிறார்கள். நீங்கள் சொல்கிறமாதிரி ஓரளவுக்கு இருந்தால் பரவாயில்லை. ஆனால் முழுமையாக எரியாத அளவுக்கு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கமிஷனர்கூட போகவேண்டாம், எக்சிகியூட்டிவ் எஞ்சினீயர், அஸிஸ்டெண்ட் என்சினியர் போகலாம், துரிதமாக போய்ப் பார்த்து உடனடியாக சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு பொன்னுரங்கம் அவர்கள் சொன்னதைப் போல் எந்த எந்தப் பகுதியில் என்ன, என்ன குறைகள், லைட்டுகள் எரியவில்லை என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் சொன்னதைப்போல் இருக்கக்கூடிய கம்பங்கள் பழைய கம்பங்கள். அதில் போடப்பட்டு இருக்கின்ற கேபிள்கள் எல்லாம் பழைய கேபிள்கள் தான். ஆகவே இவைகளை எல்லாம் ஒழுங்காக மெயின்டெயின் செய்ய அதற்கு ஏராளமாக செலவு ஆகும். இன்று மாநகராட்சியிடம் அந்த அளவுக்கு பணம்



அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் உடனடியாக இல்லை. அதன் நிதிநிலையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு சரி செய்யவேண்டிய நிலையில் இருந்துகொண்டு இருக்கிறோம்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன மழை பெரும் காற்று இவைகள் காரணமாக இந்த மின் விளக்குகள் எரியாமல் பாதிக்கப்பட்டாலும் பெரும்பாலான குடிசைப் பகுதிகளில் நிரந்தரமாக எரியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி பாதிக்கப்பட்டவுடன் உடனடியாக சீர் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு சென்று இருந்தபோது நான் நகர்புறத்தில் தங்கவில்லை. கிராமப்புறத்தில் தங்கியிருந்தேன். கிட்டத்தட்ட கோலாலம்பூரிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிமினி என்ற கிராமத்தில் தங்கியிருந்தேன். அந்த ஊரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைச் சொல்லலாம் என்று நினைக்கின்றேன். அங்கு உள்ளவர்கள் காலை 6 மணிக்கு வீட்டிலுள்ள குப்பை கூளங்களை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு வெளியே வைத்து விடுகிறார்கள். 7 மணிக்கு எல்லாம் அந்த நகரசபை வண்டி அந்த குப்பை கூளங்களை எடுத்துச் செல்கிறது. அதே போன்று ஊர் எல்லையில் உள்ள அலுவலகத்தில் அந்த ஊரில் மின்சாரம் மற்றவைகளில் ஏதாவது குறை இருந்தால் அதை எடுத்துச் சொல்வதற்கு ஒரு புகார் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த புகார் புத்தகத்தில் அந்த பகுதியில் விளக்குகள் எரியவில்லை என்றாலேரே மற்ற குறைகளை அதில் எழுதினாலோ அவர்கள் மறுநாள் அந்தப் பகுதிக்கு வந்து பார்த்து சரி செய்து விடுகிறார்கள். அதேபோன்று ஒரு காரியத்தை ஒவ்வொரு வட்டத்திலும் எந்த எந்த பகுதியில் மின் விளக்குகள் எரியவில்லை என்று அந்த தெருவில் உள்ள ஒரு அலுவலகத்திலோ அல்லது போஸ்ட் ஆபிஸிலோ புகார் புத்தகம் வைத்து அந்தக் குறைகளை நிவர்த்திச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நவநீதகிருஷ்ண பாண்டியன் அவர்கள் சொல்லக்கூடிய யோசனைகளை நாம் மேற்கொள்ளலாம். ஆனால் இங்கு இருக்கக்கூடிய நிலைமையை நாம் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. மலேசியா சிங்கப்பூர் போன்ற பகுதிகளுக்கு அதிகமாக எங்களைப் போன்றவர்கள் செல்லமுடியவில்லை. ஆனாலும் நீங்கள் போய் வந்

தற்கும் அங்கே உங்களுக்கு கிடைத்த அந்த அனுபவங்களை நீங்கள் தெரிவித்ததற்கும் நான் நன்றியை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக நீங்கள் சொல்வதைப் போல் தான் இங்கே மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் பிளாஸ்டிக் பக் கெட்டுகள் கொடுத்து அதன் மூலமாக குப்பைகளைக் கொட்டி வெளியே கொண்டுவந்து வைக்கப்படவேண்டும் என்றும் மா நகராட்சி வண்டி வந்து அந்த குப்பைகளை எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் நாங்கள் ஏற்பாடுகளைச் செய்தோம். ஆனால் எந்த அளவுக்கு மக்கள் இதை அனுசரித்து அதை அவர்கள் பின்பற்றுகிறார்கள் என்பதை தான் நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக நாம் டஸ்ட்பின் என்று சொல்லக்கூடிய குப்பைத் தொட்டிகளை ஒவ்வொரு இடத்திலும் வைக்கிறோம். ஆனால் ஒரு வாரக் காலத்தில் அவைகள் எல்லாம் பழைய இரும்புக் கடைக்கு போய்விடு கின்றன. டஸ்ட்பின்னில் இரும்பை சேர்த்து செய்கிறார்கள். ஆகவே அந்த டஸ்ட்பின்னை உடைத்து அந்த இரும்பு கம்பி களை எடுத்துச்சென்று விடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதேபோல் பல்வேறு பகுதிகளில் பேவ் மெண்டுக்காக சிலாப் போடுகிறார்கள். அதன் பக்கத்தில் இருக்கின்ற மக்கள் இவைகளை துவைக்கின்ற கல்லாக மாற்றி விடுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே மலேசியா சிங்கப்பூர் போன்ற பகுதி களில் இருக்கின்ற நிலை இங்கே ஏற்படவேண்டும் என்று சொன்னால் அப்படிப்பட்ட செல்வம் நமக்கு இருக்க வேண்டும். ஆகவே அந்த நிலை வருகின்ற நேரத்தில் நீங்கள் சொல்லியபடி குக் கிராமங்களிலும் நடைமுறையில் இதுபோன்ற புகார் புத்தகங்களை வைத்துவிடலாம். ஆனால் புகார்புத்தகம் வைத்தால் அந்த புகார் புத்தகமே காணவில்லை என்று சொல்லி அதற்கு ஒரு புகார் புத்தகம் வைக்கின்ற நிலை இங்கே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு என்ன என்ன மேலான யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்களோ அவைகளை எல்லாம் எது எது மாநகராட்சியின் மூலம் செயல்படுத்த முடியுமோ அவைகளை எல்லாம் கண்டிப்பாக செயற்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிவிப்பு.

1984-85 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1984-85 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

'In pursuance of Article 203 Clause (3) of the Constitution of India, I, Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1984-85.'





## 6. வரவு—செலவுத் திட்டம் 1984-85—வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண். 17—கல்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,02,34,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவரவர்களே, நத்தம் தொகுதியில் தொழிற்கல்வி தொடங்குதல் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,02,34,02,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, குடிசை வாழ் மக்கள் வாழும் இடங்களில் பாலர் கல்வி முறையை ஏற்படுத்த நட வடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,02,34,02,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே; அரசு கல்வி நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு அப்பகுதியின் பொதுமக்கள் நிலம் மற்றும் நிதி அளிக்க வேண்டும் என்றுள்ள கொள்கை மாற்றப்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்,

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,02,34,02,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் பள்ளி துவக்கத்தில் புத்தகம் கிடைக்காததினால் கல்வி தரம் குறைவதால் பள்ளி துவக்கப்பட்டு 15 தினங்கள் கிடைக்கு மாறு செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,02,34,02,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மானியக்கோரிக்கை பற்றி குறிப்பு* ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் கொடுக்கப் பெற்றிருக்கிறது. அதை நான் படித்ததாகக் கருதி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டின் கல்வி மானியக் கோரிக்கையில் இன்றைக்கு விவாதத்தைத் துவக்குவதை நான் பெருமையாக ஏற்றுக்கொள்கிறேன். சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி என்பது மிகக் குறைவாக இருந்தது என்பதை நாம் அறிவோம். அகில இந்திய ரீதியில் பார்க்கும் பொழுது மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலம் ஓரளவுக்கு வளர்ந்து இருந்தது. சாதாரண மக்களும் நல்லமுறையில் கல்வியைப் பயில வேண்டுமென்ற ரீதியில், இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த அண்ணல் காந்திஜீ அவர்கள் எண்ணினார்கள். ஏழை எளியவர்கள் கல்வி பயின்றால்தான் அவர்களுடைய வாழ்வு வளம் பெறும் என்ற நிலையை உணர்ந்து, 300 பேர் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஆரம்ப பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமென்ற முறையில் திட்டமிட்டார்கள். பின் தங்கிய மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் கல்வி பயில வேண்டும் என்ற அடிப்படையில் ஐந்து மைல் தூர அளவிற்கு ஒரு உயர்நிலைப்பள்ளி, தாலுக்கா மட்டத்தில் கல்லூரி என்ற ரீதியில் அன்றைக்குத் திட்டமிட்டு, காந்திஜீயின் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அமரர் காமராஜ் அவர்கள் செயல்பட்டார்கள். காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுதுதான் தமிழகத்திலே ஒரு பொற்காலம் என்று கூறத்தக்க நிலையில் கல்வி மேம்பாடு அடைந்தது என்பதை நாம் உணர்வோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அந்த வகையில்தான் ஓராசிரியர் பள்ளிகளை ஆரம்பித்து, ஏழை எளிய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிப்பது, பகல் உணவு இன்னும் மற்றைய கல்விச் சீர்திருத்தங்களைச் செய்வது என்ற வகையில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டது, அன்றைக் அந்த அளவிற்கு வேகமாக வளர்ந்தது. இன்றைக்கு அதே வளர்ச்சி இருக்கிறதா என்று பார்த்தால் அந்த வளர்ச்சியின் வேகம் கொஞ்சம் தடைப்பட்டுத்தான் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

*262—338 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





கல்வி என்பது மிகமிகப் புனிதமானது. ஒருவனுக்குக் கண்ணாக இருந்து உதவக் கூடியது கல்வி. அந்தக் கல்வி எப்படி இருக்க வேண்டுமென்று நாம் ஆராய்கின்ற நிலைமைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறோம். கல்வி என்பது பண்பாட்டுக் கல்வியாக இருக்க வேண்டுமா அல்லது ஓர் அறிவுக் கல்வியாக இருக்க வேண்டுமா என்று ஆராய்கின்ற நிலைமைக்குஆளாகியிருக்கிறோம். ஆனால் இன்றைக்குப் படித்தவன் பண்பாடு உள்ளவனாக இருக்க வேண்டுமென்ற நிலை வர வேண்டுமென்றால், சமூகம் நல்ல நிலைமைக்கு வளர வேண்டுமென்றால்அதற்கான கல்வி, அவசியலதேவை

(முற்பகல் 11.00)

அத்துடன் பண்பாட்டுக் கல்வியும் தேவை. ஒழுக்கத்துடன் வாழ்வதற்கு அந்தக் கல்வி தேவை. இப்போதைய சமுதாய மாற்றத்தின் காரணமாக படித்தவர்கள் தான் அதிகமான தவறுகள் இழைக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்குப் பண்பாடு என்பது இல்லாததுதான். அந்த நிலைமை மாற வேண்டும். படித்தவர்கள் ஒழுக்கம் உள்ளவர்களாக வாழ பண்பாட்டுக் கல்வி உறுதுணையாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்கள் அமைதியாக வாழ்ந்து சமுதாயம் நல்ல முறையில் மேம்பட முடியும். ஆகவே, கல்வியை நல்ல தரம் உள்ள கல்வியாக ஆக்குவதற்குரிய முயற்சிகளை நாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற கல்விகளைப் பொறுத்த வரையில் எப்படி ஆரம்பக் கல்வியிலிருந்து ஆரம்பித்து உயர்நிலைப் பள்ளி, கல்லூரி என்ற அளவிலே வளர்த்துக் கொண்டு போகின்றோமோ அதே போன்று இந்த பண்பாட்டுக் கல்வியையும் ஆரம்பத்திலிருந்தே கற்றுக் கொடுக்கின்ற வகையிலே பயிற்சி கொடுக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

இந்த கல்வி இலாக்காப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர்கள். ஆகவே, கல்வியிலே ஓரளவுக்கு பல நல்ல திட்டங்களை அவர்கள் வகுத்திருந்தாலும், பல நடைமுறைகளை அவர்கள் செய்திருந்தாலும் இது ஒரு பெரிய துறை என்கின்ற வகையிலே இதை முழுமையாகக் கண்காணிக்க முடியவில்லை என்பதைத்தான் எங்களாலே ஊகிக்க முடிகின்றது. அந்த அளவுக்கு இந்த கல்வித் துறை இன்றைக்கு ஒரு பெரிய துறையாக மாறி இருக்கின்றது. மக்களை வளர்த்துச் செல்லக்கூடிய ஒரு அடிப்படையான துறை இது என்ற காரணத்தால்தான் இதற்காக அதிகமான தொகையை நாம் ஒதுக்கி இருக்கிறோம்.

1984-85-ல் கிட்டத்தட்ட 404 கோடி ரூபாயை கல்விக்காக ஒதுக்கி இருக்கிறோம். அதாவது மொத்த செலவினத்தில் கிட்டத்தட்ட 21 விழுக்காட்டைக் கல்விக்காகத்தான் நாம் ஒதுக்கி இருக்கிறோம். ஆகவே, இவ்வளவு பெரும் தொகையைச் செலவிடுகின்ற போது அதனுடைய பலனை யார் அனுபவிக்கிறார்கள்

என்ற கேள்வியினை எழுப்ப வேண்டி இருக்கின்றது. அந்தப் பலனை நகர்ப்புற மக்கள் அனுபவிக்கிறார்களா அல்லது கிராமப் புற மக்கள் அனுபவிக்கிறார்களா என்ற ரீதியில் கேள்வியினை எழுப்ப வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

கிராமப் புறங்கள் முன்னேற வேண்டும் என்று அண்ணல் காந்திஜி அவர்கள் கனவு கண்டார்கள். அந்த அடிப்படையில் காமராஜர் அவர்கள் திட்டமிட்டுச் செயல்பட்டார்கள். இந்தியாவாக இருந்தாலும், தமிழகமாக இருந்தாலும் அதிகமாக கிராமங்களை உள்ளடக்கிய பகுதிதான் நமது நாடு. ஆகவே நமது அரசும், மத்திய அரசும் அதிகமான பணத்தைக் கல்விக்காக ஒதுக்கினாலும்கூட அவற்றின் பலன் கிராமப் புறங்களுக்குச் செல்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது. எனவே கிராமப்புற மக்களுக்குரிய திட்டங்கள் இருக்கின்றனவா என்பதைப் பார்க்கின்றபோது ஓரளவுக்கு குறைவாகத்தான் இருக்கின்றது என்பதை என்னால் ஊகிக்க முடிகின்றது. ஆகவே அதை நிவர்த்திக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்.

30-9-1983 நிலவரப்படி தொடக்க நிலைப் பள்ளிகள் என்ற ரீதியில் 28,545 பள்ளிகளும், 1.16 இலட்சம் ஆசிரியர்களும், 48.06 இலட்சம் மாணவர்களும் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. தொடக்கப் பள்ளி என்பதை எடுத்துக் கொண்டு பார்த்தால் ஒரு ஆசிரியருக்கு 42 மாணவர்கள் என்ற வகையிலே விகிதாச்சாரம் கணக்கிடப்பட்டிருக்கின்றது. 1.16 இலட்சம் ஆசிரியர்கள் 48.06 இலட்சம் மாணவர்களுக்கு இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுத்துப் பார்க்கின்றபோது ஒரு ஆசிரியருக்கு 42 மாணவர்கள் என்பது ஒரு விகிதாச்சாரமாக கணக்கில் இருக்கின்றதே தவிர நடைமுறையில் சரியாக இல்லை என்று தான் என்னாலே ஊகிக்க முடிகின்றது.

அமரர் காமராஜர் காலத்தில் 6 முதல் 11 வயதுள்ள குழந்தைகள் அனைவரும் படிக்க வேண்டும் என்பதற்காக கட்டாயக் கல்வி முறைத் திட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கான அமைப்புக்களை பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஏற்படுத்தி அவர்களுக்கு எல்லாம் நல்ல முறையில் அறிவுரை கூறி குழந்தைகள் எல்லாம் கல்வி பயில வேண்டும் என்று உணர்வு பூர்வமாகக் கருதப்பட்டு காரியங்கள் செய்யப்பட்டன. கல்வியை பொறுத்த வரையில் தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும், பிற்பட்ட மக்களாக இருந்தாலும் நல்ல முறையில் வளர வேண்டும் என்பதற்காகத்தான் அன்றைக்கு கம்பல்சரி எஜுகேஷன் என்ற கட்டாயக் கல்வி முறையினை ஏற்படுத்தினார்கள்.

ஆனால் இப்போது ஏற்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தின் காரணமாக மூன்று இலட்சம் மாணவர்கள் ஆரம்பக் கல்விக்கு வருகிறார்கள் என்று ஒரு கணக்கு சொல்கிறீர்கள். அனுபவபூர்வமாக பார்க்கின்றபோது இரண்டாண்டுகளாக ஆனால் குப்புக்கு வராத மாணவர்களைக் கூட வந்ததாகக் ஒரு கணக்குக்



கொடுத்திருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே நீக்கப்பட வேண்டியவர்களின் பெயர்களையும் சேர்த்துதான் சொல்கிறார்கள் என்பதைச் சொல்ல முடியும். மூன்று ஆண்டுகளுக்குக் கூட ஒரே மாணவன் ஒரே வகுப்பிலே இருப்பதாகக் கணக்கு காட்டப்படுகின்றது. அப்படி அந்த மாணவர்களின் பெயர்களை நீக்காமல் நிரந்தரமாக அந்தப் பள்ளியின் மாணவர்கள் பட்டியலிலே இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். வர முடியாததற்கு என்ன காரணம்? வரவழைப்பதற்கு என்ன நடவடிக்கையை அந்தத் துறை எடுத்திருக்கிறது என்று பார்த்தால், எந்த நடவடிக்கையும் அந்தத் துறை எடுத்ததாகத் தெரியவில்லை. அது பற்றி ஆசிரியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்ற கேள்வியும் கேட்கப்படவில்லை. அவர்களைக் கண்டிக்கக் கூடிய அளவுக்கும் அந்தத் துறை இல்லையென்றுதான் நான் அனுபவபூர்வமாகப் பார்க்கிறேன். அந்த அளவுக்குத் தவறான கணக்குகள் தான் இருக்கின்றனவே தவிர, அனுபவபூர்வமாக இல்லை என்பதை நீங்கள் வழங்கியுள்ள புள்ளி விவரங்களிலிருந்து நாம் அறிய முடியும்.

தொடக்க நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, 1 முதல் 5 வகுப்புகள் வரை உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை 28,548 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நடுநிலைப் பள்ளிகள்—1 முதல் 8 வரை அல்லது 6 முதல் 8 வகுப்புகள் வரை—5,635 உள்ளன. இவ்வகுப்புகளுக்கு உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 0.66 இலட்சம்; மாணவ, மாணவியர் எண்ணிக்கை 27.16 இலட்சம் என்று புள்ளி விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது சரியா என்று பார்த்தால் இல்லையென்றுதான் என்னால் கூறமுடியும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் (பொதுவாக 5 முதல் 10 அல்லது 6 முதல் 12 வகுப்புகள் உள்ளவை) 3,778 என்றும், ஆசிரியர்களின் எண்ணிக்கை 0.99 இலட்சம் என்றும், மாணவ, மாணவியர் எண்ணிக்கை 26.42 இலட்சம் என்றும் கொடுக்கப்பட்டுள்ள விகிதத்தைப் பார்க்கும்போது உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1 : 21 என்றும், நடுநிலைப் பள்ளிகளில் 1 : 41 என்றும் கணக்கு வருகிறது. உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் விகிதத்திற்கும் மாணவர் விகிதத்திற்கும் ஒரு பக்கம் சரியாக இருக்கலாம், புள்ளி விவரம் அப்படிக் கூறலாம். ஆனால் அனுபவ பூர்வமாக அப்படி இல்லை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதை மேலும் எழுவுள்ளதாக ஆக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வகுப்புத் தொகுதி வாரியாக மாணவ, மாணவியர் எண்ணிக்கை வருமாறு என்று பட்டியலைப் பார்த்தால், 1 முதல் 5 வகுப்பு வரை 68.74 இலட்சம் மாணவ, மாணவியர், 6 முதல் 8 வகுப்பு வரை 21.91 இலட்சம் மாணவ, மாணவியர் என்று கொடுத்திருக்கிறார்கள். 1 முதல் 5-வது வகுப்பு வரை 68.74 இலட்சம் மாணவ/மாணவியர் என்று இருக்கும்போது, 6 முதல்

[திரு. இல. பலராமன்] [1984 மார்ச் 15

8-வது வகுப்பு வரை 21.91 இலட்சம் அளவிற்குக் குறைவாக மாணவர்கள் இருக்கிறார்கள். மீதம் உள்ள 46.83 இலட்சம் மாணவ/மாணவியர் படிக்காமல் நிற்கிறார்கள். இது அரசாங்கம் கொடுத்திருக்கிற புள்ளி விவரக் கணக்கு. அந்த மாணவர்களை ஊக்குவிப்பது எப்படி, அந்த மாணவர்களைப் பயிற்றுவிப்பது எப்படி என்று பார்க்க வேண்டும். 5-வது வரையில் படித்து அந்தக் குழந்தைகள் அதற்குப் பிறகு கல்வி கற்காமல் வீணாகக் கெடக்கூடிய நிலையை ஏன் உருவாக்குகிறீர்கள்? ஆகவே, இங்கு அதிகமான எண்ணிக்கை பயிலாமல் இருப்போர் எண்ணிக்கை என்று இருக்கும் போது, இன்னொரு இடத்தில் மொத்தமாக, மாநில அளவில் நாம் 96 சதவிதம் மாணவர்களுக்குக் கல்வியைப் போதிக்கிறோம் என்று ஒரு புள்ளி விவரம் கொடுக்கிறீர்கள். இந்தக் கணக்கில் எங்கே தவறு ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். இந்த மாதிரி 5-வது வரை படித்துவிட்டு, அதற்குமேல் படிக்காமல் இருக்கக்கூடிய 46.83 இலட்சம் மாணவர்களுக்கு என்ன வழி வகுக்கப் போகிறீர்கள்? அவர்களை சமுதாயத்தில் உயர்த்தப் போகிறீர்களா? மேலும் படிக்க வைக்கப் போகிறீர்களா, இல்லையா? அரசாங்கமும் அமைச்சரும் இதைப் பரிசீலித்து, அவர்களுக்கு மேலும் கல்வி கற்பிக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

6-வது வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரை மாணவர் எண்ணிக்கை 21.91 இலட்சம் என்றும், 9 முதல் 10-வது வகுப்பு வரை மாணவர் எண்ணிக்கை 7.91 இலட்சம் என்றும் உள்ளதைப் பார்த்தால், வித்தியாசம் 14 இலட்சமாக இருக்கிறது. அந்த விகிதாச்சாரத்தைப் பார்க்கும் போது 1-முதல் 5-வது வரை படித்த மாணவர்களில் 46.83 இலட்சம் மாணவர்கள் தொடர்ந்து படிக்காமல் நிற்கிறார்கள். 6-முதல் 8-வது வகுப்பு வரை படித்த மாணவர்களில் 14 இலட்சம் மாணவர்கள் மேற்கொண்டு 9 முதல் 10-வது வகுப்பு வரை படிக்காமல் நிற்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

11-12 வகுப்புகளில் 3 லட்சம், அதற்கு விகிதாச்சாரம் 4.83 லட்சமாக வித்தியாசப்படுகிறது. இந்த வித்தியாசத்தைப் பார்க்கிறபோது அதிகமாக படிக்கக்கூடிய நிலையில் மாணவர்கள் செல்லாததற்கு காரணம் என்ன? அவர்களுடைய தகுதியின்மையா? அல்லது வேறு என்ன காரணம்? ஒரு பக்கம் பகல் உணவு காரணமாக அதிகமாக மாணவர்கள் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்று புள்ளி விவரத்தைத் தந்து, இதுபோன்ற கணக்கை தருகிறபோது எங்களுக்கு ஐயப்பாடு ஏற்படுகிறது. அதை நானே அனுபவமாகப் பார்த்தேன். இரண்டு ஆண்டுகள் ஒரே மாணவனை வைத்திருக்கிறீர்களே என்று கேட்டால் மேலிடத்திலிருந்து எடுக்கக்கூடாது. அதிலிருந்து நீக்கக்கூடாது என்று உத்தரவு என்று பள்ளி ஆசிரியர் நான் கேட்கிறபோது



1984 மார்ச் 15] [திரு. இல. பலராமன்]

சென்னையைத் தான் எல்லோருடைய கவனத்திற்கு வருகிறது. இரு தலைமுறை கணக்கை வைத்துக்கொண்டு மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகமாக காண்பித்து படிப்பினுடைய நிலையை கெடுத்துக்கொண்டு இருக்கிறிர்கள் என்பதைத் தான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதை உயர்த்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமங்களில் கூட பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் ஆங்கிலம் படிக்கவேண்டுமென்றும், சிறப்பான நல்ல குழந்தையாக இருக்கவேண்டுமென்றும் விரும்புவதால், இன்றைக்கு கிராமங்கள் தோறும் நர்சரி பள்ளிகள் என்ற பெயரால் தனியார் பள்ளிகள் ஆரம்பிக்கிறார்கள். அங்கே மாதத்திற்கு ஐந்தோ, பத்தோ வழங்கிவிட்டு அந்தக் குழந்தைகளை அந்தப் பள்ளிகளில் சேர்க்கிறார்கள். அந்த நிலையில் அரசாங்கத்தில் அதுபோன்ற பள்ளிகளை நாங்களும் ஆரம்பிப்போம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருந்தாலும், அவ்வாறு செய்கிறபோது எல்லா கிராமங்களிலும் இளம் சிறார்கள் நர்சரி பள்ளிகளில் படிக்கிற அளவிற்கு பள்ளிகளை ஆரம்பிப்பதற்கான திட்டத்தை தீட்ட வேண்டும். அதை ஆரம்பிக்க வேண்டும் என்ற நிலைக்கு நாம் ஆளாக வேண்டும். மேலும், அந்தத் தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். தனியார் ஆரம்பிக்கக்கூடிய பள்ளிகள் உற்சாகமூட்டுவதாக இருந்தாலும், பெற்றோர்களுக்கு நிறைவு தருவதாக இருந்தாலும், குழந்தைகள் சுறுசுறுப்போடு கல்வி பயில்வதற்கான ஊக்கத்தை தருவதாக இருந்தாலும், அந்தப் பள்ளிகளை ஒழுங்குபடுத்துகிற அளவிலே திட்டங்களை எவையேனும் வைத்திருக்கிறதா என்றால் எதுவுமில்லை. அதற்கான வழிமுறைகளை உருவாக்கவேண்டும். அல்லது அரசாங்கமே எல்லா கிராமங்களிலும் இதுபோன்ற பள்ளிகளை ஆரம்பித்து குழந்தைகளுக்கு பகல் உணவு தந்து, அவர்களை நல்லமுறையில் பாதுகாப்பதற்கு, பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வைத்து அவர்களை பயிற்றுவிப்பதற்கு வழிவகைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஆரம்பக் கல்வியிலே நாம் அதிகமாக 3 லட்சம் மாணவர்களைச் சேர்த்துவிட்டோம் என்று புள்ளிவிவரம் கொடுத்து, ஆசிரியர்கள் விகிதாச்சாரமும் சரியாக இருந்தும். பள்ளிக் கட்டிடங்கள் என்கிறபோது போதுமான பள்ளிக் கட்டிடங்கள் இல்லையென்று தான் கூற முடியும். மாணவர்கள் எண்ணிக்கை உயர்ந்த அளவிற்கு பள்ளிக் கட்டிடங்கள் உயரவில்லை. தன்னிறைவுத் திட்டத்திலே எல்லாம் பூர்த்தி செய்துவிட்டோம் என்று பெருமையாக எடுத்துக் கூறினாலும் பல இடங்களில் ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் இல்லாத நிலை இருக்கிறது. அது நகர மன்றங்களில் அதிகமாக இருக்கிறது. மாநகராட்சியிலும் அதே நிலை தான் இருக்கிறது என்று இங்கே கூறப்பட்டது.

அந்த நிலைகள் மாறி குழந்தைகள் வசதியாக படிப்பதற்குரிய
சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஒன்றியங்களின்
இணைந்து பணி செய்த நிலைமாறி இன்றைக்கு அரசாங்கத்
தினுடைய தயவினாலும், மாண்புமிகு அமைச்சர்அவர்கள்
கொண்டு வந்தத் திட்டத்தின் காரணமாகவும் அவர்கள்
அரசாங்க ஊழியர்களாக மாற்றப்பட்டு இருக்கிறார்கள். அவர்
கள் நேர்முகமாக கல்வித் துறையின் நிர்வாகத்தில் இருப்பதால்
ஆசிரியர்கள் கிராமங்களில் சரியான நிலையில் இல்லை. அவர்கள்
செய்யக்கூடிய பணிகள் சரியாக இல்லை என்று தான் கூற
முடியும். கிராமங்களில் பஞ்சாயத்துக்களில், பஞ்சாயத்து ஒன்றி
யங்களில் இணைக்கப்பட்டிருந்த போது, அது ஒரு பொது
நோக்கோடு, தூய்மையான நோக்கத்தோடு இருக்கவேண்டு
மென்று ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு மாற்றப்பட்டுவிட்ட
தால் ஆசிரியர்கள் தங்களுடைய கடமையை ஏதோ ஊதியத்
திற்கு பணி செய்வதைப் போலத் தான் செய்கிறார்கள்.
தொண்டோ, தொழிலோ என்று கேள்வி வருகிறபோது தொண்டு
என்ற நிலை மாறி அங்கே அவர்கள் குழந்தைகளுக்கு சரிவர
பாடங்களை போதிக்காத நிலை இருந்து வருகிறது. இதை
மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒன்
றியத்தோடு நிர்வாகப் பொறுப்புகள், மேற்பார்வைகள் இணைந்
திருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரி
சீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்
கான வழிமுறைகளை அரசு செய்யும் என்றும் நான் நம்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் கல்வியின் நிலை மாணவர்களுக்கு
உயர்ந்தாலும், வேலை வாய்ப்பு இல்லை என்ற நிலை சமுதாயத்
தில் ஏற்பட்டு இருக்கிறது. ஏதோ கல்வியில் மாற்றம் கொண்டு
வரப்போகிறோம், தொழில் கல்வி ஆரம்பிக்கப்போகிறோம்
என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட பல்வேறு இடங்
களில் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டு ஆரம்
பிக்கப்போகிறீர்களா அல்லது எப்போது துவக்கப்போகிறீர்கள்
என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும்
என்று கேட்டுக்கோள்கிறேன்.

கல்லூரிக் கல்வியிலும், உயர்நிலைக் கல்வியிலும் அவர்களுக்கு
தொழில் கல்வியை இணைத்துக்கொடுத்தாலும், அவர்களுக்கு
அப்படிப்பட்ட தொழில் கல்வி பாடங்களை போதிப்பதற்கான
ஆசிரியர்கள் இல்லை என்ற நிலைமை இருப்பதால், அதைப்
போக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும்
இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





தொழில் கல்வியைப் பொறுத்த வரையில், ஐ.டி.ஐ., பாலி
டெக்னிக் போன்றவைகளை காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில்
ஏராளமாக ஆரம்பிக்கப்பட்டன. அதைக்கூட அரசியலாக்கி
அதை ஏளனம் செய்தார்கள். இன்றைக்கு அங்கே படித்த
மாணவர்கள் தான் தங்கள் காலிலேயே நின்று தங்கள் ஊதியத்தை
சம்பாதிக்கும் நிலையில் இருக்கிறது. ஆகவே, ஆங்காங்கு இப்
படிப்பட்ட தொழில் கல்விக்கூடங்கள் வேண்டும் என்ற
நிலை மக்கள் மத்தியில் இருக்கிறது. பாலிடெக்னிக்குகள்
தனியார் துறையில் 10-12 ஆரம்பிப்பதற்கு சென்ற ஆண்டு
அனுமதி வழங்கப்பட்டது. ஆகவே, இப்படிப்பட்ட பாலிடெக்
னிக்குகளை ஒவ்வொரு தாலுக்கா மட்டத்திலும் ஆரம்பிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, போளூர் பகுதியில் ஒரு
பாலிடெக்னிக் அமைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.
ஐ.டி.ஐ. பொறுத்தவரையில் 10-வது படித்த மாணவர்களுக்கு
இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் அங்கே ஒரு
தொழிலைக் கற்றுகொண்டு அதன் மூலம் சுயமாக வேலைசெய்து
பிழைத்துக்கொள்ள முடிகிறது. அல்லது ஒரு தொழிற்சாலையில்
வெல்டராகவோ பிட்டராகவோ சேர்ந்து வேலை செய்ய முடி
கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஐ.டி.ஐ. போன்றவற்றையும்
ஆங்காங்கு நிறுவுவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும். (மணி
அடிக்கப்பட்டது).

என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் சொல்லி முடித்துக்
கொள்கிறேன். வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரை
யில், ஏறத்தாழ 10 கல்லூரிகள் இருந்தாலும் அங்கே ஒரு
பல்கலைக்கழகத்தின் கிளை இல்லை. பல்கலைக் கழகத்தின்
கிளை ஏதோ ஒன்று இரண்டு துறைக்கு ஆரம்பிக்கப்பட்டதாக
அறிகிறேன். அதுபோன்ற நிலையில்லாமல், அங்கே பல்கலைக்
கழகத்தின் கிளை எல்லாத் துறைகளிலும் ஆரம்பிக்க முன்வர
வேண்டும். அங்கே 10 கல்லூரிகள் இருப்பதால் அதைச்செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயப் பல்கலைக்
கழகத்தின் கிளை ஒன்றையும் அங்கே ஆரம்பிக்கவேண்டும்.
அந்த மாவட்டம் விவசாயத்திலே பலதரப்பட்ட பணிகளைச்
செய்து வரும் மாவட்டம். ஆகவே, அங்கே ஒரு விவசாயப்
பல்கலைக் கழகத்தின் கிளை அமைப்பது பொருத்தமாக இருக்கும்
என்று சொல்லிக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், சம்பள விகி
தங்களில் மாற்றம் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அவற்றைச்
சமப்படுத்தி அறிவிக்கவேண்டும். பல்கலைக் கழக விரிவுரையா
ளருக்கு யு.ஜி.சி. ஸ்கேல் 700 என்ற நிலையில் இருந்து 1,100
என்று ஆரம்பித்து இருக்கிறீர்கள், மதுரை காமராஜர் பல்கலைக்
கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் போன்றவற்றில் பணி
யாற்றுகிறவர்களுக்கு 7—1—1984-க்கு முன்னால் இருந்தவர்
களுக்கு 1,100 என்றும், மற்றவர்களுக்கு எல்லாம் அது இல்லை
என்ற நிலையையும் ஏற்படுத்தி இருக்கிறீர்கள். அவர்கள் ஒரு

[திரு. இல. பலராமன்] [1984 மார்ச் 15

போராட்டத்தில் இறங்கி இது பற்றி வற்புறுத்துவதற்கு இடம் கொடுக்காமல் அதை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை இப்போதே எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

நடுநிலைப் பள்ளிகளில் புலவர் பட்டம் பெற்றவர்களும், தலைமை ஆசிரியராகப் பணியாற்றலாம்; பட்டதாரி ஆசிரியர் களும் தலைமை ஆசிரியராகப் பணியாற்றலாம் என்று நீங்கள் ஒரு உத்தரவு போட்டிருக்கிறீர்கள். அதனால் அங்கே நல்லமுறையில் நீண்டகாலமாகப் பணியாற்றிவருகிற செக்கண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ஒரு சோர்வு மனப்பான்மை ஏற்படுகிறது. அதனால் ஒரு பள்ளியிலே செக்கண்டரி கிரேடு ஆசிரியர் தலைமை ஆசிரியராகப் பணியாற்றலாம்; ஒரு பள்ளியிலே பட்டதாரி ஆசிரியர் தலைமை ஆசிரியராகப் பணியாற்றலாம் என்ற நிலை நடுநிலைப் பள்ளிகளில் இருப்பதை மாற்றியமைத்து, ஒரு நல்ல கொள்கையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

எங்கள் பகுதியில் போளூர் வட்டத்தில் குப்பம் கிராமத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாளாக இருந்துகொண்டிருக்கிறது. கண்டமங்கலத்திற்கும், குப்பத்திற்கும் இடையில் ஏறத்தாழ 7 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆண்களும், பெண்களும் இந்த 7 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்று கல்வி பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே குப்பத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டு மென்று கேட்கிறார்கள். அதற்குத் தேவையான பணத்தைக் கட்டி இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. எனவே விரைவிலே அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று சந்தவாசல் என்ற இடத்தில் இருக்கிற பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அதை பரிசீ லிக்கவேண்டும்.

போளூர் உயர்நிலைப்பள்ளியில் ஷிப்ட் முறை இருக்கிறது. இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. இட நெருக்கடியைச் சமாளிக்க மாலைக்கால படிப்பை ஆரம்பித்திருக்கிறார்கள். மேலும் இட நெருக்கடியைக் குறைக்க அல்லி நகரப் [illegible]ன் ஒரு பகுதியில் ஒரு உயர்நிலைப் பள்ளியை உருவாக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இட வசதி இல்லாமல் இருக்கிற காரணத்தால் களம்பூர் பகுதியில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) களம்பூர், புதுப்பாளையம், இண்டிவனம், சந்தவாசல், கேளம்பாடி போன்ற இடங்களில் உள்ள பள்ளிகளுக்குக் கட்டட வசதி போதுமான அளவு இல்லை. பெரு



1984 மார்ச் 15] [திரு. இல. பலராமன்]

மழையின் காரணமாக கட்டட வசதி இல்லாத அந்தப் பள்ளிகள் பல நாட்கள் மூடப்பட்டிருந்தன என்று அந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, கட்டட வசதி இல்லாத பள்ளிகளுக்கு எல்லாம் உடனடியாக கட்டட வசதியை நல்ல முறையில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டு 20 ஆண்டுகள் ஆகியிருந்தாலும் ஒரு கட்டடம் கூட கட்டப்பட வில்லை. அவற்றிற்கெல்லாம் உடனடியாக கட்டடம் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாப் பள்ளிகளுக்கும் நல்லமுறையில் கட்டட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, நல்ல கல்வி முறையை உருவாக்கி, நல்ல முறையில் மாணவர்கள் கல்வி கற்று — பண்பட்ட கல்வியை மாணவர்கள் கற்று பண் பட்ட மாணவர்களாகத் திகழ தமிழ்நாட்டில் [illegible] கின்ற மாணவர்களாகத் திகழ, செலவினங்கள் அதிகமானாலும் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி, மக்களைப் பண்பாடு உள்ள வர்களாக ஆக்க வேண்டுமென்று கோரி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக் கின்ற கல்வி மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு வந்த பிறகுதான் கல்வித் துறையிலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறக்க மாட்டார்கள்; மறுக்க மாட்டார்கள். முந்தைய ஆட்சி யிலே கல்விக்காக ஒதுக்கிய தொகையை விட இப்போது மாண்பு மிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலே 2 மடங்கு, 3 மடங்கு அதிக மான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத் தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1973-74 ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சியில் 160 கோடி ரூபாய் கல்விக்கு ஒதுக்கப்பட்டது. 1975-76 ஆம் ஆண்டில் 126 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு [illegible] ஆட்சியில், 1983-84 ஆம் ஆண்டில் 368 [illegible] 1984-85 ஆம் ஆண்டில் 402 கோடி ரூபாயும் கல்விக்காக ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் இலட்சிய கீதமான அடிப் [illegible] இருக்கிறது [illegible] முறைப்படுத்தி [illegible] அரசின் [illegible] இந்த நேரத்தில் மாண்புமிகு புரட்சித் [illegible] கட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் காமராஜர் ஆட்சியிலேதான் கல்வி வளர்ச் சிக்கு வித்திடப்பட்டது. அடிக்கல் நாட்டப்பட்டது என்று சுட்டிக் காட்டினார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. அன்றைய தினம் காமராஜ் அவர்கள் வித்திட்டுச் சென்ற அந்தப் பணியை, அவர்கள் அடிக்கல் நாட்டிச் சென்ற அந்தப் பணியை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு தொடர்ந்து செய்து, கல்வியிலே மறு மலர்ச்சி காணவேண்டுமென்று காமராஜ் அவர்கள் கண்ட கனவை புரட்சித் தலைவர் அரசு நனவாக்கி வருகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல்வேறு மாநிலங்களை ஒப்பிட்டுப்பார்ப்போமேயானால் தமிழக மாநிலம்தான் கல்வி வளர்ச்சியிலே இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பது நமக்கெல்லாம் பெருமையாக இருக் கிறது. இது புரட்சித் தலைவர் அரசின் சாதனை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, முதியோர் கல்வியிலும் நம்முடைய தமிழகம் தான் முன்னோடியாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதேபோல் கிராமங்கள் கல்வி வளர்ச்சி அடைய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் பலராமன் அவர்கள் குறிப்பிட்டார் கள்.

இங்கே புகுமுக வகுப்புகள் நகரங்களிலே இருப்பதைப்போல், அந்தந்த மாவட்டங்களிலே இருப்பதைப் போல், கிராமங்களி லேயும் அந்தந்த உயர்நிலைப் பள்ளியிலே கொண்டு வந்தது புரட்சித் தலைவருடைய அரசுதான். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் பிளஸ் 2 வகுப்புகளை, கல்லூரியிலே படிக்கக்கூடிய அந்த வகுப்புகளை அந்தந்த உயர்நிலைப் பள்ளிகளிலே நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு திட்டத்தை தமிழக அரசு தான் கொண்டு வந்தது. இந்த பிளஸ் 2 வகுப்புகளை அந்தந்த கிராமத்திலேயே நடைமுறைப்படுத்தி வருகிறது. கிராம மறுமலர்ச்சித் திட்டம் என்ற முறையிலே ஜூனியர் கல்லூரிகளாக இந்த பிளஸ் 2 வகுப்புகள் திறம்படச் செயலாற்றி வருவதை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம்.

அடுத்ததாக, அறிவு வளர்ச்சியிலே விஞ்ஞான வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காக 1100 விஞ்ஞான ஆய்வுக் கூடங்களை இந்த அரசு சென்ற ஆண்டு கட்டி முடித்து இருப்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.





அதேபோல பழைய கட்டிடங்களை ரிப்பேர் செய்து அவை களை மாற்றி அமைக்க வேண்டுமென்று, காமராஜர் அவர்கள் சொன்னதை எல்லாம் செய்யவேண்டுமென்று உறுப்பினர் அவர் கள் குறிப்பிட்டார்கள். தன்னிறைவுத் திட்டத்திலே, இந்த மாதிரி கிராமங்களிலே இருக்கின்ற பல கட்டிடங்கள் ரிப்பேர் செய்து கட்டப்பட்டு வருகின்றன. கிராமங்களிலே புதிய கட்டிடங்களை, தன்னிறைவுத் திட்டத்தை, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தைப் பயன்படுத்தி நிரந்தரமான கட்டிடங் களை, ஒவ்வொரு கிராமத்திலேயும் ஒரு பள்ளிக்கூடக் கட்டிடத்தையாவது கட்ட வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே உறுப்பினர் களுக்குச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய ஒரு சில கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்கள் தரைபோய்விட்டும், ஓட்டை கூரைகளாகவும் ரிப்பேர் செய்யப்படாமல் பழுதடைந்த நிலை யிலே இருக்கின்றன. அதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை தீட்டி, இந்த அரசு பழைய பள்ளிக்கூடங்களைச் சீர் செய்து வரு கின்றது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதைப்பற்றிச் சொன்னார்கள். அரசு ஊழியர்களாக அனைத்து ஆசிரியர்களையும் ஆக்கியதற்குப் பிறகு ஒருசில இடங்களில், எல்லா இடங்களையும சொல்ல முடியாது, ஒருசில இடங்களில் ஆசிரியர்கள் பாடங்களை சரியாக நடத்துவதில்லை.

அடுத்து, ஏ. ஈ. ஓ. அலுவலகம் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்கின்றது. அந்த ஏ.ஈ.ஓ. அலுவலகத்திற்கு வாகன வசதி இல்லை. 20, 25 மைல்களுக்கு அப்பால் சென்று, அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்கள் ஒழுங்காக வருகிறார்களா, பள்ளிக் கூடங்கள் சரிவர நடைபெறுகிறதா என்று பார்க்க வேண் டும். அதற்காக ஏ.ஈ.ஓ.-க்கு ஒரு சாதாரண வண்டியையோ அல்லது சிறிய வண்டியையோ கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் பள்ளிகளைப் பராமரிப்பதற்கும், பள்ளிகளை நல்லமுறையிலே சீரமைப்பதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல கிராம மறுமலர்ச்சியைப் பற்றிச் சொன்னார் கள். கிட்டத்தட்ட 4,500 கிராம நர்சரிப் பள்ளிகள் இருக்கின் றன. இவற்றை இந்த அரசு துவங்கி வெற்றிகரமாக நடை முறைப்படுத்தி வருகிறது. பிஞ்சு உள்ளத்தில் ஜாதிமத உணர்வை அறவே அற்றுப்போகும்படியும், குடும்ப பாசம், சகோதரப் பாசம் என்ற அடிப்படையில் கல்வியைப் பெறுவதற்

அதேபோல், ஜீவா பெயரில், பட்டுக்கோட்டை அழகிரி பெயரில், நேசமணி பெயரில் போக்குவரத்துக் கழகங்களுக்கு பெயர் சூட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இன்று அண்ணாவின் பெயரிலும் காமராசர், சிதம்பரனார், தில்லையாடி வள்ளியம்மை போன்றோர்களின் பெயரில் பல புதிய மாவட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதே போன்று அன்னை தெரசா பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தை யும் உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், புரட்சித் தலைவர் அவர்கள் நாட்டுக்காக வாழ்ந்தவர்களுக்கும், உழைத்தவர்களுக்கும், தொண்டு உள்ளம் கொண்டவர்களுக்கும் பெயர் சூட்டி அழகு பார்க்கிறார்கள் என்றுதான் சொல்லமுடியும். ஆனால் இதற்கு முந்தைய ஆட்சியிலே என்ன செய்தார்கள் என்பதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். நெல்லுக்கும், புல்லுக்கும் தங்களுடைய பெயரையும், குடும்பத்தவர்கள் பெயரையும், கருணா, அஞ்சுகம் என்ற பெயர் வைத்து அழகு பார்த்தவர்கள் தமிழகத்திலே இருந்திருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள், நாட்டுக்காக, நாட்டு மொழிக்காக பாடுபட்ட தலைவர்களின் பெயர்களை இன்றைக்கு சூட்டுகின்ற நிலைமையை தமிழக மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டும் 57 ஆயிரம் பேர்கள் தொழில் கல்வியைப் பயின்று கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு பல்வேறு மாநிலங்களை ஒன்று சேர்த்துப் பார்த்தால் கூட இந்த அளவிற்கு இருக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. அந்த அளவிற்கு தமிழகம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங் களுக்கும் வழிகாட்டியாக இருக்கிறது. தொழில் கல்வியும் மாண வர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று கல்வி முறையில் மாற்றங் கள் கொண்டு வருவது இந்தியாவிலே தமிழகம்தான் முதலில் நிற்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

அடுத்து, சட்டக் கல்வியை 5 ஆண்டுக் காலம் என்று மாற்றி ஒரு புதுமையை புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தியிருக் கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் வழக்குமன்றத்திலே தமிழிலே வாதாடவும், தீர்ப்பு அளிக்கவும் வேண்டும் என்று நடைமுறைப்படுத்தும் இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோல் தமிழிலே பட்டப் படிப்பு படிக்கிறவர்களுடைய எண்ணிக்கை தற்போது குறைந்து கொண்டு வருகிறது என்று சொல்கிறார்கள். தமிழ் மொழியில் பட்டப் படிப்பு மேற் கொள்கிறவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, தலைமைச் செயலகத்தில் நடமாடும் அனைத்துக் கோப்புகளும் தமிழிலே மாற்றப்பட வேண்டும். வெளி மாநிலங் களோடும், டெல்லியோடும் தொடர்பு கொள்ளும்போது வேண்டுமானால் ஆங்கிலத்திலே வைத்துக் கொண்டு, மற்ற எல்லாக் கோப்புகளையும் தமிழிலே நடைமுறைப்படுத்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பட்ஜெட் விவாதத்திலும், ஆளுநர் உரை மீதான விவாதத்திலும் இந்த அரசு தமிழிற்காக எதுவும் செய்யவில்லை என்று தி.மு.க. நண்பர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் தென் மாநில முதலமைச்சர்களைக் கூட்டி, சாதனையை ஏற்படுத்தி, இந்தியை தென் மாநிலங்களில் புகுத்தக் கூடாது, நேரு சொன்ன உறுதி மொழி சட்டம் ஆக்கப்பட வேண்டும் என்று சொல்லி அதற்காக தனி நடவடிக்கையை எடுத்து வரலாற்றிலே இடம் பெற்றிருக் கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை இந்த நேரத் திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் எந்தக் காலக் கட்டத்திலும் இந்தியை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று இந்தச் சட்டமன்றத்திலும் மாண்பு மிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் பல தடவை சொல்லியிருக்கிறார்கள். இந்தியை எப்போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம், இரு மொழிக்கொள்கை தான் அண்ணாவின் கொள்கை என்று பல முறை டெல்லியிலும், முதலமைச்சர்கள் மாநாட்டிலும் பேசியிருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், குறை சொல்ல வேண்டும், குற்றம் சாட்ட வேண்டும் என்ற எண்ணத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

நான் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் களைக் கேட்கக்கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் மொழியைக் காக்க பாடுபடுவோம் என்று சொல்கிறீர்களே, உங்களிடம் கேட்க விரும்புகிறேன். டெல்லியிலே பாராளுமன்றத்திலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அதிலே, அகில உலகம முழுவதும் சுற்றுப் பயணம் செய்து இந்தி மொழி எந்த அளவுக்கு வெளி நாட்டிலே பரவியிருக்கிறது என்பதைக் கண்டு ஆராய்வதற்காக அமைக்கப் பட்ட அந்தக் குழுவிலே உங்கள் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கள் வெங்கா எம்.பி. அவர்களும் முருகையன் எம்.பி. அவர்களும் உறுப்பினர்களாகி சுற்றுப் பயணம் செல்வதற்கு முன், சென்னை யிலே உட்லண்ட்ஸ் ஓட்டலில் வருந்து கொடுத்து பாராட்டு விழா கொடுத்து கலைஞர் அவர்களை வழி அனுப்பி வைத்தார் களே, அது ஏன் என்று தமிழைப் பற்றி பேசுகிற உங்களிடம இந்த நேரத்திலே கேட்கக்கடமைப்பட்டிருக்கிறேன்.

சிந்துகின்ற செங்குருதி செந்தமிழுக்கு என்றால், இந்த செந் தமிழ் நாடே சிகப்பாகட்டும் என்று தன்னுடைய இன்னுயிரை ஈத்து அன்னை தமிழுக்காக மாண்டானே அந்த ராசேந்திரன்;

சாவிலும் தமிழ் படித்துச் சாக வேண்டும், என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும் என்று அன்னை தமிழுக்காக மடிந் தானே சின்னசாமி, சிவலிங்கம, அவர்களுடைய ஆத்மா உங்களை மன்னிக்குமா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்களா தமிழைக் காப்பாற்றப் போகிறீர்கள்? பேசுவதற்கு வேண்டுமானால் சொல்லலாமே தவிர, அதை நடைமுறைப்படுத்த தவறியிருக்கிறீர்கள். இந்தியைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப் பட்ட பாராளுமன்ற குழுவில் இடம் பெற்று தி.மு.க. உறுப்பினர் கள் வெளிநாடு செல்ல வேண்டுமா? அந்தப் பயணத்திற்கு கலைஞர் அவர்கள் விருந்து கொடுத்து பாராட்டி வழி அனுப்ப வேண்டுமா என்று கேட்கிறேன்.

ஆனால் தமிழுக்கு அரியாசனம் அமைப்பதிலே, தமிழுக்காக பல்கலைக் கழகம் அமைப்பதிலே, உலகத் தமிழ் மாநாட்டை அமைத்து, உலகத் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தியதிலே ஒரு தனி வரலாற்றையே படைத்த பெருமை புரட்சித் தலைவர் அவர்களைச் சார்ந்திருக்கிறது. முத்தமிழ்க் குடிமகன் அண்ணா வின் வாரிசாக புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டில் தமிழை வளர்த்து பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே, கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய்க்கு மேல் அன்னியச் செலாவணியை ஈட்டுத் தருகிற தோல் பதனிடும் தொழிற்சாலைகள், ஆம்பூர், வாணியம்பாடி, ராணிப் பேட்டை, திருப்பத்தூர் பகுதிகளில் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டத்தில் லெதர் டெக்னாலஜி இன்ஸ்டிட்யூட் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல பாலிடெக்னிக்களின் விவரம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பலராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இராம நாதபுரம் மாவட்டத்தில் 6 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. கோவையிலே 7 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. சென்னை யிலே 6 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. வட ஆற்காடு மாவட் டத்தில், 21 தொகுதிகள் கொண்ட அந்த மாவட்டத்தில் ஒரே ஒரு பாலிடெக்னிக்தான் இருக்கிறது. அது வேலூரில் இருக்கிறது. எனவே வட ஆற்காடு மாவட்டத்தில் 2 அல்லது 3 பாலிடெக்னிக்கு களை அமைக்க அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய தொகுதியிலே அதில் ஒன்றை அமைத்தால் மிக நன்றாக இருக்கும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர் களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஆரணித் தொகுதியிலே தலைமை லைப்ரரி இருக்கக்கூடிய அந்த இடத்தை 6 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றிக் கொண்டேயிருக்கிறார்கள். எனவே விரைவில் ஆரணி லைப்ரரிக்கு புதிய கட்டிடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்





என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பல ராமன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, எல்லா விவசாயப் பொருள்களும் விளையக் கூடிய வட ஆற்காடு மாவட்டத்தில் அரசு ஏற்படுத்தியிருக்கும் விவசாயக் கல்லூரியை என் ஊரில், ஆரணியிலே ஏற்படுத்த வேண்டும் என்பதை கோரிக்கையாக மாண்புமிகு அமைச்சரின் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

ஆரணி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 19 ஆண்டுக்காலமாக 9-வது 10-ஆவது வகுப்புகளுக்கு கட்டிடம இல்லாமல் சிரமமான முறையில் குழந்தைகளும், பெண்களும், வெளியிலே மரத்தடிகளில் படிக்கக்கூடிய நிலை இருந்தது. தற்சமயம் அங்கே 9 அறைகளை 2.50 இலட்சம் ரூபாய்க்கு பொதுமக்களிடம் வசூல் செய்து கட்டி முடித்திருக்கிறோம். அதிலும் 6, 7 அறைகள் கட்ட முடியாமல் இருக்கிறது. அவர்கள் கூரை வேய்ந்த கட்டிடங் களில் இருக்கிறார்கள். அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு உரிய கட்டிடங்களை அரசு கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மேற்கு ஆரணி ஒன்றியத்தின் அலுவலகமும், ஏ.இ.ஓ. அலுவலகமும் ஆரணி நகரத்திலேயே இருந்தது. ஆரணி நகரத்தைச் சுற்றி நிறைய பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இப்போது ஏ.இ.ஓ. அலுவலகத்தை நடுப்பந்தல் என்னும் இடத்தில் ஆரணியிலிருந்து 8 மைல் தள்ளி வைத்திருக்கிறார்கள். இதனால் ஆசிரியர்களுக்கும் பிரச்சினை, ஏ.இ.ஓ. அவர்களும் அடிக்கடி பள்ளிகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்து சோதனை இடுவதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. அங்கேயிருந்து ஊராட்சி ஒன்றியம் 20, 25 மைல் இருக்கிறது. மேற்கே 20 மைல் இருக்கிறது.

(முற்பகல் 11–40)

ஆனால் வடக்கே 8 மைல் தொலைவிலே உள்ள இடத்திற்கு அந்த அலுவலகத்தை மாற்றினால் என்ன பயன்? ஆரணியிலே அதற்கு வேண்டிய இடம் இருக்கிறது. கட்டடம் இருக்கிறது. ஆகவே அந்த அலுவலகத்தை ஆரணியிலே வைக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு கல்வி மானியத்தை வரவேற்று என் உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக்கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கொடுத்து இருக்கிற புத்தகத்திலே மாநிலத் திட்டக் குழு கல்வித் துறைக்கும் பள்ளிக் கல்விக்கும் உள்ள சில குறிக் கோள்களை எழுதியிருக்கிறார்கள். அந்தக் குறிக்கோள்கள் முறையாக நிறைவேற்றப்படுகின்றனவா, அந்த நோக்கம்

நிறைவேறுகின்ற வகையிலே கல்வித் துறை செயல்படுகிறதா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது ஆளுந்தரப்பிலே இருந்து சில கருத்துக்களைச் சொன்னார்கள். ஏதோ அண்ணா தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் ஏராளமான பள்ளிக் கட்டடங்கள் கட்டி, கல்லூரிக் கட்டடங்கள் கட்டித் திறந்ததைப் போலவும் அதற்கு முன்னாலே இருந்த காங்கிரஸ் ஆட்சியிலேயும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் பள்ளிக் கூடங்களோ கல்லூரிகளோ திறக்கப்படாதது போலவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது உண்மைக்குப் புறம்பானது என்பதை நண்பர்கள் உணரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கல்விக்காக குறைவான தொகைதான் ஒதுக்கப்பட்டிருந்தது என்றும் அண்ணா தி.மு.க. ஆட்சியிலே ஏராளமான தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது என்றும் பொருள்படுமாறு பேசினார்கள். உண்மையில், அப்படிப் பேசுவது பொருத்தமாக இருக்க முடியாது. அன்றையதினம் வரவு—செலவுத் திட்டத்தினுடைய மொத்தத் தொகையில் கல்விக்கு ஒதுக்கிய தொகை எந்த விகிதாச்சாரத்தில் அமைந்திருக்கிறது என்பதை ஒப்பு நோக்கிப் பார்த்தால் புரியும். அன்றையதினம் இருந்த வருமானம், மக்கள் தொகை, விலைவாசி, மொத்தச் செலவு இவைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்காமல் புள்ளிவிவரத்திலே ஒரு பகுதியை மட்டும் எடுத்துச் சொல்வது முறையாகாது என்பதை அந்த நண்பருக்குத் தெரிவித்துச்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். கல்வியில் தமிழகம்தான் இந்தியாவிலே இரண்டாவது நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எந்த ஆதாரத்தை வைத்துச் சொன்னார்களோ தெரியவில்லை. நாடாளுமன்றத்திலே திரு பிரணாப் முகர்ஜி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன், கல்வியில் தமிழகம் இந்தியாவிலேயே 7-வது இடத்திற்கு வந்திருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது, எப்படி இரண்டாவது இடம் என்று எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள் என்று தெரிவிப்பார்களானால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டப்படிப்பும் தொழிற் கல்வியும் அதிகரிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு குறைவாக இருப்பதற்கு ஒருவேளை இதுதான் காரணமாக இருக்குமோ என்று நாங்கள் அஞ்சுகிறோம். ஏராளமானபேர் படித்து பட்டம்பெற்று அல்லது தொழிற் கல்வியைக் கற்றுக்கொண்டு வந்தார்கள்





என்றால் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டுமே, படித்து வருகின்ற அவ்வளவு பேர்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமே, படித்தவர்களின் எண்ணிக்கை ஏராளமாக வந்துவிடுமோ என்ற அச்சத்தினால்தான் அரசு மேற்படிப்பு வசதிகளை அதிகரிப்பதில் மெத்தனம் காட்டி வருகிறதோ என்ற என் ஐயப்பாட்டைக் குறித்து அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் விரும்புவது எல்லாம், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு வசதி வாய்ப்புகள் இருக்கிறதோ அவ்வளவையும் பயன்படுத்தி நம்முடைய மாணவர்கள் கல்வியைக் கற்க வசதி ஏற்படுத்தித்தரவேண்டும் என்பதுதான். அகில இந்தியாவிலே, ஏன் உலகம் பூராவும் அவர்கள் வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்வதற்கான வாய்ப்புக்களை அரசாங்கம் தங்குதடையின்றி தரவேண்டும், அதிலே முன்னணியில் அரசு நிற்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

சென்ற முறை இந்த கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் பேசியபோது சில கருத்துக்களைச் சொன்னார்கள். கல்வி, ஒழுக்கத்தை, பண்பாட்டை, தமிழ் உணர்வை வளர்ப்பதாக அமையவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இனத்தின் மேலே இருக்கிற பற்று, மொழியின்மேலே இருக்கிற பற்று, நாட்டின் மேலே இருக்கிற பற்று, தமிழ் உணர்வு, கல்வித் திட்டத்திலே அமைந்திருக்கிறதா என்பதை தெளிவுபடுத்த வேண்டும். இன்னும் சொல்லப்போனால் இலேசாக அது மங்கிக்கொண்டே இருக்கிறது என்று சொன்னால் அது தவறாக இருக்க முடியாது. குறிப்பாக ஒரு சில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேர்வு மனப்பான்மையில்தான் நாம் கல்வியை தந்து கொண்டு இருக்கிறோம். நான் தேர்வு மனப்பான்மை என்று சொல்வது கால் ஆண்டு தேர்வு, அரையாண்டு தேர்வு, முழு ஆண்டு தேர்வு ஆகிய நேரங்களில் தேர்வுக்காகவே பாடங்களைப் படித்து அன்றைய தினம் தேர்வை எழுதிவிட்டு வெளியே வருகிற மனப்பான்மை வளர்கிறது. இது எங்கே போய் விடும் என்றால் எப்படியாவது காப்பி அடிக்கவேண்டும், எப்படியாவது இந்தக் கேள்வியை முன்கூட்டி தெரிந்துகொள்ள வேண்டும் என்று அந்த நேரத்து கல்வியாக மாறிவிடுகிறது. அன்றைய தினம் எழுதிவிட்டு மறுநாள் வந்தால் மறந்துவிடுகிற சூழ்நிலை இருக்கிறது. இன்று சிலயிடங்களில் காவல்துறையை வைத்துத் தான் அதாவது போலீஸை வைத்துத் தான் தேர்வை நடத்தவேண்டும் என்ற ஒரு அச்சமான சூழ்நிலை உருவாகிறது. இதுவெல்லாம் எதைக் காட்டுகிறது என்று சொன்னால் அந்த தேர்வுக்கு தயார் செய்கிற முறையை நாம் முழுமையாக மாற்றவேண்டும், மாணவர்கள் கல்வியில் நாட்டம் கொள்ளுகின்ற வகையில் இருக்கவேண்டும்.

இப்போது 1-வது முதல் 9-வது வரை மாணவர்களுக்கு 94 சதவீதம் கண்டிப்பாக பாஸ் போடவேண்டும் என்று விதி முறைகள் இருப்பதாக நான் அறிகிறேன். இது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும். வேண்டுமானால் நம்முடைய மாணவர்கள் அதிகமான எண்ணிக்கையில் பாஸ் செய்கிறார்கள் என்ற கருத்தில் இருக்கலாம். இவைகள் எல்லாம் அந்த மாணவர்களுக்கு முழுமையான கல்வியை தரவேண்டும் என்ற அந்த நோக்கத்தின் அடிப்படையில் இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாணவனும் வாராந்திர தேர்வு, மாதாந்திர தேர்வு என்று இப்படி எல்லாம் தொடர்ந்து ஆண்டு முழுவதும் அதிகமான நேரம் கவனத்தோடு படிக்கும்முறையை ஏற்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலையை உண்டாக்கினால் தான் அந்தக் கல்வியில் அதிக அக்கறை ஏற்படும். அப்படி இல்லை என்றால் அந்தக் கல்வி வெறும் தேர்வுநேரக் கல்வியாக மட்டும் தான் அமையும்.

Plutarch என்ற அறிஞர் சொல்கிறபோது ,'The mind is not a vessel to be filled but a fire to be kindled'' என்று சொன்ன வாசகத்தை இங்கே நினைவு கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

ஆனால் இப்போது நடைபெறுகின்ற சில நிகழ்ச்சிகள், அதை அரசாங்கமே வேண்டும் என்றே செய்கிறது என்றுகூட நான் சொல்லவில்லை. உதாரணமாக நம்முடைய மாணவர்களிடையே திரைப்பட உணர்வுகளை நிலைநிறுத்துகின்ற முறையில் பல காரியங்கள், பல கேள்விகள், பள்ளிகள் கல்லூரிகளில் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வளர்ந்துள்ளது. திரைப்பட உணர்வு மிகுந்த சூழ்நிலை உருவாகுமானால் நேற்றைய சரித்திரத்தைக்கூட நாம் மறந்தவர்கள் ஆவோம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியோர் மாணவர்கள் அரசியலிலே நேரடியாக பங்குபெறக் கூடாது என்றுதான் விரும்பினார்கள். அவர்களுடைய எண்ணம் மாணவர்களுக்கு அரசியலில் நாட்டம் அதிகமாக இருந்தால் கல்வியில் நாட்டம் குறையும் என்ற காரணத்தினால் அவர்கள் அப்படி விரும்பினார்கள். திரைப்படத்தில் மாணவர்களின் நாட்டம் அதிமாகச் செல்ல நாம் அனுமதித்தால் கல்வியில் அவர்களுடைய நாட்டம் குறையும் என்பதை நாம் உணர வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல நேரங்களில் சொல்வார்கள் '' நான் திரைப்படத்தில் நுழைந்ததற்குக் காரணம் என்னுடைய வறுமை, கல்லாமை, அதனால் தான் போனேன்'' என்று சொன்னார்கள்.





அவருக்குக் கிடைக்காத வாய்ப்பு கல்வி மற்றும் அவர் ஏழ்மையில் இருந்ததால்தான் அவர்களுக்கு அந்த நிலைமை உருவாகியது '' வேறு பெருமையோடு நான் திரைப்படத்தில் நுழைந்தேன்'' என்று அவர் சொன்னது கிடையாது.

மாணவர்கள் கல்வியில், திரைப்பட உணர்வுகளை பள்ளியிலும், கல்லூரியிலும் வளரவிடாமல் தலையிட்டு அவைகளை நிறுத்த வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் புரியும் என்று கருதுகிறேன்.

அதற்குப் பிறகு, பள்ளி வயதில் சிறார்கள் தொகை எவ்வளவு என்று Population கணக்கு கொடுத்து இருக்கிறார்கள். பள்ளிக் கூடத்தில் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை அதைவிட கூடுதலாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடிய வில்லை. அதில் குறிப்பிட்டு இருக்கிற பிள்ளைகளின் எண்ணிக்கை சரியா தவறா ? உண்மையானதா ? என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

தமிழ்நாடு கல்வி வளர்ச்சி என்ற புத்தகத்தில் 72-வது பக்கத்தில் வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை என்று போட்டு 6 வயதிலிருந்து 11 வயது வரை இருப்பவர்கள் 30.45 இலட்சம் என்று போடுகிறார்கள். இது 1973-74 ஆம் ஆண்டில். அது போலவே 1976-77ல் 31.93 லட்சம். 1982-83ல் 34.88 இலட்சம். 1983-84ல் 35.49 லட்சம். ஆனால் மொத்த எண்ணிக்கையை விட பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாகத் தெரிகிறது. அது எப்படி நியாயமாக இருக்கமுடியும் என்று எனக்குப் புரியவில்லை. 1973-74ல் பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை 30.64 லட்சம் என்று போட்டு இருக்கிறார்கள். அதை சதவீதத்தில் காட்டுகிறபோது பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம் 100.6 என்று போட்டு இருக்கிறார்கள். அதே மாதிரி 1976-77ல் 100.3 சதவீதம் என்று போட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது ஒவ்வொரு ஆண்டும் கேட்கப்படுகிற கேள்வி தான். நாங்களும் அதற்கு பதில் சொல்லிக்கொண்டு வருகிறோம். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் கேட்டுவிட்டதால் பின்னால் இந்தப் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய தேவை இருக்காது என்பதால் இந்த விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். முதலில் நாம் பள்ளி வயதைக் குறிப்பிடுகிறோம். 6 லிருந்து 14 வயது என்று குறிப்பிடுகிறோம். ஆனால் பள்ளிக்கூடத்தில் போய் பார்க்கிறபோது 5 வயது சிறுவர்களையும் சேர்த்து இருக்கிறார்கள் 16 வயது மாணவர்களையும் சேர்த்து இருக்கிறார்கள். ஆகவே 100-க்கு மேல் 100.6 சதவீதம் என்று வருமானால்

அதற்கு இது தான் காரணம். அது மட்டும் அல்லாமல் தமிழ் நாட்டில் 5 வயது முடித்தவர்களை எல்லாம் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொண்டு இருக்கிறோம்.

(முற்பகல் 11-50)

ஐந்து வயது உடைய மாணவர்களின் எண்ணிக்கையும் 15 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் இந்த ஆறு வயதிலிருந்து 14 வயது வரைக்கும் இருக்க வேண்டுமென்று உள்ள அந்த வகுப்புகளில் இருப்பதால்தான் 100 சதவீதத்திற்கும் மேலே நமக்குக் கணக்கு வருகிறது.

**திரு. கு. பா. பழனியப்பன் :** அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி.

சத்துணவு கொடுப்பதால் மாணவர்களின் எண்ணிக்கை ஏராளமாக இருக்கிறது என்று பல்வேறு கட்டங்களிலே அமைச்சரவர்களும் கூறியிருக்கிறார்கள்., இந்த அறிக்கையிலேயும் சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். பள்ளிகளில் அளிக்கப்படும் உணவு சத்துணவோ இல்லையோ, அந்தப் பிரச்னைக்கு இப்பொழுது நான் வரவில்லை. ஆனால் உணவு கொடுக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், அந்த மாணவர்களுக்குக் கல்வி என்ற உணவு கொடுக்கப்படுகிறதா என்றால், நிச்சயமாக இல்லை என்பதைத்தான் நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாணவர்கள் அங்கே வரும்பொழுது, சாப்பாட்டிற்காகவே வரும்படியான நிலைதான் தெரிகிறதே தவிர, படிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குகின்ற விதத்தில் இல்லை. ஆசிரியர்களுக்கு மேலேயிருந்து வருகின்ற சூப்பர்வைசிங் அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் நேராகச் சென்று சோறு சரியாகப் போடுகிறார்களா என்று பார்த்துவிட்டுச் சென்று விடுகிறார்களே தவிர, மாணவன் சரியாகப் படிக்கிறானா, காலையிலிருந்து மாலை வரையில் கல்வி பயிற்றுவிக்க முடிகிறதா என்று சரிபார்க்கின்ற சூழ்நிலை கிடையாது.

செவிக்கு உணவு இல்லாதபொழுதுதான் வயிற்றுக்குச் சிறிது ஈயப்படும் என்ற குறள் சொல்கிறது; ஆனால் நீங்கள் இன்றைக்கு அந்தக் குறளையே மாற்றி எழுதுகின்றீர்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, செவிக்கு உணவு இல்லாதபொழுது சிறிது வயிற்றுக்கு ஈயப்படும் என்பது மூன்று நேரமும் ஒழுங்காகச் சாப்பிடுகின்றவர்களுக்குத்தான். ஆனால், பசியாலும், பட்டினியாலும் வாடுகின்றார்களே அவர்களுக்குச் சத்துணவு முக்கியமான ஒரு தேவை.



**திரு. கு. பா. பழனியப்பன் :** அவர்களுக்கு மூன்று வேளையும் உணவு கொடுங்கள், அதைத் தவறு என்று சொல்லவில்லை. நான் சொல்வது, அத்துடன் கல்வியையும் அவர்களுக்குக் கொடுங்கள். அதை நிறுத்திவிடாதீர்கள் என்பதுதான்.

ஆசிரியர்கள் நியமனங்களைக் காலாகாலத்தில் செய்யாமல் பல்வேறு கட்டங்களிலே ஆண்டு முடிகின்ற நேரத்திலேகூட, அதாவது ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலேகூட ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதுவரையில் மாணவர்கள் எவ்வாறு கல்வி கற்க முடியும்? உயர்நிலைப் பள்ளிகளில் இரண்டே ஆசிரியர்கள் இருக்கின்ற நிலைமைகள்கூட பல்வேறு ஊர்களில் இருக்கின்றன. வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள தண்டராம்பட்டு போன்ற தொகுதிகளிலும், இப்படிப் பல்வேறு மாவட்டங்களிலேயும் நிலைமைகள் இருக்கின்றன. இதைத் தவிர்த்து, காலாகாலத்தில் ஆசிரியர் நியமனங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்திற்குப் பணம் இல்லையா? ஏன் உடனடியாக ஆசிரியர்களை நியமனம் செய்யவில்லை என்று தெரியவில்லை. முதன்மைக் கல்வி அதிகாரி நேர்முகத் தேர்வு நடத்தினாலும் பிறகு டைரக்டர் அளவில் அது வர வேண்டும். பிறகுதான் நியமனம் என்று சொல்கிறார்கள். இதுபோன்ற வீண் காலதாமதத்தை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்கான புத்தகங்களைக் காலாகாலத்தில் கொடுக்க வேண்டும். மாணவர்களுக்குக் கற்பலகைகளைக் கொடுக்கிறார்கள். கட்டுக்கட்டாக வருகின்ற நேரத்தில் அவை முழுமையாக இருக்கின்றன. ஆனால் மாணவர்களின் கைகளுக்கு வருகின்ற நேரத்தில் அந்தக் கற்பலகைகளின் சட்டம் வேறாகவும், உள்ளே இருக்கின்ற பலகை வேறாகவும் வந்து விடுகின்றன. எனவே, அவர்களுக்குத் தரமான கற்பலகைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு வெட்டுத் தீர்மானங்களின் மூலமும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே பேசுகின்ற உறுப்பினர்களாலும் ஒரே கருத்தாகவும் கூறப்படுகிறது. அதாவது பள்ளிக் கூடங்களுக்குச் சரியான கட்டிடங்கள் இல்லை என்ற கருத்தைத் தெளிவாக்கியிருக்கிறார்கள். உள்ளாட்சிகளிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்ற பள்ளிக் கட்டடங்கள் எவ்வளவு மோசமாக இருந்தாலும் அதைப் பராமரிக்கின்ற நிலைமை இல்லாமல் இருப்பதைப் பார்க்கிறோம்.

விழுப்புரம் தொகுதியில் ஆனாங்கூர் என்ற கிராமத்தில் இடிந்து விழுந்த நிலையில் இருக்கின்ற கட்டிடத்தை புகைப்படம் எடுத்துக்கூட அதிகாரிகளிடத்திலே கொடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனவே, உள்ளாட்சி மன்றங்களிலேயிருந்து எடுக்கப்பட்ட பள்ளிகளின் கட்டிடங்களுக்குப் பராமரிப்பு வேலைகளை உடனடியாகத் தொடர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கு. பா. பழனியப்பன்] [1984 மார்ச் 15

பொதுமக்கள் பணமும் கொடுத்து, இடமும் கொடுத்த பிறகு கூட இன்னும் பள்ளிக்கூடம் துவங்க அனுமதி கொடுக்கப்படாமல் கோப்புகள் நிலுவையில் இருந்து கொண்டிருக்கின்றன. இதனால் பள்ளிக் கூடங்கள் துவக்கப்படுவது காலதாமதமாகிக் கொண்டு வருகிறது. உதாரணமாக, கலசப்பாக்கம் தொகுதியில் அப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது. எனவே, அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில ஒதுக்கீடு தருவதிலேயும் அரசாங்கத்தில் காலதாமதம் ஏற்படுகிறது. அது சம்பந்தப்பட்ட கோப்புகள் அரசாங்கத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அப்படிப்பட்டவைகளில் விரைந்து முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மழலையர் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தில் தொடங்கி இருக்க வேண்டும். தனியார் அந்தப் பள்ளிகளை நடத்தி கொல்லை இலாபம் அடிக்கிறார்கள் என்பதை அரசாங்கத் தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதை அரசாங்கம் உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இதில் காலதாமதம் காட்டக்கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

புற்றீசல் போல ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், பாலிடெக் னிக்குகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் பயன் உள்ளவை களாக இருந்தால் வரவேற்க வேண்டியதுதான். சிறுபான்மை யோர் என்ற பெயரில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நடத்து வதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கிறது. நான் அதைக் குறையாகச் சொல்லவில்லை. ஆனால் இப்பொழுது என்ன தெரிவிக்கிறார்கள் என்றால், தேர்வு எழுத அனுமதி கொடுக்கப் படமாட்டாது. முறையாக இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அப்படியென்றால், பத்தாயிரம் ரூபாய், ஐயாயிரம் ரூபாய் என்று கொடுத்து தனியார் ஆரம்பித்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களே, அந்த மாணவர்களின் கதி என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

ஏமாந்து போனவர்களுக்கு அரசாங்கம் என்ன நிவாரணம் அளிக்கப் போகின்றது? அதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது?

அதைப்போலவே மேல்நிலைக் கல்வியைப் பொறுத்த வரை யில் டாக்டர் குழந்தைசாமி அவர்களின் கமிட்டி ஒரு அறிக்கை கொடுத்தது. சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ஆம் தேதி சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட அந்த அறிக்கை குறித்து அரசாங் கம் என்ன முடிவு எடுத்திருக்கின்றது? அதைத் தொடர்ந்து என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க இருக்கின்றது?



1984 மார்ச் 15] [திரு. கு. பா. பழனியப்பன்]

அடுத்து உயர்நிலைப்பள்ளியில் ஒரு பாடத்தைப் படித்த மாணவர்கள் அதன் தொடர்பான மேல்நிலைக் கல்வியைத் தொடருவதற்குரிய வாய்ப்பு இல்லாத நிலைமை இருக்கின்றது. ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். எனது ஊரில் ஒரு மாணவி வகுப்பிலே முதன்மையாகத் தேறினார் நர்சிங் கோர்ஸ் எடுத்து. ஆனால் அவளுடைய உயரத்திலே ஒரு சென்டிமீட்டர் இல்லை என்ற காரணத்தைச் சொல்லி மூன்று, நான்கு ஆண்டுகளாக அவளுக்கு மேல்நிலைக் கல்வியில் இடம் கிடைக்காத நிலைமை இருக்கின்றது. இப்படி முதன்மையாகத் தேறிய மாணவ மாணவிகளுக்கெல்லாம் அவர்கள் மேற்படிப் பினைத் தொடர்ந்து படிக்க முடியாமல் தடுக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது.

அடுத்து "தொழில் கல்வி வரும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள்" என்று சொன்னார்கள். அது என்றைக்கு வரப்போகின்றது என்பதைப் பற்றி தெளிவாகச் சொன்னால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து முறைசாராக் கல்வியும், வயது வந்தோர் கல்வியும் இன்றியமையாத ஒன்றாக இருப்பதன் காரணத்தால் அதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அறியாமை காரணமாகத்தான் பெரும்பான்மையான ஆபத்துக் கள் ஏற்படுகின்றன. ஏனென்றால், பத்திரிகைச் செய்திகளைக் கூட படிக்க முடியாத நிலைமையில் பலபேர் நகரத்திலும், கிரா மத்திலும் இருக்கிறார்கள். எனவே, மற்ற கல்வியோடு இந்த முறைசாராக் கல்வியும், வயது வந்தோர் கல்வியும் அதிகப்படுத் தப்பட்டால்தான் பெரும் பயன் ஏற்படும். ஆகவே, இதற்கு அர சாங்கம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோன்று அஞ்சல் வழிக் கல்வியினையும் நான் மிகுந்த அளவிலே வரவேற்கிறேன். அதன் அடிப்படையில் ஏராளமான பேர் கல்வி பெறுகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, பிற்பட்ட வர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கின்ற சலுகைகள் ஆகியவற்றை இந்த அஞ்சல் வழி கல்வித்துறை மூலமாகவும் கொடுக்கக்கூடிய வழிவகைகளைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் ரெகுலர் காலேஜில் இடம் கிடைக்காத சூழ்நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

அடுத்து தமிழ்க்கலை, மருத்துவச்சுவடுகள், போன்றவை ஏராளமான தனிப்பட்டவர்களின் சொத்தாக இருந்து கொண்டு இருக்கின்றது. அதன் காரணமாக அவை நாட்டுக்கும், மக்களுக் கும் பயன்படாத நிலைமை ஏற்படுகின்றது. அவற்றை எல்லாம் அரசுடைமையாக்கி, அந்தப் பழஞ்சுவடுகளை எல்லாம் தேடி எடுக்க வேண்டும். அவை பற்றி அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும்

[திரு. கு. பா. பழனியப்பன்] [1984 மார்ச் 15

அடுத்து நாடி ஜோதிடம் என்று ஒன்று இருப்பதாகவும், அது உண்மையாகத் தெரிவதாகவும் சொல்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலித்து அது உண்மையாக இருந்தால் விஞ்ஞான ரீதியாக உண்மையாக இருந்தால் அதுபற்றித் தெரிந்து வெளியிட வேண்டும் . . . . . . . . . . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, .ஜோதிடம் உண்மை என்று இதுவரை யாரும் சொல்ல வில்லை; விஞ்ஞான ரீதியாகவும் அது நிரூபிக்கப்படவில்லை. ஆகவே அதைப் பற்றி அந்த நிலையிலேதான் முடிவெடுக்க வேண்டி இருக்கின்றது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிய கோரிக்கை எழுப்புவது என்பதே சரியா என்பதை அவர்கள்தான் சிந்திக்கவேண்டும்.

**திரு. கு. பா. பழனியப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஜோதிடம் பார்க்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அது உண்மையாக இருக்குமானால் விஞ்ஞான ரீதியாகப் பொருத்தமாக இருக்குமானால் . . . . . . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அது உண்மையல்ல; அது உண்மையல்ல; அது உண்மையல்ல என்பதைத் தெரிவித்துக்.கொள்கிறேன்.

**திரு. கு. பா. பழனியப்பன்:** அடுத்து பாறையிலே தீட்டப் பட்ட ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருகின்றன. அவை 3,000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள ஓவியங்கள் என்று சொல்லப்படு கின்றது. ஆனால் அவை ஒரு தனி மனிதரின் முயற்சியாலே கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, அரசு அதுபற்றி தீவிரமாக முயற்சி செய்து அவற்றை நாட்டு மக்களுக்கு உணர்த்த .வேண்டும்,

அடுத்து, இந்தியாவிலே கடல் ஆராய்ச்சி செய்த சோவியத் நாட்டு நிபுணர்கள் '' ரிட்டில்ஸ் ஆஃப் த்ரீ ஓஷன்ஸ் '' என்ற புத்தகத்திலே தமிழர் நாகரீகம் தான் உலக நாகரீகத்திற்கு முந்தைய நாகரீகம் என்று தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். அதை எல்லாம் அரசாங்கம் குறித்து நாட்டுக்கு வெளியிடவேண்டும்,

அடுத்து ஆபாசப் புத்தகங்கள் கடைக்குக் கடை அதிகமாக இருக்கின்றன. பஸ் ஸ்டாண்டு போன்ற இடங்களில் அதிகமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட வியாபாரங்களைத் தடுக்கின்ற வகையிலே அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த வகையிலே அரசாங்கம் நாட்டு மக்களுக்கு நல்ல வழியைக் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசாங்கத்தின் பல்வேறு பொது நூலகங்கள் மூடி இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. திறந்திருக்கின்ற நூலகங் களிலும் போதிய புத்தகங்கள் இல்லாத நிலைமையில் இருப்பது



1984 மார்ச் 15] [திரு. கு. பா. பழனியப்பன்]

சரியாக கண்காணிக்கப்படவில்லை. சமீபத்திலே சென்னையில் நடைபெற்ற 7-ஆவது புத்தகக் கண்காட்சி நடக்கின்ற போது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். நூலகங்களில் பல ஆண்டுகளாக புத்தக சேகரிப்பு இல்லை. அறிவை வளர்க்கும் பணி குறைந்து விட்டது.

பல புத்தகங்கள் எழுதியவர்கள் மற்றும், பதிப்பாளர்களிடத் திலே சிறை வைக்கப்பட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலை மையை மாற்றவேண்டும். மக்களுக்கு அவை பரவ வேண்டும். அந்த நூலகங்களை எல்லாம் புதிப்பிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு களைச் செய்ய வேண்டும். புது நூல்களை எல்லாம் வாங்கு வதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து என்னுடைய விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரி யைப்பற்றி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலே கூட சொல்லி இருக்கின்றேன். அங்கே கணிதம் படித்த மாணவர்கள் பட்டப்படிப்பு படிக்கின்ற வாய்ப்பில்லை. ஆகவே, அங்கே பி.எஸ்.ஸி., (கணிதம்) படிப்பை ஏற்படுத்த வேண்டும். எம். ஏ., எம். எஸ். ஸி., போன்ற பட்ட மேற்படிப்புக்களை அங்கே ஏற்படுத்த வேண்டும். அடுத்து ஆராய்ச்சி செய்பவர்கள் ஆராய்ச்சி செய்கின்ற வகையிலே பல்கலைக் கழக மையத்தை ஏற்படுத்த .வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் ஆராய்ச்சி செய்கின்ற வாய்ப்பையும், அந்த கல்லூரி பல்கலைக் கழகம் போன்று வளர்ச்சி பெறுகின்ற வாய்ப்பையும் நாம் ஏற்படுத்த முடியும். விழுப்புரத்திலே இருக்கின்ற அரசினர் கலைக் கல்லூரி யில் இன்னும் ஓராண்டில் யார் ரிடையர் ஆகப் போகிறார்களோ, அப்படிப்பட்டவர்களை கல்லூரி முதல்வர்களாக ஆக்குகிறார்கள். 5, 6 ஆண்டுக்காலம் அங்கே இருந்து பணியாற்றக்கூடிய, ஆர்வ முள்ள, இளைஞர்களைப் போட்டால், அந்தக் கல்லூரியை முன் னேற்ற வாய்ப்பிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

இயக்குநரைப் போடும்போதுகூட, ஓராண்டுக்கு ஒப்பந்த அடிப்படையிலே போடுகிறார்கள். வயதானவர்களைப் போட் டால், அவர்கள் தங்கள் பணிக்காலத்தை எண்ணிக் கொண்டி ருக்கின்ற நிலைதான் உருவாகிறதே தவிர, அங்கேயிருந்து நல்ல முறையிலே பணியாற்ற வேண்டுமென்ற நிலை ஏற்படுவது இல்லை.

விழுப்புரம் கல்லூரிக் கட்டிடம் போதுமான அளவில் இல்லை. ஆகவே, புதிதாக தேவையான கட்டிடம் கட்டித் தரவேண்டு மென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. மி. வின்சென்ட்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர் களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப் பினைத் தந்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. மி. வின்சென்ட்] [1984 மார்ச் 15

தமிழக வரலாற்றில் புரட்சித் தலைவர் ஆட்சிதான் கல்வி வளர்ச்சியில் பொற்காலத்தை உருவாக்கிக் காட்டியிருக்கிறது என்பதை ஆதாரத்தோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆட்சிப் பீடம் ஏறிய 7 ஆண்டுக் காலத்தில் தொழில் நுட்பக் கல்விக்காக அண்ணா பல்கலைக் கழகம், அதே போல் பாரதியார், பாரதிதாசன் பெயரில் பல்கலைக் கழகங்கள், ஆண்களுக்கு நிகராகப் பெண்களை உயர்த்த வேண்டுமென்ற நிலையில் இன்றையத்தினம் புனிதவதி தெரசா பெயரால் பல்கலைக் கழகம், அதே போல் 63 ஆண்டுக் காலமாக தமிழகத்தில் தலைவர்கள் இராஜாஜி, பெரியார், அண்ணா, காமராஜர் போன்ற பெருந்தலைவர்கள் கண்ட கனவினை நிறைவேற்றும் வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகிய 5 பல்கலைக் கழகங்களை உருவாக்கிய பெருமை இந்த ஆட்சிக்கு உண்டு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றையத்தினம் இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் தமிழகம் கல்வித் துறையிலே 7-வது இடத்தைப் பெற்றிருக்கின்றது என்று குறிப்பிட்டார். ஆனால், இன்றைய சாதனையில் தமிழகம், இந்திய அளவில் ஒப்பிடுகின்ற நேரத்தில், முதலிடத்தைப் பெற்றிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொடக்கக் கல்வியில் இன்றையத்தினம் மறுமலர்ச்சியை உருவாக்கிக் காட்டி இருக்கிறது கல்வித் துறை.

கடந்த 7 ஆண்டுகளில் புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிற தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,188 ; அது மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு உயர்ந்த எண்ணிக்கை என்பதைநான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்,

அதே போல்தான் அகில இந்தியாவிலும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், 1984-85-ல் எய்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள இலக்கின்படி பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் விழுக்காடு 95 சதவீதம், 1-ஆவது முதல் 5-ஆவது வகுப்பு வரை என்று எண்ணிக்கை இருக்கிற நேரத்தில் 1982-83-ல் 96 சதவீதமாகவும், 1983-84-ல் 98 சதவீதமாகவும் உயர்த்திக் காட்டிய பெருமை நமது கல்வித்துறை—சபாஷ் என்று சொல்வதற்குத் தகுதி படைத்தது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே போல்தான் 6-ஆவது வகுப்பிலிருந்து 8-ஆவது வகுப்பு வரை நாம் எய்த வேண்டிய இலக்கு 50 சதவீதம் என்று இருப்பது, 1982-83-ல் 66 சதவீதமாகவும், 1983-84-ல் 70 சதவீதமாகவும் நாம் உயர்த்திக் காட்டி சாதனைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.



1984 மார்ச் 15] [திரு. மி. வின்சென்ட்]

அதே போல் தமிழ்நாட்டில் 1983-84-ஆம் ஆண்டில்—ஒரே ஆண்டில் அதிகமாக சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 3,82,000 பேர்கள். வரலாறு உண்டா ? எண்ணிப் பார்க்க முடிகிறதா ? என்று இதற்கு முன்னால் ஆட்சிப் பீடத்தில் இருந்தவர்கள் அதை நினைத்துப் பெருமைப்பட வேண்டுமே தவிர பொறாமை படக்கூடாது. ஏனென்றால், 3,82,000 மாணவர்களை ஒரு ஆண்டுக் காலத்தில் கல்வித் துறை அதிகமாக சேர்த்து இருக்கிறது என்றால், அதற்குத்தான் காரணம் சொல்கிறோம் சத்துணவு என்று. ஆனால் அதை குறைப்படுத்தி பேசுகிறார்கள் ; இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் கூட குறிப்பிட்டார். சத்துணவால் கல்வி வளரவில்லை, வயிறுதான் வளர்கிறது என்ற தொனியிலே அவர் பேசினார். ஆனால் கல்வித் துறைக்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் கல்வித்துறையில் பணிபுரிகிறார்களே தவிர சத்துணவிற்காக தனியாக ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அவர் எப்படி மறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. அதேபோல் தான் படிக்காமல் இடையிலே பள்ளியிலிருந்து நின்றுவிடுபவர்களுடைய விழுக்காடு 77–78-ல் 40 சதவீதமாக இருந்து, இன்றையதினம் அது 1982–83-ல் 25 சதவீதமாக குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் சத்துணவுதான். இந்த அளவில் கல்வித்துறையில் மேம்பாடு பெற்று, பல சாதனைகளை புரிந்த இந்த ஆட்சியை கட்டாயமாக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறார்கள். இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர், இங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படவில்லையா என்று கேட்டார்கள். நான் சொல்கிறேன், மூன்று ஆண்டு காலத்தில் 1980-லிருந்து 1983-க்குள் 5,154 தொடக்கப்பள்ளி கட்டிடங்களை 33 கோடி ரூபாய் செலவில் கட்டிய பெருமை, வரலாறு இந்தியாவில் தமிழ்நாட்டிலுள்ள புரட்சித் தலைவர் ஆட்சியைத் தவிர வேறு எந்த ஆட்சிக்கும் கிடையாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டு இந்த சட்டமன்றம் கூடிய நேரத்தில் சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எங்கள் ஊரிலே மரத்தடியில் வகுப்புகள் நடக்கின்றன ; எங்கள் ஊரிலே கூரைகளின் கீழே மாணவர்கள் பயின்று கொண்டிருக்கிறார்கள் ; எங்கள் ஊரிலே மழை வந்தால் ஒதுங்குவதற்கே மாணவர்களுக்கு இடமில்லை ; என்றெல்லாம ஏங்கிய ஏக்கக்குரல்கள் இன்றைக்கு மாறி பள்ளிக்கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு பேசிய இரண்டு மாற்றுக்கட்சி உறுப்பினர்கள் கூட அதை பேச முடியாத அளவிற்கு கூரைகள் வேயப்பட்டு, இன்றையதினம் ஒழுங்காக கல்வியறிவை பெறமுடிகின்ற அளவிற்கு, பள்ளிகள் எல்லாம் முழுமையாக கான்கிரட் போட்ட கட்டிடங்களைப் பெற்றிருக்கின்றன என்பதை நினைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் பூரிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[திரு. மி. வின்சென்ட்] [1984 மார்ச் 15

கடந்த 7 ஆண்டுக்காலத்தில் 525 உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இதனை சாதனை என்று ஏற்றுக் கொள்ளக் கூடாதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

1983-84 ஆம் ஆண்டு முடிய 1,106 ஆய்வுக் கூடங்கள் உயர்நிலைப் பள்ளிகளில் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்றால் மாணவர்கள் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கிற பாடங்களைக் கற்றுத் தெரிவதை விட, பிராக்டிக்கல் நாலெட்ஜில் அவர்களுடைய அறிவு பல மடங்கு வளரும் என்பதை இந்த அரசு உணர்ந்து செயல்படுகிறதே, அந்த அளவிற்கு செயல்படுகிற ஆட்சியை நீங்கள் பாராட்டத்தான் வேண்டும். ஏனென்றால் பாரதியார் குறிப்பிட்டிருக்கிறார், ''பொய் சொல்லல் ஆகாது பாப்பா'' என்று; ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களே மனம் திறந்து எங்களுடைய ஆட்சியைப் பாராட்டுங்கள். நீங்கள் பொய் சொல்லாதீர்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிக் கல்வியை வாழ்க்கைத் தொழிலுக்கு உகந்ததாக ஆக்க வேண்டுமென்பதை உருவாக்கிக் காட்ட விரும்புகிறது கல்வித் துறை. அந்தக் கல்வி துறையை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும். தொழில் பாடங்களை பொறுத்தவரையில் மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்நாட்டின் சாதனை அனைத்திந்திய அளவில் இன்றைக்கு புகழ் பெற்றிருக்கிறது. இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக தமிழ்நாடு நடைபோடுகிறது. 946 மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்வியை இன்றையதினம் நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். 1,432 தொழில் பிரிவுகளை இன்றையதினம் பாடங்களாக சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றால் இந்திய நாட்டிற்கே வழிகாட்டுகிற தமிழகம் என்றால், தமிழகமே, தமிழக சட்டமன்ற உறுப்பினர்களே இது நமக்கு பெருமை இல்லையா என்பதை எண்ணி மகிழ வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1979 முதல் 1982 வரையில் 4 ஆண்டுகளில் 12 கோடி ரூபாயில் 651 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்களை நிறுவியுள்ளோமே, இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் இதிலே பாதியாவது செய்தார்களா? என்ற கேள்வியை கேட்டால் இல்லையென்று தான் நான் சொல்ல முடியும். ஆகவே செய்தனத சாதனைகளாக மனமாற பாராட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ''யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாரதியார் பாடினார், கல்லூரிகளில் 1983-84-ல் 19,812 மாணவர்கள் தமிழில் படிக்கிறார்கள். தமிழ் மொழியை பயிற்றுவிப்பதில் என்ன ஆர்வம் காட்டுகிறீர்கள் என்று கேட்கிற சட்டமன்ற உறுப்பினர்களே, தமிழ் மொழியில் பாடங்களைப் படிக்கிற மாணவர்களுக்கு 150 ரூபாய் ஊக்க நிதியமாக கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்துகிறோம்.



1984 மார்ச் 15] [திரு. மி. வின்சென்ட்]

அதைப்போல, புதியதாக 37 பல்தொழில் பயிலகங்கள் துவங்கப்பட்டு இன்றையதினம் ஆட்சியில் சாதனைகளை புரிந்து கொண்டிருக்கிறோம். பாரதியார் சொன்னார், ''தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவிடச் செய்தல் வேண்டும்'' என்று சொன்னார், பாரதி கண்ட கனவை நிறைவேற்றி வருகிறார் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

(பிற்பகல் 12-10.)

சிங்கப்பூர், மொரிசியஸ் போன்ற நாடுகளில் குடியேற்றம் பெற்றுள்ள தமிழ்ச் சந்ததியினர் தானே தமிழ் கற்கும் வகையில், சுற்றுப்புறச் சூழல் அடிப்படையில் அமைந்த வகையில் பேச்சுத் தமிழ் இலக்கியத் தமிழ் பாடங்கள் ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்யப்பெற்று, பாடப்புத்தகத்துடன் தயாரிக்கப்பட்டு வெளியிடத் தயாராக உள்ளன. ''ஒலிப்பதிவு நாடாக்களில் தமிழ்'' எனும் இந்தத் திட்டப்பணி தமிழில் முதன் முதலாகச் செய்யப்பட்டுள்ள சிறந்த முயற்சியாகும். இதைச் சொல்கின்ற நேரத்தில் நான் கருதுகிறேன், பாரதி இருந்து இருந்தால், எங்கள் புரட்சித் தலைவருக்காக ஆயிரம் பாடல்களைப் பாடியிருப்பார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். சிங்கப்பூர், மொரீசியஸ் போன்ற நாடுகளுக்குச் சென்றால் மட்டும் போதாது, வல்லரசு நாடுகளுக்கும் செல்ல வேண்டும் அகில உலகமெல்லாம் செல்ல வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக, பாதிக்கப்பட்ட இலங்கைவாழ் தமிழ் மாணவர்களுக்கு பள்ளிகளிலே, கல்லூரிகளிலே சேருவதற்குப் பெருவாரியான வாய்ப்புகளை புரட்சித்தலைவர் அவர்கள் அள்ளிக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டத் தவறக்கூடாது. தமிழுக்காக, தமிழனுக்காக எதையும் செய்வேன், எதையும் தாங்குவேன் என்று கர்ஜித்த சிங்கம் தான் புரட்சித் தலைவர். ஆகவேதான் தமிழ்த் தலைவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பேன் என்று அறிவித்தார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் கொடுத்தார். மாணவர்களுக்குப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இடம் கொடுத்தார். மருத்துவக் கல்லூரியில் அட்மிஷன் கொடுத்தார். இன்ஜினிரிங் காலேஜில் 20-க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு அட்மிஷன் கொடுங்கள் என்று ஆணையிட்டார். இத்தகைய புரட்சித் தலைவர் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு காட்டிய அன்புதான், அரவணைப்புதான், உதவிகள் தான், ஊக்கம்தான், தாய்ப் பாசத்தோடு தொட்டுத் தழுவிய உணர்வுகள்தான் இன்றையதினம் பிரேமதாசா அவர்கள் வேண்டுமென்றே தமிழ்நாடு படையெடுக்கும் இலங்கை மீது என்று சொல்கிற அளவிற்கு இருக்கிறது. அந்த அளவிற்கு தமிழுக்காக, தமிழர்களுக்காக தொண்டாற்றிய

புரட்சித் தலைவர் என்று சொல்கிற நேரத்தில் மானம் உள்ள தமிழர் கூட்டமே, மனம் திறந்து புரட்சித் தலைவரைப் பாராட்டுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் இதயம் கல்லாக இருக்குமானால் உடைத்து எறிந்து தமிழ் காக்க தமிழர் நலன் காக்கப் பிறந்த புரட்சித் தலைவரை வாழ்த்துங்கள், பாராட்டுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாநிலங்களான, ஆந்திரமும், கர்நாடகமும், கேரளமும், தமிழ்நாடும் உணர்வால், உள்ளத்தால், பண்பால், கலாச்சாரத்தால், இலக்கியத்தால் ஒன்றுபட்டவர்கள். ஆகையால் தான் தென்னக அறிவியல் கண்காட்சியை 1980-ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கல்வித் துறை நடத்தி வருகிறது. இவைகளை நாம் நான்கு மாநிலங்கள் சேர்ந்து நடத்தினாலும் கூட தமிழ்நாடு பள்ளிகள் ஏராளமான பரிசுகளை பெறுவதால் சுழற் கோப்பைத் தமிழ்நாடே தட்டிச்சென்று கொண்டு இருக்கிறது என்ற பெருமையை ஈட்டித்தருகிற இந்தக் கல்வித்துறையை நாம் மனதாரப் பாராட்ட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சிங்களத்திலே தமிழர்கள் தாக்கப்பட்டார்கள் என்ற செய்தி வந்தவுடன் கருநாடக சட்டமன்றத்திலே தீர்மானம் போட்டு தமிழர்கள் தாக்கப்படுகிறார்களா என்று கண்டனம் தெரிவித்து இலங்கை அரசுக்கு அனுப்பிய கருநாடக நண்பனே, உங்களுடைய சகோதரன்தான் தமிழன், அந்தத் தமிழர்களை தாக்குகிற நிலையில் இருந்து நீ விடுபட்டு விடு. இது வரையில் தாக்கியதை ஒரு கெட்ட கனவாக நினைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் நாம் அத்தனைபெரும் ஒன்றாக சேர்ந்தவர்கள், உயிர் பிரியா தோழர்கள், உற்ற நண்பர்கள், ஒன்றுபட்ட சகோதரர்கள், நாம் ஒன்றுபட்டு வாழாவிட்டால் வடக்கு வாழ்ந்து விடும், தெற்கு தேய்ந்து விடும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

காவிரியால் இணைக்கப்பட்ட கருநாடகமும், தமிழகமும் என்றும் ஒன்றாக இருக்க வேண்டும். ஒருமித்த உணர்வோடு இருக்க வேண்டும், ஒற்றுமையோடு இருக்க வேண்டும் என்பதைக் கருநாடக நண்பனே உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசுக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று இணைந்து செயல்பட வேண்டும் என்று பலமாகக் கோரிக்கை வைக்கும் எதிர்க்கட்சி நண்பர்களே உங்களை உரிமையோடு கேட்கிறேன். நாடாளுமன்றத்தில் மொழிக் கொள்கை பற்றிய விவாதம் வந்தபோது, சரண்சிங் அவர்கள் இந்திய நாட்டிற்கு ஒரு தனி மொழி வேண்டும், அந்த மொழி இந்திதான் என்று வலியுறுத்திக் கூறுகிறார். அப்போது பாரதப் பிரதமர் இந்தியைத் திணிக்க மாட்டேன் என்று சொல்கிறார். அந்த நேரத்தில் சரண்சிங் திருப்பிக் கேட்கிறார். ஆகாஸ்





வாணி என்கிற வார்த்தையைக் கூட உபயோகிக்கக்கூடாது என்று தமிழ்நாட்டில் தமிழர்களுக்காக வாழ்ந்து கொண்டு இருக்கிற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சொன்னதால் அந்த வார்த்தையை எடுத்து விட்டீர்களே இது சரிதானா என்று கேட்கிறார். நான் கேட்கிறேன், எதிர்க்கட்சிகள் ஒன்று சேர வேண்டும என்று கூறும் எதிர்க்கட்சி நண்பர்களே சரண்சிங் என்ற இந்தி வெறி பிடித்த தலைவன் கீழ் நீங்கள் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களிடத்தில் வாக்குகளைக் கேட்பீர்களானால் இந்தியை தமிழ்நாட்டில் திணிப்பதற்கு நீங்கள் மறைமுகமாக முயற்சித்ததாகும் என்ற குற்றச்சாட்டை நான் இந்த நேரத்தில் எடுத்து வைக்கிறேன்.

இந்தி எந்த ரீதியாக வந்தாலும் சரி, அது இந்திரா காந்தி வாய்மூலமாக. வந்தாலும் சரி, அல்லது சரண்சிங் வாய் மூலமாக வந்தாலும் சரி, அதை தடுத்து நிறுத்தக் கூடிய திடகாத்திரமும் சக்தியும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கு நிறைய உண்டு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வெளிநாடுகளில் தமிழைப்பரப்புவதற்கு தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி இந்தியை பரப்ப முயற்சிக்க திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களிடம் நான் அவர்களுக்கு உணர்ச்சி வரும் சொப்பனப் பார்கள், தட்டிக்கேட்பார்கள் என்று கேட்கவில்லை. ஆனால் சரண்சிங்கினுடைய இந்த பேச்சை மற்றக் கட்சிக்காரர்கள் ஒரு வார்த்தைகூட தட்டிக் கேட்கவில்லையே என்று எண்ணிப்பார்க்கும்போது நான் உண்மையிலேயே வேதனைப் படுகிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலத்தான் இத்தனை சாதனைகளைப் புரிந்த எங்களது புரட்சித் தலைவர் ஆட்சியில் கேளுங்கள் தரப்படும் என்ற நம்பிக்கையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வேண்டிய சிலவற்றை கேட்க நான் ஆசைப் படுகிறேன். இந்திய நாட்டிலே ஒரு நகரம் என்று எடுத்துக் கொண்டால் அதிகம் கற்றவர்கள் இருக்கிற நகரம் நாகர்கோவில் நகரம். அந்த நகரத்தில் ஏராளமான ஆரம்பப் பள்ளிகளும், உண்டு; மற்றத் தொகுதிகளை கணக்கிட்டுப் பார்த்தால் தமிழ் நாட்டிலுள்ள எல்லாத் தொகுதிகளையும்விட அதிகமான உயர்நிலைப் பள்ளிகளும் அங்கே உண்டு; கல்லூரிகளும் உண்டு. இத்தனை நேரம் கற்றறிந்த மாணவர்களுடைய எண்ணிக்கை கூடியிருப்பதும் அந்த நாகர்கோவில் நகரம்தான்.

ஆனால் அங்கே ஒரு 'ப்ரொபாஷனல் காலேஜ்' கூட இல்லை. இன்றைய தினம் மத்திய அரசில் ஒரு மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியை எப்படிக் கணக்கிடுகிறார்கள் என்றால் 'நில் இன்டஸ்டிரி டிஸ்கிரிட்' தொழில் இல்லாத மாவட்டம் என்று

தேர்ந்தெடுத்து அந்த மாவட்டத்தில் தொழில்களை உரு
வாக்குவதற்கு வாய்ப்பு அளிப்பது போல தமிழ் நாட்டில்
ஒரு ப்ரொபஷெனல் காலேஜ் கூட இல்லாத கன்னியாகுமரி
மாவட்டத்திற்கு ஒரு ப்ரொபஷெனல் காலேஜை ஏற்படுத்தி
கொடுக்க இந்த அரசு முன்வந்து தர வேண்டுமென்று கேட்கிற
போது 5 . எஞ்சினியரிங் கல்லூரிகளை அடுத்த ஐந்தாண்டு
திட்டத்தில் கொண்டு வர இருப்பதாக நாங்கள் அறிகிறோம்.
அதை கட்டாயமாக நாகர்கோவில் நகரத்திற்கு ஐந்தில்
ஒன்றைத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு
கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

காஷ்மீருக்கு கிடைக்கின்ற முக்கியத்துவம்
முத்தமிட்டு மகிழும் கன்னியாகுமரிக்கும் முக்கடலும்
வேண்டும். அப்படி கிடைத்தால்தான் கிடைத்திட
பெருமை, குறிப்பாக தமிழ் நாட்டிற்குப் பெருமை. தென்னாட்டிற்குப்
மற்ற மாவட்டங்களுக்கும் நீங்கள் அளிக்கின்ற வசதிகளையும் ஆகையால்
வாய்ப்புகளையும் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு
அளித்திட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன்.

1974–75 ஆம் ஆண்டில் அகில இந்திய ஊரக
போட்டியில் பல பரிசுகளை அள்ளித் தந்து தமிழ் நீச்சல்
பெருமை சேர்ந்துள்ளவர்கள் கன்னியாகுமரி நாட்டிற்கு
நீச்சல் வீரர்கள். இதை உணர்ந்து மாவட்ட
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்றைய தினம்
அங்கே அமைக்க வேண்டுமென்று ஒரு நீச்சல் குளத்தை
பார்வையிட்டு, அரசுக்கு பரிந்துரை கருதி, இடத்தைப்
ஆகையால் நாகர்கோவில் நகரில் ஒரு செய்திருக்கிறார்கள்.
அமைக்க வேண்டுமென்று இந்த நீச்சல் குளத்தை
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நேரத்தில் கேட்டுக்

அதைப்போன்றுதான், சென்னை மெரீனா
குளம் பராமரிப்பு இல்லாமல், பில்டர் நீச்சல்
பண்ணாமல் இருக்கிறது. அதை உடனடியாக பாயிண்ட் ஓர்க்
ஏற்பாடு செய்ய வேண்டும். பராமரிக்க

கடந்த 12, 13–ந் தேதிகளில் திரு. சம்பத் என்ற
அனைத்து பல்கலைக்கழகத்திற்கான கல்சுரல் மாணவர்
நடத்தினார். மாணவர்களுடைய திறமை புரோகிராமை.
வெளி நாட்டிலே அவர்கள் போற்றுதற்குரியது.
கின்ற சக்தியை நேரடியாக போட்டிபோட்டு வெல்லு
பேரவைத் தலைவர் அவர்கள் கூட காணமுடிந்தது. நமது
கள். ஆகவே, மாவட்டந்தோறும் கண்டார்கள். வியந்தார்
ஒரு சில கல்சுரல் ஆண்டுக்கு ஒருமுறையாவது
மாணவர்களை புரோகிராம்களை நடத்தி, அதிலுள்ள
தேர்ந்தெடுத்து, கல்சுரல் டீம் என்று மாநில





அளவில் உருவாக்கி, அதை வெளி நாடுகளுக்கு அனுப்பி மாநிலத்திற்கு பெருமை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போன்று 1982–83 ஆம் ஆண்டில் நமது அரசு ஆசிரியர்களுக்கு ஒரு வழிப் பயணச் சலுகைக்கு உத்தரவிட்டது. அதன் மூலம் அரசுத்துறை ஆசிரியர்கள் பயனடைகிறார்கள். அதை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்கச் செய்ய அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரையில், அரசு எவ்வளவோ அக்கறைக் கொண்டிருக்கிறது. மேலும் அக்கறை கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை இயக்குனராக நியமித்து இன்றைய தினம் விளையாட்டுத் துறையில் அக்கறைக்கொண்டிருக்கிறது இந்த அரசு. முன்பெல்லாம் இந்த விளையாட்டுத் துறைக்கு 5 இலட்சம் ரூபாய், 10 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கப்படும் நிலை மாறி, இன்றையத் தினம் 187 இலட்சம் ரூபாய் விளையாட்டுத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதைப்போன்று, விளையாட்டுத் துறைக்கு ஆணையர் மற்றும் செயலர் . நியமனம் செய்யப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். அப்படி நியமனம் செய்யப்பட்டால் தான் உடனடியாக இந்த துறையின் நிறை, குறைகளை ஆராய்ந்து, குறைகளைக் களைந்து, நிறைகளைச் செய்ய முடியும். மானியங்களை மேலும் அதிகமாகப் பெற முடியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உடலில் வலிமையில்லாமல் விளையாட்டில் வெற்றி பெற முடியாது. விளையாட்டுத் துறையுடன் உடல் பயிற்சி கல்வித் துறையும் இணைத்தால்தான் மேலும் விளையாட்டுத் துறை வலுவடையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசில் கூட 'Snipes போர்டு' என்று ஒன்று உள்ளது. அதுதான் நமது நாட்டின் விளையாட்டுத் துறையையும் உடற்பயிற்சி கல்வித்துறையையும் ஒருங்கிணைந்து நடத்தி செல்வது. அதனுடைய விரிவாக்கம்தான் Society for the National Institute of Physical Education and Sports. அங்கே பிசிக்கல் எஜுகேஷன் அன்ட் ஸ்போர்ட்ஸ் இன்றைக்கு அப்படித் தான் நடைபெறுறது. அதைப்போன்று நம்முடைய மாநிலத்திலும் மாற்றியமைக்க வேண்டும். இன்றைய தினம் Physical Education under the direct control of School Education and Collegiate Education இருக்கிறது. அவர்களுக்கோ பணிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் நீங்கள் டைரக்டரேட் ஆஃப் ஸ்போர்ட்ஸ் அன்ட் பிசிக்கல் எஜுகேஷனை உருவாக்கவேண்டும். அப்படி உருவாக்கினால்தான் கோச்சர்களை பயிற்றுவிப்பதற்

கானை வாய்ப்பும் வசதியும் அதிகமாக கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

(பிற்பகல் 12–20)

தமிழகத்திலே விளையாட்டைப் பார்த்து ரசிக்கும் மக்க ளுடைய கூட்டம் அதிகமாக இருக்கிறது. ஆனால் விளையாட் டில் பங்குகொள்ளும் வீரர்களின் கூட்டத்தை அதிகமாக உருவாக்கினால்தான், திறம்பட்ட வீரர்களை அவர்களிலே யிருந்து தேர்ந்தெடுத்து, உலகத்தில் நாம் போட்டி போட்டு ஒரு தனி இடத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதேபோல் ஸ்டேட் ஸ்போர்ட்ஸ் கவுன்சில், டிஸ்ட்ரிக் ஸ்போர்ட்ஸ் கௌன்சில் கலைக்கப்பட்டு, விளையாட்டுத் துறை இயக்குநரகத்தோடு சேர்க்கப்படவேண்டுமென்று வலியுறுத்து கிறேன். மத்திய அரசின் ஆல் இந்தியா ஸ்போர்ட்ஸ் கௌன்சில் ஏற்படுத்தும்போது நமது மாநிலத்தில் ஸ்டேட் டெவலப் மெண்டு கார்ப்பரேஷன் என்ற ஒரு தான் இயங்கி இயக்கத் தையும் உருவாக்கும்போது மாநில மாவட்ட விளையாட்டு மையங்கள் அவசியம்தானா என்பதை அரசு உணரவேண்டு மென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது இருக்கும் மாநில விளையாட்டு மன்றத்திற்கு பதி லாக மைய அரசு ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் உள்ளது போல, அறிவுறுத்தும் குழு, அட்வைசரி கமிட்டி ஒன்றை விளையாட்டுத் துறையிலே, போதிய திறன் படைத்த சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுச்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். மாநில விளையாட்டுக் கழகங்களைக் கண்காணிக்க வேண்டும். ஏனென்றால், ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன் அவர்கள் விளையாட்டிற்காக கிரேண்டுகளை அரசாங்கத்திட மிருந்து பெறுகிறார்கள். ஆனால் பெறுகின்ற கிரேண்டுகளை ஒழுங்காகச் செலவழிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க யாரும் இல்லை. They are not answerable to anybody என்ற நிலையில், தானாகவே இயங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அரசிற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவ்ர்கள் சொந்த இல்லங்களிலேயே அலுவலகங்களை வைத்துக் கொண்டு இயங்குகிறார்கள். சொந்த இல்லங் களிலே அலுவலகங்கள் இருக்கக் கூடாது எனறும், இயக்குந ரகத்தைச் சார்ந்த சிறப்புப் பயிற்சியாளர்களுக்கு நல்ல வாய்ப்பை கொடுக்கவேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்து, புரட்சித் தலைவர் ஆட்சி தான் கல்வித் துறையில் பொற்காலத்தைக் கண்டு திகழ்கிறது. மற்றைய



மாநிலங்களுக்கு தமிழகம் தான் இன்றைய தினம் ஒரு வழி காட்டியாக கல்வித்துறையிலே தமிழகம் தான் முதல் இடத் தைப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் 1984–85 ஆம் ஆண்டுக்குரிய கல்வி மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கக் கூடிய மார்க்சிஸ்டு கம்யூ னிஸ்டு கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல எண்ணுகிறேன்.

இன்றைய தினம் இந்த மானியத்திற்காக நம்முடைய பட்ஜெட்டிலே மொத்தத் தொகையிலே 21 விழுக்காடு, அதாவது மிக அதிகமான விழுக்காடு இந்தத் துறைக்கு ஒதுக்கியிருப்பதாக இங்கே சொல்லப்பட்டுள்ளது. அதை நாங்கள் ஒத்துக்கொள் கிறோம். ஆனால் அதே சமயத்திலே இன்றைக்கு இந்தக் கல்விக்கு ஒதுக்கக்கூடிய முறையில், நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய கல்வி வளர்ச்சியை ஈடுகட்டக்கூடிய முறையில் இருக்கிறதா என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இன் றைக்குப் பல உறுப்பினர்கள் இங்கே வெட்டுத் தீர்மானங் களைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே சொல்கிறார்கள்— ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லாதவர்கள் சொல் கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் சட்டமன்றத் திலே இறுதியாகப் பேசி முடிக்கும்போது எங்கள் ஊரிலே அது இல்லை, இது இல்லை என்று பல பிரச்சினைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்குத் தேவை களைக் கணக்கெடுத்துப் பார்த்தால், இதிலே நாம் பெருமைப்படு வதிலே பிரயோஜனம் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஆரம்ப பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்காக என்று சொல்லி, ரூ. 1.72 கோடி இதிலே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்றைக்கு நம்முடைய தேவையை வைத்துக்கொண்டு, நாம் எவ்வளவு கட்டிடங்களை கட்ட முடியும் என்பதை இன்றைக்கு கணக்கிட்டுப் பார்க்கவேண்டும்.

1973–74-ல் 26,726 பள்ளிகள் இருந்ததாக இங்கே பள்ளி விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு 1983–84-ல் 28,548 என்று ஆரம்ப, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகள் உட்பட என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆக இந்த 10 ஆண்டுக் காலத்திலே நீங்களும், அதற்கு முன்னாலே இருந்த அரசுகளும் அதிகமாக கட்டியிருக்கக்கூடிய பள்ளிகள் எத்தனை என்று சொன்னால், 2,639 தான் என்பதை நீங்கள் மனமுவந்து ஒத்துக்கொள்ளவேண்டும். இந்த 2,639 பள்ளி களும் நமது மாநிலத்திலே இருக்கக் கூடிய கிட்டத்தட்ட

374 பஞ்சாயத்து யூனியன்கள், 100-க்கும் மேற்பட்ட நகராட்சிகள், 3 மாநகராட்சிகள், இவைகளையெல்லாம் கணக்கிட்டால், 10 ஆண்டுகளில் நீங்கள் செய்து இருப்பது ஒரு ஆண்டுக்கு, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு பள்ளிக்கூடம் கூட ஆரம்பிக்கப்படவில்லை என்பதை நீங்கள் இந்த நேரத்திலே உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதேபோல் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், 1973–74-ல் ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் எனற கணக்கு இருந்தது. ஆனால் இன்றைக்கு 10 ஆண்டுகளுக்குப் பின்னால் பார்க்கும் போது, ஒரு ஆசிரியருக்கு 41 மாணவர்கள் என்று இங்கே புள்ளி விவரத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றது. ஆனால் உண்மை நிலைமை அதுவல்ல. உண்மை நிலை என்னவென்றால், நேரில் போய் பார்த்தால்தான் தெரியும். தற்போது 60-லேயிருந்து 80 வரையில் ஒரு ஆசிரியருக்கு மாணவர்கள் இருக்கிறார்கள். என்பதை நீங்கள் இந்த நேரத்தில் நினைவு கூறவேண்டும்.

அதேபோல் இன்றைக்கு தொழில் கல்வியை எடுத்துக் கொண்டால், அதை நாங்கள் வரவேற்கிறோம். முடிந்த அளவிற்கு பாலிடெக்னிக்குகளைக் கொண்டு வருகின்றபோது, அவைகளை தனியார்களுக்கு கொடுக்கக்கூடாது. பாலிடெக்னிக்குகள் அதிகமாகக் கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே சமயத்தில் தொழிற்கல்வியை மட்டும் நாம் ஏற்படுத்திவிட்டால் போதாது, அதனால் பிரச்சினை தீர்ந்துவிடாது. ஆகவே தொழிற் கல்வியை உருவாக்குகிறபோது, அதற்குரிய மூலதாரத்தையும் நாம் ஏற்படுத்தியாகவேண்டும். இல்லை என்று சொன்னால் அவர்கள் தொழிற் கல்வியைப் படித்துவிட்டு, பின்னால் வேலையில்லாமல் சும்மா இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை நாம் உணரவேண்டும்.

அதேபோல் இன்றைக்கு கல்லூரிகளிலே மாணவர்கள், பி.எஸ்.சி., பி.ஏ., எம்.ஏ., என்று படித்துவிட்டு இருப்பவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்திருக்கிறது. 1976–77-ல் இவர்களின் எண்ணிக்கை 203,302 என்று இருந்தது. ஆனால் தற்போது, 1983–84-ல் இந்த எண்ணிக்கை 188,029 என்று குறைந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம்? நாம் எவ்வளவு தான் கல்விக்காக அதிகமாக தொகை ஒதுக்கினாலும் கூட, இங்கே புள்ளி விவரம் காட்டுவது, கல்லூரிகளுக்கு போகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதேபோல் இன்றைக்கு கல்லூரிகளின் எண்ணிக்கை, 1976–77-ல் 189 ஆக இருந்தது. ஆனால் தற்போது அது 187 ஆக குறைந்திருக்கிறது. 2 கல்லூரிகள் குறைந்திருக்கின்றன.





ஆகவே எந்த ரூபத்திலே நாம் பார்த்தாலும் கல்விக்காக எவ்வளவு தொகை ஒதுக்கினாலும், இப்படிப்பட்ட நிலைமைகளைப் பார்க்கும்போது, இது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாக தான் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு நகராட்சிகளிலே உள்ள மேல் நிலைப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று சொன்னால், நகராட்சிகளுக்கு தற்போது போதிய நிதி வசதிகள் கிடையாது. எனவே அந்த நகராட்சிப் பள்ளிகளிலே போதிய பெஞ்சுகள் நாற்காலிகள் மற்றும் தேவையான பொருள்கள் எல்லாம் வாங்கிக் கொடுப்பதற்கு அவர்களிடம் வருமானம் கிடையாது. எனவே நகராட்சிப் பள்ளிகளை உடனடியாக அரசு ஏற்று நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வேகமாகப் பரவி வரக்கூடிய இந்த ஆங்கில நர்சரிப் பள்ளிகளை நீங்கள் கட்டுப்படுத்தவேண்டும். இல்லை என்றால் இன்றைக்கு தமிழகத்திலே ஏழைக் குழந்தைகள் அந்த ஆங்கில நர்சரிப் பள்ளிகளிலே படிக்க முடியாத நிலைமையிருக்கிறது—இரண்டு சமுதாய மக்கள் . உருவாகிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே இந்த ஆங்கில நர்சரிப் பள்ளிகளை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடம் என்று நீங்கள் கொண்டுவரவேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுதான் நாம் தமிழுக்குச் செய்யக்கூடிய உதவியாக இருக்கும். இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகை மிகவும் குறைவாக இருக்கின்றது. இன்றுள்ள நிலைமையில், விலைவாசி அதிகமாக ஏறியிருக்கும் இந்த நேரத்தில், அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அந்த உதவித்தொகை அவர்களுக்கு போதுமா என்பதைச் சிந்தித்துப் பார்த்து, விலைவாசியைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அவர்களுக்குத் தேவையான அளவிற்கு தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கல்வித்துறையில் தனியார்களுடைய ஆதிக்கத்தை நீங்கள் ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். ஏன் என்றால் கல்வித்துறை இன்று ஒரு பெரிய வியாபாரமாக நடந்து கொண்டிருக்கிறது. தனியார்கள் அதை வியாபாரம் போல் நடத்திக் கொண்டிருக்கிறார்களே ஒழிய அதை ஒரு சமூகப் பிரச்சினையாக நடத்தவில்லை. ஆகவே தனியார் துறையைக் கட்டுப்படுத்து

வதிலே நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். அதை மறு பரிசீலனை
செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்
கிறேன்.

அதேபோல், கர்நாடகாவிலே ஆசிரியர் பயிற்சி பெற்று சுமார்
1,000 பேர்கள் இன்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்
கள் பல ஆண்டுகாலமாக படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்
கிறார்கள். அவர்கள் எங்கேயோ போய் பயிற்சியை முடித்து
விட்டு வந்தாலும் கூட, அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு
முடியாது என்று சொன்னால், அது என்ன நியாயம் என்பதை
நீங்கள் சிந்திக்கவேண்டும். அவர்களுக்கு வேலை கொடுக்க
வேண்டும் என்று உயர்நீதி மன்றத்திலே திர்ப்புக் கொடுத்து
இருக்கிறார்கள். ஆகவே கர்நாடகாவிலே பயிற்சி முடித்துவிட்டு
வந்திருக்கிற ஆசிரியர்களுக்கும் நீங்கள் வேலை கொடுக்க வேண்
டும் என்று நான் வற்புறுத்துகிறேன்.

அடுத்து, தமிழகத்திலே உள்ள நூலகங்களுக்குத் தேவையான
நூல்கள் தற்போது கிடையாது. அப்படியே இருந்தாலும் இன்
றைக்கு ஆளும் கட்சியைச் சார்ந்த பத்திரிகைகள்தான் போடப்
பட்டுவிடுகின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்று
சொன்னால், வட ஆர்க்காடு மாவட்டத்தில் செய்யாரிலே உள்ள
நூலகத்திலே இன்றைக்கு செம்மலர், திக்கதிர் போன்ற பத்
திரிகைகள் வாங்கிப் போட அங்கேயுள்ள நபர்கள் சிலர் முன்வந்
தாலும், அங்கே வேலை செய்யும் ராதாகிருஷ்ணன் என்ற
ஊழியர் நீங்கள் யார் வாங்கிக் கொடுத்தாலும் நாங்கள்
அதைப்போட முடியாது என்று சொல்கிறார்கள். அது
என்ன நியாயம் ? ஆளும் கட்சிப் பத்திரிகைகள் எல்லாம்
அங்கே போடப்படுகிறது. மக்கள் குரல், தாய், அண்ணா,
இதயம் பேசுகிறது, தர்ம சக்கரம், உண்மை, ரூசம் போன்ற
பத்திரிகைகளும், மதப் பத்திரிகைகள் எல்லாமும் கூடப் போடப்
படும்போது, சில பத்திரிகைகளை, மாற்றுக் கட்சிப் பத்திரிகை
கள என்ற காரணத்தால், அங்கு போடப்படுவது மறுக்கப்படு
கிறது. அது நியாயம் அல்ல. ஆகவே, அனைத்துப் பத்திரிகை
களையும் போடுவதற்கு அரசு உத்திரவிட வேண்டும் என்று வற்
புறுத்துகிறேன்.

(பிற்பகல் 12-30)

அதேபோல, பள்ளிகளில் தேவையான கேள்விகளைக் கேட்
காமல், சமுதாயத்திற்கு தேவையில்லாத, சினிமா நடிகர்கள்
நடிகைகளைப் பற்றிய கேள்விகளைக் கேட்கிற நிலைமையெல்
லாம் இருப்பதைப் பார்க்கிறோம். இந்த அவையிலே கூட அது
சம்பந்தமாக கேள்விகள் வந்தது. இதையெல்லாம் கல்வித்துறை
கறாராக கண்காணிக்க வேண்டும். இன்றைக்கு யுத்த அபாயம்
இருக்கிறது. அதைப்பற்றி கேள்வி கேட்கலாம். பொருளாதார
நெருக்கடி இருக்கிறது. அதைப்பற்றிக் கேள்வி கேட்கலாம்.
புதிய சமுதாயத்தை எப்படி உருவாக்க வேண்டும் என்பதைப்





பற்றிக் கேட்கலாம். ஆனால், இதையெல்லாம் விட்டு விட்டு,
பூர்ணிமா ஜெயராமுக்கும், பாக்கியராஜுக்கும் திருமணம் எப்படி
நடந்தது என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு தமிழ் சமு
தாயத்தை கேவலப் படுத்த வேண்டாம். அந்த முறையிலே
பள்ளிகளை கண்காணித்து கல்வி இலாகா செயல்பட வேண்டும்,
அதை இந்த அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். கல்வி முறை
களை பாதுக்காக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வெளி மாநிலங்களிலிருந்து படிக்கக்கூடிய மாணவர்
களுக்கு, லோன், ஸ்காலர்ஷிப் கொடுப்பது இல்லை. இங்கே
கொடுக்கக்கூடிய உதவித் தொகையும் போதுமானதாக இல்லை
என்று புகார்கள் எல்லாம் அனுப்பியிருக்கிறார்கள். அதைப்
பரிசீலித்து, இங்கே படிக்கின்ற, என்ஜினீயரிங் கல்லூரியிலே, மெடி
கல் காலேஜிலே படிக்கிற—மாணவர்களுக்கு லோன், ஸ்காலர்ஷிப்
போன்றவை கொடுக்கும்போது, வெளி மாநிலங்களில் படிப்பவர்
களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது ? அதை கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொளகிறேன்.

அதைப் போல கல்லூரிகளிலே சுய ஆட்சி முறையை ஒழித்துக்
கட்ட வேண்டும். அரசாங்கம் கல்வி இலாகாவை கவனித்துக்
கொண்டிருக்கும்போது, சுய ஆட்சி முறையை ஏற்படுத்துவதும்
சரியல்ல, கொடுப்பதும் சரியல்ல. அதை நிறுத்தியாக வேண்டும்.
அதைப் போல பிரதேச மொழியை பாட மொழியாக்குவதற்கு
உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். பெண்
கள் பாலிடெக்னிக்குகளில், சென்னையில் உள்ள செனடிரல் பாலி
டெக்னிக்குகளில் உள்ளது போல விருப்பப் பாடங்களை ஏற்
படுத்த வேண்டும் மற்ற பல பாலிடெக்னிக்குகளில் அப்படி
இல்லை எனறு சொல்கிறார்கள். ஆகவே, சென்னையில் இருப்பது
போல ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சிறுபான்மையினருக்கு என்று மலையாள, கன்னட பள்ளிக்
கூடங்கள் நிறைய தமிழகத்தில் இருக்கின்றன. அவைகளில்
எல்லாம் ஆசிரியர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். சிறு
பான்மை மொழிக்கு மதிப்பு கொடுக்கக்கூடிய முறையிலே தேவை
யான ஆசிரியர்களை உடனடியாக நியமிப்பதற்கு இந்த அரசு
இப்போதே முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்
பயிற்சி முடித்து 10 ஆண்டுககாலமாக வேலையில்லாமல் பல்
லாயிரக் கணக்கானவர்கள் இருப்பதாக புகார்கள் வந்துள்ளன.
அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டும்.

அது போல கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினை சம்பந்தமாக
நேற்றையதினம் சொன்னார்கள், நீண்டகாலமாக அந்தப் பிரச்
சினை தீர்க்கப்படாமல் உள்ளது. அவர்கள் 25—2—1984-ல்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பு தங்களுடைய
கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதமும், தர்ணாவும் நடத்தி
யிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களையும் சந்தித்துப் பேசியிருக்

கிறார்கள். கோரிக்கைகளையும் அமைச்சரிடமும் கொடுத்து வற்புறுத்தியிருக்கிறார்கள். மனுவைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் மழை, வெள்ளம், வறட்சி என்றும் சொன்னதாகச் சொன்னார்கள். அத்தோடு 1—6—1984-ல் பே கமிஷன் போடுவதாகவும் சொன்னார்களாம். அமைச்சர் அவர்கள் 1—6—1984-ல் அதை ஏற்படுத்தி, அவர்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கல்லூரி கல்வி இயக்குநர் திருஞானசம்பந்தம் 1983 மே-ல் பதவி முடியக்கூடியவர்கள். அவர்களுக்கு 84 மே வரை நீட்டிப்புச் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் நீட்டிக்கப் படக்கூடாது. நீட்டித்தால் கல்வியாளர்களுக்கு பாதகமாக இருக்கும் என்று சொல்லி, கல்லூரி ஆசிரியர்கள் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டு நீட்டிப்பை நிறுத்த வேண்டும்.

அடுத்து, சிவகாசி ஐயப்ப நாடார் கல்லூரியில், பேராசிரியர் ஜகதீசனை பணிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோர்ட் தீர்ப்பே தந்திருக்கிறது. ஆனால், அவரைப் பணியில் எடுத்துக் கொள்ளாமல், அவரை தட்டிக் கழிப்பதாகச் சொல்லுகிறார்கள். அதையும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அது போல உடல் பயிற்சி இயக்குநர், நூலக பணியாளர்கள் சம்பந்தமாக, ஊதிய நிர்ணய விகிதம் முடிவு பெறாமல் உள்ளது. அதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1981 ஜூன் முடிய தமிழக ஊராட்சி ஒன்றிய நடு நிலைப் பள்ளிகளை, அரசாணை பிறப்பித்து உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டது. அதற்குரிய நிலையில் பதவி மாற்றம் செய்து, ஆசிரியர்களையும், ஊழியர்களையும், அதே பள்ளிகளுக்கு ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அரசு பணியாளர்களாக ஏற்றுக் கொண்டதற்காக, அரசு இறுதி ஆணை இன்னும் வழங்கப்படவில்லை. அதனால் 500 ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக நேற்றைய தினம் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். அதையும் இந்த அரசு உடனடியாக கவனிக்க வேண்டும். ஏன் என்று சொன்னால் 402 கோடி ரூபாய் என்பது சாதாரண விஷயம் அல்ல. 21 விழுக்காடு தொகையை ஒதுக்கியும் சாதாரண பிரச்சினைகளை நீட்டித்துக்கொண்டு இருப்பது சரியல்ல.

நகர்ப்புறங்களிலே உள்ள மாணவர்களைப்போல கிராமப்புறங்களிலே உள்ள மாணவர்களும் படிக்கக்கூடிய முறையிலே தரத்தை உயர்த்தவும் அதற்குத் தேவையான ஆசிரியர்களையும் பாட நூல்களையும் கொடுத்து உதவவேண்டும்.

ஐந்து மைல்கள் இடைவெளிக்கு ஒரு உயர் நிலைப் பள்ளி இருந்தாக வேண்டும். இப்போது 10 மைல்கள், 15 மைல்கள் நடந்து போய்ப் படிக்கக்கூடிய நிலைமையில் உயர் நிலைப் பள்ளி



கள் கிராமப்புறங்களிலே இருக்கின்றன. ஒட்டு மொத்தமாக கணக்கிட்டு 5 மைல் என்று ஒரு லிமிட்டை வைத்து உயர் நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளிலே போதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். கட்டடம் இல்லாத பள்ளகளுக்கு கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். மக்கள் தொகைக்கு ஏற்ப ஒரு சீரான அளவில் மேல் நிலைப் பள்ளிகள் ஏற்படுத்த அரசு முன்வரவேண்டும். மேல் நிலைப் பள்ளிகள் இன்றைக்கு கல்லூரிக்கும் சமமான பள்ளிகளாக இருக்கின்றன. எந்த எந்த இடங்களில் தேவையோ அந்த அளவுக்கு கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். உயர் நிலைப் பள்ளிக்காக ஓர் ஊர் மக்கள் இடம் வாங்கித்தந்து 25 ஆயிரம் ரூபாய் கட்டியும் கட்டடம் கட்டவில்லையென்றால் என்ன நியாயம்? நான் கல்வி கல்வி என்று சொல்லிக் கொண்டு கல்விக் கண்ணைத் திறந்த காமராஜர் கனவை நிறைவேற்றுகிறோம் என்று கற்பனை உலகத்தில் இல்லாமல் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சாவூர் மாவட்டத்திலே திருவாடானையிலும் சேலம் மாவட்டம் ஆத்தூரிலும் 10 ஆண்டுக்காலமாகியும், பணம் கட்டியும் கட்டவில்லை யென்றால் என்ன நியாயம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நடு நிலைப் பள்ளிகளில் உடல் பயிற்சி ஆசிரியர்கள் இல்லை. இப்படி இருந்தால் எப்படி மாணவர்கள் விளையாட்டுத் துறையிலே சிறந்து விளங்க முடியும் என்பதை சிந்தித்துப் பார்த்து அதைக் கணக்கிட்டு ஒவ்வொரு நடு நிலைப் பள்ளியிலும் உடல் பயிற்சி ஆசிரியர்கள் நியமிப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர் நிலைப் பள்ளிகளுக்கு இருக்கிற கட்டடங்கள் தற்போது போதாது. குடிசைகளிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலே பெய்த மழையின் காரணமாக அடித்துச் செல்லப் பட்டதைப் பார்த்தோம். ஆகவே போதுமான கட்டடங்கள் கட்டிக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

மேல் நிலைப் பள்ளிகளின் சுற்று சூழல் சரியாக இல்லாமல் அவல நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதையும் கணக்கிட்டு சரியான நிலைமைகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையில் உள்ள ஆசிரியர் அல்லாதோரின் கோரிக்கைகள் கவனிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டு இருக்கின்றது. அதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

வாக உள்ளவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று புகார் வந்து இருக்கிறது. அதையும் நீங்கள் கவனிக்கவேண்டும். ஒரே கல்வி ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மாறுபட்ட ஒரு முடிவை பள்ளிக்கல்வி இணை இயக்குநர் அவர்கள் கடைப்பிடித்து இருப்பதாக புகார் சொல்கிறார்கள். இதையும் நீங்கள் சரி செய்யவேண்டும். சென்னைப் பல்கலைக் கழக ரிஜிஸ்ட்ரார் திரு குமாரசாமி என்பவர் மீது விஜிலன்ஸ் விசாரணை அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்து உள்ளதாக சமீபத்தில் கூறினார்கள். ஆனால் இன்றையதினம் அவர் எம்.எல்.சி தேர்தலில் நிற்பதாக சொல்கிறார்கள். ஆளும் கட்சி அவரை ஆதரிப்பதாகச் சொல்கிறார்கள். இது எப்படி? விஜிலன்ஸ் விசாரணை கைவிடப்பட்டு விட்டதா? என்பதை நான் இந்தநேரத்தில் அறிய விரும்புகிறேன். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இறுதியாக பழனி வட்டத்தில், இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர் .எம். வீரப்பன் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவருடைய துறையின் கீழ் 2 பாலிடெக்னிக்குகள், கலைக்கல்லூரிகள் இன்னும் செவிடர் பள்ளி, குருடர் பள்ளி இவைகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது இந்த ஆண்டு அரசு ஆரம்பிக்கின்ற அந்த பொறியியல் கல்லூரியை பழனியில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, எதிர்காலத்திலே இவ்வளவு ஒரு 'சோர்ஸ்' இருக்கக்கூடிய அந்த பகுதியில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டும். உங்கள் கையில் இருக்கக்கூடிய அந்த பழனி தேவஸ்தானத்தின் மூலமாக பல்கலைக் கழகத்தை ஏற்படுத்திக் தர அரசு முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பொறியியல் கல்லூரி தேர்வில் இண்டர்வ்யு முறை அதிருப்தியாக உள்ளது. ஏன் என்று, சொன்னால் இன்றைக்கு சாதாரண மக்கள் பொறியியல் கல்லூரிக்கு அப்ளிகேஷன் போடும் போதே 10 ஆயிரம், 20 ஆயிரம், 30 ஆயிரம் கையில் இருந்தால் தான் கிடைக்கும் என்ற ஒரு நிலை இன்றைக்கு அவர்கள் மத்தியில் இருக்கிறது. ஆகவே அந்த இண்டர்வ்யு முறையை நிறுத்திவிட்டு மாற்று ஏற்பாடு ஏதாவது செய்து சாதாரண மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிற முறையில் பொறியியல் கல்லூரியில் தேர்வுகள் நடைபெறவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னது போல் பல ஆயிரக்கணக்கான கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளில் கட்டிடங்கள் இல்லாமல் இன்றைக்கு மோசமான ஒரு நிலையில் இருக்கின்றன. அவைகளை





எல்லாம் நிவர்த்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 402 கோடி, 402 கோடி என்று சொல்லி நீங்கள் மக்களை ஏமாற்றவேண்டாம். இன்றைக்கு நம்முடைய தேவைகளை கணக்கிடும் போது இந்த 402 கோடி ரூபாயில் இன்னும் 10 ஆண்டுகள் ஆனாலும் நம்முடைய பிரச்சினைகளை தீர்க்கமுடியாது. ஆதற்கான முறையில் நீங்கள் மத்திய அரசிடம் போராடி உரிய தொகையை பெற்றால் ஒழிய நம்முடைய பிரச்சினைகளை தீர்க்க முடியாது. அதற்கான ஏற்பாட்டினைச் செய்யவேண்டும் என்று கூறி வாய்ப்புத்தந்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்று இருக்கிற இந்த கல்வி மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களை முன் வைத்து பேச வாய்ப்பு தந்தமைக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இன்று உலகம் வியக்கதக்க அளவுக்கு இரண்டு பெரிய சாதனைகள் இப்போது கல்வித் துறையில் நிகழ்ந்து இருப்பதை நான் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒன்று நோபல் பரிசுப் பெற்ற உலகம் போற்றுகிற ஒரு தாய் தெரசா அம்மையார் அவர்கள், அவர்களுடைய திருக்கரத்தால் அவர் பெயர் இடப்பட்ட அந்த பெண்கள் பல்கலைச் கழகத்தை கொடைக்கானலில் திறந்து வைத்தது ஆகும். மற்றொன்று அமெரிக்காவிலே வாழுகின்ற தமிழர் சந்திரசேகர் என்பவர் நோபல் பரிசு பெற்றதாகும். இவைகளெல்லாம் தமிழகத்தின் கல்வி வரலாற்றில் சுட்டிக்காட்டவேண்டிய நிகழ்ச்சிகள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அன்னை தெரசா அவர்கள் பெண்கள் பல்கலைக் கழகத்தைத் திறந்து வைத்தார்கள். அது மட்டுமல்லாமல், தமிழகத்தில் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களால் ஏற்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தால் ஏற்பட்ட சமுதாய விளைவுகளையும் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இன்று கல்வி மானியத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மற்றவர்களும் இதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அம்மையார் அவர்கள் மனம் திறந்து சொன்ன நல்ல வார்த்தைகளை, நல்ல கருத்துக்களை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

சந்திரசேகர் அவர்கள் அங்கே நோபல் பரிசு பெற்றது நமக்கு எப்படிப் பெருமையாக இருக்க முடியும் என்று கேட்கலாம். சந்திரசேகர் அவர்கள் தமிழராக இருந்து, தமிழகத்திலேயே இருந்து இருப்பாரேயானால், நிச்சயமாக அவரது ஆராய்ச்சி முடிவுகள் தமிழருக்கே சொந்தமாக இருந்திருக்க முடியும். அப்படிப்பட்ட கல்வி அறிவு பெற்றவர்கள்,

[திரு. மா. சின்னராசு] [1984 மார்ச் 15

ஆற்றல் மிக்கவர்கள், ஆராய்ச்சித் தகுதி உடையவர்கள் தமிழராக இருக்கிறார்கள் என்பதை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட அறிவும், திறமையும் வளர்க்கப்பட வேண்டுமென்றால், சிறு வயதில் கல்வி கற்கின்ற மாணவர்கள் நல்ல கல்வியைப் பெற வேண்டும். இந்தியாவில் அந்த வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பதால்தான், ஆராய்ச்சிக்குரிய வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதால்தான், அவர்கள் மேல் படிப்பிற்காகவும், வேறு பணிகளுக்காகவும், ஆராய்ச்சிக்காகவும் வெளி நாடுகளுக்குச் சென்றிக்கிறார்கள். இந்த நிலையை அறவே போக்க வேண்டுமென்றால் ஆரம்பக் கல்வியிலிருந்து, அதாவது குழந்தைப் பருவத்திலேயிருந்து அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு தர வேண்டும். அப்படித் தமிழ்க் குழந்தைகளுக்கு நல்ல கல்வியைப் புகட்டுகின்ற அந்த முயற்சியில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் திட்டம் அமைந்திருக்கிறது.

பிஞ்சு உள்ளங்களிலே கல்வி கற்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்தாலும் கூட, பட்டினியோடு போய் கல்விக் கூடங்களில் உட்காருகின்ற பொழுது அரிய ஆராய்ச்சிகள் வராது; நுண்ணறிவு அவர்களுக்கு என்றைக்கும் வராது. அவர்கள் பசியோடும், பட்டினியோடும் இருக்கின்றபொழுது வீட்டைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருப்பார்கள். அடுத்த வேளைக்குச் சோறு கிடைக்குமா என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களிடம் ஆராய்ச்சிகளைப் பற்றிச் சிந்திக்கின்ற நிலைமை வர முடியாது. எனவே, அந்த வகையிலேதான் இளம் பிஞ்சு உள்ளங்கள் ஆரம்பக் கல்வி கற்கின்ற நேரத்தில் மூன்று வயதிலிருந்து ஒரு வேளை உணவையாவது நிம்மதியாக உண்டு கல்வி கற்கின்ற அந்தப் பாங்கினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை அருள் கூர்ந்து இந்த நேரத்தில் நினைவுகூர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், அந்தப் பிஞ்சு குழந்தைகளுக்கு சத்துணவு தருகின்ற நேரத்தில் அவர்கள் படிப்பதற்காகவும் 16,000-க்கும் மேற்பட்ட குழந்தைப் பள்ளிகளை உருவாக்கியிருக்கிறோம். ஆகவே, இது சாதனையா இல்லையா என்று கேட்பவர்களுக்கு இது ஒன்றேபோதும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 16,000-க்கும் மேற்பட்ட குழந்தை பள்ளிகள் சத்துணவு மட்டும் போடுகின்ற இடங்களாக இல்லாமல் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருகின்ற பள்ளிகளாகவும் இருந்து வருகின்றன. அந்த முறையில் வசதி படைத்தவர்களின் குழந்தைகளுக்குக் கிடைத்து வந்த கல்வியை சாதாரண ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்திருக்கின்ற நமது அரசின் நல்லெண்ணத்தை வரவேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 15] [திரு. மா. சின்னராசு]

ஆக, இப்படிக் குழந்தைகள் முதல், ஆராய்ச்சி செய்கின்ற மாணவர்கள் வரையில் புதிய புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து தமிழகத்தில் கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கு உண்டு என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் தொடர்ந்து, பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம், இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற பெண்கள பல்கலைக் கழகம என்று இப்படிப் பல்கலைக் கழங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆரம்பக் கல்விக்காகப் பணியாற்றும வகையில் குழநதைப் பள்ளிகளில் சத்துணவு அளிக்கும் திட்டத்தையும கொண்டு வந்து, ஆராய்ச்சிப் படிப்புக்காகப் பல்கலைக் கழகங்களையும் கொண்டு வந்து இப்படி இரண்டு பக்கங்களிலேயும பார்த்தால், ஆரம்பம முதல் கடைசி வரையில் கல்வியின் மேம்பாடு கருதி, கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, மக்களின நல்வாழ்வுக்காக எவ்வளவு சிறப்பான திட்டங்களை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை அருளகூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அதுமட்டுமல்ல. பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாது என்ற பழமொழியை யாரோ எதற்கோ சொல்லிவைத்தார்கள். ஆனால் அந்த நிலைமையை மாற்றுகின்ற வகையில் பள்ளிப்படிப்பு நிச்சயமாக வாழ்க்கைக்கு உதவுகின்ற படிப்புத்தான் என்று நிரூபிக்கின்ற வகையில் புரட்சித் தலைவர் அவர்கள் கல்வித் திட்டத்திலே, மேல்நிலைக் கல்வியிலே தொழில் கல்வியையும, உயர்நிலைப்பள்ளிகளில் தொழில் சார்ந்த கல்வியையும் ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துகின்ற வகையிலே திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். ஆனால மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்குகின்றபோது இந்தத் திட்டங்களை நிறைவேற்றி நடத்த முடியுமா என்று கேள்வி கேட்டவர்களும் உண்டு. அவர்களுடைய ஐயப்பாட்டை நீக்குகின்ற வகையில் கிராமங்களிலே மேல்நிலைப் பள்ளிகள் எல்லாம் கல்லூரிகளாக மாறி அதன் மூலம மக்களுக்கு உயர்ந்த கல்வியினைத் தருகின்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. உயர்நிலைப்பள்ளிப் படிப்பையே தாண்டாமல் இருந்த மாணவர்களுக்கு இன்று உயர் கல்வியை, கல்லூரிக் கல்வியைத் தருகின்ற வகையில் அந்தப் பள்ளிகளின் தரம் உயர்ந்திருக்கின்றது. மேலும் இந்தக் கல்வியில் தொழில் கல்வியினை ஏற்படுத்துவதன் மூலம் அவ்வாறு கல்வி கற்றவர்கள தங்களுடைய வாழ்க்கைப் பயனைப் பெறுவதற்குரிய வழிவகை செய்யப்படுகின்றது. தொழில் கல்வியைப் படிப்பதன காரணமாக அதற்கேற்ப வேலை வாய்ப்பை அவர்கள் பெறுகின்ற நிலைமை ஏற்படுவதை நாம் கவனிக்க வேண்டும்.

கல்வி வாழ்க்கைக்கு உதவுகின்ற வகையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்ற எண்ணத்தைக் கொண்டிருக்கின்றது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே எப்படி ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்பது சரித்திரத்திலே இடம் பெற்றிருக்கின்றதோ அதைப்போல் வாழ்க்கைக்குப் பயன் தருகின்ற தொழில் கல்வியைக் கொண்டுவந்தது புரட்சித் தலைவரின் ஆட்சிக்காலத்தில் தான் என்பதும் கல்விச் சரித்திரத்திலே இடம் பெறும்.

மேல்நிலைப் பள்ளிகளில் இரண்டாண்டு கல்வியைக் சொல்லிக் கொடுக்கும்போது, அதிலே தொழில் கல்விக்கென்று தனியான ஒரு சான்றிதழையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது அவர்கள் மேல்நிலைக் கல்வியில் கல்வி கற்றதற்கான சான்றிதழோடு தொழில் கல்வி கற்றதற்கான ஒரு சான்றிதழையும் கொடுக்கவேண்டும். அது ஐ.டி.ஐ. சான்றிதழ் போன்றவற்றிற்கு இணையாக இருக்க வேண்டும். ஆகவே அந்த அளவுக்கு தாம் கற்ற கல்வியில் ஒரு தரத்தை வைத்து அதன் மூலம் பெறுகின்ற சான்றிதழைக் கொண்டு மாணவர்கள் வேலை வாய்ப்புக்களையும் பெறுகின்ற அளவுக்கு அந்தத் தொழில் சார்ந்த கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்று சமுதாயத்தில் கல்வி மேம்பாட்டிற்காக ஆசிரியர்களும், பொதுமக்களும் சேர்ந்து உழைத்தாலொழிய, இவ்வளவு பெரிய சமுதாயக் கடமையை ஆற்ற முடியாத, நிறைவேற்ற முடியாத சூழ்நிலைதான் ஏற்படும். ஆகவே இந்த அரசைப் பொறுத்தவரையில் தனியார் கல்விக்கூடங்கள் சிறப்பாக நடப்பதற்கு உறுதுணையாக இருக்கின்ற அதே நேரத்தில் தவறு செய்கின்ற, அல்லது வேறு நோக்கங்களுக்காக இந்தக் கல்விக் கூடங்களைப் பயன்படுத்துகின்ற தனியார் நிறுவனங்களைக் கண்டிப்பதற்கு தயங்குவதில்லை. ஆகவே தனியார் பள்ளிகளை ஆதரிக்கிறோம் என்ற அதே நேரத்தில் தவறு செய்கின்ற தனியார் பள்ளிகளை அரசே ஏற்றுக்கொள்கின்ற வகையில் விதிமுறைகளை வகுத்து அந்த வகையிலே ஒரு புரட்சிகரமான சட்டத்தை இந்த அவையின் முன்னால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் கல்வி மேம்பாட்டிற்கு அரசாங்கம் எடுத்துக்கொள்கின்ற முயற்சிகளுக்குத் தனியார் உதவியே தேவையில்லை என்று அறவே ஒதுக்கி விட முடியாது. தனியார் பள்ளிகளும், கல்லூரிகளும் எவ்வளவுக்கெவ்வளவு பொதுமக்களின் கல்வி வரலாற்றிலே முக்கிய இடங்களைப் பெற்றிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. அந்த வகையில்தான் பாலிடெக்னிக்குகளை, அதாவது பல் தொழில் கல்விக் கூடங்களை அரசினுடைய நிதியிலிருந்து ஏற்படுத்த முடியாது என்ற நிலை இருக்கின்றபோது தனியார் பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்துவதன் மூலம் பல்தொழில்





கலைப் பள்ளிகள் என்று கல்லூரிகள் நாடெங்கிலும் ஏற்பட்டு மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வியினைப் பெறவும், அதன் மூலம் வேலைவாய்ப்பினைப் பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காக அந்த கல்வியைப் பெற்றிருக்கின்ற, கல்வியைப் பெறுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற பொது மக்களின் சார்பிலே நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி தொழில் கல்வியிலும், ஆரம்பக் கல்வியிலும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியிலும் ஆராய்ச்சிக் கல்வியிலும் இப்படி அத்தனை நிலைகளிலும் அரசாங்கத்தினுடைய திட்ட ஒதுக்கீட்டை அதிகரித்து எல்லா நிலைகளிலும் கல்வித் தரத்தை மேம்பாடு செய்து நிதிநிலை அறிக்கையில் இடம் அளித்து இருப்பதை பலர் பார்க்க மறுக்கிறார்கள். மொத்தச் செலவினத்தில் 21 சதவீதம் என்றும், 402 கோடி என்றும் கல்விக்காக ஒதுக்கி இருப்பது உயர்ந்து விட்ட விலைவாசிக்கேற்பதான ஒதுக்கப்பட்டிருக்கின்றதே தவிர ஒன்றும் அதிகமாக ஒதுக்கிவிடவில்லை என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் அவ்வாறு அவர்கள் சொல்வது எவ்வளவு தூரம் உண்மை என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்; அவர்கள் போட்ட திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு எண்ணிப்பார்க்க வேண்டும். 21 சதவீதம் எந்த பட்ஜெட்டிலும் கல்விக்காக ஒதுக்கப்பட்டது கிடையாது. மொத்த நிதியில் 21 சதவீதம் என்பதை எடுத்துக் கொண்டு பார்த்தால்தான் உண்மை தெரியும். ஆகவே கல்வி தான் ஒரு சமுதாயத்தினுடைய மறு மலர்ச்சிக்கும் சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கும் உறுதுணையான ஒன்று என்பதை நிருபித்துக் காட்டுகின்ற வகையில், அந்த உண்மையை உணர்ந்து கொண்டு கல்விக்கு முதலிடத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தந்து.................................
(மணியடிக்கப்பெற்றது).

## 7. அறிக்கை அளித்தல்.

### விதி 106-ன் கீழ் நீதிபதி இராமபிரசாத்ராவ் விசாரணைக்குழுவின் முடிவுகள் பற்றிய அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவை விதி 106-ன் கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து அவையின் முன்னவர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கையை வாசிக்க அறிவிப்புத் தந்துள்ளார்கள். நீதிபதி இராமபிரசாத்ராவ் விசாரணைக் குழு தனது விசாரணை முடிவுகளை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளதாகவும் விசாரணைக் குழுவின் முடிவுகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் பேரவைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேரவையில் விசாரணைக் குழுவின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனுடைய நகல் பேரவையினுடைய நூலகத்தில் உள்ளது.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சட்டப் பேரவை விதி 106-ன் கீழ் சட்டமன்றப் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிக்க விரும்புகிறேன்.

அரசாணை (பல்வகை), எண் 284, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை, நாள் 30-11-1981-ல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் மீது சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் ஆகியவற்றின் உற்பத்தி, மொத்த விநியோகம், சில்லறை விநியோகம், ஆகியவற்றின் உரிமை, உரிமம் வழங்குதல் மற்றும் இவை தொடர்பான பொருள்பற்றி சாட்டுரைகளை விசாரிக்க ஒரு விசாரணைக் குழு நியமித்து அறிவிக்கை வெளியிடப்பட்டது. பின்னால் திருத்தப்பட்ட இவ்வறிக்கையின்படி விசாரணைக் குழுவால் நியமிக்கப்பட்ட நீதிபதி திரு. டி. ராமபிரசாத் ராவ் அவர்கள் தனது அறிக்கையை அரசுககுச் சமர்ப்பித்துள்ளார். விசாரணைக் குழுவின் முடிவுகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. விசாரணைக் குழுவினால் அளிக்கப்பட்டுள்ள அதன் முடிவுகள் இப்பொழுது ஆங்கிலம் ஆக்கம் படிக்கப்படுகிறது. அதனுடைய தமிழ் ஆக்கம் விரைவிலே தரப்படும். அதனுடைய முழு விவரமும் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும்.

**திரு. துரைமுருகன் :** ஹைகோர்ட்டிலே கேஸ் போடப்பட்டு இருக்கிறதே, ஸ்டே வாங்கப்பட்டிருக்கிறதே, ...............

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த ஸ்டே வெக்கேட் ஆனதாலே அரசுக்கு ராமபிரசாத் ராவ் அந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறார். அரசு அதை ஆராய்ந்து ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது பத்திரிகையிலே வருவதற்கு முன்னாலே மன்றத்திலே தெரிவிப்பது நல்லது என்று கருதி அதனுடைய முடிவுகளை மட்டும் தெரிவிக்கிறோம் முழு அறிக்கை. 400 பக்கங்களுக்கு மேலே வருகின்றன. அதை அச்சடித்து—தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டிலும்—மாண்புமிகு உறுப்பினர் அத்தனை பேருக்கும் வழங்க இருக்கிறோம். தற்போது அறிக்கை அரசுக்கு வந்துவிட்ட காரணத்தாலே, அவை நடந்து கொண்டு இருக்கும் போது, அவைக்குத் தெரிவிப்பது முறை என்று கருதுவதாலே அவைக்குத் தெரிவிக்கப்படுகிறது,

Commission of Inquiry— Presided over by JUSTICE T. RAMA PRASAD RAO.

Chapter XII—Summary of findings and observations.

Allegation No. 1

Whether Thiru M.G. Ramachandran, Chief Minister of Tamil Nadu or Thiru S.D. Somasundaram, Minister for Revenue in charge of Excise or any other Minister of the Cabinet of the Government of Tamil Nadu



or any other public servant has collected huge amount's as illegal gratification in connection with the grant of privilege and issue of licences under the Tamil Nadu Prohibition Act, 1937 and the rules made thereunder.

*Finding :*

Excepting for the allegations made in the Press and on the floor of the House, the same remains unsubstantiated. The members of the Assembly Thiru M.Karunanidhi and Thiru V. Krishnamurthy, M.L.A., who were allowed to participate in the inquiry before the Commission refrained from filing affidavits when the Commission called upon all persons acquainted with the subject matter to file statements. Person accusing others should be willing to make sacrifice to the extent of subjecting themselves to public examination instead of being complacent and evasive. The privileged statements and veiled allegations in the Press are not at all proved or sustained in the proceedings before the Commission. Apart from this, P.Ws. 2 and 3 whose money is the subject matter of discussion in this inquiry would say that they parted with their money for a legitmate business purposes and the object having failed they have filed civil suits in the High Court for the recovery of Rs. 10.75 lakhs which they themselves characterise as a loan lent by them to the receivers, namely, Tvl. Sukumaran and Chakrapani. It is not at all established that the Chief Minister or the Revenue Minister or any other Minister of the Cabinet of the Government of Tamil Nadu or any other public servant collected huge amounts or any amount at all as illegal gratification in connection with the grant of privilege and issue of licences under the Tamil Nadu Prohibition Act and the rules made thereunder.

*Allegation No. 2 :*

Whether Thiru M.G. Ramachandran, Chief Minister of Tamil Nadu or any other Minister of the State or any public servant has committed any offence punishable under the Prevention of Corruption Act, 1947 or under the Indian Penal Code by obtaining illegal gratification or by causing unlawful gain to others or by otherwise abusing his position or authority in the matter of grant of privilege and issue of licences in the trade of arrack and Indian Made Foreign Spirits.

(This is covered by terms A and B in the analysis of a Notification given in Chapter I and paragraph 2(1) and Annexure I (1) and (2) of the Notification).

*Finding* (1) : We have seen in the course of enquiry that the Chief Minister has at no time had anything to do with the decision making on the applications for licences. In Chapter VIII Volume 3, this matter has been dealt with. This is not provided under the rules. In so far as the Minister for Revenue in charge of Excise is concerned, as Excise Minister he has to accord prior approval to a recommendation made by the Commissioner of Prohibition and Excise. At the time when such prior approvals are given, the files disclose that every standard of care was taken by the public servant in seeing that the prescriptions under the Act and under the rules are satisfied to the hilt by every applicant. It was on the basis of such scrupulous examination the recommendation as made by one of the public servants who is the Commissioner of Prohibition and Excise which ultimately comes to the Revenue Minister for the prior approval. While giving such pior approvals also, the Revenue Minister sometimes did not agree with the recommendation and sent it back for fresh disposal. In these circumstances, it cannot be predicted that either the Chief Minister or the Minister for Revenue in charge of Excise or any other Ministers or any public servant obtained any illegal gratification or did something to cause unlawful gain to others or abused in fact their position or authority.

*Finding No.* 2.—In Volume II in Chapter VI the Commission has referred to the modus adopted by the public servants and the Revenue Minister in the matter of the grant of privileges and issue of licences for manufacture of arrack and Indian Made Foreign Spirits and connected matters. The Commission had occasion to look into more than thousand files to find out whether in the matter of such grant of privileges and licences, it could be said that any of the Ministers of the State or the public servants have committed an offence under the Prevention of Corruption Act, 1947, or under any other law or indulged in illegal gratification by abusing their authority or by causing unlawful gain to others. An insinuation was made from time to time both in the Press and on the floor of the House that many of the grantees are benamidars for out-of-State persons. In the light of this allegation which stood always and till today as a bare allegation, the Commission had to particularly high-light such of those facts on the files which might have a relevancy to the above insinuation that grantees are benamidars of others. The Commission searched in vain for any substance in those allegations. Not only the grantees but also those who were accused of having lent their names and probably their finance so as to set up their benamidars as grantees in this State for the various licences have sworn to affidavits denying all such allegations. Besides the grantees filing their own self-serving affidavits, others have also filed affidavits denying any corrupt practice and the alleged benami nature of the grants. Appendix VII and VIII contain such affidavits besides 175 affidavits in Appendix V



by the grantees themselves. Here again therefore this allegation about the alleged commission of any offence under the Prevention of Corruption Act, 1947, or under any other law remains unsubstantiated. There is no tittle of evidence or acceptable material to find that the Ministers of State or any other public servants obtained any unlawful consideration or caused unlawful gain to others while dealing with grant of privileges and licences both for arrack and Indian Made Foreign Spirits.

(பிற்பகல் 1.10)

While on this, the architects of this inquiry who willingly offered evidence, namely, P.Ws. 2 and 3 would confess that the idea of bribe and corruption never entered into their minds at any time and it was only Thiruvalargal Balan and Gauthaman who put such nefarious thoughts in them. This was the reason why they characterise them as unscrupulous and dishonest persons. We have already expressed that the Chief Minister had nothing to do with such grants and privileges and the Revenue Minister acted as a statutory functionary while dealing with such licences. I find that the Chief Minister and the Revenue Minister never indulged in any illegal practice or obtained any illegal gratification for the purpose as aforesaid. I also find that no extraneous consideration other than strict observance of law and subservience of established administrative procedure is decipherable from the records and oral and documentary evidence.

In the witness box, P. Ws., 2 and 3 and even P. W. 1, whose evidence is characterised as hearsay, in a camouflaged fashion referred to the Harijan Welfare Minister and the Law Minister as if they were also involved in the alleged bribery spree. When specifically confronted about it, they dressed themselves with a veil of innocence by transfering their woeful story to the mouths of Thiru Balan and Thiru Gouthaman who, ultimately, they had to admit as dishonest persons. They would invent a story that there was rumour that in the State of Tamil Nadu various districts were territorily divided between the State Ministers in the matter of collection of illegal gratification. It is in this context that the names of Harijan Welfare Minister and the Law Minister were trotted out as the primary persons in the alleged territorial division in charge of Madras and Chengalpattu. Even according to the volunteering witnesses, Thiru Vijayasarathy was only contacted for getting an assurance in the matter of purchase of machinery. For a shrewd businessman to be told by a Minister of a State that he should purchase machinery if he wants to do businesss, is something which cannot be believed at all. I have already held that having regard to the discrepancies in the dates of the meeting and the purpose for which the meeting is said to have been arranged for, there was no such meeting at all as between P.Ws. 2 and 3 and the Minister for Harijan Welfare Thiru Vijayasarathy.

Apart from this reference, there is nothing on record to show that the Harijan Welfare Minister was a party to receive any illegal gratification or was tempted to indulge in any illegal practice for securing the grants in favour of the grantees.

In so far as the Law Minister, Thiru Ponnaiyan is concerned. Mr. Ramaswami appearing for the three volunteering witnesses P. Ws. 1, 2 and 3 categorically represented that he did not want even the examination of the Law Minister and that there is no case against the Law Minister so far as his clients are concerned. A very casual reference was made to the name of the Law Minister which again was dexterously introduced by one or the other of the unscrupulous persons. Excepting for such was woven into the false fabric invented by Thiru Balan and Thiru Gouthaman, there is no other circumstance or fact which would highlight upon the involvement in any manner of the Law Minister in the matter of grant of the privileges and licences under the Act and the rules.

I find that the Law Minister Thiru Ponnaiyan and the Harijan Welfare Minister Thiru Vijayasarathy never indulged in any illegal practice or obtained any illegal gratification for and in connection with the grants of privileges and licences to the applicants under the Tamil Nadu Prohibition Act and the rules made thereunder. They never dealt with, nor did they have any occasion or necessity to deal with the files relating to the grant of such licences.

*Allegation No.* 3 :

Whether Thiru M. G. Ramachandran, Chief Minister of Tamil Nadu or Thiru S. D. Somasundaram, Minister for Revenue in-charge of Excise or any other Minister of the Cabinet of the Government of Tamil Nadu or any other public servant committed any irregularity, impropriety, misconduct or abuse of power or contravention of the Prohibition Law in the matter of the grant of privilege and issue of licences in the trade of arrack and Indian Made Foreign Spirits.

(This allegation is covered by terms F. & G. in the analysis of the Notification given in Chapter I and Paragraph 2 (2) and Annexure I (1) and (2) of the Notification).

*Finding*.—I find on a through examination of the oral and documentary evidence as seen from Vol. II, Chapter VI particularly the files under which such grants and privileges were granted, no irregularity, no impropriety and no abuse of power or contravention of Prohibition law on the part of the above persons. I, therefore, follow that no misconduct eitherin law or in fact has been committed by the above persons.





*Allegation No.* 4 :

Whether Thiru M. G. Ramachandran, Chief Minister of Tamil Nadu or Thiru S. D. Somasundaram, Minister for Revenue in-charge of Excise, or any other Minister of the Cabinet of the Government of Tamil Nadu or any other public servant have committed any offence known to law or indulged in any irregularity or illegality when the distillery licences were cancelled and re-granted, when there was a waiver of excise duty and vend fee payable at the distellery point and when there was a postponement of the opening of the retail arrack shops from 1st June 1981 to 16th July 1981.

[This refers to terms C.D.E.H.I. J in the analysis of the Notification given in Chapter I and Paragraph 2(1) and (2) read with Annexure I items (3), (4) and (5) of the Notification].

*Finding* : Apart from the Ministers who have chosen to file affidavits before the Commission which demands acceptance as evidence under Section 4(c) of the Act, prominent and high-placed officials like Thiru T. V. Venkataraman, I.A.S., Thiru Nammalwar, I.A.S., and Thiru S. Panchapakesan, Joint Commissioner have filed affidavits touching upon the matters under consideration. In Chapter IX, Volume IV, we have fully discussed the pros and cons and found that at no point of time there was any infringement of law or any subversion of procedure or an excessive exercise of jurisdiction or statutory power by the authorities (*a*) when they cancelled the distillery licences and granted fresh distillery licences under Tamil Nadu Act 51 of 1981 ; (b) when they waived excise duty and vend fee at the distillery point ; and (*c*) when they postponed the opening of arrack retail shops from 1stJune 1981 to 16th July 1981. Expediency is not a matter which could easily be the subject matter of criticism unless there is an element of malafides involved in it. Word of mouth or a veiled statement in the Press is not a substitute for proof supported by particulars. Law mandates that particulars which are clinching and definite are to be placed before the Commission for its consideration. Statutory functionaries, having regard to the exigencies and the circumstances, had to act in the way they did and excepting for a bare allegation of Thiru Nellikuppam Krishnamurthy on the floor of the House, which he did not follow up by filing at least a statement or affidavit before the Commission, no one, who is otherwise participating before the Commission pointed out any impropriety, irregularity or abuse of power while the licences for distillaries were cancelled and regranted, etc. The Commission if is firmly of the view that in the matter under consideration, no offence under any law has been committed by anyone and there has been no misconduct or abuse of power or contravention of prohibition law on the part of the Chief Minister or the Revenue Minister or any other Minister of the

Cabinet of the Government of Tamil Nadu or any other public servant In fact, the Ministers of the State have filed affidavits to explain their stand and position. I accept their evidence and find that this allegation has not been proved.

*Allegation No.* 5.

Whether Thiru M. G. Ramachandran, Chief Minister, or Thiru S. D. Somasundaram, Minister for Revenue in-charge of Excise, or any other Minister of the Cabinet of the Government of TamilNadu or any other public servant, did confederate with any one including Nellipuzha Jose and others for illegal consideration while granting privileges and licences for manufacture of arrack.

[This is covered by term K in the analysis of the Notification given in Chapter I and Paragraph 2(3) read with Annexure II (1) of the Notification].

*Finding* : We have already seen in Volume II, Chapter VI and Vol. IV in Chapter X, as to how the story of an arrangement or agreement between the Cheif Minister and other Ministers of the State on the one part and Nellipuzha Jose and others on the other part stand only as a bare and unsubstantiated allegation. In fact, in the Notification when the Commission was asked to enquire, the words used are " Nellipuzha Jose *and others* ". The Commission noticed in the course of discussion in Chapter VI. that various other persons who were provoked by the Press Criticism and public statements have come forward to file affidavits before the Commission to swear and to assert that they have nothing to do with the grant of privileges and licences for the manufacture of arrack in the State of Tamil Nadu and that the fantastic story that illegal consideration passed under a pre-conceived agreement between some persons and the Ministers of the State are totally baseless. Having noticed such affidavits on its file, the Commission dealt with them in detail and made observations accepting those affidavits filed by independant third parties challenging the averment as to any agreement between them and the Chief Minister and Revenue Minister and other Ministers of the State and Public servants. For the reasons already fully set out in the above Chapters, the Commission is of the firm view that there was no agreement between the Chief Minister and other Ministers of the State and public servants of the State on the one part and Nallipuzha Jose and others on the other part referred to in the Legislative Assembly on 28th August 1981 in the matter of grant of privileges and licences for manufacture of arrack and the entire edifice concerning this charge falls miserably to the ground.



*Allegation No.* 6.

Whether Thiru M. G. Ramachandran, Chief Minister or Thiru S. D. Somasundaram, Minister for Revenue in charge of Excise or any other Minister of the Cabinet of the Government of Tamil Nadu or any other public servant colluded with the licensees of arrack bottling plants or licensees for whole sale supply of arrack in fixing huge margin of profits with a view to share the profits.

[This is covered by term L, in the analyses of the Notification given in Chapter I and Paragraph 2 (3) read with Annexure II (2) of the Notification].

(பிற்பகல் 1.20)

Finding.—From the records it is seen that the price pattern fixed for arrack is not the result of a sudden decision. But it was after due analysis and after weighing pros and cons of the existing price structure, after hearing the trade which was affected by it, the Government was persuaded to fix the price. In Chapter X Volume IV, we have delat with this aspect in detail. The officials concerned have set out in their affidavit, the detailed working sheets resulting in the refixed price, and state that such a decision was taken after the trade was consulted and after taking into consideration the prices in the neighbouring States as well. Thiru M. Karunanidhi who raised an objection regarding the price structure including the often-harped theory of benami, which has already been found to be false, did not pursue his objections by coming openly before the Commission by filing an affidavit sustaining his objection as regards refixed price. The challenge, therefore, remains as a bare challenge without the same being substantiated by any acceptable material which could be considered by the Commission. It is seen that the well-known enconomic principle in fixing a price for marketable commodity were borne in mind by the State Government.

No material being available to disturb the price as fixed, I I see no justification at all in accusing the Chief Minister or the Revenue Minister or any other Minister of the State or public servant on such fixing of the price. The gravamen of the charge that the Chief Minister and others colluded with the licensees to share the profits to say the least, is unwarranted without the same being backed up or supported by any material, which could be brought up before the Commission for consideration. I find this allegation also as baseless. Instead of the accusers being pedantic they should have also borne in mind the moral component which takes its legitimate and rightful place while accusing others.

**Allegation No. 7 :**

Whether the Chief Minister or any other Minister of the State or any one else have acted in any manner contrary to the established practice and rules and if so, to fix the responsibility for the same. [This is covered by term M in the analysis. of the Notification given in Chapter I and Paragraph 2 (4) of the Notification].

**Finding :**

At the second session, when this Commission took charge here was no doubt whatsoever that it was only the three volunteering witnesses, who were willing to get into the box and speak about as to how Rs. 10.75 lakhs of their money was dealt with by them. In the course of their examination it became necessary for the Commission to call for files relating to the grants and privileges for arrack and or Indian Made Foregin Sprits. Those files were made available as early as May and June 1983. The enquiry concluded when this Commission reserved its decision on 15th September 1983. By that time, through counsel and their arguments and through oral and documentary evidence on record, there was full appraisal of the necessary and relevant facts concerning the Notification. At that point of time and till now, there is nothing which would suggest that there is anyother matter either connected with or incidental toany act or omission or transaction referred to in the Notification dated 30th October 1981 under which the Commission has been appointed . All the more so, this is the position since the Commission has rejected all the interlocutory applications as being without any substance. Repeatedly this Commission, while dealing with the otherissues, has held that no one including the Ministers and public servants have committed any offence at all or indulged in any irregularity, impropriety or illegality. This charge therefore is answered in favour of the Ministers and public servants and the Commission finds that nothing more survives for a further enquiry to be under taken on any so-called incidental matter connected with the subject. (Vide Vol. V. Chap. XXI).

**Allegation 8 :**

Whether in the framing of the fresh rules during the period from 21st March 1981 and ending with the date of the publication of the Notification, namely 30th October 1981, providing for separate licences for wholesale supply and retail supply of arrack or Indian Made Foreign Spirits and fixing the number of wholesalers in the State forWholesale supply of arrack or Indian Made Foreign Spirit,there is violation of any kind. [This is covered by term N in the analysis of the Notification given in Chapter I and Paragraph2 (5) of the Notification].



**Finding :**

In Chapter XI Volume IV, we have dleat with this in detail and it is unnecessary to refer to them at the time of rendering the final conclusions I find there is no violation in the matter of framing of rules during the period in question providing for separate licences for wholesale and retails supply of arrack and Indian Made Foreign Spirits and fixing the number of wholesalers for arrack and Indian Made Foreign Spirit in Tamil Nadu. Such rule making power is available to the State Government and such rules have not even been questioned in a manner known to law. I therefore find that there is no violation of any kind when the fresh rules were framed between 21st March 1981 and 30th October 1981.

Finally and in the light of my findings on each of the allegation as above, I reiterate that the Chief Minister of Tamil Nadu has to be completely exonerated from any charge or blame whatsoever as all the allegations made against him have been proved to be totally false and baseless. This conclusion applies to all the other Ministers of the State and public servants also.

**திரு. அ. ரகுமான்கான் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார் ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதன் பேரிலே கிடையாது. இந்த ஸ்டேட்மெண்டிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் ?

**திரு. அ. ரகுமான்கான் :** நான் ஒன்றும் தப்பாகக் கேட்கவில்லை ஸ்டேட்மெண்ட் பேரிலேயும் எதுவும் கேட்கவில்லை, நான் சொல்வது தப்பாக இருந்தால் உட்காரச் சொல்லுங்கள், உட்காருகிறேன்.

இங்கே அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே பால் கமிஷன் அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்பட்ட போது சட்டசபையிலே விவாதத்திற்கு அனுமதிக்கப்பட்டது..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன்.

You are going into the details of the case.

**திரு. அ. ரகுமான்கான் :** நான் சொல்வதைக் கேட்டு விட்டு, பிறகு தப்பு என்றால் சொல்லுங்கள்............

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். இந்த அறிக்கையைப் படிப்பதற்கு முன்னாலே நான் குறிப்பிட்டேன். ராம்பிரசாத் ராவ் கமிஷன் கொடுத்திருக்கிற அந்தத் தீர்ப்பு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டது. அரசாங்கம் அதைப்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 15

படித்து பின்னர் ஏற்றுக் கொண்டது. அந்த பைண்டிங்ஸ் மட்டும் முழுவதும் இப்போது நான் படித்தேன். அந்த பைண்டிங்ஸ் முழுவதும் இன்று மாலைக்குள்ளேயே எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படும். அதற்குப் பிறகு அதனுடைய மொழி பெயர்ப்பும் தரப்படும். நானூற்றுச் சில்லரைப் பக்கங்கள் இருக்கின்றன. ஆங்கிலம், தமிழ் இரண்டும் அச்சடித்து எல்லோருக்கும் தரப்படும். அதற்குப் பிறகு, பால் கமிஷன் அறிக்கையைப் போல, விவாதிப்பதற்கென்றே ஒரு நாளோ, இரண்டு நாட்களோ எடுத்துக் கொள்ளப்பெறும்.

அதைப்பற்றி அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு எடுத்துக்கொள்ளலாம். தனியாக எடுத்துக் கொள்ளலாம். அந்த அறிக்கை அத்தனை பேர்களுடைய கையிலேயும் இருந்தால்தான், முழு விவரங்களையும் தெரிந்து கொண்டு விவாதத்தில் கலந்து கொள்ள இயலும். உடனடியாக இன்றே நான் படித்தது எல்லோருக்கும் தரப்படும். அதற்குப் பிறகு, அதனுடைய மொழி பெயர்ப்பு தரப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**6. வரவு-செலவுத் திட்டம், 1984–85 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)**

கோரிக்கை எண். 17—கல்வி—(தொடர்ச்சி).

**திரு. மா. சின்னராசு**—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையில் கல்வி வளர்ச்சிக்காக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலைமையில் அரசாங்கம் பல்வேறு நிலைகளில் கல்விக்காக ஏற்படுத்தியிருக்கிற நல்ல திட்டங்களைப் பற்றி குறிப்பிடுகிற வாய்ப்பைப் பெற்றேன். அதே போல் கல்வியின் இன்னொரு கூறு ஆசிரியர்கள் அவர்களது நலனில் புரட்சி தலைவர் அவர்களின் அரசு நமது கல்வி அமைச்சர் அவர்கள் எவ்வளவு தூரம் பெரு முயற்சிகள் எடுத்துக் கொண்டு அவர்கள் கோரிக்கைகள் வருகிற நேரங்களிலெல்லாம் அவைகளை நிறைவேற்றி அவர்கள் மனதில் மாணவர்களுக்கு கல்வி புகட்ட வேண்டும் என்கிற ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1984 மார்ச் 15] [திரு. மா. சின்னராசு]

கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள் சங்கங்களில் ஆசிரியர்கள் கூட்டங்களில் பேசுகிற நேரங்களிலெல்லாம் ஆசிரியர்கள் கோரிக்கைகளுக்காகப் போராடுகிற நேரத்தில் அந்தப் போராட்டம் தோல்வி அடைந்துவிடக் கூடாது என்பதில் நான் மிகவும் அக்கறையாக இருக்கிறேன் என்று சொல்வார்கள். அப்படி ஒரு தோல்வி உணர்வு ஏற்பட்டு அதனால் அவர்கள் மீண்டும் கல்விக் கூடங்களுக்குச் செல்கிறபோது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற மனச் சங்கடத்தில் மன நிறைவற்ற தன்மையில் பள்ளிக்கூடங்களில் பாடம் சொல்லிக் கொடுக்கிற மன உணர்வு இல்லாமல் போய் விடும், அது கல்வியின் தரத்தைப் பாதிக்கும் என்ற வகையில் அந்த ஆசிரியர்கள்பால் ஒரு சமுதாய ஆசிரியராக இருந்த அவர் எந்தக் குறையும் இல்லாமல் கோரிக்கைகள் அனைத்தையும் அவர்கள் பெற்றுவிடுவதற்கான நல்ல சூழ்நிலைகளை ஏற்படுத்தியிருப்பதையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

இன்று மேல்நிலைப் பள்ளிகளில் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களின் பதவிகள் வரைமுறை செய்யப்படவில்லை என்ற கோரிக்கையை அண்மையில் எழுப்பி ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தை அவர்கள் நடத்தினார்கள். சர்வீஸ் கமிஷன் மூலம் அவர்களை அந்தப் பதவிகளில் வரைமுறைப்படுத்துவதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று அரசு சொல்லியுள்ளது. ஆசிரியர்கள் தங்கள் தேவைகளைக் கேட்கும் போது, தங்கள் உரிமைகளைக் கேட்கிறபோது அவர்கள் எந்தச் சார்புடையவர்களாக இருந்தாலும் அல்லது சங்கங்கள் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டாலும்கூட அவர்கள் கோரிக்கைகளில் அக்கறை செலுத்தி, ஆசிரியர்கள் நலனில் கவனம் செலுத்தி அவற்றை அரசு நிறைவேற்றி வந்திருக்கிறது என்பதை நான் பெருமிதத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்குள்ள ஆசிரியர்களுக்கு ஒரு குறைபாடு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்கியதற்குப் பின்னால் மற்ற அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கக் கூடிய மலைப் பிரதேசங்களில் கொடுக்கப்படுகிற பிரத்தியேகப் படி இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற கோரிக்கையை அவர்கள் முன் வைத்திருக்கிறார்கள். அதில் அரசாங்கம் நல்லதொரு முடிவை எடுத்து நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கும் அந்தப் படி கிடைத்திடச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பாரதியார், பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற என் தொகுதியில், பல்கலைக் கழகத்திற்காக நிலத்தைக் கொடுத்திருக்கின்ற விவசாயிகளுக்கு, அவர்கள் குடும்பத்தில் வீட்டிற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை

கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். நேற்றைய முன் தினம் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொல்லுகின்ற நேரத்தில், இது அரசின் கொள்கை என்று ஒப்புக் கொண்டு, மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான பெல் நிறுவனத்திற்காக எடுக்கப்பட்ட நிலத்திற்கு, அதனுடைய உடைமையாளர்களுக்கு மத்திய அரசாங்க நிறுவனம் வேலை தர வேண்டும் என்று வற்புறுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். அதே அடிப்படையில், இந்தப் பல்கலைக் கழகத்திற்காக எடுக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு, அவர்கள் வேறு தொழிலில் இல்லாமல் இருக்கிற நிலையில் அவர்கள் பெற்றிருக்கின்ற கல்விக்கும், தகுதிக்கும் ஏற்ப வேலை அளிக்க அரசு முன் வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற் கல்வியில் மட்டுமல்லாமல், தமிழ் ஆராய்ச்சிக்காகவும் தமிழ் வளர்ச்சிக்காகவும், கலாச்சார மேம்பாட்டிற்காகவும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே அடுக்கடுக்காக பல சாதனைகளை எடுத்துக் கூறியிருப்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன் உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ் பல்கலைக் கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்றவற்றை தமிழ் மேம்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் வழிகள் ஏற்படுத்தியிருப்பதோடு, பிற நாடுகளில் பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆராய்ச்சிக்கு நிதி உதவி வழங்கியும் முந்தைய ஆட்சிக் காலங்களில் இருந்ததை விட, நாம் பலப்பணிகளை தமிழ் வளர்ச்சிக்காக செய்திருக்கிறோம் என்பதை நான் இங்கே உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், தமிழ் அகராதி ஏற்படுத்துவதற்கும் கலைக் களஞ்சியம் ஏற்படுத்துவதற்கும் சிறப்பான திட்டங்களை அறிவித்திருப்பது, அனைத்து உறுப்பினர்களாலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். பழங்குடிகள் பண்பாட்டு ஆய்வு மையம் என்ற ஒன்றை உதகையில் ஏற்படுத்தி, அதற்கான சிறப்பான திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருப்பதை நான் இந்த மன்றத்தின் உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அதேபோல், இன்று தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் தமிழகத்திலே செயல்பட்டு வருகிறது. மத்திய அரசாங்கம், வடமாநிலங்களில் பல இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சிக்காக நிதி ஒதுக்கி இருக்கின்றது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்த அளவில் இதிலே சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லப்படுகின்றது. ஆகவே, மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, உலகத்தின் தொன்மையான மொழி, மிகப் பழமையான கலாச்சாரத்தை உடைய மொழி தமிழ் என்று அதன் பெருமையை எடுத்துச் சொல்லி, இதை உலகத்திற்கு எடுத்துகாட்டும் வகையில் செயல்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்பதோடு, உயர் நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிட வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டிட வசதி செய்து கொடுப்பதற்காக, எப்படி ஒரு தன்னிறைவுத் திட்டதின் மூலம் கொண்டு வரப்பட்டதோ, அதேபோல் இதற்கும் ஒரு தனியான தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, உயர்நிலைப் பள்ளிகளிலும் இடம் பற்றாக் குறை, ஆய்வுக் கூடம், மற்றும் விஞ்ஞான உபகரணங்கள் போன்றவற்றிற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்பப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கி விட்டு, பின்னர் ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்கெனவே இருக்கின்ற கட்டிடங்களைப் பழுது பார்க்கின்ற பணிக்கு, ஊராட்சி ஒன்றியப் பணத்திலிருந்து செலவிட வேண்டுமென்று அரசு ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால், அவை இன்னும் பழுது பார்க்கப்படாத நிலையிலேயே இருக்கின்றன என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, இவற்றைப் பழுதுபார்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பல ஆண்டுகளாக இந்த ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் பழுதுபார்க்கப்படாத நிலையிலேயே இருக்கின்றன. எனவே, ஊராட்சி ஒன்றியங்கள் உடனடியாக இவைகளைப் பழுது பார்க்கவேண்டும் என்ற உத்திரவினை வழங்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொண்டு, ஆசிரியர்களாலும், கல்வியாளர்களாலும், மற்ற பிற அறிஞர்களாலும் பாராட்டப்படுகின்ற இந்தக் கல்வித் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று, என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(மாலை 4-10)

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையின் மீது இன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்கிறேன். மாண்புமிகு மேதகு ஆளுநர் உரையில் அரசாங்கத்தினுடைய கொள்கைக் குறிப்பில் கல்வி பற்றி குறிப்பிடுகிறபோது நம்முடைய சமுதாயத்தை இன்று எதிர் நோக்கியுள்ள மிக முக்கியப் பிரச்சினை தற்போதைய கல்வி முறையில் படித்துவிட்டு வரும் எண்ணற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுதான். அனைத்து நிலைகளிலும் உள்ள பொதுவான கல்விமுறை, வேலை வாய்ப்பை அளிக்க முடியாத அளவிற்கு மனித ஆற்றலை உருவாக்கித் தந்துள்ளது. இவர்களிடையே வளர்ந்து வரும் அதிருப்தி, சமுதாயத்தில் அமைதியின்மையையும் பதட்டநிலையையும் அதிகமாக்குகின்றது. என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் இன்றைக்கு கல்வி முறையில், மெக்காலே

[திரு. மு. அப்பாதுரை] [1984 மார்ச் 15

காலத்திலே உருவாக்கப்பட்ட கல்வி முறையில் உள்ள அவலங்களை எடுத்துச் சொல்லி, அதைப் போக்குவதற்காக தமிழகத்திலே தொழிற் கல்வி முறையைக் கொண்டுவருவதற்கான முறையிலே சில விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள், கொள்கைக் குறிப்பேட்டில், நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது எல்லாம் சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக ஆரம்பப் பள்ளிகளில் அதிகமான மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் இது இந்திய துணைக் கண்டத்திலேயே ஒரு சாதனை என்றும் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் கொடுக்கிற இந்தப் புள்ளிவிவரம் எல்லாம் இந்த அவையிலே பார்ப்பதற்கும் எண்ணிக்கைக்கும் சரியாக இருக்குமே தவிர தமிழகத்திலே உள்ள ஆரம்பப் பள்ளிகளில் தட்டேந்தி திரிகிற தரித்திர நிலையைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த நிலையை உருவாக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வருகிற ஆண்டில் எந்த கல்லூரியையும் தொடங்குவதற்கான திட்டம் ஏதும் இல்லை என்று அறிவித்து விட்டீர்கள். பல்வேறு குக்கிராமங்களிலே ஜனத் தொகை அடிப்படையிலே 300 மக்கள் குடியிருந்தால் ஓராசிரியர் பள்ளி திறக்கப்படும் என்ற திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அதனால் இன்றைக்கு குக்கிராமங்களிலே ஓராசிரியர் பள்ளி திறக்கமுடியாமல் இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி 40 மாணவர்கள் இருந்தால் ஓர் ஆசிரியர் பள்ளியைத் திறக்கலாம் என்ற முறையிலே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாக பல லட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து பல்வேறு பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று அறிகிறேன், நான் அதை வரவேற்கிறேன். ஆனால், கட்டப்பட்ட அந்தப் பள்ளிக் கட்டிடங்கள் நிறைவு விழாவிற்கு முன்பாகவே இடிந்து விழுந்திருக்கின்றன அல்லது பல்வேறு நிலையில் இருக்கின்றன என்பதை நான் இந்த மன்றத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல்வேறு ஆரம்பப் பள்ளிகளிலே போதுமான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. மேல்நிலைப் பள்ளிகளிலே அந்த அந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்குத் தகுதியான ஆசிரியர்கள் நியமனம் செயல்படவில்லை என்ற நிலை இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு தகுதியிருப்பின் அவர்களுக்கு சிறப்பாகப் பயிற்சி கொடுத்து அந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்கு நியமித்து இருக்கிறோம் என்று அரசாங்கம் கொள்கைக் குறிப்பேட்டில் சொல்லியிருக்கிறது. ஒட்டப்பிடாரத்தில்—அந்தத் தொகுதியிலே—வ.உ.சி. பெயராலும், கயத்தாறிலே உள்ள கட்டபொம்மன் பெயரால் அமைந்துள்ள உயர்நிலைப்பள்ளிகளில் கூட போதுமான ஆசிரியர்கள் இல்லை என்ற குறை இருக்கிறது. நாம் ஒரு புதிய பாடத் திட்டத்தையே, புதிய கல்வி முறையையே



1984 மார்ச் 15] [திரு. மு. அப்பாதுரை]

புகுத்துகிறபோது முன்கூட்டியே யோசனை செய்து போதுமான ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு, தகுந்த முன் நடவடிக்கையை எடுக்கவில்லை. அப்படி எடுத்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்கியிருக்க முடியும். இனிமேலாவது அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் கல்வியமைச்சர் அவர்கள் கவனமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில்கல்வியைப் பொறுத்தவரையில் நீங்கள் சொல்லியிருப்பதெல்லாம் ஏறத்தாழ 4.07 கோடி அதிகமாக ஒதுக்கியுள்ளோம் என்பது அந்தத் தொகை போதுமானதல்ல. நீங்கள் 5வது திட்டக் கமிஷனுடைய ஒதுக்கீட்டின் மூலம் மத்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய பணத்தை வைத்து நிறைவேற்ற இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. போன்ற தொழிற் பயிற்சி நிறுவனங்களில் 8 வது வகுப்பிலிருந்து சேர்த்துக் கொள்கிறோம். தமிழகத்திலே இருக்கக்கூடிய 10 வது வகுப்பு வரையில் உள்ள பொதுக் கல்வி முறையை மாற்றி 8 வது வகுப்பிலிருந்து தொழிற் கல்வி பாடத்திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அந்த நிலையை உருவாக்கினால்தான் தொழிற் கல்வியிலே அதிகமான ஈடுபாட்டை உருவாக்கமுடியும். அப்படிப்பட்ட நிலையை உருவாக்குவதற்கு போதுமான ஒதுக்கீடு இருக்கிறதா என்றால் இல்லை. அந்த நிலையில் போதுமான பண ஒதுக்கீடு செய்து கொடுத்தால்தான் தொழில் கல்வி முறையை நல்ல வகையில் உருவாக்க முடியும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அது மட்டும் அல்லாமல் இன்றைக்குத் தொழில் நுட்பக் கல்வியில் அதிகமான பாலிடெக்னிக்குகளை நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். ''ஜாதிகள் இல்லையடி பாப்பா'' என்ற பாரதியார் வாய்மொழியைச் சொல்லிக் கொடுத்துவிட்டு இவைகளுக்குப் புறம்பாக இன்றைக்கு ஜாதிகள் அடிப்படையில் கல்விச்சாலைகள் கொடுக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தொழில் நுட்பக் கல்லூரியாக இருந்தாலும் சரி, பாலிடெக்னிக்காக இருந்தாலும் சரி இப்படிப்பட்ட நிலையங்களில் மாணவர்கள் தாங்கள் படிக்க வேண்டும் என்று இடம் கோரும்போது ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து, ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பல்வேறு வழிகளில் கொடுத்து தான் இடம் பிடிக்கவேண்டிய நிலை இருக்கிறது. அதற்கு காரணம் இன்றைக்கு தனியார் துறையில் இப்படிப்பட்ட கல்வி நிலையங்களை ஒப்படைப்பதுதான் என்று நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆகவே அரசுத் துறையிலேயே இப்படிப்பட்ட தொழில் நுட்பக் கல்வியை நீங்கள் கொடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உடல் பயிற்சி கல்வியைப் பற்றி இங்கே நீங்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். ஒலிம்பிக்காக இருந்தாலும் தேசிய அளவில் நடைபெறுகிற விளையாட்டு போட்டியாக இருந்

தாலும் தமிழகத்தை எடுத்துக் கொண்டாலும் இந்தியாவை எடுத்துக் கொண்டாலும் அப்படிப்பட்ட விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாடு சார்பில் கலந்துகொண்டு பதக்கம் பெறக்கூடிய அவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இங்கே அது போன்ற நிலையினை எடுத்துக்காட்டி மதுரை போன்ற இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படி உடற்பயிற்சி பெறக்கக்கூடிய மாணவர்களுக்குப் போதுமான உதவித் தொகை கொடுக்கப்படவில்லை, போதுமான சத்துணவு பெறமுடியாத அளவுக்கு அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்த உடற்பயிற்சி பெறக்கூடிய அந்த மாணவர்களுக்கு ஏறியிருக்கின்ற விலைவாசிக்கு தக்க போதுமான அளவுக்கு உதவித்தொகையைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன.

பல்வேறு உடற்பயிற்சி ஆசிரியர்களை இன்றைக்கு நியமனம் செய்து இருக்கிறீர்கள். ஆசிரியர்களை மட்டும் நாம் போட்டு விட்டால் போதாது, அங்கே இருக்கக்கூடிய இளம் உள்ளங்களை இளமையிலேயே Cultivating their talent என்று சொல்வார்கள் அந்த அடிப்படையில் எந்த எந்த மாணவர்களுக்கு எப்படிப்பட்ட பாடங்களில் விளையாட்டுகளில் ஆர்வம்இருக்கிறதோ அவர்களைத் தேர்ந்து எடுத்து அதை கணக்கில் எடுத்துக் கொண்டு அப்படிபபட்ட இளைஞர்களை பல்வேறு துறைகளில் பயிற்சியை பெறக்கூடிய அளவுக்கு நாம் அவர்களை ஊக்குவிக்கவேண்டும், அப்படிப்பட்ட நிலையை நீங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆராய்ச்சித் துறையில் இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய மிகப்பெரிய நூலகங்களாக இருந்தாலும் சரி, கன்னிமாரா நூல் நிலையமாக இருந்தாலும் சரி மாவட்ட மைய நூலமாக இருந்தாலும் சரி போதுமான புதிய நூல்கள் இல்லை என்ற. குறைபாடு இருக்கிறது. இன்றைக்கு தமிழகத் தில் தமிழ் ஆராய்ச்சிக்காக தமிழ் பல்கலைக்கழகம் திறந்து வைத்து இருக்கக்கூடிய இந்த ஆட்சியில் புதிய தமிழ் நூல்கள் இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. சமீபத்தில் தமிழகத் தில் இருக்கக்கூடிய புத்தகங்கள் பிரசுரம் செய்பவர்கள் ஒரு மாநாட்டை நடத்தினார்கள், அதில் அவர்கள் வெளியிடக் கூடிய புத்தகங்களை நூலத்தில் போடுவதற்கு கூட சிபாரிசு தேவைப்படுகிறது. அப்படி போடப்பட்ட புத்தகங்களுக்கு பணம் பெறுவதற்கு நாங்கள் பல்வேறு காரியங்களை செய்ய வேண்டி இருக்கிறது என்று ஒரு மிகப்பெரிய குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்கள், ஆகவே இன்றைக்கு நம்முடைய பொது நூலங்களில் போதுமான புத்தகங்கள் தரமான புத்தகங் கள் இல்லை. அதை நிவர்த்திச் செய்து தமிழகத்தில் பல்வேறு ஆராய்ச்சிப் புத்தங்கள் விஞ்ஞான யுகத்தைப்பற்றி எடுத்துச் சொல்லக்கூடிய புத்தகங்கள் வெளி வருகின்றன அவைகளை தமிழில் மொழி பெயர்த்து அப்படிப்பட்ட புத்தகங் களை, தரமான புத்தகங்களை நூலகங்களில் போடவேண்டும்



என்று கேட்டுக்கொள்கிறேன். போதுமான நூல்களையும் புதிய நூல்களையும் வாங்கி சம்பந்தப்பட்ட நூலகங்களில் போட வில்லை என்ற குறை இருக்கிறது. அவைகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஆவண காப்பகங்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு போதுமான ஊக்கம் வேண்டும். ஆராய்ச்சித் துறையில் உணர்வும் அனுபவமும் உள்ளவர்களை துணை இயக்குநர் களாக நியமிக்கவேண்டும். நம்முடைய ஆராய்ச்சி ஆவண காப்பகத்திற்கு நான் கூட சமீபத்தில் சென்று இருந்தேன். என்னுடைய தொகுதியில் ஆஷ் துரையை சுட்டுக்கொன்ற சம்பவத்தைப்பற்றி ஒரு வெளியீடு வந்து இருக்கிறது, அதைப் பெறுவதற்காக நான் போயிருந்தேன், அதை நம்முடைய சட்டமன்றத் துறையின் மூலமாகத்தான் பெறவேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. சட்டமன்ற உறுப்பினரான நானே அப்படிப்பட்ட நூலைப் பெறமுடியவில்லை. இன்றைக்குத் தமிழகத் தில், பல்வேறு அறிஞர்களுக்கு பெரியோர்களுக்கு நம்முடைய முன்னோர் காலத்தில் நடந்த ஆராய்ச்சி நிகழ்ச்சிகளும் பல்வேறு வரலாற்று நிகழ்ச்சிகளும் போதுமான அளவில் தொடர்ச்சியாக கிடைப்பதற்கு இயலவில்லை என்ற குறைப்பாடு இருக்கிறது. அதற்குப் பொருத்தமான காரணம் என்ன? வெறும் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை மட்டும் நாம் அங்கே இயக்குநர்களாக போடுவது போதாது. இப்படிப்பட்ட ஆராய்ச்சித் துறையில் ஆர்வம் உள்ளவர்களையும் அனுபவம் உள்ளவர்களையும் அங்கே துணை இயக்குநர்களாகப் போட்டு அப்படிப்பட்ட காரியத்தை நீங்கள் ஊக்கப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-20)

அருங்காட்சியகங்கள் பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்றன. அங்கே பள்ளிக் குழந்தைகள், பெரியவர்கள் வெளியிடங் களிலேயிருந்து வருபவர்கள் பார்வையிடுவதற்காக வருகின்ற பொழுது அவர்களுக்கு முறையாக விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டும். ஆனால் இப்பொழுது எந்தவிதமான டெமான்ஸ்ட் ரேஷனும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, முறையான விளக்கங்களை அங்கே கொடுத்தால்தான் வரலாற்று உண்மைகளையும், சரித்திர உண்மைகளையும் மாணவர்கள் தெரிந்துகொண்டு கல்வி பயிலவும், வெளிநாடுகளிலேயிருந்து வருபவர்கள் தமிழகத்தின் பெருமைகளையும், அரும்பெரும் சாதனைகளையும் புரிந்து கொள்ளவும் முடியும். அப்படிப்பட்ட நிலையை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தைப் பொறுத்த வரையில் முதல் மடலத்தில் முதற்பகுதி மொழி யியல் அறிஞர் மறைந்த திரு. தேவநேயப்பாவாணர் அவர்கள் தொகுத்தது தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் மூலம்

அச்சிடப்பட்டு வருவதாகக் கூறியிருக்கிறீர்கள். அந்தக் குழுவிற்குத் தலைவராகப் போடப்பட்டிருந்த மரியாதைக்குரிய தேவநேயப்பாவாணர் அவர்கள் மறைந்துவிட்டார்கள். இப்பொழுது அந்தக் குழு கலைக்கப்பட்டு விட்டது என்று கருதுகிறேன். அவரிடத்தில் செயலாற்றியவர்கள் இப்பொழுது என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. இப்பொழுது அந்தப் பணியைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தினிடம் ஒப்படைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். திரு. தேவநேயப்பாவாணர் அவர்களால் தொகுக்கப்பட்ட முதல் பகுதியே இப்பொழுது அச்சில்தான் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அது எப்பொழுது வெளிவரும்? மீதமுள்ள பகுதிகள் எப்பொழுது வெளியிடப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பண்பாடு வரலாற்றையும் தொன்று தொட்டு வழங்கி வருகின்ற கிராமக் கலைகளின் வளர்ச்சியையும் சான்றுகளோடு சேகரித்து புத்தகமாக வெளியிடும் நோக்கத்துடன் செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தொகுப்புகள் எடுக்கப்பட்டு வல்லுநர் குழுவின் அங்கீகாரம் பெற்ற பின்னர் புத்தகங்களாக வெளியிடப்படும் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது போக பாக்கியிருக்கின்ற மாவட்டங்களிலேயும் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு இப்படிப்பட்ட நூல்கள் வெளியிடப்படுமா? அவ்வாறு வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு பள்ளிகளுக்குப் போதுமான கட்டட வசதிகள் இருப்பதாக ஆளுங்கட்சி நண்பர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்களைப் பார்க்கும்பொழுது நன்றாகத் தெரிகிறது. பொதுவாக அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுமே தங்கள் தொகுதிகளில் உள்ள பள்ளிக் கூடங்களுக்குக் கட்டிட வசதிகள் செய்து தர வேண்டுமென்றுதான் கேட்டிருக்கிறார்கள்.

கோவில்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பெண்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அங்கே போதுமான கட்டிட வசதிகள் இல்லை.

அதைப்போலவே, காட்பாடி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி சமீபத்தில் பெய்த பெருமழையின் காரணமாகச் சேதமுற்றிருப்பது குறித்து கூறியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், சமீபத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சென்றபொழுது வத்திராயிருப்பு பகுதியில் உள்ள கூமாப்பட்டியானது, சமீபத்தில் பெய்த பெருமழையின் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது.



அங்கே அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அங்கே போதுமான பள்ளிக் கட்டிடம் இல்லை என்பதால் மரத்தடியில் வகுப்புகளை நடத்திக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள்,

ஆகவே, இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்தவரையில் தன்னாட்சி முறையில் சிறப்பாகச் செயல்படுகின்றன என்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் மெத்த வருத்தத்தோடு இந்த மன்றத்தின் மூலமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதெல்லாம், எந்த நோக்கத்திற்காக இந்தத் தன்னாட்சி முறையை அறிமுகப்படுத்தினார்களோ அந்த நோக்கம் நிறைவேறாமல் நம்முடைய மதசீயத்திற்கும், தேசீய ஒற்றுமைக்கும் பாடுபட வேண்டிய, மதச் சார்பற்ற முறையில் செயல்பட வேண்டிய அந்தத் தன்னாட்சிக் கல்லூரிகள் சுய விருப்பத்தோடும், மதத்தின அடிப்படையிலேயும், இனத்தின் அடிப்படையிலேயும் இன்றைக்குக கல்வி போதிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட தன்னாட்சி முறையை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கோள்கிறேன்.

கடந்த ஆண்டு நம்முடைய உலக மகா கவிஞன் பாரதிக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. பாரதியின் பெயரால் பல்கலை கழகம், மகளிர் பாலிடெக்னிக் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு அக்டோபர் மாதம் சுப்பிரமணிய பாரதியோடு சேர்ந்து தேசிய விடுதலைக்காசப் போராடிச் சிறைசென்ற மதிப்பிற்குரிய தேசியச் செம்மல் சுப்பிரமணிய சிவா அவர்களின் நூற்றாண்டு விழா வருகிறது. அவர் மறைந்த இடமான தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப் பட்டியில் அவருடைய பெயரால் அரசு பாலிடெக்னிக் ஒன்றை அமைத்துத் த்ர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களுடைய மாவட்டத்தைப் பற்றித்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். எனவே சற்று அனுமதி வேண்டும்.

அடுத்து இன்றைக்குத் தமிழகத்தில் அதிகமான கல்விச் சாலைகளும், அதிகமான கல்லூரிகளும் இருக்கக்கூடிய திருநெல்வேலி மாவட்டத்திலே புதியதொரு பல்கலைக் கழகம் தொடங்கவேண்டும் என்று கேட்டு நான் அமர்கிறேன.

*திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984—85 ஆம் ஆண்டிறகான கல்வி மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்காக மகிழ்ச்சியடைகிறேன். இங்கே கல்வித் துறைக்காக,

ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகவே செலவிடப்படுகின்றது இந்த ஆட்சியின் காலத்தில் என்பது வெளிப்படையாகவே இருக்கின்றது. அது பாராட்டுக்குரியது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு 402 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்ய நல்ல திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக அரசின் சார்பிலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப் பலரும் பாராட்டக் கடமைப்பட்டவர்கள்.

குறிப்பாக தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையிலே ஆரம்பிக்கப்பட்டு அது இன்றைக்கு வெகுவாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. யாரெல்லாம் தமிழர்களுக்காக வாழ்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் செய்யாதபோது தமிழனுடைய தலைவிதியை நிர்ணயிக்கின்ற அளவில் தமிழனை மேலும் உயர்த்தவேண்டும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்ததை நாம் எல்லாம் ஆதரித்து பாராட்டையும், மன மகிழ்ச்சியையும் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னை தெரசா அவர்களின் பெயராலே கொடைக்கானலில் சென்ற மாதம் பெண்கள் பல்கலைக் கழகத்தைத் துவக்கி இருக்கிறார்கள். அன்னை தெரசா அவர்கள் உலகிலேயே சிறந்த பரிசான நோபல் பரிசைப் பெற்றவர்கள். அப்பேர்ப்பட்டவர்களின் பெயரைக் கொண்டு கொடைக்கானலில் பலகலைக் கழகம் தொடங்கி இருப்பது தமிழக அரசுக்கு மேலும் வலுவூட்டுவதாக அமைந்திருக்கின்றது.

இப்போது சத்துணவுத் திட்டத்தைத் தமிழகத்திலே அமல்படுத்தி இருக்கிறோம். அதே நேரத்தில் ரிசர்வ் வங்கியின் உதவியோடு 6 மாதக் குழந்தைகளுக்கும் இரண்டரை வயது வரை ஊட்டச் சத்துணவு தரும் திட்டத்தையும் தமிழகத்தில் விரிவுபடுத்தி இருக்கிறார்கள். மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து நிறைவேற்றுகின்ற நல்ல பல திட்டங்களை அனுபவிக்கின்ற வகையில் அதாவது அவற்றின் பலன்களை அனுபவிக்கின்ற வகையில் எதிர்காலத்தில் குழந்தைகள் உடல் வலிமையோடு இருக்கவேண்டும் என்ற வகையில் அதற்கு இத்திட்டம் பலன் அளிக்கும் என்ற நம்பிக்கையோடு இத்திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து 1,106 மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. 1984-85-ல் மேலும் 13 பள்ளிகளில் தொழில் பயிற்சி அளிக்கும் வகையில் இந்த ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட இருப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.





உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில் தொழில் பயிற்சியைக் கொண்டு வர வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருத்து எல்லோராலும் வரவேற்கப்படுகின்றது. அவ்வாறு கொண்டு வருகின்றபோது 9-வது, 10-வது வகுப்புக்களில் தொழில் பயிற்சியைக் கொண்டு வர தமிழக அரசு எண்ணி இருப்பதை நாம் எல்லாம் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனாலும் தொழில் பயிற்சியைக் கொண்டு வருகின்ற அதே நேரத்தில் தொழில்களுக்கான அந்த மெஷினரிஸ் வாங்குவதற்கும், டெக்னிஷியன்ஸ் நியமிப்பதற்கும் அதிகமாகச் செலவிட வேண்டும் என்பதற்காகக் கல்வித் துறை தயங்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக நான் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

தொழில் துறையில் பயிலுகின்ற மாணவர்களுக்கு உதவுகின்ற வகையிலே தொழில் துறை சம்பந்தப்பட்ட சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் அம்மாணவர்கள் தனியார் தொழில் கூடங்களிலும் பாலிடெக்னிக்குகளிலும் ஐ.டி.ஐ தொழில் கூடங்களிலும் நேரடியாகச் சென்று பயிற்சி பெறுகின்ற வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும். அதாவது அம்மாணவர்களை அந்தத் தொழில் கூடங்களுக்கு அனுப்பி அவர்களுக்கு அங்கே நேரடியாகப் பயிற்சி தருகின்ற வகையில் உதவி செய்ய அரசு ஆவன செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 9 வயது வரை தமிழக அரசின் சார்பிலே முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் வழங்கப்பட்டு வருகின்றது. அதன் மூலமாக 67 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். மேலும் செப்டம்பர் 15 ஆம் தேதி அன்று, அதாவது பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளிலிருந்து 10 வயதுக்கும் மேற்பட்டு 15 வயது வரையிலும் உள்ள குழந்தைகளுக்கும் சத்துணவு கொடுக்கின்ற வகையில் அந்தச் சத்துணவுத் திட்டம் விரிவாக்கப்படுகின்றது என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது செவ்வனே நடைபெறும் என்றும் இப்போது இருக்கின்ற குறைபாடுகள் எல்லாம் நீங்கிய நிலையிலே நன்றாக நடக்கும் என்றும் நான் எண்ணுகிறேன். காரணம் 10 வயதுக்கு மேல் இருக்கின்ற மாணவர்களைப் பொறுத்த வரையில் சத்துணவிலே ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், நிர்வாகத்திலே இருப்பவர்கள் ஏதேனும் குறைபாடுகளைச் செய்தால் அதைப் பற்றித் தட்டிக் கேட்க இவர்களாலே முடியும். அப்படித் தட்டிக் கேட்கக்கூடிய அளவில் அறிவினை அம்மாணவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதால் குறைபாடுகள் ஏதும் நிகழாத வண்ணம் நிச்சயமாக நல்லவிதத்தில் அது நடைபெறும்.

இப்பொழுது பஞ்சாயத்துக்களிடம் பள்ளிக்கூடங்களை ஒப்படைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களில் வேலை செய்கிற ஆசிரியர்களை எப்படி அரசே ஏற்றுக்கொண்டதோ அதே போல் பள்ளிக்கூட நிர்வாகச் செலவுகளை, செப்பனிடுதல், பராமரித்தல், போன்ற செலவுகளை தயவுசெய்து அரசே ஏற்றுக்

கொள்ள வேண்டும். பஞ்சாயத்துக்களிலே இருக்கிற ஆணையாளர்களைக் கேட்டால் அவர்கள் எங்களுக்கு எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது; அரசு அந்த நிர்வாகத்தை எடுத்துக் கொண்டது. ஆகவே, எங்களாலே பராமரிக்க முடியாது என்ற வகையிலே நாங்கள் கேட்கும்போது சொல்கிறார்கள்.

பள்ளிக்கூடங்களை அரசு பராமரிக்கும்போதோ அல்லது செப்பனிடும்போதோ, தயவு செய்து, பொதுப் பணித் துறையிடம் ஒப்படைத்து, ஏராளமான காலத்தையும், நேரத்தையும் எடுத்துக் கொள்ளவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4–30)

ஆற்காட்டிலே ஆண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும், பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடங்களைச் செப்பனிட, அவர்கள் கேட்ட பணத்தைக் கொடுத்து, ஏறக்குறைய 3 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. ஆனால், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்ட பொழுது இப்பொழுது பெற்றோர் ஆசிரியர் சங்கங்களே முன் நின்று மதிப்பீடு போட்டு செய்கின்ற வகையில் திட்டம் போடுகிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டால் அந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதே போல் தமிழகம் முழுவதும் பொதுப் பணித் துறையின் மூலமாக அப்பணிகளைச் செய்வதைவிட, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலம் திட்டம் தீட்டி, அந்த அடிப்படையில் காரியங்களைச் செய்கின்ற யோசனையை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு கிராமத்திலும் சத்துணவுக் கூடங்கள் சுமார் ரூ. 40,000 அல்லது ரூ. 50,000 செலவில் அமைக்கப்படுகின்றன. சத்துணவுக் கூடங்களில் அந்தத் கிராமத்தைச் சேர்ந்த ஏழைகள் திருமணங்களை நடத்திக் கொள்ளலாம் என்று அரசு உத்தரவு இருக்கிறது. நிச்சயமாக, அதை கிராம மக்கள் பாராட்டுகிறார்கள். அதே சமயத்தில், நர்சரி போன்ற பள்ளிகளையும் அந்தக் கூடங்களிலே நிரந்தரமாக வைத்து, நடத்த தயவு செய்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்பொழுது சீருடைகள் இல்லாமலேயே சத்துணவுத் திட்டம் நடைபெறுகிறது. சீருடைகளை வழங்க அதிகமாகச் செலவாகும் என்று கருதினாலும், எதிர்காலத்திலாவது சீருடை அணிந்து சத்துணவுக் கூடங்களுக்குக் குழந்தைகள் வருகின்ற நல்ல திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின்மூலம் கிராமங்கள் தோறும் இன்றைக்குப் பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ரூ. 1,00,000, ரூ. 90,000 என்று கிராமங்களில் பள்ளிக்கூடங்



களுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. காமராஜர் அவர்கள் கிராமங்கள் தோறும் பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்தார்கள் என்பதிலே யாருக்கும் ஐயப்பாடு கிடையாது. ஆனால், ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் இருந்தனவா, கட்டிக் கொடுக்கப்பட்டனவா என்றால் கிடையாது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கிராமங்களிலே இருக்கிற குழந்தைகள், வசதி வாய்ப்பு இழந்தவர்கள் கல்வி கற்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில், கல்விக்கூடங்களுக்குப் புதிதாகக் கட்டிடங்கள் கட்டும் திட்டத்தை எடுத்திருக்கிறார்கள்.

வயது வந்தோர் கல்வியில் தமிழகம் நல்லதொரு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது. வயது வந்தோர் கல்வித் திட்டத்தை நல்ல முறையில் தமிழக அரசு செயல்படுத்தி இருக்கிறது என்ற அடிப்படையில் இந்திய அரசாங்கமே ரூ. 25 இலட்சத்தைத் தமிழக அரசிற்குப் பரிசாக கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது. அந்த அளவுக்குக் கல்வி அமைச்சர் அவர்கள் வயது வந்தோர் கல்வியில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறார்கள். அதற்காக மாவட்டங்களில் மையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் குறிப்பாக, ஆதிதிராவிட மக்கள், பெண்கள் பயனடைந்து இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளையும் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளையும் நமது ஆட்சியில் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அதிகம் வேண்டுமென்று பல கிராமங்களிலிருந்து ரூ. 22,500 பணம் கட்டி மனுக்கள் வந்திருக்கின்றன. இரும்பூர், தாமரைப்பாக்கம் ஆகிய 2 கிராமங்களிலும் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். தயவு செய்து அதனைப் பரிசீலித்து உத்தரவு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விளையாட்டுகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க உத்தரவு பிறப்பித்து இளைஞர்கள் வெற்றி பெறவேண்டும், தமிழ் மக்களுக்குப் பெருமை கிடைக்க வேண்டுமென்று ரூ. 187 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழகம் பூராவுக்குமாகச் சேர்ந்து அந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டது என்றாலும் எல்லா ஆண்டுகளையும்விட இந்த ஆண்டு அதிகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தாலும் அது போதாது என்றுதான் நான் கருதுகிறேன்.

ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு விளையாட்டுக் கூடங்களைக் கட்டுவதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது விளையாட்டுக்களில் ஆர்வமுள்ள பெரிய

[திரு. ஏ. எம். சேதுராமன்] [1984 மார்ச் 15

பணக்காரர்கள் நிதி கொடுப்பார்களானால் அவர்களுடைய உதவியையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரூராட்சிகளிலும், கிராமங்களிலும் விளையாட்டுகளில் ஆர்வம் கொண்டிருக்கிற இளைஞர்கள் பயன் பெறுகிற வகையில் விளையாட்டு மைதானங்கள் இல்லை. நகரங்களில் இருக்கிற வசதிகள் கிராமங்களில் இருப்பதில்லை. விளையாட்டுத் துறைகளில் ஊக்குவிக்க வேண்டுமென்ற முறையில் கிராமங்களில் விளையாட்டு மைதானங்களை ஏற்படுத்துவதற்கு விளையாட்டுத்துறை அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையைப் பொறுத்தவரையில் அங்கே பெல் நிறுவனம் பெரிய அளவிலே 32 கோடி ரூபாய் அளவிலே ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகிறது. அதேபோல அங்கே சிப்காட், சிட்கோ நிறுவனங்களும் இருக்கின்றன. தொழில் கல்வி படித்த அப்பகுதியைச் சார்ந்த மாணவர்கள் வேலை செய்யக்கூடிய அளவிலே இல்லை. திருச்சியிலேயிருந்து அவர்களை இராணிப்பேட்டைக்குக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்த நிலைமையைப் போக்க ஆற்காடு நகரிலே தொழில் பாலிடெக்னிக்கை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு பொதுமக்கள் சார்பிலே உதவித் தொகை கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். தனியார் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதற்கு அரசு நல்ல பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. அதற்காக அரசு சிபாரிசு செய்திருக்கிறது என்பதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்து வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே டி.ஈ.ஓ. அளவில் நான்கு அதிகாரிகள் தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு டி.ஈ.ஓ-விற்கும் 75 பள்ளிகளுக்கு மேல் இருக்கின்றன. அவர்களால் நிர்வாக அளவில் அவற்றைச் சரிவர கவனிக்க இயலாத நிலை இருக்கிற காரணத்தால் மேலும் ஒன்றிரண்டு டி.ஈ.ஓ.க்களை அந்த மாவட்டத்திற்கு வழங்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற கல்வி மானியக்கோரிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் இதில் பல கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். அதோடு, இப்போது மிக முக்கியமாக நான் கூறவிரும்புவது, இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட்டிலே பார்க்கிறபோது கல்விக்காக ஒதுக்கீடு செய்வது ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே போகிறது என்பது தான் உண்மை. இந்த ஆண்டு கூட மத்திய அரசு பட்ஜெட்டில் 65 சதவீதம் இராணுவத்திற்காகச் செலவு செய்கிறபோது, கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பது மிகக் குறைந்து காணப்படுகிறது.



1984 மார்ச் 15] [திரு. ரா. கிருஷ்ணன்]

அதே போல பட்ஜெட் எஸ்ட்டிமேட் 1981-82 இல் பிளான் 10.08 பிளஸ் 12.09, டோட்டல் 22.17 இன் லாக்ஸ். அதே போல 1981-82-இல் 21.15; 1982-83-இல் 17.44 என்ற அடிப்படையில் தான் மத்திய சர்க்காருடைய பட்ஜெட் குறைந்து கொண்டே போகிறது. ஆகவே, இப்படி ஒவ்வொரு ஆண்டும் கல்விக்காக ஒதுக்கீடு செய்வது குறைந்து கொண்டே போகிறபோது மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய பணம் எந்த அளவிற்குத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் என்பதை நாம் கவனிக்கவேண்டும். பொதுவாக இதற்கு முன்பு அரசியல் சட்டம் உருவாக்கியவர்கள் கல்வி மாநில அதிகாரத்தில் இருக்கவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். ஆனால், இன்றைக்கு அது மத்திய—மாநில அரசுகள் சேர்ந்த கன்கரன்ட் லிஸ்ட்டிலே இணைக்கப்பட்டுவிட்டது. ஆகவே, எந்த ஒரு முடிவும் மத்திய அரசினுடைய விருப்பத்தை அடிப்படையாக வைத்துத்தான் அமையும். ஆனால், கல்வி என்பது அந்தந்த மொழிக்கேற்றபடி, அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்றபடி அமைந்திட வேண்டும். ஏற்கெனவே, இந்தியாவைப் பொறுத்தவரையில் வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான் அடிப்படை. கலாச்சாரம், பண்பாடு முதலியவை இங்கு வேறுபட்டிருக்கிறது. ஆனால், இந்தியா என்பது ஒரு யூனியன். ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தந்த மாநிலங்களில் இருந்து வரும் அந்தந்த மொழிக்கு ஏற்ப, தேசீய உணர்வுகளுக்கு ஏற்ப அந்தக் கல்வி அமைய வேண்டும் என்பதுதான் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற மரபு, கொள்கை. ஆனால், அதையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, இன்றைக்குக் கல்வியை கன்கரன்ட் லிஸ்டில் சேர்ப்பது என்றால் உண்மையிலேயே மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதிதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு மாநில அதிகாரத்தைப் பறிமுதல் செய்யும் முறையை, நடவடிக்கையை நாம் நிச்சயமாக அனுமதிக்க முடியாது. ஆகவே, இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் நாம் அந்த இழந்து விட்ட அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 4–40)

நம்முடைய கல்வி முறையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நம்மை அடிமைப் படுத்திய வெள்ளைக்காரர்கள் எப்படிப்பட்ட கல்வி இருக்க வேண்டும் என்று நினைத்தார்களோ அந்தக் கல்வி முறைதான் இன்றைக்கும் பின்பற்றப்பட்டு வருகிறது. அதிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது. நாம் இங்கே அணுகுண்டைத் தயாரித்து விட்டோம். அல்லது ரோகிணியை விட்டு விட்டோம் என்று சொல்லலாம். ஆனால், ஒரு அடிப்படைக் கல்வி என்பது எந்த நிலையில் இருக்கிறது, ரோகிணி தயாரித்த விஞ்ஞானிகள் எத்தனை பேர் இருப்பார்கள் அல்லது நவீன டெக்னீஷியன்கள் எத்தனை பேர் இருப்பார்கள்? அதை நாம் ஒரு கணக்கில் கொள்ள முடியாது. இந்தியா பூராவும் பரவிக்கிடக்கின்ற மக்களுக்குப் பயன்படும் வகையில்

[திரு. ரா. கிருஷ்ணன்] [1984 மார்ச் 15

அடிப்படைக் கல்வியில் மாற்றம் இருக்கிறதா, அந்த பேசிக் எஜுகேஷனில் ஏதேனும் மாற்றம் இருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். அந்த அடிப்படைக் கல்வி முறையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் ஏற்படுத்திய அதே முறைதான் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் பின்பற்றப்பட்டு வருகிறது. அதிலே மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பதைத்தான் நாம் கோருகிறோம்.

ஆனால், இங்கே எழுப்பக்கூடிய அந்தக் குரல் டெல்லிக்கு எட்டுமா என்றால் நிச்சயமாக எட்டாது. இது தான் நிலைமை. டெல்லியில் இருக்கும் மத்திய சர்க்கார் இன்றைக்கு அந்த அடிப்படைக் கல்வியில் மாற்றத்தை விரும்பினால் தான், மாற்றத்தை ஏற்படுத்தினால்தான் இந்த நாட்டிற்கு விமோசனம் ஏற்படும். அது இல்லாமல் நிச்சயமாகக் கிடையாது என்பதுதான் என்னுடைய கருத்து.

அது மட்டுமல்லாமல் இன்றைக்கு கல்வியைப் பொறுத்தவரையில் பள்ளிகள், கல்லூரிகள், கல்விநிறுவனங்கள் ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்குகிறோம். அப்படி அரசு அனுமதி வழங்குகிறபோது, இன்றைக்கு எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். ஜாதி மத அடிப்படையில் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றன. அரசியல் சட்டத்தில் கொல்லப்பட்டு இருப்பதைப் போல, செகுலர் ஸ்டேட் என்பதை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். மதச்சார்பு அற்றதாக, ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டதாக அரசாங்கம் இருக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். ஆனால், இங்கே அதற்கு நேர் விரோதமாக எல்லா ஜாதிகளுக்கும் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது என்ற புதிய வியாக்கியானத்தைச் சொல்கிறோம். இது செகுலர் ஸ்டேட் என்று சொல்லக்கூடிய அளவிற்குள்ள அந்த உணர்வுகளுக்கு நேர்மாறான நடவடிக்கையாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, இந்த மதப் பிரிவுகளின் அடிப்படையில் கல்வி நிறுவனங்கள் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டால் ஒரு மதத்தினருக்கு அனுமதி கொடுக்கிறபோது மற்றொரு மதத்தினருக்கும் அனுமதி கொடுத்து அதையும் ரெகக்னைஸ் செய்கிறோம். இந்த அளவில் தான் இன்றைக்குக் கல்வி நிறுவனங்கள் அமைந்து இருக்கின்றன.

கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில் பார்க்கிறபோது, ஒரு சீப்பஸ்ட் இன்வெஸ்ட்மென்ட்டிலே, மிக அதிகமான இலாபத்தைச் சம்பாதிக்கக்கூடிய நிறுவனமாக அது இருக்கிறது என்பதுதான் இன்றுள்ள நிலைமை. ஒரு தொழிற்சாலையை நிறுவினால் கூட அதிலே பல்வேறு பிரச்சனைகள் இருக்கலாம்? இலாப-நட்டம் என்பது ஒரு ஸ்பெகுலேடிவ்வாகத்தான் இருக்கும். ஆனால், கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில் ஒரு காலேஜோ அல்லது ஒரு பாலிடெக்னிக்கோ நாம் நிறுவினால்,



1984 மார்ச் 15] [திரு. ரா. கிருஷ்ணன்]

குறைந்த முதலீட்டில், அதாவது ஒரு சில இலட்சங்கள் போட்டு ஏற்படுத்திவிட்டால் போதும், அதற்குப் பிறகு அது ஒரு பெரிய ஊற்றாக ஆகி வளர்ந்து கொண்டு வருகின்ற நிலைமை இருக்கிறது. இதற்கு கம்மாடிட்டி எது என்றால் ஸ்டுடென்ட்ஸ்தான். அந்த மாணவர்கள் பீஸ் என்ற முறையில் செலுத்தும் பணம், அல்லது ஸ்காலர்ஷிப், ஆகியவற்றை வைத்துக்கொண்டு, அதை மூலதனமாகக் கொண்டு மேலும், அந்தக் கல்வி நிறுவனங்கள் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கின்றன. அவற்றில் நடக்கும் ஊழல்கள் சொல்லி முடியாது. ஏற்கெனவே, கல்வி நிறுவனங்களுக்கு பாலிடெக்னிக்குகளுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய பணம் ஏறிக்கொண்டே போகிறது.

அதுவும் குறிப்பாக தொழில் கல்வியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மிகவும் கிராக்கியாக இருக்கிறது. கடந்த ஆண்டு முதல் பாலிடெக்னிக்கைப் பொறுத்தவரையில் தனியாருக்கு அதிகமாக வழங்கப்படுகிறது. அரசாங்கம் உண்மையிலேயே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அது ஒரு வியாபாரமாக நடந்துகொண்டிருக்கிறது. அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. 10,000 ரூபாய் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும் அல்லது 20,000 ரூபாய் செலுத்த வேண்டுமென்று சொன்னால் அவர்கள் செலுத்திய பணத்தை முதலாண்டிலேயே பெற்றுவிடுவது மட்டுமல்ல; அதைவிட 2 மடங்கு, 3 மடங்கு சம்பாதித்துவிடுகிறார்கள். தனியார் பாலிடெக்னிக் என்பது இப்படிப்பட்ட ஒரு நிறுவனமாக இருக்கிறது. பாலிடெக்னிக் நிர்வாகத்தை இந்த அரசு நடத்த முடியாதா? தனியாருக்கு பாலிடெக்னிக் நடத்த அரசாங்கம் அனுமதி அளித்தாலும் ஆசிரியர்களுக்கு மற்றவைகளுக்கு உள்ள செலவுகளை அரசாங்கம்தான் ஈடுகட்ட வேண்டியிருக்கிறது. இடம் கட்டிடம், மட்டும் கரஸ்பாண்டன்ட்ஸ் கொடுக்கிறார்கள். அரசாங்கம் தான் முக்கியமான செலவுகளை எல்லாம் ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தனியாருக்கு பாலிடெக்னிக் நடத்த அங்கீகாரம் அளிப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அரசாங்கமே அதிகமான பாலிடெக்னிக்குகளைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாணவர்களிடையே அமைதியின்மை இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் வேலைவாய்ப்பு இல்லை என்பதுதான். இன்றைக்குப் பொதுவாக எஞ்சினீயரிங், மெடிக்கல் இப்படிப்பட்ட கல்வி படிக்கக்கூடிய மாணவர்களுக்குத்தான் ஓரளவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அங்கே ஸ்டிரைக் குறைவாக இருக்கும். நான் படிக்கும்போது கெமிஸ்டிரி படித்தால் வேலைவாய்ப்பு அதிகமாக இருந்தது. ஆகவே, அப்படிப்பட்ட பாடங்களில் படிக்கின்ற மாணவர்கள் ஸ்டிரைக்கில் ஈடுபடுவது சுருக்கமாக இருக்கும். இன்றைக்கு மாணவர்களிடையே அமைதியின்மை ஏற்படுவதற்குக் காரணம் சோஷியல் கண்டிஷன்ஸ், சமூக நிலைமை, வேலை

[திரு. ரா. கிருஷ்ணன்] [1984 மார்ச் 15

யின்மை என்பதுதான். அது முக்கியமான காரணம். அடுத்ததாகச் சொல்ல வேண்டுமென்றால் அந்தந்தக் கல்லூரியில் இருக்கிற குழப்பங்கள், அங்கே இருக்கிற ஊழல்கள், கல்லூரி நிர்வாகத்திற்கும் பிரின்சிப்பாலுக்கும் இருக்கிற முரண்பாடு, கல்லூரி ஆசிரியர்களுக்கும் பிரின்சிப்பாலுக்கும் இடையே இருக்கிற முரண்பாடு, இப்படிப்பட்ட குறைபாடுகள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குக் கல்லூரி விடுதிகளில் இருக்கக் கூடிய பணியாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நூலகத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாவட்ட அளவில் இருந்த லோக்கல் லைப்ரரி அதாரிட்டி இப்போது இல்லை. புதிய புதிய நல்ல நூல்கள் எல்லாம் அப்போது நூலகங்களுக்கு வாங்கப்பட்டன. இப்போது அந்த நிலைமை இல்லை. நூலகங்களுக்கு பணம் ஒதுக்கப்படுவதும் மிகவும் குறைவாக இருக்கிறது. நூலகங்களில் சரியான முறையில் பத்திரிகைகள் கூட வாங்கிப் போடுவது கிடையாது. மாவட்ட நூலகங்களுக்குக்கூட இந்த நிலைமைதான். ஆளும் கட்சிப் பத்திரிகை என்றால் கொஞ்சம் கொஞ்சம் வாங்கிப் போடுகிறார்கள். மற்ற கட்சிப் பத்திரிகைகளையும் வாங்கிப் போடலாம். அதனால் பெரிய இழப்பு ஒன்றும் வந்துவிடாது. மாவட்ட நூலகங்களிலாவது எல்லாக் கட்சிப் பத்திரிகைகளையும் வாங்கிப்போடலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, பிற மொழிகளில் பல்வேறு ஜர்னல்கள் வருகின்றன. தமிழ் மொழியிலும் பல ஜர்னல்கள் வருகின்றன. மாவட்ட நூலகங்களிலாவது நல்ல ஜர்னல்களை எல்லாம்—தமிழ், பிற மொழி என்று பார்க்காமல்—வாங்கிப்போட ஏற்பாடு செய்ய வேண்டும்.

கல்வியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு எப்படி இருக்கிறது என்றால், ஒருவர் குறிப்பிடுகிறார்—

The country is desparately poor but at the top of the pyramids of this system is an extremely privileged minority controlling and appropriating most of the benefits of Education for the upper and educated classes.

(மாலை 4-50)

ஆக ஏற்கனவே இந்தக் கல்வியைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய வாய்ப்புகளை மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கக் கூடிய மைனாரிட்டியினர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்



1984 மார்ச் 15] [திரு. ரா. கிருஷ்ணன்]

என்பதையும் மிகச் சாதாரண நிலையிலுள்ள விரிந்து பரந்திருக்கக் கூடிய ஏழை மக்கள் இந்தக் கல்வியை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கனவே நமது அரசாங்கம் ஒரு அரசு ஆணையைப் போட்டிருக்கிறது.

G. O. Ms. No. 851 Education dt. 20-5-1980. Allegations of Malpractices of C. K. Kumaraswamy, Registrar-inquiry. A number of complaints of malpractices such as misuse of power; favouritism to relatives in the matter of appointment to University posts; amassment of wealth beyond his means; obtaining illegal commission in matters connected with University buildings and other transactions; harassment of staff improper handling of University accounts etc., alleged to have been committed by the Registrar have been received by the Government. On a perusal of the complaints the Government consider that there is a prima facie case for inquiry into these allegations against the Registrar.

என்ற ஒரு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு பிரைமா பேசி கேஸ் இருக்கிறது என்று அரசாங்கம் இதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தும், விஜிலன்ஸ் அண்டு ஆண்ட்டி கரப்ஷன் மூலமாக விசாரணை செய்து அதன்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதைப் பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர்பார்த்து நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கை எண். 17-ன் கீழ் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு கல்விக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 356 கோடியாக இருந்தது. செல்வத்துள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம் என்பதை மதிப்பிற்குரிய தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் தெரிந்து வைத்திருக்கின்ற காரணத்தால்தான் எல்லோரும் கற்க வேண்டும். ஒன்றாகக் கற்க வேண்டும் நன்றாகக் கற்க வேண்டுமென்ற ஒரு எண்ணத்தினுடைய அடிப்படையில் குறிப்பாக கல்வித்துறையைப் பொறுத்தவரையில் செலவு செய்யப்படுகின்ற ஒரு துறை என்ற நிலைமை இருந்தாலும், கடந்த ஆண்டு ரூ. 356 கோடி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், கல்விக்காக 1984-85 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது ரூ. 402 கோடி. இந்த ஆண்டு வருவாய்க் கணக்கில் மொத்தம் ரூ. 1,946 கோடியில் இது 21 விழுக்காடு ஆகும் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இயற்கைச் சீற்றத்தினால், பல்வேறு சூழ்நிலையில், தமிழகத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் கல்விக்கு என்று, அனைவரும் கற்க வேண்டுமென்ற ஒரு கொள்கைக்குட்பட்டு, இந்த மானியத்திலே ஏறக்குறைய ரூ. 402 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மீண்டும் மீண்டும் பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, வருவாய்த்துறை கணக்கில் வராத கணக்குகளையும் சேர்த்துக்கொண்டால், இந்த மானியத்திற்காக ஏறக்குறைய ரூ. 490 கோடியை இந்த அரசு செலவழித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதிதிராவிடர் பழங்குடியினர் பின்தங்கிய வகுப்பினரைச் சார்ந்த மாணவர்கள் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள். ஊனமுற்றோர்களின் பள்ளிகள், போன்றவைகளுக்காகும் செலவுகள், மருத்துவக் கல்வி, வேளாண்மை, கால்நடை மருத்துவமனைகள் ஆகிய இந்தச் செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளிவிவரங்களில் சேரவில்லை என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி சேராதது போக, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு புரட்சித் தலைவருடைய அரசு, தமிழகத்தைப் பொறுத்தவரையில் கல்வியிலே முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் பல கோடி ரூபாய்களை செலவழித்திருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாகத் தமிழகத்தை பொறுத்தவரையில், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கின்ற ஒரு உணர்வின்ன, குறிப்பாக கல்லூரிகளிலும் இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கவேண்டும், நீதிமன்றங்களிலும் இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்பதிலே எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தனி நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்காக உழைத்துக்கொண்டு திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்திலே ரஷியக் கவிஞன் சொன்ன வார்த்தைகள் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றன. ரஷியக் கவிஞன் ரசூல்கம் சந்தான என்பவர் என்னுடைய தாய்மொழி எனக்கு ஊட்டுகிற உணர்வை, என்னுடைய தாய் மொழியில் நான் பாடும்போது எனக்குக் கிடைக்கின்ற மகிழ்ச்சியை வேறு எந்த மொழியும் தரமுடியாது: அந்தத் தெம்பை, உணர்வை வேறு மொழியால் பெறமுடியாது என்று சொல்லி, அதுமட்டுமல்ல என்னுடைய தாய் மொழி நாளைக்கே அழிந்துவிடுமானால், என்னுடைய தாய்மொழி இறந்து விடுமானால், அதற்கு முதல் நாளே நான்





செத்துவிடுவேன் என்ற அளவிற்கு அவனுடைய மொழி மீது பற்றுக்கொண்டிருந்தான். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்த அளவிற்கு தமிழுக்குத் தொண்டு செய்யக்கூடிய பெருமையை எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு பல மேற்கோள்களை நான் சுட்டிக்காட்ட முடியும். சுதந்திரப் போராட்ட வீரர் களுடைய குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருவதுபோல், உதவித் தொகையும் மற்றும் புத்தகப்படி வழங்கும் திட்டம், திருத்தணி மற்றும் கன்னியாகுமரி எல்லைப் போராட்டங்களில் தமிழ்நாட்டுக்குச் சொந்தமான சில பகுதிகள் ஆந்திராவோடு சேரக்கூடாது என்னும், அதேபோல் கன்னியாகுமரியிலே நடந்த அந்தப் போராட்டங்களிலும் பங்கு பெற்ற அனைத்து தியாகிகளின் குழந்தைகளுக்கும் கொடுக்கவேண்டும் என்று ஒரு திட்டம் அண்மையிலே விரிவாக்கப்பட்டு இருக்கிறது.

அது மட்டுமல்ல. தமிழ் பயிற்சி மொழியை ஊக்குவிக்கும் வகையிலே பட்ட வகுப்புகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கு ஊக்க உதவிப்பணமாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. 1983-84 ஆம் ஆண்டிலே புரட்சித் தலைவருடைய அரசு ஏறக்குறைய 19,812 மாணவர்களுக்கு இப்படிப்பட்ட ஊக்க உதவித் தொகையை வழங்கியிருக்கிறது. இந்த ஆண்டும் ரூபாய் 35 லட்சம் இதற்காக ஒதுக்கியுள்ளதை நான் மனம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாகக் கடந்த 7 ஆண்டுகளிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1,187 இடங்களில் தொடக்கப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதையும் மிகவும் பெருமையோடு நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக கல்வித் துறையைப் பொறுத்தவரை, படிக்கின்ற மாணவர்களுக்கு எதிர்காலம் நல்லமுறையில் உருவாகவேண்டும் என்று சொன்னால் அதற்கு அடிப்படையாக விளங்குகின்றவர்கள் ஆசிரியப் பெருமக்கள் தான் என்பதை—கல்விக்கு முதுகெலும்பாக, கல்வி கற்கின்ற மாணவர்களை நாளையச் சிற்பிகளாக உருவாக்குகின்ற தன்மையை, கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகியவற்றில் தலைசிறந்த நிலைமையை உருவாக்குகிற பொறுப்பு ஆசிரியர் பெருமக்களுக்கு உண்டு—என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிற காரணத்தால்தான் ஆசிரியர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திலே உள்ள யாரும் மறுக்க முடியாது. ஒரு காலத்திலே பட்டதாரி ஆசிரியர் கள் போராட்டம் நடத்துவோம் என்று சொன்னதுபோது அவர்கள் மீது பொய் வழக்கு போட்டு, அவர்களை பயமுறுத்தி எழுதி வாங்கிய கதைகளை எல்லாம் இந்த நேரத்தில் நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் ஆசிரியர்கள் குறைகளை உடனுக்குடன், உரிய காலத்தில் தீர்த்து வைக்கும் பொருட்டு, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில நிலைகளில் ஆசிரியர்களுக் கான ஆலோசனைக் குழுக்களை இந்த அரசு அமைத்திருக்கிறது.

[திரு. சி. கோபால்] [1984 மார்ச் 15

துனியார் நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பிற்காக இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. ஆசிரியர்களும், அவர்களது குடும்பத்தினரைச் சார்ந்தவர்களும் வறுமை முதலியவற்றால் வாடும்போது, நிதி உதவி செய்யவும், அவர்களது குழந்தைகளுக்கு மேற்படிப்புக்கான உதவித்தொகைகளை அளிப்பதற்கும் இந்த அரசு வழி வகுத்து உள்ளது.

அதுமட்டுமல்ல, அனைத்து ஆசிரியர்களுக்கும் 1982-83 ஆம் ஆண்டிலே ஈட்டிய விடுப்பு 3 நாட்களிலேயிருந்து 10 நாட்களாக இந்த ஆட்சியிலேதான் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் அனைவருக்கும் 1—1—1981 முதல், முதல் நிலைத் தமிழாசிரியர்களாக தரம் உயர்த்திக்கொடுத்ததும், புரட்சித்தலைவருடைய ஆட்சியிலேதான் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அது மட்டுமல்ல. நடுநிலைப்பள்ளிகளிலே உள்ள பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர் பதவிகளைப் படிப்படியாக முழு நேரப் பதவிகளாக மாற்ற வழிவகுக்கப்பட்டு உள்ளதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாலை 5-00)

பி. டி. தகுதி பெரும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு, அந்த சம்பள விகிதம் தரப்படுவதும், புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலேதான் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, ஆசிரிய சமுதாயத்தை ஏற்றுக் கொள்ள இளைஞர்கள் முன் வந்து, அவர்களுக்கு கல்வி பணி போதிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அரசு ஆசிரியர்களுக்கு குறிப்பாக இந்த நன்மைகளைச் செய்துவருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களின் பதவிகளையும், 100 உடற் பயிற்சி ஆசிரியர்களின் பதவிகளையும் 150 தமிழ் ........ (மணியடிக்கப்பெற்றது).

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் முன்பே இந்த அவையிலே தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள், நீங்கள் அங்கே அமர்ந்திருக்கும்போது உங்களைச் சுற்றி இப்படி கூட்டம் கூடிக் கொண்டிருக்கக்கூடாது என்று.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யாரும் கூட்டமாக இங்கே நிற்கக் கூடாது. இப்போதும் சொல்லிவிட்டேன்.



1984 மார்ச் 15]

திரு. சி. கோபால் : துணைத் தலைவர் அவர்களே, ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களின் பதவிகளையும், 100 உடற் பயிற்சி ஆசிரியர்களின் பதவிகளையும், 150 தமிழ் ஆசிரியர்களின் பதவிகளையும், 200 பி. எட். ஆசிரியப் பதவிகளையும் ஏற்படுத்தியிருப்பதை, இந்த அரசு வேலை வாய்ப்பிற்கு எந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் கொள்கையை உருவாக்கவில்லை என்று சொல்பவர்களுக்கு இந்த நேரத்திலே இதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, பள்ளி வயது சிறுவர்கள் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை உருவாக்குவதிலே 20 அம்ச திட்டத்திலே, 16 ஆவது அம்சமாக ஏற்படுத்தி மத்திய அரசு அந்த திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. ஆனால் அவர்கள் வெளியிட்டிருக்கிற விவரங்களிலே, இந்தச் சாதனையை இந்தியாவிலேயே, பள்ளி வயது சிறுவர்கள் அனைவருக்கும், தொடக்கக் கல்வியை உருவாக்குவதிலே, புள்ளி விவரங்களை அதிகமாகக் காட்டியது தமிழக அரசுதான் என்பதைச் சொல்லி, பல இடங்களிலே பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1983-84-ல் 6 வயது முதல் 11 வயது வரை உள்ளவர்களில், ஏறக்குறைய 3.82 லட்சம் மாணவர்களும், மாணவியர்களும், அது போல 11 முதல் 14 வயது வரை உள்ளவர்களும் ஆக இரண்டும் சேர்த்து, கடந்த ஆண்டு கூடுதலாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், இது ஏந்த ஆண்டிலுமில்லாத ஒரு அனுபவம் என்பதையும், காரணம் பல கிராமங்களிலே இந்த அரசு ஆட்சிக் கட்டிலுக்கு ஏறுவதற்கு முன்னாலே கிராமப்பகுதிகளிலே இருக்கிற பல ஆசிரியப் பெருமக்கள் சொல்வதை நாங்கள் எல்லாம் கேட்டிருக்கிறோம். நாங்கள் பள்ளிக்குச் சென்றால் சென்ற பின்பு, மாணவர்களையெல்லாம் அழைத்து வந்து கல்வி கற்பிக்க வேண்டும். அவர்கள் எங்காவது விவசாயத்திற்கு சென்று விடுவார்கள், அல்லது எங்காவது தாய்தந்தையர்களுடன் சென்று விடுவார்கள். இப்படி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து கல்வி கற்பிப்பதிலே சிரமமாக இருக்கிறது என்று சொன்ன ஆசிரியப் பெருமக்களை எல்லாம் நான் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே இந்த ஆண்டிலே 3.82 லட்சம் சிறுவர்கள், அவர்களாகவே சேர்ந்து படிப்பதற்கு முன் வருகிறார்கள் என்று சொன்னால் இப்படிப்பட்ட சாதனையை, இந்தத் தமிழகம் மட்டும் அல்ல, எந்த மாநிலத்திலும், இந்தியா விடுதலை பெற்ற பின்னால், அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னால், யாரும் செய்திருக்கவில்லை. இப்படிப்பட்ட சாதனையை செய்து முடித்திருப்பவர்கள், எங்களுடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தான் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தண்ணிறைவுத் திட்டத்தின் கீழ் மூன்று ஆண்டுகளிலே 5,154 ஒன்றியப் பள்ளிகளுக்குக் கட்டிடங்களைக் கொடுத்திருப்பது, இந்திய நாட்டிலேயே எந்த மாநிலத்திலும் செய்ய முடியாத ஒரு சாதனை என்பதை நான் பணிவன்போடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பெண்கள் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மற்றும் பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அனைத்திலும் கழிவு அறை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக 5 கோடி ரூபாய் செய்து திட்டத்தை வகுத்திருப்பதும், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக ஒரு பல்கலைக் கழகம் ஏற்பட்டால், அதனாலே எந்த அளவிற்கு படித்தவர்களுக்கு நன்மை ஏற்படும் என்பதை நாமெல்லாம் அறிந்து வைத்திருக்கிறோம். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால், நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய கல்வியமைச்சர் அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால் கோயம்புத்தூரிலே பாரதியார் பெயரில் ஒரு பல்கலைக் கழகமும், திருச்சியிலே பாரதிதாசன் பெயரிலே ஒரு பல்கலைக் கழகமும், பாரதியார் நூற்றாண்டு விழாவிலே அறிவித்ததைப் போல் பெண்களுக்குத் தனியொரு பல்கலைக் கழகமும் அமைக்கப்படும் என்று அறிவித்து இன்று அன்னை தெரஸா பெயரால் அமைக்கப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, காரைக்குடியிலே ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதற்காகவும் ஆய்வில் உள்ளது. இதையெல்லாம் நினைத்துப் பார்க்கிற போது எந்த அளவுக்கு நன்மைகள் இந்தத் துறையில் நடைபெற்று வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சாவூரிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தியதும் இந்த அரசுதான். குறிப்பாக தொழிற் கல்வியைப் பொறுத்த வரை நம்முடைய ஆங்கில நாளேடான இந்து நாளிதழ் முதியோர் கல்வி எந்த அளவுக்கு இந்த ஆட்சியிலே வளர்ச்சி பெற்றுள்ளது என்பதைப் பற்றி எழுதியிருக்கிறது. அது மட்டுமல்ல, எங்கும் தமிழ், எதிலும் தமிழ், தமிழர்களுக்கு எங்கே எது நேர்ந்தாலும் அவர்களுக்கு தனி மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள். அந்த அடிப்படையில் ஸ்ரீலங்காவிலிருந்து வந்த தமிழர்களுக்குப் படிக்கின்ற வசதிகளை உருவாக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் பொறியியல் கல்விக்கு ஒவ்வொரு அரசுக் கல்லூரியிலும் 5 இடங்கள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியிலே தான் பொறியியல் கல்லூரியிலே அம்மாணவர்கள் 20 பேர்கள் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள்.



என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு வார்த்தை. தமிழக அரசின் சார்பில் அமைக்கப்பட இருக்கிற பாலிடெக்னிக்கை—வறட்சி நிறைந்த நெசவாளர்களும் விவசாயிகளும் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற, மாணவர்கள் வெகு தூரம் சென்று படிக்கக்கூடிய நிலையில் உள்ள—எங்களுடைய பகுதியில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மானியம் 11-கல்விக்காக 402 கோடியே 34 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியை சென்ற ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது சென்ற ஆண்டு 21.5 விழுக்காடு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு அதிலே 0.5 சதவீதம் குறைந்திருக்கிறது என்பதை நான் முதலிலேயே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சென்ற ஆண்டு இருக்கக்கூடிய நிலைமையை இந்த ஆண்டு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, கட்டடங்கள் ஆனாலும் சரி, புத்தகங்கள் ஆனாலும் சரி, அல்லது ஆசிரியர்கள் சம்பளம் ஆனாலும் சரி, மொத்தமாக .5 சதவீதம் குறைந்து இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1983-84-வது ஆண்டிலே 6 வயதிலிருந்து 11 வயது வரை பள்ளிகளிலே சேர்ந்துள்ள மாணவர்களுடைய எண்ணிக்கை ஒட்டுமொத்தமாக 97.96 சதவீதமாக ஆகியிருக்கிறது. ஆனால் அதே மாணவர்களுடைய எண்ணிக்கை 11 வயது முதல் 14 வயது வரை என்று வருகிறபோது 97 சதமானம் இருக்கக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கை 69.40 சதவீதமாகக் குறைந்திருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையிலும் வருடாவருடம் மாணவர்களுடைய எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என்பதை இந்த சமயத்தில் சுட்டிக் காட்டுவதோடு குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கிற காரணத்தினால் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறதா என்றால், ஆம், அதிகரித்து இருக்கிறது. ஆனால் 1980 ஆம் ஆண்டிலே மக்களுடைய தொகை எவ்வளவு, அன்றைய தினம் பள்ளிகளுக்குச் சென்ற குழந்தைகள் எவ்வளவு என்பதை 1984 ஆம் ஆண்டு மக்களுடைய தொகை எவ்வளவு, இன்றைய தினம் பள்ளிகளுக்கு செல்கின்ற குழந்தைகள் எவ்வளவு என்று ஒப்பிட்டுப் பார்த்தால், அதிலே புள்ளி விவரத்தினுடைய வித்தியாசம் குறையும் என்று நான் நினைக்கிறேன்.

34,100 மையங்களிலே இன்றைக்கு 44 லட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு சமைப்பதற்காகவும் மேற்பார்வையிடுவதற்காகவும் ஆயாக்களை 150 ரூபாய் சம்பளத்திலே நியமித்து இருக்கிறோம். அவர்களுக்கு 150 ரூபாய் சம்பளம் என்கிறபோது காலையிலே கூட சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பகுதி நேர வேலையில்லாமல் முழு நேர ஊழியர்களாக ஆக்கக் கூடாதா என்றால் வேலையில்லாதவர்களுக்கு இம்

மாதிரியான ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது என்று குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில் நான் சொல்வது பகுதி நேர வேலையாக இருந்தாலும் அவர்கள் வேறு எந்த வேலைக்கும் சேர்ந்து வேலை செய்ய முடியும் என்ற நிலைமை இல்லை. அதே வேலையைத் தான் அவர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, 34,100 மையங்களிலே சமையல் செய்யக் கூடியவர்களுக்கு ரூ. 150; 60; 30 என்று இருக்கக்கூடிய தொகையை மேலும் உயர்த்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-10)

மேலும் செப்டம்பர் 15 ஆம் தேதியிலிருந்து 10 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவர்களுக்கும் இந்தச் சத்துணவை உயர்த்தி இருக்கிறோம். ஆகவே ஏற்கனவே வேலைப் செய்து கொண்டு இருக்கிறவர்களுக்கு இன்னும் அதிகமான வேலை பளு ஏற்படக்கூடிய ஒரு நிலைமை இருக்கும். இந்த இரண்டையும் பரிசீலனை செய்து அவர்களுக்கு உண்டான அந்தச் சம்பளத்தை அதிகப்படுத்துவதற்கான நிலையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1 முதல் 3 ஆம் வகுப்பு, 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இலவசமாக சிலேட்டுப் புத்தகங்கள் கொடுக்கிறார்கள். வசதி இருக்கக்கூடிய குழந்தைகள் பள்ளி திறந்தவுடனேயே அவர்களுக்குத் தேவையான சிலேட்டு புத்தகங்களை வாங்கிக் கொண்டு வந்து விடுகிறார்கள். குறிப்பாக ஏழை எளிய தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்கு நாம் ஒரு குறிப்பிட்ட காலம் வரை அதாவது பள்ளி திறந்து ஒரு வாரம், 10 நாள் கழித்த பிறகு நாம் இந்த சிலேட்டுகளையும் புத்தகங்களையும் கொடுக்கின்ற நிலைமை ஏற்படுமானால் மற்ற குழந்தைகளோடு சேர்ந்து படிப்பதற்கு உண்டான சாத்தியக்கூறு இருக்கும். ஆனால் பள்ளி திறந்து மாதக் கணக்கில் இந்தக் குழந்தைகளுக்கு சிலேட்டு புத்தகங்கள் கொடுக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இந்த சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே நாம் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவும் அல்லது கல்வித் துறையின் மூலமாகவும் ஒதுக்கக்கூடிய நிதியிலிருந்து பல்வேறு இடங்களில் அதிகமான ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு இருந்தாலும் இன்னும் பல்வேறு இடங்களில் பள்ளிக் கூடங்கள் கட்டப்படாத ஒரு நிலை இருக்கிறது. அதே சமயத்தில் ஏற்கனவே கட்டப்பட்டு இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள் பழுதுபட்டு இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் என்னுடைய தொகுதியில் ஊத்துக்குளி ஒன்றியத்தில் ஆதியூர், குன்னத்தூர், பாப்பன் பாளையம் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் மேல்





இருக்கக்கூடிய கூறைகள் பழுதடைந்துள்ளது. மழை பெய்ததின் காரணமாக மேலும் பாழடைந்த நிலையில் அங்கே இருக்கிறது என்பதை நான் இந்த சமயத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இன்னும் பல்வேறு இடங்களில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தாற் போல் பள்ளிக்கூடங்கள், கட்டிடங்கள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இந்த சமயத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மேலும் ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும் மேல்நிலைப் பள்ளி ஆரம்பிக்கின்ற போது அதற்குத் தேவையானவற்றை அரசு நிர்ணயிப்பது இல்லை. ஆரம்பப் பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் இன்னும் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக பள்ளி ஆரம்பித்தக் காலத்திலிருந்து முடிகின்ற காலம் வரையிலும் கூட ஆசிரியர்கள் போடாத ஒரு நிலை இருக்கிறது. அதே சமயத்தில் ஆசிரியர் போடுகின்றபோது எந்த ஆசிரியரை அந்தப் பள்ளிக்கு நியமனம் செய்கிறோமோ அந்தப் பள்ளிக்கு வந்து அந்த ஆசிரியர் சேருவதற்கு முன்பாகவே அவரை வேறு ஒரு இடத்திற்கு மாற்றல் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, பள்ளிகளிலே ஆசிரியர்களை நியமிக்கும் பொழுது நிச்சயமாக அந்த இடத்திலே அவர்கள் போய் வேலை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிகள் திறக்கப்பட்டவுடனேயே ஒரு மாதமோ அல்லது பத்து நாட்களோ குறிப்பிட்டு அதற்குள்ளாக சம்பந்தப்பட்ட பள்ளிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்து படிப்பதற்கு உத்தரவாதம் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆசிரியர்கள் பயிற்சியைப் பொறுத்தவரையிலே சில ஆண்டுகளுக்கு முன் அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது ஒரு ஆண்டுக்கு 35 ஆசிரியர்களுக்கு பயிற்சி என்ற முறையிலே நாம் பயிற்சிக்கு ஏற்பாடு செய்கிறோம். ஆனால் ஏற்கனவே உள்ள குழந்தைகளுடைய எண்ணிக்கைக்கும், அதே சமயத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் பார்த்தால் இப்பொழுது ஆசிரியர் பயிற்சிக்கு எடுக்கப்படும் எண்ணிக்கை போதாது. எனவே, மேலும் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பித்து அதிகமான அளவிற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டு மென்று இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விடுதிகளைப் பொறுத்த வரையில், குறிப்பாக மேல்நிலைப் பள்ளிகள் அல்லது உயர்நிலைப் பள்ளிகளிலே இருக்கின்ற மாணவ- மாணவிகளுக்கு உள்ள விடுதிகளில் நாம் இன்றைக்கு அவர்களது

உணவுக்காக 1 ரூபாய் 50 பைசா மட்டும்தான் வழங்குகிறோம். விலைவாசி ஏறியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்காக ஒதுக்கப்படும் பணம் குறைவாக இருப்பதால் அந்தக் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் உணவின் தன்மை பற்றாக்குறையாக இருக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, 1 ரூபாய் 50 பைசா என்பதை மாற்றி இன்னும் அதிகமாக ஆக்கி, குறைந்த பட்சம் இரண்டு ரூபாய் ஐம்பது பைசா அல்லது இரண்டு ருபாய் என்ற அளவிற்கு ஒரு நாளைக்கு உயர்த்தும் நிலைமை இருக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

உடல் கல்வி இயக்குநர்களைப் பொறுத்தவரையில் கடந்த பத்தாண்டுக் காலமாக அவர்கள் பள்ளிகளிலே வேலை செய்துக் கொண்டிருந்தாலும்கூட, இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். தொழிற் சங்க சட்டப்படி ஒரு நபர் இரண்டு ஆண்டுக்காலம்—அதாவது 480 நாட்கள் வேலை செய்திருந்தால் நிரந்தர ஊழியராக அந்தப் பணியிலே ஆக்க வேண்டுமென்று சட்டமியற்றி இருக்கிறோம். ஆனால், அதே சமயத்தில் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற அந்த ஆசிரியர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாத ஒரு சூழ்நிலையில் பத்தாண்டுக் காலம், எட்டாண்டுக் காலம் பணியாற்றியும்கூட அவர்கள் நிரந்தரமாக்கப்படாத நிலையிலே இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். எனவே, நாம் ஏற்கெனவே வகுத்துள்ள சட்டத்தின் படி அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும் நாம் எவ்வளவு தான் மானியத்தைக் கொடுத்தும் அல்லது வேண்டிய வசதிகளை அரசுத் தரப்பிலே யிருந்து செய்து கொடுத்தும் இருந்தாலும்கூட அங்கேயுள்ள ஆசிரியர்களுக்கு மாதாமாதம் முறையாகச் சம்பளம் போய்ச் சேராத நிலமை இருக்கிறது. அல்லது அவர்களின் பிரச்சினைகளைக் கூறுவதற்காக அவர்கள் சம்பந்தப்பட்ட தாளாளரிடமோ அல்லது அதை நடத்தக் கூடியவர்களிடமோ சென்று கேட்கின்றபொழுது அவர்களை வெளியிலே நிறுத்தி வைத்து, பல ஆண்டுக்காலம் அல்லது பல மாதங்கள் வேலையில்லாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதைத் தயவு செய்து பரிசீலனை செய்து அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும். அவர்கள் வேலையிலேயிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தால் அவர்களுக்கு நாம் கொடுக்கின்ற சம்பளத்தைக் கொடுத்துவிட்டு அவர்களின் பிரச்சினைகள் என்ன என்று பேசித் தீர்ப்பதற்கு அரசு முன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

தொழில் கல்வியைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொண்டால் ஏற்கெனவே உள்ள பட்டப்படிப்பின் காரணமாக மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லை. அந்தப் பட்டப்படிப்பு





கல்வியினால் வாழ்க்கையில் ஒரு பயனில்லாத சூழ்நிலையில் நாம் இன்றைக்குத் தொழில் கல்வியைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் தொழிற் கல்வியைப் பொறுத்தவரையிலே நாம் ஆழமாகப் பரிசீலிக்க வேண்டிய ஒரு சூழ்நிலையிலே இருக்கிறோம். பத்து இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று நாம் சம்பந்தப் பட்ட நிர்வாகத்திற்குச் சொல்கின்றபொழுது முதல் வருடம் 4 இலட்சம் ரூபாய், பிறகு இருக்கின்ற 3 வருடங்களில் இரண்டு இரண்டு, இரண்டு இலட்சம் ரூபாய்கள் என்று அவர்கள் கட்ட வேண்டும். ஆனால், தொழில் கல்விக்காகச் சேருகின்றபோதே மாணவர்களிடத்திலே அதிகமான பணத்தை வசூலிக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லி முடிக்கிறேன். நன்றி.

(மாலை 5-20)

திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். 1984-85 ஆம் ஆண்டினுடைய மொத்தச் செலவு ரூபாய் 1946-ல் கல்வி வளர்ச்சிக்காக மட்டும் 402 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மருத்துவக் கல்வி கால்நடை மருத்துவக் கல்வி, ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், பின்தங்கியோர் பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளிகள், ஊனமுற்றோர் பள்ளிகள் ஆகியவை நீங்கலாக மொத்தச் செலவில் 21 விழுக்காடு கல்லூரிக் கல்விக்கும், பள்ளிக் கல்விக்கும், தொழில் கல்விக்கும் மட்டும் ஒதுக்கி இருப்பது ஒரு பிரகாசமான எதிர்காலத்தை மனதில் கொண்டுதான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. இது பாராட்டுக்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கடந்த மூன்றாண்டுக் காலத்தில் நம்முடைய அரசு சொந்தக் கட்டிடம் இல்லாத தொடக்கப் பள்ளிகள் அனைத்திற்கும் புதிய கட்டிடங்களைக் கட்டிவிட்டது. அதிக மாணவர்கள் உள்ள, இடவசதி இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்ற எல்லா பள்ளிகளுக்கும் துணைக் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து, அதற்காக ரூபாய் 31 கோடி செலவிடப்பட்டிருப்பதை நான் மனதார வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பள்ளிக்கட்டிடம் இல்லாத ஊரே இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு முழுமையாக எல்லா இடங்களிலும் புதியதாகப் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டி இருக்கிறோம்.

கடந்த 20 ஆண்டுக் காலமாக சில ஊர்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் எந்தவிதமான வசதியும் இல்லாமல் இயங்கி வருகின்றது. 60, 70 மாணவர்கள் படிக்கின்ற அளவிலே அதற்கான வசதியோடு ஆரம்பிக்கப்பட்ட அப்பள்ளிகளில் இப்போது 600-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருந்து படிக்க வேண்டி இருக்கின்றது. இப்போதுதான் சில இடங்களில் மகளிர் உயர்நிலைப்

பள்ளிகளில் கழிப்பறை கட்டிக் கொடுத்திருக்கிறோம். இந்த நிதியாண்டில் சிறு பள்ளிகளைப் பொறுத்தவரையில் 102 அரைகுறையாகக் கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்ற பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் பூர்த்தி செய்ய 119 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் சொந்தமான முழு அளவிலான நிரந்தரக் கட்டிடம் கட்டிக் கொடுக்கின்ற வகையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முழுமையாக இந்நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த திருக்கழுக்குன்றம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மாமல்லபுரம் உயர்நிலைப்பள்ளி, சதுரங்கப்பட்டிணம் உயர்நிலைப்பள்ளி ஆகியவை கீற்றுக் கொட்டகைகளில்தான் இயங்கி வருகின்றன. அப்படிப்பட்ட அவல நிலைமை இருக்கின்றது. அந்தப் பள்ளிக் கூரைகளை எல்லாம் மாற்றியமைத்து கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டும் என்று பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டிருக்கிறேன். இன்றைக்கும் அதே வேண்டுகோளை இங்கே வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேல்நிலைப்பள்ளியை உருவாக்கி புதிய சரித்திரம் புகழ் பெற்றது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு. மேல்நிலைப் பள்ளி தொடங்கப்பட்ட போது சிறப்பாக நடந்து வந்த தனியார்ப் பள்ளிகள் பல தங்களுக்கு உள்ள சிக்கல்கள் காரணமாக உடனடியாக அந்த மேல்நிலைப் படிப்பைத் தொடங்காமல் போய் விட்டன. ஆகவே, அரசாங்கம் பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று பல அரசு உயர்நிலைப் பள்ளிகளில் வேகவேகமாக மேல்நிலைக் கல்வியினை ஏற்படுத்தித் தீரவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் இன்றைக்குப் பார்க்கின்றபோது அந்தப் பள்ளிகள் சிலவற்றில் போதிய வசதிகளும், போதிய மாணவர்களும் இல்லாமல் அங்கெல்லாம் அவை சரிவர இயங்காமல் இருப்பதை அரசு உணர்ந்திருக்கின்றது. ஆகவே சரிவர இயங்காமல் அரசு எதிர்பார்த்த அளவுக்கு இயங்காத பள்ளிகளுக்குப் பதிலாக தரமான தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வியினைத் தொடர அனுமதி தரவேண்டும். ஆனால், தற்போது யாருக்கும் அனுமதி வழங்கப்படுவதில்லை. அவ்வாறு அனுமதி வேண்டும் என்று மூன்றாண்டுக் காலமாக விண்ணப்பித்து மிகத் தீவிரமான முயற்சி செய்து வருகின்ற செங்கல்பட்டு செயின்ட் மேரீஸ் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கும், டி. நகர் இராமகிருஷ்ணா (வடக்கு) பள்ளிக்கும் அந்த அனுமதியினை வழங்கவேண்டும் என்று அன்புடன் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

எங்கும் தமிழ், அனைத்திலும் தமிழ் என்னும் வகையில் நம்முடைய அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக அரசுத் துறையானாலும் மற்றவையானாலும் முழுமையாகத் தமிழைப்





பயன்படுத்த வேண்டும் என்ற வகையில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சிறப்பிலக்கிய மொழிப் பெயர்ப்புத் திட்டம், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம், தமிழில் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம், தமிழ் அறிஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் விருதுகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி தமிழ் வளர்ச்சித் துறை சிறப்பாக இயங்கி வருகின்றது. முன்பு, திரு. மா. நன்னன் அவர்கள் இயக்குநராக இருந்தார்கள். இப்போது இயக்குநராகத் திரு. சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் இருக்கிறார்கள். தமிழக அரசின் மொழி பெயர்ப்புத் துறையின் இயக்குநராக திரு. ஔவை நடராஜன் அவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் மிகச் சிறப்பாக தமிழ் வளர்ச்சிக்காகப் பணியாற்றுகிறார்கள். அவர்களை இந்த அரசின் மூலமாக வாழ்த்த நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இயக்குநர் அவர்களும் எந்த அளவுக்கு முயற்சி மேற்கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலுங்கூட, அவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், எதிர்பார்த்த அளவுக்குப் பயன் கிட்டுகிறதா என்றால், தமிழ் வளர்ச்சியில் போதிய பயனில்லையென்ற பதில்தான் கிடைக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், வட்டாட்சியர் அலுவலகங்கள் போன்ற இடங்களில் மட்டும் ஓரளவுக்குத் தமிழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தலைமைச் செயலகங்களிலோ, துறைத் தலைவர்கள் இருக்கின்ற இடங்களிலோ, இயக்குநர் அலுவலகங்களிலோ அல்லது வட்ட ஆட்சித் தலைவர் இருக்கின்ற இடங்களிலோ, தலைமை பீடங்களிலோ, தமிழ் பின்பற்றப்படவில்லை. காரணம் என்னவென்றால் அரசுச் செயலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், துறைத் தலைவர்கள் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதுதான்.

அதுமட்டுமல்ல, பல பேர்களுக்கு தமிழே தெரியாது ; சில பேர் தமிழில் பேச கூச்சப்படுகின்றார்கள். சிலபேர் கௌரவக் குறைச்சலாக நினைக்கிறார்கள். அந்த அளவுக்கு மேல் நிலையில் இருக்கிற் அதிகாரிகள் தங்களுடைய கருத்துக்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஐ. ஏ. எஸ். படித்துவிட்டு வேலையில் சேர்ந்த பிறகு தமிழைக் கற்க ஒரு சில பேர்கள் ஆரம்பிக்கிறார்கள். தமிழ் அறிந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை மட்டுமே இந்த அரசு நியமனம் செய்ய வேண்டுமென்று முடிவு செய்துவிட்டால் இந்த அவல நிலை நிச்சயமாகத் தீரும். தமிழ் வ்ளர்ச்சி ஒழுங்காக நடைபெறும் என்பதைத் பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்படி தஞ்சைப் பல்கலைக் கழகம் பாரதியார் நூல்களை மொத்தமாக வெளியிடுகிறதோ, அதைப் போல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூல்கள் அனைத்தையும் முறைப்படி

அச்சிட்டு வெளியிடும் பணி தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் திடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகள், கடைகள் போன்ற வியாபார ஸ்தலங் களில் விளம்பர போர்டுகள்கூட இன்னும் தமிழகத்திலே தமிழிலே போடப்படவில்லை என்ற குறை பல ஆண்டுகளாக இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு இருந்து வருகிறது. இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கை எடுத்தாவது தமிழிலே பெயர்ப் பலகைகள் வைக்க வேண்டுமென்ற கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வட மாநிலங்களுக்கு, உத்திரப் பிரதேசம், மத்தியப் பிர தேசம், பீகார் போன்ற மாநிலங்களுக்குச் சென்றால் அங்கே காரிலே இருக்கிற, லாரிகளிலே இருக்கிற நம்பர் பிளேட்டுகளில் கூட இந்தி எழுத்துக்களாக இருக்கின்றன. தமிழ் மொழியிலே இருக்கின்ற எண்களைக் கொண்டு இங்கே இருக்கிற கார்கள், பஸ்களுக்கு நம்பர் பிளேட் போட்டுக் கொடுக்கக் கூடாதா என்று அமைச்சர் மூலமாக அறிந்துகொள்ள நான விரும்பு கிறேன்.

அதே போல், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் மொழி பெயர்ப்புத் துறை, தமிழ் பண்பாட்டு இயக்கம், தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகிய துறைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அவர்களை ஒரே துறையின் கீழ் கொண்டு வந்து தனியாக ஒரு செயலரை நியமித்தால் தமிழ் மேலும் சிறக்க நல்ல வழிவகை ஏற்படும் என்பதைப் பணிவன் போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பாவலர் அவர்களுடைய மறைவிற்குப் பின்னால் அகர முதலி தயாரிக்கும் பணி முடிக்கப்படாமல் அரைகுறையாக விடப் பட்டிருப்பதை இந்த மாமன்றம் உணரும். இதற்காக போடப் பட்டுள்ள குழுவை விரைவுப்படுத்தி, அகரமுதலியை விரைவாக வெளியிட உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரை நான் பணிவாகக் கேட்டுக் கொள் கிறேன்.

சமீபத்தில் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்த சில தமிழ் அறிஞர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டபொழுது அவர்கள் சில சங்கதிகளைச் சொன்னார்கள். அந்த நாட்டைப் பற்றி அவர்கள் வெகுவாகப் பேசும்பொழுது அரசாங்கமே அந்த நாட்டைப் பற்றி மற்றவர்கள் தெரிந்துகொள்வதற்காக 3 புத்தகங்களை வெளியிட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஒரு புத்தகம் அந்த நாடு எப்படி தோன்றியது என்பது பற்றியும், அந்த மாநில வளத்தைப் பற்றியும் விரிவாகக் குறிப்பதாகச் சொன்னார்கள். ஒரு புத்தகத்திலே மக்களுடைய மன வளத்தை யும் பண்டைய நாகரீகத்தையும் பண்பாட்டையும் விளக்கி



யுள்ளார்கள். மற்றொன்றிலே மன்னர் ஆட்சி முதற்கொண்டு மக்கள் ஆட்சி முறை வரை எல்லா முழு விவரங்களும் கொண் டுள்ளதாம். ஆகவே, அந்த 3 நூல்களைப் படித்துவிட்டால் இலங்கை நாட்டினுடைய எல்லா முழு விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம் என்று அவர்கள் கூறினார்கள்.

அப்படி தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் அதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அப்படிப்பட்ட நூல் இது வரையில் வெளியிடப்படவில்லை. தமிழ்நாட்டு வரலாற்றைப் பற்றி பலர் பல விதமாக எழுதி இருக்கிறார்கள். ஆனால், அரசே ஒரு அறிஞர் குழுவை அமைத்து, நமது நாட்டு பண்பாடு, நாகரீகம், வரலாறு ஆகிய அனைத்தையும் முழுமையாகப் புரிந்து கொள்ளத்தக்க அளவுக்குச் சிறப்பாக ஒரு வரலாற்று நூலை வெளியிடதக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவாக கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-30)

இந்திய துணைக் கண்டத்திலேயே எந்த ஒரு மாநிலத்திலும் அறிவிக்கப்படாத திட்டத்தைத் தமிழகத்தில் இருக்கும் ஆசிரியர் களும் அரசு ஊழியர்களும் எதிர்பார்த்தபடியே, ஓய்வுபெற்றால் ரூ. 10,000 என்று அறிவித்து அமுலுக்குக் கொண்டு வந்திருப் பதைக் கண்டு ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து கொண்டிக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம். இந்த நல்ல சலுகையை, சிறப்பான சலுகையை, ஓய்வு பெற்றால் 10 ஆயிரம் என்ற சலுகையை தனியார். பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைப்பதற்கு இந்த அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆட்சியிலேதான் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் முதலா னோர் வைத்த பல்வேறு கோரிக்கைகளை ஏற்று தீர்வு பெற்றிருக்கிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. முந்தைய ஆட்சியில் 2-வது ஊதியக் குழுவிற்கும், 3-வது ஊதியக் குழுவிற்கும் இடையே 120—-புள்ளிகள் விலைவாசி உயர்வு இருந் தது. 8 புள்ளி உயர்வுக்கு மட்டும் அந்த ஆட்சியிலே அகவிலைப் படி கொடுத்தார்கள். மீதமுள்ள 7 அகவிலைப்படிகளை கொடுக் காமலே நிறுத்திவிட்டார்கள். அதை அரசாங்க ஊழியர்கள் இன்னமும் கூட ஈடுசெய்ய முடியாத இழப்பாக கருதுகிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசு வழங்கி யிருக்கிற அனைத்து தவணைகளையும் நிலுவையில்லாமல் வழங்கி அதன் வாயிலாக அரசு அலுவலர்களும், ஆசிரியர்களும் குறை யின்றி இருக்கிறார்கள். குறை கூறிக்கொண்டிருந்த சங்கத் தலைவர்கள் கூட இன்றைக்கு மனம் மாறி பாராட்டுகிற நிலை மையை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மாநகராட்சிகள் சுற்று வட்டாரத்தில் பணியாற்றுகிற ஆசிரி யர்களுக்கு வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி இவைகள் யாவும் கிடைக்கின்றன. ஆனால் கிராமத்திலே உள்ளவர்களுக்கு

ஒரு படியும் கிடைக்காத நிலையில் புரட்சித் தலைவர் அரசு இன்றைக்கு கிராம ஈட்டுப்படி என்பதை அறிவித்து மாதம் 10 ரூபாய் வீதம் கிடைக்கிறது.

அடுத்தபடியாக இதற்கு முன் 15 நாட்களாக இருந்த விடுப்பு இந்த ஆட்சியில் தான் 20 நாட்கள் கேசுவல் லீவு என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். கல்வித்துறை தோன்றிய காலத்திலிருந்து தொடக்கக் கல்விக் காக நிர்வாகம் தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு என்று ஊராட்சி ஒன்றிய அமைப்புகளிடம் இருந்தது ஒரு காலத்தில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்பட வேண்டுமென்று அப்போதிருந்த முதலமைச்சருக்கு கோரிக்கை வைத்தார்கள். அவர் அதற்கு இது கோரிக்கை அல்ல கோரக்கை என்று வக்கணைப் பேசி உதாசீனம் செய்ததை யாரும் மறந்துவிட முடியாது. புரட்சித் தலைவர் அவர்கள் அரசுதான் ஏறக்குறைய ஒரு லட்சம் பேர்களை இந்த நிலைக்கு கொண்டு வந்திருக்கிறது என்பதை யாரும் மறக்க முடியாது.

இரண்டு ஆண்டு பயிற்சி பெற்ற எல்லா ஆசிரியர்களும் ஒரு ஊதிய ஊக்க உயர்வு என்ற திட்டத்தின் கீழ் 1-6-1981 முதல் அளித்து புரட்சித் தலைவர் அவர்கள் அரசு உத்தரவிட்டது. இதனால் 1-6-1981-ல் பணியாற்றிக் கொண்டிருந்த எல்லா ஆசிரியர்களும் நன்மை பெற்றிருக்கிறார்கள். 1-6-1981-க்கு பிறகு புதியதாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு இந்த ஊக்க ஊதிய உயர்வு கிடைக்கவில்லை. கல்வித் துறையினால் இது மறுக்கப்படுகிறது. அரசின் நல்ல எண்ணத்தின்படி 1-6-1981-க்குப் பிறகு நியமனம் ஆனாலும் இந்தச் சலுகை உண்டு என்ற அறிவிப்பை தரவேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களில் பணிபுரிகிற ஆசிரியர்கள் குழந்தைகள் நகரங்களுக்குச் சென்று படிக்க பொருளாதார நிலையில் இயலாத ஒன்றாகும். அவர்கள் குழந்தைகள் கல்லூரிக் கல்வி, தொழில் கல்வி போன்றவைகள் பெறவேண்டும் என்ற நல்ல காரணத்தால் அதற்காகும் கல்விக் கட்டணத்தின் செலவிற்காக ஆசிரியர்கள் நல நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று 1982-ல் புரட்சித் தலைவர் அரசு உத்தரவிட்டது. ஆனால் அந்த உத்தரவின் பலனை இன்னும் அந்த கிராம ஆசிரியர்கள் பெறவில்லை. ஆகவே, அந்த நன்மையை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் பணிபுரிந்து கொண்டிருந்த ஆசிரியர்கள் 1-6-1981-ல் அரசு ஊழியர்களாகி விட்டார்கள், அவர்களுடைய க்ஷேமநல கணக்குகள் 30-9-1983-க்குள் முடித்து அக்கவுண்டண்ட் ஜெனரலுக்கு ஒப்படைக்கவேண்டுமென்ற நியதி இருக்கிறது. அந்த அரசு ஆணையின்படி இன்னமும் ஒப்படைக்கவில்லை இதனால் ஆசிரியர்கள் தங்களுடைய சேமிப்பிலிருந்து கடன் பெறமுடியாமல் தவிக்கிறார்கள்





ஆகவே கணக்குகள் முறையாக முடிக்கப்பட்டு அக்கவுண்டண்ட் ஜெனரல் மூலமாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் விடுமுறைக் கால பயணம் செய்ய ஒரு வழிப் பயண சலுகை அரசு அனுமதித்துள்ளது. ஆனால் இந்தச் சலுகை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு கிடைக்கவில்லை. அதை அவர்களுக்கும் கிடைக்குமாறு அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து என்னுடைய தொகுதி விஷயமாக சிலவற்றை சொல்ல விரும்புகிறேன். செங்கல்பட்டு , காஞ்சிபுரம் நகரங்களில் உள்ள கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகள் இல்லை. அவற்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செங்கல்பட்டு கல்லூரியிலும், காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியிலும் முதுநிலை பட்டப் படிப்பை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கல்பட்டு இராஜேஸ்வரி கலைக் கல்லூரியில் போதிய இடவசதி இல்லை. ஆகவே புதிய கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமெனறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் தங்களுடைய தகுதியை பொதுப் படிப்பையும், தொழில் படிப்பையும் மேலும் படித்து உயர்த்திக் கொண்டால் அது குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு பயன்படும் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் தங்கள் தகுதியை உயர்த்திக்கொள்ள ஊக்கம் அளிக்கும் வகையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் ஊக்க உயர்வு கொடுத்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) அண்ணா அவர்கள் அறிவிப்பில் அவர்கள் முழு பலனையும் அனுபவித்தார்கள். இப்போது ஒட்டு மொத்தமாக பணம் பெற வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. ஆகவே பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் அளிக்கப்பட்ட பழைய சலுகையை தர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். செங்கல்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களில் பள்ளி மாணவர்களுக்கு பகலுணவு அளிக்க மத்திய சமையல் கூடங்கள் கட்டப்பட்டன. சத்துணவுத் திட்டம் துவங்கப்பட்ட பிறகு அந்த இடங்களை உதவி கல்வி ஆய்வாளர் அலுவலகமாக மாற்றி ஓராண்டிற்கு முன் அரசு ஆணையிட்டது. அந்த ஆணையின்படி பொதுப்பணித் துறை அதை பழுது பார்க்க வேண்டும். அலுவலகத்தில் உள்ள எல்லாவற்றையும் மாற்றி ஊழியர்களுக்கு ஏற்றாற்போல மாற்றித் தர வேண்டும். அங்கேயிருக்கிற கொதிகலன்கள், ஏனைய சாமான்கள், பொருள்கள் முதலியவற்றை விக்கிரவாண்டியில் பணிமனையில் உள்ளவைகளை காலி செய்யவேண்டுமென்று அறிவித்திருக்கிறது. ஆனால் பொதுப் பணித்துறை விக்கிரவாண்டி பணி மையத்தை அரசு உத்தரவிட்டும் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. பழைய சமையல் கூடமும், பழைய கொதிகலனும் தான் அங்கே இயங்கிக்

கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்து, அதை மாற்றி
யமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பள்ளியிலும் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் சிறப்
பாக இயங்கிக்கொண்டு இருக்கின்றன. இதனால் பொது
மக்களுக்கும் மாணவர்களுக்கும் நல்ல பலன் ஏற்பட்டு இருக்கி
றது. சில பள்ளிகளில் போதிய வசதிகள் செய்து தர வாய்ப்பு
வசதி இல்லாவிட்டாலும் கூட பெற்றோர் ஆசிரியர் கழகத்
தின் மூலம் செய்து கொள்ள முடிகிறது. தற்போதுள்ள பெற்
றோர் ஆசிரியர் கழக விதிமுறைகள் ஒன்றுக்கொன்று முரணாக
இருக்கின்றன. ஆகவே, அந்த விதிமுறைகளை நடைமுறைக்கு
ஏற்றவாறு மாற்றியமைத்தால் நல்ல பயன் உள்ளதாக இருக்
கும். அந்த பெற்றோர் ஆசிரியக் கழகங்களில் பெற்றோர்கள்,
அந்தப் பள்ளி தலைமையாசிரியர், அதன் தாளாளர் ஆகியோ
ரைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அந்தப் பெற்றோர்
ஆசிரியர் கழகத்தின் விதிமுறைகளை மாற்றி அமைத்தால் சிறப்
பாக இருக்கும். அதைச் செய்து தர அரசு முன்வர வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். என்னு
டைய தொகுதியில் உள்ள திருக்கழுக்குன்றம் பகுதியில் ஒரு
பாலிடெக்னிக் அமைக்க அனுமதி வழங்கிய மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சருக்கும்,
இயக்குநருக்கும் நான் என்னுடைய பணிவான நன்றியைத் என்
தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்து என் உரையை முடிக்கி
றேன்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு கல்வி மானியக் கோரிக்கை மீது பேச
வாய்ப்பளித்த தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரி
வித்துக்கொள்கிறேன். கல்வியின் தரம் ஆரம்ப காலத்தில்
இருந்து இன்று வரையில் இயன்ற அளவிற்கு உயர்த்த வேண்
டும் என்பதற்காக ஓரளவிற்கு இருந்த அரசுகள் அனைத்தும்
அதிகமான வகையில் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வந்து
இருக்கிறார்கள். இருந்தாலும் கூட, காமராஜர் அவர்கள்
காலத்தில் தான் இந்தக் கல்வி கிராமப் பகுதிகளுக்கு அதிக
மாகக் கொண்டு செல்லப்பட்டு, ஆசிரியர்கள் இல்லாத நிலையில்,
எஸ். எஸ். எல். சி. வரை படித்தவர்கள் —ஏழாவது எட்டாவது
படித்தவர்கள்— அதிகமாக பி.ஏ. படித்தவர்கள் இல்லாத காலம்
அது— எல்லாம் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு
பயிற்சி கூட இல்லாமல் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு, அவர்
கள் கடைசி வரையில் பென்ஷன் வாங்குகிற வரையில் ஆசிரியர்
களாக இருக்கலாம் என்ற நிலைமைகளை ஏற்படுத்தி, கல்வி
நிலையங்களை கிராமப் பகுதிகளில் ஏற்படுத்தினார்கள்.
எல்லா கிராமத்திலும் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு, ஆசிரியர்
கள் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் இன்றைய நிலையில்





நகரப் பகுதிகளில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்குத்தான் ஓரளவு படிப்பதற்கு வசதி வாய்ப்பு இருக்கிறது. கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு படிப்பதற்கு சரியான வாய்ப்பு இல்லை. எந்த கிராமத்திலும் பள்ளிகளுக்கு சரியான முறையில் கட்டிட வசதி இல்லை. கட்டிட வசதிகள் இருந்தால் ஆசிரியர்கள் இல்லை. ஒரே நேரத்தில் 100 குழந்தைகளுக்கு அந்த கிராமப்புற ஆசிரியர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக ஆசிரியர்கள் சொல்வது மாணவர்களுக்குக் கேட்பது இல்லை. மாணவர்கள் சொல்வது ஆசிரியர்களுக்குக் கேட்பது இல்லை. இரண்டு ஆசிரியர்கள்தான் அந்த மாணவர்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக அந்த கிராமப் பகுதியில் உள்ள மாணவனுக்கு அ, ஆ, இ, ஈ, க, ங, ச, ஞ, கூட, சரியாக சொல்லத் தெரிவது இல்லை. அந்த அளவிற்கு கிராமத்தில் படிப்பின் தரம் குறைந்து போய் இருக்கிறது. இதற்குக் காரணம் இந்த அரசு என்று குற்றம் சாட்டி சொல்ல நான் விரும்பவில்லை. கிராமத்தில் கல்வியின் தரம் குறைந்து போய் இருக்கிறது. கவனிப்பார் அற்றுப் போய் இருக்கிறது. முன்பெல்லாம் பள்ளிகள் எப்படி நடக்கின்றன என்பதைப் பார்ப்பதற்காக இன்ஸ்பெக்டர்கள் வருவார்கள். அப்படி யாரும் இப்போது வருவது இல்லை. அப்படி வருவார்களானால், ஒரு மாணவனை அழைத்து சில கேள்விகளைக் கேட்பார். அவன் பதில் சொல்லத் தெரியாமல் இருந்தால், ஆசிரியரைப் பார்த்து, இந்த மாணவன் இப்படி இருந்தால் எப்படி அவன் பாஸ் செய்வான் என்று கேட்பார். இப்படிப்பட்ட நிலை இருந்ததால் மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் இன்ஸ்பெக்ஷன் என்று வந்தால் ஒரு பயம் இருக்கும். கல்வியின் தரமும் சிறந்து இருக்கும். இப்போது அப்படி யாரும் வராததால், கிராமத்தில் ஏதோ ஆசிரியர்கள் தங்கள் வயல் வெளி வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு பள்ளிக்குப் போகிறார்கள். அங்கே வந்திருக்கிற மாணவர்களைப் பார்த்து ஏதோ சொல்லிவிட்டு, போங்கடா என்று சொல்லி விட்டுப் போய்விடுகிறார்கள். என்னய்யா இப்படி செய்தால் எப்படி பசங்களுக்கு படிப்பு வரும் என்று கேட்டால், எங்களுக்குக் கிடைக்கும் பணத்திற்கும், படிக்கும் இதைத்தவிர வேறு ஒன்றும் அதிகமாகச் செய்ய முடியாது. 50 மாணவர்களை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். ஆகவே, கிராமப் பகுதிகளில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் எத்தனை மாணவர்களுக்கு எத்தனை ஆசிரியர்கள் என்று வரையறை செய்து அத்தனை ஆசிரியர்களை நாம் அப்பாயின்ட் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5—40)

இன்றைக்கு 37 ஆசிரியர்களை, ஒரு வருஷத்திற்கு ட்ரெயினிங் கொடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் இருக்கக் கூடிய மாணவர்கள் விகிதாச்சாரத்திற்கு இது போதுமா

என்றால் நிச்சயமாக போதாது. 50 மாணவர்கள், 60 மாணவர்களை வைத்துக்கொண்டு ஒரு ஆசிரியர் என்ன செய்ய முடியும் ?

கிராமத்தில் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கு கட்டிட வசதியே இல்லை. மாட்டுக்கொட்டகைகளில்கூட பள்ளிக்கூடம் நடக்கிறது. இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஓரளவுக்கு கட்டிடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் ; இல்லை என்று சொல்லி மறுக்கவில்லை. ஆனால் அது போதாது. கல்விக்கு 300 கோடி ஒதுக்கிவிட்டோம், 350 கோடி ஒதுக்கிவிட்டோம் ; இந்த ஆண்டு 402 கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னால் போதாது. நீங்கள் இப்போது 400 கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்பது முந்திய ஆண்டு 350 கோடி ஒதுக்கிய மதிப்புக்குத்தான் வரும். விலைவாசி உயர்வு, சம்பள உயர்வு போன்றவைகள் எல்லாம் அதிகமாகி விட்டதால் கூடுதலாக நீங்கள் ஒதுக்கியிருக்கிற பணம் படிப்புக்கு பயன் அளிப்பதாக இருக்காது. 50 கோடி ரூபாய் உயர்த்திவிட்டால் கல்வி உயர்ந்துவிடாது. அதனால் பள்ளிக்கு கட்டிடம் கட்ட முடியாது, இருக்கின்ற கல்வியை உயர்த்த முடியாது. ஏற்கனவே இருப்பதை பராமரிப்பதற்குக்கூட இது போதாது.

இப்போது கூலி உயர்ந்திருக்கிறது. சிமண்ட் விலை உயர்ந்திருக்கிறது. சுண்ணாம்பு விலை உயர்ந்திருக்கிறது. சுண்ணாம்பு விலையையும், சுண்ணாம்பு அடிப்பதற்கான கூலியையும் பார்த்தால் நீங்கள் உயர்த்தியிருக்கிற 50 கோடி ரூபாய் இதற்குக்கூட போதுமா என்பது சந்தேகம்தான். 30 கோடி, 40 கோடி ரூபாய் அளவுக்கு தன்னிறைவுத் திட்டத்தில் கட்டிடம் கட்டியிருக்கிறீர்கள். அதற்கு முன்னாலே ஏகப்பட்ட கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. நீங்கள் கூடுதலாக ஒதுக்கியிருக்கிற பணம் இந்தக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்குக்கூட போதாது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளி மாணவர்களுக்கு இப்போது சத்துணவுத் திட்டம் என்று சொல்லி அதற்கு பல கோடி ரூபாயை செலவிடுகிறீர்கள். கல்விக்கு என்று பல கோடி செலவிடுகிறீர்கள். சீருடை, புத்தகம் போன்றவற்றிற்கு வசதி செய்து கொடுக்கிறீர்கள். ஆனால் ஒதுக்குகின்ற பணம் எல்லாம் முழுமையாக நாம் எதற்காக ஒதுக்குகிறோமோ அதற்குப் போய்ச் சேரவில்லை. மாணவர்களுக்கு பலன் ஏற்படுகிறதா என்றால் நிச்சயமாக எதிர்பார்க்கும் பலன் இல்லை. நான் சத்துணவுத் திட்டத்தைக் குறைசொல்லவில்லை, அந்த நோக்கமும் எனக்கு இல்லை. சோறு வாங்குவதற்கு என்று பள்ளிக்கு மாணவர்கள் வருகிறார்கள். சோறு வாங்கிவிட்டு போய்விடுகிறார்கள். அதன் பிறகு மாடு ஓட்டிக்கொண்டு போகிறார்கள்.

நான் ஒரு பள்ளிக்கூடத்திற்கு போய் செக்கப் பண்ணிப்பார்த்தேன். அந்தப் பள்ளியில் 140 மாணவர்களுக்கு உணவு சமைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் 60 மாணவர்கள்தான்





அங்கே இருந்தார்கள். ஏன் அம்மா ? மீதி மாணவர்கள் எல்லாம் எங்கே என்று கேட்டேன். அவர்கள் வருவார்கள், வராமலும் இருப்பார்கள். வந்தபின்னால் சோறு போடமாட்டேன என்று சொன்னால் இந்த ஊர் பொம்பிள்ளைகள் எல்லாம் என்னை சும்மா விடமாட்டார்கள். அதனால் 140 பிள்ளைகளுக்கு சேர்த்து சமைத்துவிட்டேன் என்று சொன்னார்கள். 140 மாணவர்களுக்கு சமைத்தாலும் இருப்பது 60 பேர்கள்தான். இப்படி குறை இருக்கத்தான செய்யும். குறை இல்லாமல் ஒரு நிர்வாக்த்தை நடத்த முடியாது. இந்தியாவில் மட்டுமல்ல ; உலகத்திலே எங்கும் குறையில்லாமல் நடத்த முடியாது. ஆனால் குறையை சீர்செய்ய வேண்டியது அரசின் கடமை. நான் செக்கப் பண்ணிய இடம் தார்குடி பள்ளி. மதிய உணவு சரியாகப் போடப்படுகிறதா இல்லையா என்பதை செக்கப் பண்ண வேண்டும். தவறு நடந்தால் சஸ்பெண்ட் செய்ய வேண்டும்; டிஸ்மிஸ் செய்ய வேண்டும். இல்லை என்றால் குறை திருந்தாது.

இப்போது செக்கப் பண்ணுவதற்கு ஒரு கமிட்டி போட்டிருக்கிறீர்கள். அது சரியாகச் செயல்படவில்லை. காரணம் அவர்கள் எல்லாம் ஒருதலை பட்சமாக இருக்கிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் அந்தக் கமிட்டியில் இடம்பெறவில்லை. சகல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இங்கே இருக்கிறோம். அதனால் இங்கே நாங்கள் குறைகளைச் சொல்கிறோம். நீங்கள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறீர்கள். தவறு நடப்பது இங்கே சுட்டிக்காட்டப்படுகிறது. அதைப்போல அந்தக் கமிட்டியிலும் சகல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இடம்பெற வேண்டும். அப்படியானால்தான் நீதி, நேர்மை நடக்கும்.

சத்துணவுத் திட்டத்திற்காக எத்தனை கோடி ரூபாய் செலவிடுகிறோம் ? நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று செய்கிறோம். ஆனால் அதிலே பாதி கூட போய்ச் சேரவில்லை. அதனால் மொத்தமாக கணக்குபண்ணி, 5 வயது குழந்தைகளை எல்லாம் அரசாங்கம் தத்தெடுத்துக் கொள்ள வேண்டும். ரஷ்யாவில் பாருங்கள். குழந்தைகளை அரசாங்கமே தத்தெடுத்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கிறார்கள். அதேமாதிரி இங்கேயும் ஒவ்வொரு வட்டத்திலும் கட்டிடம் மற்ற வசதிகளை எல்லாம் செய்துகொடுத்து, அரசாங்கமே தத்தெடுத்து, குறைந்தது எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படிக்க வைக்க வேண்டும். அப்படிச் செய்தால்கூட இந்த அளவுக்குத்தான் செலவாகும். இதற்குமேல் செலவாகாது.

நாம் எவ்வளவு செய்தும் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. கீழ் வகுப்புகளில் எல்லா மாணவர்களும் பாஸ், பாஸ் என்று வந்துவிடுகிறார்கள். ஆனால் எஸ்.எஸ்எல்.சி. யில் வந்தால் 20 சதவீதம்கூட தேறமாடடேன் என்கிறது. சரியான முறையில் பார்த்தால் ஒருவன் கூட தேறமாட்டான்.

[திரு. ஆர். தியாகராசன்] [1984 மார்ச் 15

ஆக, கல்வியின் தரத்தை உயர்த்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது பாருங்கள். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணிய மாணவனுக்குக்கூட ஆனா, ஆவன்னா, சரியாக, வரிசையாக எழுதத் தெரியாத நிலைமைதான் இருக்கிறது. கீழே இருந்து, பாஸ், பாஸ் என்று வந்துவிடுகிறார்கள். எஸ்.எஸ். எல்.சி.-யில் வந்து பார்த்தால் இந்த நிலைமை. இப்படியிருந்தால் எப்படி திறமை, தகுதி வரமுடியும்? ஆரம்பத்தில் சரியாக இருந்தால்தானே கடைசியில் சரியாக வரமுடியும்.

தனியார் ஸ்கூலை நான் ஆதரித்துப் பேசவில்லை. தனியாரிடத்திலுள்ள ஆசிரியர்கள் ஓரளவிற்கு மேனேஜ்மெண்டுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். அவர்கள் சம்பளம் கொடுக்கிற எஜமானர்களாக இருப்பதால் கொஞ்சம் நன்றாக நடக்கிறது என்பது என்னுடைய கருத்து. நம்முடைய நிறுவனங்களைச் சார்ந்த பள்ளிகளில் கேட்டால், எங்களுக்கு எங்கே வீடு கட்டிக் கொடுத்தீர்கள்? நாங்கள் எங்களுடைய சொந்த வீட்டிலிருந்து வருகிறோம். அங்கிருந்து நாங்கள் வருவதற்குள் 20, 30 பேர்கள் உள்ளே புகுந்துகொண்டுவிடுகிறார்கள், என்று சொல்கிறார்கள். கட்டிட வசதி இல்லை. மாணவர்கள் உட்காருவதற்கான வசதி இல்லை. 500 பேர்கள் ஜனத்தொகை உள்ள இடத்திலே துவக்கப் பள்ளியிருக்கிறது. 200, 300 பேர்கள் ஜனத்தொகை உள்ள இடங்களிலேயும் துவக்கப் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களின் படிப்பின் தரத்தை உயர்த்தவேண்டும். நான் மாநில அரசைக் குறைத்து மத்திய அரசை உயர்த்திப் பேசவில்லை. இன்றைக்கு மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நடத்தக் கூடிய அமராவதி சைனிக் ஸ்கூலை பார்க்கின்ற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தப் பள்ளி மாணவர்கள் எவ்வளவு தரமாகப் படிக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறீர்களா? அங்குள்ள ஆசிரியர்களோடு பேசினேன். நம்முடைய ஆசிரியர்களுக்குக் கொடுக்கக் கூடிய கிராஜுட்டி, இன்கிரிமெண்ட் போன்ற சலுகைகள் எல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் ஒரு மாணவனுக்காக ரூ. 6, ரூ. 7-ஐ உணவிற்காக கொடுக்கிறார்கள். அவன் மிலிடெரி. தமிழகத்தில் மிலிடரிக்கு அதிகமான அளவில் சேர்த்திருக்கிறோமா? அது வேறு விஷயம். பஞ்சாப் போன்ற பிற மாநிலங்களில் ராணுவத்தினர் அதிகமாக சேர்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், நாம் பின்னணியில் இருக்கிறோம். மற்ற மாநிலங்களில் அதிக அளவில் இராணுவத்தில் இருப்பதைப் போல, தமிழகத்திலும் அமைத்து தரமுள்ள மாணவர்களை ஏற்படுத்தவேண்டும். நம்முடைய மாநிலத்திலிருந்து அதிகமான அளவில் இராணுவத்திலே சேர வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். அந்தப் பள்ளி முக்கியமாக இருக்கும்



1984 மார்ச் 15] [திரு. ஆர். தியாகராசன்]

என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சைனிக்
ஸ்கூல் இருப்பதைப் போல ஸ்ட்டிரிக்ட் ஆக, நல்ல முறையிலே
மாணவர்களை தேர்ச்சி பெறுவதற்கு நீங்கள் கடுமையான
நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆக இப்படி ஆறாவதிலிருந்து
கடுமையான பயிற்சியை வைக்கவேண்டும்.. அப்போதுதான்
அதிகமான அளவில் திறமையுள்ள மாணவர்கள் உருவாக்கப்
படுவார்கள். கண் கொடுக்கிறோம், கண் கொடுக்கிறோம் என்று
சொல்லி, அரை குறை பார்வை கொடுத்தால், அவன் எப்படி
பார்க்க முடியும்? அவர்களுக்கு நல்ல வாய்ப்பை கொடுத்து,
தரமுள்ள படிப்பைக் கற்றுத்தரவேண்டும். இப்போது இங்கே
படிப்பு வராததற்குக் காரணம், இந்த அரசு தான். ஆறாவதி
லிருந்து பரிட்சையை வையுங்கள். தேறாதவர்களை தள்ளி
விடுங்கள். அப்படிச் செய்தால் தான் அவன் நன்றாகப் படிப்
பான். இவ்வாறு செய்து, தரமான படிப்பை பெறுவதற்கு
நடவடிக்கை எடுக்கவேண்டும். சைனிக் ஸ்கூல் இப்போது
நடத்துவதைப் போல, இன்னொரு பள்ளியை ஆரம்பிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, ஒன்றிரண்டு
விஷயங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விருத்
தாச்சலத்தில் முதுரை, ஆலடி, பரூர் போன்ற இடங்களில்,
இருக்கக் கூடிய நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கிடையாது.
ஆலடியில் ஒரே ஒரு பள்ளி இருக்கிறது. பக்கத்திலே ஆல
மரம் இருக்கிறது. 4 கிளாஸ் இருக்கிறது என்றால், அதிலே
2 கிளாஸ் உள்ளே உட்கார்ந்து இருக்கிறார்கள். இரண்டு
கிளாஸ் மரத்தடியில் உட்கார்ந்து இருக்கிறார்கள். மழை
வந்தால் வெளியிலுள்ளவர்கள் உள்ளே வந்து உட்கார்ந்து
கொள்கிறார்கள். அப்போது அவர்கள் எப்படி படிப்பார்கள்?
அது போலவே பரூரில் ஏற்கனவே உள்ள பள்ளி மண்ணினால்
கட்டப்பட்டது. மேலே கீற்று போடப்பட்டிருக்கிறது.
குறைந்தது 400 மாணவர்கள் படிக்கிறார்கள். அங்கே உள்ள
ஆசிரியர்கள் உட்காருவதற்கு பெஞ்ச், நாற்காலி இல்லை.
மாணவர்கள் வெறும் பலகை போட்டுக் கீழே உட்கார்ந்து
கொண்டிருக்கிறார்கள். துவக்கப் பள்ளிகளை தன்னிறைவுத்
திட்டத்திலே ஆரம்பித்ததைப் போல, நடுநிலைப் பள்ளி
களையும் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம் தீட்டவேண்டும்.
1-வது வகுப்பிலே படிக்கின்ற பையன் தரையிலே உட்காருவான்.
ஆனால் நடுநிலைப் பள்ளியிலே 10 ஆவது வகுப்பில் படிக்கின்ற
மாணவன தரையிலே உட்கார்ந்தால் நன்றாக இருக்காது.
தன்னிறைவுத் திட்டத்தைப் போட்டு, அந்த நடுநிலைப்
பள்ளிகளைக் கட்டவேண்டும். அவ்வாறு செய்து படிப்பின்
தரத்தை உயர்த்தவேண்டும். விருத்தாசலம், கள்ளக்குறிச்சி,
திட்டக்குடி, உளுந்தூர்ப்பேட்டை ஆகிய தாலுக்காக்களுக்கு
விருத்தாச்சலம் கல்லூரி சென்டராகயிருக்கிறது. அந்தக்
கல்லூரியை கலைக் கல்லூரியாக மாற்றித் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். தொழில் மையங்கள நிறைய இருக்
கின்றன. பக்கத்திலே நெய்வேலி இருக்கிறது. எனவே தொழில்

மைய படிப்பில் சேர்வதற்கு வாய்ப்பு இல்லாமல் பல இடங்களிலே மாணவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கல்லூரிக்கு ஹாஸ்டல் கிடையாது. நான்கு தாலுக் காக்களிலே இருந்து வந்து அங்கே படிக்கிறார்கள். அவர் களுக்கு ஹாஸ்டல் இல்லை என்றால் அவர்கள் எங்கே தங்குவார் கள்? எனவே உடனடியாக அவர்களுக்கு ஹாஸ்டல் கட்டித்தர வேண்டும்.

(மாலை 5–50.)

அடுத்து அங்கேயிருக்கின்ற பெண்கள் நடுநிலைப் பள்ளிக்கு கட்டிடம் கிடையாது. அது கீத்துக்கொட்டகையிலேதான் தற்போது நடந்து கொண்டு இருக்கிறது. கிட்டத்தட்ட 1200 பெண்கள் படிக்கிறார்கள். அனைவரும் பூமியிலேதான் உட் கார்ந்து கொண்டு படிக்கிறார்கள். உட்காருவதற்குக் கூட அவர்களுக்கு போதிய பலகைகள் கூட கிடையாது. அதற்கு கட்டிடம் கட்ட வேண்டும் என்று நிதி எல்லாம் வசூல் செய் தார்கள். அங்கே ஹைஸ்கூல் குழு என்று ஒன்று இருக்கிறது. நான் கூட அதற்காக நிதி வசூல் செய்து கொடுத்தேன். அதற்கு வரவும் கிடையாது, செலவும் கிடையாது. ஆகவே அந்தப் பெண்கள் பள்ளிக்கு நிரந்தரமாக ஒரு கட்டிடம் கட்டித் தர வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். நான் பிறந்த, குழந்தையப்பர் கோயில்—ஊரி லேதான் அது இருக்கிறது. அந்தக் கோயிலிலிருந்து 2 லட்சம் ரூபாய் ஏற்கனவே, அதற்காகத் கொடுத்திருக்கிறோம். இன் னும் ஒரு 10 லட்சம் ரூபாய் அதிலேயிருந்து எடுத்துக்கொண்டா லும் பரவாயில்லை. அந்தப் பள்ளிக் கட்டிடத்தை அந்தக் கோயில் பெயராலே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கி றேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற கல்வி மானியத்தை வரவேற்றுப் பேசு கின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கி றேன். கண் போன்றது கல்வி என்பது பழமொழி. புரட்சித் தலைவர் ஆட்சியில் கல்வித்துறை, துவக்கப்பள்ளிக் கல்வியிலே யிருந்து பல்கலைக் கழகம் வரையில், விஞ்ஞானத்திலும், ஆராய்ச்சி சியிலும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் மிகச் சிறந்த முறையில் இயங்கிவருகிறது என்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன். பல துவக்கப்பள்ளிகளும், நடுநிலைப் பள்ளி களும், பல்கலைக் கழகங்களும் புரட்சித் தலைவர் ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்டது போல் வேறு யார் ஆட்சிக் காலத்திலும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை எதிர்க்கட்சிக்காரர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திலே இருந்து திடீரென பட்டப் படிப்பை எடுத்து விட்டால், பட்டப்படிப்பு இன்றி பரிதவித்து





போவார்கள் என்ற காரணத்தால் மாணவ மாணவிகளுக்கு உற்ற நண்பர் போல் உள்ள சிதம்பரத்தில் பட்டப் படிப்புக் கல்லூரியை அவசரம் அவசரமாக அண்ணாமலைப் பல்கலைக் கழக சட்டத்தைத் திருத்தி, மத்திய அரசிடம் விசேஷ தூதரை அனுப்பி சம்மதம் பெற்று உத்தரவு தந்ததோடு அல்லா மல், கல்லூரியிலே விஞ்ஞானக் கல்வி தந்து, தற்போது அரசுக் கல்லூரிக்குக் கட்டடம் கட்ட ரூபாய் 87 லட்சத்திற்கு மதிப்பீட்டுக்கு அனுமதி தந்து 11 லட்சத்தை உடனடியாக செலவு செய்ய உத்தரவு போட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் புரட்சித் தலைவர் அவர்களையும் என் சார்பிலேயும், என் சகோதரர் திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் சார்பிலேயும் எங்கள் சிதம்பரம் தாலுக்கா, காட்டு மன்னார்குடி தாலுக்கா பொது மக்கள் பெற்றோர்கள் சார்பி லேயும் பாராட்டுக்களையும், இதயம் நிறைந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். சிதம்பரத்தில் கல்வி அமைச்சர் அவர்களால் துவக்கப்பட்ட கல்லூரி மிக அமைதியாக நடக்கி றது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆனால் கடந்த 2 ஆண்டுக்காலமாக அந்தக் கல்லூரியில் விஞ் ஞானப் படிப்பு இல்லாமல் இருக்கின்றது. அதற்குக் காரணம் பரிசோதனைக் கூடங்கள் இல்லை. அண்ணாமலைப் பல் கலைக் கழகத்திலே அமளி துமளி ஏற்படாமல் முது நிலைப் பட்டதாரிகள் படிக்கவும், ஆராய்ச்சி நிலையமாகவும் விளங்க வேண்டும் என்ற ஒரு உன்னத நோக்கத்தோடு பட்டப் படிப்பு நீடிக்க அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். விஞ்ஞான படிப்பைப் படிக்காமல் இருக்கும் சிதம்பரம், காட்டுமன்னார்குடி தாலுக்காக்களில் உள்ள மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சும்மாயிருக்கும் பரி சோதனைச் சாலையையும் கருவிகளையும் தந்து அவர்கள் விஞ்ஞானப் படிப்பு படிக்க ஆவன செய்ய வேண்டும். இதற்கு வாரத்தில் சில நாட்கள் அந்த பரிசோதனைச் சாலையையும் கருவிகளையும் கொடுத்து உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். விஞ்ஞானப் படிப்புப் படிக்க உள்ளூரில் வழி வகை செய்யாமல், மருத்துவக் கல்லூரி கொண்டு வருவோம், வேறு பல விஞ்ஞான வகுப்புகளைக் கொண்டு வருவோம் என்று சொல்வது சுவர் இல்லாமல் சித்திரம் எழுதுவதற்கும், கண்ணை விற்று ஓவியம் வாங்குவதற்கும் ஒப்பாகும். தற்போது அரசு 87 லட்சம் மதிப்பீட்டில் நிரந்தரமாக அரசுக் கல்லூரிக்கு கட்டி டம் கட்டவும் அதில் பரிசோதனைச் சாலைகள் மற்றும் பல வற்றை ஏற்படுத்தவும், இந்த ஆண்டிலிருந்து விஞ்ஞான வகுப்பு துவக்கப்படவும், அமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். புதிதாக ஒரு வரம், கோரிக்கை கேட்டால் அதைப் பற்றி யோசிக்கலாம். ஏற் கனவே இருந்த விஞ்ஞானப் படிப்பை, வசதியை ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் ஏற்படுத்தியதை அடியோடு எடுப் பது என்பது அவர்கள் ஆத்மா மன்னிக்காது என்பதாகும்.

[திரு. கே. ஆர். கணபதி] [1984 மார்ச் 15

கருணை உள்ளம் கொண்ட நமது அரசாங்கம், பகுத்தறிவுப் பரப்புவதிலே அக்கறையுள்ள அரசாங்கம் 1984-ல் இருந்தாவது அங்கே விஞ்ஞான வகுப்புகளை துவங்க உத்திரவிட வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே உள்ளூர் கல்லூரி கமிட்டிகள் கொட்டகைகள் கட்டித் தந்து, மேலும் கட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிறது.

அமைச்சர் அவர்கள் காலத்தில், பாலர் பள்ளிக் கல்வி முதல், மத்திய பள்ளிக் கல்வி முதல், முதியோர் கல்வி வரை, கல்வியிலும், விளையாட்டுப் போட்டியிலும் அகில இந்தியப் புகழ் அகில ஆசியப் புகழ், ரஷ்ய புகழ் என்றெல்லாம் கிடைக்கும்படி கல்வித் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது பூரிப்புக்கும், போற்றுதலுக்கும் உரியது. மேலும் கல்வித்தரம் உயரவேண்டும் என்று, கல்வியை கிராமங்கள் தோறும், பிளஸ் 2 வரை கொண்டு வந்து, பரப்பி, கல்வியின் முழுப்பயனும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், ஆதித் திராவிடர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் கிடைக்கும்படிச் செய்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

மேலும் என்னுடைய சிதம்பரம் தொகுதியில் பாளையங் கோட்டை என்ற கிராமத்தில் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. அதேபோல் கடலூரிலே உள்ள மாவட்ட கல்வி அலுவலகத்தை சிதம்பரத்திற்கு மாற்றித் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். சுமார் 70 உயர்நிலைப் பள்ளிகளைக் கொண்ட காட்டு மன்னார்குடி தாலுக்காவில் தனியாக ஒரு டி.இ.ஓ. ஆபீசை அமைத்துக் கொடுத்தால், நலமாக இருக்கும். அதேபோல சிதம்பரம் நகரத்தில் ஒரு நூலகத்திற்கு பெர்மெனன்ட்டாக கட்டிடம் கட்டித் தரவும், அதேபோல சிதம்பரம் தாலுக்கா தலைநகரில் விளையாட்டு மைதானமும், நீச்சல் குளமும் கட்டித் தருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பை அளித்ததற்காக, நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பில் சில கருத்துக்களை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள், கல்விக்கு வானளாவ தொண்டு செய்திருப்பதாக புகழ்ந்தார்கள். நேற்று பேசிய நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், இதிலே பெரும்பகுதியான பணம், அதாவது பட்ஜெட்டிலேயே பெரும் பகுதியான பணம் கல்விக்காக செலவு செய்யப்படுகிறது. டோட்டல் பட்ஜெட்டிலே 21 பெர்செண்ட் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று பெருமைபட எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இதிலே பெரும் பகுதியான பணம் சத்துணவுக்கு போகிறது.



1984 மார்ச் 15] [திரு. துரைமுருகன்]

சத்துணவுக்கு, எங்கெங்கு போகிறது என்பதைக் கண்டு
பிடிப்பவர்களுக்கு ஒரு நோபல் பரிசையே கூட நாம் கொடுக்க
லாம். காரணம் கல்வியிலேயிருந்து கொஞ்சம் போகிறது.
பிளேனிங்கிலேயிருந்து கொஞ்சம் போகிறது, சிவில் சப்ளைஸ்ஸிலி
ருந்து போகிறது. உணவுத் துறையிலிருந்து போகிறது, சமூக
நலத் துறையிலிருந்து போகிறது, அரிசன நலத் துறையிலிருந்து
போகிறது; எல்லாவற்றிலிருந்தும் போகிறது. இந்தப் பட்
ஜெட்டிலே யாராவது ஒருவர், எங்கிருந்தெல்லாம் போகி
றது என்று கண்டு பிடித்துச் சொன்னால், அவர்களுக்கு நோபல்
பரிசு தரலாம்; அட்லீஸ்ட் ஒரு கலைமாமணி விருதாவது தர
லாம். அல்லது வேறு ஏதாவது தரலாம். அப்படி எவ்வளவு
பணத்தை இது ஏப்பம் விடுகிறது?

இதிலே இருக்கிற குறைபாடுகளை நம்முடைய அங்கத்தினர்
கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், நாங்கள் மத்திய உணவு
போடுவதினால்தான், மாணவர்கள் தொகை அதிகமாக
இருக்கிறது என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள்.

மதிய உணவுத் திட்டம் 1982–83 ஆம் ஆண்டு அமலுக்கு வந்
தது. அதிலே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரப்படி பார்த்
தால் 31 கோடியே 96 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது.
1983–84-லே நான்-பிளேனிங்கிலே 66 கோடி. பிளேனிங்கிலே
20 கோடி. 1984–85-லே நான்-பிளேனிங் 64 கோடி, பிளே
னிங்கிலே 20 கோடி. சென்ற ஆண்டிலே நான்-பிளேனிங்
66, 1984–85-க்கு 64. ஆகவே 66-லிருந்து 64-க்கு குறைந்தி
ருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் 44 லட்சம் மாணவர்களுக்கு
அதிகமாக இதிலே கொடுக்கப்போவதாக வேறு சொன்னார்கள்.
1984–85-லே அந்த மாணவர்கள் இன்னும் அதிகமாகச் சேருவார்
கள். அப்படி அதிகமானால், அதற்கேற்ப ஒதுக்கப்பட்டிருக்கிற
பணம் இன்னும் அதிகமாக்கி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.
ஆனால் முரணான வகையில் குறைவாகியிருக்கிறது.

(இரவு 6–00)

அது மட்டும் அல்லாமல், 44 லட்சம் பேர்கள் இப்போது
அதிகமானால், சென்ற ஆண்டு ஒதுக்கியதை விட, இரண்டு
கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கியது ஏன். இன்னும் அதிகமாக
அல்லவா ஒதுக்கியிருக்க வேண்டும். ஆகவே நிஜக் கணக்கு
வேறு ஒன்று இருக்கிறது. இரண்டாவது சிவில் சப்ளைஸ்க்கு
60 கோடி கொடுத்திருக்கிறீர்கள். அது வேறு செலவாகிறது.
கேர் நிறுவனம் 80,800 டன் அரிசியை கொடுத்திருக்கிறார்கள்.
1,200 டன் ஆயில் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கணக்கை
தனியாக பிரித்து அளித்திருக்கிறீர்களா அல்லது மொத்தத்திலே
கூட்டி கழித்து, இதை மட்டும் எடுத்து வைத்திருக்கிறார்களா
என்ற விவரம் இல்லை. அடுத்து, பெர்பார்மென்ஸ் பட்ஜெட்
எக்கனாமிக்ஸ் படித்தவர்களுக்கு தெரியும். நம்முடைய இந்தி
யாவிலே பெர்பார்மென்ஸ் பட்ஜெட்டே கிடையாது.

சென்டரிலே 2, 3 டிமாண்டுகளுக்கு மட்டும் தான் வருகிறது. அதற்குமேலே சில இன்கிரிடியன்ஸ் உள்ளது. I am not going into that aspect.
நான் இப்பொழுது அந்த விவரத்திற்குள் போக விரும்பவில்லை. ஒரு குழந்தைக்கு 45 பைசா செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். சாப்பாட்டிற்கு வேறு ஆகிறது என்று சொல்கிறார்கள். 2, 3 தினங்களுக்கு முன்னாலே நம்முடைய அவையிலே 'Chief Minister's Nutritions Meal Programme—Tamil Nadu' என்ற புத்தகத்தை வண்ண வண்ணப் படங்களைக் கொண்ட புத்தகத்தை கொடுத்திருக்கிறார்கள். ராஜம்மாள் தேவதாஸ் அம்மையார் அதை எழுதியிருக்கிறார்கள்.
'The cost of the meal including fuel and transport is 45 paise' அதாவது 45 பைசாவில் விறகும் அடங்குகிறது, போக்குவரத்துச் செலவும் அடங்குகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் பெர்பார்மன்ஸ் பட்ஜெட்டிலே என்ன சொல்கிறார்கள என்றால் டிரான்ஸ்போர்ட்டுக்கு செப்பரேட்டாக செலவாகிறது என்றும் அதற்காக 25 கோடி ரூபாய் டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பெண்டிசர் ஆகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் டிரான்ஸ்போர்ட் செலவையும் பியூவலையும் சேர்த்து இந்த 45 பைசாவா ? அல்லது டிரான்ஸ்போர்ட் செலவைச் சேர்க்காமல் 45 பைசாவா ? அதைச் சேர்த்தால் 45 பைசாவில் 10 பைசா குறைவு ஆகும். 35 பைசா என்று வந்துவிடும். ஆகவே இந்தக் கணக்கு சரியாக இல்லை. நீங்கள் சொல்லாமல், எந்தக் கணக்கு சரியாக இருக்கிறது, இந்தக் கணக்கு மட்டும் சரியாக இருப்பதற்கு. அது எனக்குப் புரிகிறது. இன்னொன்றையும் சொல்லிவருகிறார்கள். 'Non-formal education :—Adult education and non-formal educa-tion at School level'.
என்ற திட்டம். கிராமக் கல்வித் திட்டம் என்று சொல்லி அந்தத் திட்டம் 16 மாவட்டங்களிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த பெர்பார்மன்ஸ் பட்ஜெட்டிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த 16 மாவட்டங்களிலே 3 மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களுக்கு 300 சென்டர்கள் வீதம் ஏற்படுத்தி கல்வி அறிவை கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். மீதியிருக்கிற 3 மாவட்டங்களிலேயும் நாங்கள் திட்டங்களைத் துவக்கப்போகிறோம் என்கிறார்கள். திட்டம் துவக்கப்படாத, சென்டர் இல்லாத மாவட்டம் எது என்றால் நீலகிரி. நீலகிரி மாவட்டத்திலே 300 சென்டர்களை
'In urban population areas where there is no rural population'. துவக்கப்போகிறோம் என்கிறார்கள். நீலகிரியிலே நான் ஒத்துக் கொள்கிறேன். மலைப் பிரதேசம். எல்லோரும் ஒரே இடத்திற்கு வரமுடியாது. குன்றின் கீழே குன்றின் மேலே அங்கும் இங்கும் மரத்தடியிலே தேவைப்படும். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் 300 சென்டர்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலே, வட ஆற்காடு, மதுரை போன்ற பெரிய மாவட்டங்களிலே 300 சென்டர்கள். சிறிய மாவட்டத்திலேயும் 300 சென்டர்கள் அதைவிட வேடிக்கை சென்னை மாவட்டத்திலேயும் 300



சென்டர்கள் துவக்கப் போகிறார்களாம். இங்கே அர்பன் பாபுலேஷன் தவிர ரூரல் பாபுலேஷன் கிடையாது. அவ்வளவுஇருக்கிறபோது சென்சஸிலே சொல்கிறார்கள் There is non-rural என்று, ரூரல் பாப்புலேஷன் இல்லாத சென்னை மாவட்டத்திலே Populationயும் 300 சென்டர்கள். 'Non-formal education' துவக்கப் போகிறோம் என்று சொன்னால் குதிரைக்கு குர்ரம் என்றால் யானைக்கு அர்ரம் என்பது மாதிரி எல்லாவற்றிற்கும் 300, 300, 300 என்று தலா பிரித்துவிட்டார்கள். ஆகவே அதுவும் சரியான திட்டம் ஆகாது. இன்னொன்று. 'Institute of mathematical Science' என்று ஒன்று உண்டு. உங்களுக்குத் தெரியும் தலைவர் அவர்களே. அல்லாடி கிருஷ்ணசாமி காலத்திலே உற்பத்தியான திட்டம், அவர்கள் பரம்பரையிலே வந்த திட்டம். அதற்கு 5 லட்ச ரூபாய் கொடுக்கிறார்கள். இப்படி 5 லட்சத்தை எங்கேயிருந்து கொடுக்கிறார்கள் என்று பார்த்தோம். டெக்னிக்கல் எஜுகேஷனிலிருந்து கொடுக்கிறார்கள்.
'Mathematical Research Centre is not a technical education; but it is a theoratical one'.
டெக்னிக்கல் எஜுகேஷன் அல்ல இது தியரிட்டிக்கல், கிளாஸ் எடுக்கலாம், பி. எச்டி, கன்பர்ம் பண்ணலாம், அதற்காக டெக்னிக்கல் எஜுகேஷனிலிருந்து 5 லட்ச ரூபாய் கொடுப்பது என்ன நியாயம், என்று எனக்குப் புரியவில்லை. இரண்டாவது நாம் பணம் 5 லட்சம் ரூபாய் கொடுக்கிறோம். அதே மாதிரி சென்ட்ரல் கவர்ன்மெண்டும் 5 லட்சம் ரூபாய் கொடுக்கிறது. இரண்டையும் வைத்துக்கொண்டு அதற்கு அப்புறம் அவனுக்கு அப்பா, அப்பா என்று ஆகிய பிறகு அது குடும்பச் சொத்தாக மாற்றப்பட்டு மத்திய அரசிலே உதவி பெற்று ஒரு குடும்பச் சொத்தாக 'Institute of Mathematical Science'
செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு 5 லட்சம் தேவைதானா என்பதை அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் அதே நேரத்திலே Traditional culture தமிழ் கல்ச்சர் பற்றி ஆராய்வதற்காக பல்கலைக் கழகத்தில் இருக்கிற அதற்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் தெரியுமா ? 16 ஆயிரம் ரூபாய் தான். அங்கே பாவம் ரிட்டையர் ஆன திருநாவுக்கரசு என்ற ஒருவரும் மற்ற ஒருவரும் பியூன்களாக இருக்கிறார்கள். சம்பளமாக அவர்களுக்குப் போகும். அங்கே என்ன தமிழ் வாழும். வேறு எங்கே தான் வாழ்கிறது என்று கேட்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆக இன்னும் ஒன்று, நான் இதைப் பார்த்தேன். பத்திரிகைகளில் எல்லாம் நிறைய போட்டிருக்கிறார்கள். அன்றைக்கு பேசும்போது திரு சௌந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள்.

50 பொறியியல் கல்லூரிகளைத் துவக்கப்போகிறோம். பிரைவேட் செக்டாருக்கு அதைக் கொடுக்கப் போகிறோம், முழுமையாக அவர்களிடத்திலே தரப்போகிறோம். ஆனால் இது வரையில் பாலிஸி நோட்டில் அதைக் காணோம். எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் கூட அதைப்பற்றி 2, 3 கட்டுரைகள் எழுதினார்கள். அது எப்படி என்றால் பிரைவேட்டில் ஒரு இன்ஜினியரிங் காலேஜ் துவக்குவது. ஒரு பெரிய பொள்ளாச்சி மகாலிங்கம் அவரிடம் ஒரு காலேஜ் இப்படி யாராவது பணக்காரர்களாக இருக்கிறவர்களுக்குக் கொடுக்க வேண்டியது. கொடுத்தவுடன் 50 சீட்டுகளை அவர்கள் எப்படி வேண்டுமானாலும் உபயோகம் செய்து கொள்ளலாம். அந்த 50 சீட்டில் கம்யூனல் ஜி. ஓ. அடிபட்டு போய்விடும் அவர்கள் காசு கொடுக்கிறவர்களுக்கு கொடுக்கிறார்கள். இப்படி கொடுக்கப்படுகிற பாலிடெக்னிக்குகளில் வியாபாரம் தான் 5 ஆயிரம் 8 ஆயிரம், 10 ஆயிரம் என்று செலவு செய்து வாங்குகிறார்கள்; நீங்கள் கொஞ்சம் விட்டுப்பட்டு வாங்கிவிட்டீர்கள். ஆக வாங்குவதற்கு கொடுப்பதற்கு அங்கே நிறைவு செய்வதற்கு இன்றைக்கு நிறைய வாய்ப்புகளை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்தத் திட்டத்தில் நான் பர்மானன்ஸ் பட்ஜெட்டைப் பார்த்தாலும் அல்லது கொள்கை விளக்கத்தில் பார்த்தாலும் சரி கல்வியினுடைய வளர்ச்சியை முன்னிட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் குறிப்பிட்டு சிறப்பாகக் கூற முடியாததாக இருக்கிறது.

இதிலே பெருமையாக சொல்வது பல்கலைக் கழகங்களை துவக்கி இருக்கிறோம் என்பது. சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து பாரதியார், பாரதிதாசனுக்கு போய், தமிழ் பல்கலைக் கழகத்திற்கு வந்து பிறகு மகளிர் பல்கலைக் கழகத்திற்கு வந்து வருகிறது எமது மகத்தான படைப்பு அதிர்ந்து காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம். துவக்குங்கள் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. இப்போது ஆர்ட்ஸ் காலேஜ்களை குறைத்து விட்டீர்கள். ஏன் என்றால் எல்லோரும் படித்து விட்டுவந்து வேலைகளை கேட்கிறார்கள் என்று. பரவாயில்லை. ஆனால் பல்கலைக் கழகங்களை துவக்குகிறீர்களே அந்த பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகத்தை அல்லது அதற்கு வேண்டிய வசதிகளை நீங்கள் செய்கிறீர்களா என்பது தான். பல்கலைக் கழகங்களைத் துவக்குவது மட்டும் அல்ல அதிலே இன்றைக்கு என்ன நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை நான் சொல்கிறேன். அவைகளாவது புதுப் புது பல்கலைக் கழகங்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திலே இருக்கிற விபரீதங்கள் இந்த அவைக்கு நன்குத் தெரியும். பலமுறை நான் பேசியிருக்கிறேன்.

ஒருவர் எம். பில். டிகிரி ஒருவர் வாங்க வேண்டுமானால்—மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்குத் தெரியும்—எம். பில். லுக்கு 2 பேப்பர்கள் தன்னுடைய தீஸிஸ் சப்மிட் செய்வார்கள். சப்மிட் செய்த பிறகு அந்த தீஸிஸை ஒருவருக்கு அனுப்புவார்கள். அதை அவர் திருத்தி ரீ-சப்மிட் என்றுச் சொன்னால் ரீ-சப்மிட் தான் செய்ய வேண்டும். நளினி என்ற ஒரு கேண்டிடேட்டும்





பக்தவச்சலம் என்ற ஒரு கேண்டிடேட் இரண்டு பேரும் எம் பில் செய்கிறார்கள். அவர்களுடைய பேப்பர் பிரசிடென்சி காலேஜில் இருக்கக்கூடிய புரப்பஸர் வாசுதேவன் என்பவருக்கும் புரப்பஸர் தங்கவேலு என்பவருக்கும் திருத்துவதற்குச் செல்கிறது. இரண்டு பேர் பேப்பரையும் திருத்திப் பார்த்துவிட்டு தீஸிஸ் சரியில்லை என்று சொல்லி ரீ-சப்மிட் என்று போட்டு அனுப்பி விடுகிறார்கள். ரீ-சப்மிட் என்று சொன்னால் வேறு வழியில்லை சட்டத்திலே அவர்கள் அடுத்து சப்மிட் தான் செய்து ஆகவேண்டும். ஆனால் அந்தப் பைல் வி. சி.க்கு வராமலே வி. சி. என்று போட்டதை அடித்துவிட்டு 'ஆர்' என்று போட்டு ரிஜிஸ்ட்ராருக்குப் போய் மறுபடியும் அந்த ரீ-சப்மிட் என்று போட்ட தீஸிஸை அதே இஸ்டரி டிப்பார்ட்மெண்டில் வேலை செய்கிற பிரசிடென்சி காலேஜில் இருக்கிற ஒரு புரப்பசருக்கு அனுப்பி அந்தப் புரப்பசரும் அவர்களுக்கு டிகிரி கொடுக்கலாம் என்று எழுதி விடுகிறார். டிகிரியையும் நளினியும், பக்தவச்சலமும் வாங்கி விடுகிறார்கள். இப்போது வி. சி. சொல்கிறார் டிகிரியை சரண்டர் செய்யச் சொல்லி. இதுவரையில் சரண்டர் செய்யவில்லை. இப்படிப்பட்ட முறைகேடுகள் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. இவற்றை எல்லாம் களைய வேண்டும்.

இன்றைக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி இங்கே உள்ள நண்பர்கள் எல்லாம் பேசினார்கள். 8—3—1984 அன்று நம்முடைய கல்வி இலாக்காவினுடைய செகரட்டரி அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு ஜி. ஓ.-வை அனுப்பியிருக்கிறார்கள்.

G.O. Ms. No. 259, Government of Tamil Nadu, Confidential—University of Madras—Complaints and Criticisms about the conduct of the examination and publication of the result in Madras University—Constitution of a Committee under Section 7 of the Madras University Act to make an indepth study of the system of conduct of examination and publication of the result —Orders issued—Department of Education, dated 8th March 1984. Complaints and criticisms about the conduct of examination and publication of the result in Madras University have come to the notice of Government. There has been a snap of questions raised on the floor of the Assembly on this matter. The Government have carefully examined those complaints and criticisms about the conduct of examination and publication of the result in Madras University and have decided to appoint a Committee of Vice-Chancellors under section 7 of the Madras University Act to make an indepth study on the conduct of examination and publication of the result by the Department and suggest ways and means of rectifying the defects. The Government accordingly constitute a

[திரு. துரைமுருகன்] [1984 மார்ச் 15

Committee under secion 7 of the Madras University Act, 1923, Tamil Nadu Volume, Madras, consising of the following Vice-Chancellors :

1. Prof. J. Ramachandran, Chairman and Vice-Chancellor of the Madurai, Kamaraj University, Madurai ;

2. Dr. V. C. Kulandaiswamy, Member and Vice-Chancellor of Anna University;

3. Prof. Mani Sundaram, Member and Vice-Chancellor of the Bharathi Dasan University, Tiruchirappalli '.

(இரவு 6-10.)

தலைவர் அவர்களே, இந்த ஜி.ஓ.-வை 8 ஆம் தேதி நம்முடைய கல்வி இலாக்காவினுடைய செயலாளர் அவர்கள் கையெழுத்து போட்டு இருக்கிறார்கள். நம்முடைய Thiru T. D. Sundararaj, Commissioner and Secretary to Government, அவர்கள் கையெழுத்து போட்டு வைஸ் சான்சிலருக்கு அனுப்பியிருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திலே சரியாக ரிசல்டுகள் வருவது இல்லை. சரியாக ரிசல்டுகள் பப்ளிஷ் செய்யவில்லை. அதிலே பல முறைகேடுகள் நடக்கிறது. பாஸ் செய்தவன் பெயில் ஆகிறான், பெயில் ஆனவன் பாஸ் ஆகிறான். ஆண் பெண் ஆகிறான். பெண் ஆண் ஆகிறான் இவைகள் நடக்கிறது. எனவே, இப்படிப்பட்ட ஊழல்கள் மலிந்து இருக்கிறது என்று இந்த மாமன்றத்தில் நாங்கள் பேசியது உண்மை. அது மட்டும் அல்லாமல் செமஸ்டர் தேர்வு நடந்த காலத்தில் பல லட்சக்கணக்கான கெஸ்ட்டின் பேப்பர்களையும் ஆ சர் பேப்பர்களையும் எரித்தார்கள். அதை பத்திரிகைகள் படம்பிடித்துக்காட்டின. இந்த அவையில் நாங்கள் கேட்டது உண்மை. ஆனால் அன்றைக்கு நம்முடைய அமைச்சரவர்கள் என்ன சொன்னார்கள் என்று கேட்டால், நிதானமாக நடைபெறுகிறது, நேர்மையாக நடைபெறுகிறது, உசிதத்தோடுதான் நடைபெறுகிறது, எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை என்றுதான் அன்றைக்குச் சொன்னார்கள்.

ஆனால், இன்றைக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அண்டர் செக்ஷன் 7(1)-ன்படி இதைப் போட்டிருக்கிறார்கள். இந்த செக்ஷன் 7(1) என்ன தெரியுமா? எமர்ஜென்சி டிக்ளேர் செய்வதைப்போல, அபரிமிதமாகப் போகிறபொழுது, வேறுவழியில்லை என்று சொல்கின்றபொழுதுதான் சர்க்கார் ஈடுபட வேண்டும்.

சர்க்கார் அவ்வளவு அத்தியாவசியமான ஒரு ஜி.ஓ.-வைப் போட வேண்டிய அவசியம் இப்பொழுது என்ன ஏற்பட்டது? இப்பொழுது என்ன நிலைமை? இந்த ஜி. ஓ.-வை 7 (1)-இன் கீழ் போடுகின்றபொழுது டைரக்டாகப் போட முடியாது.



1984 மார்ச் 15] [திரு. துரைமுருகன்]

7(1) அழகாகச் சொல்கிறது. யூனிவர்சிட்டி மீது ஏதாவது தண்டனை கொடுக்க வேண்டுமென்றால் அல்லது ஜி.ஓ. போட வேண்டிய அளவிற்கு நிலைமை ஏற்படுகிறது என்றால், சர்க்கார் நேரடியாகத் தலையிட வேண்டிய நிலைமைகள் ஏற்படுகிறது என்றால், முதலில் சில கடிதங்களை எழுத வேண்டும்; எக்ஸ்பிளேனேஷன் கேட்க வேண்டும். அதற்குப் பிறகு சிண்டிகேட் முன்பு அரசாங்கத்தின் கடிதம் வைக்கப்பட வேண்டும். சிண்டிகேட்டில் டிசைட் செய்தபிறகு மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி அரசுக்கு அறிவிக்க வேண்டும். சிண்டிகேட் ஃபெயிலயர் ஆகிவிட்டது. யூனிவர்சிட்டி அத்தாரிட்டி ஃபெயிலர் ஆகிவிட்டது என்றால் (Th re is no other way) இப்படி அந்த உச்சக்கட்ட டெட்லக் வருகின்றபொழுது தான் செக்ஷன் 7(1)-ஐ அரசாங்கம் கையிலே எடுக்க வேண்டும்.

இன்றைக்கிருக்கின்ற வைஸ்—சான்சலர் சாந்தப்பா அவர்கள், அரிஜன் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்; தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகன். அவர் 125 ஆண்டுகால வரலாற்றுப் புகழ் படைத்த பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருக்கிறார். 32 ஆண்டுக்காலம் பணியாற்றிய அந்தத் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகன் அதிலே வைஸ்—சான்சலராக இருப்பதால் இன்றைக்கு அந்த நிர்வாகம் கெட்டு விட்டது என்று பார்ப்பதற்கு யார் வருகிறார்கள் என்றால் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் வைஸ்—சான்சலர் இராமச்சந்திரன், நான் அவரைக் குறைத்து மதிப்பிடவில்லை. எனக்கும் புரபசர்தான். அடுத்து, மணிசுந்தரம் அவர்கள். திரு. உமாநாத் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அந்தப் பல்கலைக் கழகத்தின் ஊழலை விசாரிப்பதற்கே தனி கமிஷன் போட வேண்டியிருக்கும். இப்படி, குழந்தைசாமி, மணிசுந்தரம், ஜே. இராமச்சந்திரன் ஆகியோர் சென்று, மெட்ராஸ் பல்கலைக் கழகத்தினுடைய நிலைமைகள் சரியாக இல்லை, ரிசல்ட் சரியாகப் போடவில்லை என்று சொல்லி, சாந்தப்பாவை, தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகனை நீங்கள் மட்டம் தட்டுகிறீர்கள் என்று கூற விரும்புகிறேன்.

ஒரு நாயை அடிப்பது என்றால் கூட பைத்தியம் என்று சொல்லித்தான் அடிப்பார்கள். அப்படி, தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகனை, 125 ஆண்டுகால வரலாற்றுப் புகழ் படைத்த அந்தப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருப்பவரை நீங்கள் வீட்டிற்கு அனுப்பப் போகிறீர்கள். அனுப்புங்கள், அதற்கான தைரியம் உங்களுக்கு உண்டு, உங்களால் செய்ய முடியும். ஆனால், அதற்காக நிர்வாகம் சரியில்லை என்று சொல்லி அனுப்புவதற்கு சாந்தப்பா மீது போடப்பட்ட முதல் இடிதான் இந்த ஜி.ஓ.-வா என்று நான் கேட்கிறேன்.

ரிசல்ட் சரியில்லை என்று சொன்னால் அதற்கு வைஸ்-சான்சலரா பொறுப்பு? வைஸ்-சான்சலர் சீஃப் எக்சிகியூட்டிவ். இந்த ஜி.ஓ.-வைப் போட்டது நம்முடைய செயலாளர். நம்

முடைய செயலாளர் யார்? அவர் ஒரு சிண்டிகேட் உறுப்பினர். டெக்னிகல் எஜுகேஷன் டைரக்டர் இருக்கிறார். ஒன்பதாண்டு களுக்கு மேலே—வெஸ்டட் இன்டரஸ்ட் என்பது அப்னை ஆகாமல்—நீண்ட நாட்களாக உட்கார்ந்து கொண் டிருக்கிறார். லலிதா காமேஸ்வரன் அம்மையார் அவர்கள் இருக்கிறார்கள்.

இந்த ரிசல்ட் போடப்படுவதில் மெட்ராஸ் யூனிவர்சிட்டிக்கு ஏன் டிலே ஆயிற்று? 1976-ஆம் ஆண்டு வரையில் நீங்களும் நானும் படிக்கின்ற நேரத்தில் பேப்பர் போகும், திருத்தி அனுப்புவார்கள், கரெக்ட்டாக ஜுன் மாதம் 1-ம் தேதி, புயல் அடித்தாலும் சரி, இடி இடித்தாலும் சரி. யார் வைஸ்—சான்சல ராக இருந்தாலும் சரி, கரெக்டாக வந்துவிடும்.

ஆனால், அங்கே கொண்டு வந்து இந்தக் கம்ப்யூட்டரை நுழைத்தார்கள். இதை யார் நுழைத்தது? அன்றைக்கு எலக் டட்பாடி இல்லை. ஒன்றிரண்டு அரசாங்க நியமனத்தைப் போட்டிருக்கிறார்கள் அதிலே இராமச்சந்திரன், மணிசுந்தரம், குழந்தைசாமி, இவர்களெல்லாம் சிண்டிகேட் மெம்பர்களாக இருக் கும் பொழுதுதான் கம்ப்யூட்டர் நுழைக்கப்பட்டது. கம்ப்யூட் டரை நுழைத்ததிலே தப்பு இல்லை. ஆனால் அந்தக் கம்ப் யூட்டரை இயக்குகின்ற ஆள்தான் சரியில்லை, தப்பாக இருக் கிறது. சடகோபன் என்பவரைப் போட்டார்கள், கம்ப்யூட் டரைப் பற்றி அவருக்குத் தெரியாது. நான் வேண்டுமென்றால் சேலஞ்ச் செய்கிறேன், பேப்பரும் இருக்கிறது, பஞ்சிங்கும் இருக் கிறது. ஒப்பிட்டுப் பாருங்கள். கம்ப்யூட்டரிலே பலருடைய மார்க்குகள் மாறிப்போய் இருக்கின்றன. 48 மார்க் என்பது 68 மார்க்காக மாற்றிக் காட்டுகின்ற நிலைமைகள் ஏற்பட் டிருக்கின்றன, நான் தொிவிக்கிறேன், சென்னைப் பல்கலைக் கழகம் நீங்களும், நானும டிகிரி பெற்ற இடமாகும். நாம் படித்தபொழுதெல்லாம் ரீவேலுயேஷன் கேட்கின்றபொழுது டோட்டலை மட்டும்தான் கொடுப்பார்கள். எனக்கு48 மார்க் வந்திருக்கிறது, அது குறைவாகத் தெரிகிறது என்று சொன்னால் பேப்பரைக் கொண்டு வரச்சொல்லி மறுபடியும் கூட்டிப் பார்ப்பார் கள், அவ்வளவுதான். ஆனால் இப்பொழுது ரீ வேலுயேஷன் செல் என்று ஏற்படுத்தி அந்த செல்லைக். கடைசிவரையில் தன்னுடைய கைகளில் வைத்திருந்தவர்தான் ரெஜிஸ்தராராக இருந்த குமாரசாமி அவர்கள்.

அவருடைய காலத்திலே என்ன நடந்தது என்றால் ரீவேலு யேஷன் செல் என்று உற்பத்தி செய்து, அதைத் தன்னுடைய கையிலே வைத்துக் கொண்டு யார் யாருக்கெல்லாம் மார்க் வேண் டுமோ அவர்களுக்கு எல்லாம் போட்டார்கள். ஏன்? அவருடைய மகனே ஃபெயில் ஆகிவிட்டான்; ரீவேலுயேஷன் முடிந்தது; பாஸ்; உடனடியாக அவர் மெடிக்கல் காலேஜில் சேர்ந்தார். டெக்னிகல் எஜுகேஷன் டைரக்டருடைய மகன் ஃபெயில்;





ரீவேலுயேஷன் நடந்தது; டிஸ்டிங்ஷனோடு போய்ச் சேர்ந்தார். கீழ்ப்பாக்கம் மெடிக்கல் காலேஜிலே. எத்தனை ஐ.ஏ.எஸ். ஆபீஸரின் மகன்கள் அப்படிச் சேர்ந்தார்கள் தெரியுமா? ஆனால் உங்களாலும் என்னாலும் முடியாத காரியம் அது. ஒரே மாதத் திலே எம். எம். சி-யிலே வந்து சேர்ந்திருக்கிறார்கள். எப்படி? ரீவேலுயேஷன் மூலமாக. இப்படி எத்தனை ஜட்ஜ் வீட்டுப் பிள்ளைகள் வந்திருக்கின்றன? எத்தனை ஐ. ஏ. எஸ். அதிகாரி வீட்டுப் பிள்ளைகள் வந்திருக்கின்றன தெரியுமா? 40 மார்க் வாங்கியவருக்கு 80 மார்க். நந்தனம் கலைக் கல்லூரியிலே ஒரு பையன் ராம் தியேட்டருடைய ஓனருடைய மகன் 16 மார்க் வாங்கி இருக்கிறார். ஆனால் 73 மார்க் போடப்பட்டது. அதைக் கண்டுபிடித்து ரிசல்ட்டை வித்ஹெல்ட் செய்து வைத்திருக்கிறார் கள். இவ்வளவு காரியங்களையும் செய்தது யார்? அந்த ரீவேலு யேஷனைக் கையிலே வைத்திருந்த திரு. குமாரசாமி.

இவ்வளவு வேகமாக இன்றைக்கு 7 (1) போட்டீர்களே, என்ன சொன்னீர்கள்? அது அட்டானமஸ் பாடி என்பதால் அரசாங்கம் நேரடியாகத் தலையிட முடியாது என்று சொன்னீர்களே, இன் றைக்கு 7 (1)-ன் கீழே ஜி. ஓ. போட்டிருக்கிறீர்களே, இதே ஜி. ஓ.விலே தானே இதே செக்ஷனிலே தானே நீங்கள் திரு. குமாரசாமி மீது அன்றைக்கு வழக்கு போட்டீர்கள். என்ன ஆயிற்று அது? குமாரசாமி மீது போடப்பட்ட அந்த வழக்குகளை இந்த மன்றத்திலே நாங்கள் எடுத்துப் பேசி இருக்கிறோமே. அது குறித்து ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? எத்தனை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

இங்கே திரு. பிரபாகர், ஐ. ஏ. எஸ். இருக்கும் போது 1980 ஆம் ஆண்டு மே 20 ஆம் தேதி போடப்பட்ட ஜி. ஓ. வைப் படிக்கிறேன்.

"G.O. Ms. No. 851, Education, dated 20th May 1980—Madras University—Thiru C. K. Kumaraswamy, Registrar, Madras University—Allegations of malpractices—Inquiry.

I am to say that a number of complaints and malpractices such as abuse of power, favouritism to relatives in the matter of appointment to University posts, amassment of wealth beyond his means, obtaining illegal commission in matters connected with University buildings and other transactions, harassment of stax, improper handling of University accounts, etc. alleged to have been committed by the Registrar have been received by the Government. On a perusal of the complaints the Government consider that there is a *prima facie* case for enquiry into these allegations against the Registrar.

[திரு. துரைமுருகன்] [1984 மார்ச் 15

According to the Government, in exercise of the powers conferred under sub-section (1) of section 7 of the Madras University Act, 1923, I hereby give notice of its intention to cause an enquiry to be made in respect of the allegations levelled against Thiru C. K. Kumaraswamy, Registrar, Madras University. In this connection I am also enclosing a copy of the G.O. Ms. No. 851, Education, dated 20th May 1980 wherein the Government have appointed a committee of persons to conduct an enquiry.

இது நம்முடைய செக்கரட்டரியாக திரு. பிரபாகர் அவர்கள் இருந்த போது போடப்பட்டது அது மட்டுமல்ல அதற்குப் பிறகு இன்னொரு செக்கரட்டரி திரு. ராம்தாஸ் அவர்கள் இருந்த காலத்தில் ஒரு ஜி. ஓ. இப்படி போடப்பட்டது. அதற்கு மேல் ஃபைனான்ஸ் செக்கரட்டரி, போர்ட் மெம்பர், எஜுகேஷன் செக்கரட்டரி இந்த மூன்று பேரும் சேர்ந்து ஒரு கமிட்டி போட்டு குமாரசாமி மீது இருக்கின்ற ஊழல்களை விசாரித்தார்கள். அப்படி விசாரித்து இந்த சர்க்காருக்கு ஒரு அறிக்கை கொடுத்தார்கள். நான் கேட்கிறேன். இது வரையில் அந்த அறிக்கையின் மீது இந்த அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இதே நம்முடைய எஜுகேஷன் செக்கரட்டரி திரு. சுந்தரராஜ் அவர்கள் "Paulo-Past Future" இதே குமாரசாமியின் மீது, முன்னாலே படித்தேனே அவ்வளவு குற்றச் சாட்டுகளையும் சுமத்தி, இவரை விஜிலன்ஸ் கமிஷனுக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னார்கள். அனுப்பினீர்களா? ஏன்? இந்த 7 (1)-ன் கீழே எத்தனை ஜி.ஓ. போட்டீர்கள்? அத்தனை ஜி. ஓ.க்களையும் நாங்கள் இந்தச் சபையிலே எடுத்துப் பேசினோம். இங்கே திரு. உமாநாத் அவர்கள் வாதிட்டார்கள்; மேலவையில் கூட அது பற்றிப் பேசினார்கள். சி.ஐ.டி. ரிப்போர்ட்டிலே கூட எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள். He has no reputation in the University என்றும் சொல்லப்பட்டது. பணம் வாங்கினார், லஞ்சம் வாங்கினார் என்றும் சொல்லப்பட்டது அட்மிஷனுக்குப் பணம் வாங்கி இருக்கிறார்; பாஸ் போடுவதற்கு பணம் வாங்கி இருக்கிறார்; காண்ட்ராக்டரிடத்திலே பணம் வாங்கி இருக்கிறார்; இப்படிப் பட்ட கொடூரமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதற்குப் பிறகும் இந்த அரசாலே எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? நாங்கள் இந்த அவையிலே கேட்டபோதெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்ட போது உடனே ஒரு காரணத்தைச் சொன்னார்கள். அட்டானமஸ் பாடி என்பதால், தலையிட முடியாது என்றார்கள். நீதிமன்றத்திற்குப் போய் ஸ்டே வாங்கி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன் அந்த ஸ்டே நீக்கப்படவில்லையா? எத்தனை முறை நீதி மன்றத்தின் நெடிய படிக்கட்டுகளிலே அந்தக் கட்டுக்கள் ஏறியது. அப்போதெல்லாம் அரசாங்கத்தின் தரப்பிலே நீங்கள் ஆஜர் ஆகவில்லை.



1984 மார்ச் 15]

(இரவு 6-20).

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஆள் தடை வாங்கியிருப்பதாகச் சொன்னால் அந்த ஒரு ஆள் உங்களுடைய ஆள் என்பதுதான் என்னுடைய வாதம்.

**திரு. துரைமுருகன்:** இப்பொழுதும் சொல்கிறேன், அவர் எங்கள் ஆள், உங்கள் ஆள் என்பது அல்ல. வாங்கியவர் திரு. செல்வராஜன் என்கிற ஒரு பேராசிரியர். இன்னும் சொல்லப் போனால் திரு. குமாரசாமிக்கு மிக நெருங்கியவர். நான் இன்னும் சொல்கிறேன், அதே ஆள் தான் முதலமைச்சர் கையிலே நான் பரிசு வாங்க மாட்டேன் என்று சொன்னவர். அவர் மீது ஒரு கமிஷன் திரு. இரயான் அவர்கள் விசாரிப்பார் என்று போடப்பட்டது. அவர் மீது நீங்கள் நடவடிக்கை எடுங்கள், நான் வந்து முன்னால் நின்று வக்காலத்து வாங்க மாட்டேன். ஆனால் அன்றைக்கு நான் கேட்கிறபொழுது என்ன சொன்னார்கள்? எங்களுடைய டிபார்ட்மென்ட் வேலை முடிந்துவிட்டது துரைமுருகன்; லா டிபார்ட்மென்ட் செய்திருக்க வேண்டுமென்றார்கள். உடனடியாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் துடித்து எழுந்து கேட்டார், என்ன சமாச்சாரம் என்று. இதுதான் சமாச்சாரம் என்றேன். விரைவில் சட்ட இலாகா நடவடிக்கை எடுக்கும் என்றார்கள். துணைத் தலைவர் அவர்களே, பேசி எவ்வளவு நாட்களாயிற்று? இது வரையில் அந்த ஸ்டேவை வெக்கேட் பண்ணுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? இல்லை. இது வரையிலும் இந்த குமாரசாமி மீது எவ்வளவு ஊழல்கள்—ஊழலிலே புழுத்த புழுவாக நெளிந்த அந்த மனிதரை நீக்கவேண்டுமென்று, நான் கொண்டு வந்தேன் தீர்மானம், சிண்டிகேட்டிலே தோற்கடிக்கப் பட்டது. பெரும் பகுதி உறுப்பினர்கள் கவர்னரைச் சந்தித்தோம். மாண்புமிகு கல்வி அமைச்சரைப் பார்த்தோம். ஏன், முதலமைச்சரைக் கூட நான் பார்த்தேன். முதலமைச்சர் மிக வேகமாக இருந்தார். நான் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றுகிறபொழுது, முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து எங்களை நிறுத்து என்று சொன்னார்கள். பிறகு நான் முதலமைச்சரிடத்திலே பேசினேன், நியாயமா என்று கேட்டேன். அவரே ஒத்துக் கொண்டு, கவர்னருக்கு போன் செய்தார்கள். இடையிலே எப்படியோ தப்பித்துக் கொள்வதைப்போல, தன்னுடைய வாலண்டிரி ரிடையர்மெண்டைக் கொடுத்திருக்கிறார். நான் கேட்கிறேன், இவ்வளவு கொள்ளை அடித்த ஒரு நபர், இவ்வளவு சொத்து சேர்த்த ஒரு திமிங்கிலம், பல்கலைக் கழகத்தை அரித்த ஒரு கறையான் இப்படித் தானாக வாலன்டரி ரிடையர்மென்ட் கொடுப்பதன் மூலம் தப்பித்து விட முடியும் என்று கருதுகிறீர்களா? அவரைக் கண்டிக்க உங்களுக்கு நேரம் இல்லை, நான் கேட்கிறேன். இதே அமைச்சரை.

**திரு. துரைமுருகன்** : ஹைகோர்ட் ஜட்ஜாகவே போட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : நாம் பேசுவது பல்கலைக்கழகம். பல்கலைக் கழகத்திலே ஒரு துணை வேந்தராக போட்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள், அறிஞர் பெருமக்கள் புகமுடியாத பல்கலைக் கழகங்களில், புகாமல் இருந்த பல்கலைக் கழகத்தில் நாங்கள் வேலை வாய்ப்பைத் தந்து, இவர்களுக்கு உரிய மரியாதையைத் தந்து இன்றையதினம் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பெருமகன் இதுவரையிலும் இருந்த ஆட்சிக் காலத்தில் அனுபவிக்காத உரிமைகளை நாங்கள் அனுபவிக்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவிலே, பெருமைப்படுகிற அளவிலேதான் இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் ஏதோ சில காகிதங்களை கிழித்து எறிந்தது அவருடைய கோபத்தைத் தணிப்பதற்காக இருக்கலாம், அல்லது அவருடைய ஆத்திரத்தை தணிப்பதற்காக இருக்கலாமே தவிர, வெளியே இருக்கிற யாரும் அதைப்பற்றி எந்தவிதமான கருத்தும் அல்லது அதைப்பற்றி எந்தவிதமான ஆர்வமோ, அக்கறையோ காட்ட மாட்டார்கள் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே தவறான கருத்தை அவர்கள் இங்கே தீவிரமாக செயல்படுவதன் மூலம் பரப்ப முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார் ; நிச்சயமாக அதிலே தோல்வி அடைவார்கள் என்பதை இந்த மன்றத்திலே ஆரம்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இங்கே காலையில் பல உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். வழக்கமாக இந்த மானியக் கோரிக்கையின் மீது சொல்லப்படுகிற கருத்துக்கள் தான் என்றாலும், சில குறிப்பிட்ட பிரச்சினைகளில் அந்தக் கருத்துக்களைச் சொல்லி, அவை நாளைக்கு பத்திரிகைகளில் வருகிறபோது, அதற்குரிய பதிலை நான் சொல்ல வேண்டியது என்னுடைய முக்கியமான கடமை என்கிற முறையிலே, அந்த இரண்டு பிரச்சினைகளுக்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாச்சாரம். பள்ளிகள் தற்பொழுது கடைப்பிடிக்க வேண்டிய ஆசிரிய-மாணவர் விகிதம் பற்றிய ஆணை விவரங்களை இணைப்பில் காணலாம். அவை இணைப்பிலே தனியாக இருக்கின்றன. 1983-84 ஆம் ஆண்டில் 30-9-1983 அன்று ஆசிரிய-மாணவர் விகிதம் பற்றி மாநில முழுமைக்குமான நிலைமை பின்வருமாறு இருந்தது. தொடக்கப் பள்ளிகள், 1 முதல் 5 வகுப்புகள் 48.06 லட்சம் ; ஆசிரியர்களுடைய எண்ணிக்கை 1,15,705. ஆசிரிய-மாணவர் விகிதம் ஒரு ஆசிரியருக்கு 41 மாணவர்கள். நடுநிலைப்பள்ளிகள் 1 முதல் 8 அல்லது 6 முதல் 8 வகுப்புகள், 27.16 லட்சம் மாணவர்கள் எண்ணிக்கை ; 66,399 ஆசிரியர்கள் ; ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள். உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் படித்த 3.05 லட்சம் உட்பட 26.42 லட்சம் மாணவர்கள். அதிலே 98,868 ஆசிரியர்கள். ஒரு ஆசிரியருக்கு 27 அல்லது 26 மாணவர்கள்.





மாநிலம் முழுமைக்குமான மேற்படி கணக்கு உண்மை நிலைமையை உணர்த்துவதன்று. ஆகவே இந்தப் பிரச்சினையை அரசாங்கமே நன்கு உணர்ந்திருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். ஏனெனில், ஒவ்வொரு பள்ளிக்கும் தனியாகவும், ஒவ்வொரு பள்ளிக்குள்ளும் கூட ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளுடைய வகுப்பு ஒவ்வொன்றுக்கும் தனியாகக் கணக்கிட வேண்டும். எனவே இவ்வாறு ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனியாகக் கணக்கிட்டால் தற்போதுள்ள ஆசிரியர்-மாணவர் விகிதம் இணைப்பில் குறித்துள்ள ஆணைகளின்படி அனுமதிக்கத்தக்க லட்சிய விகித அளவு இராது. ஆசிரியர்களின் எண்ணிக்கை லட்சிய விகிதத்தின்படி அனுமதிக்கத்தக்கதைவிட மிகக் குறைவாகத்தான் உள்ளது.

(இரவு 6-30)

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் மேற்கண்ட ஆசிரியர்-மாணவர் விகித ஆணைகளின்படி பள்ளி நிர்வாகத்தினர் தாமாகவே கூடுதல் ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள இயலாது. மேற்கண்ட விகிதம் அமைய வேண்டிய லட்சியம் (ஆப்டிமம்) தான். உடனடியாக இந்த லட்சியத்தை அடைய மாநில அரசு நிதிநிலைமையும் இடந்தராது. உடனடி ஆசிரியர்-மாணவர் விகிதத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டுமாயின் 1977-78 ஜூலையிலேயே உடனடியாக செகண்டரி கிரேடு பதவிகள் மட்டும் சுமார் 23,000 கூடுதலாக ஏற்படுத்த வேண்டியிருக்கும் என பள்ளிக் கல்வி இயக்குநர் கணக்கிட்டுத் தெரிவித்து இருந்தார். 1978-79 முதல் 1983-84 முடிய 6 ஆண்டுகளில் 6 முதல் 11 வயது வரை, 11 முதல் 14 வயது தொகுதியினருக்கு கூடுதலாக பள்ளிகளில் சேர்க்கப்பட்ட 13 லட்சம் மாணவர்களுக்கு (மொத்தம் 35,000 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்த வேண்டியிருக்கும்). அந்த 6 ஆண்டுகளில் மொத்தம் 6,000 பதவிகள் மட்டுமே ஏற்படுத்தப்பட்டனவாகையால் ஆசிரியர் பதவித் தேவை (1977-78-லேயே மிக அதிகமாக இருந்தது. இப்பொழுது மேலும் வெகுவாக கூடியிருக்குமே ஒழியக் குறைந்திருக்காது.

ஒவ்வோராண்டும் நிதி நிலை இடம் தருவதற்கேற்ப கூடுதலாக சில ஆயிரம் பதவிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவ்வெண்ணிக்கைக்குள்ளாகவே வெவ்வேறு பள்ளிகளில் தேவைக்கேற்ப பள்ளிக் கல்வி இயக்குநர் கூடுதல் ஆசிரியர் பதவிகளைப் பள்ளிகளுக்குப் பகிர்ந்து அளிக்கிறார். எனவே உண்மையில் பல பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம் அரசாணையில் விதித்த விகிதத்தைவிட அதிகமாகவே இருக்கும். எனினும் ஆண்டுதோறும் சில ஆயிரம் கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படுவதால், ஒவ்வொரு ஆசிரியரும் கவனிக்க வேண்டிய மாணவர் எண்ணிக்கை மேலும் குறையும் நிலை ஏற்படும். இந்நிலையை ஆண்டுகள் செல்லச் செல்ல மெதுவாகவே சீர்திருத்த முடியும். உடனடியாக விகிதத்தை லட்சிய விகித அளவுக்குக் குறைத்திட அரசு நிதி நிலைமை இடந்தராது.

7 (1)லே தானேபோடுகிறீர்கள் குமாரசாமி ஜி.ஓ., அது அட்டானமஸ் என்று ஸ்டே இருக்கிறபொழுது, இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட குடிமகன் திரு. சாந்தப்பாவை அவமானப்படுத்த வேண்டுமென்று நீங்கள் போட்டிருக்கிற அந்த ஜி. ஓ. எப்படி அட்டானமசுக்கு அப்ளை ஆகும் என்று கேட்கிறேன். ஆகையினாலே இன்றைக்கு அவரை நீங்கள் கேட்க வேண்டுமென்று பார்க்கீறீர்களே தவிர, உங்களுக்கு வேறு யாருக்காவது வைஸ் சான்சலர் பதவி கொடுக்கவேண்டுமென்றால், கொடுங்கள் ; எங்களுக்கு அக்கறை இல்லை. நான் திரு. சாந்தப்பாவுக்காகக் கூட வக்காலத்து வாங்கவில்லை. ஆனால் நியாயத்தின் அடிப்படையிலே கேட்கிறேன். அவ்வளவு பேசியதற்குப் பிறகு நம்முடைய அமைச்சர் அவர்கள் போனமுறை என்ன சொன்னார்கள். அது மட்டுமல்ல, சிமெண்ட் பேரத்திலே சொல்லப்பட்ட ஊழல் . . . . . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பற்றி ஏற்கனவே பேசியாகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள். மற்ற எல்லா உறுப்பினர்களையும் விட நீங்கள் அதிக நேரம் பேசி இருக்கிறீர்கள்.

**திரு. துரைமுருகன் :** நான் போன முறை இவ்வளவு பேசினேனே, இந்தச் சபையில் கேட்டேனே, அதுபற்றி ஒரு முடிவெடுத்து, விசாரணை நடத்துங்கள், அரசாங்கத்தின் சார்பிலே 4 பேரை அனுப்பி, மூட்டைகளை சரி பார்க்கச் சொன்னேன். எங்கே இருக்கிறது சிமெண்ட் என்று கேட்டார்கள்.

The following comments are made regarding the maintenance of these registers.

A.C. College complex pages 5 to 8 and corresponding pages 41 to 44, were found missing.

Chepauk complex —

ரிஜிஸ்டரே கிடையாது.

Gandhi Nagar Godown — Page Nos. 5 to 14 corresponding pages 31 to 40 were found missing.

ஆக, வைக்கப்பட்டிருக்கிற சிமெண்ட் மூட்டைகளிலே எத்தனை மிஸ் ஆகி இருக்கின்றன என்பதோடு மட்டுமல்ல, எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் ? அதைப்பற்றி காலகட்டத்திலே மேலே போய் நான் இங்கே உட்கார்ந்திருக்கிற ஒரு அமைச்சரே உங்களுக்கும் பங்கு இருக்கிறதோ என்று சொன்னேன். அவரே கூட சொன்னார். துரைமுருகன் என்னை உணர்ந்து உள்ளவர். (குறுக்கீடு) இவ்வளவு கடுமையாக என் மீது குற்றம் சாட்டினார். அந்த சிமெண்ட்டிலே எனக்குப் பங்கு இருப்பதாக அப்படி உணர்ந்து பேசி இருக்க மாட்டார் என்று தான்





கேட்டார். நான் இப்பொழுது சொல்கிறேன். இந்த திரு. குமாரசாமி இருக்கிற வரையில் நீங்கள் காம்ப்ரஹென்சிவ் ஆக்ட் கொண்டு வரவில்லை. இந்த திரு. குமாரசாமி பதவியில் இருக்கிற வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த திரு. குமாரசாமி பதவியில் இருக்கிற வரையில், ஸ்டேயை வெக்கேட் செய்யப் போகவில்லை ; சிமெண்ட் ஊழலைப்பற்றி விசாரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வளவு நாடகங்களை இயற்றிய காரணத்தால், முதலமைச்சர் கூட played hide and seek (மணியடிக்கப்பெற்றது) இவ்வளவு ஊழல் நடந்த காரணத்தால் நான் ஒன்றை தெரிவித்துக் கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தினுடைய முதலைகளை புரிந்து, அதன் மீது இவ்வளவு பழி சுமத்தி இருக்கிற காரணத்தினால் நம்முடைய அமைச்சர் அவர்கள் இராஜினாமா செய்வது நல்லது. பல்கலைக் கழகத்தினுடைய தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகனை அவமானப்படுத்திய காரணத்தால் அந்த ஜி.ஓ. வைக் கிழித்து எறிகிறேன் என்று கூறி, அந்த ஜி.ஓ. வைக் கிழித்து எறிந்து விட்டு போகிறேன். நன்றி, வணக்கம். (கையிலிருந்த தாளை கிழித்து எறிந்தார்.)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 18 ஆம் தேதி நடைபெற விருக்கிற தேர்தலில் போட்டி இடுகிற ஒருவரைப்பற்றி அவரை எதிர்த்துப் போட்டி இடுகிற ஒரு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இந்த மாமன்றத்தை சரியான முறையில் அவர்கள் மதித்து செய்யாமல், தன்னுடைய உரிமைகளை தன் கட்சி நலனுக்காக பயன்படுத்தி இருக்கிறார் என்பதைத் தான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் ஒன்றை குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய துணை வேந்தர் சாந்தப்பா அவர்கள் யாரிடத்திலும் போய் துணை வேந்தர் பதவி வேண்டுமென்று கேட்காத நிலையில் நாங்கள் அவரை விரும்பி கேட்டு அந்தப் பதவியில் அமர்த்தி இருக்கிறோம். அவர்களும் எங்களுடைய நம்பிக்கையைப் பெற்று அந்த அடிப்படையில் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று தான் இந்த அரசு விரும்புகிறது. அவர்களுடைய அறிவிலே, ஆற்றலிலே, அவர்களுடைய ஒழுக்கத்திலே, பண்பாட்டிலே எந்தவிதமான குறைபாட்டையும் இந்த அரசு காணவில்லை. அவர்கள் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகன் என்று தெரிந்து தான் நாங்கள் போட்டோம். இதற்கு முன்னாலே இருந்த அரசு எல்லாம் அதுபற்றி கவலைப்படாமல் இருந்த நேரத்தில், இதற்கு முன்னாலே இருந்த அரசு, இன்றைக்கு இவ்வளவு வீரமாக பேசுகிற துரைமுருகன் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பல்கலைக் கழகத்தில் சாதாரணப் பதவியிலே ஒரு புரபசராகவோ அல்லது லீடர் பதவிக்கோ தாழ்த்தப்பட்ட மகனை போட முடியாத நிலைமை இருந்த நேரத்திலே....

7-2-1983 அன்று வேலை வாய்ப்புத் துறை இயக்குநர் தந்துள்ள புள்ளி விவரங்களின்படி தமிழ் நாட்டில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்பற்ற ஆசிரியர்களாக பதிவு செய்து கொண்டிருந்தவர்கள் எண்ணிக்கை 30-11-1982 அன்று பின்வருமாறு இருந்தது:—

1. பி.எட். ஆசிரியர்கள்;— எம்.எட். 62, பி.எட் 14,731 ஆக மொத்தம் 14,793.

2. இடைநிலை (செகண்டரி கிரேடு)— 8,241.

3. இளநிலை (ஹையர் கிரேடு) — 437.

4. தமிழாசிரியர்கள் (பயிற்சி பெற்றவர்கள்)— 3,886.

5. பிறமொழி ஆசிரியர்கள்— 507.

6. உடற்பயிற்சி ஆசிரியர்கள்— எம்.பி.எட். 102, பி.பி.எட். 942.

உடற்பயிற்சி ஆசிரியர் 1,570— ஆக மொத்தம் 2,614.

7. கைத்தொழில் ஆசிரியர்— 5,060. ஆக மொத்தம் 35,538 பேர் பதிவு செய்திருந்தனர்.

சுமார் 1970 ஆம் ஆண்டிலிருந்தே வேலை வாய்ப்பற்ற ஆசிரியர்கள் தொகை பெரும் எண்ணிக்கையில்தான் வந்துள்ளது. ஆசிரியர் வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் குறைந்த அளவு எண்ணிக்கையிலேயே சேர்க்கப்பட்டு வருகின்றனர். இப்போதுள்ள நிலைமையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் நாம் இப்போது ஓராண்டு விட்டு ஓராண்டுக்கு 35 பேர் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். அதைப் பரிசீலித்து ஒவ்வொரு ஆண்டும் வைக்கலாமா என்ற கருத்து அரசு பரிசீலிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு பிரச்னை கட்டிடங்கள் பற்றியதாகும். கட்டிடம் பல இடங்களிலும் மோசமாக இருக்கின்றன. போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கி அந்தக் கட்டிடங்களைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்த அரசு பொறுப்புக்கு வந்தபிறகு அதிகமான அளவிற்கு அதற்காக பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்களுக்காக 1978-79 முதல் 1983 முடிய ஆனதாகக் குறித்துள்ள செலவுத் தொகையில் 1978-79 முதல் 1981-82 முடிய திறந்த 630 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட ஆன செலவு ரூ. 12 கோடியாகும்.



அதைப்போலவே, மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசு உயர் நிலைப்பள்ளிகளுக்காக கட்டிடங்கள் கட்ட 1976-77-இல் 20 இலட்சமும், 1977-78-இல் 95 இலட்சமும், 1978-79-இல் 260 இலட்சமும், 1979-80-இல் 536 இலட்சமும், 1980-81-இல் 252 இலட்சமும், 1981-82-இல் 269 இலட்சமும், 1982-83-இல் 514 இலட்சமும், 1983-84-இல் 118 இலட்சமும், 1984-85-இல் 149 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்து பணிகளைச் செய்து இருக்கிறோம். ஆகவே, ஏற்கெனவே செலவு செய்யப்பட்ட தொகையை விட இதற்கு அதிகமான தொகையை இந்த அரசு செய்திருக்கிறது. தற்போது ஏற்பட்டு இருக்கும் பிரச்னைக்கு முழுமையான காரணம் கடந்த 30 ஆண்டுக் காலத்தில் பள்ளிகளைப் புதியதாகத் திறப்பதற்கு காட்டிய ஆர்வத்திற்கு இணையாக அவற்றிற்குத் தேவையானக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சுட்டிக்காட்டிய அந்தக் கணக்கின்படியே 500 இலட்சத்திலிருந்து படிப்படியாக வருஷா வருஷம் குறைந்து தான் வந்திருக்கிறது என்பது தெரிகிறது. ஆகவே, ஒதுக்கப்பட்ட பணம் குறைந்திருக்கிறது என்று அங்கத்தினர்கள் சொல்லியிருக்கிற கருத்து, பள்ளிக்கு கட்டிடம் இல்லை என்று சொன்னது ஊர்ஜிதம் ஆகியிருக்கிறது என்றுதானே அர்த்தம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, 20, 25 என்று இருந்தது இப்போது 100, 200 என்று அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக சில புள்ளி விவரங்களைச் சொன்னேன். நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டதற்கு ஏற்ப கட்டிடம் கட்டிக்கொடுக்கப்படவில்லை. அதனால் இந்த பெரும் சுமையை ஏற்று நாம் நடைபோட்டு வருகிறோம். அந்த நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாத ஒன்று அல்ல.

தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் தொடக்கப் பள்ளிக்கு குறைந்தது ஒரு கட்டடமாவது இருக்க வேண்டும் என்று திட்டமிட்டு, 50,000 ரூபாய், 60,000 ரூபாய் செலவில் கட்டிடம் கட்டிக் கொடுத்திருப்பது இந்தியாவிலேயே மிகப்பெரும் சாதனை இது. வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டிடம் இல்லாமல், மோசமான நிலைமையில் இருப்பது நமக்குத் தெரியும். ஆக, தொடக்கப்பள்ளிக்குக் காட்டிய அளவுக்கு, செய்த செலவு அளவுக்கு, உயர்நிலைப் பள்ளிகளுக்கு நாம் காட்டவில்லை, செலவு செய்யவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில், அதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அதற்கு 100-கோடி ரூபாய் தேவை என்ற கருத்தை நான் முன்னாலே சொல்லியிருக்கிறேன். வேறு வகையில் பணம் கொடுக்கவில்லை என்றாலும் பல்வேறு

முயற்சிகளை மேற்கொண்டு, கட்டிடம் கட்டும் முயற்சியை இந்த அரசு எடுக்கும் என்ற உறுதியை இந்த நேரத்தில் நான் தர விரும்புகிறேன். நான் இங்கே சுட்டிக்காட்டியது இதற்கு முன்னாலே ஒதுக்கியதைவிட இப்போது நாம் அதிகமாக ஒதுக்கிவருகிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான்.

தொடக்கக் கல்வியைப் பொறுத்த மட்டில் தீவிரமான திட்டம் போட்டு, நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இப்போது தீவிர திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று நர்சரிப் பள்ளிகளைப் பற்றிச் சொல்லும்போது நகரங்களில் நர்சரிப் பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன. படித்தவர்கள் அல்லது பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள் அந்த நர்சரிப் பள்ளிகளிலே படிக்க வாய்ப்பு இருக்கிறது. கிராமப்புறங்களில் அந்த வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். நகரங்களில் அந்த வசதி இருக்கிறது என்பதை தமிழக அரசு உணர்ந்து இருக்கிறது. அதனால், எல்லா மாணவர்களுக்கும், குறிப்பாக ஏழைக் குழந்தைகளுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் முயற்சியை எடுத்திருக்கிறோம்.

ஒரு குழந்தை எல்.கே.ஜி., யு.கே.ஜி., படித்துவிட்டு ஒன்றாவது வகுப்புக்கு வருகிறது. இன்னொரு குழந்தை எல்.கே.ஜி ; யு.கே.ஜி., படிக்காமல் ஒன்றாவது வகுப்புக்கு வருகிறது. அந்த இரண்டு குழந்தைகளுக்கும் கல்வியில் தரத்தில் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசம் ஒன்றாவது வகுப்போடு மட்டும் நிற்காது ; தொடர்ந்து கடைசி வரையில் வருகிறது. ஆகவே, எல்.கே.ஜி., யு.கே.ஜி., பள்ளி முன் பருவ படிப்பு பெற்ற குழந்தை கடைசி வரையில் தரத்தில் உயர்ந்தே இருக்கிறது. எதிர்காலத்தில் ஒரு தொழில் கல்வி அல்லது வேலைக்குப் போவதாக இருந்தாலும் பள்ளி முன் பருவ படிப்பு பெற்ற குழந்தைக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. அந்த பள்ளி முன் பருவ படிப்பு பெறாத குழந்தைக்கு கடைசி வரையில் அந்த வாய்ப்பு குறைவாகவே இருக்கிறது.

மாணவர்கள் மத்தியில் இந்த மார்க் வித்தியாசம் வருகிறபோது, குழந்தைகளின் சூழ்நிலையைப் பார்க்கும்போது ஜாதியை வைத்துத்தான் பார்த்து வந்தார்கள். ஜாதியின் காரணமாகத்தான் குறைந்த மார்க் வாங்கியிருக்கிறது என்ற ஒரு தவறான கருத்தைச் சொல்லி வந்தார்கள். விஞ்ஞான ரீதியான அடிப்படைக் காரணத்தை அப்போதே நாம் உணர்ந்து பார்த்திருந்தால் என்றைக்கோ இந்த வித்தியாசத்தை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஜாதிப் பெயரைச் சொல்லியே நாம் பெருமளவு காலத்தைக் கழித்துவிட்டோம். இப்போதுதான் இந்த வித்தியாசத்திற்கு உண்மையான காரணம் என்ன என்பதை





சிந்தித்திருக்கிறோம். இதுவரையில் சிந்திக்காமல் ஒரு பெரிய தவறை செய்து வந்திருக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த வித்தியாசத்திற்கான காரணத்தை நல்ல முறையில் கண்டறிந்து, இன்றைக்கு அந்தப் பள்ளி முன் பருவப் படிப்பை சாதாரண ஏழை எளிய மாணவர்களும் பெறத்தக்க வகையில் முடிவு எடுத்திருக்கிறார்கள். அதற்கு தகுந்த நடவடிக்கையும் எடுத்து வருகிறார்கள்.

இந்தத் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்து, அவர்களுடைய உடல் நலத்தைப்பேணி, பள்ளி முன் பருவ படிப்பையும் அளிக்க குழந்தைகள் காப்பகங்கள் பல்லாயிரக்கணக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 4,343 குழந்தைகள் நல மையங்கள் இன்றைக்கு பள்ளி முன் பருவ கல்வி நிலையங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள ஏறத்தாழ 28,000 சத்துணவு மையங்கள் எதிர்காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நர்சரிப் பள்ளிகளாக மாற்றப்பட்டு, பள்ளி முன் பருவ படிப்பு அளிக்கப்படும் கல்வி நிறுவனங்களாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் ஒரு மாணவனுக்கும் இன்னொரு மாணவனுக்கும் இருக்கிற வித்தியாசம் பெருமளவுக்கு நீங்கிவிடும். இந்த வித்தியாசத்திற்கு ஜாதி ஒரு காரணமாக இருந்தாலும் அதைவிட முக்கியமான காரணம் பள்ளி முன் பருவ கல்வி என்பதை நாம் இப்போது நன்றாக உணர்ந்திருக்கிறோம். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் நாம் கண்டிருக்கிறோம். ஆகவே, நல்ல முறையில் நர்சரிப் பள்ளிகளை நிறையத் தொடங்கி, எல்லா மாணவர்களுக்கும் பள்ளிமுன் பருவ கல்வி அளிக்கும் திட்டத்தை தீவிரமாக நிறைவேற்ற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 6-40)

**திரு. என். பழனிவேல் :** இந்த நர்சரி பள்ளி சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொல்லும்போது நர்சரி பள்ளிகளுக்குச் சமமாக இன்றைக்கு சத்துணவு மையங்களிலே பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதை ஏதாவது மனசாட்சி வைத்துக் கொண்டு தான் பேசுகிறோமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நர்சரி பள்ளிகளில் ஆங்கிலம் தெரிந்த ஆசிரியர்களை வைத்துக்கொண்டு, எவ்வளவு நீட்-ஆக நடத்தப்படுகிறது. ஆனால், சத்துணவு மையங்களில் ஏழைக் குழந்தைகளுக்கு ஏதோ சாப்பாடு கிடைத்தால் போதும் என்பதாலே, வேலைக்குப் போகிற தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளை விட்டுவிட்டுப் போகும் நிலைதான் இருக்கிறது. எனவே, இந்த இரண்டையும் ஒப்பிட்டுச் சொல்வது எப்படி பொருத்தமாக இருக்கும் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு முன்னால், இப்படி ஒரு வாய்ப்பே இல்லாத சமுதாயத்தில் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதை உணர்ந்து,

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 மார்ச் 15

அதற்குப் பிறகு அதிலுள்ள குறைபாடுகளை நீங்களும் சொல்லலாம், நாங்களும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறோம் என்று இதைக் கொள்வதுதான் சிறந்த முறையே தவிர, நாங்கள் இப்போது கொண்டுவந்திருக்கிறோம் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். இந்த முயற்சி இந்தியாவில் வேறு எங்கும் எடுக்கப்படவில்லை, என்பதைக் கூறும்போது, மற்ற மாநிலங்களில் பின்தங்கிய வகுப்பினரே இல்லை என்பது அல்ல, ஆதிதிராவிட வகுப்பினரே இல்லை என்பது அல்ல. அந்த வகுப்பினர்கள் அங்கேயும் இருக்கிறார்கள். என்றாலும் அதற்கான அடிப்படை முயற்சிகளை விஞ்ஞான ரீதியில் எடுத்துக்கொண்டுள்ள ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் 'அவர்களுடைய அரசு தான் என்பதை சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை, மாணவர் மத்தியிலே இருக்கின்ற அமைதியின்மையைப் பற்றிச் சொன்னார்கள். நல்ல கல்வி தரவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பலராமன் அவர்கள் பண்பாட்டுக் கல்வியைத் தரவேண்டுமென்று சொன்னார்கள். அதே நேரத்தில் பல உறுப்பினர்கள் இந்தக் கல்வி முறை—பிரிட்டிஷ்காரரர் காலத்தில் கொண்டுவரப்பட்ட கல்வி முறையால் பயன் இல்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். கல்விமுறையைப்பற்றி நாங்கள் இந்த மாமன்றத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறோம். அதைப்பற்றி இந்த அரசிற்கு அக்கறையும், கவலையும் இருக்கிறது. ஆகவே நாங்கள் அதைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக பல்வேறு அறிஞர் பெருமக்களின் கருத்துக்களை உணர்ந்து நாங்கள் செயல்படுவதற்கு திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறோம்.

இந்த 'நேரத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு சமுதாயத்தில் காணப்படுகின்ற பல்வேறு குறைபாடுகளுக்கு இந்தக் கல்விமுறைதான் காரணம் என்ற அளவிற்கு நாமெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோம். பஞ்சாப் பிரச்சினை என்றாலும், ஹரியானா பிரச்சினை என்றாலும், அல்லது பெங்களூர் பிரச்சினை என்றாலும் அல்லது. கிராமங்களிலே நடைபெறுகின்ற ஜாதிச் சண்டைகள் என்றாலும் அல்லது இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கே காரணம் நாம் இந்த சமுதாயத்தை தலைமை தாங்கி நடத்துபவர்களுக்கு, இந்தக் கல்வி தரப்படுகின்ற அந்த மாணவர்களும், இளைஞர்களும் பொறுப்பிற்கு வந்து அல்லது சமுதாயத்தில் அங்கம் வகிக்கின்ற அளவிற்கு இந்தப் பிரச்சினைகளை எதிர்த்து, இந்த சமுதாயத்தை நல்வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் தகுதியற்றவர்களாக, திராணியற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது தான்." நாளுக்கு நாள் அதிகமாக பிரச்சினைகள் வளர்கின்ற காரணம் ஆகவே செய்யப்பட வேண்டிய இரண்டு மாறுதல்களைப் பொறுத்தவரையில், இந்த 'அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். ஒன்று, இந்தக் கல்வி மாணவர்களுக்கு பயன் உள்ள



1984 மார்ச் 15] [திரு. செ. அரங்கநாயகம்]

கல்வியாக இருக்கவேண்டும். குறிப்பாக இந்தக் கல்வியின் மூலம் மாணவர்களுக்கு வாழ்க்கையில் பயன் உள்ளதாக இருக்கச் செய்ய வேண்டும். பி.ஏ., படித்திருக்கிறேன். எம்.ஏ., படித்திருக்கிறேன். வேலை கிடைக்கவில்லை என்று சொல்கிறபோது வாழ்க்கைக்கு பயன்படவில்லை என்று சொல்கிறபோது, அவர்களுக்குத் தரப்படும் கல்வியைப் பற்றி ஒரு தவறானகருத்து, ஒரு கவலையான கருத்து ஏற்படுகிறது. எனவே பள்ளிப்படிப்பு புள்ளிக்கு உதவாது என்கிற அளவிற்கு மக்கள் பேசுகின்ற நிலையில் நம்முடைய கல்வி பற்றிய கருத்து சமுதாயத்திலே பரப்பப்பட்டு வருகிறது. இதை உணர்ந்து தான் இந்த உணர்வுகளை போக்கிக்கொண்டு வருகிறோம். அதற்காகத்தான் நாம் ஏற்கனவே மேல்நிலைப்பள்ளிகளில் தொழில் கல்வியைக் கொண்டு வந்து, மற்ற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு—சிறப்பாக நடக்கிறது என்று மத்திய அமைச்சர்கள் சொன்னாலும் கூட, நாங்கள் அதிலே திருப்தி அடையவில்லை. நம்முடைய திட்டங்களிலே திருப்தி அடையவில்லை. அதைப்பற்றி சிந்திக்க ஆரம்பித்து இருக்கிறோம், என்பதைத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவா அவர்கள் கடந்த 1½ ஆண்டுகளாக பொதுக்கூட்டங்களிலும், இன்னும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும், தொழில் கல்வியை முதலாவதுலிருந்து நாங்கள் கொண்டுவர இருக்கிறோம் என்று பேசி வருகிறார்கள். தொழில் கல்வி என்றவுடனேயே, அதைப் பற்றி குறை கூறவேண்டுமென்ற நோக்கம் சிலருக்கு ஏற்படலாம் ஒருவேளை இவர்கள் கொண்டுவரட்டும், அதை வைத்தே. இந்த ஆட்சியை கவிழ்க்கலாமா என்று கூட சில பேர்கள் நினைத்துக்கொண்டு இருக்கலாம். ஏன் என்றால், அப்படி ஒரு ஆட்சி கவிழ்க்கப்பட்டிருக்கிறது. 1954-55-ல் மதிப்பிற்குரிய மூதறிஞர் ராஜாஜீ அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரு கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது குலதர்மக் கல்வித் திட்டம் என்று எதிர்த்தோம். நாங்களே எதிர்த்தோம். எதிர்த்தவர்களிலே நானும் ஒருவன்தான். எவ்வளவோ கூட்டங்களில் பேசியிருக்கிறேன். ஆகவே அந்த நிலைமையில் அன்றைக்கு அந்த எதிர்ப்பைத் தாங்க முடியாது, அவர்களே ராஜினாமா செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதெல்லாம் இந்த தமிழகத்தினுடைய அரசியல் வரலாறு ஆகும். ஆகவே, அதைப் போலவே ஒரு நிலைமையை உருவாக்குவதற்குஇந்தத் தொழில் கல்வி திட்டம் நமக்கு சாதகமாக இருக்கவேண்டும என்றுகூட சில பேர் கனவு கண்டு கொண்டுஇருக்கலாம். அப்படி எல்லாம் நாங்கள் ஏமாறமாட்டோம் என்பது மட்டுமல்ல, அன்றைக்கு குலதர்ம கல்வி திட்டத்தை எதிர்த்த நாங்கள், இன்னொரு குலதர்மக் கல்வித்திட்டத்தை நிச்சயமாகக்கொண்டு வரமாட்டோம் என்கிற உறுதியினை நான் இந்த நேரத்திலே குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு தொழிலைச் செய்கின்றான் ஒருவன் அவனுக்குப் பிறக்கின்ற மகன் அந்தத் தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்பதோ, அல்லது அந்தத் தொழிலைத்தான் படிக்க வேண்டும்

என்பதோ, குலதர்மக் கல்வித் திட்டத்தினுடைய அச்சாணியாக, அடிப்படையாக இருக்குமானால், அந்த நிலைமையிலே எந்தவிதமான திட்டமும் இந்தத் தமிழகத்திலே கொண்டு வரப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதற்காக நம்முடைய குழந்தைகளுக்கு தொழில் கல்வி தரவேண்டுமா வேண்டாமா என்று சிந்திக்கிற பொறுப்பிலே, கடமையிலேயிருந்து நாம் தயவு செய்து விலகிவிடக் கூடாது. இன்றைக்குப் பேசிய நண்பர்கள் வரவேற்றுப் பேசியிருக்கலாம், அதைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லியிருக்கலாம். அல்லது எப்படிகொண்டு வருகிறீர்கள் என்று கேட்பதன் மூலம் ஆர்வத்தைக் காட்டியிருக்கலாம். அந்தத் தொழில் கல்வியை, முறையை இப்படியெல்லாம் கொண்டு வரலாம் என்று சொல்வதன் மூலமாக நீங்கள் எல்லாம் எங்களுக்கு ஒத்துழைப்புத் தருவதாகநாங்கள் கருதுகிறோம். ஆனால் அதைப் பற்றிய கருத்துச் சொல்லாமல் நாளைக்கு வரட்டும், பார்த்துக் கொள்ளலாம் என்று இருப்பதானது, இந்தச் சமுதாயத்தினுடைய எதிர்காலம் பற்றி, அக்கறையில்லாத் தன்மையை,இந்தச் சமுதாயத்தினுடைய முன்னேற்றத்தில் தங்களுடைய கடமையை மறந்த தன்மையைத்தான் அது எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.

ஆகவே நாங்கள் தொழில்கல்வி என்று சொல்கிறபோது, குறிப்பாக 3 காரணங்களை வைத்து நாங்கள் சொல்கிறோம். ஒன்று எல்லோருக்கும் தெரிந்த காரணம்தான். அது இந்த மாணவர்கள் படிக்கின்றார்களே, அவர்கள் படித்து பத்தாவதோடு நின்றுவிடலாம், 11-வதோடு நின்றுவிடலாம், 12-வதோடு நின்றுவிடலாம். எல்லோரும் கல்லூரிக்கு வருகிறார்கள் என்ற நிலைமை நிச்சயமாக இல்லை. எப்போதும் இருக்கப் போவதில்லை. அது பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளின் காரணமாக இது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இங்கே மட்டுமல்ல. எல்லா நாடுகளிலேயும் இருக்கின்ற நிலைமைதான். இதுவரையிலும் கல்வித் திட்டத்தைத் தீட்டியவர்கள் எல்லாம் இந்த பாஸ் ஆனவர்களைப் பற்றித்தான் கவலைப்பட்டார்களே தவிர அவர்களுக்கு கல்லூரி ஆரம்பத்திலேயும், அவர்களுக்காப் பேசுவதிலேயும் அவர்களுடைய கஷ்டநஷ்டங்களைப் பற்றிக் கவலைப்படுவதிலேயும் தான் இருந்தார்களே தவிர; இந்த மேலே படிக்க முடியாமல், நின்றுவிட்டவர்களைப் பற்றி கவலைப்பட்ட முதல் அரசாங்கமே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான். (கை தட்டும் ஒலி) நாங்கள் அவர்களைப் பற்றிக் கவலைப்பட்டதால்தான், தொழில் கல்வியைப்பற்றி தீவிரமாக பேசுகிறோம். கவலைப்பட்டதால்தான் ஏறக்குறைய 50 ஆயிரம் பேர்கள் இன்றைக்கு மேல்நிலைப்பள்ளிகளிலே தொழில் கல்வியைப் பெற்று வருகிறார்கள்; கவலைப்பட்டதால்தான் இவ்வளவு பாலிடெக்னிக்குகளை நீங்கள் பார்க்கிறீர்கள். ஆகவே நாங்கள் நின்றுவிட்டவர்களை, தவறிவிட்டவர்களைப் பற்றிக் கவலைப்படுகிறோம். பெரும்பாலும் பின்தங்கிய, ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கூட இருக்கலாம். இந்தச் சமுதாயத்தினுடைய கீழ்நிலையிலே இருப்பவர்களாக





இருக்கலாம்; கிராமத்துக் குழந்தைகளாக இருக்கலாம். அவர்களை பற்றி எல்லாம் இதுவரையிலே யாருமே கவலைப்படாமல் இருந்த நேரத்தில் அவர்களைப் பற்றி நாங்கள் தான் முதன் முதலாக கவலைப்படுகிறோம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்டவர்கள் நின்றுவிடுகிற நேரத்தில் அவர்கள் படித்த, கணக்கோ, ஆங்கிலமோ, தமிழோ, பூகோளமோ சரித்திரமோ, அல்லது விஞ்ஞானமோ ஒரு வேலையைத் தேடிப் போகின்ற நேரத்தில் வேலைவாங்கித் தரக் கூடியபாடமாக அவர்களுக்கு அவைகள் இல்லை. உனக்கு என்ன தெரியும் என்று கேட்கிறபோது, எனக்குத் தமிழ் தெரியும், எனக்கு ஆங்கிலம் பேசத் தெரியும், எனக்குக் கணக்குத் தெரியும்,என்றால், அதை வைத்துக்கொண்டு வேலை தரக்கூடிய நிலைமை இன்றைக்கு நாட்டிலே இல்லை. வேலைகள் இல்லை என்பதல்ல. இருக்கின்ற வேலைக்கு தகுதி படைத்த நிலைமையிலே நம்முடைய மாணவர்கள் தயாரிக்கப்படவில்லை. ஆகவேதான் அவர்களுக்கு ஏதாவது ஒரு தொழிலை படித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பை நாம் தருகிறோம். அது அவர்களுக்கு தங்களுடைய வாழ்க்கையில் ஒரு இக்கட்டான நிலைமையில் உதவும் என்ற நம்பிக்கையிலே தான், இந்தச் சமுதாயத்தினுடைய முன்னேற்றத்தில், சமுதாய முன்னேற்றம், இந்த உற்பத்தியிலேதான் இருக்கிறது என்றால், அந்த உற்பத்தியிலே பங்கு வைக்கக்கூடிய யோக்கியதையை அந்தத் தொழில் கல்வியை நம்முடைய குழந்தைகளுக்கு, மாணவர்களுக்கு தரவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆகவேதான் சிறு வயதிலேயிருந்து தருவது நல்லது என்று கருதித்தான் இப்போது அதற்கான திட்டங்கள் தீட்டிக்கொண்டிருக்கிறோம். அதற்கான பரீட்சார்த்தமான முயற்சிகளிலே, இந்த ஆண்டிலே கூட நாம் துவக்கலாம்என்று இருக்கிறோம். யாரையும் கட்டாயப்படுத்தப்போவதில்லை என்பது ஒன்றே, எங்களுடைய எண்ணத்தில் இருக்கிற அந்தத் தூய்மையான உணர்வுகளை எடுத்துக் காட்டும் என்று நான் நம்புகிறேன். தொழில் கல்வி வேண்டும் என்று சொல்வதற்கு இன்னொரு காரணம், நாம் தருகிற இந்த ஏட்டுக் கல்வி, அதனாலே கல்வி பெறுகிற மாண்வர்கள், அவர்களுக்கும் இந்த சமுதாயத்திற்கும் இடையே ஒரு இடைவெளி அதிகமாகிக் கொண்டே வருகிறது. அவர்கள் சமுதாயத்திற்கு அன்னியர்களாகிற ஒரு நிலைமையைத்தான் நாம் பார்த்து வருகிறோம். சமுதாயம் என்று சொல்வதைவிட, அவன் குடும்பத்தை விட்டே பிரிந்துச் செல்கின்ற நிலைமையை எல்லாம நாம் பார்க்கிறோம். அந்த நிலைமைகளை நாம் ஒழிக்க வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு உழைக்கின்ற வாய்ப்பை தந்தாக வேண்டும். குறிப்பாக உடல் உழைப்பிற்கான வாய்ப்பை தந்தாக வேண்டும்.

(இரவு 6-50)

இந்த சமுதாயத்தோடு ஒட்டிச் செல்கிற பண்பு, அதே நேரத்தில் உழைப்பின் மேலே ஒரு மதிப்பும், மரியாதையும வரவேண்டும். நாளைக்கு அவன் கலெக்டராக கூட போகலாம்,

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 மார்ச் 15

என்ஜினீயராக கூட போகலாம், டாக்டராகக் கூட போகலாம. எந்த உயர் பதவிக்குச் சென்றாலும், உழைப்பை மதிக்கின்ற வனாகவும், உழைப்பவர்களை போற்றுகின்றவனாகவும் நம் முடைய கல்வி நிலையங்களிலிருந்து வருகிற மாணவர்கள் இருக்க வேண்டும் என்றால், உழைக்கும அந்த வாய்ப்பை தருகிற அளவுக்கு, தொழில் கல்வியை கற்பிப்பது என்பது நியாயமானது தான் என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு காரணத்தைச் சொல்லவேண்டும் என்றால், ஏட்டுக் கல்வி என்று பார்க்கிறபோது, பாடபுத்தகப் பயிற்சி களை அடிப்படையாக வைத்து மனப்பாடம் செய்கிற திற மையை வளர்க்கிற ஒன்றாகத்தான் இருந்து வருகிறது. மனப் பாடம் செய்கிற ஆற்றல் சிலருக்கு இருக்கலாம். அதுவும் பின் தங்கிய ஆதித் திராவிட மக்களுக்கு மனப்பாடம் செய்கிற ஆற்றல் குறைவாகத்தான் இருக்கிறது. அது தனியாக வளர்க்கப்பட வேண்டும். ஆனால் மனப்பாடம் செய்து வருகிற அறிவு, அறவே அல்ல என்பதும, செய்முறை அனுபவத்தாலே வருகிற அறிவு தான் அறிவு என்பதும், அறிஞர் பெருமக்களாலே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

அந்த வகையிலே, செய் முறை அனுபவத்திற்கு ஒரு வாய்ப்பு நமமுடைய கல்வித் திட்டத்திலே, எந்தப் பெயரிலே ஏற்படுத்தினாலும், எந்தத் துறையிலே ஏற்படுத்தினாலும், அது அறிவு வளர்ச்சிக்காக செய்கிற ஒரு நல்ல காரியமாக, உதவி செய்கிற ஒரு காரியமாகத்தான் நான் நமபுகிறேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையிலே பார்க்கிற போது, தொழில் கல்வியை நிர்ணயிப்பதன் மூலம், அந்தப் பின் தங்கிய இனத்தைச் சார்ந்த மக்கள், மற்றப் பாடங்களிலே நல்ல மதிப்பெண்கள் பெறுகிற நிலைமையை நிச்சயமாக உருவாக்க லாம் என்ற உறுதியை இந்த நேரத்திலே சொல்லவிரும்பு கிறேன்.

அந்த அடிப்படையிலேதான், தொழில் கல்வியை தரவேண் டும் என்று சொல்கிறபோது பிரிட்டிஷ் காலத்திலே அத்தகைய ஒரு கல்வி முறை இல்லாமல் இருந்திருக்குமானால், அவனுக்கு சமுதாயத்தைப் பற்றி கவலை இல்லை. அவனுக்குத் தேவை குமாஸ்தாதான். அந்த அடிப்படையில் அவன் செய்திருக்கலாம். ஆனால் இன்றைய நிலைமையில் நல்லதொரு மாறுதல் ஏற்பட்டு இருந்தாலும், இன்றைக்கு இருக்கிற கல்வி முறையில் மேலும் பல மாறுதல்களை செய்யவேண்டும் என்று சொல்வது இன் றைக்கு இருக்கிற கல்வி முறை நம்முடைய சமுதாயத்திற்கு, அதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால்தான், இந்த தொழில் கல்விக்கு மிக முக்கியத்துவத்தை தருகிறோம.



1984 மார்ச் 15] [திரு. செ. அரங்கநாயகம்]

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய திட்டமாக சொல்லியிருப்பது, தருகின்ற தொழில் கல்வியை வெறும கல்வி யாகமட்டும் தராமல், நல்லதொரு பயிற்சியாக, உண்மையான நிலையில் ஏற்படுத்தித் தரவேண்டும், அது உண்மையான பயிற்சியாக அமையவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகவே, உற்பத்தி நடக்கின்ற மையங்களில், அவர்களுக்கு தொழில் கல்வி தரவேண்டும் என்று சொல்கிற அளவுக்கு, தரம் உயர்ந்த தொழில் கல்வி தரவேண்டும் என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விருப்பம் ஆகும். அதை நிறைவேற்றத்தான் அறிஞர் பெருமக்கள் திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கிறார் கள். இது நம்முடைய கல்வி முறையிலே ஓரளவிற்கு குறை பாட்டை போக்கும்.

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய கல்வித் திட்டத்திலே இருக்கிற ஒரு முக்கியமான குறைபாடு— நான் படிக்க வேண்டும், நான் பாஸாக வேண்டும், நான் நல்ல முறை யிலே வாழவேண்டும், என்னுடைய குடுமபம் வாழவேண்டும் என்று அந்த நோக்கத்திலே படிக்கிறபோது, படிப்பிலே போட்டி. வாழ்க்கை நிலையிலே போட்டி, வேலை பெறுவதிலே போட்டி. பதவி உயர்வு பெறுவதிலே போட்டி என்று அத்தகைய நிலைமை களிலே வளர்கிற குழந்தைகள் மற்றவர்களைப் பற்றியோ, சமுதாயத்தைப் பற்றியோ நினைக்கிற வகையில் அந்தக் கல்வி அமையவில்லை. ஆனால் நமக்குத் தேவையான முறையில் நம்முடைய மாணவர்கள் உருவாக்கவேண்டுமென்றால், அவர் கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பது ஒன்று; அவர்கள் சமுதாயத்தைப் பற்றி சிந்திக்கிறவர்களாக இருக்க வேண்டும், சமுதாயத்திற்கு பயன்படுகிறவர்களாக இருக்க வேண்டும் என்பது இரண்டு ; இன்னொன்று தேசபக்தி உள்ளவர் களாக, நாட்டுப்பற்று உள்ளவர்களாக இருக்க வேண்டும். இது மூன்றாவது. இதற்கு 3 படிகள்.

இன்றைக்குப் பல பெரியவர்கள் மாரல் சைன்ஸ், அதாவது நீதி போதனைப் பற்றி வலியுறுத்திச் சொல்லி யிருக்கிறார்கள். அவர்கள் அதை பெரியதாக நினைத்துக் கொண்டிருக்கலாம். நான் இந்த ஒன்றை மட்டும சொல்லவில்லை. அதை முதல்படியாகச் சொல்லலாம். ஒருவன் நல்லவனாக இருக்கிறான் என்பதிலே மட்டும் நாங்கள் திருப்தி அடையவில்லை. அவன் எந்த அளவுக்கு சமுதாயத்திற்கு பயன் உள்ளவனாக, இருக்கிறான் என்பதிலே தான் நம்முடைய கவனம் இருக்கிறது, மாணவர்கள் பிறருக்கு பயன்படுவதற்கும, சமு தாயத்திற்கு பயன்படுவதற்கும், முக்கியமாக நாம் அக்கறை கொண்டிருக்கிறோம். நான் பல இடங்களிலே சொன்னதைப் போல இன்றைக்கு இங்கே படிக்கிற மாணவர்கள் வெளி நாட்டுக்கு வேலைக்குச் செல்லவேண்டும் என்று நினைப்பது பற்றி அதிகமாகச் சொல்லவிரும்பவில்லை என்றாலும், அதில் இருக்கிற தவற்றை எடுத்துக் காட்டுவது என்பது என்னுடைய

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 மார்ச் 15

கடமையாகும். இன்றைக்குப் படிக்கிற மாணவர்கள், இங்கே வேலை கிடைக்காமல் ஒரு இடத்திற்கு வேலைக்குப் போகிறார்கள் என்பது ஒன்று, ஆனால் படிக்கிறபோதே இங்கேயே வேலை கிடைத்தாலும் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வது என்பது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. இந்த நாட்டின்மீது அக்கறை கொண்டுள்ள அத்தனை பேர்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய ஒன்றாகும் இது. நீங்கள் தயவுசெய்து ஒரு வித்தியாசத்தைப் பார்க்கவேண்டும். இப்படி இங்கே படித்த எஞ்சினியர்களும் டாக்டர்களும் எந்த நாடுகளுக்குச் செல்கிறார்கள் என்றால் அது ஒன்று, கனடாவாக இருக்கும், அல்லது பிரிட்டனாக இருக்கும் அமெரிக்காவாக இருக்கும், ஆஸ்திரேலியாவாக இருக்கும் அல்லது ஐரோப்பிய நாடுகள் சிலவாக இருக்கும். எல்லாம் முதலாளித்துவ நாடுகள் என்று நாம் சொல்கிற சில நாடுகளாக இருக்கும். அங்கே தான் இவர்களை வரவேற்கிறார்கள், அங்கே அதிகச் சம்பளம் தருகிறார்கள். அங்கே இவர்கள் போய் வருகிறார்கள். நான் மாஸ்கோவுக்குச் சென்றபோது லுமும்பா பல்கலைக் கழகத்திற்குப் போய் இருந்தேன். அங்கே எல்லா மாணவர்களையும் சேர்க்கிறார்கள். ஆனால் அந்தப் பல்கலைக் கழகத்திலே சேர்க்கிறபோது மிக முக்கியமான நிபந்தனையே அங்கே படித்து முடித்ததற்குப் பிறகு, நீ உன்னுடைய நாட்டிலே போய் வேலை செய்யவேண்டும் என்பது. ஆகவே சோஷலிச நாட்டில் அவன் அறிஞர்களை உருவாக்கினாலும் அவர்களை, தான் வைத்துப் பயன்படுத்திக்கொள்ளாமல் அவனுடைய நாட்டிற்கு அவனை அனுப்பவேண்டுமென்ற நிலைமை ஒரு புறம் இருக்கிறபோது இந்த நாடுகளிலே இப்படி எல்லாம் நடக்கிறதே என்ற நிலைமைகளைச் சொல்லி இந்த அறிஞர்கள், இந்த மாணவர்கள் இந்த இளைஞர்கள் எல்லாம் இந்த ஏழை நாட்டிற்குப் பயன்படவேண்டும், எந்தந்த மக்களுடைய வரிப்பணத்திலே படிக்கிறார்களோ அந்தந்த மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்று நாம் சொல்கிறபோது சிலபேர்கள் எதிர்க்கிறார்கள். எப்படி எதிர்க்கிறார்கள்? இங்கே இருந்து போய் அவர்கள் அங்கே இருந்து பணத்தை அனுப்புகிறார்கள். நான்-ரெசிடென்ட் இண்டியன் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

நான் ஒரு எக்னாமிக்ஸ் பத்திரிகையிலே பார்த்தேன். அவர்கள் சொல்லியிருந்த கணக்கு இந்த கணக்கையும் மீறியிருக்கிறது. அதிலே ஒரு நண்பர் எழுதியிருந்தார். அமெரிக்காவிலே அவர்கள் எந்த வேலைக்குப் போனாலும்—பியூனாக இருந்தாலும், டாக்டராக இருந்தாலும், எஞ்சினியராக போனாலும்— அங்கே இருக்கின்ற ஒரு பொருளாதார அமைப்பு இயங்குவதற்காக இவர்கள் ஒரு பாகம் ஏற்றுச் செல்கிறார்கள். அதை தயவுசெய்து நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அதற்காக அவர்கள் சம்பளம் பெற்று அந்தப் பணத்தை அனுப்புகிறார்கள். இது ஏறக்குறைய 4 ஆயிரத்து 200 ஆயிரம் மிலியன் டாலர்கள் என்று வைத்துக்கொண்டால், அந்த அமைப்பு இயங்குகிறபோது அந்த அமைப்பு மூலமாக பொருள் உற்பத்தியாகி உலகத்தின் பல்வேறு



1984 மார்ச் 15] [திரு. செ. அரங்கநாயகம்]

நாடுகளிலேயும் சந்தைகளை அமைத்து விற்பனை செய்து அவர்கள் பணத்தைத் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வருகிறபோது இந்தியாவிலிருந்து மட்டும் நம்முடைய நண்பர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பொறுப்பின் காரணமாக மட்டும் இங்கேயிருந்து போகிற பணத்தின் மதிப்பு மட்டும் 5,600 மிலியன் டாலர்கள் என்று இருக்கிறது என்ற கணக்கை அந்த லெட்டரிலே எழுதியிருக்கிறார்கள். நான் பணத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் அங்கேயிருந்து அனுப்புகிற பணத்தைவிட அதிகமான பணத்தை இங்கேயிருந்து அந்த பொருளாதார அமைப்பு சுரண்டிச்செல்கிறது என்பதை நினைக்கிறபோது நம்முடைய பணம் வெளியறுவதற்கு அங்கேயும் போய் உதவிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைப்பார்களானால் தேசபக்தி உணர்வுள்ள யாராக இருந்தாலும் இந்த நாட்டின் நன்மைக்காக எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அதை ஏற்று நடத்துவதற்கு முன்வரவேண்டும். சமுதாய உணர்வு என்று வலியுறுத்துவதும் தேச பக்தி உணர்வு என்று நான் சொல்வதும் இந்தக் கண்களைத் திறக்கவேண்டும் என்பதற்காக அல்ல. அந்தக் குறைபாடுகள் எல்லாம் இப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்படுத்தி அப்படிப்பட்ட நிலைமைகளை ஆதரிக்கக்கூடிய அளவுக்கு இங்கே பல அறிஞர்களை உற்பத்தி செய்து வைத்துக்கொண்டிருக்கிறாம். ஆகவே அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்கக்கூடிய முறையிலே தேவையான பண்பாட்டை நாம் தரவில்லை. அந்த பண்பாடு தான் நாம் அவர்களுக்கு தரவேண்டும். அதன் மூலமாக அவர்கள் நல்லவர்களாக இருக்கக்கூடியமுறையிலே நீதி போதனைகள், சமுதாயப் பற்று, தேச பக்தி உணர்வு அவர்களுக்கு ஊட்டப்படவேண்டும் என்பதைச் சொல்லவிரும்புகிறேன். என்னுடைய உயிர் தேவை என்றாலும் இந்த நாட்டிற்கு தரத்தயாராக இருக்கிறேன் என்று நினைக்கிற அளவுக்கு இந்த நாட்டினுடைய மாணவர்கள் தங்களுடைய உணர்வுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் பரவலாகப் படித்தவர்கள் எல்லாம் இந்தச் சமுதாயத்தில் இருக்கிற நேரத்திலே தான் இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகிற நேரத்திலே கட்டுப்படுத்தவும் அவைகளைத் தீர்க்கவும் அந்த நேரத்திலே மக்களைக் காப்பாற்றவும் தேவைப்பட்ட சக்தியை இந்த சமுதாயம் பெற முடியும். அந்தமுறையிலே இந்த இரண்டு கையான மாறுதல்களை நம்முடைய கல்விமுறையிலே செய்வதன் மூலம் ஒரு நல்ல வலிவுள்ள சமுதாயத்தை உருவாக்கமுடியும் என்பதை நான் உறுதியாகச் சொல்லவிரும்புகிறேன்.

(இரவு 7.00)

இங்கே நிதி ஒதுக்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். 1984-85-ல் கல்வி மானியத்தின் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 402 கோடி வருவாய் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1946 கோடியில் 21 விழுக்காடாகும். பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்திற்கு ஆகும் உணவுப் பொருள் மதிப்பு வகையில் ரூ. 60 கோடி மானியக் கோரிக்கை எண் 35-ல் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ரூ. 60 கோடியையும் சேர்த்தால் ரூ. 462 கோடி ஆகும். ஆக, கல்விச்

செலவு 24 விழுக்காடு அளவில் இருக்கும்' என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதை ஏன் நாம் சேர்த்து கணக்கிட வேண்டும் என்று சொல்கிறோம் என்றால், இந்த முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் வருகின்ற வரைக்கும் அது வரையில் இருந்து வந்த மதிய உணவு கணக்கு இந்தக் கல்வி மானியத்தில் இருந்து வந்திருக்கிற காரணத்தினால் இந்த 2 ஆண்டு காலமாக பிரித்து இருந்ததையும் சேர்த்துப் பார்த்து நாம் இதற்கு முன்னால் இருந்த கணக்கோடு பார்க்கிற போது இது 24 சதவீதமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் கல்வியைப் பற்றி நான் இப்போது பேசிவிட்டேன். 10 முதல் 15 வயது தொகுதி மாணவர்களுக்கு சத்துணவு தருவதாக நாம் இன்றைக்கு அறிவித்து இருக்கிறோம்.

இரண்டாவதாக ஏற்கனவே 5 வயது முதல் 9 வயது முடியவுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு அமுலாக்கப்பட்டுள்ள 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்'' இவ்வாண்டு அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளாகிய செப்டம்பர் 15லிருந்து இம்மாநிலத்திலுள்ள எல்லாப் பள்ளிகளிலும் 10 முதல் 15 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் விரிவாக்கப்பட்டிருக்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு சத்துணவு, ஆண்டில் பள்ளி நாட்கள் அனைத்திலும் வழங்கப்படும்.

இந்தச் சத்துணவுப் பற்றி கருத்துக்களை சொல்லி அந்தத் திட்டத்தைப் பற்றி தவறான கருத்துக்களை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெற்றதை நாம் பார்த்தோம். ஆனால் கருத்துக்களைச் சொல்லுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றை தயவு செய்து உணர வேண்டும். சத்துணவு என்பது அதற்கு அமைக்கப்பட்ட அறிஞர் குழு சொன்ன அந்த அடிப்படையில் தான், குறைந்த செலவில் சத்து தரக்கூடிய அளவுக்கு, சத்துணவு தர வேண்டும் என்ற அந்த அடிப்படையில் அந்த உணவு இன்றைக்கு தரப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட முறையில் இன்றைக்கு நானும் சாப்பிடுவதும் இல்லை, நீங்களும் சாப்பிடுவது இல்லை. நாம் ஏதோ வாய்க்கு ருசியாக சாப்பிடலாமே தவிர குறிப்பிட்ட முறையில் ஒரு விஞ்ஞானியின் கருத்தின் அடிப்படையில் சத்துணவு சாப்பிடுகின்ற நிலைமை ஒரு வேளை ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடிய நோயாளிகளுக்கு இருக்கலாமே தவிர மற்றபடி யாரும் அப்படி சாப்பிடுவது இல்லை. ஆனால் இன்றைக்கு அந்த வாய்ப்பை நம்முடைய குழந்தைகள் பெற்றிருக்கிறார்கள். பொது மக்களுடைய வரிப் பணத்தில் தரப்படுகின்ற உணவு தான். யார் வீட்டு பணமும் அல்ல. மக்களுடைய பணத்திலிருந்து மக்களுடைய குழந்தைகளுக்கு நாம் இந்த சத்துணவைப் போடுகிறோம். சத்துணவு போடுகிற போது அந்த குழந்தைகளுக்கு கை, கால் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பது மட்டும் அல்ல, அறிவு வளர்ச்சிக்கு தேவையான மூளை நல்லபடியாக வளர வேண்டும்





என்ற அடிப்படையில் இந்த சத்துணவை நாம் போடுகிறோம். ஆகவே, இது சமுதாயத்தில் ஒரு நல்ல மாறுதலை ஏற்படுத்தும் என்று நம்பிக்கையை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தில் ஒரு நடவடிக்கை என் கவனத்திற்கு வந்தது. அது தான் நடைமுறையா என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக கேட்கிறேன். சைதாப்பேட்டை கோர்ட்டுக்குப் பின்னால் இருக்கக்கூடிய கார்ப்பரேஷன் பள்ளியில் ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளைக்கு மேல் பள்ளிக்கூடம் போவதாக இருந்தால் ஒரு பிள்ளைக்கு தான் சத்துணவு வழங்கப்படுகிறது என்று அந்த பள்ளியிலிருந்து, ரிப்போர்ட்ஸ் வந்திருக்கிறது. ஆகவே இது போல் பலயிடங்களிலிருந்து வருகிறது. Is that the position? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நாம் அப்படி ஒரு கட்டுப்பாட்டை விதிக்கவில்லை. ஆனால் அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை விசாரிக்கும்படி நான் உரிய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சத்துணவின் மூலம் குழந்தைகளுக்கு மூளை வளர்ச்சி, உடலில் உள்ள அத்தனை பாகங்களும் வளர்ச்சி ஏற்படுகிறது. அதற்கான உணவு அளிக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் நாம் அளிக்கிற உணவு ஒரு வேளைக்கு மட்டும் தானே ஒழிய இரண்டு வேளைகளுக்கும் அளிக்காமல் இந்த உணவிலேயே வளர்ச்சி வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுவும் இல்லை என்றால் மோசமானதாக இருக்கும் என்பது தான் இப்போது நாம் சொல்ல வேண்டிய ஒன்று. ஆகவே, இப்போது அதாவது தந்து இருக்கிறோம்.. அதாவது இந்தியாவிலேயே ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு உணவு நிச்சயமாக உண்டு என்ற 'கியாரண்டியை' உத்திரவாதத்தை தமிழ்நாட்டில் தான் தந்து இருக்கிறோம். இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் அத்தகைய உத்திரவாதத்தை யாரும் தரவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் (கைத்தட்டல்).

1984-85-ல் பள்ளிகளுக்காக ஏற்படுத்தப்பட இருக்கும் கூடுதல் பணியிடங்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். கூடுதல் பணியிடங்கள், 1,000 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள், 100 உடற்பயிற்சி ஆசிரியர் பணியிடங்கள், 150 தமிழ் ஆசிரியர் பணியிடங்கள், 200 பி.எட். தர ஆசிரியர் பணியிடங்கள்,

100 முழு நேர தொழிலாசிரியர் பணியிடங்கள், 75 மேல்நிலை பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 1,625 பணி யிடங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

பள்ளிகளில் அறிவியல் கல்வி தர வளர்ச்சிக்கு பல்வேறு நட வடிக்கைகளை எடுத்து வருகிறோம். 1984 ஜனவரியில் திரு வனந்தபுரத்தில் நடந்த ''தென்னிந்திய அறிவியல் கண்காட்சி'' யில், தமிழகப் பள்ளிகள்—குறிப்பாக தருமபுரியில் உள்ள அரசு ஔவையார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி-பெரும்பாலான கேட யங்களையும், பரிசுகளையும் வென்று நமது மாநிலத்திற்கு புகழ் ஈட்டித் தந்துள்ளன.

பள்ளிகளில் மின்கணிப்புப் பொறிக் கல்வியைப் பொறுத்த வரையில் பார்த்தோமானால், மின் கணிப்புப் பொறி இப் பொழுது மேலை நாடுகளில் பள்ளி நிலையிலேயே அறிமுகப் படுத்தப்படுகிறது. நம் நாட்டிலும் மைய அரசு மின் அணுவியல் துறையும் கல்வி அமைச்சகமும் இணைந்து 1984-85இல் இந்தியா அனைத்திலும் மொத்தம் 250 பள்ளிகளில் மின் கணிப்புப் பொறி பற்றிய பாடத்தை அறிமுகப்படுத்தவிருக்கின்றன. தமிழ் நாட்டில் சென்னையில் இந்தியத் தொழில் நுட்பவியல் நிறு வனத்தைச் சுற்றி 50 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்த சுமார் 50 மேல்நிலைப் பள்ளிகளின் பெயர்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக மைய அரசுக்குப் பரிந்துரைக் கப்பட்டுள்ளன.

அனைவருக்குமான அஞ்சல் முறைப்பள்ளி - அதாவது ஓப்பன் ஸ்கூலைப் பற்றிச் சொல்ல வேண்டுமெனறால், பள்ளி வயதைத் தாண்டியவர்களும் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேற வசதி செய்யும் நோக்கத்துடன் அனைவருக்கு மான அஞ்சல் முறைப்பள்ளி வரும் ஆண்டில் தொடங்கப்பட விருக்கிறது.

அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்களுக்குத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறு வனம் இலவசமாகப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங் களையும் வழங்குகிறது.

ஆசிரியர் சமுதாயத்திற்கு இவ்வரசு செய்துள்ள பல சீரிய நன்மைகள் மானியக் கோரிக்கை விளக்க நூலில் விவரிக்கப் பட்டுள்ளன. அண்மையில் மேலும் சில சலுகைகளைக் குறித்து அரசு எடுத்துள்ள முடிவுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பாட முழுநேர ஆசிரியர் கள் மாதம் ரூ. 40 சிறப்பூதியம் பெறுவதிலிருந்த சிக்கலை நீக்கி அவர்கள் வாரம் 24 பிரிவேளைகள் தொழிற் பாடம் கற்றுத்தர வேண்டும் என்று இருந்ததை மாற்றி 18 பிரிவேளைகள் போதும் என்று விளக்கம் தரப்படவிருக்கிறது.



மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பி.பி.எட். தகுதி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்கள் எம்.பி.எட். படிப்பைக் கோடை விடுமுறையோடு சேர்த்து பயிலும் போது அவ்விடுமுறைக் காலத் திற்கு அதிகமாக 64 நாள் வரை எம்.பி.எட். படிப்பைத் தொடர்ந்து படிக்கவும் அந்த 64 நாட்களையும் பணிக் காலமாகக் கருதவும் அரசு அனுமதிக்கவிருக்கிறது.

மேல்நிலைப் பள்ளிகளில் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக் கான 10 மாத சான்றிதழ் வகுப்பிற்கான பாடங்கள் அச்சிடப்பட்டு அவ்வகுப்பு இன்னும் ஒரு மாதத்தில் தொடங்க விருக்கிறது.

பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியோடு ஆறாவது திட்ட காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசு அளிக்க வேண்டிய ஈட்டு மானியத் தொகை யாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 14 இலட்சமும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 19 இலட்சமும் 1984-85 இல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சேலத்திலும், வேலூரிலும் பட்ட மேற்படிப்பு மையங்கள் ஏற்படுத்த சென்னைப் பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சேலத்தில் ஒரு பல்கலைக் கழகம் அமைய வேண்டு மென்று ஏற்கனவே முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார். அப் பல்கலைக் கழகத்திற்கு மையமாக சேலம் பட்ட மேற்படிப்பு மையம் அமையும். அம்மையத்திற்காக ரூ. 5 இலட்சம் உட்பட மொத்தம் ரூ. 13 இலட்சம் வரும் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குத் திட்டப் பணிகளுக்காகத் தரப்பட இருக்கிறது.

வரும் ஆண்டில் பிற பல்கலைக் கழகங்களுக்குத் திட்டப் பணிகளுக்கான மானியமாகப் பாரதியார் பல்கலைக் கழகத் திற்கு ரூ. 120 இலட்சம்; பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 130 இலட்சம்; தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 180 இலட்சம்; அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 40 இலட்சம் ஆகிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

காரைக்குடியில் அழகப்பா பல்கலைக் கழகம் அமைப்பதற் கான சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டு வருகிறது. அப்பல்கலைக் கழகத்திற்காக 1984-85ல் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரிகளின் மேம்பாட்டைத் திட்டமிட்டு நிறைவேற்றி வருவதற்காக 1984-85ல் துணை இயக்குநர் ஒருவர், பேராசிரி யர் இருவர் பிற பணியாளர்கள் ஆகியோருடன் ''கல்லூரி வளர்ச்சிப் பிரிவு'' ஒன்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்

தில் அமைக்கப்படும். பல்வேறு கல்லூரிகளில் நடக்கும் பல்வேறு பாடங்களையும் ஒட்டுமொத்தமாகக் கவனித்து தேவையான வளர்ச்சிப் பணிகளை இப்பிரிவு திட்டமிடும்.

வரும் ஆண்டில் அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் ஆறு பேர் பி. எச்டி. (டாக்டர்) பட்டம் பெற அனுப்பப்பட இருக்கி றார்கள்.

நாகர்கோவில் தென்குமரி கல்வி நிறுவனம் நாகர்கோவிலில் ''சிவந்தி ஆதித்தனார் கல்லூரி'' என்னும் தனியார் கல்லூரியை அரசு மானியம் ஏதும் கோரக்கூடாது என்ற நிபந்தனையுடன்- தொடங்கி நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது. பல்கலைக் கழகம் வழங்கும் இணைப்பை எதிர்நோக்கி இவ்வனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இனி சட்டக் கல்வியைப் பொறுத்தவரையில் பார்த்தோ மானால், 1983-84இல் தமிழ்நாட்டில் உள்ள சட்டக் கல்லூரிகள் அனைத்திலும் 5 ஆண்டு சட்டப் படிப்பு (மேல்நிலைப் பள்ளிப் படிப்பு தேறிய பின் 5 ஆண்டுகள்) அமுலாக்கப்பட்டது.

மேலும் 1983-84-ல் மாலை நேரச் சட்ட வகுப்பு மீண்டும் தொடங்கப்பட்டது.

அடுத்து, தொழில் நுட்பக் கல்வியைப் பற்றி எடுத்துப் பார்த் தோமேயானால், தமிழ்நாட்டில் 1982-83 ஆம் ஆண்டுவரை 61 அரசினர் மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகள் இயங்கி வந்தன. தொழில் நுட்பக் கல்வியின்பால் உள்ள மாணவர் களின் ஆர்வத்தினை ஈடேற்றும் வகையிலும், சுய வேலை வாய்ப் பினை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழகத்தில் மேலும் சில பாலிடெக்னிக்குகளைத் தொடங்கி அரசு முடிவெடுத்தபோதி லும் அரசே பெருமளவில் செலவு செய்து பாலிடெக்னிக்குகளைத் தொடங்கி நடத்திட இயலாத நிலையில், அரசிற்கு எந்தவிதச் செலவும் இன்றி—அனைத்துச் செலவினங்களையும் நிருவாகமே ஏற்று-தனியார் நிர்வாகங்களைச் சில நிபந்தனைக்குட்பட்டு பாலிடெக்னிக்குகளைத் தொடங்க அரசு அனுமதித்து வருகிறது. இதன்படி தனியார் பாலிடெக்னிக்குகள் 1982-83 இல் 2-ம், 1983-84இல் 15-ம் தொடங்கப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டு மேலும் 5 தனியார் பாலிடெக்னிக்குகளைத் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இன்னும் சில பாலிடெக்னிக் களைத் தொடங்கிட அனுமதிப்பது அரசின் ஆய்வில் உள்ளது.

(இரவு 7-10)

பாலிடெக்னிக்குகளைத் தொடங்குவது என்பதைப் பொறுத்த வரையில் அரசினிடத்திலே போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் அரசு தொடங்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் பாலிடெக்னிக்குகளின் தேவையை அரசு உணர்ந்





திருக்கின்றது. ஆகவே தனிப்பட்டவர்கள் அவ்வாறு பாலி டெக்னிக்குகளை அமைக்க முன்வருகின்றபோது அவர்களுக்கு அனுமதி வழங்குவது என்ற முடிவை நாம் எடுத்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் அனுமதி பெறாமலேயே ஆரம்பிக்கலாம் என்ற அரசியல் சட்டப் பாதுகாப்பு அவர்களுக்கு இருக்கின்ற நேரத்தில், அதைப் போல மற்ற பெரும்பான்மை வகுப்பைச் சேர்ந்தவர்களும் அப்படி ஆரம்பிப்பதைப் பெரிய குற்றமாக நாம் கருதக்கூடாது என்பதே இதிலே சிந்திக்கவேண்டிய மிக முக்கியமான ஒன்றாகும்.

இவை எல்லாம் அரசின் சார்பிலே நடத்தப்படவேண்டும் என்பதில் எங்களுக்கு கருத்து வேறுபாடு ஒன்றும் இல்லை. ஆனால் நம்முடைய நாட்டிலே இப்போது நடைமுறையில் இருப்பது கலப்புப் பொருளாதாரம். அதாவது பொதுத் துறையிலே நாம் பல தொழில்களை அங்கீகரித்திருப்பது போல் தனியார் துறையிலும் பல தொழில்கள் நடைபெறுகின்றன. வருமானமும் வருகின்றது. எனவே தனிப்பட்டவர்களின் கையில் பணம் இருக்கின்றது. தனியார் துறையிலே பல கல்வி நிறுவனங் கள் இப்போதும் இருக்கின்றன. அவர்கள் தொழில்களை நடத்தி இலாபம் சம்பாதிப்பதற்கு மாறாக சமுதாயத்திற்குத் தேவை யான காரியத்தைச் செய்ய முன்வருகின்றபோது அதை நாம் பயன் படுத்துவதில் எந்த விதமான தவறும் இல்லை.

குறிப்பாக இந்தத் தனியார் பாலிடெக்னிக்குகளில் அரசி னுடைய கட்டுப்பாட்டின்படி, கைட் லைன்ஸ்படி 50 சத வீதத்தை அவர்கள் பூர்த்தி செய்யவேண்டும் என்று நிபந்தனை போட்டிருக்கிறோம். அதிலே சில தவறுகள் நடைபெற்றிருப்ப தாக அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்ற காரணத்தால் அடுத்த ஆண்டிலே இருந்து அந்த 50 சதவீதத்தை மாணவர்கள் பெறுகின்ற வகையில் அந்தக் குழுவிலே அரசின் சார்புலே ஒரு பிரதிநிதியைப் போட்டு அந்த விண்ணப்பம் கொடுக்க வேண்டிய நாட்கள் முடிந்து, இரண்டு நாட்களிலே அந்த மாணவர்களின் பட்டியலைப் போடுவதன் மூலம் அதிலே எந்த விதமான தவறும் ஏற்படாமல் ஒரு பாதுகாப்பை ஏற்படுத்த முடியும்.

அதற்குப் பிறகு மேற்கொண்டு வருகின்ற புகார்களையும், மற்ற எல்லா நிலைமைகளையும் பார்த்து தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும். ஆகவே இந்த பாலிடெக்னிக்குகளை வியாபார மாகக் கருதுகின்றவர்களைப் பொறுத்த வரையில் அரசு உஷாராக இருக்கும். ஆகவே பாலிடெக்னிக்குகள் நடத்துவதில் பணம் செலவாகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறைந்தது ஒரு மாணவனுக்கு 6 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. அதற்குப் பிறகு தொடராச் செலவினம் என்ற வகையிலே கட்டிடங்களுக்கும், கருவிகளுக்கும் என்று ஏறக்குறைய ஒன்றேகால் கோடி ரூபாய் அளவுக்குச்

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 மார்ச் 15

செலவு செய்ய வேண்டி இருக்கின்றது. இந்தப் பொறுப்பை எல்லாம் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் கணக்கிலே எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகளில் இணை விரிவுரையாளர், விரிவுரையாளர், உதவிப் பேராசிரியர் ஆகியோர் 10 ஆண்டுப் பணிக்குப் பின் அடுத்த நிலைக்கு உயர்த்தப்படும் வண்ணம் ப்லெக்சிபிள் காம்ப்ளிமென்டிங் என்னும் சலுகை முறை அமுல் செய்யப்பட்டுள்ளது.

பொறியியற் கல்லூரி முதல்வர்கள் தனி ஊதியம் மாதம் ரூ. 100 ஆக இருந்தது இப்பொழுது ரூ. 200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு பாலிடெக்னிக்குகளின் ஆசிரியர் சங்கத்திற்கு அங்கீகாரம் தரப்பட்டுள்ளது.

தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் பணி செய்பவர்கள் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சை பெற்றுக்கொள்ளும் சலுகை தரப்பட்டுள்ளது.

பாலிடெக்னிக்குகளில் தகுதி வாய்ந்த ''பயிற்றுநர்களை'' இணை விரிவுரையாளர்களாக 28—4—1981 முதல் பதவி உயர்த்தலாம் என்று முன்னர் தரப்பட்டுள்ள சலுகை இப்பொழுது 1—12—1977 முதலே முன் தேதியிட்டு அமுல் செய்யப்படுகின்றது.

1—1—1974 முதல் 31—12—1976 முடிய தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் ''பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதம்'' படி ஓய்வூதியம் வழங்கலாமென ஆணையிடப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக் கழகத்திற்கு 1984—85-ஆம் ஆண்டில் திட்ட மானியமாக ரூ. 27 இலட்சம் வழங்கப்படும். ''படிக வளர்ச்சி நிலையத்தை'' விரிவாக்குதல், ''உயிரியல்சார்ந்த தொழில் நுட்பவியல் ஆய்வுக்கூடம்'' நிறுவுதல் முதலிய பணிகளுக்காக இம்மானியம் வழங்கப்பட இருக்கிறது.

தமிழ் நாட்டில் மாணவ, மாணவியர் மற்றும் பொதுவாக மக்கள், அறிவியல் வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வதற்கும், அறிவியல் உணர்ச்சியை வளர்ப்பதற்கும், அறிவியல் தொழில் நுட்ப மையங்கள் அமைக்கப்படுமென்று தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவின்போது அறிவிக்கப்பட்டது. சென்னையில் ரூ. 3.85 கோடி செலவில் பெரியார் தொழில் நுட்பவியல் மையத்தையும் ரூ. 1.59 கோடி செலவில் ''கோள்கள் இயங்கும் காட்சி'' நிலையத்தையும் (பிளானிடேரியம்) அமைக்க அண்மையில் அரசு ஏற்பு வழங்கியுள்ளது.



1984 மார்ச் 15] [திரு. செ. அரங்கநாயகம்]

அடுத்து திருச்சிராப்பள்ளி, கோவை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் அறிவியல் மையங்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் அறிவியல் துறையில் நடக்கும் ஆய்வுகளையும் அதன் அடிப்படையில் ஏற்படும் முன்னேற்றத்தையும் ஒருங்கிணைத்து அதனைத் தக்க முறையில் மக்களுக்குப் பயன்படுத்தவும் மைய அரசு அறிவியல் தொழில் நுட்பக் கழகத்தோடு இணைந்து செயல்படவும், மாநிலத்தில் அறிவியல் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் தொழில் வளர்ச்சிக்கு அடிகோலவும் ''தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மன்றம்'' என்ற (தன்னுரிமை பெற்ற) அமைப்பு ஒன்று அமைக்கப்படுகிறது. இவ்வமைப்பில் பல்கலைக் கழகப் பிரதிநிதிகள், அறிவியல் வல்லுநர்கள், தொழில் துறைப் பிரமுகர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இம்மாநிலத்தில் விளையாட்டு, போட்டிப் பந்தயங்கள், உடற்பயிற்சி ஆகியவற்றைச் சிறந்த முறையில் பேணி வளர்ப்பதற்காக (தன்னுரிமை பெற்ற) ''விளையாட்டு வளர்ச்சி வாரியம்'' ஒன்று அமைக்கப்படுகிறது.

தொடக்கப் பள்ளிகளில் விளையாட்டில் சிறந்த மாணவர்களைத் தெரிந்தெடுத்து ஊக்குவித்தல்; உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு பகுத்தறிவுப் பயிற்சி; கல்லூரிகள் 8-க்கு ஆரோக்கியமான விளையாட்டு மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகளுக்காக மானியம் வழங்குதல்; ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

நிதி நிலைமை சரியில்லாத நூலக ஆணைக் குழுக்களுக்கு புத்தகங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு—இதுவரை நிறுத்தப்பட்டு வந்த திட்டத்தை—1984-85-லிருந்து ஆண்டுதோறும் ரூ. 11 இலட்சம் மானியமாக அரசு வழங்கி மறுபடியும் தொடங்குகிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை அருங்காட்சியக வளாகத்திலுள்ள அரங்கினை மேம்பாடு செய்து நவீன முறையில் அமைக்க அண்மையில் அரசு உயர்நீதிமன்ற நீதிபதி திரு. மோகன் அவர்கள் தலைமையில் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இப்பணிக்கு ரூ. 2.34 இலட்சம் செலவுக்கும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் உள்ள பழங்கால ஓவியங்கள், கலை பொருட்கள் போன்றவற்றை வகைப்படுத்தி நன்முறையில் பாதுகாக்க அருங்காட்சியகத் துறை இயக்குநர் தலைமையில் வல்லுநர் குழு ஒன்றை அரசு அண்மையில் அமைத்துள்ளது.

தமிழை ஆட்சி மொழியாக்கும் கொள்கை பல ஆண்டுகளுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டபோதிலும் அப்பணி அண்மை ஆண்டுகள் வரை நல்லமுறையில் அமுலாக்கப்பட்டதாகச் சொல்ல முடியாது. 1980-ஆம் ஆண்டில் இவ்வரசு தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தைத் தீவிரமாக அனைத்துத் துறைகளிலும் அமுலாக்குவதற்கான முனைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கியது.

அத்திட்டம் முதல் ஆண்டில் 17 துறைகளிலும், இரண்டாமாண்டில் எஞ்சிய பிற துறைகளிலும் செயற்படுத்தப் பெற்றது. அடுத்த நிலையில் அரசுச் செயலகம், தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்கள், மாநகராட்சிகள் போன்றவற்றிற்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட இருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 1941 தமிழ் தட்டச்சுகள் (ஆங்கில தடடச்சுகளுக்கு மாற்றாக) வழங்கப்பட்டுள்ளன. மாவட்டங்கள் தோறும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தும் திட்டத்தின்கீழ் அண்மையில் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டச் செயற்பாட்டிற்கு முன் அனைத்து அரசு அலுவலகங்களிலும் தோராயமாக 13,000 ஆங்கிலத் தட்டச்சுகளும், 4,000 தமிழ்த் தட்டச்சுகளும் இருந்து வந்தன. 1977 முதல் முனைப்புத் திட்டம் செயற்படுத்தப்படத் தொடங்கியதற்கு முன்பு வரை 767 தமிழ்த் தட்டச்சுகள் மட்டுமே அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. முனைப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்ட பின்னர் 1981-82-ல் 1,049 தமிழ்தட்டச்சுகள், 1982-83-ல் 910 தமிழ் தட்டச்சுகள், 1983 ஏப்ரல் முதல் இதுவரை 961 தட்டச்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆட்சிமொழிக் கருத்தரங்கில் எடுத்துச் சொல்லப்பட்டதன் விளைவாக 1984 மார்ச் இறுதிக்குள் இன்னும் 250 தமிழ்த் தட்டச்சுகள் அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்படவுள்ளன. 1984-85-ஆம் ஆண்டில் 5,000 ஆங்கிலத் தட்டச்சுகளை மாற்றி அவற்றுக்குப் பதில் தமிழ்த் தட்டச்சுகள் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு செய்யும்போது அலுவலகங்களில் முக்கால் பங்கு தமிழ்த் தட்டச்சுகளும் கால் பங்கு ஆங்கிலத் தட்டச்சுகளும் இருக்கும் நிலை ஏற்படும். அதன் பிறகு மாற்றம் செய்ய வேண்டிய ஆங்கிலத் தட்டச்சுகள் மிகச் சிலவே இருக்கும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து துறைகளிலும் முற்றும் தமிழிலேயே எழுத வேண்டுமெனவும் அவ்வாறு எழுதாத நிலை காணப்படின் அவ்வவ்த்துறைத் தலைவர்களே அதற்கு பொறுப்பேற்க நேரிடுமெனவும் அறிவித்து ஆட்சிமொழி நிறைவேற்றத்தை ஊக்குவித்துள்ளார்கள். இது அரசின் சார்பிலே எடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு நடவடிக்கைகளாகும்.



தொழில் கல்வியைச் சொல்லித் தருகின்ற பகுதி நேர ஆசிரியர்களுக்கு ரூ. 150 நாம் தந்து வருகிறோம். அவர்கள் அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டு வருகிறார்கள். திரு. வி. சி. குழந்தைசாமி குழுவிலேயும் அவர்கள் அதை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதை அவர்களுக்கு அதிகப்படுத்துகின்ற கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலே தக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஊக்க ஊதியம் வாங்கிக் கொண்டு வந்த ஆசிரியர்கள் கல்வித் துறையிலே மட்டும் இருந்து வந்தார்கள். பிற துறைகளிலே இருப்பவர்களும் அதைக் கேட்க ஆரம்பித்தார்கள். கல்வித் துறையிலே ஒரு மேல் படிப்புக்காக ஊக்க ஊதியம் பெற்று வந்தார்கள். ஆனால் அந்தத் திட்டத்தை விரிவு படுத்துகின்ற பொழுது இந்த அரசு என்ன முடிவு எடுத்திருக்கின்றது என்றால் இரண்டு ஊக்க ஊதிய உயர்வுக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட தொகை தந்து விடலாம் என்று முடிவு எடுத்து அதை நடைமுறைப் படுத்தி இருக்கிறார்கள. அதுவும் கல்வித் துறைக்குப் பொருந்துகின்ற ஒரு நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த நடவடிக்கையை அமுல் நடத்தும் போது 5-9-1983க்கு முன்னாலே பட்டம் பெற்று அப்படி அவர்கள் அந்த ஊக்க ஊதிய உயர்வைப் பெறாமல் இருப்பார்களானால் அவர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட தொகை தரும் திட்டம்தான் அமுலாகும் என்று இருந்தது. அந்த ஆசிரியர்களுக்கு 5-9-1983-க்கு முன்னால் பட்டம் பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு தர வேண்டுமென்று கேட்டு வந்தார்கள். இன்றைக்கு அரசு அதை ஏற்றுக் கொண்டு அதற்கு முன்னாலே படித்து பட்டம் பெற்றவர்களுக்கு முன்பு இருந்தபடி ஊக்க ஊதிய உயர்வு வழங்கும் என்ற அந்த மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இரவு 7-20).

இங்கே பல்கலைக் கழகத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். துணைவேந்தர் அவர்களுக்கும் எங்களுக்கும் ஏதோ கருத்துவேறுபாடு இருப்பதைப் போல சொன்னார்கள். அதெல்லாம் தவறான நோக்கம் என்பதை நான் ஆரம்பத்திலேயே எடுத்துச்சொன்னேன். இன்றைக்கும் அரசும், துணைவேந்தரும் சேர்ந்து அவர்கள் தருகிற ஒத்துழைப்பு அடிப்படையிலும், நாம் தருகிற ஆதரவின அடிப்படையிலும பல்கலைக் கழகத்தில் பல்வேறு நடைமுறைகளைப் கொண்டு வந்து, சீர் திருத்தங்களை கொண்டு வந்து அதைச் சிறந்த முறையில் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் நாம் முயன்று வருகிறோம். நேற்றைக்கு எனக்கு ஒரு பெட்டிஷன் வந்தது. நா. சங்கரன் என்று ஒருவர் எழுதியிருந்தார்கள். அது பி.ஏ. லிட்டரேச்சரைப்பற்றி, அதற்கு வைக்கப்பட்டிருக்கிற புத்தகத்தைப் பற்றி எழுதப்பட்டிருந்தது. விளக்கமாக அதை எழுதி

இருந்தார்கள். அந்தப் புத்தக்கத்தின் பெயர் கமலா மார்க் கண்டேயா எழுதிய 'டூ வர்ஜீன்ஸ்' என்ற ஆங்கில புத்தகம். அதிலே பல பகுதிகளை எடுத்துப் போட்டு இவ்வளவு ஆபாச மான பகுதிகள் உள்ள ஒரு புத்தகத்தை எப்படி வைத்திருக்கிறார் கள் என்று அவர்கள் எழுதி இருந்தார்கள். நான் கூட அதைப் படித்தபோது அடுத்த ஆண்டிற்கான புத்தகம் போல இருக்கிறது; ஆகவே இதை தடுத்து நிறுத்தி விட வேண்டுமென்று நான் வி.சி. அவர்களுக்கும் போன் செய்து கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், எனக்கும் அந்தப் பெட்டிஷன் வந்திருக்கிறது, நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார் கள். அந்தப் புத்தகம் ஒரு ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகிற புத்தகம், அதிலே சொல்லப்படுகிற கருத்துக்களை அந்தப் புத்தகத்தை நான் பார்க்கிற போது இவ்வளவு மோச மான ஒரு புத்தகத்தை ஒரு ஆண்டு காலம நம்முடைய கல்லூரி களிலே வைக்க நேரிட்டதே என்பதை நினைத்து நான் உள்ள படியே வருத்தப்படுகிறேன். அது ஒரு புத்தகக் கடையில் இருந் தாலும் கூட நம்முடைய காவல் துறையினர் ஆபாசப் புத்தகச் சட்டத்தின்படி கைது செய்யக்கூடிய அளவிற்கு அந்தப் புத்தகம் இருக்கிறது என்பதைச் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாணவர்கள் அதைப்பற்றி சொல்லவில்லை; ஆசிரியர்கள் அதைப் பற்றி சொல்லவில்லை; இது எங்காவது பெற்றோர் களின் கவனத்திற்கு வந்து அவர்களும் அதைப் பற்றி சொல்ல வில்லை; பத்திரிகைகளின் கவனத்திற்கும் வராமல் இருந்தது என் பது எனக்கு மிகப் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. இன்றைக்கு அந்தப் புத்தகத்தை கையிலே வைத்துக்கொண்டிருப் பதற்கே நான் மிகவும் கூசப்படுகிறேன். நான் மாண்புமிகு உமாநாத் அவர்களிடம் அந்தப் புத்தகத்தைக் காட்டினேன். இவ் வளவு மோசமான புத்தகத்தை எப்படி ஒராண்டு காலம் வைத் திருந்தார்கள்.; ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கின்ற கல்லூரிகளிலும் கூட இது இருந்து வந்தது என்கிறதைப் பார்க் கிறபோது, இதனாலே ஏற்பட்ட சேதத்தை நாங்கள் நிவர்த்திக்க வேண்டுமென்றால் 10 ஆண்டுக்காலம் பெரிய முயற்சியை எடுத் துக் கொள்ள வேண்டுமென்ற நிலைமை தான் இன்றைக்கு இருக் கிறது. சம்பந்தப்பட்ட பேராசிரியர் இதற்காக வெட்கி தலை குனிய வேண்டு மென்பதை சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது ரொம்பவும் சீரியசானது. நான் அதைப் படித்துப்பார்த்தேன். எனக்கு ஆத்திரம் பொங்கி புத்தகத்தை எரிக்கிற அளவு கோபம் வந்தது. அமைச்சர் சொனனது போலீஸ் அரெஸ்ட் பண்ணுவார் களென்று; அந்த அளவிற்கு மாணவ, மாணவியர்களுடைய பால் உணர்ச்சியை வேண்டுமென்றே தூண்டிவிடுகிற அளவில் அதை அவர்கள் படித்தால் மிகவும் கெட்ட வழிகளில் செல்லத் தக்க அளவில் இருக்கிறது. ஆகவே நான் சொல்வது என்ன



வென்றால், போலீஸ் அரெஸ்ட் மட்டுமல்ல, அப்படிப்பட்ட மோசு கரமான புத்தகத்தை எழுதியவரை கைது செய்வது மட்டுமல்லா மல், அதைக் கல்லூரிகளில் இருக்க பிரஸ்க்ரைப் செய்து, அந்த ஆண்டு பாடமாக நடத்தப்படுவதற்கு பொறுப்பான அதிகாரியோ அல்லது புரபசரோ யாராக இருந்தாலும் 'ஆக்ஸ் ஆஃப் ஆண்டி-சோசியல், எக்ஸ்பெல்' பண்ண வேண்டுமென்று சொல் கிறேன். மற்றவர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும். அதுதான் இதற்கு வழி. துணைத் தலைவர் அவர்களே நீங்கள் அதைப் பார்த்தால் என்னைவிட கோபப்படுவீர்கள். குஸ்திக்கே போவீர்கள் என்று சொல்கிறேன். I am so angry. It is most atrocious. ஆகவே தயவுசெய்து நீங்கள் வருத்தப் பட்டால் போதாது. Whoever has prescribed and whoever has tolerated. அவர்கள் மேல் ஆக்ஷன் எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுபோல பேசி மேலும் அந்தப் புத்தக்கத்திற்கு அதிகமான விளம்பரம் ஆகிவிடக் கூடாது.

திரு. ரா. உமாநாத்: விளம்பரம் என்கிற பிரச்சினை இல்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத்தலைவரவர்களே நானே இதைப் பேசுவதற்குக் காரணம் இதை நான் சாதாரண ஒன்றாக கருதவில்லை என்பது மட்டுமல்ல, பல் கலைக் கழகப் பேராசிரியர்களுக்கு இருக்கிற சமுதாயப் பொறுப்பை அவர்கள் மறந்து இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். சமுதாயத்தை அழிப்பது என்பது மிக மிக சாதாரணம். இது சம்பந்தப்பட்ட ஆசிரியர் களுக்கும், பேராசிரியர்களுக்கும் சமுதாயப் பார்வை இல்லை யென்ற பெருங்குறையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான இங்கே பதிலுரை ஆரம்பித்த நேரத்தில் நம்முடைய கல்வியிலே இருக்கிற மிக முக்கியமான குறைபாடு என்று நான் சொன்னது படிக்கிறவர்களுக்கு நாம் சமுதாயப் பார்வையைத் தரவில்லை. சமுதாயக் கடமையை நாம் சொல்லித்தரவில்லை, சமுதாயப் பொறுப்பை நாம் ஊட்டவில்லை என்று நான் சொன்னதை நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தபோது அதை ஒரு சாதாரணமாகக் கூட எடுத்திருக்கலாம். ஆனால் இந்தப் புத்தகத்தை நாம் பார்க்கிறபோது எந்த அளவிற்கு படித்தவர்களுக்கு இந்தச் சமு தாயம் பற்றிய அக்கறை இல்லாத தன்மை இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

ஆகவே, இந்தப் புத்தக்கத்தை வைத்ததன் மூலம் பல்கலைக் கழகத்திற்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்குமே ஒரு கேவலமான தன்மை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது பாடப் புத்தகங்களை மாணவர்களுக்கு குறிக்கின்ற நேரத்தில் அதனாலே சமுதாயத்திற்கு என்ன பயன், அவர்களை நல்வாழ்வுபடுத்துமா என்ற அளவிற்கு நல்ல புத்தகங்களை

வைக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலம் நான் அந்த ஆசிரியர்ப் பெருமக்களை கேட்டுக் கொள்கிறேன். சம்பந்தப் பட்டவர்களைக்கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய பெரியதவறை எப்படி செய்து இருக்கிறார்கள் என்பதுதான் இன்றைக்கு நாம் தெரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. ஆகவே படித்தவர்கள், பேராசிரியர்கள் இத்தகைய பெரிய தவறை, சாதாரணக் கூலி வேலை செய்கிறவர்கள் கூட செய்யாத ஒரு தவறை, இவ்வளவு ரூபாய் சம்பளத்தை வாங்கிக்கொண்டு இந்தச் சமுதாயத்திற்குச் செய்து இருக்கிறார்கள் என்பதை வேதனை யோடு கூறிக் கொள்கிறேன். ஆனால் இதே நேரத்தில் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புவது, இது ஏற்படுவதற்குக் காரணம் அவர்கள் பெற்று இருக்கிற படிப்பு, அவர்கள் பெற்று இருக்கிற கல்வி, அதிலே இருக்கும் முக்கியமான குறைபாடு என் பதைச் சொல்லி, இனி எந்த நேரத்தில் எந்தப் பாடத்திற்கு எந்த பாடப்புத்தகத்தை வைத்தாலும் அது குழந்தைகளுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்வதாக இருக்க வேண்டும், சமுதாயப் பொறுப்பை ஊட்டுவதாக இருக்க வேண்டும். சமுதாயப் ஒருமைப் பாட்டுக் கருத்தை சொல்வதாக இருக்கவேண்டும். நாட்டின் பக்தி உணர்வை ஊட்டுவதாக இருக்க வேண்டும். தேச சீரழிவு ஏற்படுத்துகின்ற அளவிற்கு சமுதாய் விரோத கருத்துக் களைச் சொல்கிற அளவிற்கு புத்தங்ககளை வைக்கக் கூடாது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

காரணம், பல்கலைக் கழகம் தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனம். அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு பாடத்திலும் அந்தப் பேராசிரியர்கள் சொல்வது தான் முடிவாக இருக்க வேண் டும் என்ற நியதியை உணர்ந்து தான் நான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன்.

நாம் எதைச் செய்தாலும், அது சமுதாயத்திற்கு நல்லது பயக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் குறைந்தது தீமை பயக்காது இருக்க வேண்டும் என்பதில் நாம் மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : அந்தப் புத்தகம் வித்ட்ரா செய்யப் பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணை வேந்தர் அவர்களுக்கும். எனக்கு பெட்டிஷன் வந்ததுபோல் அவர்களுக்கும் வந்தபிறகுதான் தெரியும். துணை வேந்தர் அவர்கள் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். நானும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் சிண்டிகேட் உறுப்பினராக இருந்த அந்தச்சென்னை பல்கலைக்கழகத்திலேதான் இது வைக்கப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு).





திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, நான் சிண்டிகேட் உறுப்பினராக இருந்தாலும், ப்ரோ சான்சலர் கல்வி யமைச்சர் அவர்கள்தா அப்படிப்பட்ட தவறு எங்கே நடை பெற்று இருந்தாலும் அதைக் கண்டிக்க நாம் எல்லோரும் ஒன்றாகத்தான் இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் அவர்களின் கவனத்திற்கு இது கொண்டு வரப்பட்டு இருப்பதால், நிச்சயம் அதைத் திரும்பப் பெறுவார்கள் என்பது மட்டுமல்ல, சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கையை அவர்கள் எடுப்பார்கள் என்றும் நான் சொல்லிக்கொள்கிறேன். (குறுக் கீடு).

ஒரு முக்கியமான செய்தி. ஒவ்வொரு தடவையும் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி தேர்வுக்கான முடிவுகள் வெளியிடுகின்ற நேரத்தில் உடனடியாக ஊழல், ஊழல் என்று சொல்கிற வழக்கத்தை நாம் பார்த்து வருகிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால் நாம் மார்க்குகளை வைத்து மட்டும் தேர்ந்தெடுப்பது இல்லை. அவர்களுக்கு நேர்முகத் தேர்வு என்று வைத்து இருக்கிறோம். அதற்காக 7–8 கமிட்டிகளைப் போட்டு, அவர்கள் 1 மாதம் 1½ மாதம் மாநிலம் முழுவதும் போய் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைப் பேட்டி கண்டு அதன் பிறகு தேர்ந்தெடுக் கிறார்கள். ஆனால் நேர்முகப் பேட்டி என்று வருகிறபோது, அந்த மார்கின் அடிப்படையில் நாம் தேர்ந்தெடுக்கிற போது ஒரு வித்தியாசம் ஏற்படும் என்பதை உணர்ந்துதான் நாம் இதைக்கொண்டு வந்து இருக்கிறோம். ஆனால் இந்தத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது, இப்படி ஏற்படுகின்ற வித்தியாசத்தை வைத்துக்கொண்டு, அதாவது 90 மார்க் ஒரு மாணவன் வாங்கி இருப்பான், அவனுக்கு இடம் கிடைத்து இருக்காது; ஆனால் 88 மார்க்கு வாங்கியவனுக்கு இடம் கிடைத்து இருக்கும்; இன்டர்வியூவிலே அவன் நான்கு மார்க் முதல் மாணவனைவிடக் கூடுதலாக வாங்கியிருக்கலாம். அதனால் கிடைத்து இருக்கும். அவனும் நேர்முகத்தேர்விலே நல்லமுறையில் விடைகளைத் தந்து இருப்பான். ஆகவே. இன்டர்வியூ என்று வைத்து இருப்பதால் இந்த வித்தியாசம் ஏற்படுவதற்கு வழி இருக்கிறது. அந்த வழியை நாம் வைத்துக்கொண்டு இப்படி வந்து விட்டதே, இப்படி வந்து விட்டதே என்றால் அப்படி வரத்தான் செய்யும். இன்டர்வியூ வில் அந்த மாணவன் நல்லமுறையில் பதில் அளித்து இருப்பான் என்பதை நாம் எவ்வளவு தான் சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினர்களை திருப்திபடுத்த இயலவில்லை. இது ஒருபுறம், மற்றொருபுறத்தில் இந்தக் கருத்துக்களை நாம் வெளியிடுகிறபோது மக்களிடத்தில் ஒரு அதிருப்தி வருகிறது. இது எல்லாவற்றிற்கும் மேலாக படித்த இளைஞர்கள் மத்தியில் ஒரு வெறுப்பும், அதிருப்தியும் உருவாகிறது என்பதை இந்த

அரசு நன்கு உணருகிறது. ஆகவே இளைஞர்கள் மத்தியில் இத்தகைய ஒரு வெறுப்பும் அதிருப்தியும் உருவாகின்ற நேரத்தில் அவர்கள் இந்தச் சமுதாயத்தின் மீதே வெறுப்பு அடைகின்ற னர். இது மிகப்பெரிய தீங்கை இழைக்கும் அளவிற்குச் சமுதாயப் பிரச்னையாக மாறி விடுகிறது.

(இரவு 7–30.)

ஆக இதுபற்றிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தபோது, குறிப்பாக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத் தில் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி தந்தார்கள். நிச்சயமாக இந்தமுறை மாற்றி அமைக் கப்படும் என்று சொன்னார்கள் அது பற்றி என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு இதுவரை கீழ்க்கண்ட முறையை பயுன்படுத்தி வருகிறோம்.—

(1) 12-வது வகுப்பில் சம்பந்தப்பட்ட பாடங்களில் வாங்கிய மதிப்பெண்களுக்கு 200 எண்கள்.

(2) நேர்முகத் தேர்விற்கு 30 எண்கள்.

நேர்முகத் தேர்வுக்கு முன்பு 75 மார்க் இருந்தது. அப் போது தவறு அதிகமாக நடைபெற வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் இப்போது அதை 30 ஆகக் குறைத்திருக்கிறோம். இனிமேல் இது நடைமுறைக்கு வரும். ஆக 230 எண்களுக்கு, மாணவ மாணவியர் பெறும் எண்களைக் கொண்டு அதன் அடிப்படையில் விண்ணப்பதாரர்களை வரிசைப்படுத்தி மாண வர்கள் எடுக்கப்படுகின்றனர்.

ஆரம்பக் காலங்களில் விண்ணப்பதாரர்கள் மிகக் குறை வாக இருந்ததால் ஒரே ஒரு குழு எல்லோரையும் நேர்காணல் முறையில் பரிசீலித்து அவர்களுக்கு நேர்முகத் தேர்விற்கு மார்க்குகள் கொடுக்க முடிந்தது. விண்ணப்பதாரர்களின் எண் ணிக்கை வளர வளர, இப்போது பல குழுக்கள் நேர்முகத் தேர்வு நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. கடந்த ஆண்டு பொறியியல் துறையில் 6 குழுக்களும், ஒவ்வொரு குழுவிலும் 3 உறுப்பினர்களும் இருந்தார்கள். மருத்துவத் துறைக்கு இந்த எண்ணிக்கை இன்னும் மிக அதிகமாக இருந்தது.

பொறியியல் போன்ற ஒரே துறை மாணவர் சேர்ப்புக்குப் பல குழுக்கள் நேர்முகத் தேர்வு நடத்துவதால் சமமான அளவைப் பயன்படுத்துவதில் சிரமம் ஏற்படுகிறது. பல உறுப்பினர்கள் அதில் பங்கு கொள்ள வேண்டியிருப்பதால் ஆங்காங்கு சில தவறுகள் நடக்கக்கூடும் என்ற ஐயமும், தவறுகள் நடப்பதற்கான சாத்தியக் கூறுகளும் உருவாகின்றன.





பொதுவாகவே நாளாவட்டத்தில் நேர்முகத் தேர்வு முறை, பலவித கருத்து வேறுபாடுகளுக்கும, விமர்சனங்களுக்கும் ஆளாகிக்கொண்டு வருகிறது. மாணவர்கள், பெற்றோர் கள் ஆகியவர்களிடேயே இந்தமுறை பற்றிய நம்பிக்கையிலும் சற்றுத் தளர்ச்சி ஏற்பட்டு வருவதை நாம் காண முடிகிறது. தொழில் படிப்புப் பாடங்களுக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் நேர்முகத் தேர்வு முறையை இப்போது மற்ற மாநிலங்கள், பயன்படுத்துவதில்லை.

இதுவரை நாம் மேலே பார்த்த காரணங்களை எண்ணும் பொழுது, பொறியியல், மருத்துவம் போன்ற தொழில் படிப்புத் துறைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு இதுவரை நாம் பயன்படுத்தி வந்த முறையினின்றும் சில மாற்றங் களைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இதுதான் முக்கியமானது, இப்போது நேர்முகத் தேர்வை நாம் எடுத்துவிடுவதாக இருந்தால் உடனே சில அரசியல் கட்சிகள் எதிர்ப்பதற்குத் தயாராக இருக்கின்றன. அவர்கள் நாளையே தங்கள் எதிர்ப்பைக் காட்டக்கூடும். என்ன சொல்வார்கள் என்றால் பின்தங்கிய மாணவர்கள் பாதிக்கப் படுவார்கள் என்று சொல்வார்கள். ஆகவே இந்த அறிக்கை யைப் படித்துக்ககாட்ட விரும்புகிறேன்.

இரண்டாவதாக கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்ற மாவணர் சேர்ப்பின் அடிப்படையில் இடம் பெற்ற மாணவர் களின் பட்டியலை வைத்துக்கொண்டு ஆராய்ந்து பார்க்கும் பொழுது. ஒரு முக்கியமான உண்மையும் புலப்படுகிறது. பொதுவாக 12-வது வகுப்பு தேர்வில் உயர்ந்த மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மட்டுமே இடம் பெற முடிகிறது. பொறியியல் படிப்புக்குத் தேவையான கணிதம், பௌதீகம், மற்றும் வேதியியல் என்ற மூன்று பாடங்களில் மாணவர்கள் வாங்கிய வரைகளில் அடிப்படையில் மட்டும் மாணவர்களைச் சேர்ப்பதாக வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தபொழுது 1983-ல் பொறியியல் கல்லூரிகளுக்கு அரசு தேர்ந்தெடுத்த பட்டியலீல் 100-க்கு 87 பேர் பொதுவாக இருக்கிறார்கள். நூற்றுக்கு 13 பேர் மட்டுமே மாறுபடுகிறார்கள். மற்ற ஆண்டுகளிலும் இப்படித்தான் இருக்கக்கூடும்.

நேர்முகப் பேட்டி இல்லை என்று மார்க் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதற்கும் நேர்முகப் பேட்டியில் தேர்ந்தெடுக்கப்படாமல் இருந்தால் அதற்கும் வித்தியாசம் இருக்கிறதா என்று பார்த்தால் 87 சதவீதம் பொதுவாகவே இருந்தார்கள். ஆக, நேர்முகப் பேட்டி இல்லை எனறாலும் 87 சதவீதம் வந்துவிடுகிறார்கள். வித்தியாசம், அதாவது அதிலிருந்து மாறுபடுகிறவர்கள் 13 சதவீதம்தான் வருகிறது.

மூன்றாவதாக, சமுதாய நீதி என்ற அப்படையில் ஆய்ந்தாலும், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் போன்றோர் பெறும் இடங்களின் எண்ணிக்கை, நேர்முகத் தேர்வில் அடிப்படையில் செய்யப்படும் தேர்வில் அவர்கள் பெறும் எண்ணிக்கையிலிருந்து அவ்வளவாக மாறுபடவில்லை. எனவே, நேர்முகத் தேர்வின் மூலம் சமுதாய நீதி என்ற அளவிலும் உபரியாக எதுவும் பெறப்படுவதாகத் தெரியவில்லை.

மேற்கூறிய அனைத்தையும் எண்ணும்போது நேர்முகத் தேர்வு முறையை இந்தக் காலக்கட்டத்தில் விட்டுவிட்டு, முழுவதும் ஐயத்திற்கு இடம் இல்லாததும், ஒரே மாதிரியான அளவுகோலைப் பயன்படுத்தக்கூடியதுமான ஒரு முறையைக் கையாளுவது முறையென்று படுகிறது.

தொழில் படிப்பு கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்கள் பொறியியல் ஆயின், கணிதம், பௌதீகம் மற்றும் வேதியியல் படித்து இருக்க வேண்டும். மருத்துவமாயின், தாவரயியல், பௌதீகம் மற்றும் வேதியியல் படித்திருக்க வேண்டும். பெரும்பாலும் நமது மாநிலத்தில் நடத்தப்படும் 12-வது வகுப்புத் தேர்வுகளில் இந்தப் பாடங்களை எடுத்துப் படிக்கும் மாணவ மணவியரே விண்ணப்பதாரர்களாக இருப்பதால், இந்தப் பாடங்களில் பெறும் வரைகளை முன்போலவே ஒரு முக்கியமான அளவுகோலாக வைத்துக்கொள்ளலாம்.

நேர்முகத் தேர்வுக்குப் பதிலாக ஒரு நுழைவுத் தேர்வு முறையைப் பயன்படுத்துவது முறை என்று தோன்றுகிறது. இந்தத் தேர்வு மாணவர்களுடைய இயற்கையான திறன், ஈடுபாடு அடிப்படையாகத் தேவைப்படும் பாடங்களில் பெற்ற கல்வி அறிவு ஆகியவற்றை நிர்ணயிப்பதாக இருக்க வேண்டும். இந்தத் தேர்வு பெரும்பாலும் "Obejective Test" என்ற பிரிவின் கீழ் வருவதாக அமையும். அதன்மூலம் விடைத்தாளைத் திருத்துவதிலும், ஆளுக்கு ஆள் வேறுபாடு இருக்காது. டிக் பண்ணுவது என்று சொல்வது—1, 2 போடுவது. இதை ஆளை வைத்துத் தான் திருத்தவேண்டுமென்பது அல்ல. கம்ப்யூட்டரிலே போட்டால் ஒரே நாளிலே அது திருத்திக்கூட வந்துவிடும். அதிலே தவறு ஏற்படுவதற்கு வழி இல்லாமலே செய்துவிடலாம். இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட முறையைப் பயன்படுத்த முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

| | | எண்கள் |
|---|---|---|
| கணிதம் அல்லது தாவரயியல் | .. .. | 100 |
| பௌதீகம் | .. .. .. .. .. | 50 |
| வேதியியல் | .. .. .. .. .. | 50 |
| நுழைவுத் தேர்வு (Aptitude Test) | .. .. | 50 |

ஆக 250 மார்க்குகளுக்கு மாணவ மாணவியர் வாங்குகின்ற மொத்த அடிப்படையில் இப்போது இருக்கும் வகுப்புவாரி ஒதுக்கீட்டுப்படி மாணவ மாணவியர்கள் சேர்க்கப்படுவர். 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், 18 சதவீதம் ஆதிதிராவிடர்கள் என்று





வைத்துக்கொண்டு, பிற்படுத்தப்பட்டவர்கள் என்று வருகின்றபோது அந்த மார்க்குகளின் அடிப்படையில், வரிசையாக தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்கள். ஆதி திராவிடர்கள் 18 சதவிகிதம் என்று வருகின்றபோது, இந்த மார்க்குகளின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்கள். 'பொது' என்று வருகிறபோது, எல்லோரும் வரிசையாக இதிலே பிற்படுத்தப் பட்டவர்கள் வந்தாலும் சரி, தாழ்த்தப்பட்டவர்கள் வந்தாலும் சரி, உயர் ஜாதி வந்தாலும் சரி, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்கள். இது கூடுமான வரையில் மெஷினிலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறையில் இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது.

நுழைவுத் தேர்வு நடத்துவதன் தலைமைப் பொறுப்பு அண்ணா பல்கலைக்கழகத்திடம் தரப்படும். அந்த அடிப் படையில் இந்த புதிய முறையை நாம் கொண்டுவருவதன் மூலம் ஊழல் நடந்திருந்தாலும் இருக்கலாம் என்ற ஐயத்திற்கு இடம் இல்லாமலும், புகார்களுக்கு இடம் இல்லாமலும், அதே நேரத்தில் அரசின் மீது ஒரு தவறான அபிப்பிராயம் ஏற்படாத வகையிலே இந்தத் திட்டத்தை நாம் கொண்டுவந்திருக்கிறோம். இது பொறியியல் கல்வி மாணவர்களுக்கு மட்டும் அல்லாது, மருத்துவக் கல்லூரி, வேளாண்மை பல்கலைக் கழகம், கால் நடைக் கல்லூரி போன்ற அந்த அமைப்புகளுக்கும் இது விரிவு படுத்தப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். இந்த நல்ல திட்டத்தை முழு மனதோடு ஆதரித்து இந்த ஊழலுக்கு வழி இல்லாமல், தவறுகளுக்கு வழி இல்லாமல், ஐயத்திற்கு வழி இல்லாமல், இந்த நல்ல திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்காக அனைவரும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்வி மானியத்தின் மீது நான் இங்கே பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சில பிரச்னைகளுக்குப் பதில் தரப் பட்டிருக்கிறது. சில கேள்விகளுக்கு அல்லது கருத்துக்களுக்குச் சொல்லாமல் கூட இருந்திருக்கலாம். இருந்தாலும் அவைகளை எல்லாம் எங்களுடைய கவனத்தில் எடுத்துக்கொண்டு, தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது நான் பேசிய பல்வேறு கருத்துக்களின் மூலம் தமிழ்நாட்டின் கல்வித்துறை என்பது தமிழ்ச் சமுதாயத்தினுடைய எதிர்காலத்திற்கு அடிப்படை மாறுதலுக்கு, சமூகப் பொருளாதார அடிப்படை மாறுதலுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில் விழிப்போடும், கவனத்தோடும், அக்கறையோடும் செயல்படுகிறது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்வதன் மூலம், நம்முடைய தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மக்களின் மீதும் நாங்கள் வைத்துக்கொண்டு இருக்கின்ற அக்கறையை நன்கு புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். ஆகவே கல்வித்துறை பொறுப்போடு நடந்து கொள்கிறது என்பது மட்டுமல்ல, மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்களும், கல்வித் துறை அமைச்சுப் பொறுப்பிலே இருக்கின்ற நானும் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட்டுக்கொண்டு வருகிறோம் என்று நல்லபடியாகச்

சொல்வதன் மூலம், யாரும் ராஜிநாமா செய்யத் தேவையில்லை என்பதை மட்டுமல்ல, ஒரு வேளை இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்யாமல் இருந்தவர்கள் வேண்டுமானால் இனிமேல் இந்தப் பதவிகளுக்கு வந்து இதைப்போன்ற நிலைமைகளுக்கு ஆளாகமுடியாது என்ற நிலைமையில் தங்களுடைய ஆசையை அவர்கள் தெரிவிக்கலாமே தவிர, ராஜிநாமா செய்யவேண்டிய நிலைமை எங்களுக்கு இல்லை. இன்னும் சொல்லவேண்டுமானால், மக்களிடையே எங்களுடைய செல்வாக்கு அதிகரித்துக்கொண்டுதான் வருகிறது. மக்களுடைய செல்வாக்கைக் கண்டு பயந்து அதற்காக வேறு நடவடிக்கைகள் என்கிற நிலை வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கலாமே தவிர, எங்களுக்கு இல்லை என்று இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தேர்தலைச் சந்திக்கவேண்டும். தேர்தலிலே மக்களுடைய தீர்ப்பைப் பெறவேண்டும். மக்களுடைய ஆதரவைத் திரட்ட வேண்டும். மக்களுடைய ஆதரவை அறிந்து கொள்ளவேண்டும். அந்த முறையில் யாருக்கு மக்களிடத்திலே ஆதரவு இருக்கிறதோ, அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கவேண்டுமே தவிர, ஒரு கட்சியினுடைய ஆசையை நிறைவேற்றுகின்ற விதத்திலோ, அல்லது ஒரு உறுப்பினருடைய ஆசையை நிறைவேற்றுகின்ற விதத்திலோ யாரும் பதவியிலிருந்து விலகத் தேவையில்லை. விலக வேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ரிஜிஸ்ட்ராரைப் பொறுத்தவரையில், நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை வாபஸ் வாங்கவில்லை என்பது மட்டுமல்ல, அது தொடர்ந்து நடைபெறும். யாராக இருந்தாலும்—அந்த நடவடிக்கையை நாம் நிறுத்தப்போவது இல்லை. எங்கள் மீதே நாங்கள் விசாரணை வைத்து, காலையிலே அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றோம். ஆக இந்த வகையிலே இந்த அரசைப் பொறுத்தவரையில், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று கிடையாது. ஆகவே விசாரணை என்றும் தொடர்ந்து நடப்பதற்கான முயற்சிகளை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்.

**திரு ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, 2, 3 செஷனுக்கு முன்னால் விஜிலென்சுக்கு ரெபர் பண்ணப்போவதாக ஹவுஸ்-லே அஷ்யூரன்ஸ் கொடுத்திருக்கிறது. ஆகவே அது எந்த ஸ்டேஜ்-லே இருக்கிறது? என்ன பண்ணினார்கள் என்று சொல்லவேண்டும்.

(இரவு 7-40)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுதான் தடைப் படுத்தப்பட்டு இருக்கிறது கோர்ட்டின் மூலமாக. நான் அதைத் தான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன்





அவர்களுடைய நண்பர் செல்வராசு என்பவர் திராவிட முன் னேற்றக்கழகத்திற்கு அனுதாபியாக இருக்கக்கூடிய ஒரு நண்பர், எங்களுடைய முதல் அமைச்சர் கையாலே பரிசுகள் வாங்குவதைக் கேவலமாக நினைக்கின்ற அளவிற்கு திராவிட முன்னேற்றக்கழகத்திலே பற்று உடைய நண்பர் இன்றைக்கு அதை எதிர்த்து தடை வாங்கியிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்கு இதிலே இருக்கின்ற ஆர்வத்தைப் போலவே நமக்கும் இதிலே அக்கறை யிருக்கிறது. அதற்காக தக்க நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுப்பார்கள். பல்கலைக்கழகமும் ஆட்சி மன்றக் குழுவும் அது பற்றிய கருத்தைச் செலுத்தும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே தவறு யார் செய்து இருந் தாலும், அதை ஆதரிக்கின்ற அளவில் நாம் இல்லை, தவறு செய்கின்றபோது அந்தத் தவறைக் கண்டுபிடித்து, அதற்குத் தக்க தண்டனை தரவேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆகவே இதிலே அரசு எந்த கருத்து மாற்றமும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன். இந்தக் கல்வித்துறை மானியத்தின் மீது நீங்கள் அளித்த கருத்துக்களுக்கும், ஒத்துழைப்புக்கும், ஆதர விற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அந்த அடிப்படையில் வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப்பெற்று, இந்த மானியத்தை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. ரா. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள், மெ. ஆண்டி அம்பலம், சு. பாலன், பொ. உத்திராபதி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,02,34,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

**மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.**

[1984 மார்ச் 15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16—3—1984 காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7·41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

123. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1980-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் I/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

124. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1981-ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம். I/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

#### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

50. கோரிக்கை எண். 17—தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு—1984–85 (தமிழ், ஆங்கிலம்)

51. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி பற்றிய செயல் முறைத் திட்டம்—1984–85 (ஆங்கிலம்).

52. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (மூன்றாம் பட்டியல்).

## இணைப்பு

(109 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண். 17—கல்வி.

#### I. தோற்றுவாய்.

#### கல்விச் செலவும் மாநில வரவுசெலவுத் திட்டமும்.

கல்விக்காக 1984-85 ஆம் ஆண்டில் "மானியக் கோரிக்கை 17—கல்வி" ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 402 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,946 கோடியில் 21 விழுக்காடாகும்.



1984 மார்ச் 15]

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1984-85 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:—

| | 1984-85 வரவுசெலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செல்வினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 259. அரசுப் பள்ளிகள் கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்பு செலவு. | 64 | .. | 64 |
| 265. பிற நிருவாகப் பணிகள்—மாவட்ட விவரச் சுவடிகள். | .. | 3 | 3 |
| 277. கல்வி. | | | |
| 1 தொடக்கக் கல்வி .. | 1,82,03 | 14,90 | 1,96,93 |
| 2 உயர்நிலைப் பள்ளிக் கல்வி. | 98,09 | 5,85 | 1,03,94 |
| 3 மேல்நிலைப் பள்ளிக் கல்வி. | 17,83 | 11,35 | 29,18 |
| 4 கல்லூரிக் கல்வி .. | 33,76 | 7,20 | 40,96 |
| 5 சிறப்புக் கல்வி—முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை. | 1,19 | 3,51 | 4,70 |
| 6 விளையாட்டும் இளைஞர் நலனும் மற்றும் தேசீய மாணவர் படை. | 2,75 | 1,74 | 4,49 |
| 7 தொழில் நுட்பக் கல்வி. | 11,13 | 4,07 | 15,20 |
| | 3,46,78 | 48,62 | 3,95,40 |

[1984 மார்ச் 15

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 278. கலை, பண்பாடு— | | | |
| நுண் கலைக் கல்வி .. | 37 | 14 | 51 |
| கலை, பண்பாடு ஆகிய வற்றின் மேம்பாடு. | 7 | 61 | 68 |
| தொல்பொருள் ஆராய்ச்சி. | 19 | 19 | 38 |
| ஆவணக் காப்பகமும் அருங்காட்சியகங்களும். | 52 | 12 | 64 |
| பொது நூலகங்கள் .. | 3,39 | 37 | 3,76 |
| | 4,54 | 1,43 | 5,97 |
| 279. ஏனைய அறிவியல் பணிகள் — எரி சக்தி ஆய்வு. | .. | 15 | 15 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும். | 15 | .. | 15 |
| மொத்தம்— மானியக் கோரிக்கை "17—கல்வி". | 3,52,11 | 50,23 | 4,02,34 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின்கீழ் 1984-85-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு. | | | |
| மானியக் கோரிக்கை 28. சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் .. .. | .. | 1,50 | 1,50 |



1984 மார்ச் 15]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| சமூகக் கல்வி— 99 .. | .. | 9 | 9 |
| நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங் களுக்கான மானியம். | .. | 10 | 10 |
| கோரிக்கை — 37. பொதுப்பணி— அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள். .. | 1,09 | 3 | 1,12 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் .. | 14,05 | .. | 14,05 |
| 309. உணவு-சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள் மதிப்பு .. | 40,00 | 20,00 | 60,00 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு. | | | |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற் கான மூலதனச் செலவு அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலிய வற்றுக்கான கட்டிடங் கள் .. .. | 4 | 6,12 | 6,16 |
| 677. கடன்கள்— | | | |
| தேசியக் கடன் படிப் புதவித் தொகைகள். | .. | 32 | 32 |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்கு கடன் | .. | 4 | 4 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்கு கடன். | 6 | .. | 6 |
| 767. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடன் கள் .. .. | 4,45 | .. | 4,45 |
| மொத்தம் .. | 59,69 | 26,20 | 87,89 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1984-85ல் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 490 கோடியாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின்வருவதாகும். அதாவது ஆதி திராவிடர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாண வர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு ; சீர்திருத்த பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், ஊனமுற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு ; மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவகைக் கல்விகளுக்கு ஆகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங் கள் எவற்றிலும் சேரவில்லை.

1984-85 ல் கல்விக்கான திட்டப் பணிச் செலவு.

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி ; 477. கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு ; 677. கடன் முதலியன) கல்விக்கான 1984-85 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு விவரம் வருமாறு : (" + " குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங் கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செல வினைக் குறிக்கும்).

| (1) | பொறுப் பேற்ற செல வினம். (2) | 1984-85ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செல வினங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பொதுக் கல்வி— | | | |
| 1 பள்ளிக் கல்வி (மேல் நிலைப் பள்ளிக் கல்வி உட்பட). | 32,33 + 4 | 1,34 | 33,67 + 4 |
| 2 முதியோர் கல்வி .. | 2,40 + 88 | 13 | 2,53 + 88 |
| 3 கல்லூரிக் கல்வி .. | 7,25 + 32 | 59 | 7,32 + 84 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4 விளையாட்டு-இளைஞர் நலன் | 1,46 + 92 | 3 | 1,49 + 92 |
| 5 தமிழ் வளர்ச்சி—தமிழ் கலைத் துறை. | 5 | 1 | 6 |
| 6 கட்டட வகையில் பொதுப்பணித் துறைச் செலவு. | 48 | .. | 48 |
| | 43,97 + 2,16 | 2,10 | 46,07 + 2,16 |
| தொழில் நுட்பக் கல்வி .. | 6,62 + 14 | 38 | 7,00 + 14 |
| கலைப் பணிகள் — | | | |
| கல்வித் துறை .. | 59 | 17 | 76 |
| தமிழ்க் கலைத் துறை | 75 | 6 | 81 |
| | 51,93 + 2,30 | 2,71 | 54,64 + 2,30 |

[1984 மார்ச் 15

## II பள்ளிக் கல்வி.

### (i) பொது.

1984-85 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூபாய் 402 கோடியில் பெரும் பகுதியான ரூபாய் 334 கோடி பள்ளிக் கல்விக்கே (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கப் பட்டுள்ளது. 30-9-1983 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் இருந்த பள்ளிகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | பள்ளிகளின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்.) | |
| தொடக்க நிலைப்பள்ளிகள் (1—5 வகுப்புகள்). | 28,548 | 1.16 | 48.06 |
| நடுநிலைப் பள்ளிகள் .. (1—8 அல்லது 6—8 வகுப்புகள்.) | 5,635 | 0.66 | 27.16 |
| உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள் (பொதுவாக 6—10/ — 6—12 வகுப்புகள்.) | 3,778 | 0.99 | 26.42 |
| மொத்தம் .. | 37,961 | 2.81 | 101.64 |

வகுப்புத் தொகுதி வாரியாக மாணவ/மாணவியர் எண்ணிக்கை வருமாறு : —

| வகுப்புகள். | மாணவ/ மாணவியர். |
|---|---|
| (1) | (2) |
| | (இலட்சத்தில்). |
| 1 — 5 .. .. .. .. | 68.74 |
| 6 — 8 .. .. .. .. | 21.91 |
| 9 —10 .. .. .. .. | 7.91 |
| 11 —12 .. .. .. .. | 3.08 |
| | 101.64 |

பள்ளி நிருவாக வாரியான விவரங்கள் இணைப்பில் தரப் பட்டுள்ளன.



1984 மார்ச் 15]

2. 1984-85 ஆம் ஆண்டில் 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள் ; நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 100 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள் : நடுநிலைப்பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து 150 தமிழாசிரியர் பதவிகள் : உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 பி.எட்., தர ஆசிரியர் பதவிகள் ஆகியவை ஏற்படுத்தப்படும். நடு நிலைப்பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 100 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் :

3. பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்த உள்ளூர் மக்களின் நன்கொடையையும், ஒத்துழைப்பையும் பெறும் நோக்குடன் தொடங்கி நடத்தப்பெறும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் தொடக்கக் காலம் முதல் 1983 முடிய மொத்தம் 736-ஐ பள்ளிக் கல்வித்துறை நடத்தியுள்ளது. அவற்றில் கடந்த ஐந்து ஆண்டு களில் நடந்த 201 மாநாடுகளில் பெற்ற நன்கொடையின் மதிப்பு ரூபாய் 179 இலட்சமாகும்.

### (II) தொடக்கக் கல்வி.

வரவு செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கத்தில் முதன்மையான இடத்தைத் தொடக்கக் கல்வி பெறுகிறது. கடந்த ஏழு ஆண்டு களில் புதிதாகத் தொடங்கிய தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,187 (தொடக்க நிலைப் பள்ளிகள் 697-ம் நடுநிலைப் பள்ளிகள் 490-ம்) ஆகும். பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்சத் திட்டத்தில் 16-ஆவது அம்சம் ஆகும். இந்த அம்சத்தின் கீழ் தமிழ்நாட்டின் சாதனை பெருமை தரக்கூடியதாக இருக்கிறது என்பதைப் பின் வரும் விபரங்கள் காட்டும் :—

| | வயதுத் தொகுதி 6—11. (வகுப்புகள் 1—5) | வயதுத் தொகுதி 11—14. (வகுப்புகள் 6—8) |
|---|---|---|
| அனைத்திந்தியாவிலும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1984-85 இறுதியில்) எய்தவேண்டும் எனக் குறித்துள்ள இலக்கின் படி பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் விழுக்காடு. | 95 சதவீதம். | 50 சதவீதம். |
| தமிழ்நாட்டில் 1982 — 1983-ல் சாதனை. | 96.2 சதவீதம். | 66.03 சதவீதம். |
| தமிழ்நாட்டில் 1983 — 1984-ல் சாதனை. | 97.96 சதவீதம். | 69.40 சதவீதம். |

[1984 மார்ச் 15

2. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 1983-84-ல் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை வருமாறு :

| வயதுத் தொகுதி. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்). | | |
| 6—11.. .. | 1.13 | 1.27 | 2.40 |
| 11—14.. .. | 0.72 | 0.70 | 1.42 |
| | 1.85 | 1.97 | 3.82 |

1983-84-ல் இவ்விரண்டு வயதுத் தொகுதியிலும் சேர்த்து மொத்தம் 3.82 இலட்சம் மாணவ மாணவியர் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது முன் எந்த ஆண்டிலும் இல்லாத சாதனையாகும்.

3. பள்ளிகளில் சேரும் (6—11) மாணவ மாணவியருள் தொடர்ந்து 5-ஆவது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியில் இருந்து நின்று விடுவோர் விழுக்காடு (''வியர்த்த விழுக்காடு'') 1977-78 ஆம் ஆண்டில் 40 சதவீதமாக இருந்தது, 1982-83-ல் 29 சதவீதமாகக் குறைந்து உள்ளது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் இப்பொழுது செயல்படுவதன் காரணமாக வருங்காலத்தில் இந்நிலை மேலும் சீர்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

4. குழந்தைகள் காப்பகங்கள் 4,343-ல் ஒவ்வொன்றிலும் இப்பொழுது ஒரு இளஞ் சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இளவயதிலேயே பள்ளி செல்லும் மனப்பாங்கை வளர்ப்பதாலும், சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்ப்பதாலும் இவ்விளஞ்சிறார் பள்ளிகளும் '' வியர்த்த விழுக்காட்டைக்'' குறைக்க வருங்காலத்தில் உதவும்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்—5 முதல் 9 முடிய பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு.

5. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 1—7—1982/15—9—1982 முதல் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 5 முதல் 9 முடிய உள்ள வயதுத் தொகுதியைச் சார்ந்தவர்களும் பெரும்பாலும் 1—5 வகுப்புகளில் படிப்பவர்களுமான 44 இலட்சம் குழந்தைகள் 34,100 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்களில் நாள்தோறும் உணவுபெற்று வருகின்றனர்



1984 மார்ச் 15]

இம்மையங்களில் 31,280 மையங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. மற்றவை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை, பிற்பட்டோர் நலத் துறை : நகராட்சி நிருவாகத்துறை ஆகியவற்றின் இயக்குநர்கள் மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் ஆகியோரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

6. குழந்தைகளுக்கு ஆண்டின் 365 நாட்களும் சத்துணவு வழங்கப்படுகின்றது. குறிப்பிட்ட சில விடுமுறை நாட்கள் (ஆண்டுக்கு சுமார் 20 நாட்கள்) சத்துணவு மையங்களுக்கும் விடுமுறையானாலும் அந்நாட்களுக்குரிய உணவுப் பொட்டலமும் முதல் நாளன்றே தரப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்குத் தரப்படும் உணவின் அளவு வருமாறு :

| | |
|---|---|
| அரிசி .. .. .. .. .. | 100 கிராம். |
| பருப்பு .. .. .. .. | 15 கிராம். |
| எண்ணெய் .. .. .. | 5 கிராம். |
| காய்கறிகளும் மசாலா பொருட்களும் .. | 50 கிராம். |

7. அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அந்தந்த சத்துணவு மையத்தில் வழங்குகிறது. 1983-84 ஆம் ஆண்டுக்கு கேர் நிறுவனம் அரிசி 9,800 டன்னும் எண்ணெய் 1,200 டன்னும் இலவசமாகக் தருகிறது. விறகு, காய்கறி, மசாலா பொருள்கள் முதலிய செலவினங்களுக்காக ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 11 காசு வீதம் கணக்கிட்டு தொடரும் மானியம் தரப்படுகின்றது. 500-க்கு குறைந்த மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்திற்கு மாதம் ரூபாய் 20-ம் 500-ம் அதற்கு மேலும் மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்திற்கு. ரூபாய் 30ம் சில்லறை செலவினமாக அனுமதிக்கப்படுகிறது. பள்ளி சத்துணவு மையம் ஒவ்வொன்றிலும் மாதம் ரூபாய் 150 மதிப்பூதியத்தில் சத்துணவு அமைப்பாளர் ஒருவரும், நாளைக்கு ரூபாய் 2 சம்பளத்தில் ஒரு பகுதிநேர சமையலரும் நாளைக்கு ரூபாய் 1 சம்பளத்தில் ஒரு பகுதிநேர உதவியாளரும் பணி செய்கின்றனர். உணவு பெறும் மாணவர் எண்ணிக்கை 500-க்கு மேல் இருந்தால் கூடுதலாக ஒரு சமையலாளரும் ஒரு உதவியாளரும் நியமித்துக் கொள்ளலாம்.

8. கோயம்புத்தூரில் அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியில் 1983 டிசம்பரில் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவும் கல்வியும் என்பது பற்றி யூனேஸ்கோ நிறுவனக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் அக்கருத்தரங்கில் வெகுவாகப் பாராட்டப்பெற்றது. அத்திட்டம் காரணமாக வியர்த்த விழுக்காடு குறைவது பற்றியும் குழந்தைகள் உடலும், உள்ளமும் நலம் பெற்று கல்வியில் மேலும் ஆர்வம் காட்டுவது பற்றியும் விவாதிக்கப்பட்டு பாராட்டப்பட்டது.

9. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச்
சார்ந்த நிதி ஒதுக்கமாக கல்வி மானியத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.
ரூபாய் 25 கோடியாகும். சமையலாளர் மற்றும் உதவியாளர்
சம்பளம் ; சத்துணவு அமைப்பாளர்கள் மதிப்பூதியம், தொடரும்
மானியச் செலவு முதலிய செலவினங்களுக்கு மட்டுமே இந்த
ரூபாய் 25 கோடியாகும். பள்ளி சத்துணவு மையங்களுக்கு
வழங்கும் உணவுப் பொருட்களின் விலையாக நுகர்பொருள் வாணி
பக் கழகத்துக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்கான நிதி ஒதுக்
கம் (சுமார் ரூபாய் 60 கோடி) மானியக் கோரிக்கை 35. நுகர்ப்
பொருள் வழங்கலில் '' சேர்க்கப்பட்டுள்ளது.

10. அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளாகிய செப்
டம்பர் 15-லிருந்து இத்திட்டம் இம்மாநிலத்திலுள்ள எல்லாப்
பள்ளிகளிலும் 10—15 வயது வரையுள்ள மாணவர்களுக்கும்
விரிவாக்கப்படும. அவர்களுக்கு சத்துணவு ஆண்டில் பள்ளி
நாட்கள் அனைத்திலும் வழங்கப்படும்.

இலவசட் புத்தகங்கள் கற்பலகைகள் வழங்குதல் :

11. 1—3 வகுப்புகளில் பயிலும ஏழை மாணவர்கள் 13
இலட்சம்பேர்களில் முதல் வகுப்பில் பயில்வோருக்குப் பாடப்
புத்தகங்களும், சிலேட்டும், 2—3 வகுப்புக்களில் பாடப்புத்தகங்
களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1972 73 ஆம் ஆண்டி
லிருந்து பாட நூல்கள் வழங்குவதற்கு ஆகும் செலவை தமிழ்
நாட்டுப் பாட நூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகி
றது. இதற்காக இந்நிறுவனம் இப்பொழுது ஆண்டுதோறும்
ரூபாய் 1 கோடி செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு
சிலேட்டு இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு
சுமார் ரூபாய் 7 இலட்சம் செலவிடுகிறது. 4—10 வகுப்புகளில்
பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் சுமார்
8 இலட்சம் பேர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை மூலமாக இலவசப் பாட புத்தகங்களைப் பெற்று வரு
கின்றனர்.

புத்தக வங்கிகள் :

12. ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வாங்கும்
செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும்.
1—10—1983 நிலவரப்படி. 36,553 பள்ளிகளில் இவ்வங்கிகள்
ஏற்படுத்தப்பட்டு இருந்தன. பயன்பெறும் மாணவர்களின்
எண்ணிக்கை 12 இலட்சத்திற்கும் அதிகமாகும். உயர் வகுப்புக்குச்
செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங்
களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத்
தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும் இப்புத்தக வங்கிகள்
ஏற்படுத்தப்பட்டுள்ளன.



அறிவியல் கல்வியும், . தொடக்கப் பள்ளிகளுக்கு நூலகப்
புத்தகங்களும்.

13. 1981-82 மற்றும் 1982-83 ஆண்டுகளில் அறிவியல் கருவி
களை வாங்குவதற்கான பள்ளிக்கு ரூபாய் 3,750 வீதம் மொத்தம்
400 நடுநிலைப் பள்ளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. அப்
பள்ளிகள் ஒவ்வொன்றும் பள்ளி நிர்வாக நிதி அல்லது பெற்
றோர் ஆசிரியர் நிதியிலிருந்து மற்றொரு ரூபாய் 3,750 இவ்வகை
யில் செலவிட வேண்டும. தொடக்கப் பள்ளிகளுக்கு நூலகப்
புத்தகங்கள் வாங்க 1983-84-ல் ரூபாய் 2 இலட்சம் ஏற்பளிக்கப்
பட்டது.

தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள் :

14. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1980-81 முதல் 1982-83
முடிய மூன்று ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு
கட்டிடங்கள் கட்டித் தருவதற்கான ஒரு பெருந்திட்டம் சுமார்
ரூபாய் 33 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு ஊராட்சி
ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் 5,154-க்கு கட்டிடங்கள் கட்டித்
தரப்பட்டன. 1984-85-ல் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்
காக ரூபாய் 1.72 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில்
ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக
'' சமுதாய வளர்ச்சி '' மானியக் கோரிக்கையின் கீழ் ரூபாய் 1.50
கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் நகராட்சித்
தொடக்கப் பள்ளிகளுக்கு மானியம் தர ரூபாய் 17 இலட்சமும்,
அரசு தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூபாய் 5
இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள்.

15. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றி
வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1—6—1981
முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின்
கட்டிடப் பராமரிப்பு தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழு
வதையும் பள்ளிக் கல்வித்துறை கவனித்து வருகிறது.

நகராட்சி/மாநகராட்சித் தொடக்கப் பள்ளிகள் :

16. 1983-84-ல் நகராட்சிகளும், சென்னை, மதுரை,
கோயம்புத்தூர் மாநகராட்சிகளும் நடத்தி வந்த தொடக்கப்
பள்ளிகளின் எண்ணிக்கை 1,526 ஆகும். (1,123 முதல் நிலை
மற்றும் 403 நடுநிலைப் பள்ளிகள்). நகராட்சிகள் கல்வி வரி வசூ
லிப்பதுடன், அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்
டுக்கு ஈடான தொகையினை அரசு மானியமாகவும் பெறுகின்
றன. அத்துடன் நகராட்சிகள், மாநகராட்சிகள் (சென்னை,
மாநகராட்சி நீங்கலாக). ஆகியவற்றின் தொடக்கக் கல்விக்
கணக்கு நிதியில் துண்டு விழும் முழுத் தொகையினை அரசே ஈடு
செய்து வருகின்றது.

(iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1983-84-ல் தமிழ்நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினர் 17.64 இலட்சம் பேர்களுள், 44.87 விழுக்காடாகிய 7.91 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1982-83-ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு :

| (1) | சாதாரணப் பள்ளிகள் (ஆங்கிலோ-இந்தியன் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட) (2) | மைய அரசின் உயர் நிலைப்பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள் | 2,252 | 99 | 2,351 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 1,370 | 57 | 1,427 |
| மொத்தம். .. | 3,622 | 156 | 3,778 |

1982-83-ல் மேற்கண்ட 3,778 பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | மாணவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|
| 8-ம் வகுப்பும் கீழும் .. .. .. | 15.43 |
| 9—10 வகுப்புகள் .. .. .. | 7.91 |
| 11—12 வகுப்புகள் .. .. .. | 3.08 |
| மொத்தம் .. | 26.42 |



கடந்த ஏழு ஆண்டுகளில் (1977-78 முதல் 1983–84 முடிய மொத்தம் 525 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. (1983-84-ல் திறந்த 52 உயர்நிலைப் பள்ளிகள் உட்பட).

2. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின்கீழ் 1983-84 முடிய 1106 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. 1984-85-ல் மேலும் 13 பள்ளிகள் பயன் பெறும். இத்திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் தளவாடங்களை மொத்தமாகப் பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி, அனுப்பி வைக்கிறார். அறிவியல் தளவாடங்கள் வழங்குவதற்கு பள்ளிக்கு ரூ. 20,000 அனுமதிக்கப்படுகிறது. அரசு உயர் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை இத்திட்டத்தின்கீழ் ஆய்வுக் கூட கட்டடவகையில் ஒரு பள்ளிக்கு இப்பொழுது ரூ. 1,20,000 செலவிடப்படுகிறது. உள்ளாட்சி மன்றம் மற்றும் தனியார் உயர்நிலைப்பள்ளிகள் கட்டடச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 72,000 இதில் எது குறைவோ அது என்ற அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் ஆய்வுக் கூட கட்டிட மானியம் வழங்கப்படுகிறது.

3. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் சோதனைகளை நடத்திக் காட்ட உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 51-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வண்டி செயல்பட்டு வருகிறது.

4. மாநில அளவில் ஆண்டுதோறும் நடத்தும் அறிவியல் கண்காட்சிகள் ஆண்டுதோறும் வெவ்வேறு மாவட்ட தலைமையிடங்களில் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் அறிவியல் திறனை ஊக்குவிப்பதும் அறிவியல் பயிற்றுந்தரத்தினை மேம்படுத்துவதும் இக்கண்காட்சிகளின் குறிக்கோளாகும்.

5. தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், மற்றும் தமிழ்நாட்டுக்கும், பாண்டிச்சேரிக்கும் '' தென் இந்திய அறிவியல் கண்காட்சி '' ஒன்றை பெங்களூரிலுள்ள விசுவேசுவரய்யா தொழில் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம் ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. 1980-லிருந்து இக்கண்காட்சியில் தமிழகப் பள்ளிகளும் கலந்து கொள்கின்றன. சென்னையில் 1983 சனவரியில் நடந்த இக்கண்காட்சியில் தமிழ்நாட்டுப் பள்ளிகள் மிகுந்த எண்ணிக்கையில் பரிசுகள் பெற்றதால், '' சுழல் கோப்பை '' தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது. 1984 ஆம் ஆண்டுக்கான கண்காட்சி கேரளத்தில் எர்ணாகுளத்தில் 1984 சனவரியில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முக்கியமான கேடயங்களையும் பரிசுகளையும் தட்டிச் சென்று பெருமை பெற்றது. கேடயங்கள் ஐந்தில் நான்கை தமிழகப் பள்ளிகள் காட்சிக்கு வைத்திருந்த அறிவியல் காட்சிப் பொருள்கள் பெற்றன. தமிழ்நாடு பெற்ற நான்கு கேடயங்களில் மூன்றை

தருமபுரியில் உள்ள அரசு ஔவையார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றது. 1983-ல் தமிழக முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வழங்கிய '' தமிழக முதல்வர் வெள்ளிக் கேடயம்'' ''கேரளா அரசு நிறுவிய கேடயம்'' '' சர் எம். விசுவேசுவரய்யா கேடயம் '' ஆகிய மூன்றுமே தருமபுரி பள்ளி பெற்றவையாகும். மதுரையில் உள்ள புனித மேரி மேல்நிலைப்பள்ளி, '' சர் சி. வி. இராமன் கேடயத்தை '' பெற்றது. தமிழக மாணவர்கள் நால்வர் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பெற்றனர். 19 மாணவர்கள் சிறப்புப் பரிசு பெற்றனர். நமது மாநில ஆசிரியர்கள் மூவரும் பரிசுகள் பெற்றனர். நமது பள்ளிகள் கண்காட்சிக்கு வைத்த அறிவியல் பொருட்களையும், நமது மாணவர்களையும் அனைவரும் வெகுவாகப் பாராட்டினர்.

6. மைய. அரசுக் கல்வி அமைச்சகம் சென்னையில் கல்வித் திரைபடங்களுக்கான படநிலையம் ஒன்று கட்ட ரூ. 40 இலட்சம் மானியம் தர கொள்கை அளவில் இசைந்துள்ளது. வீடியோ நிழற்படக் காமிராக்களும், அதனோடு இணைந்த கருவிகளும் வாங்க அவ்வரசினர் ஏற்கனவே ரூ. 5 இலட்சத்துக்கு மேல் மானியம் வழங்கியுள்ளனர்.

**உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் :**

1984-85 வரவு செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளுக்கான க்ட்டிட மானியம் .. .. | 13 |
| அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கான கட்டிடங்கள் : | |
| சிறு பணிகள் .. .. .. .. | 102 |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1984-85-ல் நிதி ஒதுக்கம் (அரசு மேல்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் உட்பட) .. .. .. | 149 |
| வெள்ளம் முதலியவற்றால் சேதமாகும் கட்டிடங்களின் மராமத்துப் பணிக்காக ... | 5 |
| மொத்தம் .. .. | 269 |





8. பெண்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கழிவறை வசதிகள் செய்வதற்கான ஒரு திட்டம் மொத்தம் ரூ. 5 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இதில் ரூ. 3.25 கோடிக்கு 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டது. 1984-85-ல் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேற்குறித்த சிறு பணிகளுக்கான நிதி ஒதுக்கமாகிய ரூ. 1.02 கோடியில் இந்த ரூ. 1 கோடியும் அடங்கியுள்ளது).

**கல்விச் சலுகைகள் ப்டிப்பு உதவித்தொகைகள் மற்றும் இதர ஊக்குவிப்புப் பணிகள் :**

9. தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வி பொதுவாக 1 — 12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் இலவசமாகவும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சேர்ந்த மாணவர்கள் சிறப்புப் படிப்பு உதவித் தொகைகளையும் இதர வசதிகளையும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதே போன்ற வசதியைப் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்குப் புதிதாகப் படிப்பு உதவித் தொகைகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. ஒருமுறை உதவித் தொகையினைப் பெற்ற மாணவர் மேல்நிலைக் கல்வி உட்பட பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும்வரை இவ் வுதவித் தொகையினைப் பெறுவர்.

10. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 6 — 10 வகுப்புகளிலும், 300 மேல்நிலை பள்ளிகளில் 11 — 12 வகுப்புகளிலும் செயல்பட்டு வருகிறது.

**(iv) பள்ளிப் பாடங்கள், பாடத்திட்டம், பாட நூல்கள் :**

வேலை வாய்ப்பைப் பெறத் தக்க பயிற்சி வாய்ந்த இளைஞர்களை உருவாக்குவதற்காக கல்விமுறை சீரமைக்கப்பட வேண்டும் என்பது குறித்து அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது. கல்வி முடிந்தபின் பொருத்தமான வாழ்க்கைத் தொழிலை அல்லது சுயவேலைவாய்ப்பை தேடிக்கொள்ளத் தேவைப்படும் திறமைகளை மாணவ-மாணவியருக்குத் தருவதாக கல்வி அமைய வேண்டும். இதற்கிணங்க பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளையும் வாழ்க்கைத் தொழிலுக்குகந்ததாக ஆக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தந்த வட்டாரங்களுக்கும் பகுதிகளுக்கும் உகந்த வேலைவாய்ப்புகளுக்குத் தக்க பயிற்சிகளைப் படிக்கும்

[1984 மார்ச் 15

பொழுதே பெறத்தக்க வகையில் கல்வியின் வெவ்வேறு நிலைகளிலும் பொருத்தமான திறன்களைத் தரக்கூடியதாக கல்வி முறையை மாற்றியமைக்க நிதித் தேவை பெருமளவிலிருப்பதால் இப்பணிக்கு அரசு எட்டாவது நிதிக்குழுவிடம் நிதி உதவி கேட்டுள்ளது. பாடத் திட்டத்தைத் தக்கவாறு சீரமைத்து வலுப்படுத்துவது உட்பட இதற்கான விரிவான செயல் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. 1985–86 லிருந்து படிப்படியாக செயலுக்குக் கொண்டு வருவதற்காக அவ்வறிக்கை மைய அரசுக்கு அனுப்பிவைக்கப்படும்.

2. தற்பொழுது 1—12 வகுப்புகளில் கற்றுத் தரும் பாடங்கள் பாடத் திட்டம், பாட நூல்கள் ஆகியவற்றை மேற் சொன்ன புதிய கல்வித் திட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப திருத்தியமைக்க அரசு குழுக்களை அமைத்துள்ளது.

3. தற்பொழுதுள்ள பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்ட பள்ளிப் பாடப்புத்தகங்களின் புதிய வடிவங்களைத் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் பின்வரும் திட்டப்படி வெளியிட்டு வருகிறது ;

பாடப்புத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்கு வரும் வகுப்புகள் :

| ஆண்டு. (1) | கணிதம். (2) | புவியியல். (3) | அறிவியல். (4) | வரலாறு. (5) |
|---|---|---|---|---|
| 1980–81 .. | 1—3 | .. | .. | .. |
| 1981–82 .. | 4, 7, 9 | 4, 6 | 3, 4, 6 | 3, 4, 6 |
| 1982–83 .. | 5, 8, 10 | 5, 7, 9 | 5, 7, 9 | 5, 7, 9 |
| 1983–84 .. | .. | 8, 10 | 8, 10 | 8, 10 |

| ஆண்டு. (1) | ஆங்கிலம் (6) | தமிழ் (7) | ஆங்கிலத் துணைப் பாடம். (8) | தமிழ்த் துணைப் பாடம். (9) | தமிழ் இலக்கணம். (10) |
|---|---|---|---|---|---|
| 1980–81 .. | .. | .. | .. | .. | .. |
| 1981–82 .. | 3 | 1—3 | .. | 9 | .. |
| 1982–83 .. | 4, 6 | 4, 6 | 6 | 6 | .. |
| 1983–84 .. | 5, 7, 9 | 5, 7, 9 | 7. 9 | 7 | 9 |
| 1984–85 .. | 8, 10 | 8, 10 | 8 | 8 | 8, 10 |



1984 மார்ச் 15]

2. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மாவட்ட மற்றும் வட்ட கூட்டுறவுச் சங்கங்கள் 54-ன் மூலமாக மாநிலம் முழுவதும் 120 விநியோக மையங்களின் வாயிலாக விநியோகிக்கப்படுகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக இப்பாட நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந்நிறுவனம் தனது வெளியீடுகளைத் தானே நேரடியாக 101 சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக விற்பனை செய்கிறது. இந்நிறுவனம் 1984–85-ல் ரூ. 6 கோடி மதிப்புள்ள பாட நூல்களை வெளியிடும்.

நோட்டுப் புத்தகங்கள் :

3. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக்கொண்டு, நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனமே செய்து வருகிறது. 1979–80 முதல் 1982–83 முடிய இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட மலிவு விலை நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ரூ. 10 கோடிக்கும் அதிகமாகும். மைய அரசு மலிவு விலைத்தாள் ஒதுக்கீடு செய்வது 1982–83-ல் நிறுத்தி வைக்கப்பட்டது. மலிவு விலைத்தாள் ஒதுக்கீட்டை 1–4–83 முதல் மீண்டும் மைய அரசு செய்து வருகிற போதிலும் ஒதுக்கீடு செய்யும் அளவுக்கு தாளை காகித ஆலைகள் தருவதில்லையாகையால் கிட்டும் மலிவு விலைத்தாள் அளவுக்கு நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் :

4. பள்ளிகளுக்குத் தரமிக்க பாட நூல்களை வெளியிடுதல், நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகித்தல் ஆகிய பொறுப்பு மிக்க பணிகளை ஆற்றி வருவதுடன் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக வேறு பல வகைகளிலும் பணியாற்றி வருகிறது. அப்பணிகளில் சில 1—3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் பாட நூல்களை வழங்குதல் ; அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி வழங்குதல் ; பள்ளி சாராக் கல்விக்கான புத்தகங்களை வெளியிடுதல் ; கல்லூரிப் பாட நூல்களைத் தமிழில் வெளியிடுதல் ; தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு நூல்களை வெளியிடுதல் ; யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களில் நூலகங்களுக்கு தமிழ் நூல்கள் வழங்குதல் முதலியனவாகும். இவை பற்றிய விரிவான விவரங்கள் அந்தந்த அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன. இந்நிறுவனம், தனது நிதி வளத்திலிருந்து ரூ. 1.84 கோடி மதிப்பீட்டில் நுங்கம்பாக்கம், கல்லூரி சாலையிலுள்ள கல்வித் துறை இயக்ககங்கள் வளாகத்தில் அலுவலகக் கட்டடம்

ஒன்றைக் கட்டி வருகிறது. இக்கட்டிடத்தின் ஒரு பகுதி ஏற் கனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டது. அடுத்த பகுதி 1984 ஜூன் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும். இரண்டாவது பகுதி கட்டி முடித்தவுடன் அது பல்வேறு அரசுத் துறைகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் வாடகைக்கு விடப்படும்.

### (V) ஆசிரியர் பயிற்சி.

1983—84-ல் ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் 35 மாணவர்கள் இடைநிலை (செகண்டரி கிரேடு), ஆசிரியர் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

2. இளநிலை ஆசிரியர்கள் (ஹையர் கிரேடு) இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வி யாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் நடத்தி வரும் 5 மாத அஞ்சல்-வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சியில் இது வரை 25,000 ஆசிரி யர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் இப்பொழுது ஆண்டு தோறும் 10,000 பேர் பயன் பெறுகின்றனர்.

3. ஆங்கிலமொழிப் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்கான 10 மையங்கள் 1983-84-ல் 6—8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத்தரும் ஆசிரியர்கள் 3,150 பேருக்கு ஆங்கிலம் கற்பித்தலில் 3 வாரப் பயிற்சியும் 9—10 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்கள் 1,350 பேருக்கு 4 வாரப் பயிற்சியும் நடத்தின.

4. பெங்களூரிலுள்ள வட்டார ஆங்கிலப்பயிற்சி நிறுவனத்தை நடத்த இவ்வரசு ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் அளவுக்கு நிதி உதவி செய்கிறது. 1983—84-ல் உயர் நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆங்கில ஆசிரியர்கள் 47 பேர் அந்நிறுவனத்தில் 4 மாதப் பயிற்சி பெற்றனர்.

### (vi) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் :

பள்ளிக் கல்வித் துறையின் கல்வித்தர வளர்ச்சிப் பிரிவாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறு வனம் தொடக்கப்பள்ளி முதல் மேல் நிலைப் பள்ளி முடிய அனைத்து நிலை ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு கருத்தரங்குகள், பணிக்களரிகள், புத்தறிவுப் பயிற்சிகள் ஆகியவற்றை நடத்தி வருகிறது. இளநிலை ஆசிரியர்களுக்கான அஞ்சல்—வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சி; மேல் நிலைப் பள்ளி வகுப்புகளில் உள்ள ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரி யர்களுக்கான 10 மாத சான்றிதழ் வகுப்பு ஆகியவையும் இந் நிறுவனம் நடத்தும் பயிற்சிகளில் அடங்கும். இந்நிறுவனம் ஆசிரியர்களுக்காக மேலும் பல பயிற்சித் திட்டங்களை நடத்த 1984—85-ல் ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.





2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன் னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது :—

| திட்டம். | செயல்படுத்தப்படும் இடங்கள். |
|---|---|
| (i) தொடக்கக்க கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல். | 130 தொடக்கப் பள்ளிகள். |
| (ii) சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்விவளர்ச்சி—35 வயது முடிய அனை வருக்கும் அவரவருக்கு இணையான கல்வி அளித்தல். | பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 5 சமுதாய மையங்கள். |
| (iii) தொடக்கக் கல்வி வாய்ப் புக்களைப் பரவலாக்கு தல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட 9—14 வயது தொகுதியி னருக்கு பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல்.) | 74 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |
| (iv) இளஞ்சிறார் கல்வி .. | இராமநாதபுரம் மாவட்டம், காரியாபட்டி வட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள 61 இளஞ்சிறார் பள்ளிகள். |

### மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி.

3. மக்கள் தொகைக் கட்டுப்பாடு நடவடிக்கைக்களுக்கான ''ஐக்கிய நாடுகள் நிதி'' (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 நவம்பர் முதல் தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதற்கான மூன்றாண்டுத் திட்டம் ஒன்றை தமிழ்நாடு கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் செயல் படுத்தி வருகிறது. மாநில அரசும் தன் பணத்திலிருந்து இத்திட்டத்திற்காக அம் மூன்றாண்டுக் காலத்தில் ரூ. 3 இலட்சம் அளவில் செலவிடுகிறது.

4. சென்னையிலும், வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன் பெறுவதற்கான தொடர்கல்வி மையங்களைக் கல்வி யாராய்ச்சி பயிற்சி நிறுவனம் நடத்தி வருகிறது. தொடக்கத்

[1984 மார்ச் 15

கல்வி ஆசிரியர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி, 6—10 வகுப்புகளில் தமிழ் கற்றுத் தரும் ஆசிரியர்கள் திறனை வளர்க்க அஞ்சல் மற்றும் வானொலிவழிப் பயிற்சி, ஆகியவற்றையும் நடத்திவருகிறது.

அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி.

5. உயர்நிலைப் பள்ளி நிலையில், பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி ( Open School ) 1984—85 முதல் மாநிலக் கல்வி யாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் மூலம் நடத்தப்படும். ஏற்கெனவே 8—வதுவகுப்பு தேறி 15 வயது நிறைந்தவர்கள் இதன்மூலம் பயன் பெறலாம். முதலில் 2,500 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர். அஞ்சல் வழிப்பயிற்சியுடன் நேரடித் தொடர்புக்கும் இப்பள்ளியில் வகை செய்யப்படும்.

(vii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்களின் நலன்.

கடந்த சில ஆண்டுகளில் ஆசிரியர்கள் பெற்ற நன்மைகளில் முக்கியமானவை வருமாறு :

(i) ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டது.

(ii) இளநிலை ஆசிரியர்களை, இடை நிலை ஆசிரியர்களாக உயர்த்த, அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சி தொடங்கப்பட்டது.

(iii) இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு அவரவர் ஊதிய விகிதத்தில் 1—6—1981 முதல் ஓர் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.

(iv) இடைநிலைத் தகுதி பெறும் இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம் தரப்படுவது மற்றும் பி.டி. தகுதி பெறும் நடுநிலைப் பள்ளி (இடைநிலைத்தர) தலைமை ஆசிரியர்களுக்கு பி.டி. சம்பள விகிதம் தரப்படுவது.

(v) நடுநிலைப்பள்ளிகளிலுள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளைப் படிப்படியாக முழு நேரப் பதவிகளாக உயர்த்துதல்.

(vi) இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் அனைவருக்கும் 1—1—1981 முதல் முதனிலைத் தமிழாசிரியர்களாகத் தர உயர்வு.

(vii) தத்தம் நிலையில் 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1—6—1981 முதல், இளநிலை, இடைநிலை ஆசிரியர்களுக்கும். 1982—83 முதல் பி. எட். தர ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டது.



1984 மார்ச் 15]

(viii) அனைத்து ஆசிரியர்களுக்கும், 1982—83 ஆம் ஆண்டிலிருந்து ஈட்டிய விடுப்பு 3 நாட்களிலிருந்து 10 நாட்களாக அதிகரிக்கப்பட்டது.

(ix) உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியரும், ஓர் இளநிலை உதவியாளரும் விடுமுறையல்லாத பணியைச் சார்ந்தவராக அறிவிக்கப்பட்டது.

(x) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு பல்வேறு வகைக் கடன்கள், முன் பணங்கள் ஆகியவை விரிவாக்கப்பட்டன.

ஆசிரியர்கள் நலக்குழு.

2. ஆசிரியர்களது குறைகளை அவ்வப்போது உடனுக்குடன் உரிய மட்டத்தில் தீர்த்து வைக்கும் பொருட்டு, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில நிலைகளில் "ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் குழுக்களை" அரசு அமைத்துள்ளது. இக்குழுக்களில் அதிகாரிகளும் அங்கீகாரம் பெற்ற ஆசிரியர்களின் சங்கங்களின் பிரதிநிதிகளும் உள்ளனர்.

தனியார் பள்ளிகள்.

3. தனியார் நிருவாகத்தின் கீழ் உள்ள பள்ளிக பணியாற்றும் ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்பிற்காக அர பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மேல்முறையீட்டின் பேரில் மீண்டும் பணிகளில் சேர்க்கப்பட ஆணையிடப்படுகின்ற தனியார் பள்ளி ஆசிரியர்களை நிருவாகங்கள் மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ள வகைச் செய்தல் ; தனியார் பள்ளிகளில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பெற்ற ஆசிரியர் இன்னலுக்குட்படுத்தப் படாமல் தடுத்தல் முதலிய நடவடிக்கைகளும் இதில் அடங்கும். அரசு ஏற்கனவே அமைந்துள்ள வல்லுநர்க் குழுவின் அறிக்கையைப் பெற்றபின், தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1973 மற்றும் அச்சட்டத்தின் கீழ் வகுத்த விதிகள் 1974 இரண்டிலும் விரிவான திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

4. சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளைத் தவிர பிற தனியார் பள்ளிகளில் நியமனங்கள் அனைத்தும் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலமே செய்யப்படும் ; மேலும் அந் நியமனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 விழுக்காடும் பிற்பட்டவர்களுக்கு 50 விழுக்காடும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

5. தனியார் பள்ளி ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் பணியிலிருக்கும் போதே இறந்து அவர்கள் குடும்பங்கள் வறுமை நிலையிலிருந்தால் அவர்கள் மகன்/மகள்/மனைவி/கணவன் ஆகி யோருக்குக் கருணை அடிப்படையில் (வேலை வாய்ப்பகங்கள் மூல

மாகத்தான் நியமனங்கள் செய்யப்படவேண்டும் என்ற விதியைத் தளர்த்தி) தனியார் பள்ளிகளில் நியமனம் செய்துகொள்ளும் சலுகை அண்மையில் தரப்பட்டுள்ளது.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி.

6. ஆசிரியர்களும், அவர்களது குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால், வாடும்பொழுது நிதி உதவி செய்யவும், அவர்களது குழந்தைகளுக்கு மேற்படிப்புக்கான உதவித் தொகை களை அதற்கான விதிமுறைகளுக்குட்பட்டு அளிப்பதற்கும் இந் நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஆசிரியர்களுக்கான விருதுகள்.

7. பள்ளியாசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1982–83 ஆம் ஆண்டுக்கு 207 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் எட்டுபேரும், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ஐந்து பேரும் மைய அரசிடமிருந்து 1983 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர்.

III. மேல்நிலைப்பள்ளிக் கல்வி.

1983–84-ல் இம்மாநிலத்தில் செயல்பட்டு வந்த 1,370 மேல் நிலைப்பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் பயின்று வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு (மைய அரசின் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றுடன் இணைந்த 57 மேல் நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை மேற்கண்ட 1,370 பள்ளிகள் என்ற எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை).

| | | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| பொதுப்பாடங்கள் | .. | 146,165 | 99,069 | 245,234 |
| தொழிற்பாடங்கள் | .. | 37,706 | 19,123 | 56,829 |
| மொத்தம் | .. | 183,871 | 118,192 | 302,063 |

" மதிப்பீடு மற்றும் திட்டச் செயற்பாடு ஆய்வு " இயக்குனர் அண்மையில் மேல்நிலைப்பள்ளிக் கல்வியை விரிவாக ஆய்வு செய்து அனுப்பியுள்ள அறிக்கையில் உள்ள அறிவுரைகளின் அடிப்படையில் அக்கல்வியை மேலும் விரிவாக்குவது குறித்து நிர்ணயிக்கத்தக்க வரன்முறையினை அரசு முடிவு செய்ய இருக்கிறது.



2. 1978–79–ல் மேல்நிலைப்பள்ளிகளில் கலை, அறிவியல், ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி, மேல்நிலைப்பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத்தகுதி பெற்ற உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல் நிலைப்பள்ளிகளுக்கு மாற்றம் செய்தும், முதுகலைப்பட்டத் தகுதி பெற்றிராத உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களை மேல்நிலை வகுப்புக்கள் நடத்த ''உட்படுத்தியும்'' பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாண்டும் அதற்குப் பின்னர் உள்ள ஆண்டுகளுக்கும் கூடுதலாகத் தேவைப்பட்ட மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இதுவரை மொத்தம் 7,040 மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1984–85–ல் மேலும் 75 பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 250–ம் ஆய்வுக்கூட உதவியாளர் பணியிடங்கள் 900-ம் முன் ஆண்டுகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

3. மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணி விதிகள் ஏப்ரல் 1981-ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப்பள்ளி களிலிருந்து " உட்படுத்தப்பட்ட " ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு மேற்படிப்புத் தகுதி அடைய போதிய காலம் அனுமதிக்கப் பட்டுள்ளது. அதுவரை இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் ரூ. 40 சிறப்பூதியம் பெற்று வருகின்றனர். ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்களுக்கு மாநிலக் கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் மூலமாக பத்து மாத " பட்டமேற்படிப்புச் சான்றிதழ் " வகுப்பை நடத்த அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. இவ்வகுப்பில் தேறிவருபவர் அந்நிறுவனத்திடம் சான்றிதழ் பெற்று அவரவருக்குரிய பாடத்தை மேல்நிலைவகுப்புகளில் நடத்த முழுத் தகுதி உடையவர்களாகக் கருதப்பட்டு மேல்நிலை வகுப்புஆசிரியர்களுடைய சம்பள விகிதத்தை அடையத் தகுதி பெறுவர்.

4. மேல்நிலைப் பள்ளிகளில், மேல் நிலை வகுப்புகளில் அறிவியல் பாடங்களின் செயல்முறை வகுப்புகளை நடத்த அறிவியல் ஆசிரியர்களுக்கு உதவியாக 'மானிட்டர்' களை நியமிக்க 1983-84-ல் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மானிட்டருக்கும் மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் மதிப்பூதியம் தரப்படும். ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் 11-ம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு மானிட்டரும் 12-ம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு மானிட்டரும் என்றவாறு மொத்தம் அனைத்துப் பள்ளிகளிலும் ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 7,742 அறிவியல் மானிட்டர்கள் இருப்பர்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள் :

5. மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்பாடங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டின் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளது. 1983-84-ல் மொத்தம் 940 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வாறு கற்பிக்கப்பட்ட தொழிற் பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,432 ஆகும். 1983-84-ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 3.02 இலட்சம் மாணவர்களில் 56,829 பேர் (அதாவது சுமார் 19 சத விகிதத்தினர்) பின்வரும் விவரப்படி தொழிற் பாடங்களைப் பயின்று வந்தனர் :—

| | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தொழிற் பாடவகை— | | | |
| 1. வேளாண்மை .. | 3,890 | 331 | 4,221 |
| 2. மனையியல் .. | 89 | 2,055 | 2,144 |
| 3. வாணிகத்துறை .. | 17,784 | 13,492 | 31,276 |
| 4. பொறியியலும், தொழில் நுட்பவியலும் | 13,579 | 170 | 13,749 |
| 5. உடல்நலம் .. | 2,235 | 2,484 | 4,719 |
| 6. பலவகை .. | 129 | 591 | 720 |
| மொத்தம் .. | 37,706 | 19,123 | 56,82 |

6. முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுறை பாடங்களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற் பாட ஆசிரியர்களும் ; அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங் களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும், பிற இடங்களில் வெளி நபர்களும் ஆக சுமார் 4,300 பகுதிநேர ஆசிரியர்களும் (மாதம் ரூ. 150 ஊதியத்தில்) தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். தொழிற் பாட மானிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.



7. மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், அவர்கள் உயர்கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல் போன்ற நோக்கங்களுடன், மேல்நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள், பாடத் திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்கான அரசு அமைத்த திரு. குழந்தைசாமி குழுவின் அறிக்கைப் படிகள் ஏற்கெனவே சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. அவ்வறிக்கை ஆய்வில் உள்ளது. அதில் உள்ள பரிந்துரைகள் படிப்படியாக அமுலாக்க எடுத்துக் கொள்ளப்படும்.

8. மேல்நிலைப் பள்ளி தொழிற் பாடங்களைப் பயின்று தேறி வெளிவரும் மாணவர்களுக்கு 6 மாத சிறப்புப் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 19 தொழில் களில் ஏதாவது ஒன்றில் அவ்வாறு மொத்தம் 1,900 பேருக்கு "தொழில் பழகு பயிற்சிக் குழு" வின் மூலமாக பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 200 ஊதியம் தரப்படும்.

கட்டடங்களும் தளவாடங்களும் :

9. 1978-79 முதல் 1981-82 முடிய நான்கு ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 651 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக் கூடமும் கட்ட பெருந்தொகையான ரூ. 12 கோடிக்கு அரசு ஏற்பளித்தது. 544 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

10. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக் கூடத் தளவாடங்கள் வகையில் மொத்தம் ரூ. 6 கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது. சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ் நாடு அரசு நிறுவனமான தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மரச் சாமான்கள் வாங்க ரூ. 24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்த அரசு இதுவரை ரூ. 43 இலட்சம் அளவில் செலவிட்டுள்ளது.

11. சென்னையில் இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தைச் சுற்றி 50 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்த சுமார் 50 மேல்நிலைப் பள்ளிகளில் 1984-85-ல் மின்கணிப்புப் பொறி பற்றிய பாடம் புகுத்தப்படும். அனைத்திந்தியாவிலும் மைய அரசு மின்னணுவியல் துறை மைய அரசுக் கல்வி அமைச்சகத்தோடு 'இணைந்து' அமுல்படுத்தும் திட்டத்தின்கீழ் இப் பாடம் பள்ளிகளில் தொடங்கப்படும்.

12. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டைப் பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை அத் தகைய பள்ளிகள் 525 இத்திட்டத்தின்கீழ் மானியம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளன.

13. க ் லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக் கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடன் " கல்லூரி இணையங் களும் " " பாலிடெக்னிக் இணையங்களும் " இயன்ற இடங் களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

## IV. அரசுத் தேர்வுகள்.

அரசுத் தேர்வுத் துறையானது பொதுக் கல்வி சார்ந்த தேர்வுகளும், தொழிலியல் கல்வி சார்ந்த தேர்வுகளுமாக மொத்தம் 41 தேர்வுகளை நடத்தும் பொறுப்பை வகித்து வரு கிறது. பொதுக் கல்வி சார்ந்த தேர்வுகளில் முக்கியமானவை எஸ். எஸ். எல். சி., யும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுமாகும். தொழிலியல் சார்ந்த தேர்வுகள் :—ஆசிரியர் பயிற்சி பட்டயத் தேர்வு ; தையல் வேலை மற்றும் ஆடை தைத்தல் ; ஓவியம், இசை, அச்சு வேலை முதலிய பாடங்களில் அரசு தொழிற் கல்வித் தேர்வுகள் ; ஹோமியோபதி மருத்துவம் அறுவை சிகிச்சை பட்டயத் தேர்வு ; சங்கீத வித்வான் தேர்வு ; மொழி ஆசிரியர் பயிற்சித் தேர்வு முதலியவையாகும். இத்துறைக்கு மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மூன்று வட்டார அலுவலகங்கள் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன. 1984—85-ல் இத்துறைக்கு நான்காவதாக ஒரு வட்டார அலுவலகம் சென்னையில் அமைக்கப்படும்.

2. இத்துறை நடத்தும் முக்கியமான தேர்வுகளை எழுதும் மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| தேர்வுகள். | 1983 மார்ச்சு/ஏப் தேர்வு எழுதியோர். | 1983 மார்ச்சு/ஏப் தேறியோர் விழுக்காடு. | 1983 செப்டம்பர்/ அக்டோபர் தேர்வு எழுதியோர். | 1984 மார்ச்சு/ஏப்ரல் தேர்வு எழுதுவோர் (தோராயமாக). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| எஸ். எஸ். எல். சி. | | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) .. | 3,52,100 | * | 1,28,000 | 3,80,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுபவர்கள் .. | 2,76,598 | 51.4 | .. | .. |
| ஆங்கிலோ-இந்தியன் | 2,667 | 90 | 383 | 3,040 |
| மெட்ரிக்குலேஷன் .. | 3,436 | 91 | 380 | 4,566 |
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு | | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) .. | 1,75,092 | * | 51,500 | 1,85,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர் .. .. | 1,41,692 | 66 | .. | .. |

*பகுதி முறைத்தேர்வு காரணமாக மொத்தம் (தனிப்பட்ட முறை யில் எழுதுவோர் உட்பட) தேர்வு எழுதுபவர்களின் தேறியோர் விழுக்காடு கணக்கிட்டுத் தர இயலவில்லை.

### தேர்வு மையங்கள்.

| | செப்டம்பர்/ அக்டோபர் 1983 | மார்ச்/ஏப்ரல் 1984 |
|---|---|---|
| எஸ். எஸ். எல். சி. .. | 290 | 1,300 |
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு .. | 162 | 740 |

3. மேல்நிலைப் பள்ளித் தேர்வை பொதுக் கல்விப் பாடங்கள் 27-க்கும் தொழிற்கல்வி பாடங்கள் 66-க்கும் நடத்த வேண்டி யிருக்கிறது. பல்வேறு பாடங்களின் தொகுப்புகள் 262 ஆகும். தொழிற்பாடத் தேர்வுகள் செயல் முறைக்கு முக்கியத்துவம் தரும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

4. பதினான்கு வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளும் வகையில் நடத்தப் பெறும் தொடக்கப் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வு (ஈ. எஸ். எல். சி.) ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப் பெறுகிறது. 1983 டிசம்பரில் இத்தேர்வில் சுமார் 4,329 பேர் கலந்து கொண்டனர்.

5. தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதுபவர்கள் நுழைவுச் சீட்டுக்களைக் குறிப்பிட்ட தேர்வு மையங்கள் மூலமாக வழங்கும் புதிய முறை நன்முறையில் செயல்பட்டது. எனவே, அதுபோல அவர்களின் தேர்வுச் சான்றிதழ்களும் (1983 அக்டோபர் தேர்வு முதல்) அவ்வாறே அம் மையங்கள் மூலமாகவே வழங்கப்படுகின்றன. முன்னர் இச்சான்றிதழ்கள் அவர்களுக்குத் தனித் தனியே பதிவஞ்சலில் அனுப்பப்பட்டு வந்தது. புதிய முறையில் அவர்கள் காலதாமதமின்றி சான்றிதழ்களைப் பெற முடிகிறது.

6. எஸ். எஸ். எல். சி. வரை படித்து தேர்வு எழுதி இதுவரை வெற்றி பெறாமல் இருந்த முன்னாள் கிராம அதிகாரிகள் சிறப்பு சலுகையாக, 1984 மார்ச் மாத எஸ். எஸ். எல். சி. தேர்வை தனிப்பட்ட முறையில் எழுதுவதற்கான மனுக்களை 10-2-1984 வரை அனுப்பி வைக்க அனுமதிக்கப்பட்டதுடன், தேர்வுக் கட்டணத்தை பணவிடைத்தாள் மூலம் அனுப்பவும் அனுமதிக்கப்பட்டனர். இச் சலுகைகள் காரணமாக அத்தகைய முன்னாள் கிராம அதிகாரிகள் 1,200க்கு மேற்பட்டவர்கள் 1984 மார்ச் மாதம் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதவிருக்கின்றனர்.

## V. வயது வந்தோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்.

வயது வந்தோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1984-85 நிதி நிலை அறிக்கையில் ரூ. 3.44 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### வயது வந்தோர் கல்வி.

எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ் நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்து வருகின்றது :—

| சென்ஸஸ் ஆண்டு. | தமிழ்நாடு. | | | இந்தியா. | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1971 .. .. | 51.78 | 26.36 | 39.46 | 39.51 | 18.44 | 29.34 |
| 1981 .. .. | 57.19 | 34.12 | 45.78 | 46.74 | 24.88 | 36.17 |

தமிழ்நாட்டில் வயது வந்தோர் கல்வி கீழே விவரிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களின்கீழ் அளிக்கப்படுகிறது:—

### ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவுப் பணி.

2. மைய அரசின் முழுப்பண உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 3,900 மையங்கள் செயல்படுகின்றன. மேற்குறிப்



பிட்ட மூன்று மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 1984 மார்ச் முதல் இத்திட்டம் தொடங்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள இரண்டு அல்லது மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளிடையேயிருந்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் வயது வந்தோர்க்கு கல்வி புகட்டுபவர்கள், பயிற்சி பெற்று வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலை வாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள், பால்வாடி ஆசிரியர்கள் சிவில்/இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் முறையான பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு வயது வந்தோர் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தந்த இடத்திற்கு வசதியான நேரங்களில் இவ் வயது வந்தோர் கல்வி வகுப்புகள் 10 மாத காலம் நடக்கின்றன. 12 மாவட்டங்களிலுள்ள மையங்கள் இத்தகைய 10 மாத வகுப்புக்களை ஆண்டுக்கு ஒரு தொகுதியினர் வீதம் நான்கு தொகுதியினருக்கு நடத்தி முடித்துள்ளனர். ஐந்தாவது தொகுதியினருக்கு வகுப்புகள் நடக்கின்றன. பெரியார் மாவட்டத்தில் இரண்டாவது தொகுதியினருக்கு எழுத்தறிவிக்கும் பணி நடந்து வருகிறது.

### மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம்.

3. இம்மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் 61-ல் 1980 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் மொத்தம் 6,160 வயது வந்தோர் கல்வி மையங்களை இவ்வரசு தன் நிதியிலிருந்து தொடங்கியது. இம்மையங்கள் நான்கு தொகுதியினருக்கு எழுத்தறிவிக்கும் பணியை முடித்து, இவற்றின் மூலம் 5.12 இலட்சம் பேர் பயன் பெற்றனர். ஐந்தாவது தொகுதியினருக்கான வகுப்புகள் 1984 மார்ச்சில் தொடங்கவிருக்கின்றன. 1-10-1983 முதல் மேலும் 54 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக 5,400 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் பின்வரும் முன்னுரிமைப்படி 15-35 வயதுத் தொகுதியைச் சார்ந்த எழுத்தறிவு இல்லாதவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

(1) ஆதி திராவிட மகளிர்.

(2) பெண்கள் (பொதுவாக)

(3) ஆதி திராவிட ஆடவர்

(4) பிற வகுப்பினர்

இந்த 11,500 மையங்களுக்கும் சேர்த்து 1984-85-ல் மொத்தம் ரூ. 2.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 15

பிற அமைப்புக்களின் எழுத்தறிவுப் பணிகள்.

4. தனியார் அமைப்புகளும் வயது வந்தோர் கல்வி மையங்களை (2,540 மையங்கள்) நடத்தி வருகின்றன. நேரு யுவ கேந்திரங்கள் 66 மையங்களையும், கல்லூரிகள், 250 மையங்களையும் நடத்தி வருகின்றன.



5. வயது வந்தோர் கல்விக்கான பல்வேறு திட்டங்களிலும் சேர்ந்து மொத்தம் அண்மை ஆண்டுகளில் எழுத்தறிவு பெற்றவர்கள் விவரம் வருமாறு :—

| | ஆடவர். | மகளிர். | மொத்தம். | மொத்த எண்ணிக்கையில் சேர்ந்துள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டம் (1979 ஜூலை—1984 டிசம்பர்). | 2,46,000 | 2,56,000 | 5,02,000 | 2,35,000 |
| 2. மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம் (1980-84). | 3,94,000 | 5,89,000 | 9,83,000 | 6,06,000 |
| 3. தொண்டு நிறுவனங்கள் (1979-83) | 33,000 | 51,000 | 84,000 | 47,000 |
| 4. நேரு இளைஞர் மையங்கள் (1979-83). | 14,000 | 10,000 | 24,000 | 11,000 |
| 5. கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் (1979-83). | 28,000 | 23,000 | 51,000 | 24,000 |
| மொத்தம் .. | 7,15,000 | 9,29,000 | 16,44,000 | 9,23,000 |

மகளிரும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோரும் பெருமளவில் பயனடைந்துள்ளது மனநிறைவு அளிப்பதாகும்.

1984 மார்ச் 15]

6. 1983 ஆம் ஆண்டின் இறுயில் செயல்ட்டு வந்த வயது வந்தோர் கல்வி மையங்களின் மொத்த எண்ணிக்கை 17,017 ஆகும். அம்மையங்களில் பயின்று வந்தோரின் எண்ணிக்கை 5.50 இலட்சம் பேர் ஆகும். இவர்களுள் பெரும்பாலோர் அதாவது 3.55 இலட்சம் பேர் மகளிர் ஆவர். மொத்த எண்ணிக்கையாகிய அந்த 5.50 இலட்சம் பேரில், 2.94 இலட்சம் பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவராவர்.

ஏட்டறிவு நிலைத்த திட்ட மையங்கள்.

7. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள், மீண்டும் பழையபடி எழுத்தறிவு அற்ற நிலைக்குப் போய் விடாமல் தடுப்பதே ஏட் டறிவு நிலைத் திட்ட மையங்களின் நோக்கமாகும். 1983-84-ல் இத்தகைய மையங்கள் அரசுத் திட்டத்தின் கீழ் 426-ம் ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 1200-ம் செயல் பட்டு வந்தன. புதிதாக எழுத்தறிவு பெறுவோர் பயனடையும் வகையில் இம் மையங்களில் தகுந்த புத்தகங்களும், செய்தித் தாள்களும் வழங்கப்படுகின்றன. மாநில அரசுத் திட்டத்தின் கீழ் 1984-85-ல் ரூ. 10 இலட்சம் செலவில் கூடுதலாக, 1,000 ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள் திறக்கப்படும்.

நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்கான தொழில் சார்ந்த கல்வி.

8. நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்காக தொழில் சார்ந்த முறை சாராக் கல்வி மையங்கள் 80 ஏற்படுத்த 1983 செப்டம்பரில் ஏற்பளிக்கப்பட்டது. ஒவ்வொரு மையத்திலும் யாதானும் ஒரு தொழில் பற்றிக் கற்பிக்க, பயிற்சியாளர் ஒரு வர் மாதம் ரூ. 100 ஊதியத்தில் பணி புரிவார். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 1,000 செலவில் கருவிகள் மற்றும் உப கரணங்கள் வாங்கித் தரப்படும். 1984-85-ல் இத்தகைய மையங்கள் மேலும் 66 புதிதாகத் தொடங்கப்படும்.

தொழிலாளர் கல்வி நிலையம்.

9. இந்நிலையம் 1982 ஜூலை மாதத்தில் அமைக்கப்பட்டது. கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் ஆளுகைக் குழு ஒன்று இந்நிலையத்தை நிருவகித்து அமைந்த இந்நிலையம் நகர்ப்புறங்களிலும் பிற தொழில் வருகிறது. உள்ள தொழிலாளர்களின் கல்வித் தேவைகளை பகுதிகளிலும் கிறது. 1982 செப்டம்பர் முதல் 1983 நிறைவு செய் பல்வேறு உபயோகமான தொழில்களில் 54 பயிற்சி செப்டம்பர் வரை 348 ஆடவரும், 1,168 மகளிரும் பயன்பெறும் வகுப்புகளை நிலையம் நடத்தியது. மேலும் இத்தகைய பயிற்சி வகையில் இந் 1984-85-ல் நடத்தப்பட இருக்கின்றன. வகுப்புகள்



1984 மார்ச்

பள்ளி சாராக் கல்வி.

10. பள்ளிக்கே செல்லாதவர்களும், சென்று பின் இடையில் நின்று விட்டவர்களுமான 6—14 வயதுச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. 1983-84-ல் 390 மையங்கள் செயல்பட்டு வந்தன. இம்மை யங்கள் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டுகள் வேலை செய்யும். வெவ்வேறு தொகுதியைச் சார்ந்த (பள்ளியிலிருந்து இடையில் நின்று விட்ட) மாணவர்களுக்கான பத்து மாத வகுப்புகளை இம் மையங்கள் நடத்துகின்றன. பள்ளிக் கட்டிடங்களில் இம்மை யங்கள் நடைபெறுகின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு மாத மதிப்பூதியமாக ரூ. 50 பெறு கின்றனர். ஒவ்வொரு மையத்திலும் ஏறத்தாழ 30 மாணவர்கள் பயிலுகின்றனர்.

11. மேலும் இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசிப் பகுதி யிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளிசாராக் கல்வி மையங்கள் 1981-82-ல் தொடங்கப் பட்டு நடந்து வருகின்றன. இம்மையங்களில் இடைநிலை ஆசிரியர்கள் 30 பேர் கல்வி பயிற்றுவித்து வருகின்றனர். இம் மையங்களில் பயின்று வந்த மாணவர்களில் 700 பேர் 1983-ல் டிசம்பரில் 8-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வை எழுதியனர். குடியாத்தம் பகுதியில் வேலை செய்யும் சிறுவர்களுக்காக, 1984—85ல் இத்தகைய பள்ளி சாராக் கல்வி மையங்கள் பத்து திறக்கப்படவிருக்கின்றன.

## VI கல்லூரிக் கல்வி.

1984-85 வரவு செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கென ரூ. 43 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (பொதுக் கல்விக்கான பல்கலைக் கழகங்களுக்கு வழங்கும் மானியம், அரசுக் கல்லூரிகளுக்கான கட்டிடச் செலவு மற்றும் மாணவர்களுக்கான கடனுதவித் தொகை ஆகியவையும் இத்தொகையில் அடங்கும்). 1983–84-ல் பொதுக் கல்விக்கான கல்லூரிகளில் பின்வருமாறு இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வந்தனர்.

| (1) | | கல்லூரிகளின் எண்ணிக்கை. (2) | | மாணவர்களின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|---|---|
| கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகள் : | | | முறையான வகுப்புகள் : | |
| அரசினர் கல்லூரிகள் .. .. | 53 | 187 | பட்டப்படிப்பு | 1,73,321 |
| தனியார் கல்லூரிகள் .. .. | 134 | | மேற்படிப்பு | 14,708 |
| | | | | 1,88,029 |
| | | | மாலை நேர வகுப்புகள் | 12,300 |
| பிற கல்லூரிகள் (விபரங்கள் இணைப்பு II-ல் காண்க)— | | | | |
| கல்வியியல் கல்லூரிகள் .. .. | | 23 | | 2,880 |
| இதர கல்லூரிகள் .. .. | | 27 | | 3,270 |
| | | | | 6,150 |



**பல்கலைக் கழகங்கள்:**

2. கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்கான கட்டிட வேலைகள் விரைவாக நடந்து வருகின்றன.

3. ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிக்கான உயர்நிலை ஆய்வு மையம் ஒன்றை நிறுவுவதற்கும், புத்தறிவுப் பயிற்சிகள் மற்றும் பணிக் களரிகள் நடத்தி பாடத்திட்ட மேம்பாட்டுக்கு வகை செய்வதற்கும் 1983-84-ல் பாரதியார் பல்கலைக் கழகத்திற்குத் திட்ட மானியம் தரப்பட்டது.

4. பாரதியார் பல்கலைக் கழகத்துக்கு 1983-84-ல் ஆற்றல் (Energy) பற்றிய ஆய்வு மையம் ஒன்றை நிறுவவும் பாடத்திட்ட மேம்பாட்டிற்கும் திட்ட மானியம் தரப்பட்டது. பாரதிதாசன் பல்கலைக் கழகம், பட்ட வகுப்புகள் அனைத்தையும் சீரமைத்து மேப்படுத்தி நவீனப்படுத்துதல், செயல்முறைப் பாடங்கள் இரண்டைப் புகுத்துதல், மூன்றாமாண்டு பட்டவகுப்பில் செயல் முறைப்பணியைச் சேர்த்தல் ஆகிய வளர்ச்சிப் பணிகளின் முதல் கட்டத்தை நிறைவேற்றியது. பாடத்திட்ட மேம்பாட்டுக்குழு இப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த கல்லூரிகளில் 1984-85-லிருந்து தொடங்கக் கூடிய வேலை/செயல் முறைப் பயிற்சியோடு இணைந்த பாடங்கள் பல குறித்துப் பரிந்துரைத்துள்ளதுடன் அவற்றுக்குள்ள பாடத்திட்டத்தையும் வகுத்துள்ளன. 1983-84-ல் பத்துக் கல்லூரிகளில் வேலை வாய்ப்புக்கு வகை செய்யும் இத்தகைய புதிய பாடங்கள் பத்து தொடங்கப்பட்டுள்ளன.

5. 1981 டிசம்பரில் மகாகவி பாரதியார் நூற்றாண்டு தொடக்க விழாவின் போது, பெண்களுக்கு உயர்கல்வி அளிக்கப்பட வேண்டுமென்ற பாரதியாரின் கொள்கைகளுக்கிணங்க இம்மாநிலத்தில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கருதப்பட்டது. இது தொடர்பாக டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையாவின் தலைமையில் அரசு அமைத்த வல்லுநர் குழு, மகளிருக்கு மேற்படிப்பு அளிக்கவும் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடரவும், மகளிர் தொடர்பான நலப் பணிகளுக்கு ஆலோசனை கூறவும், நெறிப்படுத்தவும், மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியது. அதன்படி இந்நோக்கங்களை நிறைவேற்ற தமிழ் நாட்டில் பெண்களுக்கு உயர் கல்வி அளிக்க கொடைக்கானல் ஊராட்சி ஒன்றிய எல்லைகளுக்குள் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இப்பல்கலைக் கழகத்திற்கு அன்னை தெரசா அவர்கள் பெயர் சூட்டப்பெற்றுள்ளது.

[1984 மார்ச் 15

6. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி காரைக்குடியில் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பது ஆய்விலுள்ளது.

7. சென்னைப் பல்கலைக் கழகம் தனது 125-வது ஆண்டு விழாவை 1983-ல் கொண்டாடியது. இப்பல்கலைக் கழகத்தின் விரிவுப்பணி மையங்கள் சேலத்தில் ஒன்றும் வேலூரில் ஒன்றும் தொடங்கப்பட்டன. 1984-85-ல் சேலத்தில் பட்டமேற் படிப்பு மையம் அமைக்கப்படும். இதற்கு அரசு மானியமாக முதற்கண் ரூபாய் 5 லட்சம் தரப்படும். சேலத்தில் பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதற்கு இந்தப் பட்ட மேற்படிப்பு மையம் முன்னோடியாகத் திகழும். இம்மையத்திற்கு பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து மானியம் கிட்டும்.

8. அண்ணாமலை பல்கலைக் கழகம் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியுடன் கட்டிவரும் மாணவர் விடுதிகள் மற்றும் நூலகம் போன்ற கட்டடப் பணிகளுக்கு மாநில அரசு இணை மானியமாக 1984-85-ல், ரூபாய் 14 இலட்சம் தரப்படும். மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அது போல் கட்டி வரும் நூலகம் மற்றும் மாணவர் விடுதிக் கட்டடங் களுக்கு இணை மானியமாக ரூ. 16 இலட்சம் தரப்படும். அனைத் துப் பல்கலைக் கழகங்களிலும் (காந்தி கிராமத்திலுள்ள கிராமப் புற உயர் கல்வி நிலையம் உட்பட) பாரதியார் பெயரில்-ஆராய்ச் சிப் பணியிடங்கள் நிறுவ ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் அரசு மானியமாக ரூ.1 இலட்சம் தரப்பட்டுள்ளது.

9. தற்பொழுது இம்மாநிலத்தில் மொத்தம் 13 கல்லூரிகள் சுய ஆட்சி உரிமை பெற்றுள்ளன. அக்கல்லூரிகள் தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும், தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்த அந்த பல்கலைக் கழகங்களே வழங்கு கின்றன. பொதுவாக இத்திட்டம் நன்கு செயல்பட்டு வந்துள்ள ளது. 1983 ஜூன்-ல் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் மாநாடு ஒன்றில் இத்திட்டம் நல்ல முறையில் தொடர்ந்து செயல் படுவதற்கான வழி முறைகளை ஆய்வு செய்து மேல் நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

10. மதுரை காமராசர், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் நடத்தி வரும் அஞ்சல் முறை வகுப்பு களில் 1983-84-ல் 1,16,500 பேர் பயின்று வந்தனர். மேலும் முறையான கல்வி பெறாதவர்களுள் 21 வயது நிரம்பியவர்களுக் காக மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடத்தி வந்த "அனை வரும் படிக்கத்தக்க பல்கலைக்கழக" வகுப்புகளில் 15,590 பேர் பயின்று வந்தனர்.

11. கல்லூரிகளின் மேம்பாட்டைத் திட்டமிட்டு நிறைவேற்றி வருவதற்காக 1984-85-ல் துணை இயக்குநர் ஒருவர், பேராசிரியர் இருவர் பிற பணியாளர்கள் ஆகியோருடன் "கல்லூரி வளர்ச்சிப் பிரிவு" ஒன்று கல்லூரிக் கல்வி இயக்குநகரத்தில் அமைக்கப் படும். பல்வேறு கல்லூரிகளில் நடக்கும் பல்வேறு பாடங்களை யும் ஒட்டு மொத்தமாகக் கவனித்து தேவையான வளர்ச்சிப் பணிகளை இப்பிரிவு திட்டமிடும்.



1984 மார்ச் 15]

கல்வித்தர மேம்பாடு :

12. கடந்த நான்கு ஆண்டுகளில், அரசுக் கல்லூரிகளில் புதி தாக 61 பட்ட வகுப்புகளும், 28 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டில் புதிதாகப் பட்ட வகுப்புகள் தொடங்க ரூ. 3 இலட்சமும் மாலைநேர பட்டப் படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 2 இலட்சமும் பட்ட மேற் படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 2 இலட்சமும் ஒதுக்கப் பட்டுள்ளன.

13. செயல்முறைப்பாடங்களுக்கு முக்கியத்துவம் தரும் வகை யில் பட்ட வகுப்புகளுக்கும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கு மான பாடத் திட்டங்களை அனைத்துப் பல்கலைக் கழகங்களும் மாற்றியமைத்து வருகின்றன. அம்மாற்றங்களுக்கேற்றவகையில் ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள் ஆகியவற்றுக்கு வசதி செய்ய அரசுக் கல்லூரிகளுக்கு நிதிவசதி செய்யப்படுகிறது. 1983-84 -ல் அரசுக் கல்லூரிகளுக்குக் கூடுதலாக பெஞ்சு முதலிய மரச் சாமான்கள் வாங்க ரூ. 8 இலட்சம் ஏற்பளிக்கப்பட்டது.

14. 1980-81 முதல் 1983-84 முடிய அரசுக்கு கல்லூரி களுக்கான வகுப்பறைகள், ஆய்வகங்கள் முதலிய கட்டடப் பணி களுக்காக "பெரும்பணி" களின்கீழ் ரூ. 110 இலட்சமும் "சிறிய பணி" களின்கீழ் ரூ. 10 இலட்சமும் செலவிடப்பட் டுள்ளது. சிதம்பரத்தில் அண்மையில் தொடங்கப்பட்ட அரசு கலைக்கல்லூரிக்கு ரூ. 87 இலட்சம் செலவில் நிரந்தரக் கட்டட வேலை ஏற்பளிக்கப்படவிருக்கிறது.

15. கல்லூரி ஆசிரியர்களுடைய பயிற்றுவிக்குந் தர உயர் வுக்காக, அவர்களை ஆராய்ச்சிப் படிப்புக்கு அனுப்புவதற்கான மாநில அரசு திட்டத்தின்கீழ் 1979-80, 1980-81 ஆகிய இரு ஆண்டுகளிலும் மொத்தம் 626 ஆசிரியர்கள் எம்.பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர். அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள பட்டதாரி பயிற்றுநர்களும் விளக்குநர் களும் ஆண்டுதோறும் சிலர் வீதம் எம்.ஏ.,எம்.எஸ்.சி., படிப் பிற்கு அரசின் செலவில் முகாமையில் அனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இதுவரை 120 பேர் அனுப்பப்பட்டுள்ளனர். 1984-85-ல் மேலும் 60 பேர் அனுப்பப்படுவர். மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் 6 பேர் 1983-84-ல் முகாமையில் அனுப்பப்பட்டனர். 1984-85-ல் மேலும் 6 பேர் அனுப்பப்படுவர்.

படிப்புதவித் தெகையும் பயிற்சி உதவிப்பணமும்.

16. கல்லூரிக் கல்வித்துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் முக்கியமானவற்றின் கீழ் பயன் பெறுவோர் விவரம் பின்வருமாறு :—

| திட்டம். | 1983-84-ல் புதிதாக தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை (மேல்நிலைப் பள்ளிகளில் தரப்பட்டவை உட்பட). | 1983-84-ல் புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை எண்ணிக்கை | 1984-85-ல் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள தொகை. |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| (1) | (2) | (3) | (4) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் (ஓரளவு மைய அரசு நிதி உதவி பெறுவது). | 1,864 | 3,458 | 60 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம் (முழுவதும் மைய அரசு நிதியுதவி பெறுவது). | 1,398 | 7,177 | 32 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய மாநில அரசு படிப்புதவித் தொகை. | 70 | 136 | 3 |

17. மாநில அரசு தொடங்கியுள்ள ஒரு திட்டத்தின் கீழ்
1980-81-லிருந்து எஸ்.எஸ்.எல்.சி., ஆங்கிலோ இந்தியப்
பள்ளி இறுதி வகுப்பு, மெட்ரிகுலேஷன் தேர்வுகளில் முதல்மதிப்பு
எண் பெறுபவர்களுக்கும், உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கான
இந்தியக்குழு மைய அரசு உயர்நிலைப்பள்ளிக் கல்வி வாரியம்
ஆகியவற்றின் தேர்வுகளில் தமிழகத்திற்குள் முதல் மதிப்பெண்
பெறுபவர்களுக்கும், அவர்கள் பெற்றோர் ஆண்டு வருமானம்
ரூ. 6,000-க்கு அதிகமாக இருந்தாலும் கூட படிப்புதவித்
தொகைகள் வழங்கப்பெறுகின்றன. ஆண்டுக்கு 10 மாதம்
வீதம் பட்ட மேற்படிப்பு வகுப்பு முடியும் வரை இவர்களுக்கு
படிப்புதவித் தொகைகள் வழங்கப்படும்.





18. இராணுவப் பணியில் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு
ஏற்கெனவே வழங்கப்படுவது போல முன்னாள் இராணுவ வீரர்
களின் குழந்தைகளுக்கும் 1984-85-லிருந்து கல்விச் சலுகைகள்
வழங்கப்படும். மேலும், இராணுவத்தினர் குழந்தைகளுக்கு அளிக்
கப்பட்டு வந்த கல்விச் சலுகைகள் மற்றும் உதவித் தொகைகள்
அண்மையில் மாலை நேரக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்
களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

19. சுதந்திரப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு வழங்
கப்பட்டு வருவது போல உதவித் தொகைகள் மற்றும் புத்தகப்
படி வழங்கும் திட்டமானது, திருத்தணி மற்றும் கன்னியாகுமரி
யில் நடந்த எல்லைப் போராட்டங்களில் பங்கு பெற்ற அனைத்
துத் தியாகிகளின் குழந்தைகளுக்கும் அண்மையில் விரிவாக்கப்பட்
டுள்ளது.

20. பட்ட வகுப்புகளிலும் அதற்கு மேலான வகுப்புகளிலும்
பயிலும் ஆதி திராவிட பழங்குடி மாணவர்களுக்கு அவர்கள்
பெற்றோர் ஆண்டு வருமானம் எவ்வளவாயிருப்பினும் முழுச்
சம்பளச் சலுகை தரப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடி மக்கள் நல இயக்குநர் துறை படிப்புதவித் தொகை
கள் வழங்கி வருகிறது. இவை தவிர, மேல் நிலைப் பள்ளித்
தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண்
பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக
ஆளுக்கு ரூ. 300 உதவிப்பணம் (ஒரு தடவை மட்டும்) தரப்பட்டு
வருகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான படிப்புதவித்
தொகைகளை பிற்பட்டோர் நலத்துறை வழங்கி வருகிறது.

கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்று மொழி.

21. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில்
பட்டவகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும்
ஊக்க உதவிப்பணமாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது.
இம்மாணவர் எண்ணிக்கை 1983-84-ல் 19,812 ஆகும். இத்திட்
டத்திற்காக 1984-85-ல் ரூ. 36 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழி
யாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை
900-க்கு அதிகமான பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது.
இவற்றில் மாணவர்கள் கோரும் 43 புத்தகங்களுக்கு மறுபதிப்பு
கள் அச்சிடப்பட்டு வருகின்றன.

கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன்.

22. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய்
துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை.—பல்கலைக்கழக மானி
யக் குழு சம்பள விகிதங்களை அளித்தது ; உரிய தகுதி பெற்ற
பயிற்றுநர்களையும் விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்
களாக உயர்த்தியது ; 10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேரா
சிரியர்களை பேராசிரியர்களாக உயர்த்தியது ; உதவி பெறும்

[1984 மார்ச் 15

கல்லூரிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்கியது ; மற்றும் குடும்ப ஓய்வூதியம், விடுப்பு (ஈட்டு விடுப்பு வசதி உட்பட) ; குழு ஈட்டுறுதித் திட்டம், பணியில் இருக்கும் போது ஆசிரியர் மற்றும் பிற பணியாளர் இறந்து விட்டால், அவர்களுடைய மகன், மணமாகாத மகள்/மனைவி/ மிக நெருங்கிய உறவினருக்கு பணி நியமனம் செய்வதில் முன்னுரிமை ஆகிய விஷயங்களில் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிட்டும் அதே அளவு சலுகைகளை தனியார் கல்லூரி ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கும் விரிவாக்கியது ஆகியவையாகும்.

சட்டக் கல்வி.

23. சட்டக் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்களின் எண்ணிக்கை 1983-84-ல் பின்வருமாறு இருந்தது :—

| | மேல்நிலை சட்டப் படிப்பு. (எம்.எல்.) | சட்டப்படிப்பு (பி.எல்.) | | |
|---|---|---|---|---|
| | | மூன்றாண்டுப் படிப்பு. | | ஐந்தாண்டு படிப்பு. |
| | | முழு நேரம். | மாலை நேரம். | |
| சென்னை .. | 60 | 825 | 240 | 180 |
| மதுரை .. | 15 | 613 | 120 | 150 |
| திருச்சிராப்பள்ளி. | .. | 304 | 60 | 74 |
| கோயம்புத்தூர். | .. | 300 | 60 | 80 |
| மொத்தம் .. | 75 | 2,042 | 480 | 484 |

24. தமிழ்நாட்டில் அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் 1983-84-லிருந்து ஐந்தாண்டு சட்டப் படிப்பு (மேல்நிலைப்பள்ளிப் படிப்புக்கு பின் 5 ஆண்டுகள்) தொடங்கி உள்ளது. 1983—84-ம் ஆண்டிலிருந்து வேலையில் இருப்பவர்களுக்கென்று மூன்றாண்டு மாலை நேரக் கல்லூரியும் நடைபெறுகிறது. இந்திய வழக்கறிஞர் மன்றம் மூன்றாண்டு சட்டப் படிப்பு, 1984-85-ம் ஆண்டோடு முடிவடைய வேண்டும் என்று தீர்மானித்துள்ளதால் 1985-86 ஆம் ஆண்டிலிருந்து சட்டக் கல்லூரிகளில் ஐந்தாண்டு சட்டப் படிப்பு மட்டுமே இருக்கும். இந்த புதிய திட்டத்தின் கீழ் முதல் இரண்டு வருடங்களில் சட்டமல்லாத பாடங்களும் பாடத் திட்டத்தில் இருக்கின்றன. அவற்றை பயிற்றுவிக்க உதவிப் பேராசிரியர்கள் கல்லூரிக் கல்வித் துறையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

25. 1983-84 ஆம் ஆண்டில் சட்டம் பயில்பவர்கள் 3,081 பேர்களில் 261 மாணவியரும் அடங்குவர். சென்னை மற்றும் மதுரை சட்டக் கல்லூரிகளில் மொத்தம் 163 மாணவர்கள் தமிழில் சட்டம் பயிலுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 180 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. திருச்சி சட்டக் கல்லூரியிலும் தமிழ் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



1984 மார்ச் 15]

## VII. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1984-85-ல் சுமார் ரூ. 19 கோடி (கட்டடங்கள், கடன்கள், அண்ணா பல்கலைக் கழகத்திற்கு மானி யம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் ஆகிய வற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல் படும் தொழிற் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் ஆண்டு தோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை (1983-84-ல் இருந்தபடி) ஆகியவை வருமாறு :—

| கல்வி நிறுவனங்கள். | எண்ணிக்கை. | ஆண்டு தோறும் புதிதாகச் சேர்க்கப் படும் மாணவர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பொறியியல் கல்லூரிகள். | 7 மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டார பொறியியல் கல்லூரியில் தமிழ் நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு. | பட்ட வகுப்புகள் :<br>முழு நேரம் 1,625<br>பகுதி நேரம் 640<br>பட்ட மேற்படிப்பு :<br>முழு நேரம் 276<br>பகுதி நேரம் 56<br>பட்ட மேற்படிப்புப் பட்டயம் :<br>முழு நேரம் 21<br>பகுதி நேரம் 5 |
| பல்தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) மற்றும் சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்கள். | 75 | பட்டய வகுப்புகள் :<br>முழு நேரம் 11,775<br>பகுதி நேரம் 465<br>பட்டய மேற்படிப்பு :<br>முழுநேரம் 299<br>பகுதி நேரம் 90<br>சான்றிதழ் வகுப்பு :<br>முழு நேரம் 110<br>பகுதி நேரம் 230 |
| தொழில் நுட்ப மேல் நிலைப் பள்ளிகள். | 14 | 840 |

[1984 மார்ச் 15

2. பல்தொழில் பயிலகங்களில் ஆண்டு தோறும் சேர்க்கப்படும்
மாணவர் எண்ணிக்கை அண்மை ஆண்டுகளில் வெகுவாக
அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்து வந்த பயிலகங்களில்
சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன்
கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிதாக 37 புதிய பல்தொழில் பயி
லகங்களும் (மகளிருக்கென்று 7 உட்பட) திறக்கப்பட்டுள்ளன.
1981—82-ல் இரண்டு பல்தொழில் பயிலகங்களில் புகுத்தப்பட்ட
ஷிப்டு முறை 1983—84-ல் மேலும் 5 பல்தொழில் பயிலகங்களுக்கு
விரிவாக்கப்பட்டது. 1984—85-ல் பல்தொழில் பயிலகம் ஒனறில்
குறிப்பிட்ட தொழில்களைக் கற்றுத் தருவதற்காக மகளிர் பிரிவு
ஒன்று ஷிப்டு முறைப்படி தொடங்கப்படும்.

3. அரசுக்கு தொடராச் செலவோ தொடரும் செலவோ எப்
பொழுதும் ஏற்படாத வகையில், தனியார் பாலிடெக்னிக்குகளை
தனியார் நிருவாகங்கள் தொடங்குவதை அனுமதிப்பதற்கான
திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. அந்த தனியார் பாலி
டெக்னிக்குகள் நல்லமுறையில் நடப்பதற்கு ஏற்ற கண்டிப்பான
நிபந்தனைகளின் பேரில்தான் அத்தகைய அனுமதி வழங்க அத்
திட்டம் வழி செய்கிறது. அந்நிபந்தனைகளின் சில முக்கியமான
அம்சங்கள் வருமாறு : போதுமான நிலத்தை தனியார் நிர்
வாகம் தரவேண்டும், ரொக்க வைப்புத் தொகையாக ரூ. 10 லட்
சம் வைப்புத் தொகை ஏற்படுத்த வேண்டும் ; மாணவர்களைச்
சேர்ப்பது அரசாங்கம் வகுக்கும் விதிமுறைகளுக்குட்பட்டுச்
செய்யப்பட வேண்டும் ; சேரும் மாணவர்களிடம் எத்தகைய
கட்டணமும் (Capitation fee) வசூலிக்கப்படக் கூடாது; நிபந்தனை
கள் மீறப்பட்டால் அந்த பாலிடெக்னிக்குகளை அரசே எடுத்துக்
கொள்ளலாம் என்று முதலிலேயே தனியார் நிருவாகத்தினர்
இசைவு தெரிவிக்க வேண்டும். இந்த திட்டத்தின் கீழ் தனியார்
பாலிடெக்னிக்குகளைத் தொடங்க பல நிருவாகங்கள் முன் வந்
துள்ளன.

4. பல் தொழில் பயிலக பாடத் திட்டங்களை வகுக்கும்
மையம் 1982—83-ல் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் தனி
யாக அமைக்கப்பட்டது. 1983—84-ல் மதுரையில் உள்ள தமிழ்
நாடு பாலிடெக்னிக்கில் உள்ள ஆய்வுக் கூடங்களுக்கு நவீன
தளவாடங்கள் வாங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது. அவ்வாண்டு
அந்த பாலிடெக்னிக்கில் கேள்வி-காட்சிப் கல்விப் பிரிவு
ஒன்றும் நிறுவப்பட்டது.

கலை, கைத்தொழில் மற்றும் சிற்பக் கல்லூரிகள் :

5. சென்னையிலும், கும்பகோணத்திலும் உள்ள அரசு கலை
கைத்தொழில் கல்லூரிகளையும் மாமல்லபுரத்திலுள்ள அரசு
கட்டடக் கலை-சிற்பக் கல்லூரியையும், தொழில் நுட்பக் கல்வி
இயக்குநரே நிருவகித்து வருகிறார். கும்பகோணம், கலை-கைத்
தொழில் கல்லூரியில் 1983—84-ல் ஓவியம் மற்றும் விளம்பர ஓவி
யம் குறித்து பட்டய மேற்படிப்பு வகுப்பு ஒன்று துவங்கப்பட்டது.



1984 மார்ச் 15]

1983—84-ல் அக்கல்லூரிக்கு கும்பகோணத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் 60 மாணவர்கள் தங்கக் கூடிய மாணவர் விடுதி ஒன்றும் கட்டப்பட்டது. 1984—85-ல் மாமல்லபுரம் கட்டடக் கலை-சிற்பக் கல்லூரியில் சிற்பக் கலையில் பி.எஸ்.சி. பட்டப் படிப்பு வகுப்பு ஒன்றும் தொடங்கப்படும்.

வணிகவியல் பாடங்களில் தேர்வுகள் :

6. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்கு, வணிகப் புவியியல், வங்கியியல் முதலிய பாடங்களில் தேர்வுகளையும் நடத்தி வருகிறார். ஆண்டுதோறும் இரு தடவை அதாவது மே, நவம்பர் மாதங்களில் இத்தேர்வுகள் நடக்கின்றன. ஆண்டுக்கு 1,90,000 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். இத்தேர்வுகள் அனைத்தும் 1983 மே மாதம் எழுதிய 98,527 பேர்களுள் தேறியவர்கள் எண்ணிக்கை 49,066 அதாவது 50 விழுக்காடு ஆக இருந்தது. 1983 நவம்பரில் தேர்வு எழுதியோர் எண்ணிக்கை 92,567 ஆகும்.

பொறியியல் கல்லூரிகள் :

7. சேலத்திலுள்ள அரசு பொறியியல் கல்லூரியில் 1983—84-ல் ''பயோ மெடிக்கல்'' பொறியியல் ஒரு விருப்பப் பாடமாக தொடங்கப்பட்டது. 1983—84-ல் காரைக்குடியில் உள்ள அழகப்பா பொறியியற் கல்லூரியில் ஒரு கணக்கீட்டுப் பொறி மையம் அமைக்கப்பட்டது. அக்கல்லூரியில் மாணவியர் விடுதி ஒன்று கட்டும் பணியும் 1983—84-ல் தொடங்கப்பட்டது. 1984—85-ல் கோயம்புத்தூரிலுள்ள அரசு தொழில் நுட்பவியல் கல்லூரியில் மேட்டீரியல் தொழில் நுட்பவியல் துறை அமைக்கப் படவிருக்கிறது. கோயம்புத்தூர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் மின்னியல் மற்றும் மின்னணுவியல் ஆய்வுக் கூடங்கள் நவீனப் படுத்தப்பட இருக்கின்றன.

8. ஸ்ரீலங்காவிலிருந்து தமிழகம் வந்துள்ள இலங்கை தமிழர்களும் மற்றும் தாயகம் திரும்பியவர்களுமான மாணவர் களுக்கு பொறியியல் கல்வி வசதிகளைத் தரும் நோக்குடன் 1983—84-ல் இம்மாநிலத்திலுள்ள அரசு பல்தொழில் பயிலகங்கள் ஒவ்வொன்றிலும் 5 இடங்கள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டு அவர் களுக்கென்றே ஒதுக்கப்பட்டன. மேலும் இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலும் அம்மாணவர்கள் 20 பேர் வரை சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

அண்ணா பல்கலைக் கழகம் :

9. பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் இவை சார் பான அறிவியல் துறைகள் வளர்ச்சிக்காகவும், அவற்றின் மேற் படிப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கவும் அண்ணா பல்கலைக்கழகம் 1978 செப்டம்பர் 4-ம் தேதி நிறுவப்பட்டது.

[1984 மார்ச் 15

இப் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளில் ஆண்டு தோறும் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை (1982–83-ல் இருந்தபடி) வருமாறு :—

| கல்லூரி. | பட்டப் படிப்பு. | | பட்டமேற் படிப்பு. | |
|---|---|---|---|---|
| | முழு நேரம். | பகுதி நேரம். | முழு நேரம். | பகுதி நேரம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கிண்டி பொறியியற் கல்லூரி. | 378 | 211 | 258 | 63 |
| சென்னைத் தொழில் நுட்பவியல் நிறுவனம். | 163 | .. | 29 | 16 |
| அழகப்பா தொழில் நுட்பவியல் கல்லூரி. | 120 | .. | 42 | 12 |
| கட்டிடக்கலை மற்றும் வடிவமைப்புப் பள்ளி. | 27 | .. | 19 | .. |
| மொத்தம் .. .. | 688 | 211 | 348 | 91 |

1983–84-ல் அச்சுத் தொழில் நுட்பவியல் பி. டெக். வகுப்பும் மின் கணிப்புப் பொறியியலில் பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்பும் இப்பல்கலைக் கழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டன. படிகவியல் ஆய்வகம், மருத்துவ தொழில் நுட்பவியல் ஆய்வகம் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்கான திட்ட மானியம் ரூ. 27 இலட்சம் உட்பட இப்பல்கலைக் கழகத்துக்கு மானியமாக ரூ. 207 இலட்சம் வழங்க 1984–85-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10. பூமியின் இயற்கை வளங்களைப் (மீண்டும் மீண்டும் பயன் படுத்தக் கூடியவற்றையும் பயன்படுத்தினால் தீர்ந்து போகக் கூடியவற்றையும்) வானூர்திகள் மற்றும் செயற்கைக் கோள்கள் மூலம் விரைவாகவும், துல்லியமாகவும் சிக்கனமாகவும் பல்வேறு அறிவியல் துறைக் கருவிகளின் உதவியுடன் கணிப்பு செய்து அவ்வளங்கள் (பரவல், அமைப்பு மற்றும் தோற்றம்) பற்றிய முழு விவரங்களைச் சேகரிக்க ''தொலைவிலுணர்தல்'' (ரிமோட்சென்சிங்) என்னும் புதிய திட்டம் பயன்படுகிறது. இதன் நீர் மலைப் பகுதிகளின் அமைப்புப் படங்கள் தயாரிக்க லாம் ; கடற்கரை எல்லை மாற்றங்கள், பூமியின் வளங்கள் (கனி வளம், காட்டு வளம், மண் வளம், நில பயன்பாடு போன்றவை) வறட்சியும், மழையும் மாறி மாறி வரும் சுழற்சி ஆகியவற்றை ஆய்வு செய்யலாம். இம்முறையைப் பயன்படுத்தும் துறைகளுக்கு



1984 மார்ச் 15]

பயிற்சி அளிப்பதும் பயிற்றுநர்களுக்கு தீவிர பயிற்சி அளிப் பதும் தேவைப்படும். இந்தத் தொழில் நுற்ப முறையின் நன் மையை உணர்ந்த அரசு நமது மாநிலத்தின் வளர்ச்சிப் பணி களுக்கு இதனைப் பயன்படுத்தும் நோக்குடன் 1982 சனவரியில் அண்ணா பல்கலைக் கழகத்தில் ரூ. 76 இலட்சம் செலவில் ''தொலைவிலுணர்தல் நிறுவனம்'' ஒன்றை அமைத்துள்ளது. இம் முறையைப் பயன்படுத்தும் பல்வேறு துறைகளையும் இந் நிறுவனத்தையும் ஒருங்கிணைக்கும் பணியைத் திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை மேற்கொண்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அளவுகளில் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் இப் புதிய முறையைப் பல வழிகளில் தங்களுக்குப் பயன்படும் கருவி யாக பயன்படுத்த வேண்டும். இந்நோக்கத்தை நிறைவேற்ற தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

இதர நிறுவனங்கள் :

11. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரிக்கு மானியமாக ரூ. 38 இலட்சமும் சென்னையிலுள்ள கணித அறிவியல் நிறுவனத்திற்கு மானியமாக ரூ. 5 இலட்சமும் வழங்க 1984–85-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் :

12. சென்னையில் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப வியல் மையம் உட்பட இம் மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்களை அமைத்து நிருவகிக்க ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

13. சென்னையில் ரூ. 3·85 கோடி செலவில் பெரியார் தொழில் நுட்பவியல் மையத்தையும் ரூ. 1·50 கோடி செலவில், ''கோள்கள் இயங்கும் காட்சி'' நிலையத்தையும் (பிளானி டோரியம்) அமைக்க அரசு ஏற்பு வழங்கியுள்ளது. திரு. சி. கே. பிர்லா வழங்கியுள்ள நிதி உதவியைக் கொண்டு அமைக்கப்படும் இந்த பிளானிடோரியத்துக்கு ''பிர்லா பிளானிடோரியம்'' என்று பெயரிடப்படும். பிர்லா குடும்பத்தினரில் ஒருவரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ இம்மைய ஆளுநர் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்படுவர்.

14. இம்மாநிலத்தில் அறிவியல், தொழில் நுட்பவியல் வளர்ச் சியை ஒருமுகப்படுத்தி ஊக்குவிப்பதற்காக ''தமிழ்நாடு அறி வியல் மற்றும் தொழில் நுட்பவியல் மன்றம்'' அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இதற்காக 1984–85-ல் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அம்மன்றத்தின் ஆளுநர் குழுவை அமைத்த பின் அது செயல்பட்த் தொடங்கும்.

[1984 மார்ச் 15

## VIII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

### (i) விளையாட்டும், இளைஞர் நலனும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்காக 1984—85-ல்
மொத்தம் ரூ. 187 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்
பொழுது மாவட்ட விளையாட்டு மன்றங்கள் 19 உள்ளன.
(தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மூன்று பெரிய
மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 1983—84-ல் அமைக்கப்பட்ட
இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட).

### விளையாட்டு பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும்.

2. தற்பொழுது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து
விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | ஆண்டு தோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை (8—18 வகுப்புகள்). | 75 |
| (2) மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, பெரிய நாய்க்கன் பாளையம் (8—12 வகுப்புகள்) | 50 |
| (3) இராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளி, அண்ணாமலை நகர் (8—10 வகுப்புகள்). | 50 |
| (4) பி.எஸ்.ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பீளமேடு, கோயம்புத்தூர் (8—10 வகுப்புகள்). | 50 |
| மொத்தம் .. | 225 |

3. மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்
களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களில் விளை
யாட்டுகளில் வல்லமை பெற்றவர்கள் தங்குவதற்காக அமைக்கப்
பட்ட தனி விடுதிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு
விடுதியிலும் 30 பேருக்குத் தங்கும் வசதி அளிக்கப்படுகிறது.

4. இம்மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஒன்று
நிறுவுவது ஆய்விலுள்ளது.



1984 மார்ச் 15]

5. விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர் சிறுமியரை
விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து,
அவர்களுக்குத் தீவிரமான பயிற்சி அளித்து, அவர்களது திறனை
மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான "மிக
இளமையில் தெரிந்தெடு" என்னும் திட்டத்தையும், நடுநிலை
மற்றும் உயர்நிலைப்பள்ளி அளவில் "இளமையில் தெரிந்தெடு"
என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. 200
தொடக்கப் பள்ளிகளையும் தேர்வு செய்து "இளமையில் தெரிந்
தெடு" திட்டத்தினை அப்பள்ளிகளிலும் செயல்படுத்த
1984—85-ல் ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்
நிலைப் பள்ளிகளில் குடியரசு நாள் மற்றும் பொங்கல்
நாளன்று நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி
பெற்று, முதலாவது இரண்டாவது இடத்தைப் பெறுவோருக்கு,
உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

6. 1984-85-ல், அந்தந்த விளையாட்டு மன்றப் பகுதியிலுள்ள
உயர்நிலை, மேல்நிலைப் பள்ளியில் பணி புரியும் ஏறத்தாழ,
30 உடற்பயிற்சி ஆசிரியர்/ உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு
இரண்டு அல்லது மூன்று விளையாட்டுகளில் மாவட்ட விளை
யாட்டு மன்ற பயிற்சியாளர்களைக் கொண்டு ஆறு நாள் புத்
தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

7. மனமகிழ் மன்றங்கள், விளையாட்டு குழுமங்கள், நுண்
கலை மன்றங்கள் ஆகியவற்றை பரீட்சார்த்த அடிப்படையில்
சில கல்லூரிகளில் (ஒவ்வொரு கல்லூரியிலும், "இளைஞர் நல
அலுவலர்" எனக் குறிப்பிடப்பட இருக்கும் பேராசிரியர்
ஒருவர் வழிகாட்டுதலின்கீழ்) நடத்திவரும் பொருட்டு, கல்லூரிக்கு
ரூ. 12,500 வீதம் 8 கல்லூரிகளுக்கு ரூ. 1 இலட்சம் தர 1984-85-
இல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரி மாணவர்களுக்கு ஆரோக்
கியமான பொழுது போக்கு நடவடிக்கைகளைத் தருவனவாக
இம்மன்றங்கள் அமையும் எனக் கருதப்படுகிறது.

8. மாணவர் அல்லாத இளைஞர்களிடம் விளையாட்டையும்,
உடற்பயிற்சியையும் ஊக்குவிக்கும் வண்ணம், ஊரக விளையாட்டு
மையங்கள் நடத்துதல், தனியார் விளையாட்டு மன்றங்கள் மற்
றும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு
திட்டங்களையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது. விளை
யாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி ஆராய்ச்சி மாணவர் பணி
யிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உடற்பயிற்சிக் கல்வி
பற்றிய புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கு நிதியுதவியும் அளிக்கப்
படுகிறது.

### விளையாட்டு அரங்கங்கள் மற்றும் நீச்சல் குளங்கள்.

9. தற்பொழுது நீலகிரி தவிர பிற மாவட்டங்கள் அனைத்
திலும், அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் திறந்த வெளி
விளையாட்டு அரங்கங்கள் ஏற்கெனவே உள்ளன. அல்லது

அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வட ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் கட்டுவதற்கு இதுவரை நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை நேரு விளையாட்டு அரங்குக்கு ஒளி வெள்ளம் பாய்ச்சும் விளக்குகள் அமைக்க ரூ. 25 இலட்சம் மானியம் தரப்பட்டுள்ளது.

10. மாநில மற்றும் மாவட்ட விளையாட்டு மன்றப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப காப்பூதியம், மற்றும் இறப்ப ஓய்வுப் பணிக்கொடை முதலியன வழங்குவதற்கான ஒரு திட்டம் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது.

(ii) சாரண, சாரணியர், மற்றும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்.

11. தமிழ்நாட்டில் தற்பொழுது 1.42 இலட்சம் சாரண, சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலும் உள்ள சாரண, சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். தமிழ்நாடு சாரண, சாரணியர் இயக்கத்திற்கு ஆண்டு மானியமாக ரூ. 3 இலட்சம் வழங்கப்படுகிறது. சுமார் 4 இலட்சத்திற்கு மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர், இளைஞர் செஞ்சிலுவை அமைப்பில் சேர்ந்துள்ளனர்.

(iii) தேசிய மாணவர் படை.

12. தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்கக தலைமையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின்கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமையிடங்கள் ஐந்து அமைந்துள்ளன. தமிழ்நாட்டின் தேசிய மாணவர் படையில் சேர்க்க அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| | பிரிவுகள்/ படைகள். | அலுவலர்கள். | மாணவர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதுநிலைப் பிரிவு (மாணவர்). | 45 | 215 | 17,370 |
| முதுநிலைப்பிரிவு (மாணவியர்). | 5 | 38 | 3,680 |
| இளநிலைப்பிரிவு (மாணவர்). | 623 | 621 | 61,650 |
| இளநிலைப்பிரிவு (மாணவியர்). | 51 | 48 | 5,200 |
| மொத்தம் ... | 724 | 922 | 87,900 |



1984-85-ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 188 இலட்சம் செலவிடப்படும். இத்துறையில் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், அடிப்படை ஊழியர்கள் முதலியோரின் எண்ணிக்கை 1,100 ஆகும்.

13. இவ்வாண்டு குடியரசு நாள் அணிவகுப்பில் விமானப் படை பிரிவு மற்றும் இளைஞர் பிரிவில் தமிழக மாணவர்கள் சிறந்த மாணவர்படை வீரர் என முதலிடம் பெற்று விருது பெற்றனர்.

(iv) தேசியப்பணித் திட்டம்.

14. 1983-84 நிலவரப்படி, தமிழ்நாட்டிலுள்ள தேசியப் பணித் திட்டத்தின் விவரங்கள் பின்வருமாறு :—

| | பங்கு பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை. | அம் மொத்த மாணவர்களில் சிறப்புப் பயிற்சி முகாம்களில் பங்குபெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல்லூரிகள் .. .. .. | 50,000 | 25,000 |
| மேல்நிலைப் பள்ளிகளில் (மேல்நிலை வகுப்புகள்-400 பள்ளிகள்). | 20,000 | 10,000 |
| மொத்தம் .. | 70,000 | 35,000 |

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தேசிய பணித் திட்டம் மேல்நிலைப் பள்ளி நிலையிலும் செயல்பட்டு வருகிறது. தேசிய பணித் திட்டத்தின்கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டு தோறும் பொதுத் திட்டத்தின்கீழ் ரூ. 60-ம், சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ரூ. 100-ம் செலவிடப்படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும், மைய அரசும் 5 : 7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக் கொள்கின்றன. இதற்காக 1984–85 மாநில அரசு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 92 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது. அத் தொகையில் 7/12 பங்கு மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும். 1984-85-ல் மேலும் 5,000 மாணவர்கள் தேசியப் பணித் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

[1984 மார்ச் 15

IX. நூலகங்கள், ஆவணக் காப்பகம், அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வுத்துறை.

(i) பொது நூலகங்கள்.

பொது நூலகத் துறையின் நூலகப் பணிகள் பற்றிய முக்கிய விவரங்கள் வருமாறு :—

| | நூலகங்களின் எண்ணிக்கை. | இருப்பில் உள்ள நூல்களின் எண்ணிக்கை. | அங்கத்தினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்.) | |
| மாநில மைய நூலகம் (கன்னிமரா நூலகம், சென்னை). | 1 | 3.61 | 0.20 |
| மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின்கீழ் உள்ள நூலகங்கள் : | | | |
| மாவட்ட மைய நூலகங்கள். | 16 | 97.29 | 10.12 |
| கிளை நூலகங்கள் .. | 1,491 | | |

2. சென்னையிலுள்ள கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளை இந் நூலகம் இலவசமாகப் பெறுகிறது. வருடத்தில் மூன்று தேசிய விடுமுறை நாட்களைத் தவிர ஏனைய நாட்கள் அனைத்திலும் (காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை) இந் நூலகம் செயல் படுகிறது. வெளிநாட்டு நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் வாங்கு வதற்கென இந் நூலகத்திற்கு 1983–84-ல் ரூ. 11 இலட்சம் தரப் பட்டது. மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தனியாக பாட நூல் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந் நூலகத்திற் கென புகைப்படம் பிரதி எடுக்கும் கருவி ஒன்று ரூ. 1 இலட்சத்தில் வாங்கப்படும்.

3. மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்கள் அனைவரும் 1–4–1982 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப் பட்டுள்ளனர். இதனால் நூலக ஆணைக் குழுக்களின் பணி யாளர்கள் 3,198 பேர் பயனடைந்தனர். சில்லறைச் செலவினத்



198[illegible] மார்ச் 15]

தைப் பின்கீழ் ஊதியம் பெற்று வந்த சுமார் 300 பேர்களின் பணியும் 1–4–1982 முதல் முறைப்படுத்தப்பட்டு அவர்களும் அரசுப் பணியாளர்களுக்கான அனைத்து சலுகைகளையும் பெற்று வருகின்றனர். பயிற்சி பெறாத மூன்றாம் நிலை நூலகர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக நூலகவியல் உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் நான்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4. 1982–83-ல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரியாக ரூ. 1.43 கோடி பெற்றன. (சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூ. 56 இலட்சம் உட்பட), சில மாவட்ட ஆணைக் குழுக்களின் வருமானம், புத்தகங்கள் வாங்குவது போன்ற செல வினங்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, நிதிநிலைமை சரியில்லாத நூலக ஆணைக் குழுக்களுக்கு புத்தகங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு, 1984–85- லிருந்து ஆண்டுதோறும் ரூ. 11 இலட்சம் மானியமாக அரசு வழங்க இருக்கிறது.

5. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின்கீழ், 1983-84-ல் சென்னை அசோக் நகரில் ஒரு வட்டார நூலகம் கட்டப்பட்டது. ஐந்து கிளை நூலகங்களும் கட்டி முடிக்கப் பட்டன. மாவட்ட நூலக ஆணைக் குழுக்களும், அவற்றின்கீழ் இயங்கும் கிளை நூலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணியைப் படிப்படியாக நிறைவேற்றி வருகின்றன. ஈரோட்டில் உள்ள மாவட்ட மைய நூலகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு 1983-84-ல் ரூ. 5 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

(ii) ஆவணக் காப்பகம்.

தென் ஆசியாவில் தலைசிறந்த ஆவணத் தொகுப்புகளைக் கொண்ட நிலையமாகத் திகழ்கிறது தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம். இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ் வதுடன், அரசு நிருவாகத்திற்கும் பயன்படுகிறது. அரசு மற்றும் துறைத் தலைமையகங்களின் ஆவணங்களும் வேறு சில ஆவணங் களும் இங்கு உள்ளன. அனைத்தும் வரலாற்றுச் சிறப்பு மிக்க வையும் நிருவாகத்திற்குப் பயன்படுபவையும் ஆகும். மூன்று நூற்றாண்டுகளுக்கும் முற்பட்ட காலத்திலிருந்து ஆவணங்கள் உள்ளன. இங்கு ஆவணப் பாதுகாப்பிற்கான நவீன முறைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவிலிருந் தும், வெளி நாடுகளிலிருந்தும் வரும் ஆராய்ச்சியாளர்களுக்கு, ஆவணக் காப்பகத்தின் ஆராய்ச்சிக் கூடத்தில், சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2. 1982-ல் நிறுவப்பட்ட நுண் நிழற்படக் கருவி ஒன்று நன்கு செயல்பட்டு வருகிறது. ஆராய்ச்சியாளர்கள் பழைய மூல ஆவணங்களை மீண்டும் மீண்டும் கையாளுவதைத் தவிர்க்கும் வகையில் அப்பழைய ஆவணங்களின் நுண் நிழற்படங்கள் எடுக்கப் படுகின்றன. ஆராய்ச்சி செய்வோருக்கு மூல ஆவணங்களைக் கொடுக்காமல், நுண் நிழற்படப் பிரதிகளை வழங்கினால் மூல ஆவணங்கள் மேலும் நீண்ட காலம் சிதிலமாகாமல் இருக்கும்.

[illegible]

மாவட்ட ஆவண மையங்கள் :

3. வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும், நிருவாகத்திற்குப் பயன்படுபவையுமான பல ஆவணங்கள் மாவட்டங்களிலுள்ள பல அரசு அலுவலகங்களிலும் உள்ளன. அவற்றையெல்லாம் சேகரித்து மாவட்டம் தோறும் பாதுகாத்துவரும் நோக்குடன் சிதம்பரம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் முதற்கண் 1982-83-ல் மாவட்ட ஆவண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு :

4. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு வரலாற்று மற்றும் பிற வாழ்க்கைத் துறைகள் பற்றி ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் ஆர்வமும், திறமையும் மிகுந்தவர்களை ஊக்குவிப்பதற்காக, 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஆண்டு தோறும் மாணவப் பணியிடங்கள் நான்கை வழங்கி வருகிறது.

மாவட்ட விவரச் சுவடித் திட்டம் :

5. மாவட்ட விவரச் சுவடி ஒரு மாவட்டத்தைப் பற்றி முழுமையாக விவரிப்பதாகும். நிருவாகிகளுக்கு வழிகாட்டியாக இருப்பதோடு, பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய சிறந்த தகவல் நூலாகவும் அது இருக்கிறது. எளிதில் கிட்டாதனவாகிய அந்தந்த உள்ளூர்த் தகவல்கள் பலவும் இவ்விவரச் சுவடிகளில் தொகுக்கப்படும். புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடியின் ஆங்கிலப் பதிப்புப் பிரதிகள் விநியோகத்திற்கும் விற்பனைக்கும் தயாராக உள்ளன. அச்சுவடியின் தமிழ்ப் பதிப்பின் தட்டச்சு செய்த படி அச்சிடுவதற்கு அனுப்பப்படவிருக்கிறது. இராமநாதபுரம், மாவட்ட விவரச் சுவடியின் தமிழ் வடிவ அச்சு மெய்ப்புகள் திருத்தப்பட்டு வருகின்றன. தருமபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு விவரச் சுவடிகள் தயாரிக்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

பயிற்சி :

6. அரசு அலுவலகம் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவணப் பராமரிப்பு குறித்த பயிற்சி ஒன்றினை தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இதுவரை இத்தகைய 15 நாள் பயிற்சிகள் 29 நடந்து 505 பேர் பயன்பெற்றுள்ளனர். இத் திட்டம் 1984-85-லும் தொடர்ந்து நடைபெறும்.



ஆவணக் காப்பக நூலகம் :

7. மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் 2½ இலட்சம் புத்தகங்கள் உள்ளன. பெரும்பாலானவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளவை. பிற மொழிகளிலும் சில புத்தகங்கள் உள்ளன. இந் நூலகத்தின் பொதுவான புத்தகங்களைத் தவிர தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் அச்சிடப்பட்ட வெளியீடுகளும் உள்ளன. பழைய அரசிதழ்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற விவாதப் பதிவுகள், ஆவணப் பட்டியல்கள், பஞ்சாங்கங்கள், தகவல் தொகுதிகள், நீதிமன்றத் தீர்ப்பு அறிக்கைகள், விவரச் சுவடிகள், பழைய தாளிகைகள் முதலிய விலைமதிப்பற்ற நூற்றொகுப்புகள் இந்நூலகத்தில் உள்ளன.

(iii) அருங்காட்சியகங்கள்.

சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் அருங்காட்சியக இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. வேலூரில் ஒன்றும், ஈரோட்டில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக ஏற்பளிக்கப்பட்ட மாவட்ட அருங்காட்சியகங்கள் மூன்று அமைக்கப்பட்டு வருகின்றன. சென்னை, அருங்காட்சியகத்தில் பல்வேறு காட்சிக் கூடங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டையிலும், சேலத்திலும் உள்ள மாவட்ட அருங்காட்சியகங்கள் பொது மக்களுக்கு அறிவு புகட்டும் பணியை நன்முறையில் செய்வதற்கு ஏற்ற வகையில் 16 மில்லி மீட்டர் திரைப்படம் காட்டும் கருவி துண்டுப்படம் காட்டும் கருவி ஆகியவை வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

2. சென்னையில் குழந்தைகளுக்கான அருங்காட்சியகம் விரைவில் திறக்கப்படும். சென்னை அருங்காட்சியக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள தேசிய கலைக் காட்சிக் கூடத்தின் இணைப்புக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(iv) தொல்பொருள் ஆய்வுத் துறை.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தமிழகத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல் ; வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களை அகழ்வாய்வு செய்தல் ; வரலாற்றுக்கு அடிப்படையாக அமைந்துள்ள கல்வெட்டுச் சான்றுகளைக் கண்டு பிடித்து படி எடுத்து நூல்களாக வெளியிடுதல் ; பழங்கலைப் பொருட்களைப் பதிவு செய்தல் ; அகழ்வாய்வு செய்யப்பட்ட இடங்களிலும் மற்றும் வரலாற்றுச் சிறப்புடைய இடங்களிலும் காட்சியகங்கள் அமைத்தல் ; ஊர்கள் தோறும் ஆய்வு செய்து தொல் பொருட்கள், ஓலைச் சுவடிகள், செப்புப் படிமங்கள் ஆகியவை சேகரித்தல், பூம்புகாரையொட்டி அகழ்வாய்வு செய்வதற்கான முன்நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய

[1984 மார்ச் 15

பணிகளை 1984-85 ஆம் ஆண்டில் தொடர்ந்து செய்து வரும்.
1984-85 இல் இத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 38
இலட்சமாகும். தஞ்சை மராட்டிய அரசர் காலத்திய அரண்மனை
யில் உள்ள தர்பார் கூடம், மணிக் கோபுரம் ஆகியவற்றையும்
தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ்காரர்கள் கட்டிய கோட்டையை
யும் பழமை கெடாது பாதுகாப்பதற்காக 1984-85-ல் ரூ. 1
இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் ஓங்கு புகழ்
எய்திய சேரர்களின் தலைநகரமாகிய கரூரில் அருங்காட்சியகம்
அமைக்கப்படும்.

2. இராசராச சோழன் முடிசூடிய ஆயிரமாண்டு நிறைவு
விழாவையொட்டி, தஞ்சையில் அமைக்கப்படவிருக்கும் இராச
ராசனின் அருங்காட்சியகத்தினை அமைப்பதற்கும், பணிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1984 டிசம்பரில் நடத்தப்
படவிருக்கும் இராசராசன் விழாவினைச் சிறப்புற நடத்த
அரசு உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அக்குழுவின்
ஆலோசனையின் பேரில் உரிய ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப்
பட்டு வருகின்றன. இராசராசன் கட்டிய கோயில்களைப்
பற்றிய வரைபடங்கள் தயாரிக்கவும், அக்காலத்திய கல்வெட்டுச்
களில் உள்ள சொற்களை மின் கணிப்புப் பொறி மூலம் வரிசைப்
படுத்தி பொருள் விளக்கம் தரவும், அக்காலத்தில் ஏற்பட்ட
கலை வளர்ச்சி பற்றிய ஆய்வு நூல் ஒன்று தொகுக்கவும்,
இவ்விழாவினை ஒட்டி வெளிநாடு மற்றும் இந்நாட்டு வரலாற்று
வல்லுநர்களையும் கலை வல்லுநர்களையும் அழைத்து " ஆசிய
தொல்லியல் கருத்தரங்கு " ஒன்றை நடத்தவும் கருதப்பட்
டுள்ளது.

3. மேலும், தமிழகத்தில் கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள்,
பழமையான எழுத்துக்களில் எழுதப்பெற்றுள்ள கல்வெட்டுக்களை
படித்துத் தெரிந்து கொள்ளத் தகுதி பெறும் வகையில் திருக்
கோயிலூர், பாபநாசம், மயிலாடுதுறை, சேலம், காஞ்சிபுரம்
ஆகிய இடங்களில் மொத்தம் 185 ஆசிரியர்களுக்கு 1983-84 இல்
கல்வெட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

4. வரலாற்றுச் சின்னங்களின் முக்கியத்துவத்தையும், சிறப்
பையும், மாணவர்கள் மத்தியில் பரப்பும் வகையில் தமிழக அர
சின் திரைப்படப் பிரிவின் உதவியுடன் வரலாற்றுச் சின்னங்களை
35 மில்லி மீட்டர் வண்ணத் திரைப்படங்களாக தயாரித்து இத்
துறை வெளியிடவிருக்கிறது.

5. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்
திலும் அந்தந்த ஒன்றியத்தில் அடங்கியுள்ள வரலாற்றுச் சின்னங்
கள் பற்றிய விவரங்கள் அடங்கிய செய்திப் பலகைகளை மாவட்ட
ஆட்சித் தலைவர்களோடு தொடர்புகொண்டு இத்துறை அமைக்க
விருக்கிறது.



1984 மார்ச் 15]

6. தொல்பொருள் ஆய்வுத் துறையின் இரசாயனக் கூடத்தை
மேலும் விரிவுபடுத்த எலக்ட்ரான்கள் மூலம் இயங்கும் நுண்
நோக்கி (Electron scanning microscope) வாங்கப்படும். கோயில்களின்
துல்லியமான வரைபடங்களை வரைவதற்காக போட்டோ கிரா
மெட்டரி கருவி வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

7. திருமலை மன்னரது 400 ஆவது பிறந்த நாளை நன்
முறையில் கொண்டாடுவது பற்றி அரசுக்கு ஆலோசனை கூற
குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை
வந்துள்ளது. அதிலுள்ள பரிந்துரைகளின்படி மேல் நடவடிக்கை
எடுக்கப்படும்.

## X. தமிழ் வளர்ச்சி.

### (i) தமிழ் வளர்ச்சித்துறை.

அரசு நிருவாகத்திலும், கல்வி அறிவியல் துறைகளிலும் தமிழ்
மொழிப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்குத் தேவையான நட
வடிக்கைகளை மேற்கொள்ளுதல் இத்துறையின் முதன்மையான
பணியாகும். அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டத்
தைச் செயற்படுத்தும் பணிகளும், தமிழ்மொழி வளர்ச்சி குறித்த
பணிகளும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் :

2. தமிழ் ஆட்சி மொழித் திட்ட செயலாக்க முன்னேற்றங்
குறித்து இத்துறையின் இயக்குநர், துறைத் தலைமை அலுவலகங்
களையும், மாவட்டாட்சியர் அலுவலகங்களையும், மாவட்டத்
தமிழ் வளர்ச்சி ஆய்வு உதவி இயக்குநர்கள் பிற அலுவலகங்
களையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

3. ஆட்சி மொழித் திட்டத்தை முழு அளவில் அரசு அலு
வலகங்களில் செயற்படுத்துவதெற்கென 1980 ஆம் ஆண்டில்
முனைப்புத் திட்டமொன்று தொடங்கப் பெற்றது. முதல் ஆண்
டில் 17 அரசுத் துறைகளிலும், இரண்டாமாண்டில் எஞ்சிய
பிற துறைகளிலும் இத்திட்டம் செயற்படுத்தப்பெற்றது. அடுத்த
நிலையில் அரசுச் செயலகம், தன்னாட்சியுரிமை பெற்ற நிறு
வனங்கள், மாநகராட்சிகள் போன்றவற்றிற்கும் இத்திட்டம் விரி
வாக்கப்பட இருக்கிறது.

4. அரசு அலுவலர்களிடத்திலும், பணியாளர்களிடத்திலும்
அரசின் நோக்கத்தை உணர்த்தி, ஆர்வமூட்டி, தமிழ்த்
திட்டச் செயலாக்கத்தில் அவர்கள் மேலும், ஊக்கமுடன் செயல்
பட மாவட்டந்தோறும் ஆட்சி மொழிக் கருத்தரங்குகளை நடத்த
அரசு ஆணையிட்டுள்ளது. முதற் கட்டமாக 1983 டிசம்பரில்

கோயம்புத்தூரிலும், 1984 பிப்ரவரியில் மதுரையிலும் அத்த கைய கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. பல்வேறு துறைப் படிவங்களும் நூல்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வரு கின்றன. பல்வேறு துறைகளுக்குரிய சிறப்புச் சொல் துணையாக ராதிகள் தயாரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்டம் :

5. தமிழில் சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளிலிருந்து சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், மொழி பெயர்த்து வெளியிடும் திட்டத்தின் கீழ் 1983-84 இல் ''The vicar of wakefield'', ''The Emperor Jones'', எனும் இரு ஆங்கில நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு, 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16 ஆம் நாள் அன்று திருவள்ளுவர் திருநாளில் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பெற்றன. இத் திட்டம் இனி தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் :

6. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 26 தமிழறிஞர்களுக்கு 1—4—1984 முதல் நிதியுதவியை மேலும் 3 ஆண்டுகளுக்குப் புதுப்பித்தும், புதிதாக 29 தமிழறிஞர்களுக்கு 1—4—1984 முதல் 3 ஆண்டுகளுக்குத் திங்கள்தோறும் ரூ. 250 வீதம் நிதியுதவி ஒப்பளித்தும் ஆணையிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் தற்போது நிதியுதவி பெற்று வருபவர்களின் மொத்த எண்ணிக்கை 164 ஆகும்.

தமிழில் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம் :

7. தமிழில் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் 1983-84 இல் 16 நூல்களை வெளியிட நிதி யுதவி வழங்கப்பட்டது. 1984-85 இல் இத்திட்டத்திற்கு ரூ. 60,000 ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது.

தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் :

8. தமிழில் சிறந்த நூல்கள் எழுதுவதை ஊக்குவிப்பதற்காக சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் 1981, 1982 ஆகிய ஆண்டுகளில் வெளியான நூல்களில் பரிசுக் குரியன தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்கு பரிசுகள் வழங்கப் பட்டுள்ளன.



தமிழ் ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும், பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் தமிழ் வகுப்பு நடத்தவும் நிதி உதவி வழங்கும் திட்டம்:

9. வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவுவதற்கும், தமிழில் பட்டய வகுப்பு நடத்தவும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் தமிழ்ப் பணி புரியும் நிறுவனங்களுக்கும் அரசு நிதியுதவி வழங்கப்படுகின்றது. 1983-84 ஆம் நிதியாண்டில் தென் மொழிகள் புத்தக நிறுவனம், பன்னாட்டு திராவிட மொழியியல் பள்ளி, ஆசிய மொழிகள் நிறுவனம், சென்னை, இந்திய மொழிகள் மைய நிறுவனம், மைசூர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டு வரலாறு எழுதும் திட்டம்:

10. இவ்வியக்ககம் தமிழ்நாட்டு வரலாற்று நூற்கோவையின் இரு தொகுதிகளாகிய '' தொல் பழங்காலம் '' '' சங்க காலம்'' ஆகியவற்றை ஏற்கெனவே வெளியிட்டு, மூன்றாம் தொகுதியான '' பல்லவர்-பாண்டியர் காலம் ''எனும் நூலின் பெரும் பகுதி எழுதி முடிக்கப்பட்டுள்ளது. இந் நூல் விரைந்து வெளியிடப்படும். நான்காம் தொகுதியான '' சோழப் பெருவேந்தர் காலம் '' எனும் தொகுதி எழுதப்பட்டு வருகிறது.

தமிழ் நூல் விவர அட்டவணை தயாரிக்கும் திட்டம்.

11. தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் ஓர் அங்கமான தமிழ் நூல் விவர அட்டவணை தயாரிப்புப் பணி 1960 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ் ஆராய்ச்சியாளர் களுக்கும், அறிஞர்களுக்கும் உதவும் வண்ணம், தமிழில் அச்சாகி பதிவு பெற்ற நூல்களின் அட்டவணை இத் திட்டத்தின் கீழ் தொகுதியாக வெளியிடப்படுகிறது. 1867-ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட தமிழ் நூல்களில் ஏறத்தாழ 36,000 நூல் களைப் பற்றிய விளக்கங்கள் கொண்ட தமிழ் நூல் விவர அட்டவணை நூல் தொகுதிக்குரிய 21 நூல்கள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் அறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் விருதுகள்:

12. ஆண்டுதோறும் அண்ணா பிறந்த நாள் விழாவில் சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு திரு. வி. கலியாணசுந்தரனார் விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுடன் ரூ. 10,000 பணமும் வழங்கப்படுகிறது. 1983-இல் பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரையார் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பெற்றது. ஆண்டுதோறும் பாவேந்தர் பிறந்த நாளில், சிறந்த கவிஞர் ஒரு வருக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கப்படுகிறது. இவ்

ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதியின் (லெக்சிகன்) முழுமையான திருந்திய வடிவம் ஒன்றை (தமிழில் இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலும் உள்ள அனைத்துச் சொற்களையும் மற்றும் அறிவியல் துறைகளிலும், பிற துறைகளிலும் உள்ள அனைத்துச் சொற்களையும் கொண்டதாக) வெளியிட தஞ்சையில் ஒரு மையத்தை இப் பல்கலைக் கழகம் அமைத்துள்ளது.

19. உதகமண்டலத்தில் பழங்குடிகள் பண்பாட்டு ஆய்வு மையம் ஒன்றையும் இப் பல்கலைக் கழகம் அமைத்துள்ளது. காஞ்சீபுரத்தில் இந்து அறநிலையத் துறை தரும் ரூ. 15 இலட்சம் மானியத்தைப் பயன்படுத்தி சைவ, வைணவ மற்றும் வேதாந்தத் தத்துவங்கள் குறித்து ஆய்வு செய்யும் மையம் ஒன்றையும் தமிழ்ப்பல்கலைக் கழகம் அமைத்துள்ளது.

(iv) உலகத் தமிழ்ச் சங்கம்:

20. உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் நிறுவ நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இச் சங்கத்தின் நிர்வாகக் குழுவை அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(XI) தமிழ்க்கலைகளும், பண்பாடும்:

தமிழகத்தின் தொன்மை வாய்ந்த பண்பாட்டையும புகழ் மிக்க பழங்கலைகளையும இனந் தெரிந்து வளர்க்கவும், அவற்றிற்குப் புத்துயிரும், புதுப்பொலிவும் நல்கவும் தமிழக அரசாங்கம் தொடர்ந்து பல அரிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. செய்தி, சுற்றுலா மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறையின்கீழ், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்ப் பழங்கலை இயக்குநரகம், தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு, தமிழ்நாடு இசைக் கல்லூரிகள் முதலிய சபைப் பெரும் அமைப்புகள் இந்த முக்கியப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம்:

கடந்த 28 ஆண்டுகளாக இசை, நாட்டியம், நாடகம் ஆகியவைகளின் வளர்ச்சிக்குப் பல முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 1983-84-லும் பல முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. தலைசிறந்த கலைஞர்கள் 30 பேருக்கு கலைமாமணி விருது அளித்து கௌரவித்தது. முந்தைய ஆண்டுகளில் 671 கலைப் பெருமக்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர். திறமைமிக்க இளங் கலைஞர்கள் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 26 கலைஞர்களுக்கு 14 சபாக்களின் மூலமாக நிகழ்ச்சிகள் நடத்த உதவியளித்துள்ளது.



3. மாநிலங்களிடையே கலாச்சார பரிவர்த்தனை திட்டத்தின் கீழ் கலைக்குழுக்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1983-84-ல் தமிழ்நாட்டுக் கலைக்குழு மகாராஷ்டிரா மாநிலம் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தியது. இராஜஸ்தான் கலைக்குழு தமிழ்நாட்டுக்கு வந்து கலை நிகழ்ச்சி நடத்தியது.

4. கிராமியக் கலைகளைப் பேணிப் பாதுகாத்துப் பிரபலப் படுத்தும் வகையில் அக்கலைகளில் ஆர்வமுள்ள இளங்கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, சிறப்புப் பயிற்சி அளிக்க கிராமியக் கலை நிறுவனம் ஒன்று தொடங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு.

5. தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு பின்வரும் சிறப்புத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

(அ) தமிழ்நாட்டின் உயர் நிலை மற்றும மேல்நிலைப்பள்ளி மாணவர்களிடையே நுண்கலையறிவைப் பேணி வளர்க்கவும் புதிய அணுகுமுறை நுணுக்கங்களைக் கற்பிக்கவும் உதவும் வகையில் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ''ஓவிய ஆசிரியர் சிறப்புப் பயிற்சித் திட்டம்'' ஒன்றினைச் செயற்படுத்தி வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் இதுவரை சுமார் 240-க்கும் மேற்பட்ட ஓவிய ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுப் பலனடைந்துள்ளார்கள் மாநிலந் தழுவிய வரவேற்பையும் ஒத்துழைப்பையும் பெற்றுள்ள இத்திட்டம் 1984-85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும். மேலும் ஓவியக் கலை வல்லுநர்கள் கையாளும் நவீன முறைகள் பற்றியும் நவீன ஓவியத்தின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையையும் விளக்கும் வரை முறைப் படங்களை விளக்கவுரையுடன் திரைப்படமாகவும் வீடியோ பதிவாகவும் எடுத்துப் பயிற்சி வகுப்புகளில் பங்கு பெறும் ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மாநிலங்களுக்கிடையே நுண்கலைக் காட்சி நடத்தும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு இவ்வாண்டு ஒரிசா மாநிலத்தைச் சார்ந்த ஓவியக் காட்சியொன்றையும் மணிபுரியைச் சேர்ந்த ஓவியக் காட்சியொன்றையும் தமிழகத் தலைநகரான சென்னையில் சிறப்பாக நடத்தியுள்ளது.

(இ) ''நுண்கலை'' என்ற பெயரில் ஒரு புத்தகம் அரையாண்டிற்கொருமுறை குழுவினால் வெளியிடப்பட்டு வருகிறது.

(ஈ) தமிழகத்திலுள்ள சிறந்த ஓவியக் கலைஞர்களின் திறமை மிக்க ஓவியங்களை. சுற்றுலாத் துறையின் உதவியுடன் அஞ்சலட்டைகளாகத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

(உ) ஓவியம் மற்றும் சிற்பக் கலைத்துறைகளில் அரும்பணி
ஆற்றிய கலைஞர்களைச் சிறப்பிக்கும் வண்ணம், ஆண்டுதோறும்
இரண்டு சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவருக்
கும் ''கலைச்செம்மல்'' என்ற விருதையும் ரூ. 5,000 பணமுடிப்
பையும் வழங்கி வருகிறது.

அரசு இசைக் கல்லூரிகள்.

6. சென்னையிலும் மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரி
களும், திருவையாற்றில் உள்ள கீழ்த்திசைக் கல்லூரியின் இசைப்
பிரிவும், இசையையும் பரத நாட்டியத்தையும் தொடர்ந்து பயிற்று
வித்து வருகின்றன. இசைப் பாடல்களைக் கற்கும் மாணவர்கள்
பாடல்களின் பொருளை முதலில் உணர்ந்து பின் முறையாக
இசையமைப்பைக் கற்றுக்கொள்ள 1983-84 ஆம் ஆண்டில் அரசு
இசைக் கல்லூரிகளில் மொழி விரிவுரையாளர் பணியிடங்கள்
ஏற்படுத்தப்பட்டன. மேளம், கடம், கஞ்சிரா, நுகர்சங்கம்
மற்றும் நட்டுவாங்கம் ஆகிய புதிய வகுப்புகள் இக் கல்லூரிகளில்
ஆரம்பிக்கப்பட்டன. இந்த வகுப்புகளில் சேர்ந்து பயிலும்
மாணவ மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.
இந்தப் பாரம்பரியமிக்க நுண்கலை வடிவங்களை நன்முறையில்
பாதுகாத்து வளர்க்க தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

தமிழ்ப் பழங்கலை இயக்ககம்.

7. 1981 ஆம் ஆண்டு புதியதாக தோற்றுவிக்கப்பட்ட இவ்
வியக்ககம் தமிழ்ப் பழங்கலைகளைப் பேணிப் பாதுகாக்கும் வகை
யில் பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. தமிழ் முனி
வர் என்று போற்றப்படும் அகத்தியா வாழ்ந்ததாகக் கூறப்படும்
பொதிகை மலையை முண்டந்துறை, தோவாளை, குற்றாலம்,
செங்கோட்டை, களக்காடு, மணிமுத்தாறு ஆகிய இடங்களில்
முகாம் அமைத்து தேசியப் பணித் திட்டத்தில் ஈடுபட்ட 300
மாணவர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்
வின் மூலம் தமிழ் வரலாற்றின் தொன்மையை நிறுவக்கூடிய
மான அரிய குறியீடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்
வில் கண்டுபிடித்த ஆதாரங்களைக் கொண்டு அகத்தியர் பற்றிய
முழு விவரங்களையும் தமிழரின் தொன்மைப் பண்பாட்டையும்
நாகரீகச் சிறப்பையும் தமிழ் பழமையையும் எடுத்துக் காட்டும்
ஒரு நூலாக வெளியிடும் திட்டமும் உள்ளது.

8. வரும் 1984-85 ஆம் ஆண்டில் இவ்வியக்ககம் தனது வழக்க
மான செயல் திட்டங்களுடன், பின்வரும் பல புதிய திட்டங்களை
யும் நிறைவேற்றும் :—

(1) கிராமப் பண்பாட்டு வரலாற்றையும் தொன்றுதொட்டு
வழங்கி வருகின்ற கிராமக் கலைகளின் வளர்ச்சியையும் சான்று
களோடு சேகரித்து புத்தகமாக வெளியிடும் நோக்கத்துடன் செங்



கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்
களில் தொகுப்புகள் எடுக்கப்பட்டு வல்லுநர் குழுவின் அங்கீகாரம்
பெற்ற பின்னர் புத்தகங்களாக வெளியிடப்படும்.

(2) பண்டைத் தமிழ் மன்னர்கள் மூவரின் வள்ளன்மையை
பற்றி 3 திரைப் படங்கள் தயாரிக்க தமிழ்நாடு திரைப்படத்துறை
யுடன் சேர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு அப் படங்கள்
விரைவில் திரையிடப்படவிருக்கின்றன.

(3) நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆன்றோர்களையும் கலை
வல்லுநர்களையும் பல தொழில் அறிவு நிறைந்தவர்களையும்
அணுகி அவர்தம் அனுபவங்களையும் கருத்துக்களையும் உரை
யாற்றச் செய்து அவற்றை ஒலிப்பதிவு செய்து பாதுகாத்து வைத்
தால் இன்றைய தலைமுறையினருக்கும் வருங்கால சமுதாயத்
திற்கும் பெரும் பயன் விளையும். இதற்காக தமிழ் பழங்கலை
இயக்ககம் தமிழறிஞர் உரைகளைப் பாதுகாக்கும் திட்டம் என்ற
புதிய திட்டத்தினை உருவாக்கி 1984-85-ல் முதற் கட்டமாக
ரூ. 1 இலட்சம் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாழ்வில் நலிந்த வயது முதிர்ந்த கலைஞர்களுக்கு
மான்ய உதவி.

9. வறுமையில் வாடும் 1,616 கலைஞர்கள் மாதந்தோறும்
இத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ. 150 வீதம ஓய்வூதியம் அரசிட
மிருந்து பெற்று வருகின்றனர். இந்த ஓய்வூதியம் முதற்கண்
3 ஆண்டு காலத்திற்கு அளிக்கப்பட்டு மீண்டும் மூன்று ஆண்டிற்கு
ஒரு முறை ஓய்வூதியம் பெறுபவர்களின் பொருளாதார நிலைமை
யின் அடிப்படையில் புதுப்பிக்கப்படுகின்றது. 1984-85 ஆம்
ஆண்டில் இந்த ஓய்வூதிய திட்டத்திற்கு மொத்தம் ரூ. 32 இலட்
சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் 200 கலைஞர்களுக்குப்
புதியதாக நிதியுதவி அளிக்கப்படும்.

## இணைப்பு 1.

### பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | 1973-74. (2) | 1976-77. (3) | 1982-83. (4) | 1983-84. (5) |
|---|---|---|---|---|
| | | (மாணவர்கள் இலட்சத்தில்.) | | |
| **அ.** வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | |
| **வயதுத் தொகுதி 6—11—** | | | | |
| சிறுவர் .. .. .. | 30.45 | 31.93 | 34.88 | 35.49 |
| சிறுமியர் .. .. .. | 29.79 | 31.23 | 34.07 | 34.67 |
| மொத்தம் .. | 60.24 | 63.16 | 68.95 | 70.16 |
| **வயதுத் தொகுதி 11—14—** | | | | |
| சிறுவர் .. .. .. | 13.71 | 14.37 | 15.70 | 15.97 |
| சிறுமியர் .. .. .. | 13.40 | 14.05 | 15.33 | 15.60 |
| மொத்தம் .. | 27:11 | 28.42 | 31.03 | 31.57 |
| **வயதுத் தொகுதி 14—17/14—16 (1982-83-லிருந்து)—** | | | | |
| சிறுவர் .. .. .. | 11.31 | 11.86 | 8.77 | 8.92 |
| சிறுமியர் .. .. .. | 11.07 | 11.60 | 8.57 | 8.72 |
| மொத்தம் .. | 22.38 | 23.46 | 17.34 | 17.64 |



1982–83-லும் 1983-84லும் பல்வேறு வயதுத் தொகுதியினர் எண்ணிக்கை பின்வருமாறு கணக்கிடப்பட்டது —அதாவது 1981 சென்சஸ்படி தமிழக மொத்த மக்கள் தொகையை எடுத்துக் கொண்டு, அந்தந்த வயதுத் தொகுதியினர் 1971 சென்சஸ்-இல் எத்தனை சதவீதம் இருந்தனரோ அதே சதவீதம் 1981-லும் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதாகும்.

**ஆ.** பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை —

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 6—11 —** | | | | |
| சிறுவர் .. .. .. | 30.64 | 32.02 | 36.11 | 37.24 |
| சிறுமியர் .. .. .. | 23.74 | 25.50 | 30.22 | 31.50 |
| மொத்தம் .. | 54.38 | 57.52 | 66.33 | 68.74 |
| **வயதுத் தொகுதி 11—14—** | | | | |
| சிறுவர் .. .. .. | 9.10 | 9.74 | 12.56 | 13.29 |
| சிறுமியர் .. .. .. | 5.09 | 5.76 | 7.93 | 8.62 |
| மொத்தம் .. | 14.19 | 15.50 | 20.49 | 21.91 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1982-83-லிருந்து)— | | | | |
| சிறுவர் .. .. .. | 4.97 | 5.34 | 4.79 | 5.06 |
| சிறுமியர் .. .. .. | 2.42 | 2.68 | 2.59 | 2.85 |
| மொத்தம் .. | 7.39 | 8.02 | 7.38 | 7.91 |
| இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்— | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | |
| சிறுவர் .. .. .. | 100.6 | 100.3 | 103.52 | 104.92 |
| சிறுமியர் .. .. .. | 79.6 | 81.7 | 88.71 | 90.85 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 90.2 | 91.7 | 96.20 | 90.96 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | |
| சிறுவர் .. .. .. | 66.3 | 67.3 | 80.04 | 83.18 |
| சிறுமியர் .. .. .. | 37.9 | 41.0 | 51.69 | 55.28 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 52.3 | 54.4 | 66.03 | 69.40 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1982-83லிருந்து)— | | | | |
| சிறுவர் .. .. .. | 43.0 | 44.9 | 54.60 | 56.78 |
| சிறுமியர் .. .. .. | 21.8 | 23.1 | 30.26 | 32.67 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 33.0 | 34.1 | 42.57 | 44.87 |



## இணைப்பு 1—தொடர்ச்சி.

### பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1973–74 (2) | 1976–77 (3) | 1982–83 (4) | 1983–84 (5) |
|---|---|---|---|---|
| ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை— | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. .. | 26,726 | 27,306 | 28,290 | 28,548 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 5,773 | 5,730 | 5,565 | 5,635 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,823 | 3,020 | 2,260 | 2,351 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 1,416 | 1,427 |
| மொத்தம் .. | 35,322 | 36,056 | 37,531 | 37,961 |

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பின் தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10 ஆம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை — | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. .. | 1,06,332 | 1,11,033 | 1,14,713 | 1,15,705 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 66,843 | 67,846 | 66,299 | 66,399 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. .. | 65,959 | 72,838 | 34,841 | 36,831 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. .. | .. | .. | 60,517 | 62,087 |
| மொத்தம் .. | 2,39,134 | 2,51,717 | 2,76,370 | 2,81,022 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| **. சராசரி ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை :** | | | | |
| (1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)— | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 35 | 36 | 41 | 41 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 33 | 33 | 39 | 40 |
| உயர்நிலைப் பள்ளிகள .. | 24 | 24 | 24 | 27 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 27 | 26 |
| (2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)— | | | | |
| முதல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 37 | 36 | 39 | 40 |
| நடுநிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 33 | 33 | 33 | 34 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 29 | 30 | 24 | 24 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | .. | .. | 20 | 30 |



1983-84 இல் (1983 அக்டோபர் மாதம் 1 ஆம் நாள் நிலவரப்படி) தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக் கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த புள்ளி விவரங்கள்.

| பள்ளிகளின் வகைகள். (1) | | பள்ளிகளின் எண்ணிக்கை. (2) | மாணவர்கள் (இலட்சத்தில்) (3) | ஆசிரியர்கள். (4) |
|---|---|---|---|---|
| **முதல்நிலைப் பள்ளிகள்—** | | | | |
| அரசு .. .. .. | 1,438 | .. | .. | .. |
| நகராட்சி .. .. .. | 1,123 | 28,548 | 48.06 | 1,15,705 |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 20,991 | .. | .. | .. |
| தனியார் .. .. .. | 4,996 | .. | .. | .. |
| **நடுநிலைப் பள்ளிகள் :** | | | | |
| அரசு .. .. .. .. | 225 | .. | .. | .. |
| நகராட்சி .. .. .. | 403 | .. | .. | .. |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 3,039 | 5,635 | 27.16 | 66,399 |
| தனியார் .. .. .. | 1,968 | .. | .. | .. |
| **மொத்தத் தொடக்கப் பள்ளிகள்** | .. | 34,183 | 75.22 | 1,82,104 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| **உயர்நிலைப் பள்ளிகள்—சாதாரணம் :** | | | | |
| அரசு .. ... ... | 1,621 | .. | .. | .. |
| நகராட்சி .. ... ... | 72 | 2,141 | 8.97 | 32,048 |
| தனியார் .. .. ... | 448 | .. | ... | .. |
| ஆங்கிலோ-இந்தியன் ... ... | .. | 18 | 0.12 | 414 |
| மெட்ரிகுலேஷன .. .. .. | .. | 93 | 0.40 | 1,741 |
| சி.பி.எஸ். ஈ. முதலியன .. .. | .. | 99 | 0.50 | 2,628 |
| மொத்த உயர்நிலைப் பள்ளிகள் | .. | 2,351 | 9·99 | 36,831 |
| மேல்நிலைப் பள்ளிகள்—சாதாரணம் : | | | | |
| அரசு .. .. .. .. | 645 | .. | .. | .. |
| அரசு (தொழில் நுட்பம்) .. | 14 | 1,292 | 14.97 | 56,333 |
| நகராட்சி .. .. .. | 61 | .. | .. | .. |
| தனியார் .. .. .. | 572 | .. | .. | .. |
| ஆங்கிலோ -இந்தியன் .. .. | .. | 26 | 0.30 | 876 |
| மெட்ரிகுலேஷன் .. ... | ... | 52 | 0.52 | 2,158 |
| சி. பி. எஸ். ஈ. போன்ற பள்ளிகள் | .. | 57 | 0.64 | 7,720 |
| மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள் ... | ... | 1,427 | 16.43 | 62,087 |
| மொத்தம் உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள் .. .. | ... | 3,778 | 26.42 | 98,868 |
| மொத்தம் (அனைத்துப் பள்ளிகளும் சேர்த்து) .. ... ... | | 37,961 | 101.64 | 2,81,022 |

மாணவர் .. 57.47 இலட்சம்.
மாணவியர் .. 44.17 இலட்சம்.



திருவாக வாரியாக 1983–84-ஆம் ஆண்டில் இருந்த பள்ளி ஆசிரியர்களின் விவரங்கள்.

| (1) | அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள். அரசுப் பள்ளிகள் (2) | அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். (3) | நகராட்சி. (4) | தனியார். (5) | மொத்தம். (6) | ஆசிரியர் விவரங்கள். ஆண். (7) | ஆசிரியர் விவரங்கள். பெண். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளிகள் .. | 6,994 | 70,066 | 9,502 | 29,143 | 1,15,705 | 71,263 | 44,442 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 3,166 | 27,284 | 7,045 | 28,904 | 66,399 | 34,051 | 32,348 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 28,443 | .. | 1,487 | 11,901 | 36,831 | 22,418 | 14,413 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 27,127 | ... | 3,373 | 31,587 | 62,087 | 38,636 | 23,451 |
| மொத்தம் .. | 60,730 | 97,350 | 21,407 | 1,01,535 | 2,81,022 | 1,66,368 | 1,14,654 |

136231

## இணைப்பு— III

### 1983-84இல் தொழிற்நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | கல்வி நிலையங்களின் எண்ணிக்கை (2) | மொத்த மாணவர் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. பொறியியற் கல்லூரிகள்— | | |
| (1) அரசு .. | 4 | |
| (2) தனியார் .. | 3 | 8,397 |
| (3) தன்னுரிமையுள்ளவை .. | 7 | 7,395 |
| 2. பாலிடெக்னிக்குகளும், சிறப்புப் பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | |
| (1) அரசு .. | 23 | 25,655 |
| (2) தனியார் .. | 51* | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. | 1 | |
| 3. தொழிற்பாட மேல்நிலைப் பள்ளிகள்— | | |
| (1) அரசு .. | 11 | 1,680 |
| (2) தனியார் .. | 3 | .. |
| மொத்தம் .. | 103 | 43,127 |

*1983-84-இல் தனியார் நிருவாகங்கள் தங்கள் முழுச் செலவில் நடத்தும்'' பாலிடெக்னிக்குகள் திட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட 15 பாலிடெக்னிக்குகளும் இவ்வெண்ணிக்கையில் அடங்கும்.''